அற இயல்

மேல் நிலை - முதலாம் ஆண்டு

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்

அற இயல்

மேல் நிலை—முதலாம் ஆண்டு

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்
சென்னை

முதல் பதிப்பு—1981

பதிப்பாசிரியர் குழுத்தலைவர் &
மேலாய்வாளர்:

டாக்டர் ஆர். பாலசுப்பிரமணியன்,
இயக்குநர்,
டாக்டர் இராதாகிருஷ்ணன்
மெய்ப்பொருளியல் மேல் நிலைக்
கல்வி நிறுவனம்,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை.

ஆசிரியர்:

டாக்டர் வை. இரத்தினசபாபதி,
படிக்குநர்,
டாக்டர் இராதாகிருஷ்ணன்
மெய்ப்பொருளியல் மேல் நிலைக்
கல்வி நிறுவனம்,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை.

விலை: ரூ. 7.50

இந்நூல் இந்திய அரசு சலுகை விலையில் வழங்கிய 60 ஜி. எஸ். எம். தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

அச்சிட்டோர்:
மெய்ப்பொருள் அச்சகம், சென்னை- 600 023

பொருளடக்கம்

I. அற இயல் — அறிமுகம்

II. அற இயல் குறிக்கோட் கொள்கைகள்

III. அறவாழ்வு

I. அற இயல்-அறிமுகம்

(1) (அ) அற இயல் என்றால் என்ன?

மனிதனின் செயல்களைப் பற்றிய மதிப்பீடு

மனிதன் பலவகையான செயல்களிலும் ஈடுபட்டிருக்கிறான். மனிதன் செயல்களில் ஈடுபடுவது எவ்வளவு இயற்கையானதோ, அந்த அளவுக்கு அவன் செயல்கள் மற்றவர்களால் ஆராயப் பெறுவதும் இயற்கையே.

தனிமனிதன் ஒருவன் காட்டில் தனித்திருக்கிறான், அல்லது ஒரு பாலைவனத்தில் இருக்கிறான். அவன் அங்கே செய்யும் செயல்கள் ஆய்வுக்கு உரியன அல்ல. பலரும் இணைந்து வாழும் சமுதாயத்தில்தான் தனிமனிதன் செய்யும் செயல்கள் சரியான வைகளா தவறானவைகளா என்ற அடிப்படையில் ஆராய் வதற்கு உரியனவாகின்றன.

தனிப்பட்ட மனிதன் தனித்த நிலையில் தபால் முத்திரை களைச் சேகரிக்கிறான். இத்தகைய செயல்கள் நேரடியாக ஆய்வுக்கு உரியன அல்ல. ஆயினும் இத்தகைய தனித்த செயல் களும் சமுதாயத்தை மறைமுகமாகத் தாக்கும் என்று கருதப் பெறும்போது, இவைகளும் ஆய்வுக்குரியவைகளாக எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

சமுதாயப் பின்னணியைக் கருத்திற் கொள்ளும்போதுதான் தனிமனிதனுடைய செயல், ஆய்வுக்குரிய செயலாகக் கருதப் பெறுகிறது.

'அவன் இக்காரியத்தைச் செய்யாமல் தவிர்த்திருந்தால் நல்லதுதான்' 'அவன் செய்த செயல் நல்ல செயல்', 'அவன் தன் கடமையைத்தான் செய்தான்'' என்று இவ்வாறான பேச் சுரைகளை நாம் நாள்தோறும் உலக வழக்கில் கேட்க முடிகிறது.

இவ்வாறான உரைகளில் காணப்பெறும் 'நல்லது' என்ற கருத்தை நாம் எந்த ஒருவகை அளவுகோலை வைத்துத் தெரிந்து கொள்ள இயலும் என்பது நம் உள்ளத்தே எழும் ஒருவகை அடிப் படை வினா.

நீதிபதி ஒருவர் நீதி விசாரணைக்காக வந்தமருகிறார். குறிப் பிடப் பெற்ற அந்த நாளில் எடுத்துக்கொள்ளப் பெற்ற வழக்கினை நீதிமன்றத்துக்குக் கொண்டு வந்தவர் ஒரு புலவர். புலவரின் வழக்கினை நீதிபதியின் முன்னிலையில் வழக்குரைஞர் எடுத்து விளக்குகிறார்.

'மேன்மைசால் நீதிபதியவர்களே! இதோ நிற்கும் புலவர் ஒரு குறிப்பிட்ட நாளில் சாலையின் வலப் பக்கம் நடந்து வந்து கொண்டிருந்தார். இடப் பக்கம் சென்ற குதிரை வண்டியின் சக்கரம் இவர் மேல் படவே, புலவர் கீழே விழுந்துவிட்டார். குதிரை வண்டி இடப் பக்கம் வந்தது தவறு; சாலை விதியை மீறிய வண்டியோட்டுநர் இருவகைகளில் தண்டனை பெறுதற் குரியவர். சாலை விதியை மீறியது ஒன்று; சாலை விதியைக் கடைப் பிடித்தவருக்கு ஊறுவிளைவித்தது மற்றொன்று. இதுவே புலவர் கொண்டுவந்த வழக்கு' என்று விளக்கினார் வழக்குரைஞர்.

இற்றைக்குக் கால் நூற்றாண்டுக் காலத்துக்கு முன்னர், நீதி மன்றங்களில் சில வழக்குகள் தமிழ் இலக்கணம், தமிழ்ப் பண் பாடு போன்றவைகளை அடிப்படைகளாகக் கொண்டு அமைந்து விடும். நீதிபதிகளும் தமிழ்ப் புலமை நிறைந்தவர்களாக அமைந்து விடுவார்கள். விசாரணைகளில் குற்றத்தின் மதிப்பீட்டினை விட இலக்கண, இலக்கிய, பண்பாடு ஆகியவைகளின் விளக்கங் கள் மிக மிகச் சுவையான எடுத்துக்காட்டுகளுடன் வெளியாகும். அவ்வாறு அமைந்துவிட்ட வழக்குகளுள் இதுவும் ஒன்று. இக் குறிப்பிட்ட வழக்கின் போக்கினை அறிந்துகொண்ட நீதிபதி தமிழ்ப் புலவரை நேராக விசாரிக்கத் தொடங்கினார்.

முன்னுரைக் கேள்விகள் முடிந்தவுடன்"புலவரே, நீவிர் சாலை யின் வலப் பக்கம் நடந்து சென்றது விதிக்கு உடன்பட்டதா?, என்றார். 'உடனே புலவர்' ஆம். அதுதான் பழந்தமிழ்ப் பண் பாட்டு நெறி;இயற்கையோடு இணைந்த விதி; சங்க இலக்கியங்கள் வகுத்துத் தந்த சட்ட நெறி; இன்றும் உலக வழக்கினால் உறுதிப் பாடு பெற்றுவரும் உயர் நெறி' என்று விதியின் பெருமையை விளக்கமாகக் கூறி முடித்துவிட்டு,

'வலம்—வெற்றி; வலப் பக்கம் போதல்—வெற்றி பெறப் போதல்; வலக் காலை முன் எடுத்து வைத்துப் போதல் என்பது எல்லாப் பொருள்களும் வலமாகவே சுற்றுகின்றன என்பதிலிருந்து—இயற்கையின் போக்கிலிருந்து எடுத்து அமைக்கப் பெற்ற மேலான நெறி. சூரியன் வலமாகத்தான் சுற்றுகின்றான். உலகில் உள்ள எல்லா இயற்கைப் பொருள்களும் அப்படியே. உலகத்தின் ஓர் உறுப்பாகிய மனிதனும் வலப் பக்கமாகத்தான் போகவேண்டும். இதுவே முறை. இம்முறை தவறி இடப் பக்கம் போகும்போது, இடப் பக்க ஓட்டு முறை (left hand drive), இடக்கை முறை என்றெல்லாம் குறிப்பிட்டும் குறைப்பட்டும் சொல்லப்பெறும். இவைகளாலெல்லாம் நமக்குக் கிடைத்த முடிவு வலப் பக்கம் போதல் என்பதே தமிழகத்து மரபு நெறி'' இவ்வாறு விளக்கம் கூறினார் புலவர்.

புலவரின் பேச்சினை அமைதியுடன் செவிமடுத்த நீதிபதி "இடப் பக்கம் போ' எனவும் 'keep left' எனவும் சாலை விதி அமைத்து விளம்பரம் செய்யப் பெற்றுள்ளனவே; அவைகளைப் பார்த்ததோ அறிந்ததோ உண்டா?'' என்று கேட்டார். 'பலகைகள் இருந்தன; அவைகள் தமிழகத்துச் சாலை விதிகள் அல்ல' என்று பதிலளித்தார் புலவர்.

''இடப் பக்கம் போதல்' என்பதுதான் இப்போதுள்ள சாலை விதி. நீவிர் சாலை விதியை மீறியது ஒரு குற்றம்; விதிப்படி வந்த குதிரை வண்டியின் செயலுக்குத் தடையாயிருந்தது நீவிர் செய்த இரண்டாவது குற்றம்; குற்றவாளியாகிய நீவிர் நிரபராதியின் மேல் வழக்குத் தொடுத்தது மூன்றாவது குற்றம். மேலும், நீதிமன்றத்துக்கு வந்து தன் கட்சியைச் சொல்ல வேண்டிய நிலையில் இரண்டு நாள் வருமானம் இல்லாமையால், ஒரு நிரபராதிக்குப் பொருள் இழப்பும் நேர்ந்தது. இவ்வகையில் நிரபராதியின் பொருள் இழப்பை ஈடுசெய்வதோடு, நீவிர் செய்த மூன்று குற்றங்களுக்கும் முந்நூறு ரூபாய் ஒறுப்புக் கட்டணம் நீதிமன்றத்துக்குச் செலுத்தவேண்டும்; செலுத்தத் தவறினால் ஆறு மாதம் சிறை தண்டனை'' என்று தீர்ப்பளித்தார் நீதிபதி.

தமிழ்ப் புலவர் மனம் ஒப்பவில்லை. இவ்வழக்கைச் செய்தித்தாள் மூலமாக அறிந்தவர்களுள் புலவருடைய வாதத்துக்காக வருந்தினவர்களே அதிகம். சங்கஇலக்கியம் தமிழர் வாழ்வியற் சட்டப் புத்தகம் அல்லவா? அதில் உள்ள ஒரு சட்டம் தமிழகத்தில் எப்படி ஒரு புறம்பான விதி என்று கருதப்பெறும்? இடப் பக்கம் போதல் என்பது எப்படி இந்த உலகில் ஒரு சட்டமாக அமைய முடியும்?

புலவர் சட்டப் புத்தகத்தைச் சான்று காட்டிக் கூறியவை ஏன் சரியானவை என்று ஏற்றுக்கொள்ளப் பெறவில்லை? வலப் பக்கம் போதல் அறமாகலாம். ஆனால் அது சட்ட உருப் பெறவில்லை. சட்ட உருப்பெற்ற அறம்தான் செயற்பாட்டு அறம் ஆகும். அதுவே சரியான செயல் எனப் பெறுவதும் ஆகும். மனிதர்கள் மேற்கொள்ளும் செயல்கள் சரியானவை, தவறானவை என அமைவதன் அடிப்படை என்ன? இவ்வாறு,நாம் அனைவரும் செயல் செய்வதற்குச் செலவிடும் நேரத்தைவிட அதிக நேரம் செயலைச் சரியானதா, தவறானதா என மதிப்பீடு செய்வதில் செலவிடுகிறோம் என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

இச்செயல் சரியா, தவறா? என்ற வினா இன்று தவிர்க்க முடியாத ஒன்று. இவ்வினாவுக்கு உரிய விடையினை அளிக்க முற்பட்ட துறைதான் 'அற இயல்'.

மனிதனின் செயல் என்பது பிறவற்றின் செயல்களையும் இணைத்து நிற்பதே

உலகில் மனிதர்கள் வாழ்வதைப் போலவே ஏனைய உயிர்ப் பொருள்களும் வாழ்கின்றன. ஒரு பொருள் இருக்கின்றது என்று நாம் ஒத்துக்கொள்ள வேண்டும் என்றால் அப் பொருள் செயல் பட வேண்டும். செயல் ஒன்றுதான் அனைத்து உயிர் வாழ்க்கைக்கும் அமைந்த பொதுநிலை. செயற்படவேண்டும்; செயற்படுத்த வேண்டும். செயல் என்பது பொருளின் அசைவுதான் என்றாலும் அது ஒரு தவிர்க்க முடியாத தேவை.

மனிதனைத் தவிர மற்றை எல்லாப் பொருள்களும் செயற் செய்வதோடு அமைந்துவிடுகின்றன. மனிதன் செயல் செய்ய முற்படும்போதே இது சரியானதா, தவறானதா என்ற அறிவுடனேயே செயற்பட விரும்புகிறான். மனிதன் தன் செயலை மட்டுமன்றி, ஏனைய மரம் முதலியவைகளின் செயல்களையும் கூடச் சரியானவையா, தவறானவையா என அறிந்து, அவைகளையும் சரியான நெறியிற் செயற்படுத்த விரும்புகிறான்.

தென்னை மரம் வளர்ந்து மூன்றாவது வீட்டுத் தோட்டத்தில் வளைந்து நிற்கிறது. தென்னை மரத்தை வைத்தவன் தென்னையின் வளர்ச்சியானது தவறானது என்று தென்னையை வெட்டிவிடுகிறான். வளைந்து வளர்ந்தது தவறான செயல் என்பது தென்னையின் செயலைப் பற்றிய மனிதனின் கணிப்பு.

சாலையின் ஓரத்தே வளர்ந்து செழித்த வேப்பமரக் கிளைகளை வெட்டி விடுகிறார்கள். தொலைபேசிக் கம்பியின் வழியைத் தடை செய்தது வேப்பமரக்கிளைகள் செய்த குற்றம் என்பது காரணம்.

எந்த ஒரு செயலையும் சரியானதா, தவறானதா என ஆய்வு செய்வது மனிதனின் இயற்கையிலேயே அமைந்துவிட்ட ஒரு செயல் என நாம் மேலே காட்டப்பெற்ற சான்றுகளால் தெளியலாம். மனிதர்கள் செயலேயன்றி ஏனையவைகளின் செயல்களையும் கூட, இவ்வாறே ஆராய்ந்து செயற்படுத்தவும் மனிதன் முற்பட்டுவிடுகிறான். இந் நிலையில், உலகில் வாழும் எல்லாப் பொருள்களும் செயற்பட வேண்டும்; அவைகளில் செயற்பாடுகள் ஒன்றை ஒன்று தடை செய்யாத வகையில், ஒன்றோடு ஒன்று இணைந்து நிற்கும் வகையில் மனிதன் செயற்படவும் செயற்படுத்தவும் விழைகிறான் என்பதையும் நாம் காண முடிகிறது.

செயற்பட வேண்டும் என்பது ஓர் இன்றியமையாத தேவை. ஆனால் எல்லாப் பொருள்களின் செயல்களும் இணைந்து நிற்கும் வகையில் அமைய வேண்டும் என்று எண்ணுவதும் செயல்படுவதும் செயற்படுத்துவதும் மனிதனின் செயலாக அமைகிறது. இவ்வாறு செயல்பட வேண்டும் என்ற அறிவைத் தர முற்பட்ட துறைதான் 'அற இயல்'.

'சரியான செயல் செய்' என்பது அற இயல் தந்த அறிவு.

செல்வதற்கு உரியதுதான் சாலை. சாலைகளிலேயும் சரியான சாலை, தவறான சாலை என இரண்டு சாலைகள் பேசப்பெறுகின்றன. அவ்வாறே செயலாற்றுபவர்களின் செயல்களிலும் சரியான செயல், தவறான செயல் என்பவை பேசப்பெறுகின்றன.

நான்கு பேர் சென்ற வழியில் செல் என்பது அறவுரை. தனிமனிதன் தன் இச்சைப்படி, தன் அறிவு அனுமதித்தப்படியே செயலாற்றினாலும் அவன் செய்தது சரி என்றோ, தவறு என்றோ பிறரால் ஆராயப் பெறுகிறது என்றும் கொள்ளலாம். அல்லது ஒருவன் செயல் மற்றவர்களால் சரி, தவறு என்ற இரண்டின் அடிப்படையில் ஆராயப் பெறுதற்குரிய செயல்களே என்று கூடக் கூறிவிடலாம்.

நாளடைவில் மக்களுள்ளத்தில் கீழ்க்கண்ட ஒரு கருத்து உண்டாகக்கூடிய சூழ்நிலை தோன்றிவிட்டது என்று கொள்ளலாம். உனக்கு நன்மையோ தீமையோ, இன்பமோ துன்பமோ

அவைபற்றிக் கவலைப்படாதே, மற்றவர்கள் உன் செயலைத் தவறான செயல் என்று குறை கூறும்படியான செயல்களைச் செய்துவிடாதே என்று நீதி சொல்லவும் நீதியை மேற்கொள்ளவும் தொடங்கிவிட்டார்கள் என்பதே அக்கருத்து.

உலகில் சிலர் சிறப்பாக வாழ்ந்தோம் என்று பெருமை பேசிக் கொள்கிறவர்கள்கூட, எந்த ஒரு சிறு குறையும் யாரும் சொல்ல முடியாதபடி அல்லது சிறு தவறும் நேராதபடி நடந்து முடித்தேன் என்றுதான் சொல்லிப் பெருமைப்படுகிறார்கள்.

தொழில்முறைச் சிறப்பறிவிலும் அற இயல்

இரண்டு மருத்துவர்கள் ஒரே நோயுள்ள இரண்டு நோயாளிகளைக் கவனிக்கிறார்கள்; மருத்துவம் செய்கிறார்கள். ஒரு மருத்துவர் மேற்கொண்ட முறை தவறு என்றும் மற்றவர் மேற்கொண்ட முறை சரி என்றும் விமரிசனம் செய்யப் பெறுகிறது. இனி மருத்துவர்களையே கேட்டால்கூட, அவர் முறையைவிட என் முறையே சிறந்தது என்று இருவருமே பேசுவதை நாம் கேட்கலாம். முறைகள் இரண்டாக அமைவானேன்? ஒன்றைவிட மற்றொன்று சிறந்த முறை என்று கருதப் பெறுவானேன்?

வழக்குரைஞர்கள் கையாளும் செயல்முறைகள், கட்டட வல்லுநர்கள் கையாளும் செயல்முறைகள் மாறுபடுகின்றன. சில முறைகளைத் தவறானவை என்று விளக்குகிறார்கள்; சில முறைகளை நல்லவை என்று ஏற்க முற்படுகிறார்கள்

எல்லாச் செயல்களும் இவ்வாறு ஒரு வகை அறிவால்தான் முடிவு செய்யப் பெறுகின்றன. அதிலும் ஒரு விந்தை. இத்தகைய தவறான செயலை விளைவித்த அறிவையுங்கூட, தவறான அறிவு என்று முடித்துக் காட்டுவதையும் நாம் கேட்க முடிகிறது.

மேலே காட்டப் பெற்றவைகளை நோக்கினால் எந்த ஒன்றும் சரி அல்லது தவறு என்ற இரு கொள்கைகளால் அளக்கப் பெறுகின்றன. அவ்வாறே எந்த ஒரு செயலும் சரி அல்லது தவறு என மனித அறிவால் ஆராயப் பெறுகிறது என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது.

வாழ்வு என்ற சொல்லின் பொருளை விளக்குவதே அற இயல்

தனிமனிதன் செயல்களைச் செய்கிறான். பல மனிதர்கள் சேர்ந்து பல செயல்களைச் செய்கிறார்கள். மனிதர்களின் செயல் களைச் செயல்கள் என்று பொதுப்படக் கூறாமல், வாழ்க்கைச் செயல்கள் என்றும் குறிக்கோள் வாழ்க்கைச் செயல்கள் என்றும் பேசுகிறார்கள். மனிதன் தன்னை உயிருடையவன் என நிலை நாட்டிக் கொள்வதற்காகப் பல செயல்களைச் செய்கிறான். ஆனால், அவனைச் செயல் செய்கிறான் என்று சொல்லாமல் 'மனிதன் வாழ்கிறான்' என்று கூறுகிறார்கள்

'மனிதன் வாழ்கிறான்' என்று சொல்லும்போது வாழ்வு என்பது ஒரு வகையில் பொருள் பொதிந்த சொல்லாக நமக்குப் புலப்படுகிறது.

'வாழ்கின்றாய் வாழாத மனமே
கேடு உனக்குச் சூழ்கின்றாய்'

என்று ஓர் அருளாளர் பேசுகிறார் வாழ்வதற்கு உரிய செயல் கள் என்று எண்ணித்தான் மனம் சில செயல்களை மேற்கொள்ளு கின்ற. ஆராய்ந்து பார்த்தால், உண்மையில் அவை வாழ்வுக்கு உரிய செயல்கள் அல்ல என்று தெரிகிறது. அருளாளரின் அறிவிப் பிலிருந்து இத்தகைய உண்மையை நாம் உணர முடிகிறது.

'அதோ போகிறானே, அவன் உயிர் வாழும் மனிதனல்லன்; நடைப்பிணம்'' என்ற பேச்சு இன்றும் சிவரைப் பற்றிப் பேசப் பெறுகிறது. பிணம் செயலற்றது; ஆனால் இவனோ செயல் செய்கிறான்! பிணத்தின் செயல் இல்லாத நிலையும், இவனின் செயல் உள்ள நிலையும் ஒன்றே என்று கருதப் பெறுகிறது. செயலை நிகழ்த்தும் நிலையும் செயலை நிகழ்த்தாத நிலையும் எப்படி ஒன்றாகும்?

மேலே பேசப் பெற்ற பேச்சுகளிலெல்லாம் அகப்பட்டுக் கொள்ளாத நிலையில் எந்த ஒரு மனிதனும் இவ்வுலகில் இருக்க முடியாது. ஒரு செயல் தவறு என்றும் ஒரு செயல் சரி என்றும் முடிவு செய்யப் பெறுவது எதன் அடிப்படையில் என்ற வினாவை எழுப்பினால், அவ்வினாவுக்குரிய எல்லாச் செய்திகளையும் அமைத்துக் கொடுத்து விளக்குவதே 'அற இயல்' என்பது.

எந்த ஒன்றையும் சரி அல்லது தவறு என அதன் செயலை அடிப்படையாகக் கொண்டு முடிவு செய்யும் ஒரு துறையே

'அற இயல்' துறை என்பதாம். தனிமனிதனுடைய நடத்தையானது சரி, தவறு என்று கருதப் பெறுவதற்குரிய ஆய்வு முறைகளை அமைத்துக் கொடுத்து, மதிப்பீடு செய்யவல்ல ஒரு வகை அறிவியல் ஆராய்ச்சியே 'அற இயல்.,

தனிமனிதன் விஞ்ஞானியாக இருக்கலாம், கவிஞனாக இருக்கலாம், நீதிபதியாக இருக்கலாம். ஆனால் அவன் வாழ்வின் குறிக்கோள் பெருமையை மதியாத செயலில் ஈடுபடும்போது, அற இயலானது, அவனுடைய பிற திறமைகளையெல்லாம் மதிப்பிடாமல், மனித வாழ்வின் நோக்கக் குறிக்கோளை மதித்து நடக்காத தீயவன் என்றே வரையறை செய்கிறது. இதையே திருவள்ளுவரின் அற இயல்,

'அரம் போலும் கூர்மையரேனும் மரம் போல்வர்
மக்கட் பண்புஇலா தவர்'

என்று கூறுகிறது. இங்கே, மக்கட்பண்பு என்பது மனித வாழ்வின் குறிக்கோளை மதித்து, அதனை அடையும் நோக்கத்துடன் மேற்கொள்ளும் வாழ்வு முறையையே குறிக்கின்றது.

செயலுடையது எல்லாம் வாழ்வுடையது ஆகாது; வாழ்வு என்பது வெற்றுச் செயல்களின் கூட்டம் அன்று; அது ஒரு குறிக்கோளை உடையது; குறிக்கோள் என்பது ஒருவகை உயர் வாழ்வு நிலை; அத்தகைய உயர் வாழ்வு நிலையை அடிப்படையாகக் கொண்டே தனிமனிதனின் பல்வேறு செயல்கள் அமைகின்றன என அமைத்துக் காட்டி ஒவ்வொரு தனிச் செயலும் அறமனிதனின் உயர் வாழ்வு நிலையை அடிப்படையாகக் கொண்டு சிந்திக்கும்போது சரி என்றோ தவறு என்றோ முடிவு செய்யப் பெறுகிறது என்ற விளக்கத்தை வரையறையுடன் வழங்கும் ஒரு துறையே 'அற இயல்'.

தனிமனித வாழ்வையும் சமூக வாழ்வையும் வரையறுப்பது அற இயல்

உலகில் தனிமனிதன் வாழ்வு மட்டும்தானா காணப்படுகிறது? பல மனிதர்கள் இணைந்து வாழும் வாழ்வுக்குச் சமூக வாழ்வு என்பது பெயர். பலரும் இணைந்து செயல்படும் பல துறைகள் உள்ளன. கணவன் மனைவி, பெற்றோர் பிள்ளைகள், ஆசிரியர் மாணாக்கர், வேலை கொடுப்போர் வேலை ஏற்பேர், ஆள்வோர் ஆளப் பெறுவோர் என இவ்வாறு பல துறைகளில் பலரும் இணைந்து வாழ்கிறார்கள். இவ்வாறு இணைந்து வாழ்கிறவர்கள் செயல்படுகிறவர்களே. ஒவ்வொரு துறையிலும்

இவ்வாறு இணைந்து செயல்படுகிறவர்கள் மேற்கொள்ள வேண்டிய் ஒழுங்கு முறைகள் இவை இவை என வரையறுப்பதும், அவர்கள் மேற்கொள்ளும் ஒழுங்கு முறைகள் சரியானவையா தவறானவையா என ஆய்ந்து முடிவு செய்வதும் அற இயல் துறையில் தான் நடைபெறுகின்றன.

அறம் சட்டமாக அமைவதற்கு வழிவகுப்பது அற இயலே

அறம் என்பதற்கும் சட்டம் என்பதற்கும் உரிய வேறுபாட்டினை நன்கு தெரிந்து கொள்ளுதல் வேண்டும். எல்லாச் சட்டங்களும் அறங்களாகும், ஆனால் அறங்களெல்லாம் சட்டங்களாகா. அறம் மனிதனின் அறிவுக்கு விருந்தாக அமைவது; சட்டம் மனிதனைச் செயற்படுத்துவது. அறம் சட்டமாகும் போது அதற்குச் செயலுரிமை, ஆணை, தண்டிக்கும் வன்மை, அனைவருடைய அறிவும் தாழ்ந்து நின்று, இது சரி எனத் தலை வணங்கி ஏற்கும் வகையில் நடக்கும் பெருமை ஆகிய பல ஆற்றல்கள் தோற்றம் பெறுகின்றன. இவைகள் எந்த அடிப்படையில் தோன்றுகின்றன என ஆராய்வதும் ஒரு சில சட்டங்கள் உயிர்ப்பில்லாமல் கிடக்கின்றனவே, ஒரு சில சட்டங்கள் பலமுறை திருத்தம் பெறுகின்றனவே அவைகளுக்கெல்லாம் உரிய காரணங்கள் யாவை என ஆராய்வதும் 'அற இயல்' ஆகும்.

சுருங்கக்கூறின், அற இயல் என்பது மனித வாழ்வின் பொருள் பொதிந்த உயர்நிலை எனப்பெறும் குறிக்கோள் பற்றிய ஆராய்ச்சி எனலாம்.

அற இயலின் பணி

அற இயலானது தனிமனிதனின் செயல்முறை அறிவைப் பண்படுத்துகிறது. உயர் குறிக்கோள் வாழ்க்கையை நோக்கிய செயல்களில் ஈடுபடுமாறு அவனை உள்நின்று உந்துகிறது. தனிமனிதனின் செயலை அவனுடைய வாழ்வியற் செயலாக மலர வைக்கிறது. தனிமனிதன் செயலுக்கு வாழ்வு என்பதன் மதிப்பீட்டியலான கருத்தை வழங்குகிறது.

இவ்வாறே அனைத்து மனிதர்களையும் 'நம் வாழ்வின் குறிக்கோள்தான் யாது?' என்ற கேள்வியைக் கேட்கச்செய்து நம் குறிக்கோளை அடையும் வகையில் நாம் செயல்படுகிறோமா என்று சிந்திக்கச்செய்து, குறிக்கோள் இது, குறிக்கோளை அடையத் தகுந்த செயல் இது என்று தெரியும்

அறிவைக் கொடுத்து, அவ்வறிவின் வழியிலேயே அவர்களை அச்செயல்களில் ஈடுபடுத்தி, அவர்கள் குறிக்கோள் வாழ்வை அடையுமாறு அவர்களைச் செயற்படுத்துவது 'அற இயல்' விளைத்த அறிவு எனலாம்.

திருவள்ளுவர் நோக்கில் அற இயல்—அற இயலறிவே அறிவு

தமிழகத்தில், தமிழ்மொழியில் ஒரு முழுமையான அற இயல் நூலை முதன்முதல் ஆக்கித்தந்த முதன்மைத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் என்று கொள்வது தமிழக மரபு. உலக அற இயற் சிந்தனையாளர்களின் அற இயற் கருத்துகளை விளங்கிக் கொள்ளும்போது, அற இயற் சிந்தனையாளர்களுள் ஒருவராக விளங்கிய திருவள்ளுவர் எவ்வாறு இக்கருத்தை எடுத்து விளக்குகிறார் என்று இணைத்துக் காண முற்படுவோமானால், அது நாம் அற இயற் கருத்துகளைத் தெளிவாக விளங்கிக் கொள்ளுவதற்கு உதவி செய்யும். அவ்வகை அடிப்படையிலேயே, திருவள்ளுவரின் அற இயற் கருத்துகளும் ஏனைய அறநூற் கருத்துகளும் அங்கங்கே இணைத்துக் காட்டப் பெறுகின்றன. கருத்துத் தெளிவு கருதி இத்தகைய இணைப்பு இடம்பெறுகிறது.

அற இயல் என்றால் என்ன என்ற வினாவுக்குத் திருவள்ளுவர் விடை கூறும் முறை வியக்கத்தக்க தொன்று. உலக வழக்கில் மக்கள் பொதுவாக 'அறிவு' என்று சொல்வதையே திருவள்ளுவர் 'அற இயல் அறிவு', என்று கூறுகிறார். அவர் அதற்குத் தரும் விளக்கம் கீழ்க்கண்டவாறு அமைகிறது:

நல்லவனாக வாழவேண்டும் என்பது ஓர் அறவுரை. நல்லவனாக வாழ்ந்தால் மட்டும் போதாது, வல்லவனாகவும் வாழ வேண்டும். இதுவும் அறவுரை வகையைச் சார்ந்ததே. நல்லது செய்ய இயலவில்லையானாலும் நல்லது அல்லாததைச் செய்யாமல் உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்பது புறநானூறு தரும் அறவுரை.

நல்லவனாக வாழ்தல் என்றால் எப்படி வாழ்தல், நல்லதைச் செய்ய முற்படவேண்டும் என்று எண்ணிச் செயலாற்ற முற்படும்போது நல்லது என்றால் எது, என இவ்வாறு பல வினாக்கள் எழுகின்றன. நல்லது என்றால் எது என்ற வினாவுக்கு உரிய விளக்கம் இது என்று தெரிந்து கொள்வதற்கு முன்பே 'நல்லது செய்வதிலுங்கூடத் தவறு இருக்கிறது' என்று திருவள்ளுவர் கூறுவது நம் காதில் ஒலிக்கிறது.

நல்லவனாக வாழவேண்டும் என்ற அறிவுரைப்படி வாழ விரும்புகிறோம். நல்லவனாக வாழ்தல் என்பது நல்லது அல்லாததைச் செய்யாமல்,நல்லதைச் செய்து வாழ்தல்வேண்டும் என்ற ஒரு பொது வரையறையை வைத்துக்கொண்டு நல்லவனாக வாழவேண்டும் என்ற உணர்ச்சியானது செலுத்த, நல்லதைச் செய்துவிடவேண்டும் என்ற செயலாற்றல் அல்லது செயலூக்கி யானது உள்ளிருந்து உந்தித் தள்ள, நல்லதைச் செய்தே விடுவது என்று வெளிப்பட்ட நம்மைத் தடுத்து நிறுத்துகிறது ஒரு வினா. எது நல்லது என்பதே அவ்வினா.

எல்லா மனிதர்களிடத்திலும் நல்லது இது என்று தெரிந்து கொள்ளுவதற்குரிய ஆற்றல் ஒன்று இருக்கிறது; அதைப் பயன்படுத்தி, அவரவர்களும் நல்லது இது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும் என்று கூறுகிறார் திருவள்ளுவர்.

நம்முள் இருக்கிற நம்முடைய ஆற்றலைப் பயன்படுத்தினால், நல்லது இது என்பதைத் தெரிந்து கொள்ள நம்மால் முடியும் என்ற திருவள்ளுவர் கருத்து, நமக்கு ஒரு தன்னம்பிக்கையை உண்டாக்குகிறது.

திருவள்ளுவர் மேலும் சொல்லுகிறார். நல்லதைத் தெரிந்து கொள்ளுகிற ஆற்றல் இருப்பதனாலேயே ஒருவன் பயன் பெற்றுவிட முடியாது. ஆகையால், அந்த ஆற்றல் அவனை அந்த நற்செயலிலேயே கொண்டுபோய் நிறுத்திவிடும் தன் மையையும் கொண்டது என்று கூறுகிறார்.

ஒருவனுக்கு நல்லது இது என்பதை உணர்த்தவும் செய்து, அவனை நல்ல செயலினுள் கொண்டுபோய் நிறுத்தவும் செய்கிற அந்த ஆற்றல் அவனுக்காக வேறு இரண்டு நன்மைகளையும் செய் கிறது என்று குறிப்பிடுகிறார் திருவள்ளுவர்.

(1) நெறியல்லா நெறியில் போக முற்படும் அல்லது போகிற அல்லது முன்னமேயே போய்விட்ட அவனை அந்நெறியில் போகாதவாறு தடுத்து நிறுத்தும்.

(2) நல்லது அல்லாததை —தீயதை அவன் செய்ய முடியாத வாறு அவனிடத்திலிருந்து அத்தீயதை நீக்கிவிடும்.

எனவே, எல்லா மனிதர்களிடத்தும் உள்ளிருந்து செயற் படுத்தும் ஆற்றல், நான்கு பணிகளில் ஈடுபடுகிறது என்று கூறு கிறார் திருவள்ளுவர்.

நல்லது இது என உணர்த்தும்; நெறியல்லா நெறியில் செல்லாதவாறு அவனைத் தடுத்து நிறுத்தும்; தீயவைகளை அவனிடமிருந்து நீக்கும்; இறுதியாக அவனை நல்லவைகளைச் செய்தலில் கொண்டுபோய் நிறுத்திவிடும் என்றார். ஒரு தனி மனிதனுக்காக இந்நான்கையும் செய்கிற ஆற்றல் எது? 'அறிவு' என்ற ஒரு சொல் விடையைத்தான் தருகிறார் திருவள்ளுவர்.

செய்திகள் பலவற்றைத் தெரிந்து கொள்ளுவதற்குரிய மனித ஆற்றலைத் திருவள்ளுவர் அறிவு என்று கூறவில்லை. நல்லது இது, தியது இது என வேறு பிரித்துத் தெரிந்துகொள்ள உதவுவது அறிவு என்ற விளக்கத்தைத் திருவள்ளுவர் ஏற்றுக் கொள்ள வில்லை என்று கருதலாகாது. அவைகளும் அறிவின் பணிகளே என்றாலும் தெரிந்து கொள்ளுகின்ற அந்த அளவில் மட்டும் நின்றுவிடுமேயானால் அதற்கு அறிவு என்ற பெயர் பொருந்தாது. நல்லது இது எனத் தெரியவைப்பதும், அதனைச் செய்ய வைப் பதும் ஆகிய இரண்டும் இணைந்தால்தான் 'அறிவு' என்பதாக அது பெயர்பெறும். எனவே, அறிதலும் செய்தலும் இணைந்த நிலையில் உள்ளதே அறிவு என்ற விளக்கத்தைத் திருவள்ளுவர் தரும் விளக்கமாகக் கொள்ளவேண்டும்.

நல்லது தீயது என்பவைகளைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற எண்ணமே இல்லாமல், எதை எதையோ செய்து கொண் டிருப்பவனைத் தட்டி எழுப்பி, தடுத்து நிறுத்தி, அவனுக்கு நல்லது இது என உணர்த்தும்; செய்யக்கூடாததாகிய தீயதை அவன் செய்ய முற்படாதவாறு அவனிடமிருந்து நீக்கிவிடும்; அவனை நற்செயல்களில் ஈடுபடுத்தி, நற்செயல்களைச் செய்யு மாறு அவனைச் செயற்படுத்தும். இவைகளைச் செய்யும் அறிவை என்ன அறிவு என்று கொள்வது? அற இயற் செயல்முறை அறிவு என்று கொள்வதே பொருத்தம்.

'சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு'

என்ற திருக்குறளிலும், அத்திருக்குறள் அமைந்த அதிகாரமாகிய 'அறிவுடைமை' முழுவதிலும் திருவள்ளுவர் அற இயல் அறிவையே விளக்குகிறார்.

செயல் ஒன்று; மதிப்பீடு இரு வகை

மேலே கூறப்பெற்றவாறு மனிதனை அறவழியிற் செயற் படுத்தும் அறிவு எல்லா மனிதர்களிடத்திலும் இருக்கிறது

என்பதை நாம் ஏற்றுக்கொண்டால், நல்லது எது எனத் தெரிந்து கொள்வதிலேயோ, நல்லதை விரைந்து செயற்படுத்துவதிலேயோ சிக்கல் தோன்ற வழியில்லை. ஆனால், ஒரே செயலைப் பற்றி இருவேறு மனிதர்கள் ஒன்றோடு ஒன்று மாறுபட்ட இருவேறு மதிப்பீட்டுக் கருத்துகளைச் சொல்லுகிறார்கள். ஒருவர் நல்லது என்று சொல்வதை மற்றவர் தீயது என்று சொல்கிறார்.

பாம்பு ஒன்று நெருப்பில் அகப்பட்டுக் கொண்டது. அதனை நெருப்பிலிருந்து மீட்டுக் காப்பாற்ற முற்படுகிறார் ஒருவர். அவருடைய முயற்சியைக் கண்ட மற்றொருவர் பாம்பைக் காப்பாற்றும் செயல் தீய செயல் என்று கூறித் தடுக்கிறார். இருவரும் அறிவுடையவர்களே. ஒருவருக்கு நல்லது எனத் தோன்றும் செயல் மற்றவருக்கு நல்லது அல்லாத செயல் எனத் தோன்றுகிறது. நெருப்பிலிருந்து மீட்டல், நெருப்பிலேயே சாகவிடுதல் என்ற இரண்டினுள் ஒன்றுதான் நல்ல செயலாக இருக்க முடியும். இரண்டும் நல்ல செயல்களான இரண்டு அறிவுடையவர்களும் எடுத்துக் கூறிச் செயற்படுத்துவார்களானால் அவர்கள் இருவரும் ஒரே செயலை இரு வேறு கோணங்களில் சிந்திக்கிறார்கள் என்பதே உண்மை. ஆயினும், நல்லது எது? என்ற வினாவுக்கு இன்னும் சரியான விடை கிடைக்கப்பெறவில்லை என்றுதான் கொள்ள வேண்டியிருக்கிறது.

நல்லது இது, தீயது இது என உள்ளிருந்து உணர்த்தும் ஆற்றல் ஒன்று மனிதனிடத்தில் இருக்கிறது என்று திருவள்ளுவர் கூறியிருப்பதை நாம் முன்பே சிந்தித்திருக்கிறோம். பாம்பினைக் காப்பாற்றும் செயலில் திருவள்ளுவர் கருத்தும் முரண்படுவதாகத் தோன்றுகிறதே எனில், இல்லை.

தனிமனிதனுடைய வாழ்க்கையில் நல்லது இது, தீயது இது என வரையறை செய்து உணர்த்தும் அறிவு அவனுள் இருந்து செயற்படவும் செயற்படுத்தவும் செய்கிறது. தனிமனிதன் தன் தனிமை நிலையில் செய்யப் பெற வேண்டிய செயல்களைத் தனி மனிதன் உள்ளிருக்கும் அற இயலறிவு தெரிவித்து விடுகிறது. தனி மனிதன் சில பொதுமைச் செயல்களில் ஈடுபட முற்படும்போதுதான் இத்தகைய சிக்கல் தோன்றுகிறது. எந்த உயிரையும் சாக விடாமல் காத்தல் வேண்டும் என்பது ஒருவகைப் பொதுமை விதி. பொதுமை விதியின் தன்மையைத் தனிமனிதனின் உள்ளிருக்கும் தனியாற்றல் முழுமையாக விளக்காது. பொதுமைச் செயல்களைப் பொதுமை நிலையில் நின்று சிந்தித்துத்தான் செயல்பட வேண்டும் என்று கூறுகிறார் திருவள்ளுவர்.

'எல்லாரும் எக்காலத்திலும் வாய்மை பேசுவது நல்லது என்பது ஒருவகைப் பொதுமை விதி. இத்தகைய பொதுமை விதியை மீளவும் சிந்திக்க வேண்டிய புதிய சூழ்நிலைகள் தோன்றி விடுகின்றன. பொதுவிதியினை மாற்றவேண்டிய சூழ்நிலை அமைந்து விடுமேயானால் மாற்றத்தான் வேண்டும் என்று முடிவு செய்து திருவள்ளுவர்,

> 'பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
> நன்மை பயக்கு மெனின்'

என்ற திருக்குறளால் பொய்மை பேசுவதையும் அனுமதித்தார்.

தனிமனிதனின் தனிமைச் செயல் அவனுடைய பொதுமைச் செயல் என்ற இருவேறுவகைச் செயல்களில், தனிமைச் செயலை அவன் மேற்கொள்ள முற்படும்போது, அவனுடைய அற இயல் அறிவு தனிமைச் செயலில் நல்லது இது எனத் தேர்வு செய்து கொடுத்து விடுகிறது என்பதில் சிக்கல் அதிகமாகத் தோன்றுதல் இல்லை. ஆனால் அவன் பொதுமைச் செயல்களை மேற்கொள்ள முற்படும்போதுதான் நல்ல பொதுமைச் செயல் எது என்று தேர்ந்தெடுப்பதில் சிக்கல் காணப்பெறுகிறது. பொதுமை விதி களைக்கூட, சூழ்நிலைக்கேற்ப மாற்றவேண்டிய அவசியம் நேரும் என்று திருவள்ளுவரே எடுத்துக் காட்டியிருப்பதை நாம் கண்டு தெளியலாம்.

இத்தகைய சிக்கலைத் தமிழகத்து வேறு அறநூல் ஆசிரியர் களும் அணுகியிருக்கிறார்கள். இச்சிக்கலைத் தீர்க்கும் ஒருவகைச் செயற்பாட்டு முறையாக, அறப்பட்டியல் நூல்களை ஆக்கிக் கொடுத்தார்கள். இதைச் செய், இதைச் செய்யாதே என அறச் செயல்கள் பலவற்றையும் பட்டியல் அமைத்துக் கொடுத் துள்ளார்கள். அவ்வகையில் அறப்பட்டியல் நூல்களாகத் திகழ் பவைகளே ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலியன.

அறப்பட்டியலிலும் ஒரு சிக்கல் எழுந்தது. நல்லவை என்று துணியப் பெற்று, நல்லவைகளை அமைத்த பட்டியலில் இடம் பெற்ற பல செயல்கள் காலமாற்றத்தால் தேவையில்லாதவை என்று கருதப்பெற்றன. எடுத்துக்காட்டாக, அன்னசத்திரம் கட்டுதல் ஒருகாலத்தில் நல்லது என்று கருதப் பெற்றது. பின் வந்த காலத்தில் அன்னசத்திரம் கட்டுவதைவிட ஆலயம் கட்டு வது நல்லது என்று கருதப் பெற்றது. இத்தகைய மாற்றங்களை வரலாற்றுப் பின்னணியோடு சிந்திக்கிறார் பாரதியார்.

நல்லவைப் பட்டியலில் சேர்க்கப் பெற்றிருந்தாலுங்கூட காலத்துக்கு ஒத்தவைகளையே நாம் செய்ய முற்பட வேண்டும். நல்லவைப் பட்டியலில் சேராததாய், இக்காலத்துக்கு மிகவும் தேவைப்படுவதாய், நல்லது என்று கருதப் பெறுவதற்கு இசைந்ததாய் ஏதேனும் ஒரு நல்ல செயல் இருக்குமேயானால், அதைச் செய்வதிலோ, நல்லவைப் பட்டியலில் அதனையும் சேர்த்துக் கொள்வதிலோ தடையில்லை. நல்லவையாயினும் காலத்தோடும் சூழ்நிலையோடும் ஒத்தவை இவை என அறிந்து செய்தலும் தேவை என்று கூறி,

'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம்பதி னாயிரம் நாட்டல்'

என்று முறையாகக் கூறிவந்து, இறுதியிலே

'அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி வித்தல்'

என்று முடித்துக் காட்டுவதையும் காணலாம்.

மேலே எடுத்துக் காட்டப் பெற்றவைகளை இணைத்து நோக்கினால், தனிமனிதன் தன் வாழ்வோடும் சமூக வாழ்வோடும் தன்னை இணைத்துக் கொண்டு வாழும் நிலையில் காலம், இடம், சூழ்நிலை ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு, இவை இவையே செய்யற்பாலன எனத் தேர்ந்தெடுத்துச் செய்யவும், அல்லாதவைகளை நீக்கவும், தேர்ந்தெடுத்தவைகளைச் செம்மையான முறையில் செயற்படுத்தவும், செயல்களின் பயனை உள்ளவாறு துய்க்கவும் ஆகிய நிலைகளில் அவன் செயற்படுவதற்கு வேண்டிய செயலறிவைத் தருவதே 'அற இயல்' என்றும், அறிவு என்பது அற இயல் செயற்பாட்டு அறிவே என்றும் திருவள்ளுவர் கொள்ளுகிறார் என்று கருதுதல் வேண்டும்

சரி, தவறு ஆகியவைகளைத் தெரிவு செய்யும் முறை

செயல்கள் சரியானவை, தவறானவை என முடிவு செய்யப் பெறுவதற்கு உரிய அடிப்படைக் காரணங்களைச் சில எடுத்துக் காட்டுகளால் விளக்குகின்றார் திருவள்ளுவர். இதற்கெனத் தனியே ஓர் அதிகாரம் அமைக்கின்றார். அதுவே 'கூடா ஒழுக்கம்' என்னும் அதிகாரம். முரண்பட்டவை, தவறானவை என்பது அவ்வதிகாரம் காட்டும் அடிப்படை நோக்கம்.

மனமும் உடம்பும்; குற்ற நெஞ்சமும் உயர்ந்த தோற்றமும்; உள்ளீடற்ற உருவப் புனைவு, போர்வை மறைப்பில் வேர்வைச்

செயல்; சொல் வேறு செயல் வேறு; அகத்து உறவாவன புறத்தே பகையாவன; புறச் செம்மை அகக் கறுமை; புறத் தூய்மை அக அழுக்கு ஆகிய இவையெல்லாம் இணைந்தவை போலத் தோன்றினாலும் முரண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டவை. இவைகளில் அமைந்த முரண்பாடுதான் செயலைத் தவறென ஆக்கும்.

சரி, தவறு ஆகியவைகளை அறியும் முறை யாது? ஒரே ஒரு மதிப்பீட்டுக்கோல்தான் வழங்குகின்றார். 'வினைபடுபால்' என்பதே அது. செயற்படு நிலை அல்லது செயல் நிலை என்ற ஒன்றை வைத்தே மதிப்பீடு செய்தல் வேண்டும்.

செயல் நிலையால் அல்லது செயற்படும் நிலையால் சரி என மதிப்பீடு செய்து முடித்துவிட்ட பிறகு அதனை ஏற்றுச் செயல் படுத்தலாமல்லவா? இவ்வினாவுக்குத் திருவள்ளுவர் சரியான செயலேயாயினும் அது சமுகத்தின் அனுமதி பெற்றதாகவும் அமைய வேண்டும் என்று குறிப்பிடுகிறார். உலகம் பழித்த செயல் நீக்கம் செய்யப் பெற்று உலகம் ஏற்ற செயலையே நாம் ஏற்றல் வேண்டும். இவ்விரண்டு கருத்துகளையும்,

> 'கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங் கன்ன
> வினைபடு பாலாற் கொளல்'

> 'மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
> பழித்தது ஒழித்து விடின்'

என்ற இரண்டு குறள்களாற் கூறினார்.

அற இயல் விஞ்ஞான அடிப்படையைக் கொண்டது

விஞ்ஞானம் என்றால் என்ன? ஒரு குறிப்பிட்ட பொருளையோ குறிப்பிட்ட நிகழ்ச்சியையோ எடுத்துக்காட்டி விளக்கம் கேட்கவோ அல்லது கூறவோ முற்பட்டால், அதனொடு இணைந்த முழுமையான செய்திகளையும் ஒருவகை ஒழுங்கமைப் பினுள் அமைத்துத் தருகின்ற அறிவே விஞ்ஞான அறிவு. ஒருவகை அடிப்படை ஒழுங்கமைப்பினுள் வேண்டாத செய்தி களை நீக்கி, வேண்டிய செய்திகள் எல்லாவற்றையும் முறையாக இணைத்துப் பெறுகிற முறைக்கு விஞ்ஞான முறை என்பது பெயர். ஒருவகை இலையைக் கொடுத்தால் தாவர இயலில் சாதாரண அறிவுடையவன் அந்த இலையைப் பற்றிய சில செய்திகளை மட்டுமே கூற வல்லவனாக இருப்பான். அந்த

இலையைப்பற்றிய எல்லாச் செய்திகளையும் தெரிந்திருந்தாலுங் கூட, இதன்பின் இது என்பதாக முறைப்படுத்திச் சொல்லும் முறை அவனிடம் இராது. செய்திகளின் நிறைவு குறைவு ஒருபுறம் இருக்க, ஒழுங்கமைப்பு நியதி ஒன்றை அடிப்படையாக நிறுத்தி, அதனுள் செய்திகளை இணைத்துக் கூறும் முறையைச் சாதாரண அறிவில் காணப்பெற இயலாது. விஞ்ஞான அறிவானது அந்த ஓர் இலையை அடிப்படையாகக்கொண்டு முழுமையான செய்திகளையும் தரவல்லது. அவைகளை ஓர் அடிப்படை ஒழுங்கமைப்பினுள் அமைத்து வழங்கவும் செய்யும்.

அவ்வாறே மனிதனுடைய எந்த ஒரு தனிச் செயலையும் குறிப்பிட்டு விளக்க முற்படும்போது, அச்செயல் பற்றிய முழுமையான செய்திகளையும், சரி அல்லது தவறு என்ற ஓர் அடிப்படை ஒழுங்கமைப்பினுள் அமைத்துக் காட்டி விளக்கும் ஆற்றலுடையது அற இயல். எனவே, 'அற இயல்' ஒரு விஞ்ஞான வகையைச் சார்ந்தது என்பர்.

எந்த ஒரு விஞ்ஞானமும் அதற்குரிய எல்லைக்கோட்டினுக்கு உட்பட்டு நின்றேதான், இயன்ற அளவில், முழுமையான விளக்கத்தினைத் தருகிறது. இத்தகைய எல்லைக்கோடு எல்லா வகையான விஞ்ஞானத் துறைக்கும் உண்டு. அற இயலும் அத்தகைய் எல்லைக் கோட்டினுக்கு உட்பட்டே இயங்கும் தன்மையுடையதாதலின், அவ்வகையாலும் 'அற இயல்' ஒரு விஞ்ஞான வகையைச் சார்ந்தது எனக் கருதப்பெறுகிறது.

அற இயலின் எல்லைக்கோடு

அற இயலானது ஒரு குறிப்பிட்ட அளவில் அமைந்த அறிவுடைய மனிதனின் அறிவொடுபட்ட செயல்களை மட்டுமே ஆய்விற்கு எடுத்துக் கொள்ளும். குழந்தைகளின் செயல், அறிவுக் குறைபாடு உடையவனின் செயல், கனவுச் செயல் முதலியவைகளைத் தம் ஆய்வுக்கு அமைத்துக்கொள்ளாது.

அறக் கருத்தானது முதன்முதல் இந்த இடத்தில் தோன்றியது, இப்படி வளர்ந்தது, இப்படி நிலை கொண்டிருக்கிறது என இவ்வாறு வரலாற்று முறையிலான ஆய்வை நாடி விளக்கம் கூற முற்படாது. வாழ்வியலின் உயர்நிலை எனப்பெறும் குறிக்கோளை உடன்படும். அத்தகைய வாழ்வியல் உயர்நிலை எனப்பெறும் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு, தனி மனிதனுடைய தனிச் செயலை இணைத்து நோக்கி, இச்செயல் அக்குறிக்கோளை நோக்கும்போது சரியானது அல்லது தவறானது என்று ஆய்ந்து கூறும் ஆற்றலுடையது.

ஒரு தனிமனிதன் சாலையில் தேநீர் குடிக்கிறான். இது தனிமனிதன் செயலேயாயினும், இது சரியா, தவறா என்பது பற்றி அற இயல் ஆய்வது இல்லை. ஒருவன் தபால் முத்திரைகளைச் சேகரித்து வைக்கிறான். இச்செயல் சரியா, தவறா என்பது அற இயல் ஆய்வுக்கு உரியதன்று. தனித் தீவிலோ அல்லது தனிக் காட்டிலோ விடப்பெற்ற தனிமனிதனின் செயல் ஆய்வுக்குரியது என்று அற இயல் கருதுவது இல்லை.

எனவே, அற இயலானது சில வரைமுறைகளைத் தனக்குரிய அடிப்படைச் செயல்முறை விதிகளாக அமைத்துக் கொள்கிறது. பின்னர், அத்தகைய அடிப்படைச் செயல்முறை விதிகளுக்கு ஏற்ப, தன்னுடைய ஆய்வினைத் தொடருகிறது என்று கொள்ள வேண்டுமேயன்றி, எல்லாவற்றையும் ஆராய்ந்து சொல்லுவது அதன் கடமை என்றோ அவ்வாறு எல்லாவற்றையும் ஆராய்ந்து சொல்லாதது அற இயலுக்கு உள்ள குறை என்றோ கருதுதல் ஆகாது.

மனிதனுடைய பல்வேறு வகைப்பட்ட இயல்புகளையும், அவனுடைய இயல்புகளை இணைத்தும் ஓங்கியும் விளங்கியும் அமையும் ஒரு பேரியல்பு எனப் பெறும் ஆளுமை இயல்பையும் உடன்கொண்டு வளர்ந்த பல்வேறு துறைகளையும் இணைக்கும் ஆற்றல் அற இயலுக்கு உண்டு. அவ்வாறு தனி மனிதனுடைய இயல்பு, ஆளுமை இயல்பு, ஆளுமை இயல்புடன் தொடர்புடைய பல்வேறு துறை என்ற இம்மூன்றையும் இணைத்து நின்று ஆய்வு செய்யும் வகையில் அற இயல் சற்று விரிந்த பரப்பளவை உடையது என்றே கொள்ளவேண்டும்.

அற இயல் ஓர் உயர்நிலை விஞ்ஞானம்

பல்கலைக்கழகம் படிப்பை அடிப்படையாகக் கொண்ட விஞ்ஞானக் கல்வியை இரண்டு வகைகளாகப் பிரிப்பர். விளக்க நிலை விஞ்ஞானக் கல்வி என்றும் உயர்நிலை விஞ்ஞானக் கல்வி என்றும் அவை பெயர் பெறும்.

விளக்கநிலை விஞ்ஞானத்தை நேர்நிலை விஞ்ஞானம், இருப்பு நிலை விஞ்ஞானம் என்றெல்லாம் கூறுவர். இது இவ்வாறு செயல்படுகிறது என்று விளக்கம் தரும் வகையில் அமையும் கல்வித் துறைப் பிரிவுகள் எல்லாமே இவ்வகையினுள் அடங்கும். தாவர இயல், உள்ளத்தியல், பௌதிக இயல் இரசாயன இயல் போன்றவை விளக்கநிலை விஞ்ஞானங்களே.

ஆனால் இது ஏன் இப்படிச் செயல்பட வேண்டும் என்றோ இது எப்படிச் செயற்பட்டேயாக வேண்டும் என்றோ அமையும் வினாக்களை எழுப்பிக் கொண்டு விடை சொல்ல முற்படும் துறைகளெல்லாம் உயர்நிலை விஞ்ஞானம் எனப் பிரிவு பெறும். நாம் சில பொருள்களைப் பற்றி ஆய்ந்து முடிவுசெய்யும்போது மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகள், விதிகள், மேல் வரம்புகள் கொள்கைகள் ஆகியவைகளை முடிவு செய்யலாம். அப்படிப் பட்ட ஆய்வுகளை மேல் வரம்பிட்ட அல்லது மேல்வரிச் சட்டங்கள் அடங்கிய விஞ்ஞானம் (Normative Science) என்பர். மனிதனை உள்ளிட்ட ஆய்வியலில் அளவையியல் (Logic), அழகியல் (Aesthetics), அற இயல் (Ethics) என்ற மூன்றும் உயர்நிலை விஞ்ஞானப் பிரிவைச் சார்ந்தவை எனக் கொள்வர்.

நல்ல சிந்தனை எப்படி இருக்கவேண்டும் என அளவையியல் விளக்க முற்படுவதுபோலவே, நல்ல அழகு எப்படி இருக்க வேண்டும் என அழகியல் விளக்க முற்படுவது போலவே, நல்ல செயல் அல்லது நல்ல நடத்தை எப்படி இருக்கவேண்டும் என விளக்க முற்படுவது அற இயலின் கடமையாகிறது. எப்படி இருக்கவேண்டும் என்ற வினா உயர்நிலையை அடிப்படையாகக் கொண்டது. ஆகையால் அளவை இயல், அழகியல் போல அற இயலும் மக்களினத்தைச் சார்ந்த உயர்நிலை விஞ்ஞானம் என்று கொள்வர் ஆய்வாளர்கள்.

இங்கே ஒரு முக்கிய வேறுபாட்டினை நன்கு தெரிந்து மனத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும்.

தனிமனிதனின் செயல் அல்லது நடத்தை என்பதைப் பொதுவாக எடுத்துக்கொண்டால், சமூக இயல் அறிஞரும் மானிட இயல் அறிஞரும்கூட அதைப்பற்றி ஆராயவே செய்கின்றனர். சமூக இயலும் மானிட இயலும் செய்யும் ஆய்வுகளுக்கும் அற இயல் மேற்கொள்ளும் ஆய்வுக்கும் அடிப்படை வேறுபாடு என்ன என்பதை அறிதல் வேண்டும். மனிதனுடைய நடத்தையைப் பற்றி ஆய்வு செய்யும் அற இயல், அதே நடத்தையைப் பற்றி ஆய்வு செய்யும் சமூக இயல், மானிட இயல் ஆய்வுகளிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை வரையறை செய்து தெரிந்துகொள்ளுதல் வேண்டும். சமூக இயலும் (Sociology) மானிட இயலும் (Anthropology) நேர்நிலை அல்லது விளக்க நிலை விஞ்ஞானத்தைச் சார்ந்தவை. அற இயல் உயர்நிலை விஞ்ஞானம் ஆகும். ஓர் எடுத்துக்காட்டின் மூலம் இதனை அறியலாம்.

திருமணம் செய்து கொள்ளுதல் தனிமனிதனின் நடத்தைகளில் ஒன்று. திருமணம் பற்றி சமூக இயலும், மானிட இயலும், அற இயலும் ஆய்வு செய்து தத்தம் துறையைச் சார்ந்த விளக்கங்களைக் கொடுக்கின்றன. மூன்றினுடைய ஆய்வுப் பணியின் போக்குகளைப் பார்த்தால் அற இயல் தன்னுடைய ஆய்வின் மூலம் எவ்வாறு வேறுபடுகிறது என்பதை அறியலாம்.

சமூக இயல் அறிஞர் திருமணம் என்பதன் பொருளை விளக்குவார். சடங்குகளின் அமைப்பு, முதலில் திருமணச் சடங்கு அமைந்த முறை, காலந்தோறும் அது வளர்ந்து வந்த முறை ஆகியவைகளை விவரிப்பார். முதலில் ஓர் ஆடவன் ஒரு பெண்ணை மட்டுமே திருமணம் செய்து கொள்ளும் முறை இருந்தது. பின்னர், ஒரு பெண்ணை மட்டுமே திருமணம் செய்து கொள்ளும் முறையுடன் ஒருவன் இரண்டு பெண்களையும் திருமணம் செய்து கொள்ளலாம் என்ற முறை மக்கள் மத்தியில் நல்லது என்று கருதப் பெற்றது. அதே சமயத்தில் ஒரு பெண்ணை மட்டுமே திருமணம் செய்து கொள்ளும் முறை தவறு என்று சிலர் கண்டித்துப் பேசத் தொடங்கினர். இறுதியில் இருதாரமணம் மக்களால் ஏற்றுக் கொள்ளப் பெற்றது எனத் திருமண வரலாற்று முறையை எழுதுவார். இங்கே ஒருதார மணம் தவறு என்று அவர் எழுதினாலும் அது அவர் முடிவோ, அல்லது அவர் மதிப்பீடோ அன்று. ஒருதார மணம் தவறு என்பது ஒரு காலத்தில் ஒரு பகுதி மக்களின் கருத்தாக இருந்தது என்பது வரலாற்று உண்மை. வரலாற்றில் அமைந்த உண்மைகளையும் நிகழ்ச்சிகளையும் அப்படியே எழுதிவைக்க வேண்டியது கடமையாதலின், வரலாற்று உண்மையை அப்படியே எடுத்து எழுதினார் என்பதாகவே கொள்ள வேண்டும். அவ்வாறேதான் மானிட இயல் அறிஞர் செயலும் விளக்கமும் இருக்கும்.

உள்ளதை உள்ளவாறு எடுத்து எழுதுவது வரலாற்று முறை. உள்ளதை மதிப்பீடு செய்து எழுதுவது உயர்நிலை விஞ்ஞான முறை.

ஒருதார மணம் நன்று என்றும் இருதார மணம் இன்ன இன்ன காரணங்களால் தவறு என்றும் எடுத்துக்காட்டி, இருதார மண முறையைவிட ஒருதார மண முறையே நல்லது என விளக்கமும் அமைத்து எழுதுவது மதிப்பீட்டு முறை. சமூக இயல் அறிஞரும் மானிட இயல் அறிஞரும் வரலாற்று முறையை மட்டுமே மேற்கொண்டு எழுதுவர். விளக்க நிலை விஞ்ஞான முறையை மேற்

கொண்டே அவர்கள் எழுதுவார்கள். மதிப்பீட்டு முறையில் எழுதுவது இது சரி, இது தவறு என எடுத்துக்காட்டி, இது நல்லது என மதிப்பீடு செய்து எழுதுவது அற இயல் அறிஞர் மேற் கொள்ளும் முறை. அவ்வாறு விளக்குவதே உயர்நிலை விஞ்ஞானம்.

எனவே, அற இயல் என்ற உயர்நிலை விஞ்ஞானமானது மதிப்பீட்டு முறையிலான மனிதனின் நடத்தை பற்றிய ஆய்வியல் எனக்கொள்ள வேண்டும். சமூக இயலும் மானிட இயலும் மனித நடத்தையையே எடுத்துக் கூறினாலும், அவை மனித நடத்தை இன்னின்ன காலங்களில் இப்படி இப்படி இருந்தது, இன்ன இன்ன காரணங்களால் இன்ன இன்ன மாற்றத்தைப் பெற்றது என்ற அளவில் வரலாற்று முறையை ஒட்டி விளக்கப் பெறும் உண்மை களாகவே (facts) இருக்கும்.

அற இயல் ஆராயும் செய்திகள்

அற இயலைப் பொதுவாக நாம் விளங்கிக்கொள்ளும் வகை யில் பல்வேறு வகையான நடைமுறைகள், வழக்கில் நிலவும் விளக்கங்கள் ஆகியவைகளை வைத்து விளக்கம் தருகின்ற முயற்சி யிலேயே பலரும் ஈடுபட்டு வருகிறார்கள். அவைகளையெல்லாம் முறைப்படுத்தி அமைத்துப் பார்த்தால் அற இயலை ஆறு பிரிவு களில் இணைத்துப் பார்த்து விளங்கிக் கொள்ளலாம். ஆறு பிரிவு களாக நாம் பெறுகின்ற செய்திகள் எல்லாமே அற இயல் ஆய்வுச் செய்திகள் எனக் கொள்ளலாம்.

(1) உயர்நிலை விஞ்ஞானத்தில் விளங்கும் விளக்கநிலை விஞ் ஞானம்: அற இயல் உயர்நிலை விஞ்ஞானம் என்பதும் அது விளக்க நிலை விஞ்ஞானத்தினின்றும் வேறுபட்டது என்பதும் முன்னே விளக்கப் பெற்றன. அற இயல் உயர்நிலை விஞ்ஞானமாயினும் அது தன்னுடைய எல்லைக்கு உட்பட்ட விளக்க நிலை விஞ்ஞானப் பகுதியையும் அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றது.

அறம் என்பது பற்றியும், அறவழி என்பது பற்றியும் சாதாரண மக்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை அற இயல் புறக்கணித்து விட முடியாது. அறக் கொள்கைகள்பற்றி ஒவ்வொரு காலத்திலும் மக்கள் என்னென்ன விளக்கங்கள் அமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதை அற இயல் தன் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளாமல் இருக்கமுடியாது.

அறம், ஒழுக்கம் ஆகிய சொற்கள் மக்களிடத்தே இன்றளவும் வழங்கப் பெறுகின்றன. அற இயல் என்பதை அறம் என்று வழங்கும் வழக்கம் இருக்கிறது. நன்மைச் செயல்களும் அறம் என்ற சொல்லால் குறிக்கப் பெறுகின்றன. 'அறம் பாடிற்றே' என்ற வழக்கில் சில ஒழுக்க விதிகளுங்கூட அறம் என்ற சொல்லால் சுட்டப் பெறுகின்றன என்பதையும் காணலாம்.

'Moral' என்ற சொல்வழக்கு உண்டு. இது இலத்தீன் மொழிச் சொல்லாகிய (Mores) 'மோர்ஸ்' என்பதன் திரிபுச் சொல் என்று கருதுகிறார்கள். இச்சொல் பொதுவாக வழக்கத்தில் அல்லது மரபு வழியில் மக்களிடத்தே காணப்பெறும் நடத்தைகள் என்ற பொருளைக் குறிப்பதாக அமைகிறது. இவ்விளக்கத்தை அடிப் படையாகக் கொண்டால் மரபு வழியில்,வரலாற்று முறையில் மக்கள் அவ்வப்போது எந்த எந்த விதிகளை அறமாகக் கடைப் பிடித்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதையும் அறிய வேண்டியிருக்கிறது. அவர்கள் மேற்கொண்டு வாழ்ந்துவந்த விதி களை மரபு வழி அறம் (Custom) என்று ஏற்றுக் கொண்டு ஆராய்வது அற இயலின் பணியாகிறது. இவ்வாறு, வரலாற்று முறையில் வளர்ந்துவந்த விதிகள் என்ற வகையில், அற இயல் தன்னுடைய ஆய்வை நடத்துமேயானால் அது விளக்கநிலை விஞ்ஞான அமைப்பையே கொண்டு விளங்குகிறது என்றுதான் கொள்ளவேண்டும்.

(2) உயர்நிலை விஞ்ஞான ஆய்வியல் : அற இயலானது மேலே குறிப்பிடப் பெற்றவாறு விளக்க நிலை விஞ்ஞான அடிப்படையை வெறுத்து ஒதுக்காமல் ஏற்று ஆராய்ந்தாலும், அது நம்மை, மேல் நெறி விதிகளைக் கண்டறியும் முயற்சியில் எவ்வாறேனும் முயன்று ஈடுபடுமாறு செய்துவிடுகிறது. ஆகையால், அற இயலின் உயிர் நாடியானது உயர்நிலை விஞ்ஞான ஆய்வியலாகத்தான் அமைந்துவிடுகிறது எனக் கொள்ளலாம்.

மரபு வழியில் வரலாற்று நோக்கின் அடிப்படையில், சாதாரண மக்கள் அவ்வக் காலங்களில் மேற்கொண்ட அற விதிகளை ஆய்வு செய்வதற்காக அற இயல் எடுத்துக் கொள்ளுகிறது. ஆனால், அவைகளையே வேறொரு நோக்கில் அற இயல் ஆராய முற்படுகிறது.

நல்லது, தீயது; சரியானது, தவறானது என்ற சொற்களை விதிகளோடு இணைத்துச் சிந்திக்கிறோம். மரபு வழியில் வந்த வழக்கங்களுடனும் நல்லது, தீயது; சரி, தவறு என்பவைகளை

இணைத்துச் சிந்தித்து, சிலவற்றை மட்டுமே மேல்வரம்பு விதிகள், குறிக்கோள் விதிகள் எனக் கருதுகிறோம்; ஏற்கிறோம்; இவ்வாறு உயர் குறிக்கோள் நெறிமுறைகளைக் கண்டு நிறுவுவதும், அவை களைப் போற்றி மேற்கொள்வதும் ஆகியவை அற இயலை ஓர் உயர்நிலை விஞ்ஞானமாகக் கொண்டு நாம் சிந்திப்பதால் வரும் செயல்முறைகள். இவ்வடிப்படையில்தான் 'எதிக்ஸ்' (Ethics) என்ற சொல் அற இயலுக்கு வழங்கப் பெறுகிறது. கிரேக்க மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மறைந்து நின்று வழங்கப்பெறும் சொல்லே எதிக்ஸ் (Ethics) என்பது. அதன் நேர்ப்பொருள் 'உயர் நிலை வரம்பினை அமைக்கும் விதிகள் அல்லது நெறிகள்' என்பதே.

எனவே அறவியல், மரபு வழியில் வந்த விளக்க நிலை அறக் கருத்துகளையே எடுத்து ஆராய முற்பட்டாலும், அது மேல் வரம்பிட்ட விஞ்ஞானமாதலின், அத்தகுதிக்குக்கேற்ப, ஏற்புடைய பொருத்தமான உயர்நிலை விஞ்ஞான இயலாக அற நெறிகளையே ஆய்ந்து எடுத்துரைக்கிறது என்று கொள்ளுதல் வேண்டும்.

(3) அற இயல் ஓர் அறவழித் தத்துவம் : அற இயல் மேல் வரம்பிட்ட அற நெறிகளை எடுத்துரைக்கிறது என்று கொண்டோம். 'மேல் வரம்பிட்ட அற நெறிகள்' என்றால் அத்தொடரை ஒரு பொருள் விளங்காத குறியீட்டுத் தொடராக ஆக்கிவிடக் கூடாது. மனித வாழ்வில் ஒரு குறிக் கோளை அமைத்துக் கொண்டு, அக்குறிக்கோள்தான் மனிதவாழ் வின் முடிந்த உயர்நிலை என அமைத்துக் கொண்டு அதை அடையக்கூடிய வகையால் அன்றாட செயல் முறைகளை அமைத்துக் கொள்கிறோம் மனிதவாழ்வின்குறிக்கோள் என்பதை ஒருவன் நிறைவான அறிவு எனக் கொள்ளலாம் அல்லது நிறை வான இன்பம் எனக் கொள்ளலாம். பெயர் எதுவாயினும், விளக் கம் எதுவாயினும் மனித வாழ்வு என்பது ஓர் உயர் குறிக்கோளை உட்கொண்டது என்பதை ஒத்துக் கொள்கிறோம் என்பதே குறிக்கோளாக நாம் எதை ஏற்கிறோமோ, அது முன்னமேயே அடைந்துவிட்ட ஒன்று அன்று; அடைய இருப்பதே. குறிக்கோள் என்பது அடைய இருப்பது ஆதலின், அதனை அடைவதற்கு உரிய சில நெறிகளை நாள்தோறும் கடைப்பிடித்துப் பயிற்சி செய்து வருகிறோம்.

இனி, வாழ்வின் குறிக்கோள் 'நிறை அறிவு பெறுதல்' என்று கொண்டுவிட்டோம் என்றால், அது உண்மையான குறிக்கோள்

தான் என்பதை நாம் உறுதிப்படுத்துதல் வேண்டும். உறுதி படுத்தும் நிலை வந்தால்தான் செயற்படுத்தும் நிலை உண்டாகும். நிறை இன்பம் வாழ்வின் குறிக்கோளாக இருக்க முடியாது; நிறை அறிவுதான் குறிக்கோளாக இருக்க முடியும் என்பதை நிறுவுதல் வேண்டும்.

இங்கேதான் குறிக்கோள்களை மதிப்பீடு செய்தல் வேண்டும். குறிக்கோளின் ஏற்புடைமை, உண்மையோடு இணைந்த தன்மை ஆகியவைகளை ஆராய்தல் வேண்டும் என்ற நிலைமை உண்டாகிறது. இந்தநிலையில் உலகஅமைப்பு, உலகின் அடிப்படைத் தத்துவம், உலகத்தில் மனிதன் இணையும் இணைப்பு, உலகச் செயலும் மனிதச் செயலும் இணைந்துள்ளனவா அல்லது வேறு பட்டுள்ளனவா என்று இவ்வாறான அடிப்படைகளை வைத்து, அற இயல் பலவகையான ஆய்வுகளை நிகழ்த்துகிறது.

மனிதன் சிலவற்றைச் செய்தேயாகவேண்டும் என்ற கட்டுப் பாட்டில் இருக்கின்றானா அல்லது மனிதன் உலக அடிப்படை நியதியிலிருந்து முற்றாக விடுபட்டவனாக அமைகிறானா என்பதை ஆராய வேண்டும்.

'நன்மை என்ற சொல்லை எடுத்தால் தனக்கு மட்டுமா, பிறருக்குமா, உலகப் பொதுநிலைமைக்கா என ஆய்தல் வேண்டும். இவ்வகைகளில் குறிக்கோளை நன்றாக ஆய்ந்து சரிபார்த்தால் தான், அக்குறிக்கோள் உயர்ந்தது என்பதை நிறுவமுடியும். நிறுவினாச் தான் அதனோடு இணைந்த தனிச் செயல்களை அற விதிகளாகக் கொள்ள முடியும்.

இவ்வாறு குறிக்கோளை நிறுவி உறுதி செய்யும் பணியை ஏற்கும்போது, அற இயல் ஓர் அறவழித் தத்துவமாக (Moral Philosophy) நின்று செயல்படுகிறது.

உலகை ஒரு முழுமை அமைப்பு என அமைத்துக்கொண்டு, குறிக்கோள், அவற்றின் நெறி முறைகளை அம்முழுமையோடு இணைய அமைத்துக் கொண்டு, இவைகள் ஏற்புடையவைகளா என்று ஆராய்வதை 'அறவழித் தத்துவம்' என்று கூறுவர் அறிஞர்.

(4) அற இயல் என்பது ஒருவகைச் செயல்முறை அறிவியல்: அற இயலானது ஒருவனுக்குச் செயல்முறை அறிவைக் கொடுக்கும் விஞ்ஞானம் ஆகும். செயல்முறை அறிவு என்றால் என்ன? இதனை அறச்சிக்கல், தர்மசங்கடம், இருதலைக் கொள்ளி

எறும்பின் நிலை, இரண்டு கன்றுகளுக்கு இரங்கும் ஒரு பசுவின் நிலை என்றெல்லாம் விளக்குவார்கள். இரண்டு அறங்கள் மோதுகின்ற காலத்தில் எதை விடுவது எதைச் செயற்படுத்துவது எனத் தெரிந்து கொள்ள இயலாத நிலை என விளக்கம் கூறுவர். 'Casuistry' என்ற ஆங்கிலச் சொல்லால் குறிப்பிடுவர்.

பெண்கொலை புரிதல் அறம் அன்று. குருவின் ஆணையை மீறுவது அறமன்று. 'பெண்கொலை புரி' என்பது குருவின் ஆணை. குருவின் ஆணையை நிறைவேற்றுவதா? மீறுவதா? இதுவே அறச்சிக்கல். சாதாரண அனுபவத்தைக் கொண்டு பார்க்கும் போது, சில நிகழ்ச்சிகளில் எது நல்லது என முடிவு செய்வதற்கு, அற இயலில் வல்லவர்களுக்குங் கூட, அரிய காரியமாக அமைந்து விடுவதுண்டு. ஒரு சூழ்நிலையில் ஒன்றுதான் நல்ல செயலாக, ஏற்ற செயலாக இருக்க முடியும். இரண்டு மாறுபட்ட செயல்கள் ஒரு சூழ்நிலையில் நல்லவைகளாக இரா. இந்த அமைப்புள்ள சூழ்நிலையில் நற்செயலாக அமைவது இதுவே என விரைந்து அறிதற்குரிய அறிவையே 'செயல்முறை அறிவு' என்பர்.

எனவே, அற இயல் சூழ்நிலைக்கொத்த நற்செயலைத் தேர்வு செய்தற்குரிய தேர்வு அறிவையும், தேர்ந்ததைச் செயற்படுத்தும் முறையை விளக்கும் செயற்பாட்டு அறிவையும் ஒருவன் பெறத் துணை செய்கிறது என்று அனுபவ இயல் விளக்கம் கூறுவர். இவ்வடிப்படையில் நோக்கினால் அற இயல் ஒருவகைச் செயல்முறை அறிவியல் என அமைகிறது எனலாம்.

(5) அற இயல் என்பது பிறரை அறவாளராக ஆக்கும் செயல் முறை விளக்கமே; ஒருவரைச் செயற்படுத்துவதே அற இயலின் பொதுக்குறிக்கோள். நன்னடத்தையை மேற்கொள்ளுவதற்கும், நல்வாழ்வு வாழ்வதற்கும் பயன்படுவது மட்டுமன்றி, மற்றவர் களுக்கு வழிகாட்ட வேண்டும் என்ற நோக்கத்துடனேயே, உருவாக்கப் பெற்ற அறச் செயல் அனுபவ அறிவு ஒன்று உண்டு.

அற இயல் அல்லது ஒழுக்கத்தைப் பற்றிய நூலறிவைவிட நீண்டகால அனுபவ முதிர்ச்சியால் விளைந்த அறிவு பிறருடைய நன்மையை முன்னிட்டு அறநெறிகளாக வெளிப்படும். அவ்வாறு வெளிப்படுத்துபவரைச் சான்றோர் என்பது தமிழக மரபு. யார் யார் எழுதிய அறநூல்களைக் கற்றுத் தேர்ந்தவர்கள் சான்றோர் என்று கேட்டால் விடை கிடைக்காது. அவர்கள் சொல்ல வேண்டிய அவசியம்கூட இல்லை. அவர்கள் முன்னிலையில் மற்றவர்கள் அறவழியில் ஒழுகும் ஆற்றலைப் பெறுவார்கள்.

அறவழிப்படுத்துதல் என்பதை வழிகாட்டும் அறிவுவகை என விளக்குவர். பழமொழிகள், சீனநாட்டுக் கன்பூஸியஸ் காட்டும் அறமொழிகள் போன்றவைகளைச் சான்றாகக் காட்டுவர். அருளுபதேசம், பொன் மொழிகள் என்றெல்லாம் விளக்குவர். தமிழகம் இந்த ஓர் அடிப்படை நெறியில் நின்றுதான் அற இயலை உணர்ந்தது; உணர்த்தியது.

ஒழுக்கம் என்ற தமிழ்ச் சொல் வெளுத்தான் என்பதுபோல, தன்வினை பிறவினை என்ற இரண்டையும் உடன்கொண்ட பொருள்விளக்கம் தருவது. ஒருவன் தானே வெளுத்துப்போதலும் உண்டு. அவனை வெளுத்தான் என்ற சொல்லாற் குறிக்கலாம். துணியை வெளுத்தான் என்று சொல்லும்போது, வெள்ளையானது துணி. அவ்வாறே, 'ஒழுக்கம்' என்ற சொல் ஒழுகுதல் என்ற தன் வினையை அடிப்படையாகக் கொண்டு, ஒருவன் தான் அற வழியில் ஒழுகுவது ஒழுக்கம் என்று விளக்கம் கூறலாம். இனி, பிறரை நல்வழிப்படுத்துவது என்ற பொருளில், ஒழுக்குவது ஒழுக்கம் என்ற விளக்கத்தையும் கூறலாம். எனவே, ஒருவன் தான் தன்னிலையில் அறநெறியில் தவறாது ஒழுகுதல் ஒழுக்கம் எனவும், தானும் அறநெறியில் தவறாது ஒழுகி, பிறரையும் அற நெறியில் தவறாது ஒழுகவும் செய்வது ஒழுக்கம் எனவும் பொருள் கொள்ளலாம். இதனைத் திருவள்ளுவர்,

'பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு'

என்ற குறளில் அமைத்துக் காட்டுவாராயினர். அறம் மட்டும் அன்று; ஆன்ற ஒழுக்கும் ஆகும் என்று கூறியதன் நுட்பம் என்ன? பிறன் மனை நோக்காத செயல் தன்னளவில் ஒழுகுவதற்குரிய அறச் செயலே. ஆனால் அது அதனோடு மட்டும் நின்றுவிடுவது இல்லை. பிறரையும் அறவழியில் ஈடுபடுத்துவதற்குரிய ஆண்மைச் செயலாகவும் அமைகிறது என்று கூறியுள்ளார்.

பிசிராந்தையார் பாடிய புறநானூற்றுப் பாடலில் பிறரை அறவழியில் நிறுத்தும் சான்றோர் பலர் யான் வாழும் ஊரில் இருக்கிறார்கள் என்று கூறியதும் இக்கருத்தை வலியுறுத்தும்.

திருவள்ளுவர் இல்லறத்தின் பெருமையைச் சொல்லும்போது,

'ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து'

என்ற குறளின் மூலம், பிறரையும் அறவழியில் தவறாது நிறுத்தி, தானும் அறவழியில் தவறாது ஒழுகுவதற்கு ஏற்புடையது இல்வாழ்க்கை என்றார்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் அற இயல் என்பது தனி மனிதனோடு மட்டும் நின்றுவிடவில்லை; அது பிறரையும் அற வழியில் ஒழுகுமாறு செய்யவல்ல செயல்களையும் உடன்கொண்டு திகழ்வது என்று கொள்ளுதல் வேண்டும்.

(6) அற இயல் என்பது மேல்நிலை அறநெறியை வழக்கமாக ஆக்கும் பயிற்சி முறை : மேல்நிலை அறநெறி என்பது முன்னேயும் விளக்கப் பெற்றது. அற இயல் என்பது ஒருவகை உயர் நிலை விஞ்ஞானம் என்று கொள்ளும்போது, உயர்நிலைக் குறிக்கோள் இன்னது என வரையறை செய்து முடித்தபின், அதனோடு இயைந்த முறையில் மனிதன் தான் செய்ய வேண்டிய செயல்களை வரையறை செய்து கொள்ளுதல். உயர்நிலைக் குறிக்கோளை ஒட்டி அமைத்துக் கொள்ளப் பெற்ற தனிச் செயலே மேல்நிலை அற நெறி என்று சொல்லப் பெறும். உயர்நிலைக் குறிக்கோளை ஒருவன் தானே அமைத்துக் கொள்கிறான். ஆகையால் அதற்குரிய தனி அற நெறியையும் அவனே விரும்பித் தேர்வு செய்கிறான். தனக்குத் தேவை என ஏற்றுக் கொள்கிறான். அந்த அற நெறியானது அவனே முயன்று மேற்கொண்ட நெறியாகும். ஒருவன் தானே முயன்று மேற்கொண்ட அந்த அற நெறியானது 'வழக்கம்' ஆதல் வேண்டும். வழக்கம் என்பது தானே இயல்பாக நடப்பது போல செய்யப்பெறும் அனிச்சைச் செயல். சோறு போடப் பெற்றதும் கையால் பிசைதல் அனிச்சைச் செயல். முதலில் முயற்சியோடு மேற்கொள்ளப் பெற்ற செயல் நாளடைவில் வழக்கச் செயலாக மாறிவிடுகிறது. வழக்கமாக மாறிய பிறகு முதலில் மேற்கொண்ட முயற்சியோ, அறிவின் துணையோ தேவைப்படா. எனவே, அற இயல் என்பது அறநெறியை வழக்கமாக ஆக்குவதற்கு உரிய செயல்முறை விளக்கத்தை அமைக்கும் துறை என்று கொள்ளுகிற விளக்கமும் உண்டு.

விரும்பி ஏற்றுக்கொண்ட ஒரு செயல் இயற்கைச் செயலாக அல்லது வழக்கச் செயலாக ஆக்கும் நிலை இல்லாமல் தானாகவே ஆகும் நிலை அமையுமானால் அந்நிலையையே கலை என்பர். அற இயல் இவ்வகையில் அறநெறியாளன் ஒருவனை அறநெறிக் கலைஞனாக ஆக்கும் செயல் முறைத் திட்டம் கொண்டது என்று விளக்கம் கூறுவதும் உண்டு.

மேலே கூறப்பெற்ற ஆறு பிரிவுகளில்]அற இயல் ஆராயப் பெற்றாலும், ஆறு இயல்புகளையும் கொண்ட ஒரு செயலறிவு விளக்கமே அற இயல் என்று கொள்ள வேண்டும்.

(1) (ஆ) அற இயலின் இன்றியமையாமை

மனிதன் தன்னை விலங்கினிடமிருந்து வேறுபடுத்தி அமைத்துக் கொள்வதற்கான ஒருவகைத் தனி நிலையறிவைப் பெற்றிருக்கிறான் என்றும், அத்தகைய அறிவுப் பேற்றினாலேயே அவன் விலங்கிலிருந்து வேறுபடுகின்றான் என்றும், அவ்வறிவே ஆறாவது அறிவு என்றும், உலக பெருஞ் சிந்தனையாளர்கள் ஆய்ந்து கூறியுள்ளார்கள். ஏனைய ஐந்து அறிவுகள் விலங்குக்கும் மனிதனுக்கும் பொதுவானவைகளே. அவ்வாறு வேறுபடுத்தி நிற்கும் தனித் தன்மை வாய்ந்த ஆறாவது அறிவு எது?

நன்மை தீமைகளைப் பாகுபடுத்தி உணர்ந்து, தீமைகளை விலக்கி, நன்மைகளைச் செயற்படுத்தி வாழ்வதே மனித வாழ்வு என்றும் அத்தகைய வாழ்வுக்குக் காரணமான அறிவே ஆறாவது அறிவு எனத் திருவள்ளுவர் வாக்கால் கொள்ளலாம்.

அற இயல் அறிவு பெற்று, அறவாழ்வு வாழ முற்பட்டால் தான் ஒருவன் தன்னை விலங்கினிடமிருந்து வேறுபடுத்திக் கொண்டவனாகிறான்.

அதுமட்டுமன்றி, பிறரையும் அறவாழ்வில் நிலைநிறுத்தும் ஆற்றலை ஒருவன் அற இயல் அறிவாலும், பயிற்சியாலும் பெற முடிகின்றது. அவ்வாறு பிறரையும் அறவாழ்வில் ஈடுபடச் செய்வதனால் அவன் சான்றோன் ஆகிறான்.

எனவே, அற இயல் அறிவு ஒருவனை மூன்று நிலைகளில் உயர்த்துகின்றது.

(1) விலங்கினிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் கொள்ளவும், (2) அற நெறியில் தன்னை நிலைநிறுத்தி மனிதனாக வாழவும், (3) பிறரையும் அறவாழ்வில் நிறுத்தி, அதனால் சான்றோனாக வாழவும் ஆகிய மூன்று நிலைகளில் மனிதனை உயர்த்துகிறது.

அற இயல் இவ்வாறு அறிவு நிலையாகவும், அற இயற் செயல் விளக்க அறிவாகவும் அமைவதால், அனைவருடைய வாழ்க்கைக்கும் 'அற இயல்' இன்றியமையாத ஒன்றாக அமைகிறது.

ஆறாவது அறிவு என்பது அற இயல் தரும் செயலறம் சார்ந்த அறிவே.

செயற்பாட்டு நிலையுடைய மனிதன் சரியான செயல்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவும், தன்னை அறச் செயல்களில் நிலை நிறுத்திக் கொள்ளவும் துணை செய்வது அற இயல் அறிவே. எனவே 'அற இயல்' அறிவு இன்றியமையாதது.

(1) (இ) அற இயலின் பயன்

அற இயல் என்றால் என்ன என்ற பகுதியில் அமைக்கப் பெற்ற எல்லாமே அற இயல் அறிவின் பயன்களே. அவைகளை யெல்லாம் தொகுத்தும் வகுத்தும் அமைக்கும் முறையில் சில வற்றைக் கீழே காணலாம்.

(1) மக்களிடத்தே தவறான போக்கில் அமைந்துவிட்ட சில அறமல்லாத பழக்க வழக்கங்களை அறமற்றவை என்று நீக்கவோ அல்லது அறத்தோடு இணையும் முறையில் மாற்றி யமைக்கவோ அற இயல் அறிவினால்தான் பெறமுடியும்.

(2) சமூகத்தில் விளங்கும் குடும்பம், கல்வி நிலையம், குடிமைப் பயிற்சி நிலையம், தொழிற்கூடம், அரசவை ஆகிய அறப்பயிற்சி நிலையங்களுக்கு—அறக்கோட்டங்களுக்கு உண்மை ஒளி கிடைக்குமாறு செய்து, ஒழுங்கு முறைப்படுத்துவதற்குப் பெருந்துணை புரிவது 'அற இயல்' அறிவே.

(3) மாறிவரும் சமூக மாற்றங்கள், அணு வரலாறு அமைத்த சமூக வாழ்வியற் புரட்சி ஆகிய சமூக அமைப்புகளுக்கு ஒத்த வகையில் அறநெறிகளை வரையறைப்படுத்தவும், உலக ஒருமைப் பாட்டு இணைப்பு அறநெறிகளை வகுத்துக் காட்டவும், அவைகளைச் செயற்படுத்தி அமைக்கவும் அற இயல் அறிவு துணை செய்யும்.

(4) இன்று உலகின் பல்வேறு பகுதிகளிலும், பல்வேறு பிரிவு மக்களிடத்திலும் காணப்பெறும் அமைதியின்மை, அறஞ் சாராச் செயல்களின் மிகுதி ஆகியவைகளை ஒழுங்குபடுத்தும் அறிவு, அற இயல் அறிவு ஒன்றே. அற இயல் அறிவைத் தவிர, மற்றையவைகளை அறிவு என்று கருதிவளர்த்தமையால் அமைதி யின்மையும், போர் பற்றிய அச்சுறுத்தலும், நல வாழ்வு இன்மையும் நாட்டில் பரவிவிட்டன. மனிதன் அறிவுடையவன் என்பது அற இயல் அறிவு பெற்ற ஒன்றனாலேயே;

(5) அறஞ் சார்ந்த உள் நோக்கும் பொதுமை நோக்கும் அற இயல் அறிவாற் பெற முடியும். அது தெய்வப் பண்பாய் நின்று, அறநெறிக் குறிக்கோளை அடைவதற்குத் துணை செய்யும். எந்த ஒரு சூழ்நிலையிலும், இதற்குப் பொருந்தும் அறச் செயல் இதுவே என்று விரைந்து முடிவு செய்யவும், முடிவு செய்ததைச் செயற்படுத்தவும் உரிய அறநோக்கு என்னும் புதிய புதிய பார்வையே—காட்சியே அற இயல் அறிவின் மாட்சி.

(6) ஒருவனுடைய வாழ்வியலில் அமைந்த பல்வேறு துறைகளையும் தனித்தனியாக நிறுத்தி நெறிப்படுத்தவும், அவைகளோடு அவன் தன்னை இணைத்துக்கொள்ளவும், இறுதியாக, அனைத்து நெறிகளாலும் இணைந்த 'ஆளுமை' யினை முழுமையாகப் பெற்றுத் துய்க்கவும் ஒருவனுக்கு அமைந்த ஒரே துணை அற இயல் அறிவு.

இயல் 2

(2) (அ) அறஞ்சார் செயல்களும் அறஞ்சாரா செயல்களும் (Moral and Non-Moral Actions)

உள்ளத்தியல் (Psychology)

மனிதனுடைய செயலுக்கு நடத்தை (conduct) என்று ஒரு வழக்குப் பெயர் உண்டு. மனிதனுடைய செயல் அல்லது நடத்தை நிகழ்வதற்கு முன்னால் அவனுடைய மனத்தில் இன்ன இன்ன நிலைகள் உண்டாகின்றன என்பதை விளக்க முற்படும் அறிவியல் துறையே 'உள்ளத்தியல்'.

செயலுக்கு அல்லது நடத்தைக்கு முன்னர் நிகழும் மன நிலைகளைச் செயலுக்கு முன்னிகழ் காரணம் என்று கொள்ள லாம். மனத்தில் நிகழும் பலவகை நிலைகளைக் காரணமாக வும் உடம்பில் நிகழும் பலவகைச் செயல்களைக் காரியமாகவும் கொள்ளலாம்.

காரண காரிய அடிப்படையில் ஒரு செய்தியைத் தெரிந்து கொள்வோமானால் அதற்கு விஞ்ஞானம் என்ற ஒருவகைப் பொது விளக்கம் உண்டு. இவ்வகையில், மனிதனின் செயலுக்குக் காரணமாகிய பல்வேறு மனநிலைகளையும், மனநிலைகளை அடிப்படையாகக் கொண்டு நிகழும் பல்வேறு உடலசைவுகளை யும் காரண காரிய அடிப்படை இணைப்புடன் நமக்குத் தெரி விப்பது உள்ளத்தியல். இவ்வகையில், உள்ளத்தியல் மனித நடத் தையை அறிவதற்குரிய விஞ்ஞானமாகத் திகழ்கிறது. மனித நடத்தை பற்றிய விளக்க அறிவை உள்ளத்தியல் நமக்குத் தருகிறது. காலப்போக்கில் மனிதனின் நடத்தையைக் காரண காரிய அடிப்படையில் விளக்க முற்படுவதுதான் உள்ளத்தியலின் கடமை என்ற வளர்ச்சியும் மேற்கொள்ளப் பெற்றது.

அற இயல் (Ethics)

உள்ளத்தியல் வரையறுத்துக் கூறும் செய்திக்கு அப்பாற்பட்ட நிலையில் மனிதனுடைய நடத்தை பற்றிய செய்திகளை வரை யறை செய்து கூறுவது அற இயல்.

மனிதனுடைய ஒரு குறிப்பிட்ட செயலை அல்லது நடத்தையை நேர்மையானது என்றோ, நேர்மையற்றது என்றோ எடுத்துக்காட்டும் பணி அற இயலையே சாரும். மனிதனுடைய செயலை அல்லது நடத்தையை, சரியானது அல்லது தவறானது என்று வரையறை செய்வதும், சரி தவறு என்ற அடிப்படையில் ஏற்பதும் கண்டிப்பதும் அற இயலுக்கே உரிய கடமைகளாகும்.

தனிமனிதனுடைய செயலை நன்று என்று ஏற்பதோ, தவறு என்று விலக்குவதோ உள்ளத்தியலின் கடமையோ பணியோ அன்று. ஆயினும் செயலுக்கு முன்னிகழ்வாகிய — காரண நிலையாகிய மனநிலைகளை விளக்கிக் கூறும் பணி உள்ளத்தியலைச் சார்ந்ததே. உள்ளத்தியல் வரையறை செய்துகாட்டிய மன நிலைகளை அப்படியே ஏற்றுக்கொள்கிறது அற இயல்.

மனிதனுடைய செயலுக்கு உரிய காரண காரிய விளக்கங்களைத் தருவது உள்ளத்தியல் கடமையாகும். ஆனால், உண்மை, பிழை; ஏற்புடையது, ஏற்புடையதன்று என்ற தீர்ப்பினை வழங்கும் உரிமை, நேர்மையுற்றது நேர்மையற்றது என்ற மதிப்பீட்டினை வழங்கும் உரிமை, அற இயலுக்கே உண்டு.

அறவழித் தீர்ப்புச் செயல் அல்லது ஒழுக்கம்

மனிதனுடைய செயலை அல்லது நடத்தையை 'ஒழுக்கம்' என்ற சொல்லாற் குறிப்பிடும்போது, எந்த எந்த ஒரு கருத்தை நாம் மனத்தில் அமைத்துக் கொள்ளுகிறோம்? மனிதனுடைய எல்லாச் செயல்களையுமே 'ஒழுக்கம்' என்ற சொல்லாற் சொல்லலாமா? மனிதனுடைய எந்த ஒரு செயலில், அது சரி என்றோ தவறு என்றோ அறிவதற்குரிய பண்பு அல்லது இயல்பு காணப்பெறுகிறதோ, அதனையே ஒழுக்கம் என்ற சொல்லாற் சொல்லலாம். இது சரி அல்லது இது தவறு என்ற தீர்ப்பை அல்லது மனத்தின் முடிவை நாம் கொள்ளுவதற்கு உரிய காரணமாய் அமைவது தான் அறப் பண்பு அல்லது அறவுணர்வு. சரி, தவறு; நேர்மையுற்றது, நேர்மையற்றது;நல்லது, தீயது என்ற தீர்ப்பினை நாம்கொள்ளுவதற்குரிய அறப் பண்பினை உள்ளிட்ட எல்லாச் செயல்களையும் ஒழுக்கம் என்றோ அறஞ் சார்ந்த செயல்கள் என்றோ நாம் கொள்ளலாம். சரி, தவறு என்ற தீர்ப்பினை நாம் கொள்ளுவதற்குரிய அறப் பண்பினைத் தாங்கி நில்லாத எந்த ஒரு செயலும் அறஞ் சாராச் செயலாகவே கருதப்பெறும். எனவே, மனிதனின் எல்லாச் செயல்களுமே அறவழித் தீர்ப்பினை உட்கொண்ட செயல்கள் என்று கருதிவிடுதல் கூடாது.

அறிவு என்ற பண்பும் ஆராய்ச்சி என்ற திறனும் செயற்படுகின்ற நிலையில் அறிவுடையவனாய் நின்ற மனிதன் அறிவுடைமையோடு செயல்படுகின்ற காலத்தில், அறிவுக்குப் பொருத்தமாக நிறுத்தி, அவனால் விரும்பி ஏற்றுச் செய்யப் பெறுகின்ற செயல்கள்; அவ்வாறே விரும்பி ஏற்றுச் செய்ய முற்பட்டு, பின் பலமுறை செய்த இடைவிடாப் பயிற்சியால் பழக்கமாகிவிட்ட செயல்கள் ஆகியவைகளே அறவழித் தீர்ப்புச் செயல்களாம்.

அறஞ் சாராச் செயல்

இயற்கையிடத்தே காணப்பெறும் சூறாவளி, நில நடுக்கம் வெள்ளம், மழையின்மையால் உண்டாகும் வறட்சி முதலியவைகளை அறவழித் தீர்ப்புச் செயல்கள் என்றோ அறவழிக்கு இணையாச் செயல்கள் என்றோ சொல்ல முடியாது. ஏனெனில் இயற்கையானது தன்னுடைய அறிவினால் ஆய்ந்து, தேர்ந்து தெளிந்து, மேற்கொள்ளப் பெற்ற செயல்கள் என அவைகளை நாம் கொள்ள முடியவில்லை.

உயிரில்லாப் பொருள்களின் செயல்கள், மிருகங்களின் செயல்கள், குழந்தைகளின் செயல்கள், மனப்பிறழ்ச்சியுற்ற மனிதர்களின் செயல்கள், கயவர்கள் முட்டாள்களின் செயல்கள் அறவழித்தீர்ப்புக்குரிய செயல்கள் என்று கருதப்பெற மாட்டா. மனிதன் தன் அறிவினால் ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளப் பெற்றதாய், விரும்பினாற் செய்யவும், விருப்ப மில்லையேல் விலக்கவும் கூடிய கட்டற்ற நிலையுடன் (சுதந்தரம்) இணைந்ததாய் இல்லாமல்; பிறருடைய வற்புறுத்தல் காரணமாகத் தற் சுதந்தரமில்லாமல், தன்னால் கட்டுப்படுத்த இயலாத நிலையில் ஒரு மனிதனிடம் காணப்பெறும் செயல்கள் அறஞ்சார்ந்த செயல்கள் ஆகா.

மனிதன் தன்னுடைய அறிவால் தானே ஆராய்ந்து, நல்லது என்றோ தேவை என்றோ விரும்பி, கட்டற்ற தன்மையோடு (சுதந்தரத்தோடு) ஏற்றுச் செய்யப்பெறும் செயல்களைத் தவிர, வேறுபட அமைந்த சூழ்நிலையில், கட்டுப்பாட்டில், தவிர்க்கப் பெற இயலாத நிலையில் அவனிடம் காணப்பெறும் எந்த ஒரு செயலும் அறஞ்சார்ந்த செயல் ஆகாது.

நம்மால் கட்டுப்படுத்தப் பெற முடியாத இரத்த ஓட்டம் போன்ற செயல்கள் ஒழுக்கம் அல்லது நடத்தை அல்லது அறம் சார்ந்த செயல் என்ற கட்டுப்பாட்டினுள் அடங்கா. அவ்வாறே

எந்த ஒரு நியதியிலும் இணைந்து வாராத நிலையில் செய்யப் பற்றிய கருத்து உட்கிடையில் இணைகிறது. வழிவகைகள் பெறும் செயல்கள் (உலக வழக்கில் சும்மா செய்யும் செயல்கள் என்று சொல்லப்பெறுவன); இயற்கை உள்ளூக்கியால் விளையும் செயல்கள்; அறிவொடுபடாத உடற்கூற்றுச் செயல்கள்; உணர்ச்சிகளின் உந்துதல்களால் தாமே வெளிப்படும் செயல்கள்; எதிர்பாராச் செயல்கள் ஆகியவை அறஞ் சார்ந்த அல்லது அற வழித் தீர்ப்புக்குரிய செயல்கள் ஆகா.

இக்கருத்தை வேறொரு வகையாக நாம் எளிமையிற் புரிந்து கொள்ளலாம். ஒரு குழந்தை தன் கையை வாயில் வைத்துச் சுவைத்துக் கொண்டிருக்கிறது. மிக்க ஒளிபொருந்திய விளக்கைப் பார்க்கும்போது கண்ணிமைகள். தாமே மூடிக்கொள்ளும் மறி வினைச் செயல் (reflex action) மேலே கூறப்பெற்ற இரண்டும் அறிவொடு இணைந்து செய்யப்பெற்ற செயல்களா? இவைகள் விரும்பிச் செய்யப்பெறும் செயல்களா? குழந்தையானது விரும்பி அந்தச் செயலைச் செய்தது என்று சொல்ல முடியாது. மிகுந்த ஒளி வந்து பட்டதும் கண்ணிமைகள் மூடுகின்றன, எனவே அச் செயல் அவன் விரும்பி ஏற்றுச் செய்த செயலாகுமா? என வினவுவர். இத்தகைய செயல்களை ஆய்வதற்குரிய கொள்கை ஒன்றை அற இயல் வகுத்துக் கொடுத்திருக்கிறது.

ஏதேனும் ஒரு செயல் அது செய்யப் பெறுகின்ற காலத்தில் அறிவொடு இணையாத நிலையில் செய்யப் பெற்றிருக்கலாம். ஆனால், அச்செயலை அவன் தன்னறிவு கொண்டு ஆராய்ந்து பார்த்துத் தவிர்க்க இயலுமா, இயலாதா என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். குழந்தை தன் கையை வாயில் வைத்துச் சுவைக்கும்போது அது அறிவொடுபடாத செயலே; ஆனால், பின்னர் அறிவினால் ஆராய்ந்து பார்த்துத் தவறு என்று தெரிந்த போது, அச்செயல் அக்குழந்தையால் தவிர்க்கக்கூடிய செயல் தானே! ஆகையால் அறிவால் ஆராய்ந்து தவறெனக் கண்ட பிறகும் தவிர்க்க இயலாத செயலாக அமையுமேயானால் அச் செயலே அறஞ்சாராச் செயல்கலாகும். இத்தகைய செயல்கள் எதிர்பாராதவை என்பதோ அல்லது தாமாகவே விரும்பி அல்லது வேண்டுமென்றே செய்தவை என்பதோ அற இயலுக்கு முக்கிய மன்று. தன் சிந்தனையினால் இச்செயலைத் தவிர்க்க முடியுமா, முடியாதா? என்பதுதான் முக்கியம். இச்செயலை அவன் சிந்தித் திருந்தால் தவிர்த்திருக்க முடியும் என்ற கருத்து எழுமானால், தவிர்க்க முடிந்ததைத் தவிர்த்த செயலே நற்செயல் ஆகும்; தவிர்க்க முடிந்ததைத் தவிர்த்திராவிட்டால் அது தவறான செயலாகவே அற இயல் தன்னுடைய தீர்ப்பினை வழங்கும்.

அறிவுச் செயற்பாடு அமைந்த மனிதன் விரும்பியேற்றுச் செயற்படுத்தும் செயல்கள், விரும்பியேற்றுச் செயற்படுத்தப் பெற்ற செயல்களாக இருந்து, பின்னர், பயிற்சி வயத்தால் பழகிப் போய்விட்ட பழக்கச் செயல்கள் ஆகியவைகள் அறஞ்சார்ந்த செயல்கள் அல்லது அறவழித் தீர்ப்புச் செயல்கள் ஆகும்.

விரும்பி ஏற்ற செயல் (Voluntary action)

அறிவாராய்ச்சி முறையைப் பயன்படுத்திச் செயலாற்றவல்ல மனிதன் ஒருவன், தான் அடையவேண்டும் என ஒரு குறிக் கோளைத் தன்னறிவால் சரியானது என ஆராய்ந்து, அதை அடையவேண்டும் என விரும்பி,அதற்கு ஏற்புடைய செயலையும் இன்னது என வரையறை செய்துகொண்டு, இச்செயலைச் செய்தேயாக வேண்டும் என்ற கட்டற்ற உணர்வுடன்(தற்சுதந்தர உணர்வுடன்) ஏற்றுச் செய்யப்பெறும் செயல்களே 'விரும்பியேற்ற செயல்கள்' எனப்பெறும். மனநிலை, உடல்நிலை, புற அமைப்பில் நிற்பதாகிய பின் விளைவை ஒட்டிய நிலை என்ற மூன்று நிலை களை உட்கொண்டனவாக 'விரும்பி ஏற்ற செயல்கள்' அமையும்.

I மனநிலை

விரும்பி ஏற்ற செயலின் மூன்று நிலைகளில் முதல் நிலை யாகிய மனநிலையானது ஆறு வகையான படிநிலை வளர்ச்சியில் செயல்படுகிறது. அவைகளை முறையே காணலாம்.

(1) தேவையுணர்ச்சி (Feeling of want): எந்த ஒரு விருப்பா யேற்புறு செயலும், இயல்பாயெழுகின்ற செயலூற்று என்னும் ஆற்றலால் செயற்படுத்தப் பெறுகிறது. தேவையுணர்ச்சி என்பது கண்ணுக் கியைந்ததாகவோ, கருத்துக்கியைந்ததாகவோ, இயல் பூக்கமாகவோ, அனுபவத்துக்குரிய முன்னேற்பாகவோ, அறிவிய லான ஒன்றாகவோ, அற இயலான அல்லது அழகியலான ஓர் உட்பதிவாகவோ அமையலாம்.

தேவையுணர்ச்சியைப் பற்றி இருவகைக் கருத்துகள் உண்டு. (1) தேவையுணர்ச்சி என்பது எப்போதுமே துன்பியலானதாகவே இருக்கிறது; அது ஓர் அகநிலைத் தூண்டுதலை (impulse) எழுப்பு கிறது. (2) தேவையுணர்ச்சி என்பது தன்னிலையில் துன்பியலான தாக, அகநிலைத் தூண்டுதலை எழுப்பக்கூடியதாக இருப்பினும் இத்தேவையானது நிறைவு செய்யப்பெறும் என்ற கருத்தை

உளங்கொண்டதால் அது ஒருவகை இன்ப உணர்வுடன் கலந்த தாகவே இருக்கும். இவ்விருவகைக் கருத்துகளையும் கீழ்க் கண்டவாறு விளக்கமுற அமைத்துக் கொள்ள வேண்டும்.

உயிருறுப்புகளுக்குச் சில தேவைகள் உண்டு. உடலுக்கு உணவு தேவை. அவ்வாறே நீர், காற்று ஆகியவைகளும் தேவையே. இவைகளைப் பொதுவாக (organic needs or wants) 'உயிருறுப்புத் தேவைகள்' என்பர். ஒருவன் தனக்கு இவை இவை தேவை என்று அறிவது வேறு, அவன் எனக்கு இப்போது உணவு தேவை, என்று அறிவது வேறு; எனக்கு இப்போது உணவுதேவை என நான் உணரும் நிலை உண்டாகிறது. நான் செய்து கொண் டிருக்கிற வேலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, உணவை எடுத்து உட்கொள்ளத் தொடங்குகிறேன். இப்போது உணவு தேவை. என்ற உணர்வைப் பொதுவாகச் 'சுவை நுகர் உணர்வு, (appetite) என்பர். ஆனால் இந்த உணர்வு மெல்ல அழுத்தம் பெறும். நான் பிற வேலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, உணவை உட்கொள்ளு மாறு என்னைத் தூண்டுகிறது. இவ்வாறு எழும் அகநிலைத் தூண்டுதல் (impulse) சுவை நுகர் உணர்வை (appetite) விட வேறுபட்டது. அகநிலைத் தூண்டுதல் ஒருவகைத் துன்ப அனு பவத்தைக் கொடுக்கும்; இன்றியமையாதது என்பதை வலி யுறுத்தும். அதனைத் துன்பியலானது என்று சொல்லுவதன் கருத்து, வேறொரு வேலையையும் கவனிக்கவிடாமல் நம்மை இழுப்பது என்ற அளவில்தான் அது அமைகிறது. அதனை, சுவை நுகர் உணர்வானது வலுவாக உந்துவதால் உண்டாகும் நாட்டம் என்று கொள்ளலாம். இது ஒருவகையில் தெளிவற்ற நிலையே. எதை உணவாகக் கொள்வது? என்பது போன்ற விளக்கம் இங்கே இல்லை. உணவை உட்கொண்டால் ஒருவகை நிறைவு என்ற உணர்வு அமையும் என்ற கருத்து உண்டாகிறது. இதையே இன்ப உணர்வு எனக் கருதுகின்றனர். எனவே, துன்பத்தில் தொடங்கி,இன்பத்தில் முடிகிறது என்று கொள்வதை விட, உணவு கொள்வது என்ற ஒன்றைத் தவிர வேறு எந்த வேலையிலும் ஈடுபடாதவாறு நம்மைத் தடுத்து, உணவு கொள்வது என்ற ஒன்றிலேயே நம்மை ஈடுபடுத்தும் ஒருவகை உந்தாற்றல் நிலை என்றே கொள்ளலாம்.

(2) **தேவை உணர்ச்சி ஆசையாக மாறுதல் :** ஒன்றை அனுப விக்க வேண்டும் என்பதை விரும்புவதற்குரிய உந்தாற்றலை உண்டாக்கும் தேவையுணர்ச்சியானது ஆசையாக மாற்றம் பெறுகிறது. மனிதனிடத்தில் விளங்கும் இயற்கை அறிவு

என்பது தன்னுண்மை அறிவு (self-consciousness) எனப்பெறும். இதுவே தேவை உணர்ச்சியை ஆசையாக (desire) மாற்றுகிறது. தேவையுணர்ச்சியைத் தன்னுண்மை அறிவானது பலவகையாலும் விளக்கம் கொள்ள வைக்கிறது. பின்னரே, தேவையுணர்ச்சி ஆசையாக மாற்றம் பெறுகிறது. ஆசையாக மாறிய நிலையில் அது குருட்டுத் தன்மை உடையதன்று. தேவையுணர்ச்சியாக இருந்தபோது தெளிவு பெறாதிருந்த பல நிலைகள் தெளிவாக விளக்கம் பெற்ற நிலைகளை அடைந்த பின்னரே, 'ஆசை' என்ற மாற்றம் அமைகிறது. தேவையுணர்ச்சியானது ஆசையாக மாற்றங் கொண்டபோது அங்கே காணப்பெறும் கூறுகள்: (1) தேவையை நிறைவு செய்யக் கூடியது எது? என்பது பற்றிய கருத்து; நிறைவு செய்யும் தன்மையுடைய பொருள்கள் பலவற்றுள்ளும் இந்த ஒரு குறிப்பிட்ட பொருளே சிறந்தது என்னும் கருத்து. (2) அப்பொருளை அடைவதற்குரிய வழியைப் பற்றிய கருத்து (3) குறிப்பிட்ட பொருளை அடைவதற்குரிய குறிப்பிட்ட வழியில் அவனைக்கொண்டு செலுத்தும் உந்தாற்றல் பற்றிய கருத்து.

தேவையுணர்ச்சியானது ஒற்றைச் செயலைச் சார்ந்த ஆசையாக இருப்பின், அதற்குரிய பொருளை விரைவாக அடையவும், நிறைவு செய்யவும் இயையும். அவ்வாறில்லாமல், தேவையுணர்ச்சி ஒரு கூட்டமைப்புச் செயலை அடிப்படையாகக் கொண்டு அமைந்து விடுமானால் அதற்கேற்ற கூட்டமைப்பு நிலையிலேயே அனைத்தும் நிகழும்.

(3) மாறி நின்றெழும் ஆசைகளின் மோதல்(Conflict of desires): பலவகைத் தேவையுணர்ச்சிகள் ஒரே சமயத்தில் பலவித நிறைவுகளை வலியுறுத்தும். பல வகையான நிறைவுகளை உள்ளிட்ட பொருள்களை ஒரே சமயத்தில் முன்னிறுத்தி, மனத்தைப் பலவேறு திசைகளில் இழுத்து, அவைகளை அடையும் முயற்சியில் தேவையுணர்ச்சிகள் தூண்டும். எவ்வாறாயினும் ஒரே சமயத்தில் எல்லாத் தேவையுணர்ச்சிகளையும் நிறைவு செய்ய இயலாத நிலை உண்டாகும். ஒரே ஒரு தேவையை முன்னிட்ட ஆசையை மட்டுமே முன்னிறுத்தி, ஏனையவைகளைப் பின்னுக்குத் தள்ள வேண்டும் என்ற நிலை உண்டாவதற்காக, மனத்தில் போட்டியுணர்வு, மாறுபாட்டுணர்வு, உள்ளூக்கிகளில் மோதல், ஆசைகளில் மோதல் முதலியன நிகழும்.

மேலே குறிப்பிடப் பெற்றவைகள் வெளிப்புறத் தாக்குதல்களினால் எழுபவை அல்ல. அவைகள் உயிர் உணர்வில் எழும்

பல வகை நிலைகள்.ஆகையால் உயிரானது ஏதேனும் ஓராசையை மட்டும் முன்னிறுத்தி, மற்றவைகளைப் பின்னுக்குத் தள்ளி விடும்.

(4) தன்னுரிமைத் தேர்வு நிலை (Delibration) தன்னுரிமைத் தேர்வு நிலை என்பது ஒருவகைச் செயலாற்றல். இதைச் செயற்படுத்துவது தன்னுண்மை அறிவுதான். மனத்தின் துணை யுடன் அறிவின் எழுச்சியோடு மனம் செயல்படுகின்ற ஒரு முறையே இது. பல ஆசைகள் மோதும்போது, உயிரானது மனத்தைத் துணையாக அமைத்துக்கொண்டு, அறிவினுடைய ஆற்றலால், தம்முன் போட்டியிடும் பலவகையான ஆசைகளையும் ஆராய முற்படுகிறது. ஆசைகளின் வன்மை மென்மைகள் ஆராயப் பெறுகின்றன. இத்தகைய தேர்வுமுறைப் பயிற்சியில் மனத்தைச் செயற்படுத்தும்போது, பல ஆசைகளில் ஒன்றை மட்டுமே தேர்ந்துகொள்ளும் ஆற்றலை உயிரானது தன்னுடைய கட்டற்ற தன்மையால் (தற்சுதந்தரத்தால்) பெற்று விடுகிறது. இதுவே தன்னுரிமைத் தேர்வு நிலை.

(5) துணிந்ததை அழுந்தப் பற்றும் நிலை (Intensification): தன்னுரிமைத் தேர்வு நிலையின் மூலம் உயிரானது ஓர் ஆசைக் குரிய உள்நோக்கம் ஒன்றைத் தெரிந்தெடுத்து அதனோடு தன்னை இணைத்துக் கொள்கிறது. இந்நிலையில் உள் நோக்கம் வேறு; ஆசை வேறு; உயிர் வேறு எனப் பிரிந்து நிற்கும் நிலை இல்லை. இம்மூன்றும் இணைந்துவிடுகின்றன. இதுதான் என முடிவு செய்யப் பெற்ற ஆசையை உள்ளிட்ட உள் நோக்கம், அதனை ஒட்டிய செயல் என்பவை தவிர, வேறு எதையுமே புலப் படுத்தாமல் மறைத்துவிடுகின்ற மன ஆற்றல். இதனையே முடித்து நிறுத்தும் மனநிலை (decision)என்பர். இங்கே, துணிந்தது இதுதான் என நிறுத்திய ஆசையைப்பற்றிய செயல்கள் மட்டுமே முன்னிற்க, மனம் அச்செயல்களுக்குத் தன்னை அடிமையாக்கி விடும். உயிரானது தன்னை அந்த ஆசைக்குரிய செயல் திட்டம் வகுக்கும் உள் நோக்கம் (motive) என்பதனுள் தன்னை ஒன்ற வைத்து விடும்.

தன்னுரிமைத் தேர்வு நிலையை வேறுவகையாக விளக்குபவர் களும் உளர். உயிரானது தன்னுரிமைத் தேர்வு நிலையின் மூலம் பல வகையான ஆசைகளில் ஒரு குறிப்பிட்ட ஆசையைத் தேர்வு செய்கிறது என்றும் குறிப்பிட்ட ஆசையைத் தேர்வு செய்தபின் அந்த ஆசையைச்செயற்படுத்து தற்குரியஉள்நோக்கங்கள்(motives)

பலவாக அமைந்திருக்கும். அவற்றுள் வலிவிழந்த உள்நோக்கங்களை ஒதுக்கிவிட்டு, வலிவான ஓர் உள் நோக்கத்தைத் தேர்ந்தெடுப்பதே அழுந்தப் பற்றும் நிலை என்றும் கூறுவர். ஓர் ஆசைக்கு ஓர் உள் நோக்கம்தான் இருக்கும். எனவே, பலவகை உள்நோக்கங்களில் வலிவுடைய ஒரே ஒரு உள் நோக்கத்தைத் தேர்ந்தெடுத்தல் என்பது பொருந்தாது. 'Motive' என்பது எந்த ஒன்று நம்மை ஒரு குறிப்பிட்ட வழியில் செயல்படுமாறு அசைக்கிறதோ அது என்ற பொருளைத் தரும். (The word motive literally means what moves us to act in a particular way). எனவே, ஆசையை நோக்கி, நம்மைச் செயற்படுத்தும் ஒரு கூறு; அதுதான் உள் நோக்கம். ஆசை இதுதான் என்பது முடிவு செய்யப் பெற்றுவிட்டால், அதற்குரிய உள் நோக்கம் நம்மைச் செயற்படுத்தத் தொடங்கிவிடும்.

(9) அழுந்தப் பற்றிய நிலையை முடிந்த முடிநிலையாக்கல்: நிறைவு செய்யப் பெற வேண்டிய ஆசை இது எனத் தேர்வு செய்த பின் அந்த ஆசை சில சமயங்களில் விரைவாகச் செயற்பாட்டு நிலைக்கு வந்து விடும். சிற்சில சமயங்களில் தடைகள் நேரலாம். எனவே, செயற்பாட்டு நிலை பெறாமலேயே அந்த ஆசை இருந்து கொண்டிருக்கும். தடைகளின் வலிமையால் அந்த ஆசை வலி விழந்து போய்விடாதவாறு, தேர்ந்த முடிவை, முடிந்த முடிவாக ஆக்கும். (Decision becomes determination)

II உடல் நிலை (Bodily Stage)

ஆறு வகைப் படிநிலைகளில் மனம் செயல்பட்ட நிலையில், மனத்தின் விருப்பாற்றல் உடல் உறுப்புகளிற் பதிந்து அவைகளைச் செயற்படுத்தும். கருத்தளவில் நின்ற உள் நோக்கம் (motive) செயல் வடிவம் பெறுவதைத்தான் உடலின் செயற்பாட்டுநிலை எனக்கொள்வர்.

III பின் விளைவுகளை உள்ளிட்ட வெளிப்புற நிலை

உடல் செயல்படுவதால், அச்செயல் வெளிப்புற உலகில் பலவகையான மாற்றங்களை உண்டாக்குகிறது. பின் விளைவுகள் கீழ்க் கண்டவாறு அமைகின்றன. தேர்ந்தெடுத்த ஆசை, அதனுடைய உள் நோக்கம் ஆகியவைகளின் வன்மை மென்மைகளை பவத்தின் மூலம் உண்மை தன்மையோடு இணைந்து அனு உணர முடிகிறது. மேற்கொண்ட வழிகளைப்பற்றிய விளக்கங்கள் ஆசைப்படுதற்குரியது இது, ஆசைப்படுதற்குரியதல்லாதது இது,

இரண்டிற்கும் இணைந்தது இது என்ற அனுபவநிலை, சில எதிர் பாராத பின்விளைவுகள் முதலியன.

மேலே குறிப்பிடப் பெற்றவாறு, தேவை, தேவை ஆசையாக மாறுதல், ஆசைகளுள் ஒன்றைத் தேர்வு செய்தல், தேர்ந்த ஆசைக்குரிய உள் நோக்கம், உள் நோக்கம் செயற்படும் முறை, செயற்படுதல், பின்விளைவுகள் என்ற இவ்வளவு கூறு களையும் இணைத்து ஒரு மனிதன் செயலாற்றும்போது, அவன் செயல் 'விரும்பி'ஏற்ற செயல்(Voluntary action) என்ற பெயரைப் பெறுகிறது.

இவ்வாறு விரும்பினால் ஏற்று மேற்கொண்ட செயல்தான் அறஞ் சார்ந்த செயல் அல்லது அற இயல் தீர்ப்பினுக்கு உட்பட்ட ஆய்வுக்குரிய செயல் என்று கருதப்பெறும்.(moral action) ஒழுக்கம் எனவும் சொல்லப்பெறும். இவையல்லாத செயல்கள் அற இயல் ஆய்வுக்கு உட்படா செயல்கள் ஆகும்.

(2) (ஆ) உள்நோக்கும் உட்கிடையும்

(Motive and Intention)

ஒரு காரியம் நடைபெறுகிறவதற்குப் பல காரணங்கள் இயைந்து நிற்கும். பல காரணங்கள் இயைந்து நின்றாலும் ஒத்துழைப்பதில் வேறுபாடு அமையும். எடுத்துக்காட்டாக, ஒரு குயவன் குடத்தை வனைகிறான் என்றால், அச்செயலுள் பல காரணங்கள் இயைந்து நிற்கும். குயவன் உள்ளத்தில் இருக்கும் வனைதல் தொழில், குடத்தின் தேவை. மண் முதலிய மூலப் பொருள், துணைக் கருவிகள் அமைந்திருத்தல் ஆகிய அனைத் துமே குடமாகிய காரியம் தோன்றுவதற்கென அமைந்த காரணங்களே. அவைகளுள் மண்ணும் வனைதல் தொழில் திறமையும் காரணங்களேயாயினும் ஒரே தன்மையான காரணங் கள் என்று சொல்ல முடியாது. அவ்வாறே ஒரு செயல் தொடங்கி முடிவதற்குப் பல காரணங்கள் இயைகின்றன. அவைகளுள் உள் நோக்கும் உட்கிடையும் இரண்டு முதன்மைக் காரணங்கள். அவைகள் எத்தகைய இயல்புடையன, எவ்வாறு செயல்படு கின்றன என்பனத் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

உள்நோக்கு (Motive)

எந்த ஓர் ஆற்றல் அல்லது எந்த ஒன்று நம்மை நம்முடைய செயலை நோக்கிய ஒரு குறிப்பிட்ட வழியில் அசைய வைக் கிறதோ அதுதான் உள்நோக்கு என்ற பெயர் பெறுகிறது. ஒரு

செயலைத் தோற்றுவிக்கவும் முடித்து வைக்கவும் உரிய காரண மாக உள்நோக்கு அமைந்துள்ளது. இனி, தேவையுணர்ச்சியே ஒரு செயலைத் தோற்றுவிப்பது என்றும் தேவை உணர்ச்சி என்பது ஒருவகைத் துன்ப உணர்ச்சியே என்றும் துன்ப உணர்ச்சி யாயினும் அது இன்ப உணர்ச்சியையும் உள்ளீடாகக் கொண்டது என்றும் ஆய்வுரைகள் வெளிப்பட்டன. இவைகளை அடிப்படை யாகக் கொண்டு மேலைநாட்டு இன்பியற் கொள்கையினர் இன்ப துன்ப உணர்ச்சிகளே செயலின் உள்நோக்கங்கள் என வரையறை செய்தனர்.

இன்ப துன்ப உணர்ச்சிகளே செயலின் உள்நோக்கங்கள் என்று கொண்டால் துன்ப உணர்ச்சியே செயலைத் துவக்கி வைப்பதாகவும் இன்ப உணர்ச்சியே செயலை முடித்து வைப்ப தாகவும் அமையும். ஆனால், அதற்கு மாறாக, துன்ப உணர்ச்சியையே முடிவு நிலை உணர்ச்சியாகக் கொண்டு, அதனைச் சென்று அடைந்து முடிந்து விடுவனவே நோக்க மாகக் கொண்டு எழுகின்ற செயல்களையும் நாம் காண முடிகிறது. தியாகம், நாட்டு நலனுக்காகத் தன் உயிரைக் கொடுத் தல் போன்றவை இவ்வகையினைச் சாரும். எனவே, இன்ப, துன்ப உணர்ச்சிகளே செயலை இயக்குகின்றன என்று கொள்ளு தல் இயலாது. ஒரு செயலைத் துவங்குவது ஒன்றும் முடிப்பது ஒன்றும் என வேறு வேறாக அமைவது பொருந்துவதாக இல்லை. மேலும், உணர்ச்சி என்ற ஒன்றன் அடிப்படையில் மட்டுமே செயற்படுவது விலங்கினத்துக்கும் அறிவுத் தொழிற்பாடு வளரப் பெறாத குழந்தைகளுக்கும் பொருந்துவதாகலாம். மனிதனை அசையவைப்பது அறிவொடு தொடர்புற்ற ஒன்றாகவே அமைய வேண்டும்.

மனிதன் அறிவாற் செயற்படுபவன்; வாழ்பவன்;வாழ வைப் பவன். அறிவற்ற உணர்ச்சிகளும் ஆற்றல் சார்ந்த மன எழுச்சி களும் அவனுடைய செயலுக்குக் காரணங்களாக அமையமாட்டா. ஆனால், அறிவுள்ள மனிதன்தான் இவைகள் எல்லாவற்றையும் செயற்படுத்துகிறான் என்பதும் உண்மை. வாழ்வின் குறிக்கோள் என்ற முடிவு நிலையை அடிப்படையாகக் கொண்ட ஒன்றுதான் அவனைச் செயற்படுத்த முடியும். எனவே, மனிதன் சில செயல் களை விருப்பச் செயல்களாக ஏற்பதற்குக் காரணம் குறிக் கோளைப் பற்றிய அவனுடைய நோக்கமே. குறிக்கோளை அடிப் படையாகக் கொண்டு, குறிக்கோளோடு பொருந்துவதான, குறிக்கோளை அடைய வைப்பதான செயல்களையே விருப்பச்

செயல்களாக ஏற்கிறான். குறிக்கோள் பற்றிய கருத்தே அவனை இயங்க வைக்கிறது. குறிக்கோளை உட்கொண்ட அவன் நோக்கமே செயலுக்குரிய — விருப்பாயேற்கும் செயலுக்குரிய முதற் காரணம் ஆக அமைகிறது என்று கொள்வதே பொருந்துவதாகும்.

இக்கருத்தை மேலும் ஒருபடி சென்று விளங்கிக் கொள்ளுதல் நன்மை பயப்பதே.

ஒரு மனிதன் தன்னுடைய வாழ்வியலில் ஏதேனும் ஒன்றைக் குறிக்கோளாக முடிவு நிலையாக அமைத்துக் கொள்கிறான் என்றால் அது வெற்று அறிவாராய்ச்சியின் முடிவே என்று கொண்டு விடலாகாது. குறிக்கோள் என்பது உயிரினுடைய தன்னுண்மை அறிவால் அமைத்துக்கொள்ளப் பெறுவது என்றாலும், அந்த உயிர் எந்த ஒரு வகையான ஆசையுலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறதோ, அந்த ஆசை உலகினோடு இணைந்து விளங்கும் ஓர் உள்ளார்ந்த உண்மையைத்தான் குறிக்கோளாகக் கொள்ளும். எனவே, அறிவாலும் ஆசையோடு இணைந்த அனுபவ உணர்ச்சியாலும் உணர்ந்து அறிந்து, அமைத்துக் கொண்ட கருத்துத்தான் குறிக்கோள் என்ற பெயரைப் பெறுகிறது. குறிக்கோளை உள்ளிட்ட அறிவும் ஆசையுணர்ச்சியுமே இணைந்த நிலையில் ஒருவனைச் செயல்பட வைக்கிறது. எனவே, உள்நோக்கம் (motive) என்பது குறிக்கோளை உள்ளிட்ட அறிவும் ஆசையுணர்ச்சியும் இணைந்த ஒன்றே.

உட்கிடை (Intention)

உள் நோக்கத்தை (motive) விட உட்கிடையானது சற்று விரிந்த பொருளுடையது. உள்நோக்கம் என்பது குறிக்கோளை உள்ளிட்ட அறிவும் அனுபவத்தோடு இணைந்த ஆசையுணர்ச்சியும் இணைந்த ஒன்று. ஆனால், உட்கிடை என்பது உள்நோக்கத்தோடு வேறுபல கருத்துகளையும் இணைந்த ஒன்றாக அமைகிறது. குறிக்கோளை அடையத்தக்க வழி வகைகளைப் இன்பம் அளிப்பனவா துன்பம் அளிப்பனவா என்ற ஆய்வுக் கருத்தையும் உட்கிடை இணைத்துக் கொள்கிறது. குறிக்கோளை அடைவதற்குரிய வழிவகைகளைத் தேர்வு செய்யும்போது மேற்கொள்ளும் வழிவகைகளால் என்னென்ன பின் விளைவுகள் அமையும் என்பதையும் உளங்கொண்ட கருத்தினை உட்கிடையானது தன்னுள் இணைத்துக் கொள்கிறது. எனவே, உள் நோக்கத்துக்கு அப்பால் மூன்று கருத்துகளை இணைத்துக்

கொண்டதாக உட்கிடை அமைகிறது. அவை: (1) குறிக்கோளை அடைவதற்குரிய இயலுவதான வழிவகை பற்றிய கருத்து; (2) வழிவகைகள் இன்பியல்பினவா,மாறானவையா என்றகருத்து; (3) வழிவகைளை மேற்கொள்வதால் விளையும் பின்விளைவு களைப் பற்றிய கருத்து. மேலே குறிப்பிட்ட அனைத்துக் கூறு களையும் இணைத்த ஒன்றே உட்கிடை.

ஓர் எடுத்துக்காட்டு. குழந்தையின் நன்மையைக் கருதிக் குழந்தையை அடிக்கிறார் குழந்தையின் தந்தை. குழந்தையின் நன்மை என்பது குறிக்கோள்; அதுவே உள்நோக்கம். ஆனால் அவர் மேற்கொண்ட வழிமுறை தண்டனை கொடுத்தல். குழந்தைக்குத் தண்டனை கொடுத்தல் என்பது குறிக்கோளை உள்ளிட்ட உள்நோக்கு என்பதாகாது. உள்நோக்கு (motive) என்பதனோடு இணைந்த உட்கிடைதான் தண்டனை கொடுத்தல் என்ற வழி, வழியினை மேற்கொள்வதால் வரும் பின்விளைவு ஆகியவைகளை உடன்கொண்டு விளங்குவதாகத் தோன்று கிறது.

எனவே, உள்நோக்கத்தினை உடன் கொண்டதேயாயினும், அதைவிட விரிந்த பரப்புடையதாய் வழி, வழியின் இயல்பு, வழியால் விளையும் பின்விளைவு ஆகிய மூன்றையும் உடன் கொண்டு விளங்குவதாக அமைந்ததே உட்கிடை (Intention).

(2) (இ) பழக்கம், நடத்தை, நடத்தையின் அகநிலை அறப்பண்பு

(Habit, Conduct and Character)

பழக்கம் (Habit)

அறஞ் சார்ந்த செயல்கள் என்ற தலைப்பில் ஒரு மனிதனு டைய செயல் அல்லது நடத்தை எவ்வாறு அறஞ் சார்ந்த செயலாகக் கருதப் பெறுகிறது என்பது விளக்கப் பெற்றுள்ளது. அறிவாற்றலோடு தன்னுரிமையுடன் இயங்கவும் செயல்படவும் ஆற்றல் வாய்ந்த மனிதன் வாழ்வியல் குறிக்கோளை உணர்ந்து அக்குறிக்கோளை அடைவதற்கு ஏற்றவகையில் அமைந்த செயல்களை விருப்புடன் ஏற்றுச் செயற்படுத்துகிறான். அவன் விரும்பி ஏற்று நடைமுறைப்படுத்த முயன்ற செயல்களே அறஞ் சார்ந்த செயல்கள் எனப்பெற்றன. நல்லது இது என்றும் செய்தேயாக வேண்டும் என்றும் விரும்பியேற்ற செயல்களை அவன் பலமுறையும் திருப்பித் திருப்பிச் செய்ய வேண்டியவனா கிறான்.

பலமுறையும் திருப்பித் திருப்பிச் செய்யப்பெற்ற, விரும்பி யேற்ற செயல்களே பழக்கச் செயல்களாக மாற்றம் பெறுகின் றன. விரும்பியேற்ற செயல்களை அவன் செயற்படுத்த முற்படும் போது, செயலாற்றலின் முயற்சி அவனுக்குத் தேவையாகிறது. செயற்படுத்தும்போது அறிவின் துணைக்கொண்டு மிகவும் எச் சரிக்கையோடு செயல்பட வேண்டும். எனவே, தனிமனிதன் தான் நல்லவை என விரும்பியேற்ற செயற்பாடுகளைச் செயற் படுத்த முற்படும்போது, அவனுடைய அறிவாற்றலும் செயலாற் றலும் எச்சரிக்கையுடன் இணைந்து நிற்குமாறு செயற்படுத்த வேண்டும்.

எந்த ஒரு செயலையும் முதன்முதலிற் செயற்படுத்த முற் படும்போது, இதன்பிறகு இது என் நனவுநிலை அறிவு துணை நிற்க, எதையும் விட்டுவிடவில்லை என்ற எண்ணம் செலுத்த, இவ்வாறு காலத்தை மிகுதியும் செலவழித்துச் செயலாற்ற வேண்டும். சூழல் அமையும் முயற்சியும் அதிகமாகத் தேவையா கும். ஆனால் காலப்போக்கில் அதே செயலைத் திருப்பித் திருப்பிச் செய்யும்போது, பலமுறை செய்து பழகிப்போன காரணத்தால், தான் விரும்பி ஏற்றுச் செயற்படுத்த முயன்ற செயல்கள் (voluntary action) பழக்கச் செயல்களாக (habitual actions) மாறிவிடுகின்றன. பயிற்சி மிகுதியால் மிகமிக எளிமை யாகச் செய்துவிடும் நிலைமை உண்டாகிவிடுகிறது. எடுத்துக் காட்டாக ஒன்றை நோக்கலாம்.

தேகப்பயிற்சி செய்ய வேண்டும். என நினைத்தவன் தன்னு டைய உடல்நலத்துக்கு ஒத்துவரக் கூடியதாக எந்த ஒரு வகைத் தேகபயிற்சியை — சிரசாசனம், பத்மாசனம், குக்குடாசனம் என்பனபோல — மேற்கொள்ளலாம் என்று சிந்திக்கிறான். இந்த ஆசனம்தான் செய்யவேண்டும் என்ற முடிவுக்கு வந்தபின் அந்த ஒருவகைக் குறிப்பிட்ட ஆசனத்தைப் பற்றிய அனைத்துச் செய்திகளையும் தெரிந்துகொள்ளுகிறான். பின்னர்ச் செய்யும் முறையைத் தெரிந்துகொள்கிறான்.

தேகப்பயிற்சியைத் துவக்கியநாளன்று அவன் அதைச் செய்து முடிக்க எடுத்துக்கொண்ட நேரம், முயற்சி, இதன்பின்னர் இது செய்ய வேண்டும் என்ற நினைவுடன் செயல்பட வேண்டிய எச்சரிக்கையுடன் கூடிய நனவுநிலை ஆகியவை காலப்போக்கில் குறைந்து கொண்டே வரும். அவன் இதைத்தான் செய்ய வேண்டும், இதைச் செய்தேயாக வேண்டும் என விரும்பி ஏற்றுக்

கொண்ட செயலேயாயினும் காலப்போக்கில் பழக்கச் செயலாக மாறிவிடுகிறது. பழக்கச் செயலாக-மாறியது. நாம் இக் காலத்தே பழக்கம் என்ற பெயரால் சில செயல்களைக் குறிப் பிடுகிறோமே அவைகளும் ஒரு காலத்தில் நம்மால் விரும்பி ஏற்றுத் துவங்கப்பெற்ற புதுச் செயல்களே. தொடங்கப்பெற்ற காலத்தில் அறிவின் துணைக்கொண்டு, மிக்க முயற்சியோடு நிறைந்த கால அளவையில் அச்செயல்கள் செய்யப்பெற்றிருக்கும். எனவே, நாமே அறிந்து விரும்பி, ஏற்ற செயல்களே பயிற்சி மிகுதியால் பழக்கங்களாக உருவெடுத்துள்ளன. ஆகையால் பழக்கங்கள் ஒரு காலத்தில் அற வழியில் அமைந்த விருப்பா யேற்ற செயல்களே.

தனிமனிதன் தான் விரும்பியேற்ற அறச்செயல்களின் பயிற்சி யானது, உடல் மாற்றத்தோடு மட்டுமன்றி, மனத்தையே மாற்றியமைத்து விட்டது. தூண்டுதலின்றித் தானே தொழிற் படுமளவுக்குரிய மனப்பதிவு அமையும் வகையில் பயிற்சி அமைந் திருக்கிறது என்பதை வெளிக்காட்டுவதே பழக்கச்செயல் எனவே, விருப்பாயறிந்து ஏற்ற அறச் செயலை, உடலேயன்றி மனமும் தனக்குரிய பயிற்சியாக அமைத்துக்கொண்டது என்பதை வெளிக் காட்டும் புறவிளக்கங்களாக அமைந்தவைகளே பழக்கங்கள்.

எனவே, இன்று நம்மிடம் காணும் பழக்கச் செயல் என்பது ஒரு காலத்தில் அறக்குறிக்கோளை அடிப்படையாகக்கொண்டு விருப்பாயேற்ற செயலே என விளக்கம் அமைத்துக்கொள்ள வேண்டும்.

நடத்தை (Conduct)

விரும்பி ஏற்ற அறவழிச் செயல்களும், அவைகளைப் பயிற்சி செய்வதால் அமைந்த பழக்கச் செயல்களும் ஆகிய இவ்விரண் டையும் உட்கொண்ட செயலாக அமைவதே 'நடத்தை' என்பது. எனவே, நடத்தையினுள் அறவழிச் சாராத செயல்கள், விரும்பி ஏற்றுக் கொள்ளப் பெறாத செயல்கள், அறப்பண்பு இல்லாத செயல்கள் ஆகியவை சேரா. வெளிப்புறத் தாக்குதல்களுக்கு அஞ்சி, தன்வயமாய கட்டற்ற தன்மையை (தற்சுதந்தரம்) இழந்த நிலையில் ஒருவன் மேற்கொள்ளும் அற வழிச் சாராச் செயல்கள் நடத்தை என்பதனுள் அடங்கா.

நடத்தை என்பது குறிக்கோளையும, தேர்ந்துகொள்ளும் முடிவுநிலையையும் உட்கொண்டு, விரும்பியேற்றுச் செய்யப் பெறும் செயல்களையே குறிக்கும். விருப்பாயேற்ற அறச்

செயல்கள் பயிற்சி மிகுதியால் பழக்கச் செயலாக மாறும்போது, மனமும் பயிற்சியின் மிகுதியால் தானே இயங்கும் நிலையைப் பெற்றுவிடுகிறது. அதற்குமேல், பழக்கம் நடத்தையாக மாறும் போது, முன்னமேயே தானே இயங்கும் நிலையைப் பயிற்சியால் பெற்றிருந்த மனம், உயிர் பண்பாட்டின் கொள்கலமாகவே அமைந்துவிடுகிறது. எனவே, நடத்தை (conduct) என்பது அறநிலை வழியில், உயர்பண்பாட்டின் கொள்கலமாக அமைந்த மனத்தின் வெளிப்புறக் காட்சியாகவே கொள்ளுதல் வேண்டும்.

(1) விருப்பாயேற்ற அறவழிச் செயல் வழக்கம் என அமைதல் முதல் நிலை இதனால் உடற்பயிற்சியும் மனப்பயிற்சியும் அறவழி யில் இணைந்து ஒன்றிவிடுகின்றன.

(2) பழக்கம் என்பது நடத்தையாக அமைதல் அறவழிச் செயலில் இரண்டாம் நிலை வளர்ச்சி. முதல் நிலையில் அறவழியும் செயல் புரியும் உறுப்புகளும் இணைந்திருந் தாலும், ஒரு வேறுபாடு இருந்தது. பழக்கம் நடத்தையாக மாறிய நிலையில், அறவழியின் உயர்பண்பாகவே மனம் அமைந்து விடுகிறது. மனம் அறப்பண்பாகவே மாறிவிட்டபோது, உடல் என்பது அறப்பண்பை வெளிக்காட்டும் புறநிலைக் கருவி யாக அமைந்துவிடுகிறது. எனவே, நடத்தை (conduct) என்பது பழக்கம் (habit) என்ற நிலையைவிட உயர்ந்த நிலை. பழக்கம் என்பதில் அறவழியும் அதிற் பழகிய பழக்கமும் என்ற வேறு பாட்டைக் காணலாம். ஆனால், பழக்கம் அதற்கு மேல் நிலை யாகிய 'நடத்தை' என்பன அடையும்போது, அது ஒருவகைப் புற அடையாளமே. அதனுடைய 'அகநிலை' என்ன எனில், மனம் அறப்பண்பாகவே தன்னை மாற்றிக்கொண்டு விட்ட நிலை. மனம் என்ற ஒன்று அறப்பண்பை ஏற்று விளங்கு கின்றது என்பதன்று. மனம் என்ற தனிப்பொருளே இல்லை. அறப்பண்புதான் இருக்கிறது. உள்ளே இருக்கும் அறப்பண்பினை வெளிக் காட்டும் புறநிலை விளக்கமே நடத்தை.

பின் ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் என்பார் நடத்தை என்பதைக் கீழ்க்கண்டவாறு விளக்குகின்றார். மனத்தின்அகநிலை உறவுகள் புறநிலை உறவுகளுக்கு ஏற்ப, தம்மை மாற்றி இணைத்துக் கொள்ளுவதைத் 'தொடர்ந்து மேற்கொண்டு வருகின்ற முறை என்று நடத்தையை விளக்குகிறார். சுருங்கக்கூறின், மனிதனின் அனைத்துறுப்புகளையும் ஒப்ப நிறுத்தி வளர்க்கும். உறுப்

புயிர்ப்புச் சக்தியைப் போல நடத்தை என்பது புறச் சூழ்நிலைகளோடு மனிதன் தன்னை இணைத்துக் கொண்டு வாழ்வதற்கு அமைந்த 'உயிர்ப்புச் சக்திச் செயற்பாட்டு முறை' என்று கொள்ளுதல் வேண்டும் என்பது ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் அவர்களின் கருத்து.

நடத்தையின் அகநிலை அறப்பண்பு (Character)

விருப்பாயேற்ற அறவழிச் செயல் பழக்கமாக மாறியது. பின்னர், அது மேலும் ஒருவகை மாற்றத்தைப் பெற்றது. பழக்கமானது ஒருவகை நிலைத்த அமைப்பினைப் பெறும் போது, செயலுக்குரிய இயற்றி நிலைகளும் ஒருவகையான நிலைத்த அமைப்பினைப் பெற்று விடுகின்றன. இயற்றி நிலைகள் தாம் இயங்க வேண்டிய செயற்பாட்டு முறையில் ஒருவகை நிலைத்த தன்மையைப் பெற்று விட்டபோது, மனம் செயலற்று விடுகிறது. மனம் செயலற்ற நிலையில் இருக்கிறது என்பது என்ன? மனமானது தன்னுடைய முற்பாட்டுச் செயல் இல்லாமல், தன்னிடத்தில்உள்ள அறப்பண்பில்தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டுவிடுதல் மனம் என்ற ஒரு தனி அமைப்பே இல்லாமல் அறப்பண்பாகவே மனம நின்று விட்ட நிலை. இத்தகைய நிலையையே மனத்தின் செயலற்ற நிலை என்பர். எனவே, மனம் தன்னுடைய நிலை அழிந்துபோக, அங்கே நின்ற அறப்பண்பே (character) நடத்தையின் அகநிலை அமைப்பு. அறப்பண்பு என்ற அகநிலையின் வெளிப்புறத் தோற்ற நிலையே 'நடத்தை' எனப்பெறும்.

மனிதன் தன்னுடைய மனம் அழிந்துபோக, அவன் அங்குள்ள அறப்பண்பாகவே அமைந்துவிட்ட நிலையை மனிதனின் பண்பு என்று சொல்லலாம். மனிதனின் பண்பு (character) என்பது வேறு; மனிதனின் இயல்பு அல்லது இயற்கை என்பது வேறு.

மனிதனின் இயற்கை அல்லது இயல்பு என்பது அவனுடைய அகநிலைக் குணம்தான். மனிதனின் இயற்கைக் குணம் என்று சொன்னால் மனிதனில் முயற்சியால் பெற்று, வளர்த்து, உண்டாக்கிக் கொண்ட குணம் என்பதாகக் கருதப் பெறாமல் மனிதனிடம் இயல்பாகவே அகநிலையில் அமைந்திருக்கும் குணமே மனிதனின் இயற்கைக் குணம். ஆனால் நடத்தை (conduct) என்பதன் அகவடிவாக அமைந்த அறப்பண்பும் மனிதனின் அகநிலைக் குணமேயாயினும், நடத்தை என்பது மனிதன் தன்முயற்சியால் தானே தேடி, ஏற்று, பயிற்சி செய்து, பின்னர் தன்மய

மாகவே ஆக்கி, அமைத்துக் கொண்ட அகநிலைக் குணம். இயற்கைக்குணம் என்பது மனிதனிடத்தில் உள்ளார்ந்த நிலையில் இருந்த குணம். நடத்தையின் மூலம் அறியப் பெறும் அகநிலைக் குணமானது மனிதன் தானே விரும்பி வருவித்து ஏற்று வளர்த்துக் கொண்ட குணம்.

முன்னது மனிதனும் அவனுடைய உடைமையும் போன்ற நியதியில் அவனோடு அநாதிக்காலந்தொட்டே இணைந்திருப்பது. பின்னது மனிதன் உழைத்து, வெளியிலிருந்து தனக்காக ஆக்கிக்கொண்டது. ஆனால், தானும் தான் தேடிய குணமும் என்ற வேறுபாட்டோடு இணையாமல் தான் தேடியமைத்த குணத்தில் தன்னை இழந்துவிட்ட நிலை. இதுவே அகநிலை அறப்பண்பு (character). இது நடத்தை என்ற புற விளக்கத்தின் மூலமாகிய அகநிலை அறப்பண்பாகும்.

அகநிலை அறப்பண்பே ஒழுக்கம் எனப்பெறுவது. இது புற நிலையில் காணப்பெறும் பண்படுத்தப் பெறாத அறநெறி களிலிருந்து ஒருவன் தானே நல்லவைகளைத் தேர்ந்தெடுத்து, அவைகளை உழைப்பினால் ஒழுக்கக் கட்டடமாக அமைத்துக் கொண்ட நிலை. மனிதன் தன்னிடத்தில் இயற்கையாக அமைந்த உணர்ச்சிக் கூறுகள், செயற் கூறுகள் ஆகியவைகளை உயிராற்ற லால் கட்டுப்படுத்தி, அவைகளை அறிவுக் கூறுகளால் ஒழுங்கு பெறச் செய்து, இறுதியாக இம்மூன்று கூறுகளையும் தூய்மை யாக்கி, இணைத்து நிறுத்தி, அவ்வாறு நிறுத்துவதன் மூலம் அறப்பண்பினைத் தன்னுடைமையாக ஆக்கி, இறுதியில் அறப் பண்பாகவே தன்னை நிறுத்திவிடுகிறான். இதுவரை அமைத்த எல்லாக் கூறுகளின் கட்டுப்பாட்டையும் நீக்கிவிடுகிறான். கட்டுப் பாடு நீங்கிய நிலையிலும் எல்லாக் கூறுகளும் அறப்பண்பாகவே இணைந்து விடுகின்றன. அந்நிலையில் மனிதன் இல்லை; அவன் மனம் இல்லை; மனத்தால் ஆற்றப்பெறும் அகந்தைச் செயல் கள் இல்லை. இருப்பதெல்லாம் அகநிலை அறப்பண்பு (character) ஒன்றே. இத்தகைய உயர்நிலையை மனிதன் அவன் முயற்சி யால் அவனே அமைத்துக்கொண்டான். அவனே தேடி அமைத்துக் கொண்ட முறை என்றாலும், அறவழி என்பதாக ஒன்றும், அதனைச் செயற்படுத்த மனிதன் என்ற ஒருவனும் அங்கே இல்லை. அறப்பண்பே அகநிலை வடிவமாக, நடத்தையே அதன் புறநிலை வடிவமாக அமைகிறது. இவைகள் சுதந்தர மாகத் தாமே இயங்குகின்றன. அங்கே இவைகளை இயக்கும் மனிதன் இல்லை. நடத்தையும் நடத்தையின் அகநிலை அறப் பண்பும் மனிதனிடம் காணப்பெறுகின்றன என்று சொல்லக்

கூடாது. நடத்தை (conduct) என்ற புறநிலைச் செயல் நடை பெறும் சமயத்தில் அகநிலை அறப்பண்பு அச்செயல் மூலமாக இருக்கிறது என உணரப் பெறுகிறது என்பதே. அவைகள் தாமே இயங்குகின்றன. அவைகளை இயக்கும் எத்தகைய மனிதனும் அங்கே இல்லை. இதுவே அகநிலை அறப்பண்பும் நடத்தையும் (character and conduct) இணைந்து நிற்கும் நிலை எனக் கொள்ளவேண்டும்.

(2) (ஈ) இயற்றிநிலை (Will)

ஒரு பொருளை அசையவைக்கும் செயற்பாட்டுணர்ச்சிக் கூறு கள், எல்லா அசையும் பொருள்களிலும் காணப்பெறும். இத் தகைய செயற்பாட்டுணர்ச்சிக் கூறுகளே ஒரு பொருளை அசை யும் பொருள் என்றும் அசையாப் பொருள் என்றும் வேறுபடுத்தி அறிய உதவுகின்றன. எல்லா அசையும் பொருள்களிலும் அவை இயல்பாகவே அமைந்துள்ளன. தேவையுணர்ச்சிதான் அனைத்துக் கும் மூலமானது.

தேவையுணர்ச்சியானது முதன்முதலில் ஒருவகைத் துன்ப அனுபவத்தை ஏற்படுத்துவதன் மூலம் தன்னுடைய இருப்பை உணர்த்துகிறது. தேவையுணர்ச்சியானது ஒன்றுக்கொன்று முரணான இருவகை அனுபவ உணர்ச்சிகளாக அனுபவிக்கப் பெறுகிறது. தேவை என்பது ஒரு துன்ப நிலை அனுபவம்; தேவை நிறைவு என்பது தேவையை நிறைவு செய்யும் பொருள் உண்டு; அப்பொருளை அடைந்தால் தேவை நிறைவு பெறும் என எண்ணுவதால் தேவை நிறைவு என்பது ஒருவகை இன்ப அனுபவ நிலை. தேவை என்ற துன்ப நிலையில் இருக்கும் ஒரு பொருள், தேவை நிறைவு செய்வதற்குரிய பொருளைத் தேடிப் பெற்று, அதன் மூலம் தேவை என்ற இத்துன்ப நிலையை நீக்கிக்கொள்ள வேண்டும் என்று அறிகுறிகளால் அறிகிறது. துன்ப நிலையை அனுபவிக்கும் பொருள் இன்ப நிலையை அடைய ஒரு வழி உண்டு என நினைக்கிறது. அவ்வழி என்ன? இத்துன்ப நிலையை மாற்றும் பொருள் ஒன்று உண்டு; அதை அடைய வேண்டும் அவ்வளவே. அடைந்தால் இன்பம். அனுபவ உணர்ச்சி யில் நின்ற ஒரு பொருள் அறிவுப் பகுதியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறது. துன்ப அனுபவமும் அதனை நீக்க வேண்டும் என்ற அறிவும் முறையே பொருள்களிடத்தில் அமைந்திருக்கிற உணர்ச்சிக் கூறுகளும், அறிவுக் கூறுகளும் ஆகும். இவ்விரு கூறு களும் இணைந்து நின்று மூன்றாவதாகிய ஒரு முக்கியக் கூற்றினை இயங்க வைக்கிறது. அதுவே செயற்கூறு. உணர்ச்சிக்

கூறுகளும் அறிவுக் கூறுகளும் அழுத்தம் பெறும்போது, செயற் கூறு இயங்கத் தொடங்கிவிடும். செயற்கூறு என்பது உண்டாக்கப் பெறுவதன்று. அசையும் உறுப்புகளிலுள்ள அசையும் ஆற்றலை ஒருவழிப்படுத்தி, ஒருவழிப்படுத்தப் பெற்ற ஆற்றலை, ஒன்றையே நோக்கிச் செல்லுமாறு செயற்பட வைத்தல் என்பதே. இது ஒரு வகையில் இயல்பாக அமைந்த செயலியக்கத்தை ஒன்றுபடுத்தி, ஒரு வழியில் இயங்க வைத்தல் என்பதே. இயங்கும் ஆற்றலை ஒன்றுசேர்த்து, ஒரு வழியில் இயங்க வைத்தல் என்ற வேலையை அதே பொருளிடத்தில் இயல்பாயமைந்துள்ள அறிவுக் கூறுதான் செய்கிறது. இயங்கும் ஆற்றலை ஒருவழிப்படுத்தும் அறிவுக் கூறுதான் பல வகையான அழுத்த நிலைகளில் செயல் படுகிறது. இயங்காற்றலை இயக்கும் அறிவுக் கூறுதான் இயற்றி நிலை (will) என்ற பெயரைப் பெறுகிறது. எனவே, இயற்றி நிலை என்பது இயங்கு மாற்றல் இல்லாத ஒன்றை இயங்க வைக்க முடியாது. குறிக்கோளில்லாமல், ஒருவழிப்படாமல் இயங்கிக் கொண்டிருக்கிற ஆற்றலை இணைத்து, ஒருவழியில் செல்லுமாறு இயக்கும் பண்பே இயற்றிநிலையின் பணி. பொருள் களிடத்தில் இயற்கையிலேயே அமைந்து கிடக்கிற இயங்காற்றலை ஒரு குறிக்கோள் அடிப்படையில் இயங்க வைப்பதே அறிவுக்கூறு. இயல்பாயமைந்த இயங்காற்றலை அற இயல் ஆராய முற்படாது. அறிவுக் கூற்றினால் இயக்கப்பெறும் இயங்காற்றலே அற இயலின் ஆய்வுக்குரியது. எனவே, இயற்றிநிலை என்பது செயற்கூறு அன்று. அது ஓர் இயங்காற்றலும் அன்று. அது இயங்காற்றலை நெறிப்படுத்தி இயக்கும் நிலை. இயக்கும் நிலை என்ற பெயராற் சுட்டப் பெற்றாலும் அது ஒருவகையில் அறிவுக் கூறுதான். அறிவின் கூறாகிய இந்த இயற்றிநிலையை அடிப்படையாகக் கொண்டுதான் ‘அற இயல்’ தோற்றம் பெறுகிறது. அற இயல் ஆய்வுகள் எல்லாமே இந்த அடிப்படையை வைத்துத்தான் எழுப்பப்பெறும் கட்டடங்களாக அமைகின்றன.

மனிதனின் இயங்காற்றலைக் கட்டுப்படுத்தி,ஒருவழிப்படுத்தும் ஆற்றலே இயற்றிநிலை. இதன் பணி இரண்டு வகை. உறுப்பு களில் பொதுவாக இயங்கிக் கொண்டிருக்கும் இயங்காற்றலைக் கட்டுப்படுத்தும் பணி ஒன்று. கட்டுப்படுத்திய ஆற்றலை ஒரு வழியில் இயங்குமாறு இயக்கும் பணி மற்றொன்று. அறிவுக் கூற் றின் இந்த ஆற்றலைத்தான் ‘அறம்’ என்று கூறுவர். ‘அறிவே அறம்’ என்ற பொன்மொழியை ஆக்குவார்கள். இயற்றிநிலையின் ஆற்றலைக் குதிரை என்ற மிருகத்தினை அடையாளமாக

அமைத்து விளக்கினார்கள். புற உலகத்தில் விளங்குகின்ற இயங்கு காற்றலை நிறுத்தி, ஒருவழிப்படுத்தி இயக்கும் இயக்காற்றலை ஐந்து குதிரை இயக்காற்றல், பத்துக் குதிரை இயக்காற்றல் என அளவிட்டுக் காட்டினார்கள். மனிதனின் அக உலகில் நிகழும் அக இயங்காற்றலை நிறுத்தி, 'அதனை ஒருவழிப்படுத்தும் இயங்காற்றலைப்' பரி அங்க யோகம் (பரி–குதிரை; அங்கம்-உறுப்பு; யோகம் - இணைப்பு) எனப் பெயரிட்டுக் காட்டினர்.

இயற்றிநிலையை மனிதன் செயலில் வைத்துத் தெரிந்து கொள்ளலாம். குடித்துவிட்டு ஆடும் மனிதனிடத்தில், அவன் குடித்த அக்குடிப் பொருள் நேரே சென்று அவன் அறிவுப் பகுதி யைச் செயலிழக்க வைக்கிறது. அறிவுப் பகுதியானது செயலிழந்த தும் அம்மனிதனுடைய உறுப்புகளில் இயல்பாக அமைந்துள்ள இயங்கும் ஆற்றல் கட்டுப்பாடில்லாமல் இயங்கத் தொடங்கி விடு கின்றது. குடித்தவன் செயற்படுகிறான். இயற்றிநிலை என்ற ஒன்று இருந்து அனைத்து இயங்காற்றலையும் நெறிப்படுத்திச் செயற்படுத்தாமையால் அவன் மனித நிலையிலிருந்து செய்யும் செயல்கள், மிருகத்தைவிடத் தாழ்ந்த பொருளின் செயல்களென மதிக்கப் பெறும் நிலையைப் பெறுகின்றன.

இயற்றிநிலை என்ற அறிவுக் கூறு இயங்காற்றலை இவ்வாறு செயற்படுத்த முற்படும்போது, அது ஓர் அடிப்படைக் குறிக் கோளை மூலமாக வைத்துக்கொண்டு, அவ்வடிப்படையில் இயக்குகின்றது. எந்த ஒரு குறிக்கோளின் அடிப்படையில் இயற்றிநிலையானது இயங்காற்றலை இயக்குகிறதோ அந்த அடிப்படைக் குறிக்கோள்தான் அகநிலை அறப்பண்பு (character) என்று சுட்டப்பெறுகிறது.

நாட்டுப் பற்றினை உயிர்நாடியாகக் கொண்டு தன்னையே தியாகம் செய்த ஒருவனை எடுத்துக்காட்டாக அமைத்துக் கொண்டும் சிந்திக்கலாம்.

ஒரு குழந்தை பிறக்கும்போதே நாட்டுப் பற்றுடன் பிறக்க வில்லை. ஆனால், நாட்டுப் பற்று என்ற ஒரு பண்பு தேவை யானால், அதை வளர்த்துக் கொள்ளக் கூடிய எல்லா வகையான ஆற்றல்களையும் அல்லது தேவைகளையும் தன்னுள் அடக்கி வைத்திருக்கும் ஒப்பற்ற பெட்டகமாகத்தான் குழந்தை பிறக் கிறது. இதுவரை வரலாற்றிலேயே தேவைப்படாத ஒரு புதிய பண்பு தேவைப்படுமானால், அதையும் வளர்த்துக் கொள்ளக் கூடிய அமைப்புடன்தான் குழந்தை பிறக்கிறது.

குழந்தையின் பல்வேறு வகையான உறுப்புகளும் அவற்றின் இயங்காற்றல்களும் தத்தம் போக்கில் செயல்படுகின்றன. தேவை, தேவையை நிறைவு செய்யும் ஆற்றலுடைய பொருள், தேவையை நிறைவு செய்தல் என்ற அடிப்படையில் செயல்கள் நடைபெறுகின்றன.

ஒரு குழந்தை வளர்ந்து பெரியவனாகும் நிலையில் அவன் அனுபவத்தில் நாட்டுப் பற்று என்ற ஒன்று இப்போது தேவை என உணர்கிறான். நடைபெற்ற நாட்டு வரலாறு, நாட்டின் வறுமை, நாட்டின் தேவை, நாட்டின் அடிமை நிலை, நாட்டின் விடுதலைக்கு உழைக்கும் உழைப்பு, உழைப்பின் வெற்றி ஆகியவைகள் அவன் உள்ளத்தில் நாட்டுப் பற்று என்ற பெயரில் உருவாகின்றன. நாட்டுப் பற்று உருவாவதற்குச் சூழ் நிலையே காரணமாகிறது. காலப்போக்கில் நாட்டுப் பற்று ஒரு முக்கியத் தேவை என உணரப் பெறுகிறது.

பசியும் ஒரு தேவை; நாட்டுப் பற்றும் ஒரு தேவை. பசியானது இயற்கையாயமைந்த தேவை. நாட்டுப் பற்று என்பது ஒருவன் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில், இது இப்போது வேண்டும் முக்கியத் தேவை எனத் தானே உருவாக்கி அமைத்துக் கொண்ட தேவை. முன்னது இயற்கை; பின்னது செயற்கை. எனவே அக நிலை அறப் பண்பு (character) என்பது, தேவை என அறிந்து ஏற்றுக்கொண்ட அகநிலைக் குறிக்கோள் அல்லது அறப்பண்பு. இது வலிமையாக அமைவது எதனால்? சூழ்நிலையானது இயல் பாயமைந்த அறிவுக் கூற்றினை அழுத்துகிறது. அறிவுக் கூறானது சூழ்நிலைத் தாக்குதலால் ஒரு தேவையை உருவாக்குகிறது. அத் தேவையானது பலவகைக் காரணங்களால் அழுத்தநிலை பெறு கிறது. அழுத்தநிலை பெற்ற அந்த அகநிலைத் தேவையே, உயர்ந்த வரையறை பெற்ற அகநிலை அறப்பண்பாக அமை கிறது (formation of organised character). சூழ்நிலையாலும் பிற வற்றாலும் அமுக்கப்பெற்ற அறிவுக் கூறு, அகநிலை அறப்பண்பை அழுத்தமாக உருவாக்கும் பணியைச் செய்து முடித்த பிறகு, அவ்வுருவாக்கப் பெற்ற அறப்பண்பைச் செயலாக்க முற்படுகிறது.

அகநிலை அறப்பண்பை உருவாக்குவதும், உருவாக்கப்பெற்ற அறப்பண்பை நிறைவாக்கும் செயற்பாடுகளை உண்டாக்குவதும் ஒரே பொருளின் இருவகைச் செயல்கள். அப்பொருள்தான் இயற்றிநிலை (will). இயற்றிநிலையே அகநிலை அறப்பண்பை இது என முதன் முதலில் உருவாக்குகிறது. இயற்றிநிலையால் உருவாக்கப்பெற்ற அகநிலை அறப்பண்புக்கு உரிய புறநிலைச

செயலமைப்பினை அமைத்துக் கொடுப்பதும் அதே இயற்றி நிலை தான். அகநிலை அறப்பண்பும் புறநிலைச் செயற்பாடும் (character and conduct) அமைந்த இணைப்பு முன்பே விளக்கப் பெற்றுள்ளது. மனிதனின் இயற்றி நிலைதான் இவ்விரண்டையும் உண்டாக்குவதும் இணைப்பதும்.

இயற்றிநிலை எனப்பெறும் ஒன்றற்கு எத்தகைய தனிப்பட்ட அகநிலை எண்ணமோ சார்புணர்ச்சியோ கிடையாது. நாட்டுப் பற்றுடையவனுடைய இயற்றிநிலைக்கு நாட்டுப் பற்று உண்டா என்றால் அதற்கு நாட்டுப் பற்று இல்லை. இயற்றி நிலையானது நாட்டுப் பற்றுக்காக உழைத்ததா என்றால் அதற்குச் செயற் பாடும் இல்லை. நாட்டுப் பற்று என்ற அகநிலை அறப் பண்பை யும் அதை ஒட்டிய புறநிலைச் செயலையும் இணைப்பது இயற்றி நிலை.இயற்றிநிலையானது இயங்காற்றலைஉண்டாக்குவதில்லை. ஆனால், இயல்பாகவே மனித உறுப்புகளில் அமைந்துகிடக்கும் இயங்காற்றலை அதனதன் வழியே செல்லவிடாது தடுத்து நிறுத்தி, அகநிலை அறப்பண்போடு இணைந்த புறநிலை செயல் அமையுமாறு அவ்வழியில் இயங்காற்றலை இயக்குவது ஒன்று தான் இயற்றிநிலையின் பணி. தனக்கென ஒரு பண்போ, ஒன்றனை உண்டாக்கும் செயலோ இயற்றிநிலைக்கு இல்லை என்றாலும் நாட்டுப் பற்று என்ற பண்பையும் அதன் வடிவமைப் பையும் அதற்குரியசெயற்பாட்டுமுறையையும்அமைத்ததுஇயற்றி நிலையே. அது தேவை என நின்ற ஓர் உண்மைக்கு உரிய ஒரு வடிவமைப்பு முறையையும், அதற்குரிய செயற்பாட்டுத் தீர்வு முறையையும் உண்டாக்கிக் கொடுப்பதேயாயினும்,வடிவமைப்புக் குரிய உண்மை எனப்பெறும் தேவையையோ, செயலமைப்புக் குரிய இயங்காற்றலையோ உண்டாக்கிக் கொடுக்கும் நிலை இயற்றி நிலைக்கு இல்லை (Will gives form, not content). ஆகை யால் அகநிலை அறப்பண்பும் (character), புறநிலைச் செயற் பாட்டமைப்பும் (conduct) இயற்றிநிலையால் (will) உருவாக்கப் பெற்றவைகளே. இவ்வாறு இம்மூன்றும் இணைகின்றன.

(2) (உ) இயற்றிநிலையின் கட்டற்ற தன்மை (Freedom of the Will)

மனிதனின் இயற்றிநிலையானது, தன் செயலைத் தானே முடிவுசெய்யும் தலைமைத் தன்மை உடையதாய், வேறு ஒன்றற்குக் கட்டுபட்டுத் தன் செயலை அமைத்துக் கொள்ளும் தன்மை இல்லாததாய், அடிமைத் தன்மை இல்லாததாய், தன்

வயமாக இயங்கும் தன்னுரிமை நிலை உடையதாய் (freedom-கட்டற்ற தன்மை) விளங்குவது என்று அதனியல்பை விளக்கியுள்ளார்கள். ஆனால், தன்வயப்படி இயங்கும் தன்னுரிமை நிலை என்ற இயற்றிநிலையின் தன்மையானது ஒரு குறிப்பினுள் அடங்கும் தன்மையே. இயற்றிநிலையில் தன்வயமாக இயங்கும் கட்டற்ற தன்மை என்பது, ஒரு கோட்டிற்குள் அமைந்து நின்று அதனுள் கட்டற்ற தன்மையோடு இருப்பது என்பதே.

கை கால்களுக்கு விலங்கு போட்டு, உடம்பை அறைக்குள் இருக்கும் இரும்புக் கம்பத்தில் கட்டி, அறைக் கதவையும் பூட்டி விட்டால், அங்கே இருக்கும் மனிதன் தன்வயமற்றவன் (சுதந்தரமற்றவன்). அவனுக்குத் தன்வயப்படி இயங்கும் உரிமை இல்லை என்பது உண்மையே. அவ்வாறே வேறு ஒருவனின் நிலையையும் பார்க்கிறோம். சிறைச்சாலையுள் இருக்கும் வேறொருவன், அவனுக்குக் கைகால்களில் விலங்குகள் இல்லை. இரும்புக் கம்பத்தில் அவனைக் கட்டவில்லை. அவன் தங்கியிருக்கும் அறையைப் பூட்டவில்லை. ஆனால் அவனும் சிறைச்சாலைக்குள் இருப்பவனே. சிறைச்சாலையின் வெளிப்புறக் கதவு பூட்டப் பெற்றுள்ளது. சிறைச்சாலையின் மதில் அவனால் கடக்க இயலாதது. இந் நிலையில் இருக்கும் ஒருவன் கட்டுப்பட்டவனா? கட்டுப்பாடு அற்றவனா? கை கால்களில் பூட்டும் விலங்கும் இல்லை. எல்லா இடங்களிலும் அவன் விரும்பினால் தன்னுரிமையுடன் செல்ல இயலும். சிறைச்சாலையின் அறையினுள் வைத்துப் பூட்டப் பெற்றவனை நோக்கும்போது இவன் தன்னுரிமை அல்லது கட்டற்ற தன்மை உடையவனே. ஆனால் சிறைச்சாலையின் மதில், கதவு, கதவின் பூட்டு ஆகியவைகளை நோக்கும்போது, அவன் கட்டுப்படுத்தப் பெற்றவனே. சிறைச்சாலையின் உள்ளே அவன் எல்லா வகையாலும் தனியுரிமை, கட்டற்ற தன்மை உடையவனே. இக் கருத்தை இன்னும் விரிவாகவும் அமைக்க முடியும் இந்தியன் ஒருவன், தன்னுரிமை உடையவனா அல்லது தன்னுரிமைஇழந்தவனா; கட்டற்ற நிலை எனப்பெறும் தற்சுதந்தரமுடையவனா அல்லது கட்டுற்ற நிலை எனப் பெறும் தற்சுதந்தரமற்றவனா என வினவினால் ஓர் உண்மை புலப்படும். இந்திய மாநிலத்தின் மூன்று பக்கக் கடல் எல்லைகளையும், ஒரு பக்க மலை எல்லையையும் கருத்திற் கொண்டால் அவன் இந்நான்கு எல்லைகளைக் கடந்து, செல்ல இயலாதவன். இந்திய நாட்டு எல்லை என்பது அவனுக்கு ஒருவகையில் சிறை மதிலைப் போன்றதுதான். ஆனாலும் இந்தியாவின் உள்ளே எல்லா இடங்களிலும் விரும்பியவாறு சென்று வருவதற்கு இயலும் கட்டற்ற தன்மை உடையவனே.

இயற்றி நிலையின் கட்டற்ற தன்மை (freedom of the will) பற்றிப் பலவாறான கொள்கைகள் உள்ளன. நாம் என்னென்ன செய்ய விரும்புகிறோமோ, அவைகளையெல்லாம் பிறிதொன்றன் ஆதிக்கமோ, தடையோ இல்லாமல் செய்யும் உரிமையையே இயற்றி நிலையின் கட்டற்ற தன்மை என்பதற்கு உரிய விளக்க மாக நாம் கருதுகிறோம். விரும்பியதைச் செய்யும் உரிமை நமக்கு இருக்கிறதா? செய்யலாம் என்ற உரிமையை அளிக்கப் பெற்றுள்ள வைகளில் ஒன்றைத்தாம் நாம் விரும்புகிறோமா: பலவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதற்கு முற்படும்போது, நாமே நம் உரிமையில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கிறோமா அல்லது நம்மைத் தவிர, நமக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒன்று நாம் ஒன்றைத் தேர்ந் தெடுக்குமாறு நம்மை வற்புறுத்துகிறதா என்பவைகளை முறையாக ஆராய்தல் வேண்டும்.

மனிதர்களின் இயற்றிநிலையானது முழுமையான கட்டற்ற தன்மை உடையதே என்பது ஒருசாரார் கொள்கை. முன்னமேயே முடிவு செய்யப் பெற்றவைகளைத்தான் மனிதன் செய்கிறான். எனவே, அவனுடைய இயற்றிநிலையானது எல்லா வகையாலும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதே என்பது பிறிதொரு சாரார் கொள்கை.

உள்ளத்தியல்(psychology), புலன் கடந்த பொருளியல் (meta physics), கடவுட் கொள்கையியல் (religion), அற இயல் (ethics) என்ற துறைகளின் சார்பில், மனித இயற்றிநிலையின் கட்டற்ற தன்மை பற்றிய ஆய்வை மேற்கொள்கிறார்கள். அவ்வத்துறை சார்ந்த கருத்துகளை முறைப்படுத்தித் தெரிந்துகொள்ளலாம்.

(1) உள்ளத்தியல் சார்ந்த விளக்கம்

விருப்பாயேற்றுச் செய்யும் செயல்பற்றி உள்ளத்தியல் விரிவாக ஆராய்கிறது.

உள்நோக்கம் (motive), உட்கிடை (intention) ஆகியவை களின் வலிமை மெலிமைகளைச் சார்ந்தே நம்முடைய விருப்பா யேற்கும் செயல் நடைபெறுகிறது. உள்நோக்கம் என்ற ஒன்று பெரிதும் சூழ்நிலை காரணமாகவே அமைகிறது. இவ்வாறுள்ள வெளிப்புறத் தாக்குதல்கள் ஒருபுறமிருக்க, மரபு வழியில் அமைந்த இயற்கைக் கூறுகள் நம் செயல்களுக்கு அப்பாற்பட்டவைகளாக அமைந்த மூளை போன்ற உறுப்புகளின் ஆற்றல்கள் (மூளை போன்ற உறுப்புகளை இப்படித்தான் செயற்படவேண்டும்

என்று நம்மால் செயற்படுத்த இயலாது) ஆகியவை உள்ளிருந்தே தாக்குதல் செய்கின்றன. இவ்விரு வகையான (புற—அக) தாக்குதல்களுக்கு உட்பட்டே நம் விருப்பாயேற்கும் செயல் அமைகிறது. சங்கிலித் தொடர்போல நம்மைப் பின்னிப் பிணைந்து வரும் பல்வேறு காரண காரிய அடிப்படையை வைத்து நோக்கும்போது நாம் விரும்பியேற்கும் விருப்பச் செயல் எல்லா வகையாலும் கட்டுப்படுத்தப்பெற்றதே.

அறியும் நிலையில் கட்டற்ற தன்மை இல்லாததால் இயற்றி நிலையிலும் கட்டற்ற தன்மை இருக்க முடியாது. நடந்த பல நிகழ்ச்சிகளையெல்லாம் முறைப்படுத்தி அறியவும், நடக்க இருப்பவைகளை முறைப்படுத்தி அறியவும் ஆகிய அறியும் உரிமை மனிதனுக்கு இல்லை. மழை, புயல், பஞ்சம் வந்தமைக்குக் காரணங்களையோ, வர இருப்பன இவை இவை என்பனவற்றிற் குரிய குறிப்புகளையோ அறியும் உரிமை மனிதனுக்கு இல்லை. இருக்குமேயானால் திருமணக் குற்றம், சமூகக் குற்றம், தற் கொலை, நீதிமன்ற முடிவுகளை ஒட்டிய பல்வேறு நிகழ்ச்சிகள் ஆகியவைகளை முன்கூட்டியே அறிந்து தவிர்க்கலாமே! இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய முக்கால நிகழ்ச்சிகளையும் முறைப் படுத்தி, முழுமையாக அறியும் அறிவுரிமை மனிதனுக்கு இல்லாத போது, செயல் நிலையில் கட்டற்ற தன்மை இருக்கிறது என்று கூறுவது பொருந்தாத கூற்று.

(2) புலன் கடந்த பொருளியல் சார்ந்த விளக்கம்

காரண காரிய நியதிக் கொள்கையும், இயற்றிநிலையில் கட்டற்ற தன்மைக் கொள்கையும் ஒன்றுக்கொன்று முரணானது. காரண காரிய நியதிக் கொள்கையின் அடிப்படையில் எல்லா வகையான நிகழ்ச்சிகளும் பொருள்களின் ஆற்றல்களும் முன்னமேயே முடிவு செய்யப் பெற்றவைகளாக அமைந்துள்ளன. எனவே, இயற்றிநிலையில் கட்டற்ற தன்மை இல்லை.

உறுப்புகளுக்கு வழங்கப் பெற்றிருக்கும் ஆற்றல் வரையறைக்கு உட்பட்டதே. எனவே, புதுமையாக, தன்னுரிமையாக ஒரு செயலைத், தேர்ந்தெடுக்க முற்பட்டால், அதனைச் செய்து முடிக்கத் தேவையாகும் கட்டற்ற ஆற்றல் உறுப்புகளுக்கு இல்லை. ஆகையால், இயற்றிநிலையில் கட்டற்ற தன்மை இருக்க முடியாது.

பொருளியற் கொள்கை (materialism) அடிப்படையில் நோக்கினால், மனமும் பருப்பொருள் இணைப்பினால் உண்டாகியதே. பருப்பொருள்களும், அவற்றின் தன்மைகளும், ஆற்றல்களும் வரையறை பெற்றவைகளே. பருப்பொருள்களின் கூட்டுறவினால் உண்டாகிய மனம் எவ்வாறு கட்டற்ற நிலையில் அமைந்த ஆற்றலால் ஒன்றைப் புதுமையாக நினைக்கவோ செயலாற்றவோ முடியும்! எனவே, மனிதனுடைய இயற்றி நிலையானது முழுமையான கட்டற்ற நிலையுடையது என்பது பொருந்தாது.

தனிமனிதனுக்கு அவன் தன் இயற்றிநிலையால் விருப்பா யேற்ற செயல்களைக் கட்டற்ற நிலையில் (தற்சுதந்தரமாக) செய்யும் உரிமை வழங்கப்பெற வில்லையானால், அவன் செயலுக்கு அவனைப் பொறுப்பாளியாக ஆக்க முடியாது. தனிமனிதன் தன் வாழ்வுக்குரிய உயர் குறிக்கோள் இவ்வாறு இருக்கவேண்டும் என நிச்சயித்து அறியவோ, அவ்வாறு அறியப் பெற்ற குறிக்கோளை ஒட்டிய செய்முறை அறங்களை இயற்றிச் செயற்படுத்தவோ அவனுக்குக் கட்டற்ற தன்மையாகிய இயற்றி நிலைச் சுதந்தரம் அளிக்கப் பெறவில்லையானால், அற இயற் கல்வியானது பயனற்ற ஒன்றாகவே அமைந்துவிடும். தனிமனிதன் தான் முயன்று, தன்னை உயர்ந்த அறவழியில் இணைத்துக் கொள்ள முடியும் என்றிவ்வாறான கொள்கைகளெல்லாம் தவறுடையவனவாக அமைந்துவிடும்.

அற இயற் கொள்கையின்வண்ணம் தனிமனிதனின் இயற்றி நிலையில் முழுமையான கட்டற்ற தன்மை உண்டு என்பதன் பொருள், தானே தன்னாற்றலைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும் வேண்டியவாறு செயற்படுத்திக் கொள்ளவும் ஆகிய கட்டற்ற தன்மை உண்டு என்பதைக் குறிப்பிட வந்தது என்று கூறுவர்.

'இச்செயல் செய்தேயாக வேண்டும்' என்ற தீர்ப்புரையைத் தான் அற இயல் தனக்கேயுரிய அற இயல் தீர்ப்புரையாகக் கொள் கிறது. 'இச்செயல் செய்தேயாக வேண்டும்' என்ற முடிவை ஒரு தனிமனிதன் மேற்கொள்ளும்போது, அச்செயல் அவனால் செய்ய முடிந்ததாக அமைய வேண்டும். செய்ய முடியும் என்று அவன் ஏற்கும்போது அதைச் செய்து முடிக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்த இயற்றிநிலை அவனிடம் இருக்கிறது என்பதும், அத்தகைய இயற்றிநிலையை அவன் தன் விருப்பப்படி செயலில் ஈடு படுத்தக் கூடிய உரிமையில் கட்டற்ற தன்மை இருக்கிறது

என்பதும் அவனுக்குத் தெளிவாகத் தெரிந்த பின்னரே, அவன், 'இச்செயல் செய்தேயாக வேண்டும்' என்ற தீர்ப்புரையை வெளியிடக் கூடியவனாகத் தன்னை அமைத்துக் கொண்டான் என்று கருதலாம்.

'இச்செயல் செய்தேயாக வேண்டும்' (oughtness) என்ற அற இயல் தீர்ப்புரையானது (moral judgement) அற இயற் சிந்தனையுடைய தனிமனிதன் அறக்கொள்கை, குறிக்கோள், தற்போதுள்ள தேவை, செயற்பாட்டின் பலவகை இயல்புகள் ஆகிய அனைத்தையும் முழுமையாக அறிந்த நிலையில், தானே தன் அறிவின் துணைக் கொண்டு, செய்து அமைத்த முடிவு என்பதை அத்தீர்ப்புரையே நமக்குச் சான்றாக நின்று விளக்கு கிறது. ஆகையால், தனக்கு அயலாக இருக்கும் எந்த ஒன்றன் ஆதிக்கத்துக்கும் அடிபணியாத நிலையில், தனிமனிதன் தன் சூழ்நிலை முதலியவைகளைத் தேர்ந்து, தான் இப்போதைக்குத் தன் கடமையாக, 'இச்செயலைச் செய்தேயாக வேண்டும்' என்று தன் அறிவால், தன் இயற்றி நிலையில் அமைந்த கட்டற்ற தன்மையின் துணையால் முடிவு செய்தான் எனக் கொள்ளலாம். அந்த அளவுக்கு அவனுக்கு அமைந்த கட்டற்ற உரிமையையே, அற இயலானது, போதுமான அளவில் அமைத்துச் செயற் படுத்தப்படுகிற 'இயற்றி நிலைக் கட்டற்ற தன்மை' என்று ஏற்றுக் கொள்கிறது.

தனிமனிதன் தனக்குரிய அறக்கொள்கையைத் தேர்ந்து செய்வதற்குரிய அனைத்து உரிமைகளையும் பெறமுடியாதபோது, சிறந்த அறக் கொள்கை இது எனத் தேர்ந்து எடுக்கவோ செயற் படுத்தவோ இயலாதவனாகிறான். அந்நிலையில், அவன் 'தானே தன்னிலையில் தன் அமைப்புக்குரிய முடிந்த நிலையினன்; தான் பிற எந்த ஒன்றுக்கும் துணையாக இருந்து, பின்னர் விலகிவிடு கின்ற இடைநிலைக் கருவியாக அமையமாட்டான்' (A person is an end in himself. He should never be treated as a means. No one should enslave himself or others) என்ற அறநிலை அடிப்படைக் கோட்பாட்டுக்கு உரியன் அல்லாதவனாகிறான். உரிமை பெறாத ஒருவன் தானே தனக்கு ஆக்கமாகிய அறக் கொள்கையைத் தேர்ந்து செய்ய முடியாது. எனவே, முன்னமேயே முடித்தமைந்தது (pre determinism) என்ற கொள்கை அடிப்படை யில் அவன் செயலாற்ற வேண்டியவனே. அவ்வாறு, தன் உரிமைக்கு இடங்கொடாமல் தன்மேல் திணிக்கப் பெற்ற செயலுக்குத் தான் பொறுப்பாளியாக மாட்டான்; பொறுப்பாளி

யாகாத நிலையில் அவன் வினைக்குரியவன் ஆகான். எனவே, அற இயல் எந்த ஒரு தனிமனிதனும் தன் இயற்றி நிலையைத் தான் வேண்டியவாறு செயற்படுத்திச் சிறக்க, தேவையான அளவுக்குக் கட்டற்ற தன்மை அளிக்கப் பெற்றிருக்கிறான் என்பதே அற இயற் கொள்கையின் முடிவு.

இனி, நாற்புறம் பெரிய மதிலும், வாயிற்கதவும், பூட்டும் அமைத்துவிட்டு, அதனுள் அவன் கட்டற்ற தன்மை வாய்ந்த உரிமையைப் பெற்றிருக்கிறான் என்ற எடுத்துக் காட்டினை ஆராயும் அற இயலாளர்கள், அதனை விளக்கிக் காட்டும் முறையினையும் அமைத்துக் காணுதல் வேண்டும்.

சிறை என்பது தனிமனிதனின் இயற்றிநிலைக்கு அமைந்த கட்டுப்பாட்டின் எல்லைக் கோடு அன்று; சிறை என்பது ஒரு 'தேவையுணர்ச்சி'. தேவையுணர்ச்சி இருந்தால்தான் அது அவனைச் செயல் புரிய வைக்கும். தேவையுணர்ச்சியானது தரும் துன்பத்தின் அடிப்படையில்தான் தனிமனிதன் அதை நீக்கவும், குறிக்கோள் வாழ்வை இன்னது என்று அறியவும், அதற்கேற்ற செயல்களை அமைத்துப் பயிற்சி செய்யவும் வல்லவனாகிறான். எனவே, சிறை என்பது பசி என்ற தேவையுணர்ச்சியைப் போல, அற வாழ்வை அறிவால் ஆராய்ந்து செயற்படுதற்காக அமைத்துக் கொடுக்கப் பெற்ற புறநிலைத் தேவையுணர்ச்சி எனக் கொள்ள வேண்டும். அதை தனிமனிதனின் இயற்றிநிலைக்கு அமைந்த ஒருவகைக் கட்டுப்பாடு என்று கருதலாகாது.

எனவே, தனிமனிதன் தன் முயற்சியால் தன் இயற்றி நிலையைச் செயற்படுத்தி, உயர்ந்த அற வாழ்வை அடைதற்குரிய வகையில் கட்டற்ற தன்மையைப் பெற்றிருக்கிறது என்று விளக்கு வதே அற இயல்.

(3) (அ) அறச் செயல் படிநிலை வளர்ச்சி

அற இயல் ஒரு விளக்கநிலை விஞ்ஞானமன்று; அது உயர் நிலை விஞ்ஞானம் அல்லது நேர்நிலை விஞ்ஞானம் ஆகும், (இக்கருத்து முன்பே விளக்கப் பெற்றுள்ளது). அற இயலை ஓர் உயர்நிலை விஞ்ஞானமாகக் கொண்டால், அறக் குறிக்கோள்கள், அற இயற் குறிக்கோளை ஒட்டிய செயல்முறை அறங்கள் எவ்வாறு தோன்றி வளர்ந்தன என்பதை அறிதற்கு வரலாற்று முறையை மூலமாகக் கொள்ளக் கூடாது. ஒரு நாடு அல்லது ஒரு சமுகம் அற இயற் கொள்கையில் எவ்வாறு வளர்ச்சி பெற்றிருக்கிறது; இந்த வளர்ச்சியை இச்சமுகம் எவ்வெப் படிநிலைகளில் நின்று வளர்த்துக் கொண்டது என்று ஆராய்வதும் பொருந்தாது. அற இயலானது தனிமனிதனின் அற இயற் சிந்தனை, வளர்ச்சி, முதிர்ச்சி ஆகியவற்றையே கருத்தில் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிறது. தனிமனிதன் சிந்தனை, செயற்பாட்டுப் பயிற்சி ஆகியவைகளின் அடிப்படையில், தன்னை அறவாளனாக ஆக்கிக்சொள்ளும் வகையில் தனிமனிதனின் செயற்பாட்டு அறத்துறை வளர்ச்சியையே அற வளர்ச்சி எனக் கொள்கிறது அற இயல். அறச் செயல் வளர்ச்சி முறையில் மூன்று படிநிலைகளை அற இயல் அறிஞர்கள் ஏற்றுள்ளார்கள். மூன்று படிநிலைகளும் கீழே கொடுக்கப்பெற்றுள்ளன.

(1) இயல்பூக்க நிலை (2) மரபொழுக்க நிலை (3) மனச்சான்று நிலை. மேலே கூறப்பெற்ற மூவகை வளர்ச்சிப்படி நிலைகளும் வரலாற்று அடிப்படையில், ஒவ்வொரு சமுதாயத்திலும் முறையே வளர்ந்து காணப்பெறுகின்றன என அமைத்துக் கொள்ளுதல் கூடாது. ஒரே சமுதாயத்தில் இம் மூவகைப் படிநிலைகளில் வளர்ச்சி பெற்றவர்களும் இருப்பார்கள். இருபதாம் நூற்றாண்டில், பிற துறைகளில் நன்கு வளர்ந்து முதிர்ந்திருக்கிற ஒரு சமுதாயத்தில், அறச் செயல் வளர்ச்சிப் படிநிலை அமைப்பினில், முதற்படியிலேயே நின்று கொண்டிருக்கும் தனிமனிதர்களும் இருப்பார்கள். அவர்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு, இச்சமுகம் அற வளர்ச்சியில் முதற்படியில்தான் இருக்கிறது என்று கருதிவிடலாகாது. அவ்வாறே மூன்றாம் படியில் வளர்ச்சி பெற்றிருப்பவர்கள் சிலர் இருக்கலாம். அவர்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு இச்சமுகத்தில் இருப்பவர்கள் எல்லாருமே அறநிலை வளர்ச்சிப் படியில் மூன்றாம் படியில் நின்று சிறப்பவர்களே என்ற முடிவுக்கு வருவதும் தவறு.

அற இயல் ஆய்வாளர்கள் அறச் செயல் வளர்ச்சி முறையில் மூன்று படிநிலைகளை அமைத்துள்ளார்கள் என்ற அளவுக்கே நாம் அதனை விளங்கிக் கொள்ள வேண்டும். ஆனால், தனிமனிதன் ஒருவன் எந்த அளவில் அற இயற் படிநிலை வளர்ச்சியைப் பெற்றுள்ளான் என்பதை அவனைத் தனிநிலையில் ஆய்ந்து பார்த்து முடிவெடுக்க வேண்டுமேயன்றி, பொதுமையில் சமூகம் முழுவதுக்கும் இயையுமாறு ஒரு முடிவினை எடுத்தமைத்தல் பொருந்துவதன்று.

இனி, தனிமனிதனின் அற வளர்ச்சியானது இங்கே குறிப்பிடப் பெற்றுள்ள மூன்று படிநிலை அமைப்புக்களிலேயன்றி, வேறு பல அமைப்புக்களிலும் நின்று வளர்ந்திருக்கலாம். அவ்வாறிருப்பின் அவைகளையும் ஏற்கலாம். ஆகையால், இம் மூன்று படிநிலைகளை விட, வேறு எத்தகைய படிநிலையும் இல்லை என்று முடிவு கட்டி விடுதல் கூடாது. தனிமனிதனின் அற வளர்ச்சியின் எல்லாப் படிநிலைகளையும் இம் மூன்றனுள் அளவையியல் அடிப்படையில் பொருத்தி அமைத்துவிடலாம் என்பதே கருத்து எனக் கொள்ளுதல் வேண்டும். இனி, இம் மூவகை அறவளர்ச்சிப் படிநிலைகளைத் தனித் தனியே விளக்கமுற அமைத்துக் காணலாம்.

(3) (ஆ) இயல்பூக்க நிலையில் எழும் அறச் செயல்

அறநிலை வளர்ச்சியில் இயல்பூக்கங் காரணமாக எழும் அறச் செயலை முதற்படிநிலையாக அமைத்துள்ளனர். இயல்பூக்கம் என்பது வேறொருவரால் எடுத்துச் சொல்லி அல்லது தொட்டுக் காட்டி எழுப்ப வேண்டிய அவசியம் இல்லாமல் தாமே எழும் இயற்கை உணர்ச்சிகள். தனிமனிதனிடத்தில் காணப்பெறும் பசி, பயம் முதலியன இவ்வகையைச் சாரும். அறச்செயல்களிலுங் கூட இத்தகைய இயல்பூக்கம் காரணமாக அமையும் அறச் செயல்கள் உண்டு என்று கொண்டார்கள்.

இயற்கை மனிதன் இயல்பூக்க நிலையில் சில செயல்களைச் செய்து வாழ்ந்தான். தனக்குத் துன்பம் உண்டாக்குபவைகள் உண்டு என்றும் இன்பம் உண்டாக்குபவைகள் உண்டு என்றும் அறிந்தான். துன்பம் உண்டாக்குபவைகளின் மீது ஒருவகை வெறுப்புணர்வு தோன்றுவதையும் அவ்வாறே இன்பம் உண்டாக்கு பவைகளின் மீது ஒருவகை விருப்புணர்வு தோன்றுவதையும் உணர்ந்தான்.

எந்த ஒரு செயலையும் அறச்செயல் என்று கொள்ள வேண்டுமானால் அது அறிவொடு இணைந்த செயலாக அமைந்திருக்க வேண்டும். இயல்பூக்க நிலையில் செய்யப் பெறுகிற செய்ல்கள் அறச் செயல்களாகுமா எனில் அவைகளும் அறிவொடு இணைந்த செயல்களே யாதலின் அறச் செயல்களே.

இயல்பூக்க நிலையில் எழும் செயல்களை மிருகங்களும் செய்கின்றன. இன்பம் உண்டாக்கும் பொருள்களை அறிந்து கொள்கின்றன; விரும்புகின்றன. துன்பம் உண்டாக்கும்பொருள்களையும் அவ்வாறே அறிந்து கொள்கின்றன; வெறுக்கின்றன. இவ்வடிப்படையில் நோக்கினால் விலங்குகளின் செயல்களும் அறிவோடு இணைந்த செயல்களே. விலங்கின் செயல்களையும் அறந்தழுவிய செயல்கள் என்று கொள்ளலாமா? அறிவொடு இணைதல் என்ற ஒரேயோர் அடிப்படையை மட்டும் வைத்து நோக்கினால் விலங்குகளும் அறச் செயல்களை மேற்கொண்டு ஒழுகின என்றே கொள்ள வேண்டும்

அறிவு வேறு; தன்னுண்மை அறிவு வேறு (conscious—self conscious). இவையிவை இன்பம் செய்பவை; இவையிவை விரும்பப் பெறுபவை என்பன அறிவால் முடிவுசெய்த உண்மை உரைகளே. இவ்வாறு அறிவால் சில உண்மைகளே அறிதல் என்பது மிருகங்களுக்கும், மனிதனுக்கும் பொதுவானதாக அமையலாம். ஆனால், தன்னுண்மை அறிவு மனிதனுக்கு மட்டுமே உண்டு. இன்பம் தருபவைகள் இவை என்று தெரிந்து கொள்வதோடு இன்பம் தருபவைகளை விரும்பவேண்டும் என்பதோடு நின்று விடாமல், இன்பம் தருபவைகளைத் தேடி அலைந்து, அடைந்து இன்பத்தைப் பெற்றேயாக வேண்டும் என்று கருதும்போது அறிவு தனக்காகப் பாடுபடுவதை அறிகிறோம்; என்னறிவு என் தேவையை இவ்வாறு வரையறை செய்கின்றது என்றெல்லாம் ஒருவன் உணரும்போது, அவனுக்காகவே அமைந்த தனித்த அறிவு ஒன்று உண்டு என அவன் எண்ணுவதற்குக் காரணமாக அமைவதே தன்னுண்மை அறிவு, நமக்கு இன்பம் அளிப்பவைகளைப் பெற நாம் செய்யும் செயல்கள் நம்மை நோக்கிய அடிப்படையில் நற்செயல்களே என அறிவதே தன்னுண்மை அறிவு. தனக்கு தனக்கு என்பதாகவே எல்லாவற்றையும் கணித்தறியும் நோக்கம் கொண்டதாய், தான் இன்பம் பெற்றேயாக வேண்டும், இன்பத்தைப் பெறத் தேவையான செயல்களைச் செய்தேயாகவேண்டும் என அறிவது தன்னுண்மை அறிவு. அறிவொடு இணைந்த செயல்களெல்லாம் அறச் செயல்கள் ஆகா. தன்னுண்மை அறிவுடன் இணைந்த செயல்களே அறச் செயல்களாகும். இது என்குறிக்

கோளை உடன் கொண்ட செயல்; இதைச் செய்தேயாக வேண்டும் என்ற வரையறைகளை உண்டாக்குவது தன்னுண்மை அறிவே. தன்னுண்மை அறிவையே அறஇயல் வழிப்பட்டதாகிய அற வுணர்வு என்று கொள்வர். தன்னுண்மை அறிவு விலங்குகளுக்கு இல்லாத அறிவு. இதுவே, அறத்தை உணர்த்தவும், அறச் செயல் களைச் செயற்படுத்தவும் துணை செய்யும் அறிவு.

தேவையை அறிவது, தேவையை நிறைவு செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் அத்தகைய பொருள்களை நாடி அடைவது ஒருவகைப் பொது அறிவு. தேவை என்ற ஒன்று நமக்கு வரும். அப்போது நமக்கு இன்பம் தருவது இது,இதை நாடி அடைவதன் மூலம் இன்பம் பெற்றேயாக வேண்டும், எனக்கு இன்பம் தரு வதை நான் தேடியடைந்து இன்பம் பெறவேண்டும் என அறிவது தன்னுண்மை அறிவு. அதுவே அற இயலுணர்வு.

இயல்பூக்கத்தால் துன்ப உணர்வுகள் எழுகின்றன. அவை களை நிறைவு செய்பவைகள் இவை என அறிந்து, அவைகளைச் செய்து இன்பம் பெறுவது இயல்பூக்கச் செயல். துன்பம் தரு பவை இவை; இன்பம் தருபவை இவை என அறிதல் இயல்பூக்கச் செயலால் அமையும் அறிவே.

இனி, இன்பத்தையும் மனநிறைவையும் தருபவைகளை நல்லவை எனக் கருதுகின்றான். இன்பந் தருபவைகளை இன்பப் பொருள் என்று அறிவது. ஆனால், இன்பம் தருபவைகளை நல்லவை என அறிதல் இயல்பூக்க நிலையில் எழுந்த அற இயலறிவு - நல்லவை இவை இவை என அறிந்து, அவை களை அடைய முயற்சிக்கும்போது ' அம்முயற்சியால் விளையும் எல்லாச் செயல்களுமே இயல்பூக்க நிலையில் எழுந்த அற உணர்வால் விளைந்த அறச் செயல்களே. இங்கே ஒரு வேறு பாட்டை நன்கு உணர்தல் வேண்டும்-

இயல்பூக்க நிலையிலும் அறிவுடைச் செயல்கள் நிகழும் அறிவுடன் இணைந்தவை என்ற ஒரு காரணத்தாலேயே அவை களெல்லாம் அறச் செயல்கள் எனக் கருதிவிடலாகாது. இயல் பூக்க நிலையில் தன்னுண்மை அறிவு (self conciousness) தொழிற் படும் போதுதான் அறவழியிலான தீர்ப்புகள் உண்டாகும்; பின்னர் அவைகளே அவனை அறவழியிலான செயல்களில் ஈடு படுத்திவிடும். இவைகளையே இயல்பூக்க நிலையில் எழுந்த அற வளர்ச்சியின் முதற்படியில் அமைந்த அறவழி உணர்வும், செயல்களும் எனலாம்.

அற இயல் உணர்வு இன்று மிகவும் வளர்ச்சி அடைந்த நிலை யில் இருக்கிறது. இயல்பூக்கம் என்ற முதற்படியில் அமைந்த

அற இயல் உணர்வு சார்ந்த செயல் எப்படி இருக்கும் என்பதை ஓரளவு நம் அற இயல் உணர்வின் அடிப்படையில் ஆய்ந்து கூறி விடலாம். ஆனால், அற இயல் உணர்வு வளர்ச்சி பெறாத ஒரு காலத்தில், இயல்பூக்கம் என்ற முதற்படியில் அமைந்த அற இயல் உணர்வு எப்படி இருந்திருக்கும் என்பதைக் கற்பனை மூலம்தான் ஓரளவு விளக்கிக் காட்ட இயலும். மேலும், அன்றுள்ள நிலையை விளக்கிக் காட்டக் கூடிய எடுத்துகாட்டுக்கள் கூட இன்று கிடைப்பது அரிது. ஆயினும், இயல்பூக்க நிலையில் எழும் அறச் செயல்கள் மிகப் பழங்காலத்தில் எவ்வாறு அமைந்திருந்தன என்பதை இரண்டு வழிகளில் நாம் அனுமானித்து உணரலாம்.

(1) விலங்குகள் இயல்பூக்க நிலையில் செயலாற்றுபவை. அவைகளுக்கு அறிவு உண்டு என்றாலும் தன்னுண்மை அறிவு எனப்பெறும் அற இயல் உணர்வு அவைகளுக்கு இருந்தது என்று கொள்ள முடியாது. விலங்குகள் அறிவோடு இணைந்து செயலாற்றும்போது அவைகள் 'இது அறம்' என்று எண்ணி, முடிவு செய்து, செயல் மேற்கொள்ளாமலேயே, இயல்பாகவே அற உணர்வோடு கூடிய செயல்களை மேற்கொண்டு செயற் படுத்தியிருக்குமேயானால் அச்செயல்களை இயல்பூக்க அற வுணர்வுச் செயல்கள் என்று குறிப்பிடலாம். இங்கு சில எடுத்துக் காட்டுகளைக் காணலாம்.

விலங்குகள் தனித்து வாழும் இயல்பின. ஆனால் சிலவகை விலங்குகள் மந்தையாகக் கூடி வாழும் இயல்புடையவை களாகக் காணப்பெறுகின்றன. அவைகள் மந்தையாகக் கூடி வாழ்வதுதான் அறச் செயல் என்று கருதி வாழவில்லை. தனித்து வாழ்வது என்றைக்கும் குறைபாடுடைய வாழ்வே; ஆகையால் நாம் சேர்ந்தே வாழவேண்டும் என்று ஆய்ந்து, இப்படி நாம் செய்தேயாக வேண்டும், என்ற அற உணர்வுடன் அவை மந்தையாகச் சேர்ந்துவாழ முற்பட்டன என்றுகொள்ளமுடியாது. சேர்ந்து வாழ்வது நல்லது என நம்மால் கணிக்கப் பெறுவதற்கு உரிய காரணம் நம்மிடம் அமைந்த அற இயல் உணர்வே. ஆனால் விலங்கினிடம் அந்த அற உணர்வு இல்லையேயாயினும், இயல் பூக்க நிலையிலேயே அவைகளிடம் அத்தகைய அறச் செயல் அமைந்து விட்டது என்று கொள்ளலாம்.

வேறோர் எடுத்துக்காட்டினையும் இங்கே காணலாம். தாய்க்கோழியானது தன்னுடைய குஞ்சுகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வுடன் செயலாற்றுகிறது. குஞ்சுகளைக் கவர வந்த பருந்துடன் சண்டையிடுகிறது. தன்னையே

அழித்துக் கொள்ளும் நிலை ஏற்பட்டாலும், அந்நிலையை ஏற்றுக் கொள்ளுவதற்குத் தாய்க்கோழி என்றும் தயக்கம் காட்டிய தில்லை. தாய்க்கோழியின் இச்செயலை, இன்றைய அற இயல் உணர்வின் அடிப்படையில், தாய்க்கோழியானது தன் குஞ்சுகளை காப்பாற்றுவதற்காகச் செய்த தியாகம் எனப் பெறும் அறச் செயல் என விளக்கம் கூறலாம். ஆயினும், அக்கோழியானது இயல்பூக்க நிலையில் எழும் உணர்ச்சியின் அடிப்படையில்தான் அச்செயலைச் செய்ததாகக் கொள்ள வேண்டும்.

(2) இனி, இயல்பூக்க நிலையில் அறவுணர்வுச் செயல் மிக முற்பட்ட காலத்தில் எவ்வாறு செயற்படுத்தப் பெற்றிருக்கும் என்பதை வேறொரு வழியாலும் சிந்தித்து உணரலாம்.

பழங்காலத்தே வரலாற்றுப் பின்னணியுடன் நோக்கினால் பழங்குடி மக்கள், காட்டுமிராண்டிகள் என்ற இரண்டு வகை யான மக்கட் கூட்டம் இருந்தமை தெரியவரும். இவ்விரு வகையினரும் பழங்குடி மக்களே. பழங்குடி மக்களுக்கும் காட்டு மிராண்டிகளுக்கும் உள்ள வேறுபாடு யாதாக இருக்க முடியும்! காட்டுமிராண்டிகள் எனப் பெறுபவர்கள் இயல்பூக்க நிலையில் எழும் உணர்ச்சிச் செயல்களை அப்படியே செய்யும் தன்மை யுடையவர்களாக இருந்திருக்க வேண்டும். ஆனால் பழங்குடி மக்களோ இயல்பூக்க நிலையில் எழும் உணர்ச்சிச் செயல்களைச் செயலாற்ற முற்படும்போது, ஏதோ ஒருவகைக் கட்டுப்பாட்டு வகையில் செய்திருக்க வேண்டும். பழங்குடி மக்களுங்கூட இதுதான் நல்லது என்றோ இதுதான் அற இயல் உணர்வு சார்ந்த அறச் செயல் என்றோ உணர்ந்து செய்திருப்பார்கள் என்று கொள்ள முடியாது. இயல்பூக்க நிலையில் எழும் உணர்ச்சிச் செயல்களைக் காட்டுமிராண்டிகளைப் போல் செய்யாமல், அதே சமயத்தில் நல்லது என்றோ, அறம் என்றோ தெரிந்தும் செய்யாமல், ஏதோ ஒரு வகையில், தம் உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்திச் செயலாற்றியிருக்க வேண்டும். இயல்பூக்க நிலையில் எழுகின்ற உணர்ச்சியினால் விளையும் செயல்களை அப்படியே செய்யாமல், அவ்வுணர்ச்சிகளைச் சற்றே தடுத்து நிறுத்தி, பின்னர் ஏதோ ஒரு வழியில், ஒருவகைக் கட்டுப்பாட்டுடன் செய லாற்ற முற்பட்டிருக்க வேண்டும். அவ்வகையில் காட்டுமிராண்டி களின் செயலைவிட, பழங்குடி மக்களின் செயலானது இயல்பூக்க நிலையில் எழுந்த அறச் செயல் என நாம் கொள்ளலாம்.

(3) (இ) மரபொழுக்க நிலையில் எழும் அறச்செயல்

(Customary Morality)

அற இயல் உணர்வின் வளர்ச்சிப் படிநிலையில் இரண்டாம் நிலையில் இருப்பது மரபொழுக்க நிலையில் எழும் அறச் செயல். ஒருவன் தான் வாழும் சமுதாயம் ஏற்றுள்ள ஒழுக்க நெறிகள் அல்லது வழக்கங்களையே நன்னடத்தைகள் என்று கருதி, அவைகளையே செய்கிறான். யான் வாழும் சமுதாயம் எந்த ஒரு செயலை அனுமதிக்கிறதோ அது அறம் என்றும் எந்த ஒரு செயலை அனுமதிக்கவில்லையோ அது மறம் அல்லது தீயது என்றும் கருதி ஒழுகுதல் மரபொழுக்க நிலை அறச் செயல் ஆகும். ஒருவன் தன் உள்ளத்தே எழும் அற இயல் உணர்வின் அடிப்படையில் ஒரு செயலைச் செய்ய முற்படாமல், மரபொழுக்க நிலையில் நின்று, வழிவழியாக எதைச் செய்யக் கடமைப்பட்டுள்ளோமோ அதையே செய்தல், முன்னோர்கள் எவ்வகையில் வாழ்ந்தார்களோ அதே வகையில் பின்னவர் களாகிய நாமும் வாழ்தல் என்ற அமைதியுடன் அறச் செயல் களை மேற்கொண்டு வாழ்தல் என்பதே மரபுநிலை ஒழுக்கம். இதுவே மரபொழுக்க நிலையில் காணப்பெறும் அற இயல் உணர்வுச் செயல்கள்.

மரபொழுக்க நிலையில் அமையும் அறச் செயல்களில் ஒரு முக்கிய வேறுபாட்டினை நாம் தெளிவாக அமைத்துக் கொள்ள வேண்டும். மரபு என்ற சொல்லுக்கு ஏற்ப, சில அறச் செயல்கள் மிக நீண்ட காலமாகப் பின்பற்றப்பெற்று, நடைமுறைச் செயற் பாட்டில் இடம் பெற்றிருக்கும். இந்த ஓர் அறச் செயலை முதன் முதலில் தொடங்கியது யார்? எப்போது தொடங்கப் பெற்றது? இந்த அறச் செயலின் அடிப்படைக் குறிக்கோள் என்ன? என்பன போன்ற வினாக்களுக்கு விடை காண முடியாத வகையில் வழக்கங்களாகச் சில அறச் செயல்கள் நம்மால் மேற்கொள்ளப் பெற்று வரும். அவைகள் தொடங்கப்பெற்ற காலத்தில் அறஇயல் அறிவு கொண்டு 'இது நல்லது' எனத் தேர்ந்து மேற்கொள்ளப் பெற்றிருக்கலாம். ஆனால் இன்று அது வெறும் வழக்கச் செய லாக அமைந்திருக்கும். அது அற இயல் அறிவுடன் இணைந்த செயலா, இணையாத செயலா என்றுகூட அறிய முடியாத வகை யில் நம்மால் வழக்கமாகச் செய்யப் பெற்று வரும் இச்செயலே மரபொழுக்க நிலை அறச் செயல் என்று சொல்லப் பெறும்.

இதற்கு வேறாக, சமூகமாக நாம் சேர்ந்து வாழ்வதால் சமூகம் தனிமனிதன் மேல் சுமத்தியிருக்கும் அற இயல் உணர்வுச் செயல்கள் சமூக ஒழுக்க அறநிலைச் செயல் அல்லது மக்கள் தொகை ஒழுக்க அறநிலைச் செயல் (Group Morality or Social Morality) என்று பேசப்பெறும். தனிமனிதன் எந்த ஒரு கூட்டத்திடம் அல்லது சமூகத்திடம் தன்னை இணைத்துக் கொண்டிருக்கிறானோ, அந்த ஒரு கூட்டத்திடமிருந்து அல்லது சமூகத்திடமிருந்து பிறப்பிக்கப்பெற்ற ஆணையால் அத் தனிமனிதன் மேற்கொண்டு ஒழுகவேண்டிய அறச் செயல்கள் ஆகும்; மரபொழுக்க அறச் செயலும் சமூக இணைப்பால் விளையும் அறச்செயலும் தம்முள் வேறுபாடானவைகள். முன்னது தலைமுறையாக வருவது என்ற ஒன்றால் மட்டுமே அறியப் பெறுவது; பின்னது நம்முடைய சமூகம் 'இது நல்லது' என்று தேர்ந்தெடுத்து நமக்கு அளித்த செயல் என்ற அளவோடு அதனுடைய குறிக்கோள், விளையும் நன்மை முதலியனவும் நமக்குத் தெரியக்கூடிய அளவில் அமைந்திருக்கும். எவ்வாறாயினும் இந்த இரண்டும் தனிமனிதன் தன்னுடைய தன்னுண்மை அறிவால் ஆராய்ந்து மேற்கொள்ளப் பெறுபவை அல்ல. பிற ஒன்றால் அவன் மேற்கொண்டேயாக வேண்டும் என்ற நிலையில் தனிமனிதனுக்கு வழங்கப் பெற்றவைகளே.

மரபொழுக்க நிலை அல்லது சமூக நிலை அறச் செயல்களுக்கு மூலம் எது?

இயல்பூக்கங்கள் இரண்டு வகை; தனிமை இயல்பூக்கம் (Individual instinct); பொதுமை இயல்பூக்கம் (Herd instinct). பொதுமை இயல்பூக்கமே பொதுமை வாழ்வை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப் பெறும் அறச் செயல்களுக்குக் காரணம். இவைகளைப் 'பொதுவாக அமைந்த அல்லது கூடிவாழுந் தன்மையிலமைந்த உடன்பிறந்த ஊக்கங்கள்' (Gregarious instinct and innate tendency) என்றும், 'வளர்ச்சியடைந்த இயல்பூக்கங்கள்' (Developed instincts) என்றும் விளக்கம் செய்வர்.

தனித்த இயல்பூக்கம், பொதுமை இயல்பூக்கம் என்பவைகளை எவ்வாறு பிரித்தறிவது?

ஆண் பெண் இணைந்து வாழ்வதை ஒரு தனிமனிதன் விரும்புகிறான். அவ்வாறே கூட்டமாக இணைந்து வாழ்வதையும் விரும்புகிறான். முன்னது தனித்த இயல்பூக்கத்தின் விளைவு.

பின்னது பொதுமை இயல்பூக்கத்தின் விளைவு. ஆண் பெண் இன இயல்பூக்கம் அவ்விருவரையும் இணையுமாறு தூண்டுகிறது. தனித்த இயல்பூக்கம் தனிமனிதனிடத்திலேயே இருக்கிறது. தனி மனிதனிடத்திலிருந்தே தனிமனிதனைத் தூண்டுகிறது.

பொதுமை இயல்பூக்கம் தனிமனிதனிடத்தில் அமைந்திருப்ப தில்லை. அது சமுதாயத்திடம் அமைந்திருக்கிறது என்று கருதுவர். சமுதாயத்திடம் இருப்பதாகக் கருதப் பெறும் பொதுமை இயல்பூக்கமே சமுதாயமாக இணைந்து வாழ வேண்டும் என்று தூண்டுகிறது. இது ஒருவகைப் பொதுமைத் தூண்டுதல் ஆதலின் பொதுமை இயல்பூக்கமே இதனைத் தூண்டு கிறது என்று கருதினார்கள்.

தனிமனிதன் பலருடன் கூட்டாக இணைந்து நிற்க வேண்டும், இணைந்து செயல்பட வேண்டும் என்பதைத் தூண்டுவது பொதுமை இயல்பூக்கம் என்பது உண்மையாக அமையலாம். ஆனால் அது தனிமனிதனை எவ்வாறு பொதுமைக்கு மாற்று கிறது என்பதை நாம் அற இயல் உணர்வு கொண்டு அளந்தறிய வேண்டும்.

(1) பலரும் இணைந்து நின்று செயல்படுவது என்பது இயல் பாக நடைபெறும் செயலாகவே அமைந்துவிடுகிறது. ஒரு குடும்பத்தில் பல உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவரவர் களும் தனித்தனியாகத் தத்தம் பணிகளைச் செய்கிறார்கள். குடும்பத்தில் உள்ள பலரும் இணைந்து ஒரே வேலையில் ஈடுபட வேண்டிய அவசியம் நேர்ந்துவிடுகிறது. அது ஓர் இன்றியமையாத தேவை. ஒரு குடும்பத்தில் உள்ள ஒருவனே அக்குடும்பம் தங்கு வதற்குரிய ஒரு வீட்டைக் கட்டிவிட முடியாது. அனைவரும் கூட்டாகச் சேர்ந்து ஒரு வீட்டினைக் கட்டிவிடலாம். ஒரு பெரிய காரியத்தை எளிமையில் முடிக்கலாம் என்றும் பலரும் இணைந்து ஒரு செயலைச் செய்யும்போது முயற்சிக் குறைவும் பயனில் நிறைவும் பெறுவதற்கு வாய்ப்பு அமைகிறது என்பதை ஒவ்வொரு தனிமனிதனும் உணரும் நிலை ஏற்படுகிறது. இது ஒரு வகையில் கொடுத்துக் கொள்ளும் முறையை (The principle of give and take) அடிப்படையாகக் கொண்டது.

இதனை வேறு ஒரு அடிப்படையிலும் சிந்திக்கலாம். பல குடும்பங்கள் ஒன்றாக இணைந்து, தத்தம் குடும்பங்களில் தயாரிக்கப்பெற்ற உணவுப் பொருள்களைக் கொண்டுவந்து ஒரு பொது இடத்தில் வைத்து, தனித்தனியே கொண்டு வந்த உணவு

வகைகளைப் பொதுமையாக்கி, பின்னர் அனைவரும் பகிர்ந்து உண்டு மகிழ்கின்றனர். குழந்தைகளும் பலர் இணைந்து பொதுமைச் சோறு சமைத்து உண்ணுவதாக விளையாடு கின்றனர்.

மேலே காட்டப்பெற்ற இருவகை எடுத்துக்காட்டுகளை நோக்கினால் அச்செயல்கள் பொதுமை உணர்வில் எழுந்த ஒரு வகைத் தேவையை நிறைவு செய்யும் செயல்களாகவே அமைந் துள்ளன என்பதைக் காணலாம். எனவே, பொதுமை இயல்பூக்க முங்கூட, தனிமனிதனிடத்திலேயே இருந்து செயல்படுகிறது என்று நினைக்கவும் இடமுண்டு.

(2) குடும்பத்தில் காணப்பெறும் இன்னொரு முறையானது இத்தகைய இணைப்பை வலியுறுத்துவதாக அமைகிறது. ஒரு குடும்பத்தில் உள்ள பல பிள்ளைகளும் இணைந்து நின்று, அவர்கள் பெற்றோர்களிடம், ஒரு கொள்கையை அல்லது ஒரு வேண்டு கோளை விடுக்கும்போது அவர்கள் வெற்றி பெறுகிறார்கள். அதே கொள்கையை அப்பிள்ளைகள் தனித்தனியே நின்று கேட்கும்போது தோல்வி அடைகிறார்கள். எனவே, எல்லாரும் இணைந்து நின்று கோட்டால் வெற்றி பெறலாம் என்றும் ஒரு தவறான காரியத்தை எல்லாரும் இணைந்து நின்று செய்தால் தண்டனை பெறாமல் தவிர்க்கவும் முடியும் என்றும் உணர்ந்து செயல்படும் நிலை இயல்பாகவே தோன்றி, செயல்படுத்தி விடுகிறது.

(3) தனிமனிதர்களில் சிலர் சில செயல்களைத் தம்மளவில் செய்யவேண்டும் எனக் கருதி, விளைவுகளுக்காக அஞ்சாமல், துணிவுடன் விரைந்து செய்து முடித்துவிடுவார்கள். அச்செயல்கள் பயனுள்ளவைகளா, பயனற்றவைகளா என்று கூடக் கருதாமல் செயற்படுத்திவிடுவார்கள். அதனைக் கண்ட மற்றவர்களும் அது செய்யக்கூடியது என முதலில் எண்ணுவார்கள். நாளடைவில் செய்ய முற்படுவார்கள். காலப்போக்கில் தனிமனிதன் செயலே பொதுமைச் செயலாக மாறி, பின்னர் சமூகத்தால் தனி மனிதனிடம் ஆணையிட்டுச் செய்விக்கக்கூடிய சமூக ஒழுக்கச் செயலாக மாறிவிடும்.

மேலே குறிப்பிடப் பெற்ற மூவகை அமைப்புகளிலும் தனி மனிதன் பலராக இணையவும், இணைந்து நின்று சில அற இயற் செயல்களைச் செய்யவும் தன்னியல்பிலேயே தூண்டப் பெறு கிறான் என்று கொள்ளலாம். அவ்வாறு கொள்வோமானால்

பொதுமை இயல்பூக்கம் என்பது தனிமனிதனுக்கு வெளியே நின்று, சமூக இணைப்பில் நின்று, அங்கிருந்தே தனிமனிதனைத் தூண்டி, பொதுமை அறச் செயல்களில் அவனை ஈடுபடுத்துகிறது என்று கொள்வதைவிட, அப் பொதுமை இயல்பூக்கமும் தனி மனிதனிடத்திலேயே இயல்பாக, உள்ளார்ந்த நிலையில் அமைந் திருக்கிறது என்று கொள்ளவும் இடமேற்படுகிறது.

மரபொழுக்க நிலையில் எழும் அற இயல் உணர்வானது குழு அல்லது சமுதாய தொகுதியையே மிகவும் இன்றியமையாத தாகக் கருதுகிறது. தனிமனிதனின் தன்னுண்மை அறிவினால் எழும் சிந்தனைக்கு மிகக் குறைந்த அளவிலான மதிப்பீட்டையே வழங்குகிறது. பழைய நிலையில் இருக்கும் சமுதாயங்கள் நாகரிகச் சமுதாயங்களைவிட, மரபொழுக்கத்துக்கு மிகச் சிறந்த இன்றியமையா தன்மையை வழங்குகின்றன. இவ்வகையில் மிக வளர்ச்சியடைந்த சமுதாயங்களுங் கூட, பெரும்பாலும் மர பொழுக்க நிலையிலேயேதான் இருந்து வருகின்றன என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

சமுதாயம் என்ற ஒரு மக்கள் தொகுதி எந்த ஓர் அடிப்படை யில் இணைகிறதோ, அந்த அடிப்படையைச் சார்ந்தே சமூக நிலை அல்லது மரபொழுக்கநிலை அறச் செயல்கள் தனிமனிதனுக்கு வழங்கப் பெறும். வரலாற்று அடிப்படையில் நோக்கினால் அரசியல், பொருளாதாரம், அறம், சமயம் ஆகிய அடிப்படை களில் ஒன்றோ இரண்டோ அடிப்படைகளாக நிற்க, சமுதாயம் என்ற மக்கள் தொகுதி இணைந்திருக்கிறது என்ற முடிவுக்கு வரலாம்.

அரசியல்

தனிமனிதர்கள் பலர் இணைந்து தம்மை ஒரு குழுவாக அல்லது சமூகமாக அமைத்துக் கொள்வதற்கு முதன்மைக் காரண மாக நிற்பது, பார்த்துப் பின்பற்றும் பண்பே (imitation). பல தனிமனிதர்கள் ஒரு குழுவாக இணைந்து நிற்பதைக் காணும் மற்ற வர்களும் அவர்களைப் போலவே தாங்களும் இணைந்து ஒரு சமூகமாக அமைந்து விடுகிறார்கள். மேலும், அந்த ஒரு குழு வானது வந்து நம்மைத் தாக்கினால் தனிமனிதர்களாக இருக்கும் நாம் எப்படி அந்தக் குழுவை எதிர்க்க முடியும் என்ற அச்சங் காரணமாகவும், நாமனைவரும் ஒரு குழுவாக அமைந்து நின்றால் தான் நமக்குப் பாதுகாப்பு என்ற தற்காப்புக் காரணமாகவும் சமூக அமைப்பு உருவாகிறது.

பிற தாக்குதல்களிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ளவும், தங்கள் குழுவைச் சார்ந்த பலரும் அமைதியுடன் வாழவும் இத்தகைய ஒரு காவல் அமைப்புத் தேவை என்பதைப் பொதுமை இயல்பூக்கம் அறிவுறுத்த முற்படுகிறது. அவ்வமைப்பினை அரசியல் அமைப்பில் இணைந்த சமுதாயம் எனக் கொள்ளலாம்.

பொருளாதாரம்

பொருளாதார அடிப்படையில் தனிமனிதன் பலருடன் இணைந்து ஒரு சமுதாயம் உண்டாவதற்குரிய வாய்ப்பினை அளிக்கிறான். தனிமனிதன் தனக்குத் தேவையான எல்லாவற்றையும் தானே செய்து, தன்னிறைவை உண்டாக்கிக் கொள்ள இயலாது. தேவைகளின் எண்ணிக்கை வளர்ந்து கொண்டேயிருக்கும் நிலையில் பலரும் தனிநிலையிலும்இணைந்த நிலையிலும் பல தேவைகளை நிறைவு செய்யக்கூடிய பொருள்களை உண்டாக்கலாம். உற்பத்தி செய்த பொருள்களைப் பொது உடைமையாக ஆக்கி, அனைவரும் பங்கிட்டுக் கொள்ளும் நிலை அமையுமேயானால் அத்தகைய அமைப்பானது நமக்கு நற்பயன் விளைவிப்பதாகும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் சமூக இணைப்பு உருவாகலாம். அவ்வாறு அமையும் சமுதாய இணைப்பைப் பொருள்நிலை அமைப்புச் சமுதாயம் என விளக்குவர்.

அற இயல்

அறநெறிச் சான்றோர்களின் அற இயல் அறிவானது சில வகை வாழ்வியற் கோட்பாடுகளை விளக்கி' அத்தகைய குறிக்கோட் கொள்கைகளுக்கு ஏற்ற அற இயற் செயல்களை வகுத்துக் காட்டியிருக்கும். அக்கொள்கைகளைப் பரப்ப வேண்டும் என்றும் அக் கொள்கைக்குரிய அறநெறிகளைச் செயற்படுத்த வேண்டும் என்றும் விரும்பி, சில தனிமனிதர்கள் ஒரு குழுவாக இணைவார்கள். பலரும் இணையலாம். அத்தகைய அமைப்பில் இணைந்த குழு அல்லது சமூகம் அற இயல் அடிப்படையில் இணைந்த சமுதாயம் என்று விளக்கப்பெறும்.

சமய இயல்

சிறந்த சான்றோர்களாக அல்லது அருளாளர்களாக வாழ்ந்து மறைந்த முன்னோர்களை மூலமாகக் கொண்டு, அவர்களிடத்தே காணப் பெற்ற ஆன்மீக ஒற்றுமை நிலையை வளர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் பல தனிமனிதர்கள் இணைந்தால்

அவ்வாறு இணைந்த சமூகம் சமய இயல் அடிப்படையில் 'இணைந்த சமுதாயம்' என்ற பெயரைப் பெறும்.

மேலே குறிப்பிடப் பெற்றவைகள் சமுதாய அமைப்புக்குரிய அடிப்படைக் காரணங்களாக அமைவன.

தனிமனிதர்கள் இவ்வாறு ஒரு குழுவாக அமைந்து இணைந்து நிற்கும் நிலை உருவான பிறகு அவர்களிடையே சமூக நிலை ஒழுக்கங்கள் அல்லது கூட்டு நிலை அறச் செயல்கள் எவ்வாறு வலியுறுத்தப் பெறுகின்றன அல்லது தனிமனிதர்கள் சமூக நிலை ஒழுக்கங்களை எவ்வாறு கடைப்பிடிக்க முற்படுகிறார்கள் என்பதையும் அறிய வேண்டும்.

(1) பிறருக்கு வருத்தம் நேரக்கூடாது, பிறரை மதித்துநடக்க வேண்டும் என்ற அடிப்படையில் சில வகையான சமூக நிலை ஒழுக்கங்கள் பின்பற்றப்பெறும். பிறர் செய்வதைப்போல நாமும் செய்யவேண்டும் என்ற வழக்கம் இயல்பாகவே உண்டாகிவிடுகிறது. அற இயல் சார்ந்த அறச் செயல்களைப் பிறருக்குச் சொல்ல முற்படும்போது, சமுதாயப் பின்னணியுடனே எடுத்து விளக்கப் பெறும். எடுத்துக்காட்டாக, 'நான்கு பேர் சென்ற வழியில் செல்', 'நாலுபேர் மதிக்க வாழ்',நாலு பேர்களிடம் நல்ல பெயர் வாங்குமாறு நடந்துகொள்' என்று கூறப் பெறும். 'நாலு பேர்' என்பது பலர் இணைந்த சமூகப் பின்னணியை உளங்கொண்டது,

(2) தெய்வப் பின்னணி: சமூகம் எந்த ஒன்றைச் செய்யக் கூடாது என்று தடை விதித்திருக்கிறதோ அச் செயலைச் செய்யக்கூடாது. தடையை மீறிச் செய்தால் சமுகத்தில் உள்ள பெரியவர்கள் தண்டனை கொடுப்பார்கள் என்று கூறாமல், கடவுள் தண்டனை அளிப்பார் என்றும் இறந்துபோன நம் முன்னோர்கள் மறைந்திருந்து பார்த்துக் கொண்டேயிருப்பார்கள், அவர்களே இத்தண்டனையை வழங்குவார்கள் என்றும் இவ்வாறு தெய்வப் பின்னணியுடன் கூறும்போது தனிமனிதனுக்கு ஒருவகையில் பயம் உண்டாகிவிடுகிறது. அதுமட்டுமல்லாமல், இச்சமூகம் தெய்வத்தால் அனுமதிக்கப் பெற்ற அல்லது தெய்வத்துடன் தொடர்பு கொண்ட பெருமையுடையது என்ற கருத்தை மக்கள் மனத்தில் பதித்துவிடுகிற முறை இது.

(3) சமயச் சடங்குகள்: தனிமனிதனுடைய வாழ்வில் நடைபெறும் சில முக்கிய நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு

சமயச் சடங்குகள் நிகழ்த்தப்பெறும். திருமணம், குழந்தைப் பேறு, புதுமனை புகுதல், சாவு போன்ற தனிமனித வாழ்வியல் நிகழ்ச்சிகளின்போது சமயசபந்தமான சிலசடங்குகளை நடத்த வேண்டும் என்று சமுதாயம் வலியுறுத்தும். சமயச் சடங்குகளில் இணைக்கப் பெற்றுள்ள சில கூறுகள் சமுதாயம் தனிமனிதனிடம் கண்ணும் கருத்துமாய் இருக்கிறது என்பதைத் தெரிவிக்கும் போக்கில் அமைக்கப் பெற்றிருக்கும். சமுதாயத்தின் அதிகாரப் பிடிப்பு இச்செயல்கள் மூலம் நிறுவப்பெறும். தனிமனிதனுக்கும் சமுதாயத்திடம் ஒருவகைத் தனிமதிப்பு உண்டாவதற்கு இத் தகைய நிகழ்ச்சிகள் காரணங்களாக அமைகின்றன. சமுதாய அமைப்பானது தனிமனிதனிடம் வலியுறுத்தும் கூட்டமைப்பு ஒழுக்கம், மரபொழுக்கம் போன்றவைகள் ஏதோ ஒருவகைத் தனித்த உண்மையை அல்லது தெய்விக இணைப்பைத் தம்மிடம் கொண்டிருப்பவைகள் என்ற கருத்தை வலியுறுத்தியும் விளக்கியும் கூறும் வகையில் இத்தகைய சமயச் சடங்குகளின் நிகழ்ச்சி அமைப்புகள் இடம்பெறும். சமுதாயம் என்ற ஒரு கூட்டமைப்பு நிலை இல்லையானால் தனிமனிதன் இத்தகைய தெய்விக இணைப்பைப் பெற வாய்ப்பே இல்லை என உணர்ந்து சமுதாயத்தை மதித்துப் போற்றும் நிலையை இத்தகைய சடங்கு கள் உண்டாக்கிவிடும்.

வன்முறை

சமுதாய வரையறைகளை மீறும் தனிமனிதர்களை வன்முறைகளைக் கையாளுவதன் மூலம் கட்டுப்படுத்தி, அவர்கள் சமுதாய ஒழுக்கங்களை—கூட்டமைப்பு நடைமுறை விதிகளை மேற்கொண்டு நடக்குமாறு கட்டாயப்படுத்தப் பெறும். எல்லா நிலைகளிலும் வன்முறை இடம் பெறும் என்று சொல்ல முடியாது. ஆயினும், வன்முறை என்பது சமுதாய அமைப்பில் பலவேறு வடி வங்களில் நின்று தனிமனிதனைக் கட்டுப்படுத்திவிடும் வலிமை வாய்ந்த தலைவன், சமுதாயத்தில் உள்ள வயது முதிர்ந்தவர்கள் மரபொழுக்கத்தைம்—கூட்டமைப்பு ஒழுக்க விதிகளைக் கடைப் பிடித்தேயாக வேண்டும் என்று சொல்லும்போது தனிமனிதன் தானாகவே தலைகுனிந்து வரவேற்றுச் செயற்படுத்த வேண்டியவ னாகிறான்.

சமுதாய ஆதிக்கம்—மரபொழுக்கத்தின் நன்மை

மேலே கூறப்பெற்ற நான்கு வழிகளில் அல்லது அவைகளை ஒத்த வேறு வழிகளில் சமுதாயம் கூட்டமைப்பு ஒழுக்கத்தை—மரபொழுக்கத்தைத் தனிமனிதனிடம் நிலைநாட்டி விடுகிறது

என்பது உண்மையே; ஆயினும், சமுதாய ஆளுமை ஆதிக்கத் தன்மையானது இத்தகைய கூட்டமைப்புச் செயல்முறைகளை வலியுறுத்துவதன்மூலம் தனிமனிதர்களுக்குப் பலவகையான நன்மைகளை வழங்குகிறது என்ற உண்மையை மறுக்க முடியாது.

சமுதாய நன்மைக்குப் பாடுபடுதல், மன இரக்கம், கூட்டுறவு முறையில் இணைந்து பணியாற்றும் மனநிலை, 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற கொள்கையின் ஏற்பு முதலிய பலவகை அற இயல் உணர்வுடன் இணைந்த அறங்கள் உருவாகி வளரு வதற்கு, இத்தகைய சமுதாய மரபொழுக்க நிலை அல்லது பல மனிதர்கள் கூடிநின்ற தொகுதி அமைப்பின் மூலம் அமையும் நடைமுறைப் பயிற்சி நிலை காரணமாக அமைகிறது. தன்னலம், தன்னைத் தானே பெருமையாகப் பேசிக் கொள்ளும் மனப் போக்கு, பிறர் எவரையும் மதிக்காமல் தன்னிச்சைப்படி நடக்கும் தனிப்போக்கு முதலிய வேண்டாப் பண்புகள் குறைவதற்கு மரபொழுக்க நிலை துணைநிற்கிறது. தன்னுடைய செயல், திறமை, செல்வம் என்பவைகள் தனக்கே என்றிருந்தவனை, சமுதாயத்தின் அச்சாணி இவனே என்று எல்லா மனிதர்களும் போற்றிப் பாராட்டும் வகையில் பொது நன்மையையே குறிக் கோளாகக்கொண்டு பாடுபடும் நிலைக்கு மாற்றிவிடுகிறது என்றால் சமுதாயம் எத்தகைய ஒரு நன்மையை அவனுக்குச் செய்திருக்கிறது என்பதை உளங்கொண்டு கணிக்க வேண்டும்.

எந்த ஒரு செயலையும் ஒழுங்கான முறையில் கடைப்பிடிக்க வேண்டும் என்ற ஒழுங்குமுறைப் பயிற்சியைச் சமுதாயம் தனி மனிதனுக்கு இத்தகைய மரபொழுக்கங்களின் மூலமாகவே அளிக்கிறது.

இக்காலத்துத் 'தனிமனிதன் சமுதாயத்தில் நின்ற நிலை' (social status) என்ற ஒன்று தனிமனிதர்களால் மிகவும் வரவேற்கப் படுவது. அதனால் வரும் நன்மைகள் பல.

மரபொழுக்கநிலை அல்லது கூட்டமைப்பு ஒழுக்க நிலையில் அமைந்துள்ள குறைகள்

(1) சமுதாயம் வலியுறுத்தும் சிலவகை நெறிமுறைகள் தனி மனிதனுடைய அறிவாராய்ச்சி முறைக்கோ, அற இயல் ஆய்வு முறைக்கோ பொருந்துவனவாக அமையவில்லை. அவைகள் உண்டாக்கப்பெற்றதன் அடிப்படைக் கொள்கைகள் என்னவாக

இருக்கும் என்ற வினாவுக்கு விடை காணமுடியாத நிலையே நாகரிகமடைந்த சமுதாயத்திலும் காணப்பெறுகிறது.

(2) மரபொழுக்கநிலை நெறிமுறைகள் அல்லது கூட்டமைப்பு முறை ஒழுக்கநெறிகள் பெரும்பாலும் அச்சங்காரணமாகவோ தலைமையில் உள்ளவர்கள் சீற்றம் கொள்வார்கள் என்ற காரணமாகவோதான் மேற்கொள்ளப் பெறுகின்றன.

(3) சமூக அமைப்பு நெறிமுறைகள் தனிமனிதர்களிடத்தில் இயற்கையில் இயைந்த தேவைகளையெல்லாம் நிறைவு செய்யக் கூடியனவாக இல்லை. மேலும் நீண்ட நாள்கள் நிலைத்து நிற்கும் தனித்தன்மை உடையனவாகவும் அமைதல் இல்லை.

(4) சமூக அமைப்பு உருவாகும்போது அறிவு, தகுதி, செல்வம் போன்றவைகளில் பலவேறு நிலைகளில் அமைந்தவர்கள் ஒருங்கிணைய வேண்டிய இன்றியமையாமை உண்டு. ஒருங்கிணையும் போது அந்த ஒருங்கிணைப்புக்கு உரிய தேவை ஒன்றோ பலவோ அமைந்திருக்கலாம். அத்தகைய தேவைகளை அடிப்படையாகக் கொண்டு மரபொழுக்க விதிமுறைகள் அமைக்கப் பெற்றிருக்கலாம். காலமாற்றத்தில் அந்த அடிப்படைத் தேவைகளே ஒரு வகைத் தேவையற்றவைகளாக மாறியிருக்கும். எனவே தேவைகள் இருந்த காலத்தில் வகுக்கப்பெற்ற நெறிமுறைகள் தேவையற்றனவாக அமைந்துவிடுகின்றன.

மரபொழுக்கம் அல்லது கூட்டமைப்பு நெறிமுறை பற்றிய தமிழகச் சிந்தனை

அற இயல் ஆய்வாளர்கள் தனிமை இயல்பூக்க அறச்செயலை முதற்படியாகவும் பொதுமை இயல்பூக்க அறச் செயலை இரண்டாம் படியாகவும் கொள்வர். தனிமை இயல்பூக்க அறச் செயல் எதுவாக இருக்கலாம் என்பதை நாம் கற்பனையில்தான் எண்ணி இவ்வாறு இருந்திருக்கும் என்ற முடிவுக்கு வருகிறோம். தனிமனிதன் தனித்து இருந்தான் என்றும் பின்னர், கூட்டமாக இணைந்தான் என்றும் நாம் அமைத்துக்கொள்வது அளவையியல் அமைதிக்காகத்தான்.

தனிமனிதன் ஒருவன் காட்டில் அல்லது ஒரு பாலைவனத்தில் தனித்து இருந்தானேயானால் அவன் செய்யும் செயல்கள் அற இயல் செயல்கள் என ஏற்றுக் கொள்ளப் பெறா. எனவே, அவன் பிற மனிதர்களுடன் இணைந்து நிற்கும்போதுதான் அவன் செயல்கள் அற இயற் செயல்களாக அமையும் என்பதும் முன்னே

விளக்கப்பெற்றது. ஆண் பெண் என்ற இருவர் இணைவது என்பதே கூட்டமைப்பின் முதற்படிதான். ஆனால் ஆண் பெண் இணைவதைத் தனிமை இயல்பூக்கம் என்றே கொள்ளுவது அற இயற் சான்றோர்களின் கொள்கை.

திருவள்ளுவர் அற இயற் கொள்கைகளைத் தொடங்கும் போது இல்லறத்திலிருந்தே தொடங்குகின்றார். சமுதாயமாக நின்ற நிலையில் — கூட்டமைப்பாக நின்ற நிலையில் அற இயற் செயல்களிலிருந்தே தொடங்குகின்றார்.

குழந்தையாயிருக்குங் காலத்தில் தனிமை இயல்பூக்கம் காரணமாக எழும் செயல்களை அற இயல் அமைப்புச் செயல்களாகக் கொள்ளாமல் மக்கள் பலர் இணைந்து நிற்கும் குடும்ப நிலையிலிருந்து அற இயற் செயல்களைத் தொடங்குகின்றார்.

அற இயற் செயல்கள் கால்கொள்ளும் அறக்கோட்டமாக, முதல் அற இயற் செயல்முறைப் பயிற்சி நிலையமாகக் குடும்பத்தையே எடுத்துக் கொள்கிறார் திருவள்ளுவர்.

மனிதர்கள் கூட்டமைப்பு முறையில் இணைந்து நின்று, கூட்டமைப்பு நிலையில் எழும் அறவியற் செயல்களை அவர் 'ஒழுக்கம்' என்ற பெயரிட்டுக் கூறி, 'ஒழுக்கமுடைமை' என்ற தனி அதிகாரம் அமைத்துள்ளார். பாரம்பரியமாக, மரபு நிலையாக, சமூக அமைப்பியல் நெறியுடையதாகத் தொன்று தொட்டு வரும் அறவியல் சார்ந்த செயல்களை ஒழுக்கம் என்றும், சமூக இணைப்புத் தன்மையைக் குடிமை என்றும், சமூகத்தைக் குடி என்றும் அமைத்துக் கூறுவதாகக் கொள்ள இடந்தருகிறது.

சமூக அமைப்பியல் முறையில் வரும் அற இயற் செயல்களை 'ஒழுக்கம்' எனக் கொண்டால் ஒழுக்கத்தில் தவறினால் அவன் மனிதனாக இருந்தாலும் மனிதப் பிறப்பின் நிலையிலிருந்து நீக்கப் பெற்றவனாய், மனிதப் பிறப்பினின்றும் தாழ்ந்த பிறப்பினனாகிய விலங்குப் பிறப்பினனாகக் கருதப் பெறுவான்.

குடும்பம் என்று எடுத்துக் கொண்டால் அதில் மனிதர்கள் இணைந்திருக்கிறார்கள். மனிதர்களோடு மட்டுமன்றி மாடு, நாய் முதலியவைகளும் சேர்த்து வளர்க்கப் பெறும்போது, அவைகளும் இணைந்திருப்பதாகத்தான் அக்குடும்பம் கருதப்பெறும். இணைந்திருந்தாலும் இணைப்பு நிலை அற இயற் செயல்களைப் பின்பற்றி நடக்காத காரணத்தால் அவைகளை குடும்பத்து

உறுப்பினர்களாக எண்ணப் பெறுவதில்லை. அவ்வாறே, சமூக அமைப்பினை ஒட்டிய அற இயற் செயல்களில் தவறியவனை வீட்டில் வளரும் நாய், மாடு போலவே கருதவேண்டும் அல்லது கருதப் பெறுவான் என்று கூறுகிறார். கூட்டமைப்பு ஒழுக்கம் தவறினால் பிறப்பு முறையே மாறுபட்டு விடும் என்று கூறுகிறார்.

'ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்'

என்பது 'ஒழுக்கமுடைமை' என்ற தலைப்பில் அமைந்த குறள்.

பொருட்பால், பிற்பகுதியில் 'குடியியல்' என்ற தலைப்பில் பதின்மூன்று அதிகாரங்கள் வகுத்துக் கூறுகிறார் திருவள்ளுவர்.

சமூக இயல்—இணைப்பியல் — கூட்டமைப்பியல் அற இயல் நெறிமுறைகள் வலிமை இழந்து, சமுதாய அமைப்பிலிருந்து தனிமனிதன் நீங்கிச் சென்று தனித்து தனிமனித அற இயற் செயல்களை மேற்கொள்ள முடியும் என்று அற நிலைப் படிநிலை வளர்ச்சி முறையில் அற இயல் அறிஞர்கள் அமைத்துக் காட்டுகிறார்கள்.

'குடிமை' எனப்பெறும் கூட்டமைப்புத் தன்மை வகுத்துக் காட்டும் அற இயல் அமைப்பு நெறிகள் பழைமை என்ற பெருமையுடன் அமைபவை என்றும் குடிப்பெருமைக்குக் குறைவு வருமானால் தனிமனிதன் தன் பெருமை அழிந்ததாகக் கொண்டு உயிரிழந்து விடுவான் என்றும் அமைத்துக் காட்டுகின்றார்.

பழம்பெருமை வாய்ந்த சமுதாயம் இன்னொரு சமுதாயத்துக்கு அடிமையாகி விடுவதும் உண்டு. அத்தகைய நிலைமை நேரும் எனத் தோன்றுமேல் அச்சமூக அமைப்பிலுள்ள ஆண் மக்கள் குடிமையை—குடிப்பெருமையை—சமூகப் பெருமையைக் காத்து நிறுத்துதலைக் கடமையாகக் கொள்ளவேண்டும் என்று கூறுகிறார்.

சமுதாயக் கூட்டமைப்பு என்பது உயர்ந்த பல கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது என்று பேசுகிறார். இத் தகைய சமூக இணைப்பமைப்பில் உருவாக்கப்பெற்ற இத் தனி மனிதன் இத்தவற்றைச் செய்யமாட்டான் என்று உறுதியாகக் கூறுவதுதான் சமூகஇணைப்பு அமைப்பு நியதி என்று கூறுகிறார். அத் தனிமனிதன் ஒருவேளை தவறுபட்டு விட்டானானால் அவன்

தவற்றுக்கு அவனை வளர்த்த குடும்பமே பொறுப்புடையது. அத்துடன் மட்டுமன்றி, அவனை உறுப்பினனாகக் கொண்ட சமூகமே அந்தத் தவற்றைத் தன்னுடைய தவறாக ஏற்றுக் கொள்ளும். குடியைச் சார்ந்தவன்—சமூக அமைப்பிணைப்பு நெறியில் வளர்ந்த ஒருவன் பிச்சையெடுப்பானேயானால் அது தனிமனிதனுக்கு இழிவு தருவது என்பதாகக் கருதாமல் சமூகத் துக்கே இழிவு தரும் செயல் என்று திருவள்ளுவர் அமைத்துக் காட்டுகின்றார்.

ஒரு தனிமனிதனை உலகத்தையே அழியாமற் காக்கவல்ல அறவாளனாக உருவாக்குவது சமூகமே என்று அமைத்துக் காட்டுகிறார்.

சமூக அமைப்பில் இணைந்து நின்று, சமுதாய அற இயற் கொள்கைகளை ஏற்று நடக்கும் தனிமனிதர்கள் சமூக அமைப் பியல் நெறிகளுக்கு மாறாக நடக்க முற்படும் சூழ்நிலை அமையு மானால் அதைக் கண்டிக்கும் உரிமை எந்த ஒரு தனிமனிதனுக்கும் உண்டு என்று எடுத்துக் காட்டுகின்றனர்.

சங்க இலக்கியங்களில் காணப்பெறும் சில வரலாற்று நிகழ்ச்சி களை நோக்கும்போது சமூக அமைப்பியல் அற இயல் நெறிகள் எந்த அளவிற் கண்ணுங் கருத்துமாகப் பாதுகாக்கப் பெற்றன என்பதை அறியலாம்.

சமுதாய அமைப்பு நிலையில் அரசன் தலைவனாக இருந்தாலும் அவனும் சமுதாய அமைப்பில், கூட்டமைப்பில் ஓர் உறுப்பினனே. கோப்பெருஞ் சோழன் வரலாற்றுப் புகழ் வாய்ந்தவன். பிசிராந்தையார், கோப்பெருஞ் சோழன் நட்பு உலகிலேயே புகழப்பெறும் பெருமை வாய்ந்தது. அத்தகைய மாண்புகள் பெற்ற கோப்பெருஞ் சோழனுக்கும் அவன் பிள்ளை களுக்கும் மனவேறுபாடு தோன்றிவிட்டது. பிள்ளை களுக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வயது வந்த பிறகும் ஆட்சி யுரிமையைக் கொடுக்கவில்லை. தங்களுக்கு ஆட்சியுரிமை வேண்டும் என்று தந்தையுடனேயே போர் தொடுத்துவிட்டார்கள். அறிஞர் களின் அறிவுரையின்வண்ணம் கோப்பெருஞ் சோழன் இத்தகைய செயலில் ஈடுபட்ட மக்களைப் பெற்றதே தனக்கு அவமானம் என்று கருதினான். தன் குடியின் மானமும் தன்னுடைய மானமும் அழிந்துவிட்டன என்று நாணங்கொண்டு, வடக்கிருந்து உயிர் விட்டான். அவன் மட்டுமேயன்றி, அறிவுரை கூறி மக்களைநெறிப்

படுத்த வேண்டிய சான்றோர்கள் பலர் இச்செயல் தங்களுக்கும் அவமானத்தை உண்டாக்கியது என்று கருதி கோப்பெருஞ் சோழனுடனேயே தாங்களும் வடக்கிருந்து உயிர் துறந்தனர். சோழ நாட்டிலன்றி, பாண்டிய நாட்டிலிருந்து வந்த பிசிராந்தை யாரும் அது தனக்கும் அவமானத்தைத் தருவதே என்று கருதி அவரும் வடக்கிருந்து உயிர்விட்டார். இந்நிகழ்ச்சியானது சமுதாய அமைப்பியல் அற நெறிகளின் உயர்வை நாம் அறுதி யிட்டுணர்வதற்குத் துணைபுரிகிறது.

சமூக அமைப்பியல் அற இயல் நெறிகள் அடிக்கடி மக்கள் மத்தியில் விளக்கம் செய்யப்பெற்று வந்தது என்பதைச் சங்க இலக்கிய வரலாறு நமக்குத் தெரிவிக்கிறது. சிற்றூர் ஒன்று இருந்தால் அங்கே சமூக இணைப்பமைப்பு அற இயல் நெறிகளில் வல்ல சான்றோர்கள் பலர் வாழ்வார்கள் என்றும் சமுதாயக் கூட்டமைப்பு நெறிமுறைகளில் தனிமனிதன் மீறிச் செல்லாத வாறு அவர்கள் கண்காணித்து வந்தார்கள் என்றும் தெரிய வருகிறது.

தனிமனிதன் ஒருவன் சமூக அமைப்பில் பொதுமை விதியி லிருந்து மீறினானேயானால் அவன் வாழ்ந்த எல்லைப் பகுதியி லுள்ள அற இயல் சான்றோரே பொறுப்பு என்பதாகக் கருதப் பெற்றது.பாண்டியன் நெடுஞ்செழியன் நீதி தவறியபோது,இங்கே சான்றோர்கள் இல்லையா என்ற வினாவையே கண்ணகி கேட் கிறாள். பிசிராந்தையாரும், சான்றோர் பலர் யான் வாழும் ஊரே என்று கூறி, அறநெறியிலிருந்து நாங்கள் தவறிப் போகாத வாறு, அவர்கள் காத்து வருகிறார்கள் என்று குறிப்பிட்டார்.

எனவே, சமுதாயக் கூட்டமைப்பு நிலை உயர்ந்த அமைப்பினை உடையது என்றும், உயர்ந்த குறிக்கோள்களை மையமாகக் கொண்டது என்றும், அத்தகைய குறிக்கோள்கள் அடிக்கடி பரிசீலிக்கப் பெற்றும், விளக்கமுறப் பொதுமக்களுக்கு எடுத்துக் கூறப் பெற்றும் தவறு நேருமாயின் சமுதாய அமைப்பு முழுமைக்கும் நேர்ந்த அவமானம் என்று கருதப் பெற்று வந்தது என்றும் உணரலாம்.

குடும்பக் கூட்டமைப்பு அற இயல் நெறிகளுக்கு அடிப்படை யாக இருப்பது 'அன்பு' என்றும் சமுதாய அமைப்பியல் கூட்டமைப்பு அற இயல் நெறிகளுக்கு அன்பே அருளாக வளர்ச்சி பெற்று அடிப்படையாக அமைகிறது என்றும்,

சமூக அமைப்பில் தனிமனிதர்கள் இணைந்து நின்று வாழ்வதற்குரிய மரபொழுக்க நிலை அற இயல் நெறிகள் உயிரோடு உயிரை இணைத்து வாழ வைக்கும் குறிக்கோளைக் கொண்டவை என்று கூறி, 'அருள்' என்பது அத்தகைய இணைப்பை வளர்க்கும் இயல்புணர்ச்சி என்றும் அமைத்துக் காட்டினார்.

தனிமனிதன் தன்னைத் தன் குடும்ப இணைப்புடன் மட்டும் இணைத்து வாழ்வதை உடலும் உயிரும் இணைந்த இணைப்பு என்றும் அதை வளர்ப்பது அன்பு என்றும், காட்டிய திருவள்ளுவர், சமூக அமைப்பியல் வெற்று நிலையில் மனிதர்கள் இணையும் மந்தைக் கூட்ட நிலை அன்று; உயர்ந்த கொள்கையோடு இணைந்த இணைப்பு—உயிரோடு உயிர் இணையும் இணைப்பு என்று காட்டினார்.

சமூக இணைப்பியல் நிலையில் அமையும் அற இயல் நெறிகளைக் கடைப்பிடிக்கும் தனிமனிதன் அவைகளைத் தன்னுடைய அறிவாராய்ச்சியால் ஆராய்ந்து கடைப்பிடிப்பானா அல்லது அச்ச உணர்வினால் கடைப்பிடிப்பானா என்ற ஒரு வினா எழுகிறது.

சமுதாய அமைப்பியல் விதிகள் மிக்க மரியாதையோடும் அடக்க உணர்வுடனும் பின்பற்றப் பெற்று வந்தன என்ற செய்தியைப் புறநானூற்றால் அறிய முடிகிறது. எம்முடைய முன்னோர் சான்றோர்கள் நடந்த பாதை; அவர்கள் வாழ்ந்து காட்டிய பாதை என்ற அளவில் பெருமையோடும் உயர்வோடும் போற்றப் பெற்றது என அறிய முடிகிறது.

> 'இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்
> அறவிலை வணிகன் ஆய்அலன் பிறரும்
> சான்றோர் சென்ற நெறிஎன
> ஆங்குப் பட்டன்று அவன்கை வண்மையே'

என்பது புறநானூறு.

சமுதாய அமைப்பியல் கூட்டு அமைந்து சமூக இணைப்பியல் அறநெறிகளை உருவாக்கும்போது அவ்விணைப்பின் அடிப்படைப் பொதுமை அறமாக ஒரே ஒரு நல்லறம் மேற்கொள்ளப் பெற்றது. அது பிற உயிர் துன்புறாது வாழ்தற்குப் பாடுபடுவதே. பிறஉயிர் துன்புறும்போது அற இயல் அறிவாராய்ச்சி முதலியன செய்யத் தேவையில்லை. இது நன்மை தருமா, அறமா என்று கருத வேண்டியதில்லை. பிற உயிர் படும்

துன்பத்தை நீக்குவதற்குரிய உதவியை எவ்வகையிலேனும் செய்தல் வேண்டும். ஆனால், அவ்வகையில் ஒருவன் அறிவற்ற வனாகவும் அமைந்து நின்று அதனைச் செய்யலாம் என்பது சமூக இயல் அறம். அத்தகைய அறியாமை நிலையைக் 'கொடைமடம்' என்பர். பாரி முல்லைக்குத் தேர் கொடுத்தது, பேகன் மயிலுக்குப் போர்வை ஈந்தது அறிவொடுபடாத மடமைச் செயல்களெனக் கருதப் பெற்றாலும் உயிர்த் துன்பம் நீக்கிய சமூக அற இயல் நெறி என்றே கொள்ளப் பெற்றது. ஆயினும், பிற உயிர் படும் துன்பத்தை நீக்கவேண்டும் என்ற பொருளில் தன்முயற்சியால் பணியாற்ற வேண்டுமேயன்றி, பிறரிடம் பிச்சையெடுத்துப் பிறர் துன்பம் நீக்குதல் என்பதாகச் செயல்படக் கூடாது. இதனைச் சான்றோர் பழிக்கும் செயல் எதையும் செய்யக்கூடாது என்றும் வரையறை செய்யப் பெறுகிறது.

'ஈன்றாள் பசிகாண்பா னாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை'

என்பது திருக்குறள்.

எனவே, தமிழகத்தில் குடி, குடிமை என்பன சமுதாய அமைப் பியல்பை அடிப்படையாகக் கொண்ட மக்கள் இணைந்து நிற்கும் நிலையை விளக்க எழுந்த சொற்களே. குடிமைப் பண்பின் அடிப்படையில் அமைக்கப் பெற்ற சமுதாய இயல் அற நெறிகள் (Group Morality or Custom) ஒழுக்கம் என்று கருதப் பெற்றன. அது உயிரோடு உயிர் இணைவதைக் குறிக்கோளாகக்கொண்டது. பிறர் படும் துன்பம் நீக்குவது என்பதே சமுதாய அமைப்பியல் அறநெறிக் கொள்கையின் அடிப்படைத் தத்துவம். சமூக அமைப்பியல் ஒழுக்க நியதிகள் சான்றோர் பின்சந்ததியினருக் காக வாழ்ந்து காட்டிய பாதை என்ற பெருமையும் உயர்வும் அமையப் பேணப் பெற்று வந்தது என்றும் அமைத்துக் கொள்ளலாம்.

(3) (ஈ) மனச்சான்று நிலை
(Conscience)

அறச் செயல்

அற இயல் உணர்வானது படிநிலை வளர்ச்சியில் வளர்வது. அறச் செயல்களைச் செயலாற்ற வைக்கும் நிலையில், மனச்சான்று நிலை என்பது மூன்றாம் படிநிலை வளர்ச்சியாகும்.

தனிமனிதன் கூட்டமாக இணைந்து ஒரு சமூகம் என்ற அமைப்பினைப் பெற்றபோது சமூகம் விதித்த அற இயற் செயல்களை மேற்கொண்டு நடக்க வேண்டியவனாகிறான். இதுவே குழுவினால் அமையும் ஒழுக்கம் (group morality) எனவும், மரபு நிலை ஒழுக்கம் (customary morality) எனவும், சமூக இயல் ஒழுக்கம் (social morality) எனவும் வழங்கப்பெறும். தனி மனிதன் தன்னைச் சமூகத்திடம் இணைத்துவிட்ட காரணத்தால் சமூகம் பிறப்பித்த ஆணை எனப்பெறும் அற இயல் நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டியவனாகிறான். சமூக இயல் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழும் தனிமனிதன் அற வாழ்வு வாழ்பவனாகத் தான் கருதப்பெறுகிறான். ஆயினும், ஒரு குறை ஒருசிலரிடம் காணப்பெறும். சமுதாயம் அதிகாரத்துடன் சுமத்திய கட்டளைகளை அதிகாரத்துக்கு அடிபணிந்து ஏற்று வாழ்கிறான் என்பதேயன்றி, அக்கட்டளைகளின் அற இயல் தகுதிப்பாட்டினை உணர்ந்து அது நல்லது என ஏற்று வாழ்வில்லை என்பதைப் புலப்படுத்துமாறு அவன் செயல் அமைந்துவிடுவதுண்டு. அவ்வாறு அவன் வாழ்வதற்குக் காரணம் என்ன? சமுதாயம் அவன்மேல் அதிகாரத்தின் துணையுடன் சுமத்தும் அற இயல் விதிகள் தனக்கு நன்மை தருவன அல்ல என அவனுடைய அற இயல் உணர்வு—மனச்சான்று அவனுக்கு உணர்த்துவதே காரணம்.

மனச்சான்று என்பது தனிமனிதனுடைய தன்னுண்மை அறிவு எனப்பெறும் அற இயல் உணர்வு. இதுவே, தனி மனிதனுக்கு அவன் மேற்கொள்ள வேண்டிய தனிநிலை அற நெறியினை எடுத்துக்கூறும் உள்ளுணர்வின் குரல் என விளங்குவது. இதன் துணைகொண்டே தனிமனிதன் தனக்கு நன்மை தரும் அறவழிச் செயல் எது? தனக்கு நன்மை தாரா அற வழிச் செயல் எது? என்பதைத் தேர்ந்து கொள்கிறான். இதனால் வரையறை செய்து உணர்த்தப் பெறுவதே தனிமனிதனின் தனி நிறை அறவாழ்வு நெறி (personal morality or reflective morality or conscience). அறநெறியைக் கடைப்பிடிக்கும் முறையில் மனச்சான்று எவ்வாறு செயற்படுகிறது என்பதை ஓர் எடுத்துக்காட்டினால் அறியலாம்.

இரவில் ஈருருளை வண்டியில் (சைக்கிள்) செல்லும் ஒருவன் விளக்கைப் பொருத்திக் கொண்டு செல்கிறான். விளக்கு எதற்கு என்று ஒரு வினா எழுப்பினால் அவனிடமிருந்து மூன்று வகையான விடைகளை எதிர்பார்க்கலாம்,

(1) வழியில் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் (police) வரலாம். இரவில் விளக்கு இல்லாமற் போவது தவறு என்று சட்டத்தின் பிரிவை எடுத்துக்காட்டி என்னைத் தண்டிக்க முற்படுவார்கள். அதனால் விளக்குடன் செல்கிறேன் என்று கூறலாம். சமுதாய அறநெறி ஒழுக்கம் அச்சம் காரணமாகப் பின்பற்றப் பெறுகிறது. ஆதிக்கத்துக்கு அடிபணிதல் என்பதே அவன் செயலுக்குக் காரணம். ஆனால், அது தேவையற்ற ஒரு விதி என்பதாக நினைக்கிறான்.

(2) இரவில் ஈருருளை வண்டியில் போவதானால் விளக்குடன் போவது என்பது எனக்குப் பழக்கம். அவ்வளவுதான் என்று விடை கூறலாம். இது சமுதாயம் இட்ட ஆணையை அப்படியே ஏற்று, செய்து செய்து பழக்கமாகவே (habit) ஆகி அமைந்து விட்ட நிலை. சமூகத்தால் ஒப்புதல் அளிக்கப் பெற்ற எந்த ஒரு விதியையும் அற இயல் நெறி என்று அப்படியே ஏற்று, அதில் தன்னை முழுமையாக ஒப்படைத்து விட்டநிலை. இங்கேதான் சமுதாய ஒழுக்க நிலையின் (customary morality or group morality) உண்மை நிலையை நாம் காணலாம்.

(3) இரவில் ஈருருளை வண்டியில் செல்லும்போது, விளக்குடன் போவதே நல்லது என நான் விரும்புகிறேன். ஏனெனில், யானும் வழியின் மேடு பள்ளம் முதலியவற்றைப் பார்த்து அதற்கேற்பச் செலுத்த முடியும். நான் நல்லது என்று ஏற்றது மற்றவர்களுக்கும் நல்லதாகவே அமைகிறது. எவ்வாறெனில் என் எதிரே வருகிறவர்கள் இந்த விளக்கைப் பார்த்து, ஈருருளை வண்டி வருகிறது என அறிந்து அவர்களும் அதற்கேற்ப விலகிச் செல்ல வாய்ப்பாகிறது. மற்றவர்களுங்கூட நான் விளக்குடன் வருவதுதான் நல்லது என்று விரும்புகிறார்கள். ஆகையால் இவ்வாறு செய்கிறேன் என்று விடையளிக்கலாம்.

இங்கே, இது எனக்கு நல்ல செயல், அதனால் இதனைச் செய்தேயாக வேண்டும் என நான் விரும்பி ஏற்றுச் செயல்படுகிறேன் என்று கூறுதல் அவனுக்கு அவன் 'மனச்சான்று' அமைத்துக் கொடுத்த அற இயல் கொள்கை. எனக்கு அறஞ்சார்ந்த செயல் என்று அமைந்த ஒன்று சமுதாயம் விரும்பி ஏற்று ஒப்புதல் தந்த செயலாக அமைகிறது. எனவே மனச்சான்று நிலைக்கும் சமூக வழி அறநெறிக் கொள்கைக்கும் இணைப்பு இருக்கிறது. எனவே நான் விரும்பும் செயல் சமுதாயமும் விரும்பும் செயலாக அமைகிறது என்று கூறுகிறான். இதையே

'தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்'

எனத் திருவள்ளுவர் அமைத்துக் காட்டுகின்றார்.

'தாம் இன்புறுவது' என்பது மனச்சான்று அளித்த அற இயல் தீர்ப்பு நிலை ; உலகு இன்புறுகிறது என்பது மரபொழுக்க நிலை. இங்கே இரண்டிற்கும் இணைப்பு இருக்கும் என்று கருதுகிறார் திருவள்ளுவர். அல்லது இருக்க வேண்டும் என்று வரையறை செய்கிறார் எனக் கொள்ளலாம். ஆனால் முதலில் அமைந்த விடையில் இணைப்பு இல்லை என்பதே முடிவாகிறது. இணைப்பு ஏற்படாத நிலையில் தனிமனிதன் அச்சமோ வேறு காரணமோ கொண்டு சில நாள்கள் அடங்கி அந்நெறியைப் பின்பற்றுவான். வாய்ப்பு அமையும்போது சமூக அறநெறியைக் கடந்து தன் னுடைய தனித்தன்மை அற இயல் உணர்வு விதித்த அற இயல் நெறியைப் பின்பற்றத் தொடங்கிவிடுவான். இதையே சமுதாய அறநெறி ஒழுக்கத்திலிருந்து தனிமனித அறநெறி ஒழுக்கம் மாறித் தனித்து நிற்கும் நிலை என்பர் (Transition from group morality to personal morality or customary morality to reflective morality or custom to conscience.)

மனச்சான்று என்றால் என்ன?

மனச்சான்று என்பதைப்பற்றிய விரிவான விளக்கம் இரண்டாவது தலைப்பின் முற்பகுதியில் அமைந்துள்ளது. எனினும், மரபொழுக்க நிலையிலிருந்து எழும் ஒருவகை மாற்றமே மனச்சான்று வழிப்பட்ட தனிமனித அற இயல் நெறி என்பதை விளங்கிக் கொள்ளும் நிலையில் சுருக்கமாகிய ஒரு விளக்கம் கொடுக்கப்பெறுகிறது.

தனிமனிதன் தன்னுடைய இயல்பூக்கத்தின் வழிநின்று சில செயல்களை மேற்கொள்ளலாம். அவ்வாறே பொதுமை இயல் பூக்கத்தின் எழுச்சியினால் சமூகம் அமைத்துத் தந்த அற இயல் நெறியைப் பின்பற்றி நடக்கலாம். சூழ்நிலை எதுவாக இருப்பினும், தனிமனிதன் எந்த ஒரு செயலை மேற்கொள்ள முற்படும்போதும், அவனுக்காக அவனுள்ளத்தில் ஒரு குரல் ஒலிக்கத் தொடங்கு கிறது. அவன் மேற்கொள்ள இருக்கும் செயல் சரியா, தவறா என்ற கருத்தை அக் குரல் அவனுக்குத் தெரிவித்துவிடுகிறது. அவன் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், அவன் அதை ஏற்று நடந்தாலும், நடக்காவிட்டாலும் அக்குரல், தன்

தீர்ப்பை அவனுக்குத் தெரிவித்துவிடும். அவன் செயல் மேற்கொள்ள முற்படும்போதெல்லாம், அவனைத் தட்டி நிறுத்தி தன் குரலைக் கேட்குமாறு தன் கருத்தைத் தெரிவித்துவிடும். முதலில் அவன் அதைப் பொருட்படுத்தாமல் செயலாற்றினாலும் காலப் போக்கில் அவன் தன்னுள்ளத்தே ஒலிக்கும் குரலின் வழியே நின்று, இதுதான் நான் செய்யக்கூடியது என்ற முடிவுக்கு வந்து விடுகிறான். அவனுள்ளிருந்து அவனுக்காக ஒலிக்கும் அகக்குரலே மனச்சான்று. தனிமனிதனுடைய உள்ளத்தில் நின்று அவன் மேற்கொள்ள இருக்கும் தனிமை அற இயல் செயல்களையோ, பொதுமை நலம் வாய்ந்த அற இயல் செயல்களையோ, சரி தவறு என்ற அடிப்படையில் வரையறை செய்து காட்டும் அற இயலறிவு தான் மனச்சான்று என்பதாகும்.

சமுகம் விதித்த அறநெறியும் மனச்சான்று விதித்த அறநெறியும்

ஒரு குழு அல்லது மக்கள் தொகுதி (group) அல்லது சமூகம் வலியுறுத்தும் அறவழியிலான சில கட்டளைகளுக்கு மாறான கருத்தைத் தெரிவிப்பதே மனச்சான்றினுடைய தனித்த பண்பு என்று விளக்கம் கூறுபவர்களும் உண்டு. ஆனால், மரபு ஒழுக்க நிலையிலான அற இயல் கட்டளைகளைச் சமுகம் எப்படி வரையறை செய்தது என்ற வினாவை எழுப்பினால் தனிமனிதர்கள் பலர் சேர்ந்து, நாம் அனைவரும் இணைந்து இயங்கவேண்டியிருப்பதால் சில பொதுவகையான நடைமுறை விதிகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று முடிவுசெய்து, சில வகையான நடைமுறை விதிகளைச் சிந்திக்கத் தொடங்கியிருப்பார்கள். அவரவர்களின் உள்ளத்தே எழுந்த மனச்சான்றுகளின் கூட்டமைப்பில் உருவானவைகளே சமுக இயலான அற இயல் நெறிமுறை பற்றிய கட்டளைகள். சமுக இயலான அற இயல் நெறிகளும் மனச்சான்றின் வழியில் அமைந்தவைகளே. அப்படியானால், மனச்சான்றுகளும் கால, இட, சூழல்களுக்கு மாறுபடுமோ என்ற ஐயம் வரும். மனச்சான்று மாறுபடும் நிலையில் அமைவது அன்று; மனச்சான்று வெளிப்படுத்திய அற இயல் உணர்வை, செயல்படுத்த முற்பட்டு, அதற்குச் செயல் வடிவம் கொடுத்து அறநெறிக் கட்டளைகளாக-சட்டங்களாக அமைக்கும் போது வேறுபல தாக்குதல்கள் இடம் பெற்றுவிடும். மனச்சான்றுக்கு விளக்கம் கொடுக்கும் முறையில் அமைக்கப் பெற்ற தொடர்களில் மனச்சான்றின் உண்மை நிலை அமையப் பெறாது போய்விடும். நாளடைவில் அத்தகைய சட்ட இயல் தொடர்கள்

உள்ளார்ந்த அற இயல் உணர்வை வெளிப்படுத்தும் ஆற்றல் அற்றனவகளாகிவிடும். அப்போது வெறும் சொற்றொடர்ப் பொருளிலேயே சட்டம் விளக்கம் பெறும். அதனாலேயே சில சமுக இயல் மரபு வழி, அற இயல் கட்டளைகள் தொடங்கப் பெற்ற காலத்திலேயே வலிவிழந்த நிலையில் இருந்திருக்க வேண்டும் என்று சில ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இன்றைய வரலாற்று நிலையிலும், இந்திய அரசியல் சட்ட அமைப்பிலும் சில மாற்றங்கள் செய்தே தீர வேண்டும் என்ற பொதுமைக் குரல் அடிக்கடி எழுவதை நாம் காணலாம்.

தனியுரிமைக் கொள்கை (Individualism)

'மனச்சான்று' என்பது ஒருவகை உள்ளுணர்வு நிலையில் எழும் அகக்குரல் ஒலி; மேற்கொள்ள இருக்கும் ஒரு குறிப்பிட்ட செயல் சரி, தவறு என்ற அளவில் அறிவுறுத்துவதாக மட்டுமே அமையும் என்பது அற இயல் அறிஞர்கள் பலரும் ஒப்ப முடிந்த கொள்கை. மனச்சான்று என்பது காலப்போக்கில், தனிமனிதன் தன் சிந்தனையின் மூலம் ஆய்ந்து காணும் உண்மையே, மனச்சான்று தந்த உண்மை என்று கருதப் பெற்றது. சிந்தித்தல் என்ற செயற்பாட்டு முறையில் அளவையியல் அடிப்படைஇல்லாமலேயே சார்புணர்ச்சியுடன் சிந்திக்கின்ற முறையும் இடைபுகுந்துவிட்டது. இந்நிலையில் மரபொழுக்க நிலையில் வரும் விதிகளை மேற்கொண்டு நடக்க முற்படும் மனிதன் தன்னளவில் ஆராய்ந்து சரி என்று தெரிந்தால்தான் மேற்கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறான். இங்கே, மனச்சான்று என்பது தனிமனிதனைக் கட்டற்ற தன்மை (தற்சுதந்தரம்) உடையவனாக ஆக்கித் தனிநிறுத்தும் ஆற்றலுடையது என விளக்கம் பெறுவதாகிறது.

அடுத்த நிலையில், சமூகம் அமைத்த மரபுவழியிலான அற இயல் நெறிமுறைகளைத் தன்னிறைவு இன்றியே ஏற்றுக் கொண்டாலும், நல்லவனாக விளங்குவது, வாழ்வது, செயற்படுவது என்பது சமுகத்தை நோக்கியது அன்று; தன் மனச்சான்றினை, தன் சிந்தனை வழிப்பட்ட ஆய்வியல் முடிவினைப் பொறுத்ததே என்ற முடிவுக்கு வருகிறான். இந்நிலையில் சமூக நெறிமுறைகளை எதிர்த்து வெளியேறிய சிலர் சிறப்பாக வாழ்கிறார்கள் என்ற நிலையைக் காண்கிறான். நாளடைவில், அவன் உள்ளத்தில் 'தனியுரிமைக் கொள்கை' (individualism) ஒன்று உருவாவதை உணருகிறான். நாளடைவில் அது மேலும் வலுப் பெற்று, சமூக அமைப்பு என்பதே தனிமனித உரிமையை அழிக்க ஏற்பட்ட ஒன்று

என்ற முடிவுக்கு வரும் நிலையைப் பெற்றுவிடுகிறான். இந்நிலையில் 'தனியுரிமைக் கொள்கை' என்றால் என்ன என்ற வினாவை எழுப்பி விளக்கம் கேட்க முற்பட்டால், தனியுரிமைக் கொள்கையின் சிறப்பியல்பை விளக்க முற்படாமல் சமுதாய அற இயற் கொள்கைகள், மரபுவழி ஒழுக்க விதிகள், அவ்விதிகளை அடிப்படையாகக் கொண்ட செயல்முறைகள் ஆகியவைகளுக்கு நேர் எதிரான கொள்கைதான் தனியுரிமைக் கொள்கை என்று விளக்கம் செய்கிறான். தனியுரிமைக் கொள்கையின் உள்ளார்ந்த சிறப்பியல்பு எதையும் இன்னும் அனுபவ நெறியில் அறிந்து கொள்ளவில்லையாகையால் அவன் சமுக வழியிலான அற இயல் விதிகளின் மேல் எழுந்த வெறுப்புணர்ச்சி ஒன்றையே அடிப்படையாகக்கொண்டு தனியுரிமைக் கொள்கையை விளக்க முற்படுவான் ஆயினான். இவ்வகையில் சமுக அற இயல் விதிகளின் செயற்பாட்டுமுறைகள் அவனை மோதும்போது மரபொழுக்கநிலைக்கும் தனியுரிமை நிலைக்கும் ஒரு போராட்டம் நிகழ்வதைத் தவிர்க்க முடியாதவனாகிறான். மரபொழுக்க நிலையை அப்படியே ஏற்றவனுக்கு இத்தகைய போராட்டம் இல்லை.

மரபொழுக்கம், கூட்டமைப்பு ஒழுக்கம், சமூக அற இயற் சட்டங்களின் ஆணை என்பவைகளின் நடைமுறை ஒருபக்கம். தனியுரிமையுடன் தனிமனித நலன் பேணும் தனிநிலை அற வழியிலான நடைமுறை மற்றொரு பக்கம். இரண்டன் மோதல்களுக்கு நடுவே தனிமனிதன் நிற்கிறான், அவனை அப்படி நிறுத்தியது எது? தனிமனிதன் தன்னுரிமை நிலையில் தனிவழிச் சிந்தனை என்று கூறப்பெறும் மனச்சான்றுதான். இதற்கு, பழமைக்கும் புதுமைக்கும் இடைநிகழும் போர் என்று விளக்கம் அமைத்தவர்களும் உண்டு. ஒவ்வொரு மனிதனிடமும் முரண்பட்ட இரண்டு வகை மனப்போக்குகள் உள்ளன என்று ஒப்பும் வகையில் மனச்சான்று நாளடைவில் வலிமை பெறலாயிற்று.

ஒன்றோடு ஒன்று முரண்பட்ட இருநிலைகளிலும் மோதல் அமைந்தபோது, ஒன்று மற்றதை அழிக்கவில்லை. இருநிலைகளையும் ஏற்றுக் கடைப்பிடிப்பவர்கள் இருந்து கொண்டுதான் வந்தார்கள். தனியுரிமைக் கொள்கையை மதியாது மரபுவழியிலான சமுதாய அறவியல் நீதியிலான ஒழுக்கத்தையே கடைப்பிடிப்பவர்களும் எண்ணிக்கையில் வளர்ந்து கொண்டுதான் வந்தார்கள். அவ்வாறே, தனியுரிமைத் தனிவழிச் சிந்தனையின் வழியை மேற்கொண்டு, அதனைச் செயற்படுத்துபவர்களும் அவ்வாறே எண்ணிக்கையில் பெருகி வருவதையும் காணமுடிந்தது. இவ்வாறான இருவகைக் கொள்கைகளின் தனி

நிலை வளர்ச்சிகளின் பயன் பழமையை விரும்பும் குழந்தைகளும் புதுமையை விரும்பி ஏற்கும் குழந்தைகளும் நாகரிகமடைந்த இன்றைய சமுதாயத்திலும் காணப் பெறுகிறார்கள்.

உண்மையான அறம் அல்லது அறத்தின் உண்மை இது என்று அகத்தே நின்று குரல் எழுப்பும் ஆன்மீக ஊக்கநிலை எனப்பெறும் மனச்சான்று இவ்வாறு இருநிலைகளில் அறத்தை வளர்க்க முற்படுமா என்ற வினாவை எழுப்பி, இதுஇன்று வரையில் தீர்க்கப் பெறாத ஒன்றுஎன்று விடையளித்த அறவியல் ஆய்வாளர்கள் பலர் உண்டு. மனச் சான்று என்ற சொல் ஒன்று. ஆனால் இங்கே கொடுக்கப் பெற்ற விளக்கம் அமையாத வேறு விளக்கத்தில் மனச் சான்று என்ற சொல் பயன்படுத்தப் பெற்றதே உண்மைக் காரணம்.

தனிமனிதர்களிடம் இயற்கையாக அமைந்த சில தனிநிலை ஆற்றல்கள் மரபொழுக்க நிலையை ஒட்டிய நடை முறைவிதிகளால் வளர இயலாத நிலை உண்டாயிற்று. தனிமனித வளர்ச்சி, புகழ் சுகமான வாழ்வு, பிறரும் மதித்துத் தன்னைப் போற்றுமாறு வாழலாம் என்ற எண்ணம் ஆகிய போர்வைகளில் தனிமனிதனின் தனிநிலை ஆற்றல்கள் அவன் சிந்தனையைத் தாக்க முற்பட்டன. இத்தகைய தாக்குதல்களுக்கு உள்ளான தனிமனிதர்கள் 'மனச் சான்று' என்ற பொய்யான காரணத்தைக் காட்டிவிட்டுத் தனித்துச் சென்று நிற்கும் தனியுரிமைக் கொள்கையுடையவராயினர். இது புதுமை விரும்பிகளைப்பற்றி மர பொழுக்க நிலையை மதிப்பவர்கள் அமைக்கும் மதிப்பீடு. மேலும் சிலர் இது ஒருவகையில் வரலாற்று முறையிலான மறுமலர்ச்சி என்றே விளக்கம் கூறினர்.

மரபொழுக்க நிலையிலிருந்து (customaryy morality) தனிநிலை ஆளுமை ஒழுக்கம் (personal morality) பிரிந்து நிற்கக் காரணம்

(1) பொருளாதாரம், பொருளாதார வளர்ச்சிக்குரிய தொழில் முறை ஆகியவைகளில் பல புதிய கண்டுபிடிப்புகள் தோன்றின. தனிமனிதனுடைய தனிநிலை ஆற்றல்கள் தனித்து நின்று சிறப்பாகத் தொழிற்படத் தொடங்கின. தனி மனிதனுடைய தனிநிலை ஆற்றல் வெளிப்பட்டுச் சிறக்கவும், அதனால் உண்டாகும் தனிமனிதனின் வாழ்வியல் சுகம் எனப் பெறும் நன்மைக்கும் மரபொழுக்கநிலை வாய்ப்பு அளிக்காமையால், மரபொழுக்கநிலை எனப்பெற்று கூட்டமைப்பு நெறிமுறைகளிலிருந்து தனிமனித ஆளுமை ஒழுக்கம் தனிப் பிரியத் தொடங்கியது.

(2) மழையின்மை, பஞ்சம், சில நோய்கள், இயற்கை மாற்றங்கள் ஆகியவைகளை காரணங்களாகக் காட்டியே கூட்டமைப்பு ஒழுக்கக் குறிக்கோளை விளக்க முற்பட்டார்கள். அவைகளைக் கொண்டே அச்சமுறுத்தினார்கள். மரபொழுக்க நிலை அமைப்புக்குரிய உண்மைக் காரணத்தை விளங்கிக் கொண்டவர்கள், விளக்கக் கூடியவர்கள் இல்லை. இல்லாத காரணங்களைக் காட்டி அச்சமுறுத்தினார்கள். புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், விஞ்ஞான வகையில் எழுந்த ஆராய்ச்சியறிவு ஆகியவைகள் மேலே குறிப்பிடப்பெற்ற மழையின்மை, பஞ்சம், நோய்கள் ஆகியவைகளுக்குரிய காரணங்களை எடுத்துக்காட்டுடன் விளக்கின. இவ்வகையில், மரபொழுக்க நிலையிலான நெறிமுறைகளுக்குக் கூறப்பெற்ற காரணங்கள் வலிவிழந்துபோகவே, தனிமனித ஆளுமை ஒழுக்கம் தனியே பிரிந்து தனித்து நிற்கும் நிலை உண்டாயிற்று.

(3) கலைகள், கைவினைத் திறமைகள் தனித்தனி நிலைகளில் சில தனிமனிதர்களிடம் வளர்ச்சி பெற்றன. அவைகள் பிற நாட்டவரால் புகழப் பெற்றன; பொருளாதார வசதியுடையவர்கள் பொருளையும் புகழையும் கொடுத்து தனிநிலை வளர்ச்சி பெற்றவர்களையும் தனித்திறமைகளையும் பாராட்டினார்கள்; வளர இடங்கொடுத்தார்கள். இந்நிலையில் வளர்ச்சியடையும் போது மரபுநிலை ஒழுக்க விதிகளை அவர்கள் மீறிச்செல்ல வேண்டிய நிலை தோன்றியது. அந்நிலையில், அவர்களைத் தம் பக்கம் இணைத்துக் கொண்டு வளர்ச்சி பெற்றது தனிமனித ஆளுமை ஒழுக்கக் கொள்கையே.

(4) மரபொழுக்க நிலை ஒழுக்க விதிகளைச் செயற்படுத்த வந்த சமுதாயத் தலைவர்கள் அல்லது ஆட்சியாளர்கள் தந்நலம் காரணமாகச் செய்த சில கொடுங்கோன்மைச் செயல்களால் தனிநிலை ஆளுமை அறவழிச் சார்ந்தவர்கள் பிரிந்து நின்று தனிநிலை அறப்பண்பாட்டினை வளர்க்க வேண்டிய நிலை உருவாகிவிட்டது.

(5) சமய நிறுவனங்கள், சமயச் சடங்குகளுக்கு அற இயற் சார்ந்த விளக்கங்களை அற இயலோடு இணைந்த செயற்பாட்டு உரிமைகளை அளிக்க முற்படாமல் ஆதிக்கத்தின் அடிப்படையில் அவைகளை வலியுறுத்தத் தொடங்கியது ஒரு காரணம்.

(6) தனிமனிதனின் உள்ளத்தியலான சில கூறுகள் மரபியலான ஒழுக்கத்திலிருந்து மாறுபட்டு நிற்கத் தூண்டின.

பாலுணர்ச்சி வேட்கையைத் தடையின்றித் துய்க்க வேண்டும் என்ற எண்ணம், உடைமைகளைத் தனியுரிமையாக அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம், சமூகத் தலைவர்களுக்கு அடிமையாக இருத்தல் கூடாது, கருத்து, பேச்சு, செயல் ஆகிய எல்லாவற்றிலும் கட்டற்ற உரிமையுடன் வாழ வேண்டும் என்ற எண்ணம், பெருமை புகழ் ஆகியவைகளால் உயர்நிலையில் பலர் போற்ற வாழ்தல் வேண்டும் என்ற எண்ணம் ஆகிய இவைபோன்ற உள்ளத்தியல் கூறுகள், மரபொழுக்க நிலை அறநெறிகளிலிருந்து தனிமனித ஆளுமை அறவழிச் செயல்நிலைக் கொள்கை பிரிந்து தனிநிற்கும் உரிமை உடையதாயிற்று.

மரபொழுக்க நிலை அமைப்பிலிருந்து தனிமனித ஆளுமை ஒழுக்க அமைப்பு நிலைக்கு மாறிய நிலைமை பற்றிய மதிப்பீடு

(1) மரபொழுக்கம் என்பது தனிமனிதர்கள் பலர் சேர்ந்து ஒரு கூட்டமாகக் கூடி இவை இவை செய்ய வேண்டும் என்ற வரையறைகளை உண்டாக்கிவிட்டு, கூட்டம் கலைந்த நிலையில் தனிமனிதர்களாக நின்று அவர்களே முன்னர் முடிவு செய்த அற இயல் நெறிகளைப் பின்பற்றி நடத்தல் என்பதே. முடிவுசெய்த அற இயல் விதிகளைச் செயற்படுத்தும்போது வேறுபாடுகள் தோன்றின. ஒரு கூட்டத்துக்கும் இன்னொரு கூட்டத்துக்கும் வேறுபட்ட நெறிகள் காணப்பெற்றன. ஒரு கூட்டத்தார் அமைத்த நெறி சிறந்தது என்று வேறொரு கூட்டத்தார் ஏற்கும் நிலையும், இதுவரை மேற்கொண்டிருந்த விதி அவ்வளவு சிறந்ததன்று என்று ஒதுக்கும் நிலையும் ஏற்பட்ட காரணத்தால் உண்மையான, மாறாத, முரண்பாடு இல்லாத அற இயல் ஒழுக்க நெறிமுறைகள் தேவை என்ற நிலை உண்டாயிற்று. மரபொழுக்க நிலை அமைப்பில் உள்ள அற இயல் நெறிகள் முரண்பட நின்றமையால், மாறாத நிலையுடைய அற நெறிகளை ஆக்கித்தரவல்லது மனச் சான்று ஒன்றே என்ற முடிவுக்கு வந்தார்கள்.

மாற்றம் பெறுதற்கும் முரண்பாட்டுக்கும் இடமளிக்கும் அற நெறிகளிலிருந்து அனைத்து ஒழுக்கத்துக்கும் அடிப்படையாய், அனைத்தையும்விட உயர்ந்ததாய், மாற்றம் இல்லாததாய் முரண்பாடு இல்லாததாய் அமைந்த அற நெறிகளுக்கு மாறிய நிலையே இது.

இவ்வாறு தனிமனிதன், கூட்டத்து ஒழுக்க இயல் நெறியிலிருந்து தனிமனித ஒழுக்க இயல் நெறிக்கு மாறினான் எனக் கொள்ள வேண்டும்.

மரபொழுக்கத்திலிருந்து மனச்சான்று ஒழுக்கத்துக்கு மாறினான் என்றும்; ஒழுக்க நெறியின் மேல்நிலைச் சட்டங்களிலிருந்து ஒழுக்க நெறியின் அகநிலைப் பண்பியல் நெறிக்கு மாறினான் என்றும் மதிப்பீடு செய்யலாம்.

(2) செயற்பாட்டு நிலையில் மரபொழுக்க நிலையிலமைந்த ஆதிக்கமும் தலைமையும் வெளியிலிருந்துகொண்டு தனிமனிதனைச் செயற்படுத்தின. மனச்சான்று ஒழுக்கத்துக்குரிய ஆதிக்கமும் தலைமையும் தனிமனிதனின் அகநிலையிலிருந்தே அவனைச் செயற்படுத்துகின்றன. எனவே, தனிமனிதன் புறநிலைகளில் வேறு ஒருவனுக்கு அடிமையாக நிற்கும் நிலைமையை மாற்றி, அவன் தன்னுள்ளே தன் மனச்சான்றையே தலைமை என நிறுத்திச் செயற்பட்டான் எனலாம்.

(3) முதல் நிலையில், தனிமனிதர்களின் அகத்தே இருக்கும் மனச்சான்றுகளின் இணைந்த ஒரு வெளிப்பாட்டு நிலைதான் மரபொழுக்க நிலை என்று கருதப்பெற்றது. பிற்காலத்தே, மரபொழுக்க நிலை அற வழி ஆணைகள் என்பவை தனிமனித மனச் சான்றினுடைய எதிர்ப்பான செயல் விதிகள் என மதிப்பீடு செய்யப்பெற்றன.

(4) மரபொழுக்கம் என்பது எதிர்வினை, மறிவினை எனப் பெறும் மாற்றுச் சிந்தனை, செயல் ஆகியவைகளுக்கு இடங்கொடாமல் செயல்படுவதாயினும், மரபொழுக்க நிலையிலமைந்த ஒரு குறிப்பிட்ட அறநெறியை எடுத்து ஆராயும்போது, அது தனிநிலையில் அகநிலையில் அமைந்துள்ள அக அற ஒழுங்கின் ஒரு குறிப்பிட்ட பண்பினுடைய வெளிப்புறப் பிரதிபலிப்பே என்று உணர முடியாத வகையில் மரபொழுக்க நிலையிலான பெரும்பாலான நெறிமுறைகள் அமைந்துவிட்ட காரணத்தால் மரபொழுக்கம் என்பது (அக நிலை அறக் கூற்றினைப்) பிரதிபலிக்காத ஒழுக்கம் (un reflective morality) என்றும் தனிமனிதனின் ஆளுமை நிலையிலான ஒழுக்கமானது மனச் சான்று எனப்பெறும் அக நிலை அற ஒழுங்கியல் பண்பாட்டு முறைகளை அப்படியே வெளிப்புறத்தில் பிரதிபலிக்கும் செயல் முறை என்றும் (reflective morality) கருதப்பெற்றன.

(5) மரபொழுக்கம் என்பது கூட்டமாக அமைந்த தனி மனிதர்கள் தனிமனித நிலையிலிருந்து நீங்கி, கூட்டம் என்ற நிலையில் அமைந்து வெளிப்படுத்திய விதிகள் ஆகையால், அவை களைத் தனிமனிதன் மதிப்பீடு செய்யாமல், தலைகுனிந்து ஏற்றுச் செயல்படுத்த வேண்டும் என்ற அதிகாரத்தையுடையது.

மனச்சான்று ஒழுக்கம் என்பது தனிமனிதன் தன் உள்ளத்தே அகநிலையில் விளங்கும் அற ஒழுக்கக் கூறுகளின் மறுபதிப்பாக வெளிப்புற நிலையில் அமைவது; அகநிலை ஒழுங்கின் அடிப்படை யிலேயே செயற்படுவது. இரண்டையும் இணைத்து இவை சரி யான இணைப்பு என்று ஆய்ந்து முடிவு செய்தவனும், பின்னர் அதைச் செயற்படுத்துபவனும் ஒருவனே. தான் செய்யும் செயல் கூட்டத்துச் செயலாகிய மரபொழுக்கத்துக்கு எதிரானது என்று உறுதி செய்பவனும் அவனே.

(6) கூட்டத்து மனச்சான்றின் ஆதிக்கத்தைத் தனிமனிதன் ஏற்று நடப்பது மரபொழுக்க நிலை. அவ்வாறன்றி, தன்னுடைய மனச்சான்றின் ஆதிக்கத்தைத் தானே ஏற்றுச் செயற்படுத்தும் நிலையுடையது மனச்சான்று ஒழுக்கம். தனிமனித ஒழுக்கம் என்பது தனிமனிதன் தன் 'சொந்த விவகாரம்' என உரிமை கொண்டாடும் பேற்றினைப் பெற்றதாகிறது.

(7) தனிமனிதனுடைய அரசியல், சமூக இயலான நடத்தை களைக் கட்டிக் காக்கும் நிலையில் அமைந்தவைகளாகிய விதி முறைகளைக் கொண்டதே மரபொழுக்க நிலை. ஆனால் தனி மனிதனுடைய அற இயலான ஒழுக்கம் அவனிடத்திலேயே உள் ளமைந்திருக்கும் மனச்சான்றின் ஆணையில் அமைந்த அற இயல் அக ஒழுக்கக் கூறுகளையே கட்டிக்காப்பதாக அமைவது.

அறவொழுக்கம் மரபுவழியிலிருந்து மனச்சான்று நிலைக்கு மாறிய தால் அற இயலில் உண்டாகிய நன்மை

(1) மரபொழுக்க நிலையில் வெளிப்புறச் சட்டங்களே மக்களுக்குத் தெரியும்; ஆனால் அவைகளுக்கேற்ற அகநிலை அறக்காரணங்கள் தெரிவதில்லை. மனச்சான்று நிலை ஒழுக்கத்தில் புறநிலையில் மேற்கொள்ளப் பெறும் அற இயல் விதிகளுக்குரிய அகநிலையில் அமைந்த அறவியலான காரணங்கள் வெளிப்படை யாகத் தெரிவதால், குற்றவாளிகள் இத்தகைய குற்றங்களை ஏன் செய்தார்கள் என்பதை ஆராயமுடிகிறது. இளங் குற்றவாளி

களைத் திருத்த முடிகிறது. குற்றம் நிகழாதவாறு தடைசெய்யும் முறையில் சில ஆக்கப் பணிகளைச் சமுதாயம் மேற்கொள்ளவும் முடிகிறது.

(2) மரபொழுக்க நிலையைவிட மனச்சான்று நிலையில் அறவாழ்வு விரிவடைந்துள்ளது. சமூக நன்மை என்ற நிலையில் ஒரு குறிப்பிட்ட தொகையுடைய மக்களுக்கு மட்டுமே நன்மை செய்தல் என்ற நிலை (மரபொழுக்க நிலை) மாறி, மனித சமுதாயம் முழுவதையும் ஒன்று என்று எண்ணிச் செய்யும் கடமைகள் தோற்றம் பெற்றுள்ளன.

(3) விலங்குகளைப் பயனற்றவைகளாக ஆக்குவதோ, அவைகளுக்குத் துன்பம் தருவதோ கூடாது. விஞ்ஞான ஆய்வுக்கு என உயிருள்ள விலங்குகளை, பறவைகளை அறுத்துச் சோதனை செய்தல் கூடாது என்ற நிலைமை இப்போது உண்டாகியிருக்கிறது. இது மனச் சான்றுநிலை அற இயல் வளர்ச்சியால் விளைந்த பயனே.

(4) தற்கால அற இயல் ஆய்வுமுறைக்கும் வளர்ச்சிக்கும் வழிவகுத்தது மனச்சான்று நிலையிலான ஒழுக்கமே.

11. அற இயல் குறிக்கோட் கொள்கைகள்

(1) முன்னுரை

வரலாற்று முறையில் அற இயல்

வரலாற்று முறையில் ஐரோப்பிய நாட்டில் அற இயல் வளர்ந்த வளர்ச்சியை மூன்று படிநிலைகளில் பிரித்து விளக்கு கிறார்கள் மேலைநாட்டு அற இயல் அறிஞர்கள்: அவை (1) அற இயல் தொடங்கிய காலம் கிரேக்க காலம். அது கி. மு. 500 முதல் கி. பி. 500 வரை அமைந்த காலம். (2) அற இயல் வளர்ச்சியின் இடைக்காலம் கி.பி. 500 முதல் கி. பி. 1500 வரை அமைந்த காலம். (3) தற்கால அற இயல் என்பது கி. பி. 1500 முதல் அதற்குப் பின்னர் உள்ள காலம்.

மேலே குறிப்பிடப்பெற்ற ஒவ்வொரு கால அளவிலும் குறிப்பிடத்தக்க பண்புகளுடன் கூடிய அற அமைப்புகள் விளங்கின.

கிரேக்க காலம் எனப்பெறும் முதற்பகுதியில் கிரேக்க நாட்டில் நகர—நாடு (city—state) என்ற அமைப்புத்தான் அற வாழ்வின் பின்னணியாக அமைந்திருந்தது. நகர—நாட்டின் குடி மகனாகத் தன்னை ஏற்றுக்கொண்டு அதற்கேற்ற கடமைகளைத் தவறாமல் செய்பவனே நல்லவன் என்ற கருத்தே அறமாகக் கருதப்பெற்றது.

இடைக்கால வளர்ச்சியில் சமயசம்பந்தமான வாழ்வையே தூய வாழ்வாக, அறவாழ்வாக, நல்வாழ்வாக அக்கால மக்கள் கருதினர்.

தற்கால அறவளர்ச்சியில் சமயமும் நாடும் அவ்வளவு முக்கிய மானவை என்று கருத இயலாது. தற்கால அறவழிச் சிந்தனைகள் பெரும்பாலும் சுதந்தரமான சிந்தனைப் போக்கினை அடிப்படை யாகக் கொண்டவைகள். இவைகளைச் சற்று விரிவாகக் காணலாம்.

தொடக்க கால அற இயல் நிலை

கிறிஸ்த்து பிறப்பதற்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்னே மக்களின் சிந்தனையில் ஒருவகைச் சுதந்தரநிலை இருந்ததாகவும், அதுவே வாழ்வியல் பற்றிய பலவகை வினாக்களை எழுப்பக் காரணமாக இருந்ததாகவும், அறத்தைச் சார்ந்த பலவகை வினாக்களை எழுப்பியவர்கள் அக்காலத்தே வாழ்ந்த சொபிஸ்டு கள் என்பவர்களே எனவும் வரலாறு ஒப்புகின்றது. வாதம் செய்வதில் திறமை மிக்கவர்களாக விளங்கிய 'சொபிஸ்ட்' என்ற ஆசிரியர்கள் நாடெங்கும் திரிந்து கிரேக்க இளைஞர் களைத் தங்கள் அரசியலில் ஈடுபட வழி வகுத்தார்கள். இத்தகைய 'சொபிஸ்ட்' என்ற ஆசிரியர்களே அறத்தைச் சார்ந்த பலவகை வினாக்களை முதன்முதல் எழுப்பியவர்கள் என்று கருதப் பெற்றார்கள்.

'உலகின் எல்லாப் பொருள்களையும் அளக்கும் கருவியே மனிதன்' என்பது இவர்தம் பொதுமைக் கருத்து. அற ஒழுக்கம் என்பது மனிதனின் சொந்த வசதியைப் பொறுத்தே அமைகிறது என்றும் பெரும்பான்மையான மக்களின் விருப்பத்துக்கு ஏற்றவைகளையே நன்மை தருவன என்றும் அற இயலிற் கூறப் பெறுகிறது என இவர்கள் கருதினார்கள். மனிதன் தானாகவே எது நல்லது எது கெட்டது என்பதை வகுத்துக் கொள்கிறானே யொழிய, அத்தகைய நிலைகளை அறியவேறு எத்தகைய வழி களும் இல்லை என்பது அவர்களின் கருத்து.

சொபிஸ்டுகள் வாழ்ந்த இதே காலத்தில்தான் சாக்ரடீஸ் தம் கொள்கையை நிலைநாட்ட முற்பட்டார். மேலைநாட்டுத் தத்துவக் கருத்துகளைத் தோற்றுவித்தவர் சாக்ரடீஸ் என்பது பொதுக் கருத்து. சொபிஸ்டுகளைப் போலவே சாக்ரடீசும் மனிதனின் அறவாழ்வைப் பற்றிப் பல்வேறு வினாக்கள் எழுப்பு வதை ஆதரித்தார். ஆனால் இத்தகைய வினாக்களுக்கெல்லாம் விடை அளிப்பதற்கேற்ற ஆற்றல் தமக்கோ மனித இனத்துக்கோ இருப்பதாக அவரால் நிச்சயித்துரைக்க இயலவில்லை.

அற ஒழுக்கம் பற்றிய அவருடைய கருத்து இன்றும் பலரால் போற்றப் பெறுகிறது. 'ஒழுக்கமே அறிவு' (Virtue is knowledge) என்பது அவர் அறவுரை. அறவொழுக்கம் என்பது ஏதோ ஒரு வகை வெற்றுத் தன்மை வாய்ந்த மரபு காரணமாக ஏற்பட்டது அன்று; அது மனித இயல்பை அடிப்படையாகக் கொண்டது என அவர் கருதியிருந்தார் என்பது திண்ணம். 'உன்னையே நீ

அறிவாய்' என்பது அவரது பொன்மொழி. நல்வாழ்வு வாழ நமது இயல்பைப் பற்றிய அறிவு மிகமிகத் தேவை என்ற கருத்திலேயே இப்பொன்மொழியை அமைத்தாராதல் வேண்டும்.

சாக்ரடீசுக்குப் பின்வந்த பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்றவர்களும் அறவாழ்வு பற்றிய சிந்தனைகளை மேலும் வளர்க்க முற்பட்டார்கள் என்றே கூறவேண்டும். ' ஒழுக்கத்துக்கு இன்றியமையாதது அறம் பற்றிய அறிவே' என்பது இவர்களின் அடிப்படைக் கொள்கை. 'நாம் காணும் இவ்வுலகம் பொய் யானது; இதற்கு அப்பால் அமைந்த உலகமே மெய்யானது; அது நிறைவு பெற்ற எண்ணங்களால் ஆனது; அவ்வுலகத் துக்கு அடிப்படையாக விளங்குவது நன்மையைப் பற்றிய கருத்தே; அத்தகைய நன்மையை இயல்பான ஒன்றாகக் கொள்ள வேண்டும்' என்ற கருத்துடைய பிளேட்டோவும், அறவாழ்வில் நேருக்கு நேர் நின்று உணரக்கூடிய உண்மைகளிலேயே பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த அரிஸ்டாட்டிலும், பொதுவாக ஒப்புக் கொள்ளும் அறவழியிலான கருத்து ஒன்றே. 'நன்மை என்பது பொருள்களின் இயல்பான தன்மையே' என்பதே அக்கருத்து. நன்மையின் தன்மையைப் பற்றி நாம் அறியவேண்டுவது தேவையே; நன்மையை அறிவது என்பது இவ்வுலகின் தன்மையை அறிவது என்பதுதான் பொருள்; சுருங்கக் கூறினால், நன்மையை அறிவது என்பது இவ்வுலகில் ஒரு பகுதியாக, உறுப்பாக விளங்கும் மனிதனின் இயல்பை அறிவது என்பதே பொருள் என நாம் கொள்ளவேண்டும். இவர்கள் அளித்த விளக்கமும் 'உன்னையே நீ அறிவாய்' என்ற சாக்ரடீசு அவர்களின் பொன்மொழியும் இணைந்து நிற்பதை உணரலாம்.

பிளேட்டோ, அரிஸ்டாட்டில் வாழ்ந்த காலத்திலேயே வேறு இருவகைக் கொள்கைகளும் இருந்தன. அவை

(1) நமக்கு இன்பத்தைக் கொடுக்கும் செயலே நற்செயல் என்றும், இன்பமே வாழ்வின் குறிக்கோள் என்றும்,இன்பத்தையே தகுதியுடையதென்று கருதி மனிதர்கள் அதை அடையவேண்டும் என்றும் அமைத்துக் கண்ட சிந்தனையாளர்களின் கொள்கை. இதனை இன்பியற் கொள்கை என்றும் இதனை அமைத்துக் கொடுத்த சிந்தனையாளர்கள் சிரினிக்ஸ் (cyrenaics) எனப் பெற்றார்கள் என்றும் வரலாறு கூறும்.

(2) இன்பியற் கொள்கைக்கு (hedonism) மாறான கொள்கை ஒன்று உண்டு. 'நற்பண்பு என்பது இயல்பானது,

ஒழுக்க விதிகள் என்பவை இயற்கை விதிகளே; மனிதன் பகுத்தாராய்ந்து அறிந்துகொள்ளும் வகையில், அவனுடைய அறிவு நிலைக்கு ஒத்தவகையில் இயல்பாகவே அமைந்துள்ளன; சிந்தனையினால் பிறக்கும் அறிவே மனிதனுக்கு இன்றியமையாத தேவை; அதனை அடைவதே மனிதனின் இயல்பாய நன்மை; அத்தன்மையை அடைய விடாதவாறு தடுப்பதே இன்ப நுகர்ச்சி; எனவே புலனுணர்வைத் தவிர்ப்பதும், தம் கடமையை அல்லது அறவாழ்வைக் கைக்கொள்ளப் பகுத்தறிவை நாடுவதும் நல்வாழ்வுக்கு வழிவகுக்கும்' என்பதே அக்கொள்கை. இக்கொள்கையை ஸினிக்ஸ் (Cynics) என்பாரின் கொள்கை என்றும் இதனைக் கடைப்பிடித்தவர்கள் ஸ்டாயிக்ஸ் (Stoics) என்பார்கள் என்றும் வரலாறு பேசுகின்றது.

இடைக்கால அற இயல்

இடைக்காலத்தில் அற ஒழுக்க பற்றிய ஆய்வுக்கு இடமே இல்லை எனலாம். எது நன்மை, எது தீமை என்பதைக் கிறித்துவ வேதத்தில் இறைவன் உணர்த்தியவாறே எத்தகைய விவாதமும் இல்லாமல் ஏற்றுக்கொண்டு செயற்படுத்தவேண்டும். இதுவே அறவாழ்வு எனத் திருச்சபைகள் தத்தம் ஆணைகளின் மூலம் வலியுறுத்தின.

தற்கால அற இயல்

கிரேக்க காலத்தில் விளங்கிய தனிமனிதச் சிந்தனை உரிமை மீண்டும் தலையெடுத்தது. மதத்தலைவர்கள் கூறிய அறவழி முடிவுகளை மனிதன் ஏற்கத் தயாராக இல்லை. சாக்ரடீஸ் அமைத்துக் கொடுத்ததுபோல, சிந்தனையாளர்கள் பலர் தத்தம் பகுத்தறிவு முறைமைக்கு ஒத்தவாறு நன்மை தீமைகளைப் பற்றிய நெறி முறைகளை வகுத்துக் கொண்டார்கள். இவ்வடிப்படையில் உருவான சில அறக்கொள்கைகளை இங்கே காணலாம்:

(1) 'நல்லது என்றும் தீயது என்றும் வரையறை செய்வது தனிமனிதனின் அகநிலையைப் பொறுத்ததே. எடுத்துக்காட்டாக ஒரு மனிதன் தான் விரும்புவனவெல்லாம் நன்மை தருவன; வெறுப்பனவெல்லாம் தீமை பயப்பன எனக் கொள்ளவேண்டும்' என்பது ஒரு கொள்கை. இதைபேதான் தற்காலத்தில் 'செயல் முறை அற இயற் கொள்கை' வலியுறுத்துகிறது.

(2) நல்லது, தீயது என்பவை உள்ளுணர்வால் அறியப் பெறுபவை; இதற்குமேல் எதுவும் இதுபற்றிக் கூற இயலாது

என்பது ஒரு கொள்கை. இதனை 'அளவுடன் அமைந்த உள்ளுணர்வுக் கொள்கை' என்பர்.

(3) நன்மை, தீமை என்பன சில விதிகளை அடிப்படையாகக் கொண்டவை என்ற பொதுக்கருத்து உருவாகியது. அப்பொதுக்கருத்தின் அடிப்படையில் எழுந்த சிந்தனை இரண்டு வகையான முடிவுகளைக் கொடுத்தது.

நன்மை, தீமை என்பவை அறவிதிகளே. அவை மனித இயல்பில் அமைந்த விதிகளே. உளநூல் வழியே மனித இயல்பினை அறிய முற்படும்போது அவ்விதிகளையும் அறியலாம் என்பது ஒருவகைச் சிந்தனை தந்த கொள்கை. இக்கொள்கை உள்ளத்தியல் அடிப்படையிலான உள்ளுணர்வுக் கொள்கை எனப் பெயர் பெற்றது.

(4) உள்ளத்தியலை அடிப்படையாகக் கொள்ளாமல் அறவிதிகளை அறிவின் விதிகள் எனக் கொள்வது முன்னதற்கு எதிரான கொள்கை. இவ்வுலகின் அமைப்பே அளவையியலை அடிப்படையாகக் கொண்டது. எனவே அறஇயல் விதி என்பது அளவையியல் விதியே; அளவையியல் விதியே இயற்கைவிதி எனக் கொண்டனர்.

(5) நாம் செய்யும் செயல்களின் விளைவுகளை அடிப்படையாகக் கொண்டே நன்மை என்றும் தீமை என்றும் முடிவு செய்கிறோம் என்பதும் ஒருவகை அறவழிக்கொள்கை. இக்கொள்கையை உடையவர்கள் பெரிதும் இன்பியற் கொள்கையையே வலியுறுத்தினர். நம் செயல்களினால் விளையும் விளைவுகளினால் நம் விருப்பங்கள் நிறைவு பெறவேண்டும்; இவ்வகையால் நமக்கும் மற்றவர்களுக்கும் இன்பம் கிடைக்க வேண்டும் எனத் தம் கொள்கையை விளக்கம் செய்து காட்டினார்கள். இக்கொள்கை பயன் முதற்கொள்கை என்ற பெயரைப் பெற்றது.

அற இயற் கொள்கைகளைச் சில பகுப்பு முறைகளில் அடக்கி அறிதல்

(1) அற இயற் கொள்கைகளைச் சார்பற்ற அற இயற் கொள்கை என்றும், சார்புற்ற அற இயற் கொள்கை என்றும் பிரித்து அறிதல் ஒரு முறை.

சார்பற்ற அற இயற் கொள்கை என்பது தனித்து விளங்கும் தன்மையுடையது; இவ்வுலக முழுமைக்கும் ஏற்றதாக அமைந்தது

ஒரே அறவியல்தான். அது அழிவற்றது; எல்லா வயதுள்ள எல்லா மனிதர்களுக்கும் பொருந்துவது; மாறிவரும் சூழ்நிலைக்கும் கருத்து வளர்ச்சிக்கும் அப்பாற்பட்டு என்றும் மாறாத இயல்புடையது என்றும் அமைத்துக் காட்டுவதே சார்பற்ற அற இயற் கொள்கை.

சார்புற்ற அறவியற் கொள்கையானது சூழ்நிலைக்கேற்ற வகையில் மாறுந் தன்மை உடையது என்ற கருத்தை ஒப்புவது. சார்பற்ற அற இயல் நெறிமுறையில் நம்பிக்கை கொண்டு, அதே சமயத்தில் அறநெறி முறைகளைச் சூழ்நிலைக்கேற்ற வகையில் மாற்றி அமைத்துக் கொள்ளலாம் என வழி வகுப்பது சார்புற்ற அற இயற் கொள்கை.

(2) அற இயற் கொள்கையைப் புறநிலை அற இயற் கொள்கை என்றும் அகநிலை அற இயற் கொள்கை என்றும் பிரித்தறியலாம். புறநிலை அற இயற் கொள்கை, குறிப்பிட்ட மனிதனின் அக நிலைக்கு ஏற்றவகையில் மாறாத நிலையுடையனவாய், மனித விருப்பத்துக்கு அப்பாற்பட்ட புறநிலை முடிவுகளைக் கொண்டவைகளே அற இயற் கொள்கைகள் என்ற கொள்கையுடையது.

ஆனால் அகநிலை அற இயற் கொள்கை ஒரு குறிப்பிட்ட மனிதனின் மனநிலைமைக்கு ஏற்றவகையில் அறமுடிவுகள் மாறுந் தன்மையுடையவை எனக் கொள்ளும்.

புறநிலை அற இயற் கொள்கையானது சார்பற்ற அறநிலைக் கொள்கையைச் சார்ந்தது. அகநிலை அற இயற் கொள்கையானது சார்புற்ற அற இயற் கொள்கையைச் சார்ந்தது.

(3) அற இயற் கொள்கைகளை இயற்கை அற இயற் கொள்கை என்றும் இயற்கையல்லா அற இயற் கொள்கை என்றும் பிரித்து விளங்கிக் கொள்ளலாம்.

இயற்கை, அற இயல் விஞ்ஞான விளக்கங்களின் துணையுடன் அறக் கொள்கைகளை ஆராய முற்படுகிறது. உள்ளத்தியல் மூலம் அறக் கொள்கையை ஆராய்வது இயற்கை அற இயல். நன்மையும் தீமையும் ஒருவனுடைய உள்ளத்தின் நிலையைப் பொறுத்தவை எனக் கொள்ளும்போது இயற்கை அற இயல் ஒருவகை அக நிலை அறக் கொள்கையாக அமைகிறது.

‘இச்செயலை நான் விரும்புகிறேன்’ என்ற காரணத்தால் ‘இச்செயல் நன்மை பயக்கும் செயல்’ எனக் கொள்வது இயற்கை அற இயல் கொள்கையாக அமைகிறது.

இயற்கை அறஇயல்கொள்கையே தனிமனிதனின் அகநிலைமை உடன்கொண்டு, தன் நெறிமுறைகளை மாற்றிக் கொள்ளாத போது அது புறநிலைச் சார்புடையதென்பது விளங்கும். இவ்வாறு இயற்கை அற இயல் கொள்கையே அகநிலைச் சார்புடையதாக இல்லாமல் புறநிலைச் சார்புடையதாக அமைந்துவிடுமானால், அது இயற்கை அல்லா அற இயல் என்று கருதப்பெறும்.

ஒரு செயல் பெரும்பாலான மக்களுக்கு மிகுதியான அளவு இன்பம் தருவதாக இருந்தால், அது எல்லாராலும் சரியான செயலெனக் கொள்ளுவதற்குத் தகுதி உடையதே ஆகும். இக்கொள்கை உள்ளத்தியலை அடிப்படையாகக் கொண்டாலும், தனிமனிதனுடைய அகநிலையை ஒட்டி அமையவில்லை. எந்த ஓர் அறநெறியும் அகநிலையைச் சார்ந்திருந்தால்—தனிமனிதனுடைய விருப்பத்துக்கு ஏற்ப அமைந்துவிட்டால் அது பொதுவான அறநெறிக் கொள்கையை ஏற்க இடந் தராது. எல்லாராலும் தகுதியுடையது என்று கொள்ளுதற்குத் தகுதியுடைய ஒரு செயல் புறநிலையைச் சார்ந்ததே. எனவே, அது இயற்கையல்லா அற இயற் கொள்கை ஆகும்.

(4) அற இயற் கொள்கைகளை உளப்போக்குக் கொள்கைகள் என்றும் பயன் விளைக்கும் கொள்கைகள் என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

ஒருவர் விரும்புகின்றார் என்ற காரணத்தால் அச்செயல் நன்மை பயக்கும் என்று கொள்வது உளப்போக்குக் கொள்கை. இறைவன் கட்டளையிட்ட காரணத்தால் ஒரு செயலை நன்மைச் செயல் எனக் கருதுவதும் உளப்போக்குக் கொள்கையே. குறிப்பிட்டுக்காட்டப்பெற்ற சில விதிகளுக்கு அடங்காத கொள்கையை ஒரு பகுப்பினுள் அடக்கிக் காட்டுதற்கு அமைந்ததே உளப்போக்குக் கொள்கை.

(5) அற இயற் கொள்கைகளை, நோக்கக் கொள்கை என்றும் நோக்கமில்லாக் கொள்கை என்றும் இரு வகையாகப் பகுத்து விளக்குவதுண்டு.

ஒரு செயலின் நன்மை தீமைகள் அச்செயலினால் விளையும் பயனைப் பொறுத்தே அமைகின்றன என்று கருதுவது நோக்கக் கொள்கை ஆகும்.

ஒரு செயலைப் பற்றி அது நல்லது என்றும் தீயது என்றும் கூறுவது அச்செயலைப் பொறுத்ததே. அது தரும் பயனைப் பொறுத்தது அன்று என்று கொள்வது நோக்கமில்லாக் கொள்கை.

முடிவுரை

ஐரோப்பிய நாட்டில் அற இயற் கொள்கை, வரலாற்று முறையில் மூன்று கால அமைப்புகளில் வளர்ந்தன என்ற கருத்து விளக்கப் பெற்றது.

மேலும், அற இயற் கொள்கைகள் சில பகுப்பு முறைகளில் அமைத்துக் காட்டப்பெற்றன. அற இயற் கொள்கைகளைப் பகுப்பு முறைகளில் விளங்கிக் கொள்ளுதல், பின்னர் வரும் அற இயல் விளக்கங்களைப் புரிந்து கொள்வதற்குத் துணை புரியும்.

(2) மனச் சான்று அல்லது உள்ளுணர்வுக் கொள்கை

(2) (அ) மனச் சான்று பற்றிப் பல்வேறு அறிஞர்களின் கருத்துகள்

முன்னுரை

உயிரினுடைய ஆற்றலே அறவொழுக்கத் திறமையாக இருக்கிறது. ஒரு செயலின் சரியாந் தன்மையையும் தவறாந் தன்மையையும் தெரிந்து சொல்வது அதுவே. அத்தகைய உயிராற்றலே மனச் சான்று என்று பேசப் பெறுகிறது. உயிரினுடைய அற வொழுக்கம் சார்ந்த அறிவுக்கும் மனச் சான்றுக்கும் வேறுபாடு இல்லை. மனச் சான்று என்பதைப்பற்றி அற இயல் ஆய்வாளர்கள் பலவாறான கருத்துகளை வெளியிட்டுள்ளார்கள். அவைகளையெல்லாம் முறைப்படுத்தித் தெரிந்துகொள்வது அற இயற் கொள்கைகளை அறிந்து கொள்வதற்குத் துணை செய்யும்.

இன்பியற் கொள்கையினர்

மனச் சான்று என்ற ஒருவகைச் சிறப்புத் தனிக்கூறு இருப்பதை இன்பியற் கொள்கையினர் மறுக்கிறார்கள்.

தன்னலஞ்சார் இன்பியற் கொள்கையினர்

தனிமனிதனுடைய தன்னல இன்பமே அவனுடைய உயர்ந்த நன்மை; தன்னைத் தானே காதலித்தல் என்ற உணர்வே ஒருவனை அவன் இன்பத்தைத் தேடிப் பெறுவதற்கு வலியுறுத்துகிறது. தனிமனிதனுடைய முன்யோசனை அறிவானது அவனுடைய பல்வேறு இன்பங்களையும் அளவு செய்து காட்டி, அவனுடைய தனியான, உயர்ந்த இன்பத்துக்கு மிகவும் பொருந்துவதாக இருப்பது எது என்பதை அவனுக்கு அறிவிக்கிறது. எனவே தன்னலஞ்சார் இன்பியற் கொள்கையினரைப் பொறுத்தவரையில் மனச் சான்று என்பது ஒருவகையான தெரிந்து கொள்ளுதல், கற்பனை, அனுமானம் ஆகியவைகளின் தொகுப்பு என்பதே. மனச் சான்று என்பது வேறு ஒருவகைத் தனித் திறமையோ துறையோ அன்று என்பதே அவர் கொள்கை.

விரிந்த பயன்முதற் கொள்கையினர்

உயர்ந்த நன்மை என்பது பலருக்கும் பொதுவாய இன்பமே; இரக்க உணர்வு என்பதே மனச் சான்று. அதுவே தெரிந்து கொள்ளுதல், கற்பனை, அனுமானம் ஆகியவைகளை விளக்க முறச் செய்கிறது.

தன்மை இயலாத விரிந்த பயன்முதற் கொள்கையினர்

கடமையைச் செய்யவேண்டும் என்பதை ஒரு மனிதனின் உள்ளிருந்து வலியுறுத்துவது அவனுடைய மனத்திலுள்ள ஒரு வகை உணர்ச்சியே. துன்பம் பற்றிய உணர்ச்சியானது பெரும் பாலும் மேற்போக்காக அமையும்போது கடமையாற்றுதற் குரிய விதிகளை மீறச் செய்கிறது. கடமைபற்றிய உணர்ச்சி யானது, விருப்பமில்லாத நிலையில், தன்னைத்தானே கடமை என்ற வெற்று எண்ணத்தோடு மட்டும் இணைத்துக்கொண்டு, அது செயல்படுவதற்குரிய ஒரு வகைக் குறிப்பிட்ட செயல் வடிவத்தை அமைத்துக் கொடுக்காத நிலையில் இருப்பதே மனச் சான்று.

அளவு இயலான பயன்முதற் கொள்கையினர்

மனச் சான்று என்பது ஒரு போலி வகையிலான இருப் பினைக் கொண்ட ஒன்று. இதனைத் தனிச் சிறப்பியலான ஒரு வகை அறிவுத்துறை என்பது பெருந்தாது.

படிமுறை வளர்ச்சியிலான் இன்பக் கொள்கையினர்

மனச் சான்று என்பது சமுக இயலான இயல்பூக்கம். அது 'இரக்கம்' என்ற பெயரில் நம் முன்னோர்களிடமிருந்து மரபு வழியில் நம்மை வந்தடைகிறது. மனச் சான்று என்பது தனி மனிதனின் உள்ளார்ந்த தன்மையாக இருந்தாலும் இன உணர்ச்சி யால் விரும்பி ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமைந்த ஒன்று. தனிமனிதனிடத்தில், பொதுமக்கள் கருத்துகளின் பிரதிபலிப்பே மனச் சான்று என்று கொண்டார்கள்.

உள்ளுணர்வுக் கொள்கையின் ஒரு பிரிவாகிய அறநுகர்வு கொள்கையினர்

மனச் சான்று என்பது ஒருவனின் அகத்தே அமைந்த ஒழுக்க வுணர்ச்சி. அது ஒவ்வொரு செயலினுடைய சரியான அல்லது தவறான தன்மைகளை உள்ளுணர்வு முறையில் தேர்ந்து தெரி

விக்கிறது . அது தன்னிடமிருந்து தோற்றுவிக்கும் உடன்படுதல் உடன்படாமை என்ற உணர்ச்சிகளின் மூலம் செயல்படுகிறது. அது தவறுபடாத ஒன்று.

அழகுணர்ச்சிக் கொள்கையினர்

உள்ளுணர்வுக் கொள்கையின் ஒரு பிரிவினராகிய அழகுணர்ச்சிக் கொள்கையினர், மனச்சான்று என்பது எந்த ஒன்றையும் அழகுணர்ச்சி நிலையில் நின்று அதன் நன்மை தீமைகளை வரையறுப்பது என்று கொண்டார்கள். மனச் சான்று தரும் முடிவு என்றும் தவறுபடாது.

அறிவியலான உள்ளுணர்வுக் கொள்கையினர்

மனச் சான்று என்பது ஒருவகை அறிவியலான ஆற்றல் அது உள்ளுணர்வாக நின்று, பொதுமையிலான அழியாத மாறாத அற ஒழுக்கக் கூறுகளைத் தேர்கிறது. அது தேர்வு செய்யும் தன் ஆற்றலில் என்றுமே தோல்வி அடைந்ததில்லை. ஆகையால் அது அறிவிக்கும் அற இயல் தேர்வு என்றுமே தவறுபட்டதில்லை.

உள்ளுணர்வுக் கொள்கையினராய பட்லர் கருத்து

தன்னைத்தான் காதலித்தல், இரக்கம், மனச்சான்று என்ற மூன்றும் மனித இயற்கையின் மூன்று கூறுகள். அவைகள் உறுப்பியல் நியதியின் வண்ணம் இணைந்துள்ளன. மூன்றும் அறிவியலான அடிப்படைக்கூறுகளே. ஏனைய இரண்டைவிட மனச்சான்றுதான் உயர்ந்தது. அதுவே சரியான தன்மை என்பதன் இலக்கண வரையறைகளைப் பிரதிபலிக்கக்கூடியது. ஏனைய இரண்டையும் சரியான நெறியில் நிலைநிறுத்தவும் செயல்படச் செய்யவும் வல்லது அதுவே. இவைகளே பட்லர் என்பார் மனச்சான்று பற்றிக் கொண்ட முடிவுகள்.

உள்ளுணர்வுக் கொள்கையின் வேறு ஒரு பிரிவினர், மனச்சான்று என்பது உலக அமைப்பு என்று சொல்லப்பெறும் பொதுமை இயல்பைச் சார்ந்தது; ஆயினும் அது தனிமனிதனிடம் பொதுமை இயல்பின் ஒரு கூறாக அமைந்துள்ளது என்று கருதுகின்றனர்.

காண்ட் என்பாரின் கருத்து

காண்ட் என்பார் மனச் சான்று என்டதை அறம்பற்றிய அறிவு எனக் கொண்டார். ஒரு வகையில் அறம்பற்றிய செயல்முறை

அறிவு என்றும் கொள்ளலாம். அதுவே, சார்பற்ற நிலையில் அமையும் விதிகளாக வருகின்ற அற இயல் விதிகளை அவற்றுக்குரிய மேல்வரம்புகளை அமைத்துக் கொடுக்கிறது. அவ்வாறே செயல்களின் சரி, தவறு ஆகியவைகளுக்குரிய தன்மைகளை வரையறை செய்கிறது. மனச் சான்று என்பது இயற்றிநிலை, செயல்நிலை ஆகியவைகளை இணைக்கும் அற இயலறிவு.

தன்னிறைவுக் கொள்கையினர்

தன்னிறைவுக் கொள்கையினர், மனச்சான்று என்பதை ஒரு வகைத் தனித் திறமை என்று கொள்ளவில்லை. மனச் சான்று என்பது ஒருவகை முழுமைத் தன்மையானது. அறிவுத் தன்மையுடைய உயிரின் அறிவியலான, தனி நிகழ்ச்சிகளை அல்லது தனி வெளிப்பாடுகளை அல்லது தனித் தன்மையிலான விருப்புச் செயல்களைச் சரி அல்லது தவறு என்ற வகையில் தீர்ப்புச் செய்யும் அறிவியலான ஒன்று எனக் கொண்டனர்.

தன்னிறைவுக் கொள்கையின் ஒரு பிரிவினர்

மனச் சான்று என்பது ஒருவகை அறிவியலேயாயினும் அது சாதாரண அறிவியலை நோக்க மாறுபட்டது. மனச் சான்று பிழைபடாத அறிவியல் நிலை. அது கல்வி முதலிய செயல்களால் வளர்த்துக் கொள்ளக் கூடியதன்று.

மேலும் மனச் சான்று என்பதை தொடக்கத்தில் முழுமையான வளர்ச்சியுடன் இருப்பதாகத் தெரிந்து கொள்ள இயலவில்லை. ஆனால் வளர்ச்சிக்கும் கல்வி முதலியவற்றால் ஆய்வதற்கு ஈடு கொடுப்பதும் ஆக அமைந்ததே மனச் சான்று.

முடிவுரை

மனச் சான்று பற்றிய பலவேறு அற இயற்கொள்கையினரின் கருத்துகள் காட்டப் பெற்றுள்ளன.

(2) (ஆ) உள்ளுணர்வின் வகைகளும் இயல்புகளும்

உள்ளுணர்வு என்றால் என்ன?

மனச் சான்று என்பதும் உள்ளுணர்வு என்பதும் ஒரு பொருள் குறித்த இரு சொற்கள். மனச் சான்று என்பது ஒருவகை அக ஆற்றலைக் குறிக்கும் சொல்லாகவும், அந்த அக ஆற்றல் செயற்படும்போது, உள்ளுணர்வு என்பது அக ஆற்றலின் செயற்பாட்டு நிலையைக் குறிக்கும் சொல்லாகவும் வேறுபடுத்திக் காட்டி விளக்குவதும் உண்டு.

பகுத்தறிவு கொண்டு பகுத்தாய்ந்து அறியும் முறையோ அல்லது அதுபோன்ற வேறு எந்த ஒருவகை அறியும் முறையோ என்பதாக இல்லாமல், எத்தகைய இடையீடும் இல்லாமல் (துணைக்கருவிகள் இல்லாமல்) ஒரு பொருளைப் பற்றி உடனடியாக நாம் தெரிந்து கொள்வதே உள்ளுணர்வு எனப்பெறும். அவ்வாறே தனிநிலைச் செயல்களினுடைய சரியாந் தன்மை அல்லது தவறாந் தன்மை ஆகியவைகளை, அச்செயல்களினுடைய முடிவுநிலைகளாகிய குறிக்கோள்களுடன் இணைத்துப் பார்ப்பதோ அல்லது அச்செயல்களினுடைய பின் விளைவுகளாகிய நன்மை அல்லது தீமை என்பனவற்றுடன் இணைத்துப் பார்ப்பதோ இல்லாமல், உடனடியாகத் தெரிந்து கொள்வதே அற இயலான உள்ளுணர்வு எனப்பெறும்.

அறவழி உள்ளுணர்வின் வகைகள்

அறவழி உள்ளுணர்வுகள் மூன்று வகைப்படும். தனித்த உள்ளுணர்வு, பொதுமை உள்ளுணர்வு, உலக இயலான உள்ளுணர்வு என அறவழி உள்ளுணர்வுகள் மூன்றும் விளக்கம் செய்யப் பெறுகின்றன.

தனித்த உள்ளுணர்வு

குறிப்பிட்ட ஒரு செயலை அது சரியானது என்றோ தவறானது என்றோ நேரடியாக அறிதலை தனித்த உள்ளுணர்வு என்பர். மனிதனின் எல்லா வகையான செயல்களையும் தனித் தனியே நிறுத்தி, அமைத்து அறியும் காரணத்தால் இத்தகைய அறிமுறையைத் தனித்த உள்ளுணர்வு எனக் கொண்டார்கள்.

மகாத்மா காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த ஒரு தனித்த செயலைத் தவறு என நாம் நம் உள்ளுணர்வினால் முடிவு செய்கிறோம். நம்முடைய இந்த முடிவு இந்த ஒரு தனிச் செயலை அடிப்படையாகக் கொண்டதே அல்லாமல் சுட்டுக் கொல்லுதல் என்ற செயலையே தவறு என நாம் முடிவு செய்ய வில்லை. காட்டில் வாழும் சிங்கம் நாட்டில் நுழைந்து மக்களை அடித்துக் கொல்லும்போதும் அச்சிங்கத்தைச் சுட்டுக் கொல்லும் போதும் அதனையும் தவறு என நாம் முடிவு செய்து விட்ட தாகக் கொள்ளக் கூடாது. தனித்த ஒரு குறிப்பிட்ட செயலைப் பற்றிய முடிவை வேறு செயலுக்கு இணைத்து முடிவு செய்யக் கூடாது. இத்தகைய தனித்த உள்ளுணர்வைக் 'காட்சி உள்ளுணர்வு' எனவும் பெயரிட்டுக் காட்டுவர்.

பொதுமை உள்ளுணர்வு

'இனியவை பேசுதல் எப்போதும் நல்லது' என்பதை நம் உள்ளுணர்வால் தெரிந்து கொள்கிறோம். இது ஒரு வகை பொதுச்செயல். எல்லாருக்கும், எக்காலத்துக்கும், எல்லாச் சூழ் நிலைக்கும் பொருந்துவதாக உள்ள ஒரு செயலை எடுத்து, இது சரியானதா தவறானதா என்பதை பகுத்தறியாமலேயே, நேரடியாக நம் உள்ளுணர்வினால் அறிகிறோம். இவைகளைப் பொது உள்ளுணர்வுகள் அல்லது சித்தாந்த உள்ளுணர்வுகள் எனப் பிரித்துள்ளார்கள்.

உலக இயலான உள்ளுணர்வு

உலக அமைப்பினை முழுமையாக அமைத்துக் கொண்டு அதன் ஆதார விதிகளையோ, உலக மக்களின் எல்லா வகையான செயல்களையும் இணைத்து நிற்கும் சில மூல அற இயல் நெறிகளையோ எடுத்து அமைத்து, அது சரியானதா அல்லது தவறானதா என்று அறிய முற்படும்போது, நமக்குப் பயன்படும் உள்ளுணர்வே உலக இயல் உள்ளுணர்வு அல்லது பிரபஞ்ச இயல் உள்ளுணர்வு என்று பெயரிட்டு விளக்குவர். 'எல்லா உயிர்களும் செயற்பாட்டின் மூலமாகத்தான் உயர்நிலை எய்த முடியும்' என்பது ஓர் உலக இயலான அல்லது பிரபஞ்ச இயலான கருத்து. இது சரியா அல்லது தவறா என அறிய முற்படும்போது நமக்குத் துணை புரிவது உலக இயலான உள்ளுணர்வே.

மேலே குறிப்பிடப் பெற்ற மூவகை உள்ளுணர்வுகளையும் ஒருவன் பெற முடியும்.

தனித்த உள்ளுணர்வின் இயல்புகள்: மனச் சான்று காட்டும் பாதையில் செல்ல வேண்டும் என்பது அறவுரை. மனச் சான்று என்பது ஒருவகையில் இயல்பாக அமைந்து வேண்டும்போது தானாகவே செயல்படும் ஒருவகை இயற்கை உணர்வு. மனிதன் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒரு நல்ல செயலைத் தேர்ந்தெடுக்க வேண்டுமானால் அவன் சிந்திக்க வேண்டும். சூழ்நிலையை ஒட்டிச் சிந்தித்தல் எந்த அளவுக்குச் சிறப்பாக அமையும்! எனவே, இத்தகைய இடர்ப்பாடான சமயங்களில் மனச் சான்று அளித்த ஒன்றை ஏற்றுக்கொள்வது தவிர வேறு வழி இல்லாதவனாகிறான்.

மேலும், சில குறிப்பிட்ட சூழ்நிலைகள் புதியனவாக அமைந்து விடுகின்றன. அத்தகைய சூழ்நிலைகளில் பொருத்தமுற அமை

யக்கூடிய அறச் செயல்களைத் தேர்ந்தெடுக்க இயலாதவனாக மனிதன் அமைந்துவிடுகிறான். அப்போதெல்லாம் அவன் தன்னுடைய மனச்சான்றையே பலமுறை உதவிபுரிய வேண்டுகிறான். அற உணர்வுடன் கூடிய சிந்தனையினால் பெறலாம் என்று கூறினாலுங்கூட, ஒன்றும்சிந்திக்கமுடிவதில்லை. அல்லதுசிந்தித்தாலும் தேர்வு செய்ய முடிவதில்லை. இத்தகைய சூழ்நிலைகளில் அறத்திற்கு ஏற்ற செயல்களைத் தேர்ந்தெடுப்பது உள்ளுணர்வு ஒன்றினால்தான் முடியக்கூடியதாக அமைகிறது.

அறவழியில் இத்தகைய உள்ளுணர்வுகள் பெரும் பயனை அளிக்கின்றன. சில சூழ்நிலைகளில் உடனடியாகச் செயற்பட வேண்டிய நிலைமை உண்டாகும் போதெல்லாம் தனித்த உள்ளுணர்வுகளே ஒருவனுக்கு வழிகாட்டியாக அமைகின்றன. தனிச் சிறப்புள்ள சூழ்நிலைக்கு ஒத்தவகையில் சிறந்த ஓர் அறச் செயலைத் தேர்ந்தெடுப்பதற்கு உள்ளுணர்வைத் தவிர வேறு வழிகாட்டி இல்லை.

சிற்சில சமயங்களில் இத்தகைய உள்ளுணர்வுகள் தவறான கருத்தை அறிவித்து விடுவதும் உண்டு என இதனை மதிப்பீடு செய்பவர்களும் உளர். அறப் பொருத்தத்தோடு வேறு சில கருத்துகளையும் இணைத்துவிடுவதனாலேயே அத்தகைய தவறு நேர்கிறது. அறப் பொருத்தத்தை உள்ளுணர்வு ஒன்றே எடுத்துக் காட்டும் ஆற்றல் வாய்ந்தது என்று கொள்வது பெரும்பாலோர் கொண்ட கொள்கை.

பொதுமை உள்ளுணர்வின் இயல்புகள்: பொதுமை உள்ளுணர்வினால் பொதுமை அறச்செயல்கள் நேரடியாக உணரப் பெறுகின்றன என்ற கருத்து ஒரு வலிவுடைய கருத்தாகத் தோன்றவில்லை. பொது உள்ளுணர்வுகளை, உள்ளுணர்வுகளாகக் கொள்ளாமல் சமுதாயத்துக்குப் பொதுவாக மொத்தத்தில் நன்மை விளைப்பதையோ, விளைக்காததையோ ஒட்டி அமைந்த அனுபவத்தால் அமைந்த கருத்துகளே என்று பலரும் கொள்கின்றனர்.

மேலும், தனித்தனிச் சூழ்நிலைகளில் தனிமனிதன் உண்மை பேசுவது நல்லது எனக் கருதுகிறான். இவ்வாறே பல்வேறு சூழ்நிலைகளிலும், உண்மை பேசுவது நல்லது என்று பலமுறை உள்ளுணர்வில் அறிந்து செயற்படுகிறான். பலமுறை ஒரே உள்ளுணர்வைக் கொள்ளும் ஒருவன் தன் அனுபவத்திலிருந்து, 'உண்மை

பேசுவது எப்போதுமே நல்லது' என்ற பொது விதி ஒன்றை அமைத்துக்கொள்ள முடிந்தவனாக அமைகிறான். தனித்த உள்ளுணர்வின் அனுபவ முதிர்ச்சியே பொதுவிதியைத் தேர்வு செய்வதாக அமைந்தது.

ஆயினும், பொதுமை விதிகள் சில உண்டு. அவைகள் தனித்த உள்ளுணர்வினால் பெறக்கூடியவை அல்ல; அவைகளை வழங்கும் ஆற்றல் உடைய பொதுமை உள்ளுணர்வு ஒன்று உண்டு என்று அற இயல் அறிஞர்கள் வலிமையாகக் கொள்கின்றனர்.

உலக இயலான உள்ளுணர்வின் இயல்புகள் : உள்ளுணர்வினால் அறியும் அருவக் கருத்துகளையே நம் அறிவு அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அற இயலை ஒரு மேல்நிலை விஞ்ஞானமாகக் கருதினால் அத்தகைய குறிக்கோளை உள்ளுணர்வினால், அமையும் சில உண்மைகளைக் கொண்டுதான் வரையறை செய்ய இயலும். பகுப்புமுறை, தொகுப்புமுறை ஆகியவைகளாற் கிடைக்கும் பொது உண்மை, தனி உண்மை ஆகியவைகளெல்லாம் உலக இயற் பொதுமை வாய்ந்த உள்ளுணர்வினாலேயே தேர்வு செய்யப் பெறுகின்றன என்று கொள்ளுதல் வேண்டும்.

முடிவுரை

(1) குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் குறிப்பிட்ட சில செயல்களே அறப் பொருத்தம் உடையனவாகக் காணப்பெறுகின்றன. அத்தகைய அறப் பொருத்தத்தை வேறு எவ்வகை அறிவினாலும் பெற முடியாது; உள்ளுணர்வினால்தான் பெறமுடியும்;

(2) குறிப்பிட்ட சில செயல்கள் சிலவகை இயற்கை விதிகளுடன் பொருந்துவனவாக அமைகின்றன. சில செயல்கள் இயற்கை விதிகளுடன் பொருந்துவனவாக அமையவில்லை. இயற்கை விதிகளுடன் செயல்களின் இணைப்பை அமைத்துத் தேர்ந்தெடுப்பது உள்ளுணர்வு ஒன்றனால்தான் முடியக்கூடிய செயல்.

(3) இப்படிச் செய்யவேண்டும், இதைச் செய்யக் கடமைப் பட்டிருக்கிறோம் என்றிவ்வாறான செயல்களை நாம் வெறும் புறநிலைக் காட்சியால்கூட அமைத்து அறிந்துகொள்ள முடியும். ஆனால் 'இப்படித்தான் செய்ய வேண்டும்' (ought) என்பது போன்ற உயர்நிலை முடிவுகளை உளங்கொண்ட அறச்செயலை உள்ளுணர்வைக் கொண்டு மட்டுமே அறிய முடியும்.

இம்மூன்று வகைகளாலும் அற இயலுக்கு உள்ளுணர்வு எவ்வாறெல்லாம் உதவும் இயல்புகளைக் கொண்டு விளங்குகிறது என்பதை அறியலாம்.

(2) (இ) உள்ளுணர்வு என்பது பகுத்து ஆராய முடியாதது என்ற அடிப்படையிலான உள்ளுணர்வுக் கொள்கை (Dogmatic or Unphilosophical Intuitionism)

முன்னுரை

மனச் சான்று என்றால் என்ன என்பது பற்றியும் மனச்சான்று பற்றிய பல்வேறு அறிஞர்களின் கருத்துகள் இவை இவை என்பது பற்றியும் முன்னரே விளக்கப்பெற்றுள்ளது. மனச் சான்று என்பதை அடிப்படையாகக் கொண்டு எழும் கொள்கையே உள்ளுணர்வுக் கொள்கை.

உள்ளுணர்வுக் கொள்கையை இரண்டு வகைகளாகப் பிரித்து விளக்கம் கூறுவார்கள். பகுத்தறிவு, அறிவாராய்ச்சி என்பனவற்றோடு இயைபுபடாத உள்ளுணர்வுக் கொள்கை என்றும்; பகுத்தறிவு, அறிவாராய்ச்சி என்பவைகளோடு இயைபுடைய உள்ளுணர்வுக் கொள்கை என்றும் இரண்டாகப் பிரிப்பார்கள்.

முதற்பிரிவை ஆங்கிலத்தில் 'Dogmatic or unphilosophical Intuitionism' என்று சொல்லும்போது இப்பிரிவு உள்ளுணர்வுக் கொள்கையானது மூடநம்பிக்கையுடையது, பகுத்தறிவு அறிவாராய்ச்சி என்பவைகளோடு பொருந்தாதது என்று கருதி, உள்ளுணர்வுக் கொள்கையே மூடத்தன்மையுடையது என்று எண்ணி விடலாகாது. 'Dogmatic or Unphilosophical' மூடநம்பிக்கை அறிவாராய்ச்சிக்கு இயையாதது என்ற அடைமொழிகள் அக்கொள்கைக்கு உரியன அல்ல.

உள்ளுணர்வு என்பதை இரண்டு வகைகளில் விளக்குகிறார்கள். உள்ளுணர்வு என்பது இன்னது என்று பகுத்து ஆராய இயலாத ஒன்று. அவ்வாறே அந்த உள்ளுணர்வு ஒரு செயலைச் சரி என்றோ தவறுஎன்றோ சொல்ல முற்படும்போது வேறு எந்த ஒரு காரணத்தோடும் இணைத்து ஆராய்ந்து சொல்லும் முறையை மேற்கொள்ளாமல் உடனடியாக ஒரு முடிவை வெளிப்படுத்தி விடுகிறது; இதற்குமேல் மறு பேச்சில்லை என்ற முறையில் உள்ளுணர்வு தந்தமுடிவை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டியதாக

இருக்கிறதேயன்றி, வேறு எந்த அறிவுமுறையையும் இணைத்து ஆராய இடம் கொடுப்பதே இல்லை.

இனி, உள்ளுணர்வை வேறு வகையில் விளக்க முற்படுகிறவர்களும் உண்டு. உள்ளுணர்வைப் பகுத்து ஆராய முடியும் என்று கூறினார்கள். ஒரு செயலைச் சரி என்றோ தவறு என்றோ நேரடியாக, உடனடியாக முடிவு செய்யும் ஆற்றல் உள்ளுணர்வுக்கு உண்டு என்றாலும் உள்ளுணர்வைப் பகுத்து ஆராய்வதன் மூலம் விளக்கி அறியமுடியும்; உள்ளுணர்வு என்பது பகுத்தாராய்வதோடு இயைபுடையதே என்று விளக்கினார்கள்.

எனவே, அறிவாராய்ச்சியோடு இயைந்தது அல்லது இயையாதது என்ற அடைமொழிகளை உள்ளுணர்வைப் பற்றிய விளக்கத்துக்கு உரியனவாக அமைத்துக்கொள்ள வேண்டுமேயன்றி, கொள்கைக்கு உரிய அடைமொழிகளாக இணைக்கக் கூடாது.

அறிவாராய்ச்சியுடன் இயையாதது எனப்பெறும் உள்ளுணர்வு சார்ந்த உள்ளுணர்வுக் கொள்கை

பொதுமைக் கோட்பாடுகள்

மனச் சான்று எனப்பெறும் உள்ளுணர்வு செயலினுடைய சரியான அல்லது தவறான தன்மையை அச்செயலின் குறிக்கோள் கொள்கையுடன் இணைத்தோ அல்லது அச்செயலின் பின் விளைவுகளோடு இணைத்தோ முடிவு செய்யாமல் நேரடியாக, உடனடியாக முடிவு செய்து விடுகிறது. இதுவே உள்ளுணர்வுக் கொள்கையின் பொதுக் கருத்து. செயலினுடைய சரியாம் தன்மை அல்லது தவறாம் தன்மை அச்செயலின் உள்ளிருப்பாகவே அமைந்துள்ளது. அவைகள் (சரியாம் தன்மையும் தவறாம் தன்மையும்) செயலின் உள்ளார்ந்த பண்புகளே. ஆகையால் செயலுக்கு வெளியே இருப்பனவாகிய அல்லது புறத்தே அமைவனவாகிய குறிக்கோளை அடிப்படையாக அமைத்தோ செயலின் பின்விளைவுகளை அடிப்படையாக அமைத்தோ ஆராய வேண்டிய அவசியம் இல்லை. அறப்பண்பு அல்லது அறத்துறை அறிவு என்பது தனித்தன்மை வாய்ந்தது; தானே தனக்கு மூலமாம் தன்மையது; வேறொன்றிலிருந்து உண்டாக்கப் பெற்றதோ வேறொன்றிலிருந்து அனுமானித்து இணைக்கப் பெற்றதோ அன்று.

இயல் அறிஞராகிய மூர் ஹெட் (Muirhead) என்பார் உள்ளுணர்வுக் கொள்கையின் பொதுமை இயல்புகள் சிலவற்றை எடுத்து விளக்கியுள்ளார்,

மனச் சான்று என்பது தனித்தன்மை வாய்ந்த சிறப்பாற்றல், சார்பற்றது, தற்சுதந்தரமானது. அதனுடைய தீர்ப்புகள் பகுத்தறிவு முறை போன்ற முறையை அடிப்படையாகக் கொள்ளாமல் நேரடியாகவும் உடனடியாகவும் அமைக்கப் பெற்றவை. அதனுடைய ஆதிக்கத் தன்மையும் அதிகாரத் தன்மையும் வேறு எந்த ஒன்றையும் எதிர் நோக்கியனவாக அமைவன அல்ல. அறிவுடைமையைத் தன்னுள் அடக்கி மேலெழுந்து நிற்கும் மனச் சான்று உலகியலான பொதுமைத் தீர்ப்புகளையும் வழங்கும் ஆற்றலுடையது. இக்கொள்கை, பயன் உள்ளிட்ட கொள்கையோடு முற்றிலும் மாறுபட்டதே.

உயர்நிலையாயினும் தாழ்நிலையாயினும், எல்லா நிலையி லும் அமைந்த ஒழுக்க உணர்வுடைய எல்லாரிடத்திலும் மனச் சான்று என்ற ஒன்று தங்கிச் செயலாற்றுகிறது என்பதைக் காணலாம். ஆனால் எல்லாரிடத்திலும் ஒரே மாதிரியான வளர்ச்சி நிலை பெற்ற மனச்சான்றே இருக்கிறது என்று கொள்ள முடியாது.

பகுத்தறிவு அறிவாரய்ச்சி என்பவைகளோடு இயைபுபடாத உள்ளுணர்வுக் கொள்கையானது இரு பிரிவு பெற்ற கொள்கை களைக் கொண்டதாக அமைகிறது. அவை: 1. அற நுகர்ச்சிக் கொள்கை' 2. அழகுணர்ச்சிக் கொள்கை. அவைகளை முறையே காணலாம்,

(1) அற நுகர்ச்சிக் கொள்கை (Moral Sense Theory)

ஷாப்டிஸ்பரி (Shaftesbury), ஹட்சீசன் (Hwtcheson), பட்லர் (Butler) ஆகியோர் அற நுகர்ச்சிக் கொள்கையை ஒப்புக் கொள்பவர்கள்.

ஷாப்டிஸ்பரி என்பார் மனிதனிடத்திலுள்ள நற்பண்பினைக் குறிப்பிடும்போது, அவனிடம் இரண்டு வகையான இயற்கை விருப்பங்கள் உள்ளன என்று குறிப்பிடுகின்றார். (1) பிறரைப் பற்றிய இயற்கை விருப்பம். (கருணை, இரக்கம் முதலியன இதனுள் அடங்கும்) (2) தன்னைப்பற்றிய இயற்கை விருப்பம்.

(வாழ விரும்புதல்அவாக் கொள்ளல் போன்றவை இதனுள் அடங்கும்.) இந்த இரண்டுவகை இயற்கை விருப்பங்களையும் தத்தம் எல்லை கடவாமல் நிறுத்தவும், அவைகளைப் பகுத்தறிவினால் ஆராயவும் இயலும். இந்த இரண்டுவகை விருப்பங்களையும் இணைக்கும்போது ஒரு புதுவகை விருப்பம் உண்டாயிற்று. அதுவே 'அற நுகர்ச்சி அறிவு' என்றார்.

அற நுகர்ச்சி அறிவை, அற நுகர்ச்சியாக மாற்றி ஏனைய புலன் நுகர்ச்சியோடு இணைத்து வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அப்படி வளர்க்க முடியும் என்றும் கூறினார். இக் கருத்தினாலேயே இக் கொள்கைக்கு அற நுகர்ச்சிக் கொள்கை என்ற பெயரமைந்தது.

அறஉணர்வுக் கொள்கைக்கும் அற நுகர்ச்சிக் கொள்கைக்கும் உள்ள வேறுபாட்டினை நன்றாகத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

அற உணர்வு என்பது அறிவு என்பதனோடு தொடர்புடையது. அற நுகர்ச்சி என்பது சுவை உணர்ச்சிபோல, புலனுகர்ச்சி போல உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது.

அற உணர்வு என்பது அற இயலறிவு. அது தனிமனிதனுடைய தனிச் செயலை அறிவாராய்ச்சி முறையில் ஆராய்ந்து அது சரி அல்லது தவறு என அதன் தகுதியை வரையறுத்துச் சொல்வது. அற நுகர்ச்சி என்பது அறிவுக்கூற்றின் அடிப்படையில் அமைவது அன்று. அது இச்சைக் கூற்றின் அடிப்படையில் அமைவது. அறிவுக் கூறு வேறு;உணர்ச்சிக் கூறு என்று சொல்லப்பெறும் இச்சைக்கூறு வேறு. அறிவுக்கூறு என்பது காரண காரிய இயைபு, முன் பின் இயைபு போன்ற பலவகை இயைபுகள், பிற கருத்தமைவுகள் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதன் மூலம் சில முடிவுகளை, சிறப்பாகத் தகுதியை வரையறு செய்வது. அற இயல் அறிவுக் கூற்றிதனைப் பற்றி இயங்கும்போது, வாழ்வின் குறிக்கோளை வரையறை செய்து, அதன் அடிப்படையில் தனி மனிதனின் தனிச் செயலின் தகுதியை வரையறை செய்வது. சரி என்பதும் தவறு என்பதும் தனிச் செயலின் தகுதிப்பாட்டினை விளக்குஞ் சொற்கள். தகுதியை வரையறை செய்வது அறிவுக் கூறு. அற உணர்வு என்பதைத் தூய அறிவை அடிப்படையாகக் கொண்டது எனக் கூறுவது இயல்பு. ஆனால், அற நுகர்ச்சிக் கொள்கையானது அற உணர்வு என்பது அறிவை அடிப்படையாகக் கொண்டது அன்று; அது சுவையுணர்ச்சி, புலனுணர்ச்சி

என்பதுபோல இச்சையை (feeling) அடிப்படையாகக் கொண்டது. எனவே, அற ஒழுக்கத்தை மதீப்பீடு செய்வதற்கு அற உணர்ச்சியே போதுமானது. அழகான செயல் என்பதே சரியான செயல் என்ற விளக்கத்தை அமைக்கிறது; அருவருப்பான செயல் என்பதே தவறான செயல் என்ற முடிவைத் தருகிறது. அழகும் அருவருப்பும் உணர்ச்சிக் கூறுகள். புலனுணர்ச்சியைப் போன்ற இச்சைக் கூற்றின் அடிப்படையிலேயே அற இயல் தகுதியை — மதிப்பீட்டினை வரையறை செய்துவிடலாம் என்று கூறுவதே அற நுகர்ச்சிக் கொள்கை.

அறிவுக்கூறுகளை, உலக நிலையைத் தழுவிய பொதுமைத் தன்மை உடையன என்ற விளக்கத்தை அமைப்பர். அறிவுக் கூற்றின் ஆய்வினால் அமையும் முடிவு அனைவருக்கும் பொருந்துவதாக அமையும். உணர்ச்சிக் கூறு தனிநிலை வேறுபாடு உடையது. ஒரு மனிதனின் சுவையுணர்ச்சி அடுத்த மனிதனின் சுவைஉணர்ச்சியோடு இணைந்த நிலையில் பொதுமைத் தன்மை உடையதாக அமையாது; தனிமனித உணர்ச்சிகளுக்கு ஏற்ப ஏற்றத் தாழ்வுகளுடனேயே அமையும். இந்த அடிப்படையிலேயே, அற உணர்ச்சியானது எல்லாரிடத்திலும் ஒரே மாதிரியாக அமையாமல் வேறுபட்டிருப்பதற்குக் காரணம், அது அறிவுக்கூற்றின் அடிப்படையில் அமைந்தது அன்று; சுவை நுகர்ச்சிக்கூறு எனப் பெறும் இச்சைக்கூற்றின் அடிப்படையில் தோன்றியது என்று விளக்கம் கூறுகிறது அறநுகர்ச்சிக் கொள்கை.

அறிவு தானே ஒன்றன் தகுதியை வரையறை செய்யும் ஆற்றலுடையது; உணர்ச்சிக்கு அத்தகைய ஆற்றல் உண்டா என்ற வினாவை எழுப்புவர். ஷாப்டிஸ்பரி இவ்வினாவை ஏற்று அதற்குரிய விடையையும் தருகிறார்.

தேத்தண்ணீரைச் சுவைத்தறிபவனை (tea taster) எடுத்துக் காட்டாகக் கொள்கிறார். அவன் முதன்முதலில் மணத்தை நுகரும் புலனைப் பயன்படுத்துகிறான். பின்னர், பயிற்சி காரணமாக, தேத்தண்ணீரின் மணத்திலிருந்தே தேயிலையின் தகுதியைத் தீர்மானித்துவிடுகிறான்.

தேத்தண்ணீரைச் சுவைப்பவன்போலவே அழகைச் சுவைப்பவன் நாளடைவில் அழகின் தகுதியைத் தீர்மானிக்கிறான்.

அவ்வாறே, அறத்தைச் சுவைத்தல் நிலைதான் முதல்நிலை. அறத்தைச் சுவைத்தவன் நாளடைவில் அறத்தின் தகுதியைத்

தீர்மானிக்கிறான். அறத்தின் தகுதியை அறிவின் அடிப்படையில் தீர்மானிக்கவில்லை. அறத்தை சுவைத்த அறச்சுவையுணர்ச்சியின் மூலமாகவே தீர்மானித்தான் என இம்மூன்றையும் இணைத்து விளக்குகிறார் ஷாப்டிஸ்பரி.

சுவையுணர்ச்சியிலும் ஒருவகை அறிவுக்கூறு உண்டல்லவா! அதுதான் தகுதியை வரையறை செய்கிறது என்று கொண்டால் அற இயல் தகுதியை வரை யறை செய்வது அற இயல் அறிவுதான் என்று எண்ணலாமே? இது ஒரு வினா.

சுவை உணர்ச்சி மூலம் வரும் அறிவு,விளக்க நிலை விஞ்ஞான அறிவு. இது இப்படி இருந்தது என முறையே அறிந்த அறிவு. ஆனால் அற இயல் அறிவு என்பது இது இப்படி இருக்க வேண்டும் எனப் பல வேறு அறிவு நிலை விளக்கங்களை இணைந்து,ஆய்ந்து, தேர்ந்து முடிவு செய்து அமைத்துக்கொண்ட நிலை. எனவே இது உயர்நிலை விஞ்ஞான அடிப்படையில் அமைந்த அறிவு.

ஷாப்டிஸ்பரி என்பார், அறநுகர்ச்சியின் மூலம் அமையும் அறிவை இயற்கையறிவு என்று குறிப்பிடுகிறார். அதனை அவர் 'தீமையற்ற அறநுகர்ச்சியறிவு' என்று பெயரிடுகிறார். அற இயல் அறிவு கெடுவதற்கு வாய்ப்பு உண்டு; ஆனால் அறநுகர்ச்சியறிவு கெடுவதற்கு வாய்ப்பே இல்லை என்பதனாலேயே தீமையற்ற அற நுகர்ச்சி அறிவு என்று பெயரிடுகிறார்.

அற நுகர்ச்சியறிவு என்பது அற நுகர்ச்சியில்அமைந்த இச்சைக் கூற்றிலிருந்து உண்டாவது என்று விளக்குகின்றார். வாழ்வில் தனிமனிதனிடம் அமைந்திருப்பதாகக் காணப்பெறும் இயற்கை விருப்பங்கள் அல்லது இச்சைகள் உண்டு எனக் கூறி, அவை இரு வகைப்படும் என்றார். (1) தன்னைப் பற்றிய இயற்கை விருப்பம். (இது வாழ்வில் விருப்பம், அவா போன்றவைகளை உடன் கொண்டது) (2) மற்றவர்களைப் பற்றிய இயற்கை விருப்பம். (அன்பு, கருணை முதலியன இவ்வகையைச் சாரும்) இரண்டும் இயற்கை விருப்பங்களே. இந்த இரண்டு இயற்கை விருப்பங்களின் இணைப்பினால் புதிய ஒரு விருப்பம் உண்டாகிறது. அது அற நுகர்ச்சி விருப்பம்.

அற நுகர்ச்சி விருப்பம் இருவகை இச்சைகளை அடிப்படையாகக் கொண்டது. இதனால் நல்லதை இயற்கையாக அறியவும், இயற்கையாக ஏற்கவும், அவ்வாறே தீயதை இயற்கையாக அறியவும், விலக்கவும் இயலும். இதுவே நன்னடத்தையை

ஊக்கம் கொடுத்து வளர்ப்பது. இது பகுத்தாராய்வதோடு தொடர்புடையது. வழக்கமான கெட்ட நடத்தையாலும் தீமை பயக்கும் மதக்கொள்கைகளாலும் அற இயல் அறிவு கெட்டுப் போவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் நேர்மையான தத்துவக் கருத்துகளாலும் சுதந்தரமாகச் சிந்தனை செய்வ தாலும் அற நுகர்ச்சி அறிவு எள்ளளவும் சீர்குலைவதில்லை என்று விளக்குகிறார் ஷாப்டிஸ்பரி.

இனி, அற நுகர்ச்சியறிவு ஒரு முடிவை மேற்கொள்ளும்போது பெரும்பாலும் அகநிலையியல்பான, புலனுகர்ச்சியியல்பான அடிப்படைகளைக் கொண்டே முடிவு செய்யும். ஆகையால் அது அகநிலைத் தன்மையதே.

பகுத்தறிவு நிலையில் எழும் அற இயலறிவு ஒரு முடிவை மேற் கொள்ளும்போது புறநிலைக் காரண காரிய அமைப்புகளை, சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பகுத்தாய்வு முறையி லான, பொதுமையியலான, புறநிலைத் தன்மையியலான (objective) முடிவை வெளியிடுவதாதலின் அது புறநிலைத் தன்மையதே.

அகநிலைத் தன்மையியலான அறிவின் வெளிப்பாடுகளான முடிவுகளுக்கும் புறநிலைத் தன்மையியலான அறிவின் வெளிப் பாடுகளான முடிவுகளுக்கும் வேறுபாடு உண்டு. உலகந் தழுவிய, பொதுமையியலான முடிவுகளை அகநிலைத் தன்மை அறிவால் வெளிப்படுத்த முடியாது ஆதலின் அது ஒரு வகையில் குறை பாடுடையதே.

அற நுகர்ச்சியறிவு இச்சைக்கூற்றின் அடிப்படையில் இயற்கை யாகத் தோன்றிய ஒரு விருப்பமே. இது விருப்பமேயாயினும் நல்லவைகளை இயற்கையாகவே ஏற்றுக்கொள்ளவும், தீயவை களை இயற்கையாகவே விலக்கிக் கொள்ளவும், நல்ல நடத்தையை ஊக்கிச் செயற்படுத்தவும் உரிய ஆற்றலை உடைய தாக இருக்கிறது. இச்சையிலிருந்து, விருப்பப் பிரிவிலிருந்து இயற்கையாக வெளிப்பட்டதேயாயினும் அதனிடம் அறியும் ஆற்றலும், செயற்படுத்தும் ஆற்றலும் இயற்கையாகவே அமைந் துள்ளன. அதனைப் புறநிலை நெறிகளால் வளர்க்க முடியும்; அப்படி வளர்த்த நிலையில் அது கொள்ளும் முடிவு புறநிலைத் தன்மையுடையதாக அமைந்திருக்கும்.

அழகு ஒருவகை உணர்ச்சியே. ஆனால் அழகு பற்றிய முடிவுகளைக் கூறும் ஆற்றலில் வளர்ச்சி அடைந்த ஆசிரியர்கள், நண்பர்கள் முதலியோரின் உதவியாலும், நம் சூழ்நிலையில்

அமைந்திருக்கும் அழகுப் பொருள்களின் உதவியாலும், அழகுப் பொருள்களைப் படைக்கும் கலைகளைக் கற்பதாலும், அழகைப் பற்றிய நெறிமுறைகளாக உள்ளவைகளைக் கொள்கையளவில் ஆராய்ந்தறிவதாலும் அழகுணர்ச்சியை நன்கு வளர்த்து, அழகியல் அறிவு உடையவனாகத் தன்னை ஆக்கிக் கொள்ள முடியும். அழகுணர்ச்சி நிலையறிவுடையவர்கள் தங்களின் முடிவாக ஒன்றைத் தேர்ந்தெடுக்கும்போது புறநிலையாக அமைந்த நெறிமுறைகளையே கைக்கொள்வர். அவ்வாறே அறநுகர்ச்சி அறிவிலும் புறநிலை நெறிமுறைகளும் முடிவுகளும் அமைந்திருக்கும்.

தன்னைப் பற்றிய இயற்கை விருப்பம், பிறரைப் பற்றிய இயற்கை விருப்பம் என்ற இரண்டும் இணைந்த நிலையில் தோன்றிய புதிய விருப்பமே உள்ளுணர்வு. அறநுகர்ச்சி அறிவே உள்ளுணர்வு. அதன் தோற்றம் இயற்கையானது. அது இயற்கையாகவே அறச் செயலின் சரி, தவறு ஆகிய தன்மைகளை எடுத்துக் காட்டும் ஆற்றல் உடையது; செயற்படுத்தும் ஆற்றலும் உடையது.

அறநுகர்ச்சியறிவு பகுத்தறிவின் அடிப்படையில் தோன்றாமல் இச்சையியலான விருப்பங்களின் அடிப்படையில் தோன்றியதாதலின் அதனைப் பகுத்தாய்வறிவோடு இயைபுபடாத உள்ளுணர்வு என்று விளக்கம் கூறி, அதனை அடிப்படையாகக் கொண்ட கொள்கைக்குப், 'பகுத்தறிவியலோடு இயைபுபடாத உள்ளுணர்வுக் கொள்கை' என இக்கொள்கைக்குப் பெயர் அமைக்கப்பெற்றது.

ஹட்சீசன் (Hutcheson) என்பார் கருத்து: ஹட்சீசன் என்பார் ஷாப்டிஸ்பரி என்பாரைப் பின்பற்றி உள்ளுணர்வுக் கொள்கையை ஏற்று விளக்கம் செய்தவரே.

அறநுகர்ச்சிக் கொள்கையின் மூலம் அமைந்த உள்ளுணர்வு செய்பவனின் தன்னலத்தைத் தம்முள் கொண்ட செயல்களையே ஊக்கப்படுத்தும் என்று மற்றவர்கள் கூறும் வாதக் கருத்தினை ஏற்று, அதனை விளக்கம் செய்த அறிஞர் ஆவார்.

ஒரு செயலின் விளைவாக வரும் நன்மை இரண்டு வகைப்படும். ஒன்று பொருள் நலன் (material goodness), மற்றொன்று மொத்தத்தில் அமைந்த நலன் (formal goodness).

முதலாவதாகச் சொல்லப்பெற்ற பொருள் நலன் என்பது பெரும்பாலான மக்களுக்குக் கிடைக்கப்பெறும் மிகப் பெருத்த

இன்பத்தைப் பொறுத்திருக்கிறது. மொத்த நலன் என்பது உருவாகின்ற ஒன்று.

மற்றவர்களைப் பற்றிய விருப்பம், தன்னைப் பற்றிய விருப்பம் என்ற இரண்டும் இயற்கை விருப்பங்கள். இவை இரண்டும் — இந்த இருவகை இயற்கை விருப்பங்களும் தம்முள் பொருத்தமாக அமைதல் வேண்டும். இவை இரண்டும் பொருத்தமாக அமைந்தால்தான் நற்பண்பு என்பதாக ஒன்று அமையும். இரண்டும் அமையும் பொருத்தமான முறையை அடிப்படையாகக் கொண்டே மொத்த நலன் என்பது உருவாகிறது. இருவகை விருப்பங்களும் (egoism and altruism) தம்முள் பொருத்தமான முறையில் இணையும்போது அற நுகர்ச்சி அறிவு எனப் பெறும் உள்ளுணர்வு உண்டாகிறது. இந்த உள்ளுணர்வே மொத்த நலனை உருவாக்கும் கருவி.

'அற நுகர்ச்சி அறிவு' எனப்பெறும் உள்ளுணர்வு தனிமனிதனுக்கு ஒரு வழிகாட்டியாக அமைந்து, எக்காரணமும் இன்றி எதுவும் ஊக்காமலேயே — இயல்பாகவே எல்லாருக்கும் நன்மை செய்யுமாறு, அவனைச் செயற்படுத்துகிறது. அற நுகர்ச்சி அறிவு எனப்பெறும் உள்ளுணர்வு, பொதுவாகச் சமுதாயத்துக்கு நன்மை தருவதையே விரும்புகிறது.

மற்றவர்களைப் பற்றிய விருப்பமும் தன்னைப் பற்றிய விருப்பமும் இணையும் பொருத்தத்தைத்தான் ஹட்சீசன் மிகவும் வலியுறுத்துகின்றார். இணைந்த பொருத்தமாக இரண்டும் இணைந்துவிடுமானால் ஆன்மீக இயலான அற நுகர்ச்சி இயற்கை அறிவு உண்டாகிறது என்றும் அதுவே சமுதாயம் முழுமையையும் இணைக்கும் மொத்த நன்மையை உருவாக்கும் செயல்களைச் செய்யுமாறு இயற்கையாகவேசெயற்படுத்தும்என்றும் கூறுகிறார். அங்கேதான் நன்மை (goodness) அமையும் என்றார்.

மொத்த நன்மை என்பது அற நுகர்ச்சி அறிவும், அழகு நுகர்ச்சி நலனும் ஆகிய இரண்டும் இணைந்த நன்மையைக் குறித்தது. அறப்பயனும் அழகுப் பயனும் இணைந்து நின்று, அதனால் விளையும் மொத்த நன்மையே சமுதாய முழுமை நன்மையாகும் என்றார். அழகுள்ளவைகளே நலன் விளைவிப்பவைகள் என்பது அவர் கருத்து.

மொத்த நன்மை என்பது ஒருவகை ஆன்மீக இயல்பைக் கொண்டது. பொருள் நன்மை என்பது மொத்த நன்மையை

நோக்கச் சிறிது தாழ்ந்ததே. பொருள் நன்மை என்பது பெரும்பாலான மக்களுக்குப் பெருத்த இன்பத்தைத் தருவதாக அமையும் தன்மையது. பிறரைப் பற்றிய விருப்பமும் தன்னைப் பற்றிய விருப்பமும் அவ்வளவு பொருத்தமாக இணையாமையே பொருள் நன்மை சார்ந்த அற நுகர்ச்சியறிவை உண்டாக்கக் காரணம்.

ஆயினும், அற நுகர்ச்சி அறிவு என்னும் உள்ளுணர்வை ஒரு வகை வழிகாட்டி என்று கொண்டார்களேயல்லாமல் அதுவே முடிந்த அறக் கொள்கை என இவர்கள் ஏற்கவில்லை.

உள்ளுணர்வுக் கொள்கையின் அடிப்படையாகிய மனச் சான்று என்பதைச் சுவையுணர்ச்சியைப்போல, இச்சையின் கூறாக—விருப்பங்களின் அடிப்படையில் உண்டாவதாக முதன் முதற் சிந்தித்தவர்களும், உள்ளுணர்வு என்பது அற நுகர்ச்சியறிவு என முதன்முதல் விளக்கம் அமைத்துக் காட்டியவர்களும் இங்கே குறிப்பிடப்பெற்ற ஷாப்டிஸ்பரியும், ஹட்சீசனுமே ஆவர்.

தன்னைப் பற்றிய விருப்பம் (egoism), பிறரைப் பற்றிய விருப்பம் (altruism) என்ற இரண்டையும் இயற்கை விருப்பங்கள் என விளக்கி, இயற்கை விருப்பங்கள் இரண்டும் பொருத்தமுற இயற்கையாகவே இணையும்போது அற நுகர்ச்சி அறிவு உண்டாகும் என்று இருவகை விருப்பங்களும் (egoism and altruism) இயற்கையாகவே இணையும் என அமைத்து உள்ளுணர்வுக் கொள்கை விளக்கியவர்களும் இவர்களே.

மனச் சான்று அல்லது உள்ளுணர்வு அல்லது அற நுகர்ச்சி அறிவு தன்னை நோக்கிய தன் இன்பம் நோக்கிய செயலையே செய்யத் தூண்டும் என்று பிறரெல்லாம் விளக்கம் செய்தபோது, அற நுகர்ச்சி அறிவு பெரிதும் பொது நன்மையை உள்ளிட்ட செயலையே இயற்கையாக ஊக்கப்படுத்தும் என விளக்கியவர்களும் இவர்களே.

அற நுகர்ச்சியறிவு பகுத்தாய்ந்தறிதல் என்ற முறையைச் சாராமலேயே நேரடியாக நல்லது இது என்று குறிப்பிட்டுக் காட்டவும் செயற்படுத்தவும் வல்லது என்று கூறி, அத்தகைய அற நுகர்ச்சியறிவை, புறநிலைக் காரண நெறிகளால் வளர்க்க முடியும் என்றும் ஒப்புக் கொண்டார்கள். பகுத்தாராய்தல் முறையில் வரும் அற இயல் அறிவு தவறுபடும், அற நுகர்ச்சியறிவு எக்காலத்தும் தவறுபடாத ஒன்று என்றும் கொண்டார்கள்.

(2) அழகுணர்ச்சிக் கொள்கை (Aesthetic Sense Theory)

முன்னுரை : பகுத்தறிவு, அறிவாராய்ச்சி என்பவைகளோடு இயையாத உள்ளுணர்வுக் கொள்கை இரண்டு கொள்கைகளாக—அற நுகர்ச்சிக் கொள்கை, அழகுணர்ச்சிக் கொள்கை—அமைத்து விளக்கப்பெற்றது என்பதை முன்னே கண்டோம். அவ்விரண்டனுள் அறநுகர்ச்சிக் கொள்கையின் விளக்கம் சென்ற தலைப்பில் அமைக்கப் பெற்றது. எஞ்சிய 'அழகுணர்ச்சிக் கொள்கை' பற்றிய விளக்கத்தை இங்கே காணலாம்.

அற நுகர்ச்சிக் கொள்கை, அழகுணர்ச்சிக் கொள்கை என இரண்டாக அமைந்தாலும் இரண்டையும் ஒரே கொள்கையின் இரண்டு பகுதிகளின் விளக்கம் என்பதாகவே கருதலாம். அற நுகர்ச்சிக் கொள்கையை விளக்கிய ஷாப்டிஸ்பரி, ஹட்சீசன், ஹெர்பர்ட், ரஸ்கின் என்ற ஆசிரியர்களே இக்கொள்கையையும் விளக்குபவர்களாக அமைகிறார்கள். இரண்டு கொள்கைகளையும் ஒன்றாகவே இணைத்து அற நுகர்ச்சி அறிவியலான உள்ளுணர்வுக் கொள்கை என்று எழுதப்பெற்ற அற இயல் நூல்களும் உண்டு.

அழகுணர்ச்சிக் கொள்கையின் இயல்புகள் : தனிமனிதனின் நடத்தையை இது சரி அல்லது தவறு என ஆய்ந்து சொல்லும் அறிவினை அற இயலறிவு என்று கண்டோம்.

அற நுகர்ச்சிக் கொள்கையின்வண்ணம் அற நுகர்ச்சி அறிவானது தனிமனிதன் நடத்தையை நல்லது என்றும் தீயது என்றும் வரையறை செய்து உணர்த்தும் தன்மையுடையது என்று விளக்கினார்கள்.

அழகுணர்ச்சிக் கொள்கையானது, அழகுணர்ச்சி அறிவை உள்ளுணர்வு என அமைக்கிறது. அந்த அழகுணர்ச்சி அறிவானது அழகே உயர்நிலைக் குறிக்கோள் என நிலைநாட்டுகிறது. பின்னர், தனிமனிதன் நடத்தையை நேரடியாகவும் உடனடியாகவும் விளக்கும் வகையில், சரியானது என்று முடிவுசெய்த நிலையில் அழகானது என்ற கருத்தையும், தவறானது என்று முடிவு செய்த நிலையில் அருவருப்பானது என்ற கருத்தையும் இணைத்து விளக்கம் செய்கிறது.

'எது அழகாக இருக்கிறதோ அது பல வேறு பகுதிகளும் அளவுக்கு ஒத்த நிலையுடையதாக அமைந்த ஒப்புமைப் படிநிலையில் மனத்தில் நல்ல அழகு என்ற கருத்தை உண்டாக்கக்

கூடிய வகையில் இணைந்திருப்பது என்றும், அவ்வாறு ஒத்த நிலையில் இணைந்திருப்பது எதுவோ அதுவே உண்மை என்றும், எது அழகாகவும் உண்மையாகவும் இருக்கிறதோ அது பொருத்த முடையதும் நன்மையும் ஆகும், என்று ஷாப்டிஸ்பரி அழகுணர்ச்சி யைப் பற்றிக் கூறுகிறார்.

'எந்த ஒரு செயலும் அச்செயலைப் பொறுத்த அளவில் நல்லது என்பதில்லை. அது பொருத்தம் என்ற ஓர் அடிப்படை இயற்கை நியதியுடன் கொண்டிருக்கும் உறவுநிலையை ஒட்டியே நல்லது என மதிக்கப்பெறுகிறது; பொருத்தம் என்ற ஒரு முழுமையாகிய அடிப்படை இயற்கை நியதியில், எந்த ஒரு பகுதி தன்னை அதனுடைய சொத்து என்று சொல்லப்படுகின்ற முறையில் பொருத்தமாக இணைத்துக் கொண்டிருக்கிறதோ அந்த ஒரு பகுதியானது நல்லது என மதிக்கப் பெறுவதற்கு உரியது; மனப்பண்புகள் பொருத்தமாக இணைந்து நிற்கும் அழகே அற இயலான நன்மை எனப்பெறும். மனப்பண்புகள் அளவொத்த நிலையில் இணைந்து நிற்கப் பெற அமைந்த ஒருவகை இணைப்பு நிலைதான் அறவொழுக்கம். அவ்வற வொழுக்கம் அற நுகர்ச்சியறிவால் உணர்ந்து கொள்ளப் பெறுவது' என்ற கருத்தினை ஹட்சீசன் வழங்குகின்றார்.

நல்ல செயல்களுக்கும் தீய செயல்களுக்கும்—அழகானது, அழகற்றது போன்ற பொருள்களுக்கும் இடையே அமையும் ஒப்புமையை அழகு நுகர்ச்சிக் கொள்கை விளக்குகிறது. நல்லது என்பதற்கும் அழகுக்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டு. சிறந்த ஒரு கலைப் பொருளைப் பார்க்கும்போது உண்டாகும் வியப்பு, உயர்ந்த ஒரு செயலைக் காணும்போதும் உண்டாவது உண்மை. எனவே, உயர்ந்த ஒரு பொருளில் அழகுப்பயனும் அறப்பயனும் இசைவுபெற இணைந்திருப்பதைக் காணலாம். அவ்வாறே நல்லது என்ற அறச்செயலில் அறநுகர்ச்சி அறிவும் அழகுணர்ச்சிப் பொருத்தமும் இணைந்திருப்பதைக் காணலாம். அழகுணர்ச்சியும் அறவுணர்ச்சியும் ஒன்றே. அவைகளைப் புற நிலை நெறிகளால் வளர்க்க முடியும். அற நுகர்ச்சியறிவும் அழகுணர்ச்சியறிவும் உள்ளுணர்வாக நின்று செய்யும் முடிவுகள் வறுபடுவன அல்ல.

அற நுகர்ச்சியறிவைக் காட்சி என்றும், சுவையுணர்ச்சி என்றும், இயல்பூக்க விருப்பம் என்றும் சொல்லக் கேட்கலாம்.

அழகுச் சுவை என்பது ஒரு வகை உணர்ச்சி நிலையைச் சார்ந்தது. மனிதர்கள் அழகுணர்ச்சிச் சுவையில் வேறுபட்டிருக்

கிறார்கள். அறவொழுக்கத்துக்கு அழகுணர்ச்சியே அடிப்படை என்று சொல்வதற்கில்லை. மனிதனிடத்தே அமைந்துள்ள சமுதாய இயற்கைப் பண்பினை விளக்குவதற்கு அழகுணர்ச்சி ஒருவகை வழியாக அமைகிறது.

சுவை என்பது அறவொழுக்கத்தின் ஒரு பகுதி என்பது மட்டு மன்று; அது அறவொழுக்கத்தின் அட்டவணை என்று கூறலாம். சுவை ஒன்றுதான் அறவொழுக்கம் என்று ரஸ்கின் இக் கொள் கையை விளக்கி அமைத்தார்.

நன்மையும் அழகும் ஒன்றாகவே இணைந்திருத்தலின் மனச் சான்று என்பது அழகுணர்ச்சியோடு ஒத்த நிலையில் இணைந் திருப்பதே. அறத்துறை சார்ந்த மனச் சான்று அழகுணர்ச்சி யாகத்தான் இருக்கிறது. அதனால்தான் அது அழகை உடனடி யாகத் தேர்வதன் மூலம் அருவருப்பான செயல்களை விரைந்து வெளிப்படுத்தவும் முடிகிறது என்று ஹெர்பர்ட் கூறி அழகுணர்ச்சிக் கொள்கையை வரையறை செய்து அமைத்தார்.

(2) (ஈ) அறிவாராய்ச்சியுடன் இயைவது எனப்பெறும் உள்ளுணர்வு சார்ந்த உள்ளுணர்வுக் கொள்கை

(Philosophical or Rational Intuitionism)

முன்னுரை

மனச் சான்று என்பது நேரடியாகவும் உடனடியாகவும் தனி மனிதனுடைய செயல்களின் மதிப்பீட்டினை வழங்கும் ஆற்ற லுடையது என்ற கொள்கையே உள்ளுணர்வுக் கொள்கை. அது மனச் சான்றினுடைய இயற்கையான பண்பின் அடிப்படையில் இரண்டாகப் பிரித்து விளக்கப்பெற்றது. புலனுகர்ச்சியறிவு போல மனச் சான்று என்பது அற நுகர்ச்சியறிவை இயற்கைப் பண்பாகக் கொண்டது எனக் கருதுவது பகுத்தறிவு ஆய்வறிவு வழியில் இயையாத உள்ளுணர்வுக் கொள்கை எனப் பெற்றது. இக்கருத்துக்கு மாறாக, மனச் சான்று என்பது பகுத்தறியும் ஆய்வறிவோடு இயைபுபட்டது; அத்தகைய ஆய்வறிவையே இயற்கைப் பண்பாகக் கொண்டது என்ற கொள்கையானது ஆய்வறிவு முறையில் இயைந்த உள்ளுணர்வுக் கொள்கை எனப் பெயர் பெறுவதாயிற்று.

பொதுமைக் கருத்துகள்

மனச் சான்று, பகுத்தறிவு முறையில் ஆய்ந்தறியும் தன்மை வாய்ந்த அறிவையே தன் இயற்கைப் பண்பாகக் கொண்டது. அது தன் உள்ளுணர்வாற்றலால் அற இயற் கூறுகளைத் தேர்ந்து கொள்ளுகிறது. பின்னர் அற இயற் கூறுகளைத் தனிமனிதனுடைய செயலுடன் இணைத்துப் பார்த்து, அச்செயலின் மதிப்பீட்டுக் குறிப்பினை வெளிப்படுத்துகிறது. தன்னுடைய மதிப்பீட்டுக் கருத்துகளை அறிவளவையியல் அனுமான முறையை மேற்கொள்ளுகின்றது. இவ்விளக்கத்தின் காரணமாகவே இக்கொள்கை பகுத்தறிவியலான உள்ளுணர்வுக் கொள்கை என்ற பெயரைப் பெறுவதாயிற்று.

அற இயல், அளவை இயலோடு இணைந்து ஒன்றிநிற்பது. என்றும் மாறாத அற இயல் அடிப்படை மூலங்களை அளவை இயல் முறையில் நேரடியாக அறிந்து தேர்வு செய்து கொள்ளுகிறது. அளவை இயல் அடிப்படையில் நேரடியாகத் தேர்வு செய்து அறிந்த அற இயல் அடிப்படை மூலங்களை அளவுகோலாக அமைத்துக் கொண்டு, அவைகளின் மூலமாகத் தனிமனிதன் செயலை மதிப்பீடு செய்ய முற்படுகிறது. இதுவே இக்கொள்கையின் பொதுமை விளக்கம். அற இயல், அளவை இயலறிவுடன் இணைந்து தொழிற்படுகிறது என்று வரையறை செய்தமையால் இது அற நுகர்ச்சிக் கொள்கையோடும் அழகுணர்ச்சிக் கொள்கையோடும் வேறுபட்ட கொள்கையாக அமைந்தது.

அற இயலான தீர்ப்புகள் அளவையியலான அனுமான முறையிலேயே அமைக்கப்பெறுகின்றன. இக்கருத்தானது சுவையுணர்ச்சியைப் போன்ற அறவுணர்ச்சி, அழகுணர்ச்சி ஆகியவைகளால் நேரடியாக, உடனடியாக அற இயலான தீர்ப்புகள் அமைக்கப் பெறுகின்றன என்ற கருத்தோடு மாறுபடுவதாக அமைந்தது.

இக்கொள்கையை எடுத்து மொழிந்து விளக்கியவர்கள் மூவர். கட்வொர்த், கிளார்க், ஓலாஸ்டன் என்பவர்களே அந்த மூவரும். அவர்களின் விளக்கங்களைக் காணலாம்.

கட்வொர்த் என்பாரின் கொள்கை

'கேம்பிரிட்ஜ் பிளேட்டோனிஸ்ட்ஸ்' என்ற அமைப்பின் தலைவராக விளங்கியவர் 'கட்வொர்த்' (1617 – 1688). அவர் அறிவளவையியல் சார்ந்த உள்ளுணர்வுக் கொள்கையைக் கீழ்க் கண்டவாறு விளக்குகிறார்.

அற இயல் மேன்மைகள் என்பன தம்மளவில் தனித்தன்மையுடன் சார்பற்ற நிலையில் அமைந்தவை; மனித அல்லது தெய்வத் தன்மைகளையோ உள்ளீடற்ற, நிச்சயத் தன்மையோடு இணையாத இயற்றி நிலையையோ சார்ந்தவை அல்ல.

தற்புல உண்மைகளாய், இன்றியமையாத இயல்பினவாய், உலக ஒருமையை உள்ளிட்ட பொதுமைத் தன்மையினவாய், அமைந்த, நிலைத்த, மாறாத அற இயல் அடிப்படை மூலக் கருத்துகளை மனிதனுடைய அளவையியலடிப்படையிலான அறிவானது உள்ளுணர்வாக நின்று தேர்ந்து அறிந்தது. அதே மனித அறிவு அளவையியலோடு இணைந்ததும் முழுமையானதும் ஆகிய அறிவின் நிலையான உண்மைகளையும் தேர்ந்து அறிந்தது. அற இயல் என்பது ஒருவகை உள்ளார்ந்த நுகர்ச்சியறிவை இயற்கையாகக் கொண்டது அன்று. அது அளவையியலான அறிவாராய்ச்சியை இயற்கையாகக் கொண்டது. அற இயல் சார்ந்த தீர்ப்புரை என்பது தனிமனிதன் செயல்களில் அற இயல் மூலக் கருத்துகள் என்ற அளவுகோலை இணைத்துப் பார்த்தல் என்பதை உள்ளிட்டது. ஆனால், அறிவாராய்ச்சியோடு இணைத்துச் சிந்திக்காமல் உடனடியாகவோ நேரடியாகவோ செய்யப்படுவன அல்ல அற இயல் தீர்ப்புகள். சரியான நடத்தை என்பது நேர்மையான அற இயல் தீர்ப்பினை முன்னோடியாகக் கொண்டது. அது அற இயல் அடிப்படை மூல உண்மைகளைப் பற்றிய நிறைவான அறிவினை உள்ளீடாகக் கொண்டு நிற்கிறது. அறிவாற்றல் என்பது பண்படுத்தப் பெற்று நின்ற நிலையே நம்முடைய அறவாழ்வுக்கு மூலமானதும் இன்றியமையாததும் ஆகிய அடிப்படை உண்மை.

அறப் பண்பின் நிலையான உண்மைகள், அவைகளைப் பற்றிய அளவையியலில் அமைந்த ஆய்வறிவு என்ற இரண்டும் கடவுளுடைய உள்ளத்தில் இருக்கின்றன. அவைகள் கடவுளால் தோற்றுவிக்கப் பெற்றவை அல்ல.

தன்னுண்மை நிலையில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அளவையியலான ஆய்வறிவுதான் என்றும் அழியாத, அற இயல் அடிப்படை மூல உண்மைகளை நேரடியாகத் தேர்ந்து எடுத்து அமைக்கின்றது ; செயற்படுத்துகின்றது.

மேலே எடுத்துக் காட்டப்பெற்றவாறு இக்கொள்கையை விளக்கம்செய்தார் கட்வொர்த். கட்வொர்த்என்பவரும்இவரோடு

இணைந்து நின்று இக்கொள்கையை விளக்கிய கிளார்க் என்பவரும் ஹாப்ஸ் என்பவரின் தன்னலஞ்சார் இன்பியற் கொள்கையை மறுத்தவர்கள்.

கிளார்க் (Clarke, 1675—1729) என்பவரின் கொள்கை

மனிதர்களுக்குள்ளும் பொருள்களுக்குள்ளும் இடை அமைந்த அழியாதவைகளாகவும் மாறாதவைகளாகவும் உள்ள சில உறவுகள் இருக்கின்றன. அவைகளே அற ஒழுக்கத்தையும் அற ஒழுக்கத்துக்குரிய அடிப்படையாகிய அற இயல் உண்மைகளையும் நிலை நாட்டுகின்றன. கணக்குத் துறையில் ஏற்றுக்கொள்ளப் பெற்ற உறவுக் கொள்கைகளைப்போல மனிதர்களிடையேயும் அமைந்த உறவுகள் நிலையானவை, அழியாதவை, மாறாதவை. அத்தகைய மனித உறவுகளே கடமைகளைச் செயல் வடிவமாக்கு கின்றன. கடமைகளின் எல்லா வகையான இயல்புகளையும் அளவையியலான ஆய்வறிவு, உள்ளுணர்வு மூலம் தேர்ந்து தெளிந்து அறிந்து கொள்ளுகின்றது.

உலகம் என்று சொல்லப்பெறும் ஒருவகைப் பொதுமை அமைப்பானது அற இயல் உறவுகளால் அமைக்கப்பெறுகிறது. அற இயல் உறவுகள் காரண காரிய இயல் உறவுகளைப் போன்றவை. இவை இரண்டுமே அழியாதவை, மாற்றத்துக்கு உட்படாதவை.

மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் இடை அமைந்த உறவுகளையும், மனிதர்களுக்கும் எஞ்சி நின்ற உலகத்துக்கும் அமைந்த உறவுகளையும் இணைக்கும்போது அவ்விணைப்பில் அமையும் பொருத்தம், பொருத்தமின்மை என்பவைகளைச் சார்ந்து நிற்பதே அற ஒழுக்கம்.

தனிக் கடமைகள் அல்லது தனிமனிதனுடைய கடமைகள், அறவொழுக்கத்தின் அடிப்படை விதிகளிலிருந்து, பகுப்பு வழி அளவை முறையில் தேர்ந்து அமைக்கப் பெற்றவை.

தனிக் கடமைகளை வரையறை செய்யக்கூடிய மூலங்களாகிய மூன்று தற்புல உண்மைகள் இருக்கின்றன. கடவுளோடு தொடர்புடையவை; நம்முடன் வாழும் உடனுறை மனிதர்களோடு தொடர்புடையவை; நமக்குள்ளேயே தொடர்புடையவை என அவை மூன்றும் அமைகின்றன.

கடவுளோடு தொடர்புடைய தற்புல உண்மைகள் கடவுளை வணங்குமாறும், கடவுளினுடைய செயலாற்றலை

உள்ளிட்ட இயற்றிநிலைக்குப் பணியுமாறும் நம்மைச் செயற்படுத்துகின்றன. ஏனெனில், கடவுள் நன்மையாக இருக்கிறான்.

இரண்டாவதாக அமைவது மனிதன் தன்னுடன் வாழும் மனிதர்களோடு தொடர்புடைய தற்புல உண்மைகள். அவைகள், உடனுறை மனிதர்களுடன் நீதியுடனும் நடுவுநிலைமையுடனும் அமைந்த உறவுகளை மேற்கொள்ளுமாறும், அவர்களுடைய நல்வாழ்வு, இன்பம் ஆகியவைகளை வளர்க்கும் வழி வகைகளை மேற்கொள்ளுமாறும் செய்கின்றன.

மூன்றாவதாக அமைவது நமக்குள்ளேயே அமையும் தொடர்பை உள்ளிட்ட தற்புல உண்மைகள். அவைகள், நாம் நம்முடைய கடமைகளைச் செயற்படுத்துவதற்குப் பொருத்தமான நிலையில் நம்முடைய மனம், உடல் ஆகியவைகளை இணைந்த உணர்ச்சியை மேற்கொள்ளுமாறு செய்கின்றன.

கடவுளிடம் பக்தி, தன்னோடு இணைந்து நின்று வாழும் மனிதர்களிடம் ஒத்த உரிமையும் அருள் உணர்வும் கொள்ளல், இயற்கையோடு இணைந்து நாம் செயற்படுதற்கு ஒத்த வகையில் நம்முடைய மனம், உடல் ஆகியவைகளை இணைய வைத்துக் கொள்ளல் என்பவைகளே அந்த மூன்று தற்புல உண்மைகள்.

மாற்றத்துக்குள்ளாகாத மனித உறவுகளிலிருந்துதான் வரையறை செய்யப்பெற்ற கடமைகள் தோற்றம் பெறுகின்றன. உறவுகள் வேறுபடும்போது கடமைகளும் வேறுபடும். எடுத்துக்காட்டாக, மாணாக்கனிடம் சென்று பொருந்தும் ஆசிரியனின் உறவு வேறு; ஆசிரியனிடம் சென்று பொருந்தும் மாணாக்கனின் உறவு வேறு. ஆகையினால் மாணாக்கனை நோக்கிய ஆசிரியனின் கடமை வேறு; ஆசிரியனை நோக்கிய மாணாக்கனின் கடமை வேறு.

சில குறிப்பிட்ட செயல்முறைகள் அவைஅவைகளின் இயல்புகளாலேயே சரியானவைகளாக அல்லது தவறானவைகளாக அமைந்திருக்கும். அவைகளை மாற்றுதல் இயலாது. கடவுளின் செயலாற்றல்கூடச் சரியாந் தன்மையைத் தவறாந் தன்மையாகவோ, தவறாந் தன்மையைச்சரியாந் தன்மையாகவோ மாற்ற முடியாது.

ஒருவன் தன்னை அற ஒழுக்கினனாக அமைத்துக் கொள்ள விரும்பினானாகில், அவன் முதலில் பொருள்களிடையே அமைந் துள்ள உறவுகளைப்பற்றி உண்மையான அகவுணர்வைப் பெறுதல் வேண்டும்.

ஒலாஸ்டன் (1660—1724) என்பவரின் கருத்து

கிளார்க் என்பவரின் மாணாக்கராகிய ஒலாஸ்டன், அளவை யியலான ஆய்வறிவு சார்ந்த உள்ளுணர்வுக் கொள்கையைக் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.

இவர் அறக் கூறுகளை அறிவுக் கூறுகளாகவே விளக்கம் செய்து காட்டுகிறார்.

சரியானது என்பது உண்மையுடன் இணைந்தது. தவ றானது என்பது பொய்மையுடன் இணைந்தது. சரியான செயல்கள் என்பவை உண்மையை உறுதிப்படுத்துவனவாக அமையும் செயல்களே. தவறான செயல் என்பது உண்மையை மறுக்கும் செயலே. திருடுதல் என்பது தவறான செயல்; ஏனெனில், திருடப்பெற்ற பொருள் வேறு ஒருவனுக்கு உரிமை யுடைய சொத்து என்ற உண்மையை அது மறுக்கிறது. ஒரு மனிதன் தன்னுடைய மனைவியின் தலையை வெட்டும் செயலி லிருந்து தன்னைத் தடுத்து நிறுத்த வேண்டும். ஏனெனில், அது அவள் அவனுடைய மனைவி என்ற உண்மையை மறுக்கும் செயலாக அமையும். எல்லாப் பாவங்களுக்கும் அடிப்படை பொய்யே. பொய் என்பது அறிவில் அமைந்த பிழை.

அற இயல் என்பது அளவையியலான ஆய்வு அறிவாக அமைந்தது. அற இயற் பண்பு என்பது உண்மையுடன் தொடர் புடையது. அற இயல் அறிவு என்பதே முடிந்த முடிவாக உள்ள நன்மை.

முடிவுரை

உள்ளுணர்வுக் கொள்கையின் பிரிவுகள் இரண்டனுள், அளவையியல் ஆய்வு முறைக்கு இயைந்த உள்ளுணர்வுக் கொள்கையை கட்வொர்த், கிளார்க், ஒலாஸ்டன் என்ற மூவரும் எடுத்து மொழிந்து விளக்கமும் அமைத்துக் காட்டியுள்ளார்கள்.

மனச் சான்று என்பதன் இயற்கைப் பண்பு அறிவியலானது; அது உள்ளுணர்வு எனப்பெறும் அறிவை உடையது; உள்ளுணர்வு

எனப்பெறும் அறிவளவை ஆய்வால் செயலினுடைய நன்மை தீமைகளை வரையறையுடன் தேர்ந்து தெளிகிறது என்பவை இக்கொள்கையின் உட்கிடைகளாகும்.

(2) (உ) பட்லர் என்பாரின் உள்ளுணர்வுக் கொள்கை

கிறித்துவ சமயத்து மதகுருவாக விளங்கிய பிஷப் பட்லர் (1692—1752) என்பார் மனச் சான்று என்பதைச் சுவை நுகர்ச்சியைப் போன்ற ஒருவகை அறநுகர்ச்சி அறிவு எனக் கொள்ளாமல், பகுத்தறிவின் வழிப்பட்ட ஒருவகை அறிவின் வழிப்பட்டதே மனச்சான்று என்று கொண்டார். சுவைஉணர்ச்சி யறிவைப் போன்றதாகிய அறநுகர்ச்சியறிவைவிட, பகுத்தறியும் தன்மையியலான அளவையியல் ஆய்வறிவு என்ற ஒன்றனால் தான் இன்ன செயல்கள் சரியானவை, இன்ன செயல்கள் தவறானவை என அறிய முடியும். ஆகையால் அறநுகர்ச்சி யறிவைவிட வேறுபட்ட ஒருவகை உள்ளறிவே மனச் சான்று என்று கொண்டார்.

மனச் சான்று என்பது ஒருவகை உள்ளுணர்வேயாயினும் அது நம்முடைய அறிவுக்கு இனிமையுடைய ஒருவகைப் பொருத்தத்துடன் அமைந்திருக்கிறது (sweet reasonableness) என்று விளக்கிக் காட்டினார்.

பட்லர் என்பவரின் உள்ளுணர்வுக் கொள்கையில் மிக முக்கியமான கருத்து மக்களின் உள்ளத்தைப் பற்றியது. மனித உள்ளம் ஒரு முழுமையான அமைப்பைப் போன்றது. அம்முழுமை யான அமைப்பினுள் பல சிறுசிறு அமைப்புகள் இணைந்துள்ளன. இத்தகைய சிறுசிறு அமைப்புகள் இணையும்போது அவைகளுக் குள் இயற்கையாகவே உயர்வு, பணிவு போன்ற தொடர்பு முறை கள் காணப்பெறுகின்றன என்று குறிப்பிடுகிறார்.

மனிதனுடைய இயற்கைப் பண்புகளில் மிக உயர்ந்த அடிப் படைக் கூறு மனச்சான்று என்பதே. தன்னைத்தான் அன்புறுதல், பிறரை நோக்கிய தயவு என்ற இரண்டையும்விட உயர்ந்தது மனச் சான்று.

தனித்தனி இயல்பூக்கங்கள் ஆசைகளை எழுப்புகின்றன. அத்தகைய ஆசைகள் தத்தமக்குரிய அடையும் பொருள்களைத் தேடுகின்றன. ஆசைகள் இன்பத்தை அடைய விரும்புகின்றன என்று சொல்வது பொருந்தாது. ஆசைகள் தம்மை நிறைவு

செய்யும் பொருள்களையே விரும்புகின்றன. எடுத்துக்காட்டாக ஒன்றை அமைத்து விளங்கிக் கொள்ளலாம்.

பசி என்பது ஓர் உணர்ச்சி. அது ஓர் ஆசையை எழுப்புகின்றது. அந்த ஆசையானது தான் அடைவதற்கு உரிய ஒன்றை விரும்புகின்றது. பசியினால் எழுந்த ஆசை எதை அடைய விரும்புகின்றது?

பசி என்ற இயல்பூக்கத்தின் காரணமாக எழுந்த ஆசை, உணவை விரும்புகிறது என்பது ஒரு கொள்கை. பசி என்பது இன்பத்தை விரும்புகின்றது என்பது இரண்டாவது கொள்கை.

பசியால் வாடும்போது நாம் உணவை விரும்புகிறோமே தவிர, இன்பத்தை அன்று. மக்கள் இன்பத்தை விரும்புகிறார்கள் என்பது உண்மை. இன்பத்தைத் தவிர வேறு ஒன்றையும் விரும்புகிறார்கள். பசியானது உணவை நேரடியாக விரும்பச் செய்கிறது, உணவை அடைதலே இன்பத்தை அடைதலாக அமைந்துவிடுகிறது என்று பட்லர் கருதுகிறார்.

இன்பியற் கொள்கையில் எழுகின்ற ஒரு சிக்கல்—மனிதன் இன்பத்தை விரும்புகிறானா, இன்பத்தைத் தருகின்ற பொருளை விரும்புகிறானா என்பது ஒரு வினா. பட்லர், 'பொருளை விரும்புகிறான்' என்ற கருத்துடையவர் என்று நாம் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

மனத்திலெழும் உணர்ச்சிகள் தன்னல நோக்குடையவைகளாகவோ பிறர்நல நோக்குடையவைகளாகவோ அமையலாம். தன்னல நோக்குடையவைகளாகிய எல்லா உணர்ச்சிகளையும் ஒன்றுசேர்த்து, பின் அவைகளை ஒன்றனோடு ஒன்று ஒத்துநின்று செயல்படுமாறு ஒருவகைக் கூட்டமைப்பு முறையில் இணைத்து, பின்னர் அவைகளின் கூட்டு முயற்சியால் விளையும் மொத்தமானதும் உயர்ந்த நிலை அமைப்புடையதும் ஆகிய இன்பத்தை அவனுக்கு வழங்குகின்ற பணியை மேற்கொள்ளுகின்ற அறிவியற் கூறு ஒன்று உண்டு. அது தன்னைத் தான் அன்புறுதல் (self-love) என்று பெயர் பெறும்.

அவ்வாறே பிறர்நல நோக்குடைய மன உணர்ச்சிகள் எல்லாவற்றையும் திரட்டி, அவைகளைக் கூட்டமைப்பு முறையில் செயல்படுமாறு ஒன்றனோடு ஒன்று இணைய நிறுத்தி, அவைகளால் பிறருக்கு முடிந்த அளவுக்குப் பெருகிய இன்பத்தைத்

தருமாறு செயற்படுகின்ற அறிவுக்கூறு ஒன்று உண்டு. 'பிறர் நலம் நோக்கிய தயவு' (benevolence) என்பது அதன் பெயர்.

தனிமனிதன் ஒருவன் மனத்தில் இருக்கின்ற தன்னலம் சார்ந்த எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்திச் செயற்படுத்தும் பணியை மேற்கொள்ளும் தன்னைத்தான் அன்புறுதல் (self-love) என்ற பகுதியும்; அவ்வாறே அவனுடைய மனத்திலேயே இருந்து கொண்டு பிறர் நலம் பற்றிய எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்திச் செயற்படுத்திப் பிறர் நன்மையை வளர்க்கும் பணியை மேற் கொண்ட பிறர் நலம் நோக்கிய தயவு (benevolence) என்ற பகுதியும் அறிவு வழிப்பட்டவைகள்.

அளவையியலான ஆய்வறிவுத் தன்மையுடையவைகளாகிய அவை இரண்டும் நுட்பமான அளவு முறைகளை அமைத்து மதிப்பீடு செய்யும் திறமும் பெற்றவை; இவ்விருவகை அறிவியற் கூறுகளையும் இணைத்த நிலையில், இவ்விரண்டற்கும் மேல் நிலையில் இருப்பதே மனச் சான்று.

மனச் சான்று என்பது அறம்பற்றிய அளவையியல் ஆய்வறிவு. அத் தகைய அறம்பற்றிய ஆய்வறிவுதான் செயல்களின் சரியாந் தன் மைக்குரிய விதிகளைப் பிரதிபலிக்கவல்லது.

தன்னைத்தான் அன்புறுதல் (self-love) என்பது எவ்வாறு தன்னலம் சார்ந்த எல்லாவற்றையும் கட்டுப்படுத்திக் செயற் படுத்துகிறதோ அதுபோல; பிறர் நலம் நோக்கிய தயவு (benevolence) என்பது எவ்வாறு பிறர்நலம் சார்ந்த எல்லாவற் றையும் கட்டுப்படுத்திச் செயற்படுத்துகிறதோ அதுபோல தன்னைத்தான் அன்புறுதல் (self-love) என்பதையும் பிறர் நலம் நோக்கிய தயவு (benevolence) என்பதையும் இணைத்துக் கட்டுப்படுத்தி முறையாகச் செயற்படுத்துவதே மனச்சான்று. மனச் சான்று என்பது சார்பற்ற நிலையில் இயங்குவது. கட்டுப்பாடுகளின் தாக்குதல் இல்லாமலேயே, கடமைப்பாட்டுணர்வாக விளங்குவது, மனித அமைப்பில் தலைமையும் ஆணையிடும் ஆண்மையுடையதும் மனச் சான்றுதான். மனச்சான்று என்பது அறிவியல் இயல் பானது. அதன் அடிப்படையில்தான் எல்லாவகை மன உணர்ச்சி களும் கட்டுப்படுத்தப்பெற்று, செயற்படுத்தப் பெறுகின்றன. தன்னலம் சார்ந்த, பிறர் நலம் சார்ந்த எல்லா வகை உணர்ச்சி

களையும் கண்காணித்து, அவை அவைகளின் பாதைகளில் ஒழுங் காக இயங்கச்செய்து, அவைபற்றிய சரி, தவறு என்ற தீர்ப்புரை களை வழங்குவதும் மனச் சான்றுதான்.

அறம் சார்ந்த கடமையுணர்வுகள் ஒருவனுக்கு அவனுக் குள்ளிருந்தே தரப் பெறுகின்றன. மனச் சான்றுதான் தன்னலம், பிறர் நலம் என்ற இரண்டையும் சார்ந்த செயல்களைச் செய்யத் தூண்டுவது; செயற்படுத்துவது. சுருங்கக் கூறின், மனச் சான்றி னுடைய ஆணைக்குத்தான் எல்லாமே கட்டுப்பட்டு நடக்கின்றன

பட்லரின் இக்கொள்கையைத் தன்னாட்சித் தன்மையுடைய உள்ளுணர்வுக் கொள்கை என்று விளக்கி அமைப்பதும் உண்டு.

எந்த ஓர் உணர்ச்சியும் தன்னுண்மை நிலையில் தவறுடையது அன்று. அது அளவுக்கு மீறிய நிலையில் முறைமைக்கு மாறான வழியில் செயற்பட்டுவிடுமானால் அதுவே தவறுடைய செயல் என்பதாக அமையும். எந்த ஒருவகை உணர்ச்சியும் பொருத்தமான இடத்தில், சரியான அளவில், முறையான செயற் பாட்டில் செயற்படுமானால் அதுவே 'சரி' என்பதற்கு அளவுகோல்.

ஒழுக்கம் என்பது மனிதனுடைய உயர்நிலைக் குறிக்கோள் வாழ்வுக்குப் பொருந்துவனவாக அமைந்த நடத்தைகளைக் கொண்டது. உயர்நிலைக் குறிக்கோள் வாழ்வுக்குப் பொருந்தாத நடத்தைகளின் தொகுப்பே இழுக்குடைய செயல் எனப் பெறுவ தாம்.

தன்னலம் பேணிய செயல்கள்,பிறர் நலம் பேணிய செயல்கள் என்ற இரண்டும் இணைந்து நின்ற நிலையில் இரண்டையும் உடன் கொண்ட செயல்களைக் கொண்டதுதான் ஒழுக்கம்.

அவ்வாறே தனிமனிதன் பெறும் இன்பம் என்பது தன்னலச் செயல்களால் விளைந்த இன்பமும் பிறர் நலச் செயல்களால் வந்த இன்பமும் ஆகிய இரண்டும் இணைந்த நிலையில் அமையும் இன்பமே.

தன்னிடம் ஈடுபாடு கொள்வது, தனக்கு நன்மை அல்லது இன்பத்தை நாடுவது என்பது மனச் சான்று அளிக்கும் பகுத்தறி வாராய்ச்சிக்கு உடன்பட்ட ஒரு வகை நல்வழியே என்ற கருத்து பட்லருக்கு அழுத்தமாக இருந்தது எனலாம். பட்லர் ஒரு கிறித்தவக் குரு என்ற வகையில் மக்களை அற வழியில் செலுத்த

அவர்களுடைய மனச் சான்றையே துணையாகக் கொள்வது ஒரு வகைச் சிறந்த வழி என்று கொண்டார் எனக் கருதலாம்.

இயற்கையாகவே மன அமைப்பின் நிலையைப் பொறுத்து, ஆதிக்கம் செலுத்தும் உரிமையுடையதாய் தனிச் செல்வாக்குடன் சார்பற்ற நிலையில் இயங்கவல்லதாய் இருப்பது மனச் சான்று என்று கொண்டு, அம் மனச் சான்று எந்த முடிவுகளையும் நேரடியாகவும் உள்ளுணர்வின் மூலமாகவும் கொள்ள முடியும் என்று விளக்கியதால் பட்லரின் கொள்கை உள்ளுணர்வுக் கொள்கை எனப் பெறுவதாயிற்று.

உள்ளுணர்வுக் கொள்கையைப் பற்றிய ஒரு பொதுவான முடிவுரை

உள்ளுணர்வு என்பதற்கு, மனச் சான்று என்பதனுடைய செயலாற்றும் ஆற்றல் என்பதை ஒரு பொது விளக்கமாக அமைத்துக் கொள்ளலாம்.

உள்ளுணர்வினால் அறிகின்ற எளிய கருத்துகளின் அடிப்படையிலேயே அறிவு அமைகின்றது என்பதை அளவையியலின் பகுமுறைக் கொள்கையால் அறியலாம். இவ்வகையிலேயே அமையும் விரிவான வகையைச் சேர்ந்தவைகளையெல்லாம் அளவையியல் முரண்பாட்டு நியதிக் கொள்கையின் மூலம் அமைத்துக் காட்டுவார்கள்.

அளவையியல் போலவே அற இயலும் உயர்நிலை விஞ்ஞான வகையைச் சார்ந்ததே. அளவையியல் அறிவு உள்ளுணர்வினால் அமைவது என்பது உண்மையானால் அற இயல் அறிவும் உள்ளுணர்வினால்தான் அமையவேண்டும் என்று கொள்ள வேண்டியிருக்கிறது.

அளவையியலிற் கடைப்பிடித்தது போலவே பகுமுறை, முரண்பாட்டு விதிகளை அற இயலிலும் மேற்கொள்ளலாம்.

முதன்முதலில் சுவையுணர்ச்சிபோல நம் அனுபவ நிலைகளிலிருந்து பகுமுறை அளவில் சில அறவழிகளை அமைத்துக் கொள்ளலாம். உள்ளுணர்வினால் கொள்ளும் அறவிதியையும் அனுபவத்தினால் சோதனை செய்து தெளியும் போதுதான். அந்த அறவிதியை நாம் முழுமையாக ஏற்றுக் கொள்ளமுடிகிறது. அடுத்து, அறவழிக் கொள்கைகள் சில நம் உள்ளுணர்வினால், பிறருடைய உள்ளுணர்வினால் தெரிய வரும்போது, முரண்பாட்டு விதியை அனுபவத்துடன் இணைத்துப் பார்த்து, பிற அறக்

கருத்துகளோடு முரண்படாத வகையில் ஒரு கருத்தை ஏற்புடைய கருத்தாகக் கொள்ளுதல் இயலுவதே.

எனவே, அற இயல், உள்ளுணர்வின் அடிப்படையாலேயே தனக்குரிய விதிகளை அமைத்துக்கொள்ளுகிறது என்று கருதலாம்.

அற இயலுக்கு உள்ளுணர்வு எந்தவகையில் உதவி செய்கிறது என்பதைக் கீழ்க்காணுமாறு அமைத்துக் கொள்ளலாம்.

(1) குறிப்பிட்ட சில அறச் செயல்கள் அந்த அந்த சூழ் நிலைக்கு ஏற்ற நிலையில் அறப் பொருத்தம் உடையனவாக அமையும். அறப் பொருத்தம் என்பதை வேறு எந்த அறிவாலும் பகுத்துணர்ந்து தெரிந்துகொள்ள இயலாது. உள்ளுணர்வால் தான் தெரிந்துகொள்ள இயலும்.

(2) அவ்வாறே, இயற்கை விதிகளுடன் (laws of nature) பொருந்தும் அற விதிகள் யாவை? பொருந்தாத அற விதிகள் யாவை? இத்தகைய வினாக்களுக்கு விடையாக, இயற்கை விதி களுடன் பொருந்தும் அற விதிகளை உள்ளுணர்வு என்ற ஒன்றனால்தான் பெற முடியும்.

(3) அற இயலுக்கே உரிய செயல்முறை எனப் பெறும் இப்படித்தான் செய்யவேண்டும் (ought) என்ற வரையறையை உள்ளுணர்வு என்ற ஒன்றனால்தான் பெற முடியும்.

மேலே கூறப் பெற்றவை உள்ளுணர்வுக்குரிய பொதுமைச் சிறப்பு. உள்ளுணர்வின் பிரிவுக் கொள்கைகள் சிறப்பாக உணர்த்தும் கருத்துகள் இங்கே கொடுக்கப் பெறவில்லை.

(3) (I) அறிவு நெறி என்னும் அற இயற் குறிக்கோட் கொள்கை

முன்னுரை

'விதிப்படி நடக்க வேண்டும்' என்பது ஒரு வகைப் பொதுவான அறிவுரை. எந்த விதிப்படி நடக்க வேண்டும் என்ற வினாவைக் கொஞ்சம் அழுத்தமாகக் கேட்டால் இருவகை விடைகள் கிடைக்கின்றன.

(1) அரசு விதிக்கும் விதிமுறைகள்—இக்காலத்தே அறவிதிகள் யாவை என்று கேட்டால் ஒருவன் தான் வாழும் நாட்டில் அரசு விதிக்கும் விதிகளை அற விதிகள் என்று சொல்லலாம். அதற்கு மேல், தான்பணி செய்யும் இடத்தில் அமைத்துக் கொடுத்த விதிகள் சிலவற்றையும் சொல்லலாம். இவைகளைக்கூட ஒருவனால் முழுமையாகச் சொல்ல இயலாது. சில விதிகளைச் சிலர் மீறியிருப்பார்கள்;அவர்கள் தண்டனை பெற்றிருப்பார்கள். அத்தகைய அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு, சில செயல்கள் செய்தால் தண்டனை கிடைக்கும் என்ற வகையில் அவைகளைச் சொல்ல அவன் தெரிந்திருப்பான் அவ்வளவே.

அரசியல் விதிகள் மக்களால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப் பெறுபவைகள் என்று சொல்ல முடியாது. விதிகளையே மாற்றம் செய்வதும் உண்டு. சில விதிகள் செல்வாக்கு இழந்துவிடும்; சில புதிய விதிகள் தோற்றம் பெறும்.

அரசியல் விதிகளை நாம் இவ்வாறு மதிப்பீடு செய்யலாம், அரசியல் விதிகள் தம்மளவில் நிறைவு உடையன அல்ல; நிறைவுடன் மக்களால் மனமுவந்து ஏற்றுக் கொள்ளப்பெறும் தகுதி உடையன அல்ல என்று மதிப்பிடலாம்.

(2) இயற்கை விதிகளின்படி நடக்க வேண்டும் என்பது இரண்டாவது விடை. இயற்கை விதிகள் எனப் பெறுபவை யாவை ?

இயற்கை விதிகளை விஞ்ஞான விதிகள் என்று பொதுவாக விளக்கும் முறை ஒன்று உண்டு. இயற்கை விதிகளாக அமை

யும் விஞ்ஞான விதிகள் பொது உண்மைகளாக அமைபவை களே. ஆனால் அவைகள் கட்டளை விதிகளல்ல.

இயற்கை விதிகளாக அமைந்த பொது உண்மைகள் மாறு படுவன அல்ல. மேலும், அவைகளை மீறுவது என்பதும் இயலாத ஒன்று.

அரசியல் விதிகளில் சிலருக்கு மட்டுமே பொருந்துவனவாக அமையும் விதிகளும் சில உண்டு. இயற்கை விதிகள் எனப் பெறும் விஞ்ஞான விதிகளில்கூட, சில சூழ்நிலைகளுக்கு மட்டுமே பொருந்துகின்ற சில விதிகளும் உண்டு.

எனவே, இயற்கை விதிகள் என்று சொல்லப்பெறும் விஞ்ஞான விதிகளில் இரண்டு வகை உண்டு எனக் கொள்ளலாம்.

(1) எந்த வகையான வரையறையும் இல்லாமல் எத்தகைய மாற்றத்துக்கும் இடங்கொடாமல், சிறப்பாக விளங்கும் பொதுமை விதிகள் ஒருவகை (universal laws or laws of nature).

(2) ஒருசில சூழ்நிலைக்கு மட்டுமே பொருந்தி வருகின்ற விதிகள். இவைகள் இயற்கை விதிகளேயாயினும் ஓர் இடத் துக்குப் பொருந்தும் விதி இன்னோர் இடத்துக்குப் பொருந்தாது; ஒரு காலத்துக்குப் பொருந்தும் விதி இன்னொரு காலத்துக்குப் பொருந்தாமல் இருக்கும். இவைகளைச் சூழ்நிலைச் சார்பு உடைய விதிகள் என்று கொள்ளலாம்.

(3) மேலே கூறப்பெற்ற இருவகை விதிகளுக்கும் அப்பாற் பட்ட வகையில் வேறொரு வகை விதிகளையும் நாம் காண முடிகின்றது. இவைகளும் இயற்கை விதிகளேயாயினும், அவை, அவைகளோடு தொடர்பு கொண்டவர்கள் கட்டாயம் மேற்கொள்ளப் பெறவேண்டிய விதிகளாக அமையும். இயற்கையிடம் சில முடிவுகளை எதிர்பார்த்துச் செல்கிறவர்கள், தம்முடைய முடிவை அடைய வேண்டியதன் காரணமாக அவற்றிற்கு ஏற்ப, சில விதிகளைத் தாமாகவே ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டியிருக்கும். அவைகள் ஒருசிலரால் தாமாகவே ஏற்றுக் கொள்ளப்பெறும் விதிகளாயினும் அவைகளும் இயற்கையோடு இணைந்தவைகளே. எடுத்துக்காட்டாக, இயற்கைப் பொருள்களின் மூலமாக மகிழ்ச்சியை, இன்பத்தை அடைய முற்படும் ஒருவன், தான் மேற்கொள்ளும் முடிவுக்கு ஏற்ற சில விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டியவன் ஆகிறான்.

இவ்வாறு குறிப்பிடப் பெற்ற மூன்றுவகை விதிகளையும் கீழ்க்காணும் பெயர்களை அமைத்து வரிசைப்படுத்திக் கொள்ள லாம்.

(1) சார்பு அற்ற விதிகள் : எல்லாருக்கும் பொதுவானவை களாய், எவ்வகைத் தடையும், மாற்றமும் இல்லாதவைகளாய் அமைவன (categorical).

(2) சூழ்நிலைகளால் கட்டுப்படுத்தப்பெறும் சில விதிகள் : இவைகள் சூழ்நிலைச் சார்ப்பு உடைய விதிகள் ஆகையால் இவைகளைச் சார்பு உற்ற விதிகள் என அமைக்கலாம் (hypo-thetical).

(3) சில முடிவுகளை விரும்பி மேற் கொண்டவர்கள் அம் முடிவுகளை அடைவதற்காகத் தாமே மேற்கொண்ட சில விதிகள். இவைகள் உறுதிக்கட்டுப்பாட்டு விதிகள் எனப் பெறும் (assertorial).

இயற்கைவிதியும் அற இயல் விதியும்

அற இயலை இயற்கை விதியோடு இணைத்து விளக்கம் செய்ய முற்பட்டனர். அறஇயலை இயற்கை இயலோடு இணைத்தாலும், இயற்கை விதிகளுக்குரிய மூலம் எது என்ற வினா எழுந்தது. இதற்கு விடையாக எழுந்ததுதான் பகுத்தறிவு விதி.

இயற்கை விதியே அறநெறி முறை எனக் கொண்டு,இயற்கை விதியானது மனிதனுடைய அறிவாராய்ச்சிக்கு விளங்கக்கூடியது. என்று விளக்கம் செய்து காட்டி, இயற்கை வழி வாழ்வது என்பதும் அறநெறியில் வாழ்வது என்பதும் அறிவு வழியில் வாழ்வது என்பதே என இக் கொள்கையை அறிமுகம் செய்தார் கள் (rationalism).

இயற்கையின் நெறிகளுக்கு அடங்கி வாழ்வதும், அறநெறி களுக்கு அடங்கி வாழ்வதும் ஒன்றே. இயற்கையின் நெறி களோடு இணைந்த அறநெறிகளுக்கு அடங்கி வாழ வேண்டும் என்பதற்குக் காரணம் அவைகள் நம்முடைய பகுத்தறி வாராய்ச்சிக்குப் புலப்படக்கூடியன என்பதனாலேயே. எனவே அறநெறிகளுக்கு அடங்கி வாழ்வது என்பதன் பொருள் பகுத்தறி வாராய்ச்சியின் முடிவுகளுக்கு நாம்அடங்கி வாழ்கிறோம்என்பதே. இவ்விதியைப் பகுத்தறிவு விதியாக அறவிதியைக் கொள்ளல் (The moral law as the law of reason) என விளக்குவார்கள்.

பகுத்தறிவியலான அறநெறிக் கொள்கையும் அறநுகர்ச்சிக் கொள்கையும்

அறமுடிவுக்கு வரும் ஒருவனுடைய உணர்ச்சிக்கு ஏற்ற வகையிலேதான் அறம் அமைகிறது என்று கொள்ளும் கொள் கைக்கு (moral sense theory) எதிராக அமைந்த கொள்கையே பகுத்தறிவு விதியை அறநெறி முறையாகக் கொள்ளும் கொள்கை.

பகுத்தறிவியலான அறநெறிக் கொள்கையானது அ) பழைமைக் கிரேக்க நாட்டில் ஸினிஸிசம், ஸ்டாயிஸிசம் (cysicism and stoicism) என்ற பெயர்களாலும் (ஆ) இடைக் காலத்தில் கிறித்துவத் துறவுக் கொள்கை (asceticism) என்ற பெயராலும் (இ) பிற்காலத்தில் கான்ட் என்பாரின் பகுத்தறி வியலான அற நெறிக் கொள்கை (rationalism) என்ற பெயரா லும் விளக்கம் செய்யப் பெற்றுள்ளது.

(3) (அ) ஸினிஸிஸம்; ஸ்டாயிஸிஸம்

ஆன்டிஸ்தீன்ஸ் (436.B.C.) என்பவர் ஏதென்ஸ் 'ஸினிக் என்ற கொள்கைப் பள்ளி ஒன்றைத் துவக்கினார். அவர் சாக்ரடீஸ் அமைத்த கருத்தியையுக் கொள்கைகளை வலிமைபெற அமைத்து விளக்கினார். 'ஸினிஸிஸம்' என்ற இக்கொள்கை ஒருவகையில் 'ஸிரினிஸிஸம்' என்ற கொள்கைக்கு எதிரானது.

'ஸிரினிஸிஸம்' என்ற கொள்கையின் வண்ணம் அறநெறி என்பது இன்பத்தை நோக்கியதே இதற்கு மாறாக ஸினிஸிஸம், இன்பத்தை முற்றாக வெறுத்துஅறவொழுக்கம்அறவொழுக்கத்துக் காகவே அறத்தை முடிநிலையாகக் கொண்டது. அறவொழுக்கம் என்பது சூழ்நிலைகளுக்கு அப்பாற்பட்ட தனித்தன்மையும், இன்ப துன்பங்களை எதிர்நோக்காப் பண்பும் கொண்டது. இன்பம் (pleasure) என்பது தீமையானது. அறவொழுக்கமே முழுமை யின்பம் (happiness) உண்டாக்குவதற்குப் போதுமான ஒன்று. ஏனையவைகளாலுங்கூட முழுமை இன்பம் அடைய இயலும் அவைகளில் ஒன்றுகூட இன்றியமையாதது என்று சொல்ல இயலாது. நுகர்ச்சியின்பம்கூட முழுமை இன்பத்துக்கு தேவை யானது அன்று. ஏனெனில், நுகர்ச்சியின்பம் மனிதனை அடிமை யாக ஆக்கிவிடும். உயிரானது வெற்றுத்தன்மை வாய்ந்த உடலோடு கட்டப்பெற்ற நிலையில் வாழும் அடிமை வாழ்வை

உண்டாக்கிய ஆசைகளை முழுமையாக அழிப்பதன் மூலமாகவும் நுகர்ச்சியளவினவாய இன்பத் துன்பங்களை மதியாமை மூலமாகவும்தான் ஒருவன் தனித்தன்மை வாய்ந்த கட்டற்ற நிலையை அடையமுடியும். உடலியலான, இன்னும் சொல்லப்போனால் மதியியலான நுகர்ச்சியின்பமாகிய (intellectual pleasure) எல்லாவற்றையும் துறந்தாலல்லமால் ஒழுக்க முடையவனாக ஆக இயலாது. ஒழுக்கம் என்பது உயர்நலப் பண்பு; ஆசையை வென்று நின்ற பகுத்தறிவின் நாயகமணித் தன்மை (sovereignty) சூழ்நிலைகள், தடைகள் ஆகியவைகளை வென்று நின்ற மனிதஆற்றலின் உவமையிலா உயர்தன்மை (supremacy). ஒருவன் ஒழுக்கம் என்ற நிலையை அடைய முற்படும்போது சமுகத்தையோ பொதுக் கருத்தையோ பொருட்படுத்த வேண்டிய அவசியமில்லை.

ஸினிஸிஸம் இவ்வகையில் துறவுத் தன்மையையும், எந்த ஒன்றையும் வெறுப்புறவே எண்ணும் தன்மையையும், தனிமனித வாழ்வியல் முன்னேற்றத்தையே உடன்கொண்ட தன்மையையும் கொள்கைகளாகக் கொண்டது. ஐரோப்பிய அற இயலில் துறவுக் கொள்கையை முதன் முதல் எடுத்து மொழிந்தது இதுவே. இது இன்பியற் கொள்கைக்கு முற்றிலும் எதிரான கொள்கை.

ஸ்டாயிஸிஸம் (Stoicism).

ஸிரினிஸிஸம்(cyrenicism) என்பது முற்காலத்துக் கிரேக்கக் கொள்கையில் நிலவிய இன்பியற் கொள்கை. இன்பியற் கொள்கையில் மிக அழுத்தமான கொள்கை எபிகூரியனிஸம். அவ்வாறே ஸினிஸிஸம் என்பது பகுத்தறிவியலான அற இயற்கொள்கை. அக்கொள்கையில் மேலும் அழுத்தமான கொள்கையே ஸ்டாயிஸிஸம். 'ஸினோ' (zeno 340—265 B.C.) என்பவர் இக் கொள்கையைத் தோற்றுவித்தார். இக்கொள்கையின் வண்ணம் அறவொழுக்கமே பகுத்தறிவியலான வாழ்வு; அதுவே மிகவுயர் நன்மை. 'ஒழுக்கம் ஒழுக்கத்துக்காகவே'என்பது இதன் கொள்கையுரை (motto). பற்றற்ற நிலையில்தான் ஒழுக்கத்தையும் பேணவேண்டும் என்பதைக் கொள்கையாக அமைக்கவேண்டும். அப்பொழுதுதான் முழுமையான இன்பத்தை அடைய இயலும். ஒழுக்கம் என்பது உயிரானது பழக்கமாக அமைத்துக் கொண்ட நன்மைச் செயல்களில் நனவொடு படாமலேயே ஈடுபட்டுச் செய்தலில்தான் அமைந்திருக்கிறது. ஆனால் அது சரியான செயல்களை வெளிப்புற நடத்தைகளாகச் செய்வதில் அமையாது.

ஸினிஸிஸம் என்ற கொள்கைக்கும் ஸ்டாயிஸிஸம் என்ற கொள்கைக்கும் சில வேறுபாடுகள் உண்டு.

(1) இயற்கையோடு இயைந்த வாழ்க்கை (life according to nature) என்பது ஸினிஸிஸம் கொள்ளும் கொள்கை விளக்கப் பழமொழி. இதற்கு ஒரு புதிய விளக்கம் அமைத்தது ஸ்டாயிஸிஸம். 'பகுத்தறிவோடு இயைந்து வாழ்' (life according to reason). பகுத்தறிவு என்ற ஒன்றுதான் நாம் காணும் வெளியுலக இயற்கை என்றும் மனித இயற்கை என்றும் சுட்டப்பெறுகிறது. இயற்கையினிடத்தும் மனிதனிடத்தும் பொதுமையாக அமைந்துள்ள பகுத்தறிவு முறை ஒன்று உண்டு. இத்தகைய உலகியலான பொதுமைப் பகுத்தறிவு நெறியே இயற்கை எனப் பெறும் உலகில் நிலவும் இயற்கை விதிகளாகவும் சமுதாயத்தில் காணப்பெறும் அற விதிகளாகவும் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. எனவே, தனிமனிதன், சமுக இயலான அற இயல் விதிகளுக்கு அடங்கி நடக்க வேண்டுவது அவன் கடமை. உண்மையான விதி என்பது இயற்கையில் பல பொருள்களின் பலவாந் தன்மையையும் இணைத்து நிற்கும் பொருத்தம் என்ற ஒன்றினுக்கு அடிப்படையாக நின்ற பகுத்தறிவியலான சரியாந் தன்மையே, அத்தகைய பகுத்தறிவியலான சரியாந்தன்மை என்பது அனைத்தையும் பொருத்தமுற இணைக்கும் பொதுமைச் செயற்பாட்டு நிலை: அது மாற்றமுறாதது; என்றுமுள்ளது.

(2) ஸினிஸிஸம் தனிமனித முன்னேற்றம் என்று குறிப்பிட்டது ஒரு சாதாரணத் தனிமனிதனையே. ஆனால், ஸ்டாயிஸிஸம் என்பது உலகத் தனிமனிதக் கொள்கையை உடன் கொண்டது. ஸ்டாயிக் கொள்கையின் வண்ணம் வாழ்க்கை என்பது எல்லாவற்றையும் தன்னுட் கொண்டது. அவ்வாறே, பகுத்தறிவியலான வாழ்க்கை என்பது மனித இனம் முழுமையையும் உள்ளிட்ட உயர்நிலைச் சமுதாயம் என்பதோடு இணைந்த வாழ்க்கையாகும்; கிரேக்கர்கள் குறுகிய நோக்கில் கூறும் நகர நாட்டுக் குடிமகன் (city-state citizen) வாழ்க்கையைக் குறிக்காது.

(3) ஸ்டாயிக்ஸ் எல்லாம் நன்மைக்கே என்று கருதும் கொள்கையுடையவர்களாக அமைந்தார்கள். வெற்றுச்சுவை நுகர்ச்சியியலான வாழ்வு மனிதனை மெல்ல அடிமையாக்கிவிடும்; ஆகையால் அதை நீக்கி, பகுத்தறிவியலான உண்மை அறிவியல்

வாழ்க்கை எனப்பெறும் அறவியல் வாழ்க்கையே அவர்கள் வலியுறுத்திய வாழ்க்கை.

(3) (ஆ) இடைக்காலக் கிறித்தவத் துறவுக் கொள்கை

தத்துவ ஞானியாக விளங்கிய தாமஸ் அக்யுனாஸ்(St. Thomas Aquinas, 1225-1274) என்பார் இயற்கையின் விதியே கடவுளின் விதி, இந்த விதியை மனிதர்கள் தங்கள் பகுத்தறிவினால் உணரும் போது அதுவே இயற்கை விதியாகிறது என்று கூறினர்; இதனால் மனிதனின் பகுத்தறிவுவிதியும்,உலக இயற்கை அடிப்படைவிதியும், கடவுளின் படைப்பு விதியில் ஒரே தன்மையின என்று கருத வேண்டுயுள்ளது.

தன்னைத் துன்புறுத்தும் வாழ்க்கை; தன்னை மறுத்தல்; தன்னைத் தியாகம் செய்தல் என்பவைகள் இயேசுநாதரால் கிறித்தவ சமயத்துக்கு அமைத்துக் கொடுத்த நிலையான முத்திரைகள் என்பது விளக்கப்பெற்றது. கிறித்தவ சமய வாழ்க்கை என்பது உயிரானது பருவுடலில் நின்று வாழும் வாழ்க்கை அன்று. அது ஓர் ஆன்மீக வாழ்க்கை. ஆன்மீக வாழ்க்கையை உணர்த்தும் அடையாளமே சிலுவை. உடல் வாழ்க்கை வாழும் மனிதன் இறந்த பின் அவன் ஆன்மீக வாழ்க்கை உதயமாகிறது. வெற்று உடம்பு வாழ்க்கையில் அமைகின்ற நுகர்ச்சியின்பம் தன்னளவில் தீமையன்று. நுகர்ச்சியின்ப அளவில் இருக்கும் உயிர், தன்னை பகுத்தறிவியலான உயிராக உயர்த்திக் கொள்ள வேண்டும். அப்போது சுவைநுகர்ச்சியின்பமும் பகுத்தறிவியலான இன்பத்துக்கு மாற வேண்டும். பகுத்தறிவியலான மாற்றத்துக்கு அந்த சுவைநுகர்ச்சி இன்பம் தடையாக அமையுமேல் அதைத் தியாகம் செய்யவேவேண்டும். இப்பொருளில்தான் 'வாழ்வதற்காக இறந்து போ' என்ற அறவுரை எழுந்தது. துறவுக் கொள்கை என்பது கிறித்தவ சமயத்தில், பகுத்தறிவியலான வாழ்க்கைக்குத் தடையாக இருக்கும் சுவைநுகர்ச்சியியலான வாழ்கையைத் தியாகம் செய்தல் என்பதே பொருள்.

பகுத்தறிவியலான அறவாழ்வு இடைக்காலத்துக் கிறித்தவ சமயம் அமைத்துக் கொடுத்தது என்பதே இங்கு நாம் எடுத்துக் கொள்ள வேண்டுவது.

பகுத்தறிவியலான அறவாழ்வுக் கொள்கையை விரிவாக விளக்கம் செய்தவர், ஜெர்மானிய நாட்டுத் தத்துவமேதை இமானுவேல் கான்ட் என்பார் ஆவர்.

(3)(இ) இமானுவேல் காண்ட் என்பாரின் பகுத்தறிவியலான அறக்கொள்கை

முன்னுரை

மேலைநாட்டின் அற இயல் கருத்துகள் தோன்றி வளர்ந்த வரலாற்றை ஆராய்ந்தால் ஜெர்மானிய நாட்டவரான இமானுவேல் காண்ட் (1724—1804) என்பவருடைய அற இயல் கொள்கை தவிர்க்கப் பெற இயலாதது. மேலைநாட்டு அற இயல் மட்டுமன்று, உலக அறச் சிந்தனையாளர்களின் இத்தனை வளர்ச்சியில் அற இயற் கருத்துகள் எப்படித் தோன்றி வளர்ந்து வந்துள்ளன என உலகப் பொதுமை அடிப்படையில் ஆராய்ந்தாலும் இமானுவேல் காண்ட் என்பாரின் அற இயற் சிந்தனை தவிர்க்கப்பட இயலாத ஒன்று.

அரிஸ்டாட்டில், தாமஸ் அக்யுனாஸ், இமானுவேல் காண்ட் என்ற மூவரும் மூன்று பிரிவாக விளங்கும் கொள்கை வரலாற்றுக் காலத்தின் மூன்று பெருந்தலைவர்கள் ஆவார்கள். அறஇயல் முற்காலம், இடைக்காலம், இக்காலம் என்பனவே அப்பிரிவுகள்

அரிஸ்டாட்டிலின் சிந்தனையே மூவகை நிலைகளில் வளர்ச்சி பெற்றிருக்கிறது என்று குறிப்பிடுவதும் ஐரோப்பிய நாட்டு அற இயல் கொள்கையை நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ளுவதற்கு உதவி செய்யும்.

டேவிட் ஹ்யூம் என்பார், பகுத்தறிவியலோடு பொருந்தாத பல கொள்கைகளாகிய சரக்கறையிலே, நல்ல இருட்டில் கவலையின்றித் தூங்கிக்கொண்டிருந்த காண்ட் அவர்களை இருமுறை தட்டியெழுப்பிய பெருமையுடையவர் எனப் போற்றப் பெறுகிறார். அதன் கருத்து, ஹ்யூம் என்பார் எழுப்பிய சில ஆய்வுரை வினாக்களே, காண்ட் என்பாரைச் சிந்திக்க வைத்தன என்பதாம்.

காண்ட் என்பாரின் அற இயல் கொள்கைப் பிரிவுகள்

காண்ட் என்பாரின் அற இயற் கருத்துகளைக் கீழ்காணும் பிரிவுகளின் அடிப்படையில் விளங்கிக் கொள்ளுதல் பயன் தருவ தொன்றாம்:

(1) பகுத்தறிவும் அற இயல் விதியும் (reason and the moral law).

(2) நல்லியற்றிநிலை (the good will).

(3) சார்பற்ற அற இயலின் அடிப்படை மூலங்கள் (principles of morality);

(அ) உலகவாம் பொதுமை என்னும் மூலக்கூறு (principle of universality)

(ஆ) மானிடம்-தானே தன்னுள் அனைத்து என்னும் மூலக் கூறு (principle of humanity as an end in itself).

(இ) மானிடம்—தானே தனக்கு தலைமை என்னும் மூலக் கூறு (humanity the principle of autonomy).

(4) கான்ட் என்பாரின் அற இயற் கொள்கைக்கு அமைந்த வேறு பெயர்களும் விளக்கங்களும்.

கீழே குறிப்பிடப் பெறுபவைகள் நினைவில் கொள்ளத் தகுவன:

(1) கால, இடவேறுபாடுகளைக் கடந்து, எக்காலத்தும் நின்று நிலவி, மாற்றங் கொள்ளாமல், தனிநிலையுடன் நிற்கும் தகுதி பெற்று விளக்கும் கருத்து ஒன்று; மனிதன் செய்யும் செயல்கள் சரியானவைகளா, தவறானவைகளா என்பதை அச்செயல் களிலேயே உள்ளார்ந்த பண்புகளை அடிப்படையாகக் கொண்டே முடிவு செய்ய வேண்டும். அச்செயல்களுக்கு அப்பாற் பட்ட புறநிலைத் தன்மையுடைய எந்த முடிவும் அவ்வரையறை செய்வதற்குரிய அளவுகோல்களாகா.

(2) 'நல்லியற்றிநிலை' அல்லது நல்ல எண்ணத்துடன் செய்யும் மன நிலையைத் தவிர, உலகத்தினுள்ளும் வெளியிலும் நலன் என வேறு எதையும் கூற முடியாது. தன்னியல்பாகவே அருமணி ஒளிர்வதுபோல் நல்லியற்றி நிலையும் தன்னியல்பான ஒளியால் சுடர்விடும் தன்மை வாய்ந்தது,

(1) பகுத்தறிவும் அற இயல் விதியும்

உலகைப் பற்றியும் உலகில் வாழும் மனிதனைப் பற்றியும் கான்ட் கொண்டிருந்த கருத்தை முதலில் எடுத்துக்கொள்ள லாம்.

உலகில் காணப்பெறும் இயற்கைப் பொருள்களில் ஒருவகை ஒழுங்குமுறை காணப்பெறுகிறது; எல்லாப் பொருள்களும் இவ்வுலகில் அத்தகைய ஒருவகை இயற்கை விதி இருக்கிறது என்பதை நாம் ஏற்குமாறு செயற்படுகின்றன.

இரண்டு செய்திகள் எப்போதும் தம் மனத்தை நிறைவு செய்வனவாகவும், எக்காலத்தும் புதியனவாய் பாராட்டக்கூடி

எனவாய் அமைந்துள்ள சுவர்க்கமும் (ஆகாயமும்), மேலேயும், அற விதிகள் உள்ளேயும் அமைந்திருக்கின்றன என்று அவர் குறிப்பிடுவதிலிருந்து, இயற்கையானது இத்துணை அழகும் சிறப்பும் உடையதாக அமைவதற்குக் காரணம் அதனுள்ளே இருந்து செயற்படுத்தும் அற இயல் விதிகளே என்று கொள்கிறார் எனக் கருதலாம்.

மனிதனைப் பொறுத்தவரையில் அவன் பகுத்தறிவியலான அதேசமயத்தில் குறிக்கோளியலான அறவிதிகளை மேற்கொள்ளுபவன். இயற்கையில் உள்ளார்ந்த நிலையில் அமைந்த இயற்கை விதிகள் பகுத்தறிவிய்லான விதிகளே. பகுத்தறிவியலானவிதிகளே மனிதனின் உள்ளார்ந்த பொருளில் (உயிர்) பிரதிபலிக்கும் அற இயல் விதிகளாகும். மனிதனுடைய இயற்றி நிலையானது (will) பகுத்தறிவினால் ஆளப்பெறும் நிலையே அற இயல் விதியானது செயல்படும் நிலை. அதுவே, அவனுள்ளிருந்து அவனை அறவிதிகளுக்கு இயையச் செயற்படுமாறு செய்கிறது. மனிதனுடைய அற இயலானது அவனுடைய கடமைப்பாட்டு உணர்ச்சியே. அது அவனை உலகில் அமைந்த இயற்கை விதியோடு நேர்நிலைத் தொடர்பு கொள்ளுமாறு செய்கிறது. எனவே, பகுத்தறிவியலான மனிதன் மட்டுந்தான் அற இயல் விதிகளுடன் பொருந்தியமையும் செயல்களைச் செய்யக்கூடிய தகுதியைப் பெற்றிருக்கிறான். பகுத்தறிவானது மனிதனைத் தற்சார்பியலான விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் செயற்படுத்த விடாமல் தடுத்து, என்றும் ஒரே ஒழுங்கமைப்பினை நிலையாகக் கொண்டதும், நடுவுநிலையிலிருந்து மாறாததும் ஆகிய செயல்களைச் செய்யுமாறு தூண்டுகிறது.

அற இயல் விதியானது மனிதனிடத்தில் கடமையுணர்ச்சியைத் (sense of ought) தோற்றுவிக்கிறது. கடமையுணர்ச்சி என்பதுதான் மனச் சான்று. மனிதனுடைய தோற்று நிலை அறிவின் (creative intelligence) மூலமாகத் தோன்றி வெளிப்படுவது இக் கடமையுணர்ச்சியே. எல்லாவகையான அற இயற் கருத்துகளும் தமக்குரிய அடிப்படைகளையும் மூலமாம் கொள்கைகளையும் பகுத்தறிவில்தான் பெறுகின்றன. அற இயல் சார்ந்த எல்லாவற்றுக்கும் மூலமாக அமைந்த பகுத்தறிவே மனிதனுடைய எல்லாவகையான செயற்பாடுகளையும் நெறிப்படுத்துகிறது.

அற இயல் தழுவிய எல்லாக் கருத்தமைவுகளும் அவற்றின் அடிப்படை, அவைகளுக்குரிய மூலம் ஆகிய அனைத்தையும்

தேர்ந்து தொடர்பு கொள்ளுவதற்கு மனிதனிடத்தில் இருவகை அறிவுநிலைகள் தொழிற்படுகின்றன என்று குறிப்பிடுகின்றார். ஒன்று, மனிதனிடம் அமைந்திருக்கும் சாதாரண அறிவு. இன்னொன்று, பின் வருவதை முன்கூட்டியே ஆய்ந்து செயல்படும் அறிவு, கட்டுப்பாடற்ற முழுமையும் முடிவும் ஆகிய அறிவு.

பகுத்தறிவானது மனிதனிடத்தில் நின்று செயற்படுவது ஏன் என்றால் அதுதான் மனிதனுடைய இயற்றிநிலையை (will) உருவாக்குகிறது. கடமையைப்பற்றிய தூய கருத்தானது அல்லது அற இயல் விதியானது ஒரு மனிதனை அவன் ஒழுக்கமுடையவன் என்ற நிலையைப் பெறுதற்கு, பகுத்தறிவு என்பதன் மூலமாகத் தான் தன் பணியைச் செய்கிறது. இவ் வகையில் வாழ்வில் உணர்ச்சியின் உந்துதலால் அமையும் அனுபவ நுகர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட உள்நோக்கங்களை விடப் பகுத்தறிவையே அற இயல் விதி மிகுதியும் சார்ந்து பணியாற்றுகிறது. மனிதன் எப்பொழுது அற இயல் விதிகளைப் பற்றிய அறிவை உடையனவாக அமைகிறானோ, அப்பொழுதே அவனுடைய இயற்றிநிலையானது அவனுடைய நுகர்ச்சியியல்பான ஆசைகளை வெற்றிகொள்ளக் கூடியவனாக ஆக்குகிறது.

மனிதனுடைய மிகவுயர்ந்த கடமை என்பது அவனுள்ளிருந்து கொண்டே அவனுக்கு அவ்வப்போது கட்டளையை அமைக்கின்ற அற இயல் விதியின்மேல் அன்பு செலுத்துவதே. அற இயல் விதியானது ஒருவனை அவன் தன்னுடைய இயல்பூக்கங்கள் ஆசைகள் ஆகிய எல்லாவற்றையும் கடந்து, தன் கடமையை உணர்ந்து தெளியுமாறு செய்கிறது. கடமையை உணர்தல் என்பது 'எதை நாம் செய்தேயாகவேண்டும்' என்பதைப் பற்றியதே, இத்தகைய கட்டளையை அமைத்த அற இயல் விதியினிடம் நன்றியுடன் இருத்தல் என்பதே.

சார்பு அற்ற கடப்பாடு: இயற்கையிலிருந்து நாம் உணரத்தகும் விதிகள் மூன்று என்பதை இத்தலைப்பின் முன்னுரையிற் கண்டோம். இயற்கையில் காணப்பெறும் பொது உண்மைகள், சூழ்நிலையினால் கட்டுப்படுத்தப் பெற்ற உண்மைகள், சில முடிவுகளை விரும்பி அதற்காக இயற்கையை நாடும் போது, அவர்கள் தாம் இயற்கையோடு தொடர்பு கொள்வதற்காக அமைத்துக் கொண்ட சில உண்மைகள் ஆகிய இம் மூன்று உண்மைகளையும் இயற்கையில் நாம் காணலாம். அம் மூன்று உண்மைகளையும் விதிகள் என நாம் உணரும் போது இயற்கையின் அடிப்படை விதிகள் மூன்று

ஆகின்றன. அவைகள் சார்பு அற்றவை, சார்பு உற்றவை, உறுதிக் கட்டுப்பாடு உள்ளவை என்ற பெயர்களைப் பெற்றன.

இம்மூன்றையும்—இயற்கை விதிகளாகிய இம்மூன்றையும் அப்படியே அறஇயல் விதிகளாக ஏற்கும்போது அவைகளும் முறையே சார்பு அற்ற கடப்பாட்டு விதிகள், சார்பு உற்ற கடப்பாட்டு விதிகள், உறுதிக் கட்டுப்பாட்டு விதிகள் என்ற மூன்றாக அமையும். அவை முறையே Categorical imperative, Hypothetical imperative and Assertorial என ஆங்கில வழக்கைப் பெறும்.

அற இயல் விதியானது தன்னை ஒரு சார்பு அற்ற கடப்பாட்டு விதியாகத் தெரிவு செய்கிறது. இது அற இயல் விதியானது ஒருவனின் தனிச் செயலுக்கு நேரடியாகக் கொடுக்கும் கட்டளை யாக அமைகிறது. அடுத்து, அறஇயல் விதியானது தன்னைக் கட்டுப்படுத்திய சூழ்நிலைகளை, கட்டுப்பாட்டுக்கான காரணங் களை மட்டுமே கட்டளைகள் என்ற பெயரில் பதியவைத்து விட்டு, தன்னை மறைத்துக் கொள்ளும்போது கட்டுப்பாடு களினால் கட்டளையிடப்பெற்று நடைபெறும் செயல், சார்பு உற்ற கடப்பாட்டுச் செயல் என்ற பெயரைப் பெறுகிறது. சார்பு உற்ற கடப்பாட்டு விதி முறைகளை அற இயல் விதிகளின் பதிவு பெற்ற கட்டளை விதிகள் அல்ல என்று குறிப்பிடுகிறார் கான்ட் அவர்கள்.

சார்பு அற்ற கடப்பாட்டு விதிகள் அற இயல் விதிகளின் பதிவினைப் பெற்ற, கடமையை ஒட்டிய நேர்க்குரல் அல்லது அற இயலுக்கே உரிய வாய்பாட்டு முறையாகிய 'இதை நாம் செய்தேயாக வேண்டும் (ought), என்ற முறையை ஏற்று வணங்கும் பண்புணர்ச்சி அல்லது அற இயலான விதிகளின் இலக்கியமாகவே தன்னை அமைத்துக் கொண்டுவிட்ட மனிதனின் உள்நின்று எழுகின்ற நேர்நிலை விதிகள் என்று கொள்ளலாம்.

சார்பு அற்ற கடப்பாட்டு விதிகள் அனுபவத்துக்கு முன் அமைவன (a priori) பகுத்தறிவினால் பகுப்பாய்வு மூலம் தேர்ந்து கொள்ளப் பெற்றவை. எல்லாருக்கும் பொதுவானவை களாய், எவ்வகைத் தடையும் மாற்றமும் இல்லாதவைகளாய், எல்லா இடத்திற்கும் எல்லோருக்கும் அநுபவத்துக்கும் பொருந்துவனவாய் அமைந்தவை.

சார்பு அற்ற கடமைப்பாடுகளின் கட்டளைக் குரல் 'இது இப்படி இருக்கிறது' என்ற வாய்பாட்டு விதிகளுக்கு (what is)

உரிய விளக்கமாக அமையாமல், இது இப்படித்தான் அமைந்தே ஆகவேண்டும் (what ought to be) என்ற அறஇயல் வாய்பாட்டு முறைக்கு உரிய விளக்கமாக அமைவது.

இயற்கை என்ற சொல்லால் குறிப்பிடப்பெறும் உலகத்தை வெளிப்புற உலகம் என்றும் முழுமை உலகம் என்றும் இரண்டாகப் பிரிக்கிறார் கான்ட் அவர்கள். புறஉலகம் அனுபவத்தால் அனுபவித்து உணரப்பெறுவது. அதன் உண்மைத் தன்மையின் மதிப்பீடு என்பது சார்பு நிலையுடையதே. புற உலகத்தை அனுபவித்து அறியும் அறிவு ஒன்று உண்டு. இது சாதாரண அறிவு; காலம், இடம் சூழல்களுக்கு ஏற்ப மாறுபடும் அறிவு. இத்தகைய, கட்டுப்பாடுடைய அறிவினால் உணரப்பெறும் உலக விதிகளும் சார்புநிலையை அடிப்படையாகக் கொண்டவைகளே.

காணப்பெறும் இவ்வுலகில் புறஉலகம் என்றும் முழுமை உலகம் என்றும் இரண்டு இருப்பனபோலவே அற இயல் சார்ந்த உலகமும் இரண்டாக உள்ளன. அற இயலில் புற உலகம் அனுபவஞ்சார்ந்த அறிவினால் அறியப்பெறுவது. சூழ்நிலை போன்றவைகளால் கட்டுப்படுத்தப் பெற்ற அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு அனுபவித்தறியப் பெற்ற அற இயல் புறஉலகம் சார்பு உற்ற கடப்பாட்டு விதிகளை மட்டுமே தரவல்லதாகும். அவைகள் சார்பு உற்ற நிலை அற இயல் அனுபவத்துக்கு மட்டுமே பொருந்துவன. மேலும் அவை மாறுந் தன்மையன. அவைகளை உணரவும் உணர்த்தவும் ஆகநின்ற அறிவு அறநுகர்ச்சி அறிவு (moral sense knowledge). இது சாதாரணத் தன்மை வாய்ந்தது; கட்டுப்பாடுடையது; உண்மை மதிப்பீட்டு வகையில் சார்புடையது; மாறுவது.

காணப்பெறும் உலகுக்கு அப்பால் அமைவது முழுமை உலகம்; சார்பற்ற நிலையுடைய உலகம். இத்தகைய சார்பற்ற உலகம் போலவே அற உலகிலும் முழுமையான சார்பற்ற உலகம் ஒன்று உண்டு என்று அமைத்துக் கொள்கிறார் கான்ட். அத்தகைய முழுமையான அற உலகம் சார்பற்ற நிலையுடையது; கட்டுப்பாடுகளுக்கு உட்படாதது. ஆனால் அத்தகைய சார்பற்ற அற உலகத்தை அனுபவம் என்ற கட்டுப்பாட்டுக்குள் அடங்கும் சார்பு உற்ற அறிவினால் (moral sense knowledge) அறிய இயலாது. அற இயலான முழுமை உலகம் கட்டுப்பாடற்ற பகுத்தறிவை உள்ளீடாகக் கொண்டது. சார்பற்ற அற உலகத்தின் உள்ளீடாக அமைந்திருப்பதே பகுத்தறிவு.

சார்பு உற்ற அறக் கொள்கை அல்லது சார்பு உற்ற அற உலகம் வேறு; அறிவு வேறு; அனுபவம் என்ற ஒருவகை முறையை மேற்கொண்டு பெறுகின்ற அறிவை ஒரு கருவியாக—அல்லது துணையாக வைத்துக்கொண்டு சார்பு உற்ற அறக் கொள்கைகளை அறிய முற்படுகிறோம். ஆனால் சார்பு அற்ற அறஉலகம் வேறு,பகுத்தறிவு வேறு அன்று:சார்புஅற்ற அறத்தின் உள்ளீடாக அமைவதே பகுத்தறிவுதான். பகுத்தறிவு வேறு சார்பு அற்ற முழுமைஅறம்வேறு அன்று.பகுத்தறிவை ஒரு கருவியாக அமைத்து சார்பு அற்ற அறத்தை அறிதல் என்ற முறைஅங்கே இல்லை.பகுத்தறிவாக ஒருவன் நிற்கும்போது அவன் சார்பு அற்ற அறத்தின் மயமாகவே நிற்கிறான் என்பதே பொருள். பகுத்தறிவாளனும் பகுத்தறிவும் வேறல்ல; பகுத்தறிவாளனும் சார்பற்ற அறமுணர்ந்தவனும் வேறு அல்லன். சார்பற்ற அறமேயாக நின்றவன் பகுத்தறிவாளனே. இதுவே தன்னுள் தானே அமையும் முறை இங்கே பகுத்தறிவும் சார்பற்ற அறமும் முழுமைத் தன்மை வாய்ந்தவை; கட்டுப்பாடுகளைக் கடந்தவை; மாற்றத்துக்கு உட்படாதவை; இயல்பானவை; மதிப்பீட்டு வகையில், தமக்கு உவமையில்லாத வகையில், தாம் வேறு ஒன்றை எதிர்நோக்காத வகையில் தாமே தமக்கு நிறைவும், முழுமையும், முடிவும் ஆனவை.

'இச்செயல் நல்லது' என்ற உரைக்கு இரண்டு விளக்கங்கள் அமைத்துக் காட்டுகின்றார் கான்ட் அவர்கள்.

1. இச்செயல் நல்லதை நோக்கிய செயல். செயலுக்கு அப்பாற்பட்டதாய், செயலுக்குப் பின் விளையக் கூடியதாய் அமைந்த பயனை நோக்கி, நல்லதை நோக்கி, இச்செயல் ஒரு கருவியாக அமைகிறது. எனவே நன்மை என்பது செயலில் இல்லை. பின்விளைவதில் உள்ளது. பயன் நல்லது ஆகையால், பயனை விளைவிக்கும் கருவியாகிய இச்செயல் நல்லது என்று கூறப்பெறுகிறது. இதற்குரிய ஆங்கில வழக்கு 'The action is good'. இது சார்பு உற்ற கடப்பாட்டு அறத்தையும் அதற்குரிய விதியையும் கொண்ட விளக்கம். (hypothetical imperative)

2. இச்செயல் நல்லது என்ற தொடருக்கு இச்செயல் தானே தன்னளவில் முடிந்த நன்மை. இங்கே செயல் வேறு நன்மை வேறு அன்று. செயலின் உள்ளார்ந்த பண்பே நன்மை. இங்கே செயல் கருவியாக, அதனால் பின்னர் விளைவது நன்மை என்பது இல்லை. செயலும் நன்மையும் வேறன்று. செயலே நன்மை

என்றதன் பொருள்: செய்லே பகுத்தறிவு; பகுத்தறிவே நன்மை; செயலே பகுத்தறிவாய், முழுநன்மையாய் வேறொன்றைப் பின் விளைவு என நோக்காத வகையில், அச்செயல் தானே தன்னள வில் முடிந்த நிலையாய் அமைந்துவிடுகிறது. இதற்குரிய ஆங்கில வழக்கு 'The action is conceived as good-in-itself' என்பதாம். இதுவே சார்பற்ற அறநிலைக் கடப்பாட்டுச் செயல் (categorical imperative).

(2) நல்லியற்றிநிலை (Good will)

மனிதன் தன்னுடைய வாழ்வில் எவ்வளவோ பொருள்களை நல்ல பொருள்களாக மதிக்கிறான்; சொல்லுகிறான். உண்மை யிலேயே ஒருவனுக்கு நன்மையுடைய பொருள் என ஒன்று இருக்குமானால், அது அவனுடைய நல்ல இயற்றிநிலை தான். ஏனெனில் அதுதான் நன்மைகள் எல்லாவற்றுக்கும் அடிப் படையான நன்மை.

இக்கருத்தை விளக்க முற்படும்போதுதான் கான்ட் அவர்கள் 'நல்லியற்றி நிலை அல்லது நல்ல எண்ணத்துடன் செய்யும் மன நிலையைத் தவிர உலகத்தின் உள்ளும் வெளியிலும் நலன் என வேறு எதையும் கூற இயலாது' என்று கூறுகிறார். நன்மைத் தன்மை பற்றிக் கான்ட் அவர்கள் கொள்ளும் கருத்தைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

செந்தாமரை, செஞ்ஞாயிறு என்ற இரண்டு சொற்கள் இன்றும் மக்கள் பேச்சு வழக்கில் அமைந்திருக்கும் சொற்களே.

செந்தாமரை என்ற சொல்லில் செம்மை என்ற சொல் சிவப்பு நிறத்தைக் குறிக்கும். தாமரை என்பது சிவப்பு நிறத்தை உடைய ஒரு பொருள். 'செம்மை ' என்ற சொல் அடைமொழி. தாமரை என்பது அந்த அடைமொழியை ஏற்று நிற்கும் சொல். தாமரை சிவப்பு நிறமாக இருப்பதால் சிவப்பு நிறத்தைக் குறிக்கும் செம்மை' என்ற சொல் தாமரைக்கு அடைமொழியாக வந்தது.

செஞ்ஞாயிறு என்பது சிவப்பு நிறமாகிய சூரியன் என்ற பொருளைக் குறிக்கும். செம்மை = சிவப்பு, ஞாயிறு = சூரியன்; ஞாயிறு என்ற சொல்லுக்கு முன்னே செம்மை என்பது வந்துள்ளது. அது சிவப்பு நிறத்தைக் குறிக்கிறது. அந்த நிறம் சூரியனில் இருக்கிறது.

தாமரையில் சிவப்பு நிறம் இருப்பதுபோல, சூரியனிலும் சிவப்பு நிறம் உண்டு; செம்மை என்ற சொல் இரண்டிடங்களிலும்

சிவப்பு நிறத்தையே குறித்து வருகிறது. ஆனால், செந்தாமரை என்பதில் உள்ள செம்மை என்ற சொல் அடைமொழி என்பதாகும். செஞ்ஞாயிறு என்பதில் செம்மை என்பது அடைமொழி என்ற பொருளில் வழங்கப் பெறவில்லை. சூரியனிடத்தில் இருக்கும் பண்பைக் குறிப்பதற்காக வந்த சொல். ஏன் இந்த மாற்றமான இலக்கணம்?

செந்தாமரையிலும் செம்மை என்ற நிறம் இருக்கிறது. அதைக் குறிக்கவந்த சொல் என்று கொண்டு, செந்தாமரை என்பதில் உள்ள செம்மை என்பது பண்பைக் குறிக்க வந்த சொல்லாகக் கொள்ளலாமே.

தாமரை என்ற பொருள் சிவப்பு நிறத்தோடும் தொடர்புடையது; வெள்ளை நிறத்தோடும் தொடர்புடையது. சூரியன் செம்மை நிறத்தோடு மட்டுமே தொடர்புடையவன். வேறு நிறத்தோடு அவனுக்குத்தொடர்பு இல்லை. கருஞ்சூரியனோ வெண்மைச் சூரியனோ இல்லை. வேறுநிறங்களுக்குத் தன்னிடம் இடம் கொடுக்காமல், செம்மை என்ற ஒன்றற்கே தன்னை உரிமையாக்கிவிட்டான். இங்கே சூரியனுக்கு வேறுநிறத்தோடு தொடர்பு இல்லை என்பதைக் குறிப்பதற்காகச் 'செம்மை' என்ற சொல் சேர்க்கப் பெறவில்லை. சூரியன் செம்மையை மட்டுமே தன்னுடைய பண்பாக ஏற்றவன் என்ற பொருளில் செம்மையானது சூரியனிடத்தில் அமைந்திருக்கும் பண்பு என்பதைக் குறிக்க வந்தது. செம்மை நிறம் இல்லாமல் சூரியன் காணப் பெற்றால், அவன் சூரியன் இல்லை என்பதுதான் கருத்து.

ஆனால் தாமரை அப்படி இல்லை. தாமரை செம்மை நிறத்துக்கும் இடந்தரும்; வெள்ளை நிறத்துக்கும் இடந்தரும். செம்மை நிறம் இல்லையானால் அதனைத் தாமரை இல்லை என்று சொல்ல முடியாது. ஏனெனில், வேறு நிறத்துக்கும் இடம் தரும் நிலை தாமரைக்கு உண்டு. தாமரை என்பதனோடு செம்மையைச் சேர்ப்பதன் நோக்கம் வெண்மை நிறத் தாமரையைப் பிரித்துவிட்டு, இவைகள் சிவப்பு நிறத்தாமரைகளே என்று சுட்டிக் காட்டுவதற்காகத்தான். வேறு ஒன்றிலிருந்து பிரித்து, ஒன்றை மட்டுமே குறிப்பிட்டுச் சுட்டிக் காட்ட வந்ததாதலின் தாமரைக்குச் செம்மை என்ற சொல் அடைமொழி ஆயிற்று.

இனி, வேறொரு வேறுபாடும் உண்டு. செம்மை என்ற சொல் இல்லாமல் 'ஞாயிறு' என்று சொன்னால் சிவப்பு நிறத்தையுடைய சூரியனையே குறிக்கும். அவ்வாறே செம்மை

என்ற சொல் இல்லாமல் 'தாமரை' என்ற சொல்லை மட்டும் சொன்னால் செந்தாமரையையே குறிக்கும் என்று சொல்ல முடியாது. 'தாமரை' என்ற சொல்லை மட்டும் கேட்கும் ஒருவன் இது செந்தாமரையைக் குறித்ததா, வெண்தாமரையைக் குறித்ததா என்று தெரியாமல் தவிப்பான். செம்மை என்ற சொல் இல்லாமல் 'ஞாயிறு' என்று சொன்னவுடன், இது வேறு ஏதோ ஒரு சூரியனைக் குறிக்குமோ என்று யாரும் ஐயுறமாட்டார்கள். ஞாயிறு என்றாலே செஞ்ஞாயிறுதான்.

அவ்வாறே 'நல்லியற்றிநிலை' என்பதில் நன்மை அடைமொழி அன்று. இயற்றிநிலை (will) என்பதன் பண்பைக் குறிப்பிட்டு வந்த சொல். இயற்றிநிலைக்கு நன்மையைத் தவிர வேறு எந்த ஒரு பண்புடனும் தொடர்பு கிடையாது. செம்மை என்ற சொல் இல்லாமலேயே ஞாயிறு என்று குறித்தாலும் அது செம்மையைப் பண்பாகக் கொண்ட சூரியனையே குறிக்கும். அவ்வாறே நன்மை என்ற சொல்லை இணைக்காமல், 'இயற்றிநிலை' என்று சொன்னாலும், நன்மையையே பண்பாகக் கொண்ட இயற்றிநிலையைத்தான் குறிக்கும். எனவே நல்லியற்றிநிலை என்பதில் உள்ள நன்மை அடைமொழி அன்று; இயற்றிநிலைக்கு வேறு பண்புகளோடும் தொடர்பு உண்டு, ஆயினும், வேறுபண்புகளின் தொடர்பை நீக்கி, நன்மை என்ற பண்புடன் இணைந்த இயற்றிநிலை இது என்று மற்றவைகளிலிருந்து பிரித்து, நன்மையுடன் இணைந்த இயற்றிநிலையை மட்டுமே சுட்டிக் காட்ட வந்ததே 'நன்மை' என்ற சொல் என்று கொள்ளக் கூடாது. ஏனெனில், இயற்றிநிலை நன்மையைத் தவிர வேறு எதற்கும் இடம் தராது. இனி செல்வம், தைரியம், அறிவு என்பவைகளுடன் நன்மை என்ற சொல்லைச் சேர்த்து, நல்ல செல்வம், நல்ல தைரியம், நல்ல அறிவு என்று சொல்லும் போது அவைகளில் வரும் நன்மை என்பது அவைகளின் அகப் பண்பு அன்று; அது அடைமொழி. ஏனெனில் செல்வம், தைரியம், அறிவு முதலியவைகள் தீமை போன்ற பிற பண்புகளோடும் சேர்ந்து தீய செல்வம், தீய தைரியம், தீய அறிவு என்று அவைகள் இருப்பதும் செயல்படுவதும் உண்டு. அவைகள் தீமையோடு இணைந்து தீமையை வளர்க்கவும், நன்மையோடு சேர்ந்து நன்மையை வளர்க்கவும் செய்யும். எனவே நற்செல்வம் நல் தைரியம், நல்லறிவு என்பவைகளில் உள்ள நன்மை அடைமொழி. 'நல் இயற்றிநிலை' என்பதில் உள்ள நன்மை என்பது பண்பு. நன்மையைப் பண்பாகக் கொள்ளாத ஓர் இயற்றிநிலை இல்லை. இயற்றிநிலை வேறு, நன்மை வேறு என்று பிரிந்து நிற்றல் இல்லை. எனவே, இயற்றிநிலையில் உள்ள நன்மை

என்பது இயற்றிநிலையை விட்டு என்றும் நீங்காமல், அதனுள்ளேயே இருக்கும் பிரிக்க வாராப் பெரும்பண்பு என்று கொள்ளுதல் வேண்டும். 'நல்லியற்றிநிலை' என்பதில் உள்ள 'நன்மை' என்பது அடைமொழிச் சொல் அன்று.

இத்தகைய வேறுபாட்டின் அடிப்படையில், நல்லியற்றிநிலையில் உள்ள நன்மை என்பது என்றும் இருப்பது; அது இல்லையானால் இயற்றிநிலை என்பதே இல்லை என்று கொள்ளும் வகையில், அது ஓர் அடிப்படைத் தேவை என்று குறிப்பிடுகிறார். செல்வம், தைரியம் போன்றவைகளில் நன்மை என்ற சொல் சேர்க்கப்பெறலாம். ஆனால் அது எப்பொழுதும் இருப்பது என்ற கருத்தையோ, இது ஓர் இன்றியமையா தேவை என்ற கருத்தைக் குறிப்பிடவோ வந்தது அன்று. ஏனெனில் தைரியம்,செல்வம்,அறிவு போன்றவை தீயவற்றோடும் தொடர்பு கொள்ளும். தீயவற்றோடு தொடர்பு கொண்டால் தீயவைகளை வளர்க்கும் தன்மையும் அவைகளுக்கு உண்டு.

செயலுக்கு, பயனைக் கொடுக்கும் ஆற்றல் உண்டு என்று சொல்ல இயலாது. ஏனெனில், ஒருவனுக்கு இன்பத்தைக் கொடுத்த அதே செயல் மற்றவனுக்குத் துன்பத்தை விளைவிப்பதாக அமைந்துவிடுகிறது. எனவே, பயன் விளைக்கும் ஆற்றல் செயலுக்கு உண்டு என்று சொல்ல முடியாது.

ஒருவன் ஒரு செயலைச் செய்ய முற்பட்டான்; செய்து முடித்தான்; நன்மை விளைந்தது என்று அமைத்துக் கொள்வோம். விளைவு நன்மை என்றால், அதற்குரிய நன்மையானது, அவன் அச்செயலைச் செய்ய எண்ணி, முயன்று, செயலை முடித்தமையும் வரை உள்ள நிலைகளில் எங்காவது ஓர் இடத்தில் நன்மை அமைந்திருக்க வேண்டும். அவ்வாறு பார்க்கும்போது செயலில் நன்மை அமைந்ததா என்றால் ஒரே செயல் ஒருவருக்கு நன்மையையும் மற்றொருவருக்குத் தீமையையும் விளைவித்திருப்பதை நாம் காண முடிகிறது. எனவே, நன்மையை ஏற்று நிற்கும் ஒன்று இயற்றி நிலையே. அது வேறு எந்த ஒன்றையும் தன் பண்பாக ஏற்பதில்லை. இயற்றிநிலையில் அமைந்த நன்மை என்பது மிகவுயர்ந்த நன்மை. அதுமட்டுமன்று; ஏனையவற்றின் நன்மைத் தன்மையை வரையறை செய்யும் அடிப்படை, நன்மை என்று கொள்ளவேண்டும் என்பது காண்ட் என்பவரின் கருத்து.

காண்ட் அவர்கள் 'நல்லியற்றிநிலை'யை விளக்க எடுத்தாளும் உவமை ஒன்று. அந்த உவமையின் மூலம் அவர் விளக்க

நினைக்கும் கருத்தையும் இங்கே நாம் வரையறை செய்து அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

'தன்னியல்பாகவே அருமணி ஒளிர்வதுபோல நல்லியற்றி நிலையும் தன்னியல்பான ஒளியால் சுடர்விடும் தன்மை வாய்ந்தது' என்பதே அந்த எடுத்துக்காட்டு.

இங்கே, அருமணி ஒளி செய்வதற்குக் காரணம் அதனுள் அதன் இயற்கைப் பண்பாக அமைந்த ஒளியே. ஆனால் இந்த மணியை, தன்னிடம் வந்து சேர்ந்ததைப் பிரதிபலிக்கும் பளிங்கு மணி என்பதாக அமைத்துக் கொள்ளக் கூடாது.

பளிங்கு மணி (பளிங்கு—crystal) என்பது தன்னிடம் வந்து சேர்ந்ததைப் பிரதிபலிக்கும் தன்மை வாய்ந்தது. பளிங்கு மணியின் பக்கத்தே சிவப்பு நிறம் இருந்தால் அதைப் பிரதி பலிக்கும்; பச்சை நிறம் இருந்தால் அதையும் பிரதிபலிக்கும். பளிங் கானது தன்னுண்மைப் பண்பை வெளிப்படுத்தாமல், தன்னை வந்து சார்ந்த பண்பை வெளிப்படுத்தும்.

கான்ட் அவர்கள் கூறும் அருமணியையும் அதன் தன்மை யையும் இவ்வாறு விளங்கிக் கொண்டால், அதனால் வரும் கருத்து என்ன?

இயற்றிநிலையானது நன்மையோடு தொடர்பு கொண்ட போது நல்ல பயன்களை விளைவிக்கும்; அது தீமையோடு தொடர்பு கொண்டபோது தீய பயன்களை விளைவிக்கும் என்று முடிவு செய்ய வேண்டிவரும். அப்படி அமைத்தால் இயற்றி நிலைக்கு நன்மையோடு தொடர்பு இருப்பது போலவே, தீமை யோடும் தொடர்பு இருக்கிறது என்பதாகக் கொள்ளவேண்டும்.

கான்ட் அவர்கள் இயற்றிநிலையின் தன்மையை விளக்க முற்படும்போது மேற்கொள்ளுகின்ற தொடர் அமைப்பு முறையைப் பார்த்தால், இயற்றி நிலையானது தீமையோடும் உறவு கொள்ளும் என்று அவர் கருதுவது போலத் தோன்றும். அவ்வாறே எண்ணி இதனை விளக்கியவர்களும் உண்டு.

'ஒரு மனிதன் நல்லியற்றி நிலையிலிருந்து அல்லது கடமை யுணர்ச்சி என்பதை நன்றியுணர்வுடன் அடிப்படையாக அமைத்துக் கொண்டு செயற்படுவானேயானால், அப்பொழுது அவனால் எண்ணிய நன்மை சார்ந்த விளைவுகள் வாராமற்

போனாலுங்கூட, அவன் செயல் நன்மை உடைய செயலே' என்ற அமைப்புடைய தொடர்களால் விளக்குகிறார்.

மேலே குறிப்பிடப் பெற்ற தொடரமைப்பைப் போலவே' இயற்றிநிலையானது தீமையுடன் இணைந்திருந்தது என்று அமைத்தால், செயல் தீமையுடையது என்பதாகவே அமையும் என்ற முடிவு வரும். இச்சிக்கல் தீர்வதற்கு உரிய வழி, அவர் எடுத்துக் காட்டிய 'அருமணியை' நன்முறையில் விளங்கிக் கொள்வதேயாகும்.

மணிக்கு ஒளியானது இயற்கைப் பண்பு. ஒளி இல்லையேல் அது மணி இல்லை; வேறு ஏதோ ஒரு பொருள். பிற பண்பைப் பிரதிபலிப்பது வேறு; தன்னுண்மைப் பண்பை வெளியிடுவது வேறு. இவ்வகையில், இயற்றிநிலை என்பது பிரதிபலிப்பதைத் தன் செயலாகக் கொண்டதன்று, தன்னுண்மைப் பண்பைத் தான் வெளியிடும் தன்மை கொண்டது. எனவே, இயற்றிநிலை நன்மையைத் தன் இயற்கைப் பண்பாகக் கொண்டது. அது எக்காலத்தும் தன் பண்பாகிய நன்மையையே வெளியிடும். தீமை தன்னை வந்து சார்வதற்கு இடம் கொடுப்பதும், சார்ந்த தீமையைப் பிரதிபலிப்பதும் இயற்றிநிலையின் செயலல்ல.

செயலில் நன்மை அல்லது தீமை உள்ளார்ந்த பண்புகளாக அமைந்துவிடுகின்றன. நற்செயல் என்பது நல்லியற்றி நிலையோடு இணைந்த செயல். அப்படியானால் தீய செயல் என்பதற்குத் தீய இயற்றிநிலையோடு இணைந்த செயல் என்று கொள்ளாமல், தீய செயலில் இயற்றிநிலை இல்லை. இயற்றிநிலைக்குப் பதிலாக ஆசைகள், சிலவகையான தாழ்வு எண்ணங்கள் செயற்படுத்தும் அடிப்படைகளாக அமைய ஒருவன் செயல்படலாம். அச்செயலில் இயற்றிநிலை இல்லை; மேலும், அச்செயலில் உள்ளார்ந்த நற்பண்பு இல்லாமையால் அது ஒரு வெற்றுச் செயல். எனவே, இயற்றிநிலையோடு இணையாமல் செயல்கள் நிகழ்த்தப் பெறும் என்பதைக் கான்ட் ஒப்புகிறார். இயற்றிநிலை என்பது நன்மையோடு மட்டுமே தொடர்புடையது எனக் கொள்ளவேண்டும்.

(3) சார்பற்ற அறத்தின் அடிப்படை மூலக்கூறுகள்

கான்ட் அவர்கள் சார்பற்ற கடமைப்பாடு என்னும் முழுமை அறத்தைத் தெளிவாக இயல்பு விளக்கம் செய்து வரையறை செய்து காட்ட முற்படுகிறார். சார்பற்ற கடமைப்பாட்டு அறத்துக்கு அடிப்படையாக அமைந்த மூலக்கூறுகள் மூன்று

என்று வரையறை செய்து, அவைகளை மூன்று இலக்கண உரைகளாக (three maxim of morality) அமைத்துக் காட்டி விளக்கம் செய்கிறார். அவைகளை முறையே காணலாம்:

(i) உலகவாம் பொதுமை என்னும் மூலக்கூறு (Principle of Universality) சார்பற்ற அறம் என்பது பொதுமை விதிகளைக் கொண்டது நாம் காணும் புறவுலகத்துக்கு அப்பாற்பட்ட முழுமை உலகத்தை அடிப்படையாகக் கொண்ட இயற்கை விதியைப் போலவே அறவுலகத்திலேயும் முழுமை அற உலகத்தை அடிபடையாக் கொண்ட முழுமை அற விதியே சார்பு அற்ற கட்டுப்பாட்டு விதியாக அமைகிறது.

சார்பற்ற கட்டுப்பாட்டு விதியின் அடிப்படை மூலக்கூறு— முழுமை உலகத்துப் பொதுமை சார்ந்த விதியை உடையதாக இருக்கும் என்று கூறினார்.

அடுத்த நிலையில், ஏதேனும் ஓர் அற விதியை எடுத்து இது சார்பற்ற கட்டுப்பாட்டு நிலை சார்ந்த அற விதியா என்று தெரிந்து கொள்ள வேண்டுமானால், இதனுள் முழுமை உலகத்தின் பொதுமைக் கூறு இருக்கிறதா என்று பார்க்க வேண்டும் என ஓர் ஆய்வு முறையைத் தருகிறார். அதற்கு அடுத்த நிலையில் முழுமை உலகத்தின் பொதுமைக் கூறு இருக்கிறதா என்று பார்ப்பதற்கு ஒரு வழியினைச் சொல்கிறார். தனி ஓர் அற விதியை எடுத்து அதனையே பொதுமைக்கு இலக்காக அமைத்துப் பார். முழுமை வாய்ந்த பொதுமைக் கூறு இருப்பின், அதனைப் பொதுமையாக்கும்போது அத்தனி அறச் செயல் நின்று நீடிப்பதாக இருக்கும். பொதுமைப்படுத்தும்போது அச்செயல் அழிந்துவிடும் நிலையை எய்தும் எனத் தெரிந்தால், அத்தகைய தனி அறச் செயல் சார்பற்ற முழுமைப் பொதுமை அறம் அன்று என அறிந்துகொள் என்பது காண்ட் அவர்களின் விளக்கமும் வழியும் ஆகும்.

'Act in conformity with that maxim and that maxim only, which you can at the same time will to be a universal law'.

இக்கருத்து, வேறு இன்னொரு வடிவ அமைப்பில் காணப் பெறுகிறது.

'Act as if the maxim from which your act were to become hrough your will a universal law of nature'.

இக் கொள்கைக் கூறு நான்கு எடுத்துக்காட்டுகளால் விளக்கப் பெறுகிறது.

(1) ஒரு மனிதன் துன்பங்களையே தொடர்ந்து அனுபவித்த நிலையில் வாழ்வியற் சோர்வினை உணர்ந்து, பின் தற்கொலை செய்துகொள்ள எண்ணுதல்.

(2) ஒரு மனிதனுக்குப் பணம் தேவைப்படுகிறது. பிறரிடமிருந்து பணம் பெற விரும்பும்போது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பித்தந்து விடுவதாக உறுதிமொழி அமைக்க வேண்டும். திரும்பிக்கொடுக்க இயலாது என்பதை அவன் அறிவான் பணத் தேவையின் காரணமாக நாம் செய்து கொடுக்கும் இந்த உறுதிமொழியை நம்மால் காப்பாற்ற இயலாது என்று தெரிந்தே உறுதிமொழி செய்து தருகிறான்.

(3) தன்னியல்பில் ஒரு தொழிலில் தனித்திறமை வாய்ந்த ஒருவன், அத்திறமையை வளர்த்தால் பிறருக்கு உழைத்து அடிமையாகவே அமைந்துவிடவேண்டும் என்று கருதி தன் தனித்திறமையை வளர்க்க மறுக்கிறான்.

(4) பலவகை வளமைகளும் நிரம்பிய ஒருவன் அடுத்தவன் சொல்லொணா வறுமையில் துடிப்பதைப் பார்க்கிறான். மிக எளிமையாக அவன் வறுமையை நீக்க முடியும். ஆனால், அச்செயலில் ஈடுபடத் தயக்கம் காட்டுகிறான்.

மேலே கூறப்பெற்ற நான்கு எடுத்துக்காட்டுகளும் கான்ட் அவர்கள் எடுத்துக்காட்டியவைகளே. கான்ட் என்பார் அமைத்த இந்த நான்கு எடுத்துக்காட்டுகளையும் விளக்குகின்ற முறையில் அறநூல் ஆசிரியர்களிடத்தில் கருத்து வேறுபாடு காணப் பெறுகிறது. ஒருசிலர் ஒன்றிரண்டு எடுத்துக்காட்டுகளை மட்டுமே கொள்கின்றனர். எவையேனும் இரண்டு எடுத்துக்காட்டுகளை முதல் மூலக்கூற்றின் விளக்கங்களாக அமைத்துக்கொண்டு ஏனையவைகளை ஏனைய இரண்டு மூலக்கூறுகளுக்கும் உரிய எடுத்துக்காட்டுகளாகக் கொள்கின்றனர். எடுத்துக்காட்டுகளை எடுத்து விளக்கம் செய்கின்ற முறையிலும்கூட வேறுபாடு காணப் பெறுகின்றது.

கான்ட் அவர்களின் அற இயற் கொள்கையானது பலவேறு கூறுகளை இணைத்து நிற்பது என்றாலும் 'சார்பற்ற கடப்பாடு'

என்ற ஒன்றன் அடிப்படையில் எல்லாவற்றையும் இணைத்து உணர்ந்து கொள்ளலாம். அவ்வகையில் காலம், இடம், சூழ்நிலை என்ற சார்புகளைக் கடந்ததாய், எல்லாருக்கும் எல்லாக் காலத்திலும், எல்லா இடத்துக்கும் பொருந்தும் பொதுமையும் முழுமையும் உடையதாக இருப்பதே சார்புஅற்ற நிலை. எனவே, எந்த ஓர் அறவிதியும் பொதுமை உடையதாக அமையவேண்டும் என்பது கான்ட் அவர்கள் முழுமையாக உடன்படும் கொள்கை எனக் கொள்வதில் தவறு இல்லை. அத்தகைய அடிப்படையில் இந்த நான்கு எடுத்துக்காட்டுகளும் பொதுமை நிலை உடையன என்ற அடிப்படையிலேயே விளக்கப் பெற்றிருத்தல் வேண்டும் அல்லது விளக்கப் பெறல் வேண்டும். அவ்விளக்கங்களை இங்கே காணலாம்.

முதல் எடுத்துக்காட்டு, ஒருவன் பணம் வாங்குவதற்காகப் பொய் உறுதிமொழி தருகிறான் என்பது. இச்செயல் சரியா, தவறா என அறிய முற்படும்போது, இச்செயலை ஒரு பொதுமையும் முழுமையும் அமைந்த அறவிதியாக அமைத்துப் பார்த்தல் வேண்டும் என்பது கான்ட் அவர்களின் கருத்து. இதை ஆங்கிலத்தில் False promise என்றும் Breaking the promise என்றும் Promise-breaking என்றும் அமைத்துக் காட்டுகிறார்கள். இதற்கு எல்லாரும் உறுதிமொழியை மீற முற்பட்டால், உறுதிமொழி என்பதே பொருளற்றதாகிவிடும் என்பது விளக்கமாகக் கொள்ளப்பெறுகிறது.

முதலில் False promiseஎன்பதும் Breaking the promise என்பதும் ஒன்றல்ல. Promise என்றால் நான் இன்னது செய்வேன் என்பதை முன்கூட்டியே சொல்லாலோ எழுத்தாலோ அமைத்துக் கொடுத்தல். தமிழில் இதனை உறுதிமொழி என்றுகொள்ளலாம். நெடுமொழி, நிறைமொழி என்ற சொற்கள் இதனோடு தொடர்புடையன ஆயினும் இங்கே அவைகளைக் கொள்ளுவது பொருத்தம் உடையதன்று.

False Promise என்பது தவறான உறுதிமொழி. Prom ise breaking என்பது முன்னதனோடு வேறுபாடு உடையது. தவறான உறுதிமொழி என்பது உறுதிமொழியைக் கொடுக்கும் போதே உறுதியை எடுத்துவிட்டு வெறும் மொழியை மட்டும் கொடுத்தல்; நான் இதைச் செய்கிறேன் என்பதை எழுத்தால் கொடுக்கும்போதே, இதைச் செய்யமாட்டேன் என மனத்தில் நினைத்துக்கொள்ளுதல். எனவே, சொல் வேறு செயல் வேறு என்பதே இதன் அடிப்படை. பணம் கொடுப்பவனுக்குத் தெரி

யாமலேயே இவ்வேறுபாடு செய்யப் பெறுகிறது. இரண்டாவது வகையை எடுத்துக்கொண்டால் அது உறுதிமொழியைச் செய்யும் போது அவனுக்கு அந்த எண்ணம் இல்லை. பிறகு அவன் சொன்ன உறுதிமொழியை அவனால் நிறைவேற்ற இயலவில்லை. இதுவே Promise-breaking எனப்பெறும். பின்னர் ஒரு காலத்தில் நிறைவேற்றப் பெறாமையால் Promise-breaking என்பது தவறு என்றால், ஒரு செயலின் சரி என்பதும் தவறு என்பதும் பின் விளைவை அடிப்படையாகக் கொண்டது என்பதாக ஆகும். எந்த ஒரு செயலையும் அதன் பின்விளைவை நோக்கி முடிவுசெய்தல் என்பதைக் காண்ட் அவர்கள் ஒப்பவில்லை. இனி, தவறான உறுதிமொழி என்பது, செய்கின்ற காலத்திலேயே செய்பவன் தெரிந்து செய்வதையே காண்ட் அவர்கள் உடன்படுகிறார். ஏனெனில் மேலே குறிப்பிடப்பெற்ற நான்கு எடுத்துக்காட்டுகளிலும் அவன் செயலை மட்டும் குறிப்பிட்டு நிறுத்திவிடாமல், அது நிகழும் சூழ்நிலையை நன்றாக விளக்கியிருக்கிறார். எனவே, பின்விளைவை வைத்து முடிவு செய்யாமல்,அச்செயலை வைத்தே அச்செயலின் சரி, தவறு என்பவைகளை முடிவு செய்ய முடியும் என்று குறிப்பிடுகிறார். மேலும், அச்செயலின் சரி, தவறு என்ற அமைப்பு அதனுள்ளேயே அமைந்து இருக்கிறது என்பதும் காண்ட் அவர்களின் கருத்து. உறுதிமொழி செய்ய முற்படும்போது அவனுடைய பொதுமையுணர்வு அவனுக்கு இது உன்னால் முடியாது என்பதை உணர்த்துகிறது, அதை உணர்ந்து அவன் அதுதான் சரி என்றும் துணிகிறான். இங்கே பொதுமை விதி கூறுகின்ற அறிவுரையை ஏற்றுக் கொள்கிறான். ஆனால், அவன் செயற்படுவது, அவனுடைய தன்னலஞ் சார்ந்த சாதாரண அறிவு கூறுகின்ற வழியில்.

காண்ட் அவர்கள் கூறும் வேறொரு கருத்தையும் இங்கே சிந்தித்தல் வேண்டும். காண்ட் எந்த ஒரு செயலையும் தவறு என்று குறிப்பிடவில்லை. செயல்கள் இரண்டு வகையில் செய்யப் பெறுகின்றன. இருவகைச் செயல்களும் அறிவின் அடிப்படையிலேயே செய்யப்பெறுகின்றன. பொதுமையும் முழுமையும் அமைந்த பகுத்தறிவு வழியில் செய்யப்பெறும் செயல்கள் ஒரு வகை. ஆசைகளாலும் வேறுசில உணர்ச்சிகளாலும் உந்தப்பெற்று செய்யும் செயல்கள் மற்றொருவகை.

பொதுமையும் முழுமையும் சார்ந்த பகுத்தறிவின் வழிநின்று செய்யும் செயல்களையே அற இயலான செயல்கள் என்று கருத வேண்டும். இன்பம் பெற வேண்டும், ஆசை நிறைவுபெற

வேண்டும் என எண்ணும்போது அவனுடைய அற நுகர்ச்சியறிவு அதற்கேற்ற செயல்களை மேற்கொள்ள வைக்கிறது. அவை சாதாரண அறிவின் அடிப்படையில் செய்யப் பெற்றவை. அவைகள் இன்பத்தைக் கொடுக்கும்; ஆசைகளை நிறைவு படுத்தும். ஆனால், அவைகள் அற இயலான நன்மைச் செயல்கள் அல்ல. இந்த அளவிலேயே செயல்களை நாம் வரையறை செய்து கொள்ள வேண்டும்.

அற இயலிற் சரியானவை என்பது பொதுமையும் முழுமையும் சார்ந்த பகுத்தறிவு வழியிலான கடமைகளே. கடமையுணர்ச்சியிடம் அன்பு செலுத்தி, கடமையுணர்ச்சியுடன் கடமையைச் செய்ய வேண்டும். இவ்வாறு செய்யப்பெறாமல் சாதாரண அறிவின் மூலம் செய்யப் பெறுபவை கடமைகள் ஆகா. அவைகள் சாதாரண அறிவுவகையிலான செயல்கள். கடமை என்பது தற்சார்பு தாக்கப் பெறாமல் பொதுமை அமைப்பின் உந்துதலால் வருவது. பொதுமையும் முழுமையும் அமைந்த பகுத்தறிவு உலகந் தழுவிய ஒன்று. உலகந் தழுவிய பொதுமையும் முழுமையும் அமைந்த பகுத்தறிவு வழியில் நின்று கடமையாற்றுதல் வேண்டும். அத்தகைய கடமையை ஏன் செய்ய வேண்டும் என்ற வினாவை எழுப்பினால் இன்னது பயன் என்பதாக நினைத்துச் செய்வது சாதாரண அறிவின் செயல். இதைச் செய்தேயாக வேண்டும் (oughtness) என்ற எண்ணத்தோடு மட்டுமே நின்றுவிட வேண்டும். அதற்கும் மேல் சென்று பயனை விசாரித்தறிந்து செயல் மேற்கொள்ள வேண்டும் என்றால், அதைக் காண்ட் தடுக்கவில்லை. அது சாதாரண அறிவின் செயல்; அறச் செயலாகாது என்று மட்டும் கூறுகிறார்.

செயல் செய்ய வேண்டிய சூழலில் அவனிடத்தில் பொதுமையும் முழுமையும் தழுவிய பகுத்தறிவியலான அறத்தின் குரலும் ஆசையும், இன்ப நுகர்வும் பற்றிய சாதாரண அறிவின் குரலும் கேட்கும். அறத்தின் குரலே கடமையின் குரல். மனிதன் அற இயலான செயல்களை மேற்கொள்ள வேண்டும் என்று நினைப்பவன் பொதுமையும் முழுமையும் தழுவிய பகுத்தறிவியலான அறத்தின் குரல்வழியே கடமையில் ஈடுபட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

நீ செயல்பட முற்படும் போது, உன்னால் முடியக் கூடியதை உட்கொண்டதாகிய கடமையுணர்ச்சியுடன் (sense of oughtness) பொதுமையும் முழுமையும் சார்ந்த பகுத்தறிவு முறையிலான

அறமாகவே நில் என்பதே அவருடைய கோட்பாட்டுரைகளில் முதல் உரையான 'உலகவாம் பொதுமை இயலான மூலக் கூற்றின்' விளக்கமாக நாம் கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறன்றி, ஒரு செயலை சரி, தவறு என்று பார்க்க வேண்டுமேயானால் அதனை உலகந் தழுவிய பொதுமை நிலையாக ஆக்கிப்பார். அப்போது அச்செயல் அப்பொதுமை நிலைக்கு ஈடுகொடுத்து நிற்குமானால் அதனைச் சரியான செயல் என்று கொள்ளலாம் என்று விளக்கம் செய்தால் அது சரியான விளக்கமாகாது. எடுத்துக்காட்டாக ஒன்றைக் காணலாம்.

கொடுத்தல் அதாவது வறியவர்களுக்கு ஒன்று கொடுத்தல். இச்செயலை உலகந் தழுவிய பொதுமைச் செயலாக ஆக்கினால் எல்லாரும் கொடுப்பார்கள். எல்லாரும் கொடுக்க முற்பட்டால் வாங்குவதற்கு ஆள் இருக்க மாட்டார்கள். வாங்குவோர் இல்லாதபோது கொடுக்குந் தொழில் நடைபெறாது. எனவே, கொடுத்தல் தவறு என்ற முடிவுக்கு வர நேரும்.

கான்ட் என்பார் கூறிய கருத்தை இவ்வாறு சிந்தித்து விளக்கம் கூறக்கூடாது என்பதற்காகத்தான் போலும் தமிழகத்தில் சில புலவர்கள் இவ்வாறு எண்ணி விளக்கம் செய்துள்ளார்கள். 'கவிஞர்களின் கவி' எனப் பெறும் சிவப்பிரகாச சுவாமிகள்

'கொடுப் போர்க்கு இரப்போர் இல்லாக்
குறை ஒன்று உளது கூறுங்கால்'

என்று அமைத்துப் பாடியிருக்கிறார். கம்பரும் இதே கருத்தில், 'வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்'

இரு பெருங் கவிஞர்களும் இருவேறு வகைகளிற் சொன்னாலும் கருத்து ஒன்றே.

ஏனைய மூன்று எடுத்துக்காட்டுகளில் கான்ட் குறிப்பிடுவது செயலை மேற்கொள்ளாமல் இருக்கும் நிலை. செயலை மேற்கொள்ளாத் தூண்டுவதுதான் அறிவு. அதில் இரண்டு வகை. செயலையே மேற்கொள்ளாதிருக்கத் தூண்டுவது எது? செயல் மேற்கொள்ளாதிருப்பதை இயற்கை நியதி எதுவும் ஏற்கவில்லை. அதையும் ஓர் அறிவுதான் தூண்டுகிறது என்றார். அற நுகர்ச்சி அறிவு (moral sense theory) என்ற கொள்கையை மறுப்பதற்கும், வேலை நிறுத்தம் என்பது எவ்வாற்றாலும்

உலகப் பொதுமை அறத்துக்குப் பொருந்தா நிலை என விளக்கவும் மேற்கொள்ளப் பெற்றவை என்று கொள்ள வேண்டும். (அவை இங்கே பொருந்தா).

(ii) மானிடம் — தானே தன்னுள் அனைத்தும் என்னும் மூலக்கூறு (Principle of Humanity as an end-in-itself). காண்ட் என்பார் சார்பு அற்ற அற இயலின் அடிப்படை மூலங்கள் மூன்றனுள் இரண்டாவது மூலக்கூற்றினை, மனிதத் தன்மையின் தன்னுண்மை விளக்கமாக அமைத்துக் காட்டியுள்ளார்.

மனிதத் தன்மை என்பது மனிதனுடைய பலவேறு கூறுகளின் தனித்தனி வளர்ச்சியும், பின்னர் அவைகளின் இணைப்பு வளர்ச்சியும் சேர அமையும் ஆளுமைப் பண்பின் விளக்கமாக, மனிதன் என்பான் எல்லா வகையாலும் தானே தனக்கு முடிவு நிலையாக அமைந்தவன். மனிதன் வேறு எந்த மனிதனையோ வேறு எந்த ஒன்றையோ தனக்கு முடிவு நிலையாகக் கொண்டவன் அல்லன்.

மனிதன் தன்னளவில் தானே முடிவுநிலையானவன் என்று கூறுவதிலிருந்து,ஒருவன் தன்னளவில்தானே முடிவுநிலையானவன் என்பதிலிருந்து, தனக்கு அயலாக இருப்பவனும் அவனளவில் முடிந்தநிலையினன். எனவே, அடுத்த மனிதனை ஒருவன் தனக்கு ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. மனிதன் தான் விரும்பிய பயனை அடைவதற்கு, உயிரற்ற, அறிவற்ற பொருள்களைக் கருவிகளாகக் கொள்வது உண்டு. ஆனால் ஒரு மனிதன் இன்னொரு மனிதனையே இவ்வாறு ஒரு கருவியாகப் பயன்படுத்தக் கூடாது. இவ்வகையில் மனிதனிடத்துள்ள அகப் பண்பாகிய ஆளுமைப் பண்பினை மதித்து நடத்தல் வேண்டும் என்பது காண்ட் அவர்களின் அறக்கருத்துகளின் மையக் கருத்தாகும்.

காண்ட் அவர்கள் இந்த இரண்டாவது கோட்பாட்டுரையைக் கீழ்க்கண்டவாறு அமைத்துள்ளார்.

'Act so as to use humanity, whether in your own person or in the person of another, always as an end, never as merely a means'

பகுத்தறிவு வழியில் உருவாகும் கடமையைச் செய்ய முற்படுபவன். அவன் பகுத்தறிவு வழியில் அமையும் கடமையை உயர்வுடையது என மதித்து, நன்றியுணர்வுடன் அதனைப் போற்றி ஒழுக வேண்டியவன். ஒருவன் தன்னால் மதித்துப் போற்றி நன்றியுணர்வுடன் ஒழுகுவதற்குரிய பகுத்தறிவு வழிக் கடமையையே அடுத்த மனிதனும் தனக்குரிய கடமையாகக் கொண்டிருப்பவனாதலின், கடமையை நன்றியுணர்வுடன் போற்றும் மனிதன், அக்கடமையையே மேற்கொண்டிருக்கும் அடுத்த மனிதனை, அவன் மேற்கொண்டிருக்கும் கடமைக்காக வேனும் மதித்து நடக்கக் கடமைப்பட்டவன் என்பது கான்ட் அவர்களின் கருத்து.

எனவே, ஒருவன் தன்னுடைய நன்மைக்கு மற்றவனை ஒரு கருவியாக அமைத்துக் கொள்ளக் கூடாது என்பதும், மற்றவர்களை அடிமைகளாக அமைத்துக் கொள்வதும் தவறானவைகளாகும் என்பது இந்த ம்இரண்டாவது கோட்பாட்டுரையின் மூலம் தெரிய வருகிறது.

(iii) மானிடம்—தானே தனக்குத் தலைமை என்னும் மூலக்கூறு

(Humanity – The principle of Autonomy): மனிதன் பிற ஒருவனைத் தலைவனாக ஏற்று, தான் அவனுக்கு அடிமையாக இருப்பவன் அல்லன். இக்கருத்து முன் உள்ள அற இயல் அடிப்படை மூலக்கருத்தினால் தெரிந்த ஒன்றே. தானே தனக்குத் தலைமை என்ற இப் பொருளுரையானது மனிதனின் கட்டற்ற தன்மையையும் (freedom) சார்பு அற்ற நிலையில் தனித்து நிற்கும் ஆற்றலையும் (independence) குறிப்பிட்டுக் கூற வந்ததாகும்.

மனிதன் தானே தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் மரபினன் (self-government). அவன் பிறிதொருவர் அமைத்த ஆணைக்குக் கீழ்ப்படிபவன் அல்லன். அவன் பகுத்தறிவினன் ஆதலின், அற இயல் விதிகளை அமைத்துக் கொள்ளவும் அமைத்துக்கொண்ட விதிகளில் இயங்கவும் வல்லன். அவன் முழுமையும் பொதுமையும் ஆய அற இயல் மையவிதியினை நேர்நின்று தனதாக்கிக் கொள்பவன் ஆதலின் இன்னொருவனால் விதிக்கப் பெற்ற, அவ்விதிகளுக்கு அடங்கி நடப்பவன் அல்லன்.

தானே தனக்குத் தலைமை எனப்பெறும் இம்மானிட இயலைக் காண்ட் என்பார் கீழ்க்காணுமாறு அமைத்துக் காட்டுகிறார்.

'Act as a member of a kingdom of ends' or 'Act as if the will of any other rational being qua rational, were the legislator of tby actions' என்பதே.

மேலே குறிப்பிடப் பெற்ற உரைக்கு உரிய விளக்கமாக அறிஞர்கள் கருதுவதை இங்கே காணலாம்.

உயர்நிலைக் குறிக்கோளியலான சமுதாயம் ஒன்று அமையும். அதில் அடங்கிய உறுப்பினர்கள் அனைவரும் பகுத்தறிவியலான அற இயல் விதிகளைச் சார்பற்ற கடமைப்பாடு எனக்கொண்டு, நடைமுறைப்படுத்தியவர்கள். எனவே ஒவ்வொருவரும் தனக்குவமையற்ற, தனித் தலைமையாகத் தங்களுக்குத் தாங்களே அமைந்தவர்கள். தானே—தன்னுள்—அனைத்தும் என நின்ற அவர்கள் பலர் இணைந்து நிற்க உருவாகிய சமுதாயம் (kingdom of ends) என்றும் தலைமையர் பலரும் இணைந்து தம்மைத்தாமே ஆளுமாறு அமைத்துக் கொண்ட ஆட்சி என அது இருக்கும் என்றார். அத்தகைய ஆட்சியில் சட்டங்களைச் செய்பவர்களும் சட்டங்களுக்கு அடங்கி நடப்பவர்களும் என்று வேறு வேறு மனிதர்கள் அமைய மாட்டார்கள். தன்னுள் அனைத்தும், தானே தலைமை தனக்கு என்ற இருவகைக் கருத்துகளையும் அடக்கிய நிலையில் 'Autonomy' என்ற ஆங்கிலச் சொலலை அமைத்து, மானிடம் இவ்வாறான தலைமைத் தன்மை உடையது என்று குறிப்பிட்டார்.

(4) காண்ட் என்பாரின் அற இயற் கொள்கைக்கு அமைந்த வேறு பெயர்களும் விளக்கங்களும்

காண்ட் என்பாரின் அற இயற் கருத்துகள் பகுத்தறிவியலான அறக்கொள்கை (Rationalism) என்ற பெயரில் முன்னே விளக்கப் பெற்றது. இனி, அவர் அறக் கொள்கையை வேறு சில பெயர்களாலும் குறிப்பிட்டு விளக்குவார். அம்முறையில் அக்கொள்கைக்கு அமைந்த வேறு பெயர்களையும் விளக்கங்களையும் காணலாம்.

(i) வழக்கத்திற்கியைந்த நெறிமுறை—(Formalism): காண்ட் என்பாரின் அறக்கொள்கை என்பது 'வழக்கத்திற்கியைந்த நெறி

முறை' எனப் பெறும். பொதுவாக இது ஒருவகை வெறுப்புரை. புதியதாக ஒன்றும் சொல்லிவிடவில்லை; வழக்கமாக எல்லாரும் சொல்வதுபோலத்தான் இவரும் கூறியிருக்கிறார். மனிதனுடைய வாழ்நாளில் குறுக்கிடும் அறவழிச் சிக்கல்களை எடுத்து விளக்கி, அச்சிக்கல் தீரும் வகையில் ஏதாவது சொல்லாமல், எல்லாரும் வழக்கமாக மேற்கொள்ளுவதுபோல, எதிர்மறை நிலையில் இதைச் செய்யாதே, அதைச் செய்யாதே என்று மட்டும் கூறிச் சென்றாரேயொழிய, உடன்பாட்டு முறையில் இதைச் செய்யவேண்டும் என்று, மனிதனின் அன்றாட வாழ்நிலைக்குத் தேவையானவைகளை நேர்முறையில் விளக்கமாகக் கூறவில்லை என்பது அறிஞர் கருத்து.

சார்பற்ற கடப்பாட்டினைப் பற்றிக் கூற முற்படும்போது 'உன்னால் முடியக்கூடியதும் அதே சமயத்தில் இயற்றிநிலையால் பொதுவிதியாகக் கொள்ளக்கூடியதும் ஆகிய நெடுநாளைய அறிவுரையை ஆதாரமாகக் கொள்' என்று கூறியிருக்கிறார். எனவே, நாம் ஒரு செயலைச் செய்யும்போது மேற்கொள்ளும் விதியை மற்றவர்களும் தம் செயலுக்குரிய வழியாக ஏற்றுக் கொள்ளலாம் என்ற ஒருவகை எளிய வழியையும் அவர் அறிவுறுத்தினார் என்றே கொள்ளலாம்.

அவ்வாறே, பகுத்தறிவுக் கருத்தைத்தான் இயற்றிநிலையானது தனக்கு அடிப்படையாகக் கொள்ளும் என்று விளக்கங் கூறிய காண்ட் அவர்கள் அறநெறியை அறிவு நெறியாகவே அமைத்துக் காட்டினார். மனிதன் அடிப்படையிலேயே பகுத்தறிவு படைத்தவன். அவன் பகுத்தறிவுக்கு ஒத்த விதிமுறைகளை அமைத்துக்கொண்டு இந்த உலகத்துடன் பழகுகிறான். காண்ட் அவர்கள் இவ்வாறு தம் கொள்கையை விளக்கும்போது அது பகுத்தாராயும் அறிவு இல்லாதவருங் கூட ஏற்றுக் கொள்ளும் வகையில் அமைந்திருக்கிறது என்று கொள்வதில் தடை இல்லை. எனவே, வழக்கத்திற்கு இயைந்த நெறிமுறையையே கூறினார் காண்ட் என்பதை ஒரு திறனாய்வு கருத்தாகக் கொள்ளாமல், அவர் பணியைப் பாராட்டும் முறையிலும் அக்கருத்தை நாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவுக்கு ஏற்பவே அமைத்துக் கொடுத்தார் எனக் கொள்ளலாம்.

(ii) வடிவக் கொள்கை (Formalism) : 'Formalism' என்பதற்கு வழக்கத்துக்கு இயைந்த நெறிமுறை என்பது ஒரு பொருள். அதற்கு வேறு ஒரு பொருளும் உண்டு.

ஆசைகள், உணர்ச்சிகள் முதலியவைகளே அற இயல் விதிகளுக்கு உள்ளீடாக அமைபவை. ஆசைகள், உணர்ச்சிகள் ஆகியவைகளை ஒழுங்குபடுத்தி, அவைகளை அறிவாராய்ச்சியியலால் தூய்மையுடையனவாகவும் ஏற்புடையனவாகவும் அமைத்து, அவைகளுக்குச் செயற்பாட்டு வடிவத்தை அமைத்துக் கொடுப்பதே பகுத்தறிவின் பணி. ஆனால், கான்ட் என்பார் அமைத்த அற இயல் விதிகள் எனப் பெறும் சார்பு அற்ற கடப்பாட்டுக் கொள்கையை நோக்கும்போது, ஆசைகளுக்கோ உணர்ச்சிகளுக்கோ இடம் இல்லை. பகுத்தறிவு மட்டுமே உண்டு. பகுத்தறிவு என்பது வடிவ அமைப்பினை மட்டுமே கொடுக்க வல்லது. உள்ளீடாக அமையும் ஆசைகள் உணர்ச்சிகள் இல்லாமையால் கான்ட் அவர்களின் கொள்கையை உள்ளீடற்ற வெற்று வடிவமைப்புக் கொள்கை என்று விளக்கம் செய்பவர்களும் உண்டு.

கான்ட் அவர்கள் வகுத்துக் காட்டிய சார்பு அற்ற கடப்பாட்டுக் கட்டளைகள் அற இயலில் தூய்மையான வடிவ அமைப்புகளே என்று கொள்வது சரியானதே. அவர் அற இயலின் உள்ளீடு என்று கருதப்பெறும் ஆசைகள், உணர்ச்சிகள் ஆகியவைகளை நீக்கிவிட்டார் என்று கூறுவர். கான்ட் அவர்கள் கொண்ட கருத்து அற இயல் என்பது ஒருவகையில் கடமை இயல் (deontology) என்பதே, கடமை என்பதை அற இயலின் உள்ளார்ந்த அடிப்படைக் கருத்து என்று கொண்டார். எனவே, கடமை என்ற கருத்தை, கடமையுணர்ச்சி என்ற உள்ளீட்டுடன் இணைத்து நிறுத்தி, பகுத்தறிவு என்பதால் அதற்கு வடிவம் கொடுத்து, ஒரு முறையான, கடமையுணர்ச்சியுடன் கூடிய, கடமைக் கொள்கையை அற இயலுக்குரிய புதிய விளக்கமாக அமைத்து, அதற்குப் பகுத்தறிவினால் வடிவம் அமைத்தது கான்ட் அவர்களுக்கே உரிய மேன்மைப் பணி எனக் கொள்ள வேண்டும். தன்னல விருப்பங்களால் எழுப்பப்பெறும் எல்லாச் செயல்களும் கடமையுடன் தொடர்பு கொண்டனவாகா. கடமையுனர்ச்சியால் உந்தப் பெற்ற கடமையே அற இயலின் நன்மை வாய்ந்த செயற்பாடாகும்.

கான்ட் ஒருவரே கடமையுணர்ச்சியுடன் இணைந்த கடமையை மையக் கருத்தாக அமைத்து, அற இயலில் ஒரு வகை மாற்றத்தைச் செய்த முதல் ஆராய்ச்சியாளர் ஆவார். அற இயல், கான்ட் அவர்களுக்குப் பின்னர்தான் கடமை இயல் (deontology) என்பதாகவும் விளக்கம் பெற்றது. அதற்கு முன்னோடியாக நின்று அப்பணியைத் திறமுறச் செய்து முடித்தவர் கான்ட் அவர்களே.

(iii) **கான்ட் என்பவரின் கொள்கை கடுமைக் கொள்கை (Rigorism):** காண்ட் என்பார் அமைத்துக் கொடுத்த சார்பற்ற கடப்பாட்டுக் கொள்கை மிகுதியும் கடுமையானது என்று இரண்டு வகைகளிற் கூறி விளக்குவார்கள்.

(அ) எந்த ஒரு செயலும் உணர்ச்சியாலோ, மிக்கெழும் வேக உணர்ச்சிகளாலோ உந்தப்பெற்றுச் செயற்படுத்தப் பெறுமே யானால் அது அறச் செயலாக அமையாது எனக் கொண்டார் காண்ட். ஆனால் உயர்ந்த குறிக்கோளாகிய நாட்டுப் பற்றுணர்ச்சி பிறர்மேல் காட்டும் தயவுணர்ச்சி ஆகிய இத்தகைய நல்லுணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு செய்தாலும்கூட, அச்செயல்கள் அறச்செயல்கள் ஆகா என்று எடுத்துக்காட்டினார். இவ்வகையில் இவர் கொள்கை, உணர்ச்சியை அற இயலிலிருந்து முழுமையாக வெளியேற்றப் பெறவேண்டும் என்ற கொள்கையில் மிகவும் கடுமையாக இருக்கிறது என்றே கொள்ளுதல் வேண்டும். உணர்ச்சி என்ற வகையில் கடமையுணர்ச்சி என்ற ஒன்றை மட்டுமே அற இயலில் உட்புக அனுமதி கொடுத்தார்.

கடமையைச் செய்தல் என்பது இயல்பாக அமைதல் வேண்டும். அப்போதும் அக்கடமைகள் கடமைகளுக்காகவே செய்யப் பெறுவதாக அமைய வேண்டும் என்றார்.

(ஆ) கான்ட் என்பாரின் அற இயல் விதி வேறொரு வகையிலும் கடுமையுடையதாக இருந்தது.

எல்லா இலக்கண விதிகளுக்கும் புறனடை (exception) உண்டு. கடமை இயல் சார்ந்த அற இயல் விதிகளில் எங்கேயும் அவர் புறனடைக்கு இடம் தரவே இல்லை. சில சூழ்நிலைகளில் சிலவகை அற இயல் விதிகளுக்குப் புறனடை விதிகளை ஏற்றுக் கொள்ளலாம் எனப் பெரும்பாலான அற இயல் ஆய்வாளர்கள் அமைத்துக் காட்டியபோது, அத்தகைய புறனடைகளுக்கு ஒருசிறிதும் இடம் தராமல் கடமைக் கொள்கையை அற இயலின் இதயக் கொள்கையாக அமைத்துக் கொடுத்தவர் கான்ட் அவர்களே. விதிவிலக்குகளை எந்த ஒருவகைச் சூழ்நிலையிலும் அனுமதிக்காமல் கொள்கையை வகுத்தார் என்பதால் அவருடைய அற இயற் கொள்கை மிகவும் கடுமையானது என்று விளக்கம் செய்பவர்கள் உண்டு.

(3) (II) அறிவியல் அறநெறியின் வெளிப்பாடே கடமை

தனிமனிதனும் அவன் செயல்களும்

தனிமனிதன் செயல் மேற்கொள்ளும் போது இருவகை உள்ளுக்கிகள் செயற்படுத்துகின்றன என்று முடிவு செய்தார்கள்.

அவை முறையே தன்னலம் சார்ந்தவை; பிறர் நலம் சார்ந்தவை (egoism and altruism) எனப் பெற்றன. இவை இரண்டும் பயன் நோக்கிய செயல்களே. இவை இரண்டையும் இன்பியற் கொள்கையின் இரு பிரிவுகள் வலியுறுத்தின. அவை அடுத்த தலைப்பிற் காணலாம். அவை இரண்டும் பயன் நோக்கிய அறச் செயல்கள் (teleological ethics) எனப் பெற்றன. இத்தகைய அறச்செயல்களுக்குரிய விதிமுறைகளும் இயற்கை நியதிகளிலிருந்தே எடுக்கப் பெற்றன. அவைகள் உறுதிக் கட்டுப்பாட்டு விதிகள் (assertorial) என்று 'அறிவு நெறியே அறநெறி என்னும் கொள்கை' என்ற தலைப்பின் முன்னுரையில் எடுத்துக்காட்டப் பெற்றது.

சார்பு உற்ற நிலைச் செயல்களும் உறுதிக் கடப்பாட்டுச் செயல்களும் மனிதனின் இருவகை உள்ளுக்கிகளைக் கொண்டு செய்யப் பெறுபவை. இவ்விரண்டிலும் செயற்பட வைப்பது மனிதனின் சாதாரண அறிவே. பகுத்தறிவு எனப்பெறும் முழுமையும் பொதுமையும் சார்ந்த உலகவாம் பேரறிவு என்பது ஏனைய இருவகைச் செயல்களையும் துறந்து நின்ற மேலாம் நிலை.

உலகமனிதன் என்னும் கருத்து

தன்னலம் காரணமாகச் செய்யும் செயல்கள் நேரடியான தன்னலச் செயல்கள்; பிறர் நலங்காரணமாகச் செய்யும் செயல்கள் மறைமுகமான நோக்கில் தன்னலச் செயல்களே, இவையிரண்டாலும் செயற்படுபவன் தனிமனிதனாக,சமுக மனிதனாக அமைகிறான். இவ்விரண்டையும் கடந்து, உலகவாம் பேரறிவினனாக நின்று அதன் வழியில் செயல் மேற்கொள்ளும்போது அவன் உலக மனிதன் என்ற பெயரைப் பெறுகிறான் (universal man). உலக மனிதனாக நின்றபோது பின்விளைவாக வரும் நன்மை பற்றிய செயல்கள் அவனுக்கு இல்லை.

கடமை

தன்னலம் பிறர்நலம் (egoism and altruism) என்ற இருவகை நிலைமைகளை உள்ளிட்ட செயல்கள் சாதாரண அறிவை உள்ளிட்ட செயல்களே. இரண்டையும் இணைத்துச் செய்பவர்கள் முறையே தனிமனிதனும் சமூகமனிதனும் இணைந்த ஒருவகை இணைப்பு மனிதர்களாக அமையலாம். இவையிரண்டும் நீங்கிய நிலையில் உலகமனிதன் நிலை அமைகிறது அதுவே கடவுள் நிலை எனவும் இணைக்கப் பெறுகிறது. உலக மனிதன் என ஒருவன் முழுமையும் பொதுமையும் இணைய நின்ற பகுத்தறிவின்

இயக்கத்தோடு செயற்படும்போது அவனுக்கென ஏதும் நன்மையை அவன் மேற்கொள்ளவில்லை. எனவே, அவன் செயல்கள் கடமைகள் எனப் பெறுகின்றன. எனவே அறிவியலின், இறுதிப் பகுதியாகிய பகுத்தறிவு உள்நின்று செலுத்த, அக்கடமையைத் தவிர வேறு எந்த ஒன்றையும் எண்ணாதவனாக இக்கடமையைச் செய்தேயாக வேண்டும் (sense of duty—oughtness) என்ற உணர்ச்சியுடன் கடமையைச் செய்கிறான்.

இத்தகைய ஒருவகைக் கொள்கையை, நியதியை நாம் இயற்கையின் மையக் கோட்பாட்டிலிருந்தே பெற முடிகிறது. என்ன பயனை நோக்கியது இச்செயல் என்ற வினாவை எழுப்பினால் கடமையைச் செய்து முடிக்க வேண்டும் என்ற விருப்பத்துடன் கடமையைச் செய்து முடிந்தவைதவிர வேறு பயன் ஏதும் இல்லை. இதுவே 'கடமை கடமைக்காகவே' (duty for duty's sake) என்ற அடிப்படை விதியாக அமைகிறது.

கடமை என்பது பயன் நோக்காச் செயல்

சார்பு அற்ற கடப்பாடு என்ற தலைப்பில் கடமையைப் பற்றிய விளக்கம் முன்பேயும் அமைக்கப் பெற்றது.

'கைம்மாறு வேண்டா கடப்பாடு' என்று திருவள்ளுவர் கூறுகிறார். கடமை என்பது வேறு ஒரு பயனை நோக்கியது அன்று; கடமை என்பது கடமைக்காகவே செய்யப் பெறுவது.

கடமை என்பது எந்த ஓர் அடிப்படையான இலக்கணத்தைக் கொண்டு தோன்றுகிறது என்பதையெல்லாம் எடுத்துக் கூறியபின், அக்கடமையைச் செயற்படுத்தும்போது அச்செயலுக்குரிய பயனை எதிர்பார்க்காமல் அக்கடமையைச் செய்ய வேண்டும் என்பது பொதுவாகக் கடமையை விளக்கும் முறை. திருவள்ளுவர் கூறும் முறை வேறு. கைம்மாறு என்பதன் பொருள் கையை மாற்றும் தன்மை என்பதே. கொடுக்கும் போது கொடுப்பவன் கை உயர்ந்து, வாங்குபவன் கை கீழே இருக்கும். ஒருவனுடைய கையானது கொடுக்கும்போது உயர்ந்து நிற்கிறது. அதே கை முன்னே யாருக்குக் கொடுத்தானோ அவனிடமிருந்து ஏதேனும் ஒன்றை வாங்க முற்படுமேயானால், அவன் கையின் செயல் மாறுபடுகிறது. மேலே இருந்து கொடுத்த கையானது கீழேயிருந்துவாங்குகிறது. இதையே கைமாறுதல்என்றார். செயல் எதுவாயினும் கைமாறாதிருக்குமேயானால் அது கடமையே என்றார். என்ன அடிப்படையில் இச்செயல்

தோன்றியது என்றெல்லாம் ஆய்வு செய்ய வேண்டியதில்லை. கொடுத்த கை வாங்கிய கையாக மாறிவிடக் கூடாது என்பது ஒன்றே திருவள்ளுவர் கூறும் இலக்கணம்.

திருவள்ளுவர் கருத்தின்படி கடமை என்பது பிறருக்கு எந்த ஒரு பயனையும் எதிர்பாராமல் நன்மை செய்தல் ஒன்றே கடமை; கொடை என்பதில் வருகின்ற பிரிவுகள் பலவாக அமையலாம். எல்லாவற்றையும் ஒன்றன் கீழ்க் கொண்டு வந்துவிட முடியும். அது பிறருக்கு நன்மை செய்தல் என்ற ஒன்றே.

இனி, கடமை என்பதற்குத் திருவள்ளுவர் வேறு ஓர் இலக்கணம் வகுக்கிறார். எந்த ஒரு பயனையும் எதிர்பாராமல் கொடுத்தான். கொடுத்துவிட்ட அந்த அளவில் அது கடமை தானே என்றால், சில காலம் கழித்து இவனிடம் வாங்கியவன், இவனுக்கு ஏதோ ஒரு வகையில் ஒன்றைக் கொடுக்க முற்படுகிறான். முன்னே எதையும் எதிர்பாராது கொடுத்து விட்டான் ஆகையால் அன்று அவன் செய்தது கடமை. இன்று, வேறு ஏதோ வகையில் இவன் அவனிடமிருந்து ஒன்றை வாங்க வேண்டியவனாகிறான். அப்படி வாங்கியபோது, அவன் முன்னே செய்த கடமை இப்போது மீளவும் ஆய்வுக்கு உரியதாக எடுத்துக் கொள்ளப் பெறுமா? ‘ஆம்’ என்கிறார் திருவள்ளுவர். பயனை விரும்பாது கொடுக்க வேண்டும் என்பது மட்டுமன்று. நீ நினை யாது கொடுத்தாலும், உன்னிடம் வாங்கியவன் அதன் பயனை உனக்குக் கொடுக்க முற்படும் போது, அவனால் எவ்வகையாலும் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையை நீ அமைத்துக் கொள்ள வேண்டும். இதையே திருவள்ளுவர் இயற்கை விதியாகக் கொள்ளுகிறார்.

உலகையும் மழையையும் எடுத்துக் கொள்ளுகிறார். மழை கொடுக்கிறது உலகம் ஏற்கிறது. மழைக்கு இந்த உலகம் என்ன செய்யுமோ; ஒன்றும் செய்யாது என்பது பொருளன்று. உலகம் தன்னிடமிருக்கும் எல்லா வளமைகளையும் மழைக்குக் கொடுக்க வேண்டும் என்று முற்படுமேயானால், உலகால் கொடுக்க முடியாது. ஏன? மழையைக் கொடுத்த மேகம் இருந்தாலல்லவா கொடுப்பதற்கு! மேகம் இருந்தால் இந்த உலகம் கொடுத்துவிடும். திருப்பிக் கொடுப்பதற்கு ஒரு வாய்ப்பைக் கூடக் கொடுக்காமல் மழை தன்னை அழித்துக் கொண்டுவிட்டது.

அவ்வாறே, மரத்தினடியில் சென்றால் நிழல் கிடைக்கிறது; பழம் கிடைக்கிறது. அவைகளைப் பெற்றுக்கொண்ட மனிதன்

மீளவும் அம்மரத்திற்கு என்ன உதவியைச் செய்ய இயலும். தண்ணீர் மக்களுக்கு உதவி செய்கிறது. தண்ணீருக்கு மக்கள் எந்த உதவியைத் திருப்பிச் செய்ய இயலும். சூரியன், சந்திரன் போன்ற இயற்கைப் பொருள்கள்,கொடுப்பது ஒன்றையே செய்கின்றன. வாங்குகின்ற மக்கள் அவைகளுக்கு எந்தவகை உதவியைச் செய்து விட முடியும் என்று கேட்கிறார் திருவள்ளுவர்.

எனவே, திருவள்ளுவர் கருத்துப்படி பிறருக்கு நன்மை செய்தல் ஒன்றுதான் கடமையாக அமையமுடியும். பயனை எதிர்பார்க்காமல் மட்டும் செய்யப்பெறுவதை உதவிச் செயல் என்று சொல்கிறாரேயொழிய, கடமை என்று சொல்லவில்லை.

> 'பயன்தூக்கார் செய்த உத்வி நயன்தூக்கின்
> நன்மை கடலிற் பெரிது'

என்பது திருக்குறள். எந்த ஒன்றையும் ஏற்கக்கூடாத அளவுக்கு அவன் தன்னை அமைத்துக் கொண்டால்தான் அவன் செய்தது கடமை ஆகும். அதற்காகக் கொடுத்தவன் இறந்துபட வேண்டும் என்பதன்று. கொடுத்தவன் யார் என்பது வாங்கியவனுக்குத் தெரியாத அளவில் அக்கொடுத்தல் செயல் நடைபெற வேண்டும்.

கொடுத்தவன் எக்காலத்திலும், யாரிடத்திலும், எதையும் வாங்காத நிலைமையைத் தனக்கு உரியதாக அமைத்துக் கொள்ள வேண்டும். எங்காவது எப்போதாவது கை நீட்டி வாங்கினால், ஒருவேளை முன்னே கொடுத்ததன் பயனே இந்த மாற்று உருவில் வந்து அமைந்தாலும் அமைந்து விடலாம் என்றும் குறிப்பிடு கிறார்.

ஆனால் அறிவியல் வழிநின்று அற இயல் விதிகளை அமைத்து. சார்பற்ற நிலையில், உலகப் பொதுமை தாங்கிய நிலையில் எழுந்த செயல்களே கடப்பாட்டுச் செயல்கள் அல்லது கடமைகள் என்று விளக்கம் செய்தார்.

ஒவ்வொருவரும் இத்தகைய கடமையை நாள்தோறும் செய்ய வேண்டும், ஒருநாள் இக்கடமையைச் செய்யவில்லையானால் அந்த ஒருநாள் அவனுக்கு வீண் நாள்.

பிறருக்குக் கொடுப்பதாகிய கடமையைச் செய்த நாள்கள் தாம் அவனுடைய வாழ்நாள்கள். நேற்றுடன் என்னுடைய

வாழ்நாள் முடியாமல், இன்றைய நாளும் என் வாழ்க்கைக்கு ஒதுக்கப் பெற்றுள்ளது என்றால் அக்கடமையை இன்றும் நான் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான்.

ஆனால் அறிவியல் வழி நின்று, அற இயல் விதிகளை அமைத்துச் சார்பு அற்ற நிலையில் உலகப் பொதுமையும் முழுமையும் இணைந்த பகுத்தறிவால் உந்தப் பெற்று எழும் செயல்களே கடமைகள் என்று விளக்கம் செய்தார் கான்ட் அவர்கள்.

கான்ட் அவர்கள் கடமையைப் பயன் நோக்காச் செயல் என்று கூறியதன் கருத்து, அது தன்னளவில் முடிவு பெற்றுவிடும் செயல். அது வேறு ஒரு பயனை நோக்கியதாக அமையுமானால், பயன் என்பது முடிந்த நிலையாகவும், பயனை நோக்கிய ஒரு வகைக் கருவிச் செயல் என்பதாகவே கடமையைக் கொள்ள வேண்டிவரும். எனவே, கடமை தன்னளவில் மதிக்கப் பாட்டுக் குரிமையுடையதாய், தன்னளவிலேயே முடிந்துவிடக்கூடிய செயலாகவே கடமை அமைந்துவிடும் என்று விளக்கினார்.

சார்பு அற்ற நிலையில் உலகப் பொதுமையும் முழுமையும் தாங்கிய அற விதிகளே கடமைச் செயல்களாக அமைகின்றன என்று கொண்டார் கான்ட் அவர்கள்.

திருவள்ளுவர் கடமையை அறிமுகப்படுத்தி விளக்கும் அமைப்பே வேறுபாடானது. அற இயலில் உரிமையும் கடமையும் என ஓர் இணைப்பு அமைவதை அடிப்படையாகக் கொண்டே இக்கடமையை அமைக்கிறார். இவ்வுலகில் பிறந்த ஒருவன், தான் தன் கடமையைச் செய்யத் தொடங்குகின்ற வரையில், அவன் தன் உரிமைகளைப் பெற்றுத் துய்க்கவே செய்கிறான். இவன் தன் வாழ்நாள் முற்பகுதியில் பெற்றுத் துய்த்த உரிமைகள் எல்லாவற்றிற்கும் அவன் தீர்வு காண வேண்டியவனாகிறான். ஒரு குறிப்பிட்ட வயதை அவன் அடையும் வரையில், தன்னுடைய உரிமையை அனுபவிக்க,அவனுக்கு உதவியவர்கள் பலர் அமைவர். தெரிந்தவர் ஒருசிலராக, தெரியாதவர்கள் பலராக அமையலாம். தனக்கு உதவி செய்தவர் யார் யார் என்று தெரியாதபொழுது, அவன் எல்லார்க்கும் உதவி செய்ய முற்பட வேண்டியவனா கிறான். இதையே அறங்கள் எல்லாவற்றுள்ளும் உயர்ந்த அற மாகக் கொள்கிறார். அதுவே செய்நன்றி அறிதல். தனக்குச் செய்த நன்றியை அடிப்படையாக வைத்துதான் கடமையாற்றுதல்

வேண்டும் என்ற இலக்கண வரையறை செய்வது 'உரிமையும் கடமையும்' என்ற கருத்தினை அடியொற்றியதாகும் என்று கொள்ளலாம்.

பகவத் கீதை அமைக்கும் பயன் நோக்காச் செயல்—நிஷ்காம கர்மா

பகவத் கீதை ஞானயோகம், பக்தியோகம், கர்மயோகம் என்ற மூன்றையும் தெளிவாக, பிரித்துக் கூறுகிறது. அதனுள் கர்மயோகத்தில், பயன் நோக்காச் செயல் எனப்பெறும் நிஷ்காம கர்மாவின் இயல்பு இன்னதென வரையறை செய்து விளக்குகிறது.

செயல்படுவதுதான் உயிரின் தன்மை என்பது கர்ம யோகத்தின் அடிப்படைக் குறிக்கோள். ஒருவன் செயல் செய்யா திருப்பதைப் பகவத் கீதையானது உயிர் இல்லை என வரையறை செய்கிறது. செயலின்மை என்பதே இறப்பு. எனவே, மனிதன் தன்னை உயிருள்ளவன், சாகாதவன் என்று உலகில் நிலைநாட்ட வேண்டுமாயின் அவன் செய்ல் செய்யவே வேண்டும்.

'செயல் செய்தல்' என்பதைப் பகவத் கீதை விரிவாக எடுத்தியம்புகிறது. ஒவ்வொரு மனிதனிடத்திலேயும் மூன்று வகையான உடலியற் பண்புகள் அமைந்துள்ளன. அவை முறையே சத்வம், இராஜசம், தாமசம் என மூன்றாம். இம்மூன்றும் இணைந்தே இருக்கும். ஆனால், ஒன்று மிக்கிருக்க ஏனைய இரண்டும் அடங்கியிருக்கும். எடுத்துக்காட்டாக, சத்வ குணம் மிகுந்து இருக்கும்போது ஏனைய இராசதம், தாமதம் ஆகிய குணங்கள் அதற்கு அடங்கியிருக்கும். ஒருசிலரிடத்தில் தாமசம், ஓங்கி நிற்க ஏனைய இரண்டும் அதற்கு அடங்கி நிற்கும். இயல் பாக அமைந்திருப்பது என்பது ஒருவகை. பின்னர் மனிதன் ஏதேனும் ஒன்றைத் தன் முயற்சியில் வளர்த்துக் கொள்ள எண்ணினால் செய்து அமைத்துக் கொள்ள இயலும் என்பதே. இவ்வாறான குணங்களின் அடிப்படையில் அமைவனவே வருண, ஆச்சிரம, தருமங்கள்.

சத்வ குணம் மேலோங்கியிருக்க, ஏனையிரண்டும் அதற்கு அடங்கியிருக்குமேயானால் அந்நிலையே பிராமணத் தன்மை. இராசத குணம் மேலோங்கியிருக்க அதனுடைய நேர்த்துணை யாகச் சத்துவமும் அமைய, அதன் கீழே தாமசம் அமையும். இந் நிலையே க்ஷத்திரியருக்கு. இராசதம் மேலோங்க, அதன் நேர்த் துணையாகத் தாமசம் அமைய, அதன்பின் சத்துவம் அமையும் நிலை வைசியர்களுக்கு. தாமஸம் மேலோங்கியிருக்கும் நிலை

சூத்திரர்களுக்கு. இந்நிலைகள் குணத்தை அடிப்படையாகக் கொண்டவைகளேயொழிய, பிறப்பை அடிப்படையாகக் கொண்டவைகள் அல்ல. அவரவர்களும் தத்தம் குண அமைப்புகளை ஒட்டிய செயல்களையே செய்யவேண்டும். அவ்வாறு செய்வதே சுவதருமம் எனப் பெறும்.

பகவத் கீதை பிராமணர் முதலிய நான்கு வருணத்தார்களுக்கும் முறையே ஆசிரம தர்மங்களையும் வரையறுக்கிறது. அவை பிரமசரியம்,கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என நான்கு நிலைகள். பிரமசரியம் முதலிய ஆசிரமங்களுக்கு விதிக்கப் பெறும் செயல்கள் ஒருவனுடைய தனிநிலை வளர்ச்சிக்குப் பெரிதும் துணைநிற்கும். ஆனால் வருண தருமங்கள், சுவ தருமங்கள் பெரிதும் சமுக நன்மையை அடிப்படையாகக் கொண்டதாக அமையும்.

புலனடக்கம், மனமடக்கம், மனத்தை ஒன்றில் நிறுத்துதல், தவம், தூய்மை, மன்னித்தல், நேர்மை, ஞானம், உலகியலறிவு, நன்னம்பிக்கை ஆகிய அறங்களை வளர்த்தல் பிராமணர்களுக்கு உரியன.

வீரம், விரைந்து செயலாற்றுதல், உறுதி, போரில் அஞ்சியோடாமை, இரக்கம், ஆட்சியைப் பேணும் பண்பு ஆகியவை க்ஷத்திரியர்களுக்கு.

பசுவளர்ப்பு, உழவு, தொழில், வாணிகம் முதலியன வைசியர்களுக்கு.

மேலே உள்ள மூவருக்கும் பணி செய்தல் சூத்திரர்களுக்கு,

இங்கே சொல்லப்பெற்ற நால்வகைச் சாதி அமைப்புத் தொழில்கள் அவரவர்களுடைய் குணங்களை அடிப்படையாகக் கொண்டவைகளே. பிறப்பையோ பரம்பரையையோ கொண்டு சாதிப் பிரிவு அமைக்கப் பெறவில்லை.

பிளேட்டோ என்ற கிரேக்கத் தத்துவஞானியும் மக்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளார். உயர்ந்த ஞானம் என்பதே தனித்தன்மை அறம். மன்னித்தல், வீரம், தைரியம் முதலியன வீரர்களுக்குச் செட்டாக இருத்தல் வைசியர்களுக்கு— வணிகர்களுக்கு உரிய சிறப்பு அறம். புலனடக்கம் அல்லது தன்னடக்கம் என்பது அனைவருக்கும் உரிய பொதுமை அறம்.

நீதி, ஞானம், அஞ்சாமை, புலனடக்கம் என்பவை அரசாள்வோர் சிறப்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய அறங்கள்.

ஆள்வோர் ஞானத்திலும், வீரர்கள் அஞ்சாமற் போரிடுதலிலும், வணிகர்கள் சுறுசுறுப்புடனும் செட்டாகவும் பணியாற்றுதலிலும் சிறக்கவேண்டும். ஆயினும் எல்லாருமே பகுத்தறிவுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று வரையறை செய்துள்ளார் பிளேட்டோ அவர்கள் தாம் எழுதிய 'குடியரசு' என்னும் நூலில்.

அவ்வாறே பிராட்லி என்பாரும் 'என்னுடைய நிலையும் அதனுடைய கடமைகளும்' என்று கூறியுள்ள கருத்து இதனோடு சிந்திப்பதற்குரியது. எந்த ஒரு தனிமனிதனும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தனித் தகுதிகளுடனேயே பிறக்கிறான். அவனுடைய தனித் தகுதியானது சமுகத்தில் எந்த இடத்தில் நின்று பணியாற்றக்கூடியது என்பதை ஒவ்வொரு தனிமனிதனும் தெரிந்து கொள்ளவேண்டும். அதைத் தெரிந்து கொள்வதன் மூலம் சமுதாயத்துக்கு அவனால் நன்மையைச் செய்யவும், அதன் மூலம் தன்னுடைய கடந்த நிலைத் தன்மையுடைய உயிரனுபவத்தைப் பெறமுடியும் என்று கூறுகிறார்.

சுவபாவம் என்பது தன்னுடைய உடலமைப்பில் அமைந்த குணங்களின் இணைப்பினால் விளையும் தன்மை. சுவதருமம் என்பது குணத்தன்மையை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப் பெற்ற செயல்கள். எனவே, சுவதருமம் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவனுடைய குணஅமைப்பினைஒட்டி அமைத்துக் கொள்ளப் பெறுகின்ற செயல் முறைகள். சுவதருமம் தனி மனிதனுக்கும் சமுகத்துக்கும் இணைந்த செயல்கள். எனவே ஒவ்வொருவனும் சுவதருமத்தைச் செய்வதன் மூலமாகவே சமுக நன்மையையும் தன்னுடைய உயிரனுபவத்தையும் பெற்றுச் சிறக்க முடியும்.

சுவதருமம் என்பதையே 'கடமை' எனக் கொள்வர். ஒவ்வொருவனும் தன்னுடைய கடமையைச் செய்யும்போது, அக்கடமையை மட்டுமே கருத்திற்கொண்டு செய்தல் வேண்டும். கடமையினால் விளையும் பயனை விரும்பியோ அல்லது வெறுப்பு முதலிய எந்த ஒருவகையான பற்றும் வைத்தோ செய்யலாகாது என்பது பகவத் கீதையில் கர்மயோகத்தில் நிஷ்காம கர்மா என்பதன் பொருளாகும்.

நாம் கடமையைச் செய்ய உரிமையுடையவர்களே; ஆனால் கடமையின் பின்விளைவாகிய பயன் நம்மைச் சார்ந்தது அன்று. நமக்கென அமைக்கப் பெற்ற அற இயலான, செய்தேயாக வேண்டும் (ought) என்ற கடமையுணர்ச்சியியலான கடமைகளைச் செய்துவிடுவது ஒன்றே நம்மைச் சார்ந்தது. ஏனைய முடிவுகள் கடவுளைப் பொறுத்தன அல்லது பயன் தரும் செய்தி கடவுளின் இயற்றி நிலையைப் பொறுத்தது என்ற கொள்கையை நாம் பகவத் கீதையிற் காணலாம்.

பகவத் கீதையின் கர்மயோகம் செயலையே துறப்பது அன்று; செயலுக்குரிய பயனைத் துறப்பதே. இவ்வகையில் பகவத்கீதை மேலும் ஓர் எளிய வழியை வகுக்கிறது. நாம் செய்யும் கடமைகளையும் நம்முடைய செயல்களாகக் கொள்ளாமல் கடவுளுக்குரிய செயல்களாகவே எண்ணி, அச்செயல்களையே கடவுளுக்கு உரிமையாக்கி விடவேண்டும். இவ்வகையில் ஒருவன் தன்னை ஒரு பணியாளன் எனக்கொண்டு,கடவுளின் வேலையை நம்மிடம் ஒப்படைத்துள்ளார். கடவுளின் பணியே இது எனக் கருதி மன விருப்பத்தோடு செய்து அப்பணியையே அவனுக்கு உரிமையாக்கி விடுதல் என்ற ஒரு கருத்தையும் பகவத் கீதை உடன்படுகிறது. கடவுளின் பணியை யான் மேற்கொள்ளுதல் என்பது இங்கே அடிமை ஒழுக்கம் என்று கருதப் பெறமாட்டாது. தன்னுடைய கடமையை, அவன் பணியெனக் கருதிச் செய்து முடித்து ஒப்படைத்துவிடுவது என்ற முறையில் அமைவதாகும்.

கடமையைச் செய்யும்போது பயனை எதிர்நோக்கலாகாது அல்லது விரும்பலாகாது என்பது ஒருபுறம் இருக்க, கடமையைச் செய்யும்போது இது வெற்றியுடன் முடிக்கப் பெறுமா அல்லது இக்கடமை முடிக்கப் பெற இயலாமல் தோல்வியுறுமா என்று நினைப்பதும்,அந்நினைவை ஒட்டி மனம் உணர்ச்சிவயப்படுதலும் கூடாது என்று வரையறை செய்கிறது பகவத் கீதை.கடமையைச் செய்பவனுடைய மனம் மலர்தலும் கூம்புதலும் இன்றி, சித்திரத்தில் எழுதப் பெற்ற செந்தாமரை போல அசையாது, ஒருநிலைப் பட்டு நிற்றல் வேண்டும் என்பதாம்.

பயனை விரும்புதலோ, வெற்றி தோல்வியை எண்ணித் தளர்வதோ,மகிழ்வதோ செய்யின் அது அவனை ஆசைக்கு உள்ளாக்கி இறுதியில் பிறப்பு இறப்பு என்ற சுழலிற் சிக்க வைத்துவிடும். எவன் ஒருவன் கடமையின் பயனைத் துறந்து, கடமையை நிறைவுறச் செய்து முடிக்கின்றானோ அவனே 'கர்மயோகி' எனப் பெறுவான். அவன் செய்த கடமை 'நிஷ்காம கர்மா' என்று சொல்லப் பெறும்.

பகவத் கீதை வலியுறுத்தும் துறவு என்பது காவியுடுத்தி சடைமுடி கட்டி, காட்டிற்குச் சென்று தவம் இருத்தல் என்பது அன்று. நாட்டில் இருந்து கடமையைச் செய்வதுதான். அதுவும் ஒருவன் அவனிடம் இயற்கையாக அமைந்த குணங்களின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு அவனுக்கு வரையறை செய்யப் பெற்ற கடமையைச் செய்வதுதான், ஆனால், தான் செய்யும் கடமையின் பயனைமட்டுமே அவன் துறந்துவிட வேண்டும். எனவே கடமையின் பயனைத் துறப்பதே துறவு என்பது கீதை வலியுறுத்தும் துறவுக் கொள்கை.

இன்பம் துன்பம், வெற்றி தோல்வி,பேறு இழப்பு,புகழ் இகழ், விருப்பு வெறுப்பு ஆகிய வேறுபாடுகளை மனத்திற் கொள்ளாமல் இவைகள் எல்லாவற்றையும் ஒருதன்மையாய் நோக்கும் மன ஒருமை தேவை. மனமானது ஒருநிலையில் நில்லாமல் ஆடிக் கொண்டே இருக்குமானால் கலங்கிய நீர் உள்ளிருக்கின்ற பொருளைக் காட்டும் ஆற்றலுடையதாகாதது போல மனத்தின் அடிப்படையில் இருக்கும் பரம்பொருளை அசைந்து கொண்டே இருப்பதனால் வெளியில் காட்ட இயலாது போய்விடும்.ஆனால் மனம் ஒருநிலைப்பட்டு நிற்கும்போல, தெளிந்த நீரில் உள்ளிருக்கும் பொருள் தெரிவதுபோது மனமும் உள்ளிருக்கும் ஆன்மீக இயலான பரம்பொருளை வெளிக்காட்ட வல்லதாகும் என்பது பகவத் கீதையின் கடமைபற்றிய அறவுரை.

மனிதன் தன் உள்ளத்தில் உணர்ச்சிக்கே இடம் கொடுக்காமல் கடமையை நிறைவேற்ற முற்பட வேண்டும் என்று ஒருசிலர் கூறுவதைப் பகவத் கீதை உடன்படவில்லை. தன்னலஞ் சார்ந்த எல்லா ஆசைகளையும் உணர்ச்சிகளையும்உயர்நிலையில் உயர்த்தி, கடவுளைப் பற்றிய பக்தியாக மாற்றிவிடுதல்வேண்டும். என் நன்மை, என் குழந்தையின் நன்மை என்பவைகளை உலகத்து உயிர்களின் நன்மை, மனிதகுல முன்னேற்றம் என்பவைகளாக உயர்நிலைப்படுத்தி விரிவுபடுத்திவிடுதல் வேண்டும்; எத்தகைய உணர்ச்சிகளையும் இல்லாத வாழ்க்கையை அது திணிக்கவில்லை; குறுகிய நிலையில் செயல்படும் ஆசைகளை விரிவுபடுத்தி, உலகத்துயிர்களின் மேலும் கடவுளின் மேலும் அமைத்துக் கொள்க என்பதே கீதையின் அறம்.

எவன் ஒருவன் தன் கடமையைத் தொடர்ந்து, தவறில்லாமல் செய்து வருகின்றானோ அவன் நாளடைவில் பயனைத் துறந்த நிலையில் கடமையை ஆற்றும் ஆற்றலை இயல்பாகப் பெற்று விடுகிறான். பயனைத் துறத்தல் என்ற மன நிலையை, ஒருமைப்

படுத்துதல் என்ற மனநிலையை ஒருவன் வலிந்து, முயற்சிசெய்து தான் பெறவேண்டும் என எண்ணிக் கலங்க வேண்டுவதில்லை கடமையை இயல்பாகச் செய்து வந்தாலே எல்லாம் அமைந்து விடும் என்பது கீதையின் எளிய உபதேசம்.

செயல் அறம் அல்லது கடமையைச் செய்தல் என்பதே கீதை காட்டும் அறம். சமுதாயத்துக்குப் பொருந்தாத அறம் அன்று. தன்னலம் சார்ந்த எல்லா எண்ணங்களையும் பிறர் நல எண்ணங்களாக மாற்றிக் கொள்ள வேண்டும். தனக்கு உரிய கடமைகள் என்று வரையறை செய்யப் பெற்றவை தான் சமுதாய நன்மைக்காகச் சமுதாயத்தில் நின்று செய்ய வேண்டியவை. என்னுடைய செயலின் பயனை நான் எதிர்பார்க்கக் கூடாது என்பது என் செயலின் பயன் இச்சமுதாயத்துக்கு அமைய வேண்டும் என்பதற்காகவே. எனவே, கீதை கூறும் அறம் தனிமனிதன் தியாக உணர்வுடன் செய்யும் சமுதாயப் பணியேயன்றி வேறன்று; சமுதாயப் பணிக்கு மாறான துறவுக் கொள்கை அன்று. பயனை மட்டுமே துறத்தல்; கடமையையே துறந்து விடுதல் அன்று.

பயனைத் துறத்தல் என்பதானால் தனிமனிதன் தன்னுள் தன்னையும், தன்னுள் அமையும் பரம்பொருளையும் உண்மையில் அறிந்து அனுபவிக்கும் நிலையைப் பெறுகிறான். தன்னலஞ் சாராது பொது நல எண்ணத்துடன் பாடுபடுவதன் மூலம் கடவுளை அறிந்து இன்பம் துய்க்கும் பேற்றினைப் பெறுகிறான் எனவும் கொள்ள வேண்டும்.

பயன் நோக்காது அல்லது பயனைத் துறந்து கடமையைச் செய்து வருபவன் நாளடைவில் உயர்நிலை மனிதன் அல்லது மகாத்மா அல்லது நிறைநிலை மனிதன் ஆகிறான். எல்லாவற்றாலும் நிறைவும் முழுமையும் அமைந்தவனாக அமைகிறான். அவனே கீதை கருதும் ஸ்திதப்ரஞ்ஞன் (Ideal man—Person of steady wisdom). அவன் என்றும் ஒரே தன்மையான, கீழ் மேல் சாயாத, உண்மையான உயர் அறிவு மயமாகவே அமைந்திருப்பான். அப்போது அவன் தன்னுடைய உயிரின் தூய்மையையும், அறிவையும், இன்பத்தையும் தானே உணர்ந்து நுகர்ந்து அமைதியுறுகிறான். இவனே கீதை காட்டும் மனித வாழ்வியல் உயர்மனிதன்.

நிஷ்காம கர்மாக் கொள்கையின் பொதுமையும் நடுமையும்

அறிவும் ஆற்றலும் திறமையும் பெற்ற ஒருவன் தன்னுடைய கடமையைச் செய்ய வருகிறான்; கடமையைச் செய்வதற்காகக்

களத்தில் இறங்கியபோது அங்குள்ள சூழ்நிலை அவனைச் செயல்பட வொட்டாது தடுத்துவிட்டது. கீதை உபதேசத்தைக் கேட்டவுடன் செயல்படுகிறான். எனவே, செயல்பட வேண்டியவன் பலவகைகளான தடைகளால் செயல்படமுடியாதவனாக அமையும்போது அவன் தடைகளை நீக்கிச் செயல்பட வைக்கும் செயற்பாட்டுக் கொள்கை—கடமைக் கொள்கையை மையமாகக் கொண்டது கீதையின் நிஷ்காம கர்மாக் கொள்கை.

கீதை தோன்றுவதற்கு முன் இவ்வுலகில் இருவகைக் கொள்கைகள் - செயற்பாட்டுக் கொள்கைகள் நிலவின. இவ்வுலகில் வாழ்க்கை முறைச் செயற் கொள்கை. இவ்வுலகை விட்டு மறுவுலகை வாழ்க்கைமுறைச் செயற் கொள்கை. இவ்வுலக வாழ்வியல் மனித உணர்ச்சிகளின் இருப்பிடமாய் அமைந்தது. இவ்வுலக வாழ்க்கை புலனுகர்ச்சி அளவில் அமைந்த இன்பத்தைக் கொண்டது. இவ்வுலக வாழ்க்கையில் தனிமனிதனின நலமே அதிலும் கீழ்மையான நலமே இவ்வுலகில் அடைதற்குரியது.

இனி இவ்வுலக வாழ்க்கைக்கு அயலான அவ்வுலக வாழ்க்கையே உயர்ந்தது. இங்கே செய்யப்பெறும் செயல்முறைகளைச் செய்யாது துறத்தல் ஒன்றே அவ்வுலக வாழ்க்கைக்கு ஏற்றது.

இவ்வுலக வாழ்வு, அவ்வுலக வாழ்வு என்ற இரு கொள்கைகளும் பொதுவாக பிரவிர்த்தி, நிவிர்த்தி என்ற இரு சொற்களால் குறிக்கப்பெறும்.

பிரவிர்த்தி நிலை என்பது செயலாற்ற வேண்டிய நிலை. அது இவ்வுலக வாழ்வுக்குத் தேவை என்ற கருத்துடையது,

நிவிர்த்தி நிலை என்பது செயல் துறவு தேவை: செயலே தேவையில்லை. மேலுலக வாழ்க்கைக்குத் துறவுதான் வழி என்பது ஒன்று செயற்கொள்கை; மற்றது துறவுக் கொள்கை. கீதையின் நிஷ்காம கர்மா இரண்டையும் இணைத்து, பயனைத் துறந்து செயலைச் செய்யவேண்டும் என இரண்டற்கும் நடுவே ஒரு நடு நிலைக் கொள்கையை வரையறை செய்தது. மேலும், பரம் பொருளை அந்த உலகில்தான் சென்று அடையமுடியும் என்பதை மாற்றி, இங்கேயே, இவ்வுலகிலேயே பயனைத் துறந்த கடமைக் கொள்கையின் மூலம் கடவுளை அணைந்து இன்புற்று மகிழலாம் என வரையறை செய்தது. அவ்வகையில் அவ்வுலகத்தை இவ்வுலகத்திலேயே கொண்டுவந்து இணைத்த பெருமையுடையது.

தன்னலத்தை (egoism) வலியுறுத்தும் அறக் கொள்கைகள் பல; பொதுநலம் எனப்பெறும் சமுதாய நலத்தை (altruism) வலியுறுத்தும் கொள்கைகள் பல. இவ்விரண்டும் ஒன்றுக்கு ஒன்று முரணானவை என அமைந்த காலத்தில் இரண்டையும் இணைத்தது நிஷ்காம கர்மாக் கொள்கை. பயனை விரும்பிச் செய்யாத கடமைகள் பொதுநலன் சார்ந்த கடமைகளாகின்றன. அவ்வழியில் தனக்கே நலம் இல்லை என்பது இல்லை. அதன்மூலம் அவன் தன்னிடத்தே உள்ள கடவுள் தன்மையை அறிந்து அனுபவிக்கும் தன்னலப் பேற்றையும் பெற்றுவிடுகிறான். தன்னலம், பொதுநலம் என்ற இரண்டையும் இணைத்த இணைப்பாக விளங்குவதே கீதையின் கொள்கை.

தனிமனிதன் இவ்வுலக இன்பங்களைத் துய்க்கலாகாது. தன் கடமையை அவன் பொது நலத்துக்காகச் செய்யவேண்டும். துறவுநிலை மேற்கொண்டு எதையும் துய்த்தலாகாது என்பது ஒரு கொள்கை. இவ்வுலகில் துய்ப்பு அல்லது இன்ப அனுபவம் ஒன்றே அடிப்படைக் கொள்கை என்று வலியுறுத்திய இன்பியற் கொள்கையும் உண்டு. கீதையின் நிஷ்காம கர்மாக் கொள்கை இந்த இரண்டு கொள்கைளையும் இணைத்தது.

கடமையின் பயனை நீ எதிர்பார்க்கலாகாது. அதனைத் துறந்துவிடுதல் வேண்டும். ஆனால் உன் ஆசைகளை விரிவுபடுத்தி உலகமயம் ஆக்கவேண்டும். இவ்வகையில் மன அமைதியையும் கடவுள் அனுபவத்தையும் பெற்று அனுபவிக்க முடியும். உன்னுடைய கடமையை இறைவனுக்குத் தியாகம் செய்யும்போது, அவனே உன்னை எல்லாவகையான இறை இன்பத்தையும் நுகர வைக்கிறான். எனவே, கடமையின் பயனைப் பொறுத்தவரையில் துறவும், இறையின்பத்தை அனுபவிக்கும் வகையில் இன்பியற் கொள்கையும் இங்கே இணைகின்றன.

காந்தியடிகளின் கடமைக் கொள்கை Satyagraha—Truth Force—உள்ளதன் ஆற்றல்

முன்னுரை: 1869 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2ஆம் நாள் பிறந்த மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி இவ்வுலகில் மகாத்மா காந்தி என்றும் காந்தியடிகள் என்றும் வழங்கப் பெறுதற்குரிய அற இயல் வெற்றிகளைத் தாம் மேற்கொண்டு நடைமுறைப் படுத்திக் காட்டிய கடமைக் கொள்கையால் அடைந்து உயர்ந்து நின்றவர்.

கோழை, வீரன் ஆதல் என்ற வரலாற்றை இவ்வுலகில் நிகழ்த்தியவர்கள் பலர். அப்பழுக்கற்ற கோழை ஒருவர் இந்திய நாட்டின் அடிமைத் தளையை வெட்டி எறிந்த வீரர் ஆனார். பின்னர் மகாத்மா ஆனார். கோழையானவன் மகாத்மா ஆக முடியும் என்பதே அவர் மேற்கொண்ட அறக் கொள்கையின் அடிப்படை உண்மை.

கோழையாக இருந்த காந்தியடிகள் மகாத்மாவாக ஆதற்கு அவருக்குக் கிடைத்த ஆற்றல் எது? அதனை அடைந்த முறை என்ன?

சத்யம் (சத்—உள்ளது— உண்மை) என்ற ஒன்றனுடைய ஆற்றலைப் பெற்றார். சத்யாக்ரகம் என்பதற்கு 'Truth Force' என விளக்கம் அமைத்தார். உள்ளதன் ஆற்றல் எல்லா உயிர் களிடத்திலும் அமைந்திருக்கிற ஒரே பொருள். அதனைச் 'சத்' என்றுதான் கண்டார். அதன் ஆற்றலைப் பெற்றார். 'சத்' என்ற பொருளோடு இணைந்த ஒன்றாக மனிதன் அமைகிறான். அவனுடைய ஆற்றல் அன்பு, அஹிம்சை என்ற எதிர்மறை அறத்தின் உடன்பாட்டுத் தன்மை—உடன்பாட்டு அறம் அன்பு. எனவே அன்பு என்னும் மனித ஆற்றலின் மூலம் அவனிடத்தே யுள்ள அவனைவிட உயர்ந்த ஒரு பொருள் எனப்பெறும் 'சத்' (உள்ளது) என்பதன் ஆற்றலைப் பெற்றார். 'Satyagraha which is translated into English as Truth Force'. 'சத்யாக்ரகம்' என்பதன் தன்மையை விளக்க முற்படும்போது, சத்யாக்ரகம் என்பதன் ஆங்கில மொழிபெயர்ப்பாக 'Truth Force' அமைகிறது என்றும் டால்ஸ்டாய் அதனை உயிராற்றல் அல்லது அன்பாற்றல் (soul force or love force) என்று கருதுகிறார் என்றும் குறிப்பிடு கிறார்.

இங்கே அமைக்கப்பெற்ற அடிப்படை விளக்கங்களைக் கொண்டு காந்தியடிகளின் அற இயற் கொள்கையை விளக்கமுறக் காணலாம்.

'சத்யம்' என்பதன் பொருள்: காந்தியடிகள் கடவுட் கொள்கையை ஏற்றுக்கொண்டு வளர்ந்தவர் என்று கொள்வது தவறன்று. கடவுளைப் பற்றிய விளக்கங்கள் பலவற்றை அவரே அமைத்துக் கொடுத்துள்ளார்.

முதலில் கடவுளைக் காந்தியடிகள் உருவமுடைய ஒருவ ராகவே கருதுகிறார். அதே சமயம் Truth என்பது 'சத்' என்ற

சொல்லோடு உள்ளது அல்லது இருப்பது என்ற பொருளில் நாம் கொள்ள வேண்டிய பொருள் ஒன்று உண்டு என்றும்கொண்டார். ஆனால் அதனை உருவமற்றது என்று கொண்டார். அடுத்த நிலையில் இவ்விரண்டும் ஒன்றா, வேறு வேறா என்பது சிக்கல். உருவமற்றதும் உருவமுடையதும் எப்படி ஒன்றாக இணையும்? பின்னர் அவர், உருவமுடையதாகக் கொண்ட கடவுள் வெவ்வேறு வடிவம், பெயர் ஆகியவைகளாற் குறிக்கப் பெறுவதால், உலக முழுமைக்கும் மாற்றமில்லாத ஒரு பொருள் இருக்க வேண்டும். அதைத்தான் எல்லாரும் இடம், சூழ்நிலைகளுக்கேற்ப வெவ்வேறு உருவப் பெயர்களில் வழங்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். உலகம் முழுமைக்கும் ஒரே பொருளாக ஒன்று இருக்க வேண்டு மானால் அது எது? அவ்வகையில் Truth (உள்ளது) என்பது அவருக்குப் பொருத்தமாக அமைந்தது. எனவே முதலில் GOD IS TRUTH என்று கொண்டார்.

உலக முழுமைக்கும் அமைந்த ஓர் உள்பொருள் இருக்க வேண்டும் (universal reality) என்று கருதினார். அப் பொருளுக்கு என்ன பெயர் அமைப்பது? எனவே ‘கடவுள்’ என்பதை அதற்கு உரிய பெயராக அமைத்தார். ‘உலகியலான உள்பொருள் கடவுள்’ என்பது அவர் தந்த முதல் விளக்கம்.

இரண்டாம் நிலையில் கடவுள் என்பவரை விளக்கம் செய்ய முற்படும்போது அவர் ஓர் உலக உள்பொருள் என்று கூறி, Truth என்பது கடவுளின் ஓர் இயல்பு அன்று; உள்பொருளே தான் கடவுள் என்ற சொல்லால் அழைக்கப்படுகிறது என்று கொண்டார். இங்கே Truth என்பது Sat அல்லது is என்ற விளக்கங்களில் அமையும் உள்பொருள் என்ற கருத்தைக் கொண்டதே.

மூன்றாம் நிலையில் God is truth என்பதை Truth is God ‘கடவுள் என்பவர் இருப்பவர்’ என்று கூறிவந்த அவர் ‘இருப்பது என்பதுகடவுள்’ என்று மாற்றினார். அதற்குக் காரணம், கடவுள் என்ற சொல் ஒரே பொருளைத் தருவதாக இல்லை. ஆனால் ‘உள்ளது’ என்ற பொருள் தரும் Truth ஒரே பொருளில் எல்லாராலும் பேசப் பெறுகிறது. மேலும் கடவுள் என்ற கொள்கையை ஒத்துக் கொள்ளாதவர்களும் Truth—சத் அல்லது உள்பொருள் என ஒன்று உண்டு என்பதை மறுப்பதில்லை. கடவுள் என்ற சொல்லைச் சொல்லும் போது உண்டாகின்ற வேறுபாடுகள் Truth—உள்ளது, சத்யம் என்று சொல்லும்போது உண்டாவ தில்லை. எனவே உள்ளது Truth என்பது ஒருவகை ஒற்றுமையை உண்டாக்கும் சொல் என்று கொண்டார்.

Truth என்று கொண்டபின் Sat—Satya என்ற வேறுபாடுகள் எதையும் காந்தியடிகள் கொள்ளவில்லை. 'சத்' உள்ளது என்ற பொருளில் அமைத்தார்.

'சத்' என்பதன் அனுபவ விளக்கம்: உலக முழுமைக்கும் பொதுவாக ஓர் உள்பொருள் உண்டு என்ற நிலையில் 'சத்' என்று கண்டார். கடவுளை வணங்குதல் என்று சொல்லும்போது எக்கடவுள்? என்பதுபோல வேறுபாடுகள் வளர்வதைப் பார்க்கிறார். 'சத்' என்பதை வணங்குதல் என்றால் எல்லாரும் அதை ஏற்பதைக் காண்கிறார்.

God என்று சொல்லும்போது வேற்றுமை வளர்ந்து செல்வதையும் சத்யம் அல்லது Truth என்று சொல்லும்போது வேற்றுமைகள் நீங்கி, ஒற்றுமை உண்டாவதையும் கண்டார். இது அவருடைய அனுபவம். அவர் அனுபவம் கண்ட உண்மை. 'சத்யம்' என்பதில் ஓர் ஆற்றல் இருக்கிறது. அது அனைவரையும் ஒற்றுமைப்படுத்தும் பேராற்றல். கடவுளை இல்லை என்று சொல்பவர்களும் மாற்றுச் சமயத்தவர்களுங்கூட, சத்யம் Truth என்பதை மறுக்காது ஏற்றுக்கொள்வதைக் கண்டபோது அது ஒற்றுமையைத் தரவல்ல ஒரு பேராற்றலை உடையது என்று கண்டார். இவ்வனுபவப் பொருள் சத்யாக்ரகம் என்ற ஒரு தொடரை உண்டாக்கியது. அதற்கு விளக்கம் சத்யத்தின் ஆற்றல் (Truth Force) என்றே விளக்கம் அமைத்துக் கண்டார்.

அவ்வாறே எல்லாரையும் இணைக்கும் மனித ஆற்றல் அன்பு என்பதைக் கண்டார் எல்லாச் சமயங்களும் அன்பை அடிப்படையாகக் கொள்வதைக் கண்டார்.

எனவே சத்யத்தின் ஆற்றலை (truth force) மனித ஆற்றலாகிய (soul force) அன்பினால் பெறலாம் என்ற முடிவுக்கு வந்தார்.

உலகின் இயல்பு: உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் சூரியனாயினும் சரி, சந்திரனாயினும் சரி சில விதிகளுக்குப் பணிந்து நடக்கின்றன என்பதை அறியலாம். அவைகள் எத்தகைய விதிகள் என்பதை ஆராய்ந்தால் அவைகள் வேறொன்றுமல்ல, ஒருவகை ஆற்றல் என்பதை உணரலாம். அத்தகைய ஆற்றல்தான் அவைகளைச் செயற்படுத்தி, அவைகளை நிலைபெறுமாறு செய்கின்றன. ஆற்றல் செயல்படுகின்ற முறையையே நாம் விதிகள் என்று சொல்கிறோம்.

மேலே காட்டப்பெற்றவைகள் காந்தியடிகளுக்கு ஓர் எண்ணத்தை உண்டாக்கியது. இவ்வுலகம் என்பது செயல்படுவதற்குரிய இடம் (Karmasthala—a field for action) என்ற முடிவுக்கு வந்தார்.

உலகம் என்பது செயல்படுவதற்குரிய இடம் என்று சொன்னால், செயற்படுதல் வேண்டும் என்பது ஏன்? தன் அனுபவ உண்மை காரணமாக, மனிதனும் உலகமும் தம்மளவில் நிறைவு பெற்ற பொருள்கள் அல்ல. நிறைவு பெற்ற பொருள் என்றால் அது ஒன்றுதான் இருக்கமுடியும். எனவே, நிறைவு அற்ற பொருள்கள் நிறைவு பெறுவதற்குச் செயற்பாடு தேவையாகிறது. எல்லைக்கு உட்பட்டு நிற்பதும், நிறைவு பெறாததுமாகிய உலகமும், மனிதனும் எல்லை கடக்கவும் நிறைவு பெறுவதற்கும் ஆக அமைக்கப் பெற்ற செயற்பாட்டுக்குரிய இடம் என்பதே இவ்வுலகைப் பற்றிய காந்தியடிகளின் கருத்து. (Neither man nor nature is free from finitude and imperfection, and so, what is required is an attempt to transcend this finitude and imperfection.)

மனிதனைப் பற்றி: ஒரே பொருள்தான் உள்ளது அல்லது உண்மைப் பொருள் என்று கொண்டால் மனிதன் கடவுளின் வெளிப்பாடாகத்தான் இருக்கமுடியும். எந்த ஒரு மனிதனும், உடல் தன்மையும் ஆன்மிகத் தன்மையும் இணைந்த ஒருவனாக அமைகிறான். ஆன்மிகத் தன்மைதான் மனிதனிடத்தில் இருக்கிற மனிதனுடைய உயர்ந்த உண்மைத் தன்மையாகும். அதுதான் கடவுள் தன்மையாக இருக்கமுடியும். எனவே, பரிணாம வளர்ச்சியில் முதன் முதல் உடல்தன்மை அதிகமாகவும் ஆன்மிகத் தன்மை மிகக் குறைவாகவும் இருக்க, நாளடைவில் ஆன்மிகத் தன்மை வளர்ச்சி பெற்று வந்திருக்க வேண்டும். பரிணாம வளர்ச்சியில் அறிவற்ற பொருள் தன்மையானது மெல்ல ஆன்மிகத் தன்மையாக மாறிக்கொண்டு வருகிறது என்று கொள்ளலாம். உடலைச் சார்ந்த தன்மையும் மனிதனுக்கு இன்றியமையாததும் மதிக்கப்பாடு உடையதும் ஆகும். ஆனால் ஆன்மிகத் தன்மையையே அவன் இயற்கைத் தன்மை என்னலாம். ஆனால் ஆன்மிகத் தன்மையே மனிதன் தன்மை என்று திட்டவட்டமாகச் சொல்லிவிடலாமா என எண்ணினால் அவ்வாறு சொல்வதற்கில்லை. ஆன்மிகத்துக்கு மேற்பட்ட தன்மை என்பதாக ஒன்று இல்லை. காந்தியடிகள் உள்ளது எனப்பெறும் கடவுளே மனிதனாகப் பதிவு செய்யப்பெற்றது என்ற கொள்கையுடையவர் ஆதலின் 'உள்ளது' என்ற ஒரு பொருளின் தன்மைதான் மனிதனிடம் ஆன்மிகத் தன்மையாகத் தோற்றம் பெறுகிறது என்றார் (It is apparent that there is an element of Divinity present in every man). உள்ளது என்னும் பொருளின் — கடவுளின் ஒருகூறு மனிதனிடம் இருக்கிறது என்பதை அளவையியல் அறிவும், மனச்சான்றும், கட்டற்ற இயற்றிநிலையும், என்பவை போன்ற மற்றவைகளும் உறுதிசெய்கின்றன என்று கூறுகிறார்.

மனிதன் மேற்போக்கில் தன்னலம், கயமை போன்ற பண்புகளையுடையவனாகத் தோற்றுகிறான் ஆயினும், அவனுடைய

தன்னுண்மை நிலையில், நல்லவன். மனிதன் தன்னிடத்திலுள்ள உயர்ந்த பண்புகளை—உள்ளது எனப்பெறும் உயர் பொருளின் கூறுகளாக அமைந்த பண்புகளை முறைப்படி செயற்படுத்தி னால். உயர்நிலை எனப்பெறும் கடவுள் நிலையை மக்கள் நிலையில் கொண்டுவந்து அமைத்துக் காட்ட முடியும் என்று எண்ணினார். மேலும் மனிதனிடத்து அமைந்துள்ள உள்ளது என்பதன் ஆற்றல் அனைத்து உயிர்களிடத்தும் அமைந்துள்ளமையால், அத்தகைய ஆற்றலை உபயோகிப்பதன் மூலம் எல்லாரையும் ஒன்றுபடுத்த முடியும். அவ்வகையில், உலக மனிதன் என்ற ஒரு பெரும் ஒற்றுமையை உண்டாக்க முடியும் என்று கருதினார். 'உள்ளது' என்று சொல்லப்பெறும் ஒன்றனுடைய கூறு நம்மிடத்தும் இருப் பதால், அதனுடைய ஆற்றல்களை ஏனைய ஆற்றல்களைவிட வலிமை யுடையது ஆகையால் அந்த ஆற்றலின் மூலம் பல நன்மைகளை உண்டாக்க முடியும் என்று கண்டார்.

அஹிம்சை – அன்பு : உள்ளது என்ற பொருளைத் தரும் Truth என்பதும் அஹிம்சை என்பதும் பிரிவற இணைந்தவைகள். இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப் பெற இயலாதவை. இரண்டும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கம் என்று சொல்ல லாம். ஒரு நாணயத்தின் இரண்டு பக்கம் என்பதைக் காந்தியடிகள் உபயோகப்படுத்தும் முறை வேறு. சாதாரண மாக, நாணயம் எனில் இரண்டு பக்கங்களிலும் எழுத்துகள் பொறிக்கப்பெற்றிருக்கும். ஒரு பக்கத்தில் நாணயத்தின் விளக்கம் இருக்கும். அடுத்த பக்கத்தில் அரசின் முத்திரை இருக்கும். பொதுவாக நாணயத்தைப் பற்றிய விளக்கம் அமைந்த பக்கத்தை முதற் பக்கமாகக் கொள்ளுகின்ற மரபு உண்டு. ஆனால் சத்யம், அஹிம்சை என்ற இரண்டும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்று சொல்லும்போது, எது முதற் பக்கம், எது இரண்டாம் பக்கம் என்று தெரிந்துகொள்ள முடியாதபடி எழுத்துகளோ முத்திரையோ பொறிக்கப்பெறாத நாணயத்தை எடுத்துக்காட்டாகக் கொள்கிறார். எனவே சத்யம், அஹிம்சை என்ற இரண்டும் எந்த ஒரு சிறு வேறுபாடும் இன்றி இணைந்த இரு அமைப்புகள் என்று கொண்டார். அப்படி இருப்பினும் அஹிம்சையை வழியாகவும் சத்யம் என்பதை அடையக்கூடிய எல்லை அல்லது பயனாகவும் கொண்டார். இங்கே அஹிம்சையை வழி என்று கொண்டால், பயனாக நிற்பது தானே உயர்ந்தது என்று கேட்டால், அப்படி இல்லை, நம்மால் உடனடியாகக் கைக்கொள்ளக்கூடிய அமைப்பில் நம் பக்கத்தில் நமக்கு எளிமையில் அடையக் கூடியதாக இருப்பது அஹிம்சை. அதனால் அதனை நாம் முதலில் வழியாகப் பற்றிக்கொள்ள முடிகிறது என்று விளக்கம் கூறினார்.

அஹிம்சை என்பதன் எதிர்மறைப் பொருள் பிற உயிருக்குத் துன்பம் செய்யாமை என்பதே. கொல்லக்கூடாது என்பதையும் முழுமையாகக் கடைப்பிடிக்க இயலாது என்று கருதுகிறார். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் கொலையை அனுமதிக்கிறார் காந்தியடிகள். எனவே, எதிர்மறையில் அஹிம்சை என்பதைச் செயற்படுத்துவதைவிட, அதனை உடன்பாட்டு நிலையில் செயற்படுத்தலாம் என்பதை உணர்ந்தார்.

அஹிம்சை என்பதன் நேர்ப்பொருள் கொல்லுதல் இல்லாமை; துன்புறுத்தல் செய்யாமை என்பது அஹிம்சை என்பது மனிதனிடம் அமைந்துள்ள இரு கூறுகளில் எதைப் பற்றியது என ஆராய்ந்தார். ஹிம்சை என்பது கொல்லுதல், துன்புறுத்தல் போன்றவை. கொல்லுதல், துன்புறுத்தல் போன்றவை உடம்பைத்தான் தாக்குமேயொழிய உயிரைத் தாக்காது. எனவே ஹிம்சை என்பது உடலைப்பற்றியது; அஹிம்சை என்பது உயிரைப் பற்றியது'

உயிரைச் சென்று தாக்கக் கூடியதாக, தட்டியெழுப்பக் கூடியதாக, உயிரின் ஆற்றல் என்பதைச் செயற்படுத்த வேண்டும் என்றால் அஹிம்சையைத்தான் உபயோகிக்க வேண்டும். ஆனால் அஹிம்சை என்பதால் உயிர் ஆற்றல் எழுப்பப் பெற வில்லையே என நினைத்தார். இந்நினைவின் அடிப்படையில் அவர் அஹிம்சை என்பதற்குக் கொல்லுதல் செய்யாமை என்பது போல எதிர்மறையில் பொருள் செய்யாமல் உடன்பாட்டு முறையில் பொருள் கொள்ள முற்பட்டார். அப்போது அஹிம்சை என்பதற்கு உடன்பாட்டுப் பொருள் அன்பு என்பதே. எனவே, மனிதனின் இயற்கைக் குணம் அஹிம்சை என்பதே. மற்றவர்கள் அஹிம்சையை ஓர் அறக்கொள்கையாக எடுத்து விளக்கினார்கள். காந்தியடிகள் மட்டுமே அஹிம்சையை மனிதனின் இயற்கை குணம் என்று அமைத்துக் காட்டினார்.

அடுத்து, ஹிம்சை என்பது வீரனின் பண்பு என்றும், அஹிம்சை என்பது கோழையின் பண்பு என்றும் ஒரு கருத்து வந்தது. அதற்குக் காந்தியடிகள், தோற்றத்தில் வன்முறைச் செயல்கள் வலிமையுடையவனின் செயல்களாகத் தோற்ற மளிக்கும். உண்மையிலேயே அவைகள் அச்சத்தின் காரணமாகத் தோன்றுகின்றன. அஹிம்சை என்பது அஞ்சாமையிலிருந்து தோன்றுவது ஆகையால் அஹிம்சையை மிகவும் வலிமை யுடையவனால்தான் மேற்கொள்ள முடியும் என்று கூறி, அஹிம்சையானது வீரனின் படைக்கலம் என்று குறிப்பிட்டார்.

அஹிம்சை என்பதை ஒரு செயல்முறைப் பதிவேடு எனக் கொள்ள வேண்டும். அது தொடர்புடையதாக, நிலையானதாக

எடுக்கப்பெறும் கொள்கை, கொள்கையைச் செயற்படுத்தக் கூடிய முயற்சி, முயற்சியை வலிமையாக்கும் ஊக்கம், அத்தகைய ஊக்கத்தை அடிப்படையாகக் கொண்ட செயல் என இவ்வாறு விடாமல் செயற்பட்டுக் கொண்டேயிருக்கவேண்டிய தன்மையை உட்கொண்டது. ஆகையினால், அஹிம்சையைக் கடைப்பிடிக்க மிகுதியான பொறுமை வேண்டும். பொறுமை என்றால் செயல் படாமலேயே இருப்பதன்று.

அஹிம்சை என்பது தியாகத்தையும், தன்னைத்தான் துன் புறுத்திக் கொள்ளுதலும் என்ற இரு நிலைகளை அடிப்படையாகக் கொண்டது. தியாகம் என்பது தன்னைத்தானே துன்புறுத்திக் கொள்வதில் அடங்கிவிடும். தன்னைத் துன்புறுத்திக் கொள்ளு வதைத் 'தவம்' என்று குறிப்பிட்டார் காந்தியடிகள்.

துன்புறுதல் என்பது வாழ்வியற் போராட்டங்களில் வெற்றி யைத் தருகின்ற ஓர் உண்மையான வழி. முன்கூட்டியே அத் துன்பத்தை ஏற்றுக்கொள்ள முற்படும்போது அங்கே இயல் பாகவே அன்பு தோற்றம் பெறுகிறது. பகையாக அமைந்தவர் களின் உள்ளத்திலும் அது ஒருவகையான நல்லெண்ணத்தை உண்டாகுமாறு செய்து விடுகிறது. எனவே, துன்புறுத்தல் - தன்னைத்தானே துன்புறுத்திக் கொள்ளுதல் அன்பினுடைய தன்னுண்மைப் பண்பு என்று கொள்ளலாம் என்று முடிவு செய்தார் காந்தியடிகள்.

அஹிம்சை என்பது அன்பும், அறிவில் ஆய்ந்து ஏற்றுக் கொண்ட துன்பமும் என இரண்டாகச் செயல் மேற்கொள்ளும் போது, அச்செயல் ஒருவனுடைய தன்மதிப்பையும் பெருமை யையும் காப்பாற்றும் வலிமையுடையதாக அமைகிறது.

அஹிம்சையைச் செயற்படுத்தும் முறையே சத்யாக்ரகம்: சத்யாக் ரகம் என்பதற்கு உள்ளதன் ஆற்றல் (truth force) என விளக்கம் தந்த காந்தியடிகள் அஹிம்சையைப் பற்றிய விரிவான சோதனைகளைச் செய்த பின்னர், சத்யாக்ரகம் என்பது அஹிம்சையைச் செயல்படுத்தும் முறைக்கு அமைத்த பெயரே என்றார். (A technique of Ahimsa to which I give the name of Satyagraha.)

சத்யாக்ரகம் என்ற சொல்லைச் சத்ய + ஆக்ரஹ எனப் பிரித்து சத்யம் என்றால் கடவுள்; ஆக்ரஹ என்றால் (உண்ணாமை மூலம்) விரைந்து பற்றுதல் எனப் பொருள் செய்து, கடவுள் என்னும் பெயரால் அமைக்கப்பெறும் உள்ளது என்ற பொருளின்

ஆற்றலை விரைந்து பற்றுதல் என விளக்கம் செய்து காட்டினார். அதனைப் பற்றுவதற்கு உள்ளது என்ற பொருள்மேல் அன்பு செலுத்துதலும், விரைந்து பற்றுவதற்கு உண்ணாமை மூலம் தன்னைத் தானே துன்புறுத்திக் கொள்ளுதலும் ஆகிய இரண்டையும் இணைத்துச் செயல்படுத்த முயன்றபோது அச்செயல் 'சத்யாக்ரகம்' என்ற பெயரைப் பெற்றது.

சத்யாக்ரகம் என்பது உள்ளது அல்லது சத்யம் என்ற ஒன்றைப் பற்றுவதற்காகத் தானே தன்னறிவின் துணையுடனே ஒருவன் தன்னைத் துன்பத்தில் ஈடுபடுத்திக் கொள்ளுதல். சத்யாக்ரகியின் துன்பத்தின் மூலம் பகைவனுடைய உள்ளத்தில் ஒருவகை மாற்றத்தை உண்டாக்குவது என்பதே இதன் அடிப்படை. இதன்மூலம் சத்யாக்ரகம் என்பது ஒருவனுடைய மனத்தை மாற்றுவதற்கு என அமைந்த முறை. இது ஒருவனை ஒரு கருத்தை வன்முறைமூலம் ஏற்றுக்கொள்ள வைக்கும் முறை அன்று; சத்யாக்ரகம் தவறு செய்தவனுடைய நல்லெண்ணத்துக்கும் நல்ல உள்ளத்துக்கும் வேண்டுகோள் விடுக்கும் முறையாகும். அதனால் காந்தியடிகள் சத்யாக்ரகம் யாருடைய செயலை நோக்கி அமைகிறதோ, அவரைத் தவறு செய்தவர் என்று கருத வேண்டுமேயொழிய அவரைப் பகைவராகவோ, மாறானவராகவோ எண்ணுதல் கூடாது என்று எச்சரித்தார். நல்ல எண்ணமும் நல்ல உள்ளமும் உடையவரே, ஏதோ காரணத்தால் ஒருவகைத் தவறு செய்தவராக அமைந்துவிட்டார். சத்யாக்ரகத்தின் மூலம் அவர் மனம் திருந்துவதற்கு ஒரு வாய்ப்பினை அளிக்க முற்பட வேண்டும். எனவே, சத்யாக்ரகம் என்பது ஒருவகை வேண்டுகோள். அவர் மனம் தவற்றிலிருந்து திருந்தி நன்மையில் வருவதற்குரிய மனமாற்றம் என்ற ஒன்றை அடிப்படையாகக் கொண்டது என விளக்கினார்.

அன்பு, அஹிம்சை, தானே அறிந்து துன்பத்தை ஏற்று வருந்துதல் என்பதன் மூலமாக, தீய ஆற்றல்களை நீக்குவதே சத்யாக்ரகத்தின் கொள்கை. அது தெய்வத்தன்மை வாய்ந்த பாதை; உள்ளது அல்லது உண்மை நோக்கிய பாதை.

சத்யாக்ரகம் என்பது உலகந் தழுவிய பொதுமைத் தன்மை வாய்ந்தது. இது எல்லாராலும், எல்லாச் சூழ்நிலையிலும், எல்லா நாட்டிலும் செய்வதற்கேற்ற பொதுமையுடையது என்றார்.

சத்யாக்ரகியின் தேவைகள் ; ஒரு சத்யாக்ரகி அடிப்படையிலேயே பெருமையும் நாணயம் வாய்ந்தவனாகவும் இருக்க வேண்டும். அதாவது, கொள்கையில் பெருமையும் முயற்சியில் நாணயமும் அமைய வேண்டும்.

சத்யாக்ரகி வெளிப்படையான மனம் அமைந்தவனாக இருக்க வேண்டும். தவறு செய்தவனுடைய மனத்தை மாற்ற முற்படும் சத்யாக்ரகி, திறந்த உள்ளமுடையவனாக எதையும் வெளிப்படையாகப் பேசித் தீர்க்கும் மனமுடையவனாக அமைய வேண்டும். ஏதேனும் உள்நோக்கம், வெளிப்படுத்தப்படாத மறைவெண்ணங்கள் முதலியவை அமைந்த மனமுடையவனாக இருக்கக் கூடாது

சத்யாக்ரகி என்பவன் முறையாகப் பயிற்சியை மேற்கொண்ட ஒரு போர் வீரன் போன்றவன். 'உள்ளது' என்பவர்தான் அவனுடைய தலைவர். மனச்சான்று என்பவர்தான் அவனை வழிப்படுத்துபவர். 'உள்ளது' என்ற தலைவரை அன்பு செய்யவேண்டும்; உறுதியாக நிற்றல் வேண்டும்.

சத்யாக்ரகி அஞ்சாதவனாக இருக்க வேண்டும். அச்சத்தை வெற்றி கொள்ளாதவன் சத்யாக்ரகியாக அமைய முடியாது.

அச்சமின்மை என்பது தியாகத்துக்கு வழி வகுக்கும். எனவே சத்யாக்ரகி, தன்னலத்தைத் துறக்க வேண்டும்; தியாகத்துக்குத் தயாராதல் வேண்டும். 'உள்ளது' என்பதன் ஆற்றலைப் பற்றுவதற்காக எந்த அளவு துன்பத்தையும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

தன்னைத்தான் துன்புறுத்திக் கொள்ளுதலையும் தியாகம் செய்தலையும் ஒருவன் எளிமையாகவும் அடக்கமாகவும் செய்ய வேண்டும். தன்னுடைய செயல் மிக உயர்ந்த செயல் என ஆரவாரம் செய்து கொள்வானேயானால் அவன் சத்யாக்ரகம் வெற்றி பெறாது.

சத்யாக்ரகியானவன் நினைவு, சொல், செயல் ஆகியவைகளில் ஒற்றுமையுடன் செயல்படும் தன்மை உடையவனாக அமைய வேண்டும். இம்மூன்றிலும் ஒருவகை இணைப்பை உண்டாக்கிக் கொண்டு, வேறுபாடோ மாறுபாடோ இல்லாத வகையில் செயலாற்ற வேண்டும்.

சத்யாக்ரகியானவன் உள்ளது—உண்மை—சத்யம் என்பதன் ஆற்றலைப் பற்றுவதற்கு எத்தகைய துன்புறுத்தலை ஏற்றுக் கொள்வது என்பதில் நல்ல தெளிவான கருத்துடையவனாக அமைதல் வேண்டும். எந்த வகையான துன்பம் ஏற்றுக் கொண்டால் அது தன்னை அந்த உண்மையின் நிலைக்குக் கொண்டு செலுத்தும் என்பதைத் திட்டவட்டமாக அறிந்தவனாதல் வேண்டும். பொதுவாக உண்ணாமையே சிறந்த வழி.

சத்யாக்ரகிக்குத் துணையாக நிற்கும் சில அறங்களையும் மேற்கொள்ள வேண்டும். அவை திருடாமை; பிறர் பொருள் விரும்பாமை; பிரமசரியம் முதலியன.

சத்யாக்ரகியானவன் தன்னடக்கமும் பொறுமையுடையவனாகவும் அமைய வேண்டும். பொதுவான அறக் கொள்கைகளை ஏற்று நடக்காதவன் சத்யாக்ரகியாக அமைய இயலாது.

எல்லாவற்றுக்கும் மேலாக, சத்யாக்ரகியானவன் கடவுள் நம்பிக்கை உடையவனாக இருத்தல் வேண்டும். கடவுள் என்ற சொல் இல்லை என்றாலும் வலிமை வாய்ந்த உள்பொருள் தன்னுள் இருக்கிறது எனக் கொண்டு அதன்மேல் நாள்தோறும் அன்பு செய்து பழகியவனாக இருக்கவேண்டும்.

செயற்படுதல் என்பது ஒருவகைச் சிறந்த வழி. ஆனால் காந்தியடிகள் உண்ணாநோன்பு மேற்கொண்டார். அது இரு வழிகளில் செயல்படுவதாக அறிந்தார். ஒரு வகையில் உண்ணாநோன்பு நம்மை நாமே தூய்மை செய்தும் முறையாகப் பயன்படுகிறது. இன்னொரு வகையில், இறத்தலுக்குரிய வழியைப் பெருமையுடன் தேர்ந்தெடுத்துக் கொண்டோம் என்பதே தவறு செய் தவரை மாற்றுவதற்குப் பெரிதும் துணையாக அமைகிறது.

உண்ணாமை என்பது உயிரின் ஆற்றலை உயர்த்துகிறது. அவ்வாற்றல் தவறு செய்தவரின் அறிவைச் செயல்படுத்துகிறது. உடலின் ஆற்றல் குறையும் அளவுக்கு உயிரின் ஆற்றல் மிகுகிறது. ஆகையால் உண்ணாநோன்பு ஒரு சிறந்த வழி. உண்ணாமையும் கடவுள் புகழ்பாடி வணங்குதலும் இணைந்த ஒன்றே நேர்மையான வழி.

வழியும் பயனும் : அற இயலில் குறிக்கோள் எது என்ற வரையறையும் அதனை அடைதற்குரிய வழி எது என்பதனையும் விளக்கி அமைத்தல் ஒரு மரபு. வழி எதுவாயினும் குறிக்கோளை அடைந்தால் சரி என்ற ஒரு கொள்கை உண்டு. காந்தியடிகள் இந்த வகையில் பொதுவாக எல்லாரும் கடைப்பிடிக்கும் விளக்கத்தைவிட, ஒருபடி மேலே சென்று, சிறிது மாறுபட்ட விளக்கத்தைக்கூட அமைத்துக் கொடுக்கிறார்.

காந்தியடிகள் உள்ளது எனப்பெறும் truth என்பதன் ஆற்றலை அடைவதே குறிக்கோள்; அதற்கு அஹிம்சை வழியாக அமைகிறது; ஆயினும் வழியும் பயனும் தனித்து நிற்பவை அல்ல என்று கூறினார். பின்னர், இரண்டும் ஒன்றே என்ற பொருளில் விதையும் மரமும் போல அஹிம்சையும் உள்ளதும் (truth) அமைகிறது என்றார். அதன் மூலம் காந்தியடிகள் வலியுறுத்த விரும்பிய கருத்து ஒன்று உண்டு. விதையில் ஒருவகை ஆற்றல் இருக்கிறது. அதுவே நாம் மரத்தைப் பெறுவதற்கு உதவுகிறது. எனவே மரத்தையும் விதையையும் இணைக்கும்

ஓர் ஆற்றல்தான் இவ்விரண்டையும் இணைக்கிறது. எனவே, இரண்டும் வேறு வேறானவை அல்ல. ஒன்றை நாம் எளிமையில் பெறமுடிகிறது. அதுவே விதை. அது வலிய ஒன்றை நம்மிடம் கொண்டுவந்து சேர்த்துவிடுகிறது. எனவே அஹிம்சையும் உள்ளது என்பதன் ஆற்றலும் ஒன்றே. அஹிம்சையில் உள்ள ஆற்றல் உள்ளது என்றதன் ஆற்றலை நம்மிடம் கொண்டு வந்து சேர்க்கிறது. அஹிம்சை நம்மால் பற்றுவதற்குரிய எளிமை வாய்ந்தது.

சமயமும் கடமையும்: காந்தியடிகள் எந்த ஒரு கொள்கையை வலியுறுத்தினாலும் அது உள்ளது (truth) எனப்பெறும் உண்மைப் பொருளை அடைவது என்ற குறிக்கோளைச் சார்ந்த தாகவே இருக்கும். அவ்வகையிலேயே காந்தியடிகள் சமயம் என்பதற்கும் உள்ளது என்னும் பொருளின் ஆற்றலை அடை வதற்குரிய பயிற்சிமுறை அல்லது வழிமுறை என்றே கருதுகிறார். சமயம் என்பது பற்றிக் காந்தியடிகளின் கருத்துகளைக் கீழ்க் காணுமாறு முறைப்படுத்திக் கொள்ளலாம்.

மனிதன் தன்னுடைய உண்மையான, நிலையான பண்பினை வெளிப்படுத்திக் கொள்ளும் முறையே சமயம். மிருக இனத்தைச் சார்ந்ததும் அறிவற்ற முரட்டுத் தன்மையானதும் ஆகிய பண் பானது அவனிடம் காணப்பெறுகிறது- ஆனால் அது அவனுடைய நிலையான பண்பன்று; அவனுடைய நிலைத்த பண்பு என்பது தெய்வத்தன்மை வாய்ந்ததே. நன்மை என்பது தன்னுண்மை நிலையில் எல்லா மனிதர்களிடத்திலும் காணப்பெறுவதை நாம் சிந்தித்தல் வேண்டும்.

சமயம் என்பது மனிதனைத் தூய்மையுடையவனாக ஆக்கும் ஒருவகை வழிமுறை. அதனால் அவன் தன்னிடத்தில் தனக்கு உரியது அல்லாத மிருகப் பண்பைத் தன்னிடத்தேயிருந்து நீக்கிக் கொள்ளுவதற்குச் சமயம் துணைநிற்கிறது. உண்மையான சமய உணர்ச்சியானது ஒருவன் தன்னுடைய பண்பை நல்ல பண்பாக மாற்றிக் கொள்ளுவதற்குரிய ஆற்றலையுடையது. எனவே, சமயத்தின் வழிநின்று தன்னிடம் இருக்கும் தீய பண்புகளை நீக்கிவிட்டு, நல்ல பண்புகளை வளர்த்துக்கொள்ள முடியும் என்றார்.

சமயம் ஒருவனுடைய ஆன்மிகத் தன்மையியலான உண்மை அல்லது உள்ளது என்ற ஒன்றன் பேராற்றலைச் சென்று அடை வதற்குரிய வேட்கையை எழுப்புகிறது. அது அவனை நல்லது, சரியானது என்பவைபற்றிய உள்ளுணர்வை வளர்த்துக் கொள்ள

-வும் செயற்படுத்தவும் துணைநிற்கிறது. ஆகையினால் அவன் உண்மையான அற இயல் மனிதனாக ஆகிறான்.

சமயம் மனிதனை அவன் நிலைக்கு மேலாகிய பரம்பொருள் நிலைமைக்கு அழைத்துச் சென்று பரம் பொருளனுபவத்தை அனுபவிக்க வேண்டும் என்ற அறிவியலான வேட்கையை எழுப்பு கிறது.

சமயம் அறிவியலான,நேர்மையியலான அன்பையும்,உள்ளது (truth) என்பதை அடைய வேண்டும் என்ற ஊக்கத்தையும் உள்ளீடாகக் கொண்டது. சுருங்கக் கூறின், சமயமானது மனிதனிடத்தே அமைந்துள்ள ஆன்மிகக் கூற்றினைக் கிளர்ந் தெழச் செய்யுமாறு ஒருவகை உள்வேட்கையைத் தூண்டுகிறது என்று கூறலாம்.

இத்தகைய ஆன்மிகக்கூறு விரைந்து வளரவேண்டுமானால் மனிதன் தன்னிடத்துள்ள தன்னலத் தன்மை வாய்ந்ததும், புலனுணர்ச்சியியல்பானதும் ஆகிய கீழ்மைக் கூற்றினை அடக்கிக் கீழே தள்ளுதல் வேண்டும். அதற்காக மனிதன் தன்னுடைய தன்னலத் தன்மை வாய்ந்த எல்லாவகையான உள்நோக்கங் களையும் முழுமையாக மறைத்து, தன்னலமயமான மனிதனே இல்லை என்ற நிலையை உருவாக்குதல் வேண்டும்.

தன்னலமான பண்புகளை அழித்தல் என்பதே தன்னைத் தியாகம் செய்தல் (self-sacrifice) என்பதாகும். அதனை அடுத்து நிற்பது துறவு.

துறவு என்பதற்கு இவ்வுலகத்தைவிட்டு ஓடிவிடுதல் என்று பொருள் கொள்ளவில்லை. தன்னலத்தையும் தன்னை ஒட்டிய எல்லாவகையான உறவுகளையும் பொதுநலத்தை முன்னிட்டுத் துறத்தல் என்பதே பொருள். அதனால் காந்தியடிகள் சமயத்துறை சார்ந்த பயிற்சியையுடைய மனிதன் மக்களின் மத்தியில் வாழ்ந்து கொண்டே துறவு என்பதைப் பயிற்சி செய்ய வேண்டும் என்று விளக்கிக் கூறினார்.

உள்ளது (truth) எனப்பெறும் பரம்பொருளின் ஆற்றலை அடைந்து அதன்மூலம் அப்பொருளை அடைந்து மகிழ வேண்டு மானால் அதற்குத் துறவு தேவை. காந்தியடிகள் அத்துறவை வலியுறுத்தும்போது அது இவ்வுலகில் நாம் செயலாற்றுகின்ற போது வரும் வருவாயையோ இழப்பையோ பொருட்படுத்

தாமல், அவைகளைப்பற்றிய ஒருவகைப் பற்றற்ற நிலையை நாம் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

இவ்வுலகம் கடமையை ஆற்றுவதற்கு என்றே அமைக்கப் பெற்ற இடம். 'கர்மஸ்தலம்' என்று இவ்வுலகை விளக்குவார் காந்தியடிகள். இவ்வுலகில் இருக்கும்வரை ஒருவன் தன்னுடைய கர்மாவை- கடமையைச் செய்து கொண்டுதான் இருக்கவேண்டும் கர்மாவையே துறந்துவிடுதல் என்பது இவ்வுலக வாழ்வுக்குப் பொருந்துவதன்று என்று விளக்கினார் காந்தியடிகள்.

கடமையைச் செய்யவேண்டும் என்று வலியுறுத்தும் காந்தியடிகள் துறவுக் கொள்கையை எவ்வாறு இணைக்கிறார்? இவ்வகையில் காந்தியடிகளின் துறவுக் கொள்கையானது பகவத்கீதை வலியுறுத்தும் துறவுக் கொள்கையை ஒத்ததாகவே காணப் பெறுகிறது.

ஒருவன் தன்னுடைய கடமையைச் செய்யும்போது அக் கடமையின் பயனையோ பின் விளைவுகளையோ, எதிர் நோக்காமல், இன்னும் சிறப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் பயனைப் பற்றியோ, பின் விளைவுகளைப்பற்றியோ நினைக்கவும் செய்யாமல் கடமையைச் செய்தல் என்று விளக்குகின்றார். இது பகவத் கீதை கூறும் நிஷ்காம கர்மாவைப் போன்றதே.

கடமையைப் பயன் நோக்காச் செயலாகச் செய்யவேண்டும் என்று பகவத்கீதை வலியுறுத்தவும், காந்தியடிகள் மேலும் ஒருபடி சென்று, கடமையை ஒரு தன்னிழப்புச் செயல் என்பதாக விளக்கினார். கடமையைச் செய்யும்போது பயனைத் துறந்துவிடுதல் என்பதே துறவுக் கொள்கை என்பது பகவத் கீதை. பயனைத் துறத்தலோடு தன்னையும் துறத்தல் வேண்டும் என்று காந்தியடிகள் கருதுகின்றார்.

கடமையின் பயனைப் பொது நன்மைக்காகத் துறக்க வேண்டும். கடமையை இறைவனுக்குக் காணிக்கையாக்குதல் வேண்டும் என்று பகவத் கீதை கூறுகிறது. செயலிலிருந்து–கடமையிலிருந்து பயனை நீக்குவது போலவே தன்னையும் நீக்கிவிடுதல் வேண்டும்; தன்னை அழித்துக் கொண்டு செய்யும் கடமை என்று குறிப்பிடுகின்றார். கடவுளிடம் பெருகும் அன்பில் தன்னை அழித்துக்கொண்டு பரம்பொருளின் ஆற்றலில் தன்னை மறைத்துக்கொண்டு கடமையைச் செய்தல் வேண்டும்.

தன்னுடைய நிலையில் கடமையைச் செய்தால் அதன் பயன் அவனை நோக்கிய நிலையில் கணக்கிடப் பெற்று, அப்பயன் பொது

மக்களுக்குரிய நன்மைக்குச் சென்று அமையும். ஆனால், அவன் தன்னை அழித்துக்கொண்டு, உள்ளது என்ற பரம்பொருளின் ஆற்றலில் தன்னை அழித்துக் கொண்டு கடமையைச் செய்யும் போது, பயன் கடவுளின் ஆற்றலுக்கு ஏற்பக் கணக்கிடப் பெற்று, பொதுநன்மைக்கு அதிகமான பயன் சென்று அடையும். எனவே, தன்செயலாகச் செய்து பயனைத் துறப்பது ஒருவகை. தான் இறைவன் ஆற்றலில் இணைந்து, தன்னையே அழித்துவிட்ட நிலையில் கடமையைச் செய்து பயனையும் துறந்த நிலை, இரண்டாவது வகை.

காந்தியடிகளின் கடமைக் கொள்கையானது தன்னை அழித்தலும் பயனைத் துறத்தலும் ஆகிய இருநிலைகளைக் கொண்டது எனத் தெளிவாக அமைத்துக் கொள்ளவேண்டும். இனி, தன்னை அழித்துச் செய்ய வேண்டும், கடவுளாற்றலோடு இணைத்துச் செய்ய வேண்டும் எனில் அதற்குரிய ஒரேவழி கடவுள் புகழ் பாடுதல் (prayer). கடவுளைப் போற்றி வணங்குதல் மிக முக்கிய மான கடமை. கடவுளைப் போற்றித் துதித்தல் (prayer) எனப் பெறும் செயல் ஒன்றுதான் மனிதனைப் பேராற்றலுடன் நேரே இணைக்கும் ஆற்றல் வாய்ந்தது.

கடவுளின் ஆற்றலை நாம் பெறவும், அதனைப் பொது மக்களுக்குப் பயனுடையதாக ஆக்கவும் தேவையான ஒரே ஒரு கடமைதான் பிரார்த்தனை எனப்பெறும் புகழ்பாடும் முறை. புகழ் பாடுவதன் மூலம் ஒருவன் தன்னை இழந்து, கடவுளாற்றலில் ஒன்றும் நிலையைப் பெறுகிறான். கடமையை நிஷ்காம கர்மா வாகச் செய்தால் மட்டும் போதாது; போற்றிப் புகழ்தல் (prayer) என்பதனுடன் செய்யவேண்டும். அப்பொழுதுதான் தன்னை இழத்தலும் பயனைத் துறத்தலும் ஆகியஇரண்டையும் உள்ளிட்ட கடமையைப் பொதுநன்மைக்காகச் செய்யமுடியும் என்று கூறு கிறார் காந்தியடிகள்.

முடிவுரை

காந்தியடிகள் கர்மவீரர் என்று போற்றப்பெற்றார். கடமையைச் செய்தல் என்ற வகையில் பகவத் கீதை அமைத்த நிஷ்காமா கர்மாவைத்தான் பின்பற்றினார்.

ஆனால் காந்தியடிகள் வாழ்வியல் உயர்நிலைக் குறிக் கோளாகக் கொண்டது 'உள்ளது' என்ற பரம்பொருளின் பேராற்ற லோடு இணைந்து, பின் பரம்பொருளை அடைவதே. அதற்கு உரிய வழியாக அஹிம்சையைக் கொண்டார்.

இனி, கடமையை மனிதன் மனிதனாக நின்று ஆற்றுவதை விட, அவன் கடவுளாற்றலில் தன்னை அழித்துக்கொண்ட பிறகு கடமைசெய்ய செய்வானானால் அதுவே மனிதன் உண்மையாகச் செய்யும் கடமையாற்றும் முறை. அதற்குரிய ஒரே வழி, இறைவன் புகழ்பாடி நின்று கடவுள் ஆற்றலைப் பெறமுடியும் என்று கூறினார்.

எனவே, கடமையைச் செய்ய முற்படுவதற்கு முன்னால் தன்னை அழித்துக் கொள்ள வேண்டும் என்றார் காந்தியடிகள். தன்னை அழித்துக் கொள்வதென்பது பரம்பொருளாற்றலில் தான் அப்படியே ஒடுங்கிவிடுதல்.

கீதை, பயனை மட்டும் துறந்தால் போதும் என்று கூற, காந்தியடிகள் தன்னை இழத்தலும் வேண்டும். எனவே பிரார்த்தனை, புகழ்பாடுதல் என்பதன் மூலம் பரம்பொருளாற்றலை அடைந்து, தன்னையிழந்து, பின்னரே கடமையைச் செய்தல் வேண்டும் என்று வலியுறுத்துவார் காந்தியடிகள்.

எனவே, பகவத் கீதையினும் ஒரு படி மேலே சென்று, கடமையைத் தன்னை இழந்தபிறகே செய்ய முற்பட வேண்டும் என்று கூறியது காந்தியடிகள் கடமையாற்றுவதில் வகுத்துக் காட்டிய தனிநெறி. இவ்வகையில் காந்தியடிகளின் கடமைக் கொள்கையானது ஒருவகைத் தனிநிலையுடைய கொள்கையாகும்.

(4) இன்பம் என்னும் அற இயல் குறிக்கோட் கொள்கை

முன்னுரை

அற இயல் வாழ்வின் முடிந்த குறிக்கோளாக அமைவது இன்பமே. இன்பமே வாழ்வின் உயர்ந்த நன்மை. 'இன்பமே வாழ்வின் முடிந்த முடிநிலையாக இருப்பது' என்று கூறும் கொள்கைக்கு இன்பியற் கொள்கை (Hedonism) என்பது பெயர். Hedone என்ற சொல் இன்பம் என்ற பொருளைக் குறிக்கும்.

அற இயல் வாழ்வின் முடிந்த குறிக்கோள் இன்பமே என்று கொள்ளுதற்குரிய அடிப்படைக் காரணங்கள் இரண்டு.

1. புலன் கடந்த பொருளியலைச் சார்ந்த காரணம் (Metaphysical): உயிர் என்பது தன்னியல்பில் என்றும் புலனுணர்ச்சியைச் சார்ந்ததே என்னும் காரணம். உயிரானது எப்போதும் உணர்ச்சி, இயல்பூக்கம் என்பன போன்ற புலனுணர்ச்சியைச் சார்ந்தே இயங்குகின்றது. ஆகையினால் உணர்ச்சி, இயல்பூக்கம் போன்றவைகளுடன் தொடர்புடைய இன்பமே உயிரானது மேற்கொள்ளும் அறவாழ்வின் முடிந்த பயனாக இருக்கும் என்பது. ஆயினும், உயிரானது அறிவுக்கூறும் கொண்டு விளங்குவது கண்கூடு. உயிரானது அறிவின்வழி இயங்குமா? புலனுகர்ச்சியின்வழி இயங்குமா? என்ற வினாக்களுக்கு இன்பியற் கொள்கை ஒரு விடையை அளிக்கிறது. ஆசை, உணர்ச்சி போன்றவைகள் அறிவைத் தமக்குரிய பணியாளாக அமைத்துக் கொள்ளுகின்றன. உயிரானது தன்னை உண்மையான நிலையில் அளந்தறிவதற்கு இன்ப உணர்ச்சியையே கருவியாகக் கொள்கிறது. எனவே, உயிரின் தன்மையை உற்று நோக்கினால், அதன் இயல்பான தன்மையில், அது இன்பத்தை நாடும் தன்மையுடையதே.

2. அற வாழ்வில் இன்பமே குறிக்கோள் என்பதை உள்ளத்தியல் ஆய்வு வழியாலும் ஆய்ந்து கொள்ளலாம். உள்ளத்தியலின் விளக்கத்தின் வண்ணம் சிந்தித்தால் மனிதன் தன்னியல்பாகவே இன்பத்தை நாடுகிறான்; துன்பத்தை வெறுக்கிறான். ஆசை என்ற ஒன்று இன்பத்தை நோக்கியதே. பல பொருள்களை நாம் ஆசைப்படலாம். ஆனால், முடிந்த நிலையில் நமக்கு இன்பம் தருகிறது என்ற காரணத்தால்தான் பொருள்களை நாம் விரும்புகிறோம். எனவே, ஆசையின் இயல்பான குறிக்கோள் இன்பமே.

பொதுவாக, மனத்தின் நியதியில் இன்பம் அல்லது துன்பம் ஒரு பண்பைப்போல நமக்குக் காணப்பெற்றாலும், அவற்றை ஒட்டிப்பல மனநிலைகள் அமைகின்றன. நாம் இனிப்புப் பொருள் ஒன்றை உண்ணும்போது உண்டாகின்ற மன எழுச்சி நமக்கு இன்பத்தை (pleasantness) அளிக்கிறது. அதைத்தவிர இனிமை (sweetness) என்பதுபோன்ற மன எழுச்சிகளையும் தரலாம். பொதுவான நிலையில் மனிதன் மனம் இன்ப ஈர்ப்புக்கு ஆளாவதால் இன்பமே அற இயல் வாழ்வின் குறிக்கோள் என வரையறுத்தனர்.

நேரடித் தொடர்பு என்று சொல்லப் பெறுபவைகள் போக, வேறு பல சூழ்நிலைகளிலும் நம் மனத்தில் மிகுதியாக இன்பமே தோன்றுகிறது. (1) புலன்களின் வழியில் வரும் உணர்வாக அல்லது காட்சிப் பொருளின் தன்மையாக, அழகுப் பொருள்கள் தரும் உணர்வாக இன்பமே வெளிப்படும். (2) சில வேலைகள் புறநிலையிலிருந்து நம்மேல் திணிக்கப்பெறாமல் இருக்கும்போது, நம் மனத்தில் ஒருவகை இன்ப உணர்ச்சி உண்டாகிறது. நம்மால் செய்ய முடிந்த வேலைகளை நம்மிடம் ஒப்படைக்கும்போது, நாம் விரும்பியேற்ற வேலையில் இடையே வேறு எந்த வகையான தடையும் வராதபோது, என்றிவ்வாறான சூழ்நிலைகளில், வேலையோடு இணைந்தே இன்பமும் வருகிறது. சில சமயங்களில் துன்பம் தழுவிய செயல்கள்கூட இன்பம் தாங்கி வருவதைக் காணலாம். (3) ஒரு செயல் வெற்றியாக அமையும்போது, அச்செயலுடனேயே இன்பம் தொடர்ந்து வருகிறது. (4) ஒரு விருப்பம் நிறைவேறும்போது இன்பம் உண்டாகிறது. எனவே, ஒரு மனிதனுடைய பெரும்பாலான செயல்களில் இன்பமே தொடர்ந்து வருவதைக் கண்கூடாகக் காண முடிகிறது. ஆகையால் மனிதன் தன்னியல்பில் இன்பத்தை நாடுபவனாக அமைகிறான் என்பது உள்ளத்தியல் ஆய்வு.

(4) (அ) உளவழி இன்பியற் கொள்கை

உளவழி இன்பியற் கொள்கையை அற இயல் சார்ந்த கொள்கை என்று சிலர் ஏற்பதில்லை. ஒரு கொள்கை என்று நிறுவப்பெற வேண்டுமானால் அது இப்படிச் செய்தேயாக வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஏதாவது முயற்சி செய்யப் பெறுவதாக அமையவேண்டும். ஆனால் உளவழி மகிழ்ச்சிக் கொள்கையானது மனிதன் இயல்பாகவே இன்பத்தை நாடி ஓடுகிறான் என்று கொள்கிறது:

உளவழி இன்பியற் கொள்கையினர் சில கருத்துகளை எடுத்துக் கூறி, அது ஒரு கொள்கை என வலியுறுத்துகிறார்கள்.

மனிதன் உலகில் உள்ள பொருள்களை அடையவேண்டும் என விரும்புகிறான். பொருள்களை அவன் விரும்புவதற்கு காரணம் பொருள்களைப் பற்றியதன்று; பொருள்கள் இன்பம் தரும் என்ற காரணத்தால்தான். இன்பம் தருபவைகளை விரும்புகிறானேயொழிய, பொருளுக்காகப் பொருளை விரும்புவது இல்லை. மனிதன் பொருள்களுக்கு அப்பாலுள்ள இன்பத்தையே விரும்புகிறான். சில பொருள்களை வெறுத்துவிட்டுச் சில பொருள்களையே விரும்புவதற்குக் காரணம் பொருள்களின் மேல் குறையோ பற்றோ இல்லை; பொருள்கள் தரும் இன்பமே.

இயற்கையானது பெருமையும் மதிப்பும் உடைய அரசின் இரு பெரிய தலைவர்களின் பாதுகாப்பில் மனித இனத்தை அமைத்திருக்கிறது. அந்த இரு தலைவர்களே இன்பமும் துன்பமும். நாம் என்ன செய்யவேண்டும் அல்லது என்ன செய்வோம் என்று சொல்லுவதெல்லாம் அந்த இரு தலைவர்களுக்காகத் தான்.

ஒரு பொருளை விரும்புதல், அது இன்பமானது என்று அறிதல்; கிடைக்குமேயானால் மகிழ்தல்; அதே பொருள் கிடைக்கவில்லையானால் துன்புறுதல் ஆகிய எல்லாம் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கக்கூடியவை அல்ல; மேலும் ஒரு பொருளின் இரு கூறுகளாக அமைபவைகள் என்பது இக்கொள்கையினர் கூறும் விளக்கம். ஒரே பொருள் இந்த இரண்டு அனுபவங்களையும் தரும் என்று விளக்கம் செய்கிறார்கள். இன்பம் தரும் என்ற எண்ணத்தில் நான் ஒரு பொருளை விரும்புகிறேன். அப்பொருள் கிடைத்தால் எனக்கு இன்பம், கிடைக்காதபோது எனக்கு 'இன்பம் இல்லை' என்பது தானே உண்டாக வேண்டும்; ஆனால் துன்பம் வந்துதாக்குகிறது. இன்பம் இல்லாத நிலையும் துன்பமும் ஒன்றல்ல. எனவே, ஒரே பொருள் இருவேறு வகைப்பட்ட — இன்ப துன்ப வகைப்பட்ட அனுபவங்களைத் தருகிறது என்று கூறி, இரண்டும் இணைந்தவைகளே என்று விளக்கம் தருகிறது உளவழி இன்பியற் கொள்கை.

மனிதன் இயல்பாகவே இன்பத்தை நோக்கி ஓடுகிறான் என்ற அடிப்படையில் எழுப்பப்பெறும் இக்கொள்கை சில கடுமையான எதிர்க் கேள்விகளுக்கு இலக்காகின்றது.

(1) உளவழி இயலான இன்பியற் கொள்கையினர் கூறும் கொள்கை விளக்கம் அளவையியற் போலியை அடிப்படையாகக் கொண்டது. குதிரை முன்னே நிற்க அதன்பின் வண்டியைக் கொண்டு வந்து நிறுத்துதல் என்பது இயல்பு. ஆனால் வண்டியை முன்னேயும் குதிரையைப் பின்னேயும் கொண்டுவந்து நிறுத்தினால் அது இயற்கை நியதிக்கு முரண் என்று குறிப்பிடும். 'Hysteron proteron' என்பது அளவையியற் போலியின் பெயர் இதன் விளக்கம் Put the cart before the horse. ஆசை எழுவது முதல் நிலை. ஆசையின் அடிப்படையில் பொருளை அடைகிறோம். பொருளை அடைந்தபின் ஆசை நிறைவு பெறுகிறது; பின்னர் இன்பம் வருகிறது. எனவே, ஆசை பொருளின் மேல் அமை கிறது. பொருளை அடைந்தபின் மனநிறைவு வருகிறது. அதன் பின்னரேயே இன்பம். இந்த அமைப்புதான் முறையானது. ஆனால் உளவழி இன்பியற் கொள்கையானது, இன்பம் தருகின்ற காரணத்தால்தான் நாம் பொருளை ஆசைப்படுகிறோம் என்று கூறுவது குதிரைக்கு முன் வண்டியை நிறுத்தியது போன்ற இயல்புக்கு முரணான ஒன்று.

(2) இன்பம் என்ற ஒன்று இல்லாமலேயே பல ஆசைகள் நிறைவுபடுகின்றன, பிறர் மீது இரக்கங் கொள்ளுகிறோம். எந்த ஒரு மனிதனும் இன்பம் தருகிறது என்று அந்த இன்பத்தை அனுப வித்த பிறகு இரக்கவுணர்ச்சி தேவை என்று யாரும் ஆசைக் கொள்வதில்லை.

(3) 'கம்பனின் நகைச்சுவை' என்று ஒரு நூல் வெளியா கிறது. அதை எடுத்துப் பிரித்துப் பார்த்த ஒருவன் அங்கே என்ன காண்பான்? கம்பனின் பாக்கள் சில இருக்கும். அவை களைப் படித்தபின் நகைச்சுவையை நாம் அனுபவிக்க முடியும். புத்தகத்தின் பெயர் 'நகைச்சுவை'. ஆகையால் நகைச்சுவை தானே இருக்க வேண்டும். அதற்குப் பதிலாகப் பாட்டுகள் அல்லவா இருக்கின்றன என்று ஒருவன் கேட்பானேயானால், அவ னுக்கு நாம் என்ன விளக்கம் கூறலாம்? நகைச்சுவை என்பது ஒரு வகை அனுபவம். அது காட்டவோ கையில் எடுத்துக் கொடுக்கவோ இயலாத நுண்மைப் பொருள். அதனை ஒரு பொருள் மூலமாகத்தான் கொடுக்கவோ, காட்டவோ, துய்க்கவோ இயலும். நகைச்சுவை அமைந்திருக்கும் பருப்பொருளைப் பெற்று, பின்னரே நுட்பப் பொருளைத் துய்க்க முடியும் என்று விளக்கம் சொல்ல வேண்டும். அவ்வாறே, மனிதன் இன்பத்தையே விரும்பு கிறான்; இன்பம் காரணமாகத்தான் பொருளை விரும்புகிறான் என்பது முறையன்று. பொருளோடு இணைந்து வருகின்ற

காரணத்தால், சில இடங்களில் பொருளைக் குறிப்பிடாமல் அது தரும் பயனைக் குறிப்பிடும் வழக்கம் அமைகிறதேயன்றி, முதலில் ஆசையடைவதும் அடைய முற்படுவதும் பொருளையே, பின்னரே இன்பம் நம்மை அடைகிறது என்று கொள்ள வேண்டும். இன்பம் என்பது இருவகைப் பொருளில் எடுத்தாளப் பெறுவதால் இத்தகைய குறை உண்டாகிறது.

இன்பத்தை அடையத் தூண்டும் இயல்பூக்கம். இது எல்லை கடக்குமானால், இயல்பூக்கம் தன்னுடைய குறிக்கோளில் தோற்றுவிட்டது என்பது ஒருவகை விமரிசனம். நாம் இன்பத்தை அடைய அடிப்படையாகக் கொண்டு பொருளை விரும்புகிறோம். இன்பத்தையே எண்ணிக் கொண்டிருந்தால் இன்பத்தை அடைய முடியாது. ஒரு பொருளைத் துய்த்து, அத்துய்ப்பினால் இன்பம் பெறுதல் என்பது முறை. இன்பத்தையே எண்ணிக் கொண்டு, துய்க்க முற்படுவானாயின், இன்பம் பெற முடியாது. இன்பத்தில் கவனம் செலுத்தாமல் துய்ப்பில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டால்தான் துய்ப்புக்குப் பின் வரும் இன்பத்தை நன்கு துய்க்க முடியும். நாம் நாடகம் பார்ப்பதன் மூலம் இன்பம் பெற நினைத்தால், நம்முடைய மனத்தை நாடகத்தில் பதித்துவிட வேண்டும். இன்பத்தில் நம்மனத்தைப் பதித்தால் நாடகம் பார்க்க இயலாது. நாடக வழிப்பட்ட இன்பத்தை அனுபவிக்க முடியாது. இதனை இன்பியல் முரண் (paradox of hedonism) என்பர்.

(4) (ஆ) அறவழி இன்பியற் கொள்கை

இன்ப உணர்வு என்ற ஒரே ஒரு கருத்தை அடிப்படையாகக் கொண்டே ஒரு செயலை அல்லது ஓர் அனுபவத்தை, நன்மையுடையது என்றோ பயனுடையது என்றோ கூறலாம் என்பது தான் அறவழி இன்பியற் கொள்கையின் கருத்து.

மனிதர்கள் இயல்பாகவே இன்பத்தை விழைகிறார்கள் என்று கூறப்பெறும் தீர்ப்புரை அற இயல் தீர்ப்புரையாகாது. ஏனெனில் அது ஓர் உண்மைச் செய்தியை உள்ளீடாகக்கொண்டது (fact). மனிதர்களிடத்தில் இன்றும் இவ்வுண்மையைப் பரிசோதித்துக் காணலாம் என்னும் பொருள்பட வருகின்றதே தீர்ப்புரை. இனி, அற வழி இன்பியற் கொள்கையினர் அதனை அற இயலான தீர்ப்புரையாக ஆக்குவர். அப்போது அவர்கள் 'நாம் இன்பத்தைத் தேடி அடையவே வேண்டும் (we ought to seek pleasure). ஏனெனில், அதுவே நம் வாழ்வின் முடிநிலைக்

- இன்பியற் கொள்கை
  Hedonism
  - உளவழி இன்பியற் கொள்கை
    Psychological Hedonism
  - அறவழி இன்பியற் கொள்கை
    Ethical Hedonism
    - தன்னல அறவழி இன்பியற்கொள்கை
      Egoistic Ethical Hedonism
      - அறிவியல் இணையாத தன்னல அறவழி இன்பியற் கொள்கை
        Gross Egoistic Ethical Hedonism
      - அறிவியலொடுபட்ட தன்னல அறவழி இன்பியற் கொள்கை
        Refined Egoistic Ethical Hedonism
    - பிறர்நல அறவழி இன்பியற் கொள்கை
      Altruistic Ethical Hedonism
      - அளவு அடிப்படையிலான பிறர்நல அறவழி இன்பியற் கொள்கை
        அல்லது
        அளவு அடிப்படையிலான பயன்முதற் கொள்கை
        Gross
        Quantitative Utilitarianism
        (Bentham)
      - பண்பு அடிப்படையிலான பிறர்நல அறவழி இன்பியற் கொள்கை
        அல்லது
        பண்பு அடிப்படையிலான பயன்முதற் கொள்கை
        Refined
        Qualitative Utilitarianism
        (J. S. Mill)

குறிக்கோள்' என மாற்றுவர். வேறு சிலர் அறவழி இன்பியற் கொள்கையை, நம்முடைய ஆசைகளுக்கு இன்பம் என்பதுதான் அறிவியலாய்வுக்கு ஏற்றதாக அமைந்த அடையும் பொருளாக உள்ளது என்று எடுத்துக் காட்டி, இன்பம் அறிவியல் அடிப்படையில், அடையக்கூடிய குறிக்கோளாக அமைத்துக் கொள்ளலாம் என வரையறுப்பார்கள்.

மேலும், இன்பம் என்பதை வாழ்வியற் பயன் என்று கொள்ளக்கூடிய தகுதி அதற்கு இல்லை என்ற பலரும் எண்ணுகிறார்கள். அறிவு, அழகு, ஒழுக்கம் ஆகியவைகளெல்லாம் இருக்கும்போது, அவைகளைவிட மிகமிகத் தாழ்ந்த இன்பத்தை வாழ்வியற் குறிக்கோளாக ஏற்றுக் கொள்வதற்குப் பலரும் ஒப்பவில்லை.

[வேறு ஒரு விளக்கத்தையும் இங்கேயே அமைத்துக் கொள்ள வேண்டும். இன்பியற் கொள்கையினர் Pleasure என்ற சொல்லையே பயன்படுத்துகின்றனர். Pleasure என்பதற்கு மொழி பெயர்ப்புச் சொல் இன்பம் என்பதே. Happiness என்ற சொல்லை ஒருசிலர் பயன்படுத்த முயலுவர். Happiness என்பது விரிந்த பொருளுடையது. ஒற்றை ஆசையின் நிறைவு காரணமாக வருவது Pleasure—இன்பம். பல ஆசைகள் இணைந்து ஒழுங்கு பெற அமைந்து, அவைகளின் நிறைவு என்ற வகையில் வருவது Happiness. எனவே, Hedonism என்ற கொள்கையைப் பற்றித் தெரிந்து கொள்ளும்போது ஆங்கிலத்தில் Pleasure என்பதும் தமிழில் இன்பம் என்பதும் மட்டுமே கொள்ளத்தக்கவை. 'மகிழ்வு' என்ற சொல்லை இங்கே உபயோகிக்கக் கூடாது.]

(4) (இ) அறிவியலிணையாத, தன்னல அறவழி இன்பியற் கொள்கை

(1) அரிஸ்டிப்பஸ் (500 B.C.): இவர், புலனின்பக் கொள்கையுடைய ஸொபிஸ்ட் ஆவார். இவரே சிரினய்க் கொள்கையை (cyrenaic school) நிறுவியவர். சாக்ரடீஸ் அவர்களிடம் வந்து சேருவதற்கு முன்னர், அவர் உள இயலான இன்பியற் கொள்கையினராக இருந்தார்.

எல்லா இன்பங்களும் வகைகளில், பண்புகளில் வேறுபட்டவைகளல்ல. ஆழ்ந்த அனுபவ நிலை, மேலாய அனுபவநிலை என்ற அந்த ஒருவகையில்தான் வேறுபடும். உடலின்பம் முதன்மைப் படுத்தக் கூடியது. ஏனெனில், உடலின்பம் உயிரின்பத்தைவிட

ஆழ்ந்த தன்மை உடையது. அவ்வாறே எதிர்கால இன்பத்துக்காக நிகழ்கால இன்பத்தைத் தியாகம் செய்வது அறிவுடைமை அன்று. இறந்தகாலம் கடந்துவிட்ட ஒன்று. அது இனித் திரும்பி வராது. எதிர்காலம் உறுதியற்றது; ஐயத்துக்கிடமானது. நிகழ்காலம், அக்காலத்தே அமைந்த இன்பம் என்பன உறுதியானவை. மிகவும் ஆழ்ந்த நிலையுடைய இந்த இன்பத்தை விட்டுவிட்டு மற்ற வற்றிற்காக ஓடுதல் கூடாது. ஆகையினால், நிகழ்காலமாகிய இப்பொழுது உம்முன் அமைந்திருக்கின்ற புலன்வழியியலான இன்பங்களுக்கு, கட்டுப்பாடுகளை விதித்துக் கொள்ளாமலேயே (நிபந்தனையற்ற) உன்னை ஈடுபடுத்திவிடுதல் என்பதே வாழ்விய லான உண்மை அறம்.

மேலே கூறப்பெற்ற கொள்கை விளக்கத்தோடு அனை வரையும் நெறிப்படுத்தி வந்த அரிஸ்டிப்பஸ், சாக்ரடீஸ் அவர் களிடம் சேர்ந்து, அவருடைய அறிவுரையை ஏற்றுக்கொண்ட பிறகு தம் கொள்கையை மாற்றிக்கொண்டு கீழ்க்காணுமாறு விளக்கம் செய்தார்.

முதன்முதலாக, அவர் புலனின்ப வழியிலான அனுபவங்களில் நாட்டம் கொள்ளுதலிலும், அறிவொடுபடாத இயல்பூக்கங்களின் வழியே மிக்கெழும் ஆசைகளை அமைதியாக்க முயல்வதிலும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் அனுமதியளிக்காமல், அத்தகைய இன்ப நாட்ட அனுபவங்களைக் குறைக்கவேண்டும் என்று கூறினார். உடலியலான இன்பத்தைவிட, மன இயலான இன்பம் எனப்பெறும் நட்பு, அன்பு முதலியவை உயர்ந்தவை என்று ஏற்றார். இவைகளும் இவைபோன்றனவாகிய கலை-இலக்கிய இன்பங்களும் விரைந்து மாறிக் கொண்டேயிருக்கும் புலன் வழி இன்பங்களைவிட உயர்ந்தவை என்றார். அற இயல் நன்மையை உள்ளீடாகக் கொண்ட நிலைத்த தன்மையுடைய சில அனுபவ நெறிகள் மாறிக்கொண்டேயிருக்கும் புலனின்பங் களைவிட, முன்னவையாக ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டிய வைகளே. இவ்வாறு சில புதிய விளக்கங்களை அமைத்து, தமக்குப் பின் எபிகூரஸ் இக்கொள்கையை ஏற்று நடத்தக்கூடிய வாய்ப்பினை உண்டாக்கினார்.

அரிஸ்டிப்பஸ் மாற்றத்தால் சிரினய்க் கொள்கையினர் இரு பிரிவாயினர்.

மாறுபடுகின்ற ஆனால் நிகழ்காலத்தில் அமைந்த உடலின்பமே வாழ்வின் உயர்ந்த நன்மை என்று அமைத்து வாழ்ந

தார்கள் ஒருபிரிவினர். ஏனைய பிரிவினர் நிலையான இன்பமே (happiness) வாழ்வின் உயர்ந்த நன்மை என்று நடைமுறைப் படுத்தினார்கள்.

(2) தாமஸ் ஹாப்ஸ் (Thomas Hobbes, 1588—1679): தாமஸ் ஹாப்ஸ் என்பாருடைய கொள்கையானது பிற்காலத்தே அற இயலான தற்சார்புக் கொள்கை (ethical subjectivism) என்ற பெயரைப் பெற்றது.

ஹாப்ஸ் என்பார் உயிர் என ஒரு தனிப்பொருளைக் கொள்ளா தவர். உயிர் என்பது வெற்று மூளைச் செயலே. அது ஆசைகள், உணர்ச்சிகள், இயல்பூக்கங்கள் போன்றவைகளால் ஆளப்பெறு கிறது. அதற்கு இயற்றிநிலையின் கட்டற்ற தன்மை என்ற ஒன்று இல்லை. அது எப்போதும் தேவையின் சட்டங்களுக்கு உட்பட்டதே.

தனக்கு மகிழ்வைத் தருபவைகளை விரும்புவதும் துன்பத்தைத் தருபவைகளை வெறுப்பதும் மனிதன் செயல்.

இன்பத்தை விரும்புவதும், துன்பத்தை வெறுப்பதும் மனித னுடைய இரண்டு அடிப்படை உள்நோக்கங்கள். மனிதன் முழு மையான தன்னலமானவனே. இரக்கம், அறச்செயல் விருப்பம், பரிவு ஆகியவை பிறர்நலம் பேணும் பண்புகள் எனினும், அப் போர்வையில் மறைந்திருப்பது தன்னைத்தான் விரும்பும் தன்னலமே. மனிதன் தன்னுடைய இன்ப விருப்பத்தைவிட, பிறர் மேல் தன்னுடைய அதிகாரத்தைச் செலுத்தவே விரும்புகிறான். நாட்டின் அரசு அமைத்த சட்டத்தின் மூலம் மனிதனுடைய தன்னல இயல்பூக்கங்களைக் கட்டுப்படுத்தி, நெறிப்படுத்தி, சமுதாய வாழ்வுக்கு உரியதாக மாற்றப் பெறவேண்டும். ஹாப்ஸ் என்பாரைப் பொறுத்தவரையில் தனிமனிதனுடைய இன்பம், அவன் பிறர்மேல் செலுத்தும் அதிகார ஆற்றல் என்ற இரண்டுமே மனிதனுடைய வாழ்வியல் உயர்நிலைத் தன்மை வாய்ந்த குறிக்கோள்கள் என்று முடிவு செய்தார்.

(3) மாண்டவில்லி (Mandeville, 1670—1771): மாண்டவில்லி என் பவரும் ஹெல்விட்டஸ் (1715—1771) என்பவரும் ஹாப்ஸ் என் பாரைப் போலவே தன்னலமே மனிதனின் சரியானதாகிய முழுமை யாகிய உள்நோக்கம். அதுவே அவன் செயலுக்குரியதாகிறது. தன்னைத்தான் நேசித்தல் (self-love) என்ற ஒன்றுதான் மனித அறம். அன்பும் பகையும் தன்னைத்தான் நேசித்தல் (self-love) என்பதன் இரு மாற்றங்கள்.

ஹெல்விட்டஸ், தன்னைத்தான் நேசித்தல் என்பதை அடிப் படையாகக் கொண்டு எழுந்தவைகளே அன்பும் நட்பும் என்று கொண்டார். தனிமனிதனின் தனி இன்பமே வாழ்வில் உயர்ந்த நன்மை. இன்பம் என்பது உடலியல்பான இன்பங்களிலேயே மிகப்பெரும் அளவைக் கொண்டது.

(4) (ஈ) அறிவியலான தன்னல அறவழி இன்பியற் கொள்கை

எபிகூரஸ் (Epicurus, 341—270 B.C.) என்பார் அறவாழ்வில் அறிவே முக்கிய இடம் வகிக்கிறது என்றார். உண்மையான இன்பத்தை அடைவதற்குரிய சரியான வழிகாட்டி அறிவு ஒன்று தான். மாறிக்கொண்டேயிருக்கும் உடலின்பம் வாழ்வின் உயர்ந்த நன்மை அன்று. வாழ்வு முழுவதையும் இணைய அமைத் ததுவே இன்பம். கால அளவு, ஆழ்ந்து செல்லல் என்ற இரண்டா லும் இன்பம் வேறுபடுகின்றது. அறிவு என்பது ஆசைக்குரிய பணிப்பெண்தான் எனினும் அதுவே வாழ்வின் பல கூறுகளை நாம் உணர்ந்து தெளிவதற்கு உரிய கருவியாக அமைகிறது. புலன் சார் அனுபவம் வாழ்வின் முடிவுநிலையை வரையறை செய்கிறது. அறிவின் மூலமாகத்தான் துன்பத்தை எவ்வாறு நீக்க முடியும் என்பதைத் தெரிந்து கொள்கிறோம்.

எபிகூரியர்கள் கருத்தில், இன்பம் என்பது உடலிலிருந்து வரும் துன்பம் இல்லாததும் உயிரிலிருந்து வரும் அமைதியின்மை இல்லாததும் ஆகும். எனவே இன்பம் என்பது துன்பத்தின் எதிர் நிலை. இன்பம், துன்பம் ஆகியவைகளில் ஈடுபாடற்ற மன நிலை யையும், எதிர்காலத்து எதிர்பாராமைகளினால் கலக்கப் பெறு தல் இல்லாத வகையில் உயிர் அமைந்திருப்பதற்குத் தேவையான அசைவற்ற மன நிலையையும் அமைத்துக் கொள்ள வேண்டிய பயிற்சியை ஒருவன் பெற வேண்டும். வாழ்வின் முடிவுநிலை என்பது பெரிதும் உடன்பாட்டுத் தன்மை உடையதாக இராது. எதிர்மறைத் தன்மையில் அமைந்த அமைப்பினை உடைய தாகவே இருக்கும்.

செயலறிவு நுட்பம், நடுவு நிலைமை, இடுக்கண் அழியாமை என்ற மூன்று அறங்களையும் உயர் அறங்களாக மதித்து வாழ்ந் தவர்கள்.

(4) (உ) அளவு அடிப்படையிலான பிறர்நல அறவழி இன்பியற் கொள்கை அல்லது அளவு அடிப்படையிலான பயன்முதற் கொள்கை

முன்னுரை

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த உள்ளுணர்வுக் கொள்கையினர்களாகிய பட்லர், ஹட்சீஸன் என்பவர்கள் அற

வாழ்வை விளக்கம் செய்யும்போது, மிகப் பெரும்பாலான மக்களுக்குக் கிடைக்கும் மிக அதிக மகிழ்வே நன்னடத்தையின் குறிக்கோளாகும் என்று கூறினார்கள். அந்தத் தொடரே மிகப் பெரும்பாலானோருக்குக் கிடைக்கும் மிக அதிக மகிழ்வு (The greatest happiness for the greatest number) என வடிவம் கொடுக்கப்பெற்று, பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதற்பகுதியில் ஆங்கிலேயப் பயன்முதற் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடாக அமைந்து தழைத்தோங்கியது என்று சொல்லலாம். இக்கொள்கையை எடுத்து விளக்கிய பெருந் தலைவர்கள் இருவர்.

ஜெர்மி பெந்தம் (Jermy Bentham, 1748—1832) என்பவரும் ஜேம்ஸ் மில் என்பவரின் மகனாராகிய ஜான் ஸ்டுவர்ட் மில் (John Stewart Mill, 1806—1873) என்பவரும் ஆவர். இருவரும் பிறர்நலக் கொள்கை (altruism) என்ற சொல்லை உபயோகப் படுத்தாமல் பயன்முதற் கொள்கை (utilitarianism) என்ற சொல்லை உபயோகித்தார்கள். இன்பியற் கொள்கைக்கேயுரிய இன்பம், மகிழ்வு என்னும் சொற்களை எடுத்தாளாமல், இன்பத்தைப்பற்றி அதிகமாக வலியுறுத்தாமல், பயனை வலியுறுத்துவதே இக்கொள்கையின் நோக்கம் என்ற வகையில் Utility- பயன் — Usefulness என்ற சொல்லை இணைக்கவும் வலியுறுத்தவும் செய்தார்கள். மனித இனமெல்லாம் அடையத் தகுந்த மிக அதிக இன்பமான ஒன்றை அதிகமாக வலியுறுத் தாமல் பிறருக்குப் பயன்தரும் வகையில் நடப்பது நம் அறிவுக்குப் பொருத்தமாய் அமையும் என எண்ணியே பயன்முதற் கொள்கை என்ற தொடரை அமைத்தார்கள். இவர்களே மனித இனத்தின் நன்மைக்காகச் சேவை செய்யும் சமுக சீர்திருத்தக்காரர்கள் என்ற வகையில் இத்தொடர் இவர்களை ஏனைய அறஇயல் கொள்கையுடையவர்களுக்கெல்லாம் அறிமுகம் செய்து வைக்கும் தொடராகவே அமைந்தது.

பெந்தம், J.S. மில் என்ற இருவரும் பயன்முதற் கொள்கை என்றஒருகொள்கையை அறஇயற் கொள்கையாக வழங்கினாலும், இருவரும் அக்கொள்கையில் வேறு வேறு பிரிந்தே நின்றார்கள். பெந்தம் என்பாரின் கொள்கை, அளவு முறையைக் கொண்டதாகவும், J.S. மில் என்பாரின் கொள்கை பண்பு முறையைக் கொண்டதாகவும் அமைந்தது.

இன்பியற் கொள்கை என்பது பொதுவாகவே விரும்பியோ விரும்பாமலோ வெறுக்கத்தகும் ஒரு கொள்கையைப்போல

மதிக்கப்பெற்று வந்த நிலைமை மாறி, பயன்முதற் கொள்கை என அனைவர் உள்ளத்திலும் வரவேற்கும் தகுதியை அது பெற்றமைக்கு உரிய பெருந்தலைவர்களாக விளங்கியவர்களே இருவரும். இவ்விருவரும் வகுத்தமைத்த கொள்கையை முறையே காணலாம்.

வேறு ஒரு குறிப்பையும் இங்கே காணுதல் வேண்டும். Hedonism இன்ப இயற் கொள்கை எனப் பெற்றது. இன்பம் என்பதற்குரிய ஆங்கிலச் சொல்லாக Pleasure என்ற சொல் அமைந்தது. ஆனால் பயன்முதற் கொள்கையின் ஆசிரியர்களாகிய இந்த இருவரும் Pleasure என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் Happiness — மிகு இன்பம் என்ற சொல்லையே பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதையும் அறிதல் வேண்டும்.

பெந்தம் என்பாரின் கொள்கை

பிறர் நலத்தை உள்ளிட்ட இன்பியற் கொள்கை (altruistic hedonism) என்றாலும் பயன்முதற் கொள்கை (utilitarianism) என்றாலும் ஒன்றே. மிகப் பெரும்பாலானோர்களுக்குக் கிடைக்கும் மிக அதிக இன்பம் என்பதை அற இயல் குறிக்கோளாக அமைத்துக் கொண்டது இக்கொள்கை. இக்கொள்கைக்கு Utilitarianism— பயன்முதற் கொள்கை என்ற பெயர் அமைத்தது ஏன் என்றால் மக்களின் பொதுமை இன்பத்தை உயர்த்தவும் பொதுமைத் துன்பத்தைத் தடுக்கவும் ஆகிய பணிகளில் எல்லாச் செயல்களும் தம்மைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் தாம் சிறந்த வழியாக — கருவியாக நிற்கும் முறையை ஆராய்கிற கொள்கை என விளக்கம் அமைந்தமையே காரணம்.

இன்பியற் கொள்கையை விளக்குதல்

மனிதர்கள் இன்பத்தை விரும்புகிறார்கள்; துன்பத்தை வெறுக்கிறார்கள் என்று கூறினால் அது அறக் கொள்கையாகவே அமையாது. முதலில் இன்பியற் கொள்கையை ஒரு வகை அறக் கொள்கையாக அமைத்தல் தேவையாகிறது. இன்பியற் கொள்கையை வெற்றுச் சுவை உணர்ச்சிக் கொள்கையாக நிறுத்தாமல் அதனை அறிவுடன் இணைத்து, ஆயினும் இன்பியலுக்கு எத்தகைய தகுதிக் குறைவும் நேராதவாறு அமைக்கும் பணியை முதன் முதல் மேற்கொண்டவர் எபிகூரஸ். அவர் இன்பங்களில் வேறுபாடு உண்டு. அவைகள் ஆழ்ந்து தாக்கும் நிலை (intensity — இதற்குத் தீவிர உணர்வு என்றும் மொழி பெயர்ப்பு உண்டு), இன்பவுணர்வு நம்மிடம் நிலவும் கால அளவு (duration) ஆகிய இரண்டையும் எபிகூரஸ் அவர்களே எடுத்துக்

காட்டியுள்ளார்கள். இன்பங்களில் வேறுபாடு உண்டு என்று அமைத்த அமைப்பே அது ஓர் அறவழிக் கொள்கையாக ஆவதற்கு வழிவகுத்தது என்று கொள்ளவேண்டும்.

இன்பியற் கொள்கைக்கு விளக்கம் கூறப்புகுந்த பெந்தம் அவர்கள், இயற்கையானது மனிதனை இன்பம், துன்பம் என்ற இரண்டன் ஆட்சியின்கீழ் அமைத்திருக்கிறது. ஆகையால், மனிதன் எந்த ஒன்றையும் இன்ப துன்ப அடிப்படையிலேயே செய்ய வேண்டியவனாகிறான். இத்தகைய அடிப்படையிலேயே வளரும் மனிதன் பயன்படுதல் (utility) என்ற ஒன்றை எண்ண முற்படும்போதும் இன்பம், துன்பம் என்ற இரண்டு அடிப்படை உள்நோக்கங்களை அடிப்படையாக வைத்துத்தான் சிந்திக்க வேண்டியிருக்கிறது என்று குறிப்பிடுகிறார். இன்பம், துன்பம் என்ற இரண்டு தலைவர்களுக்கு உட்பட்டு நின்று, அவைகளுக் காகவே அவைகளுக்குள்ளேயே நாம் என்ன செய்தாக வேண்டும் என்பதை முடிவு செய்து வெளிப்படுத்த வேண்டிய கட்டுப்பாட்டில் இருக்கிறோம். இவை இரண்டற்கும் மாறாக வேறு எந்த ஒன்றையும் அடிப்படையாகக் கொண்டு செய்ய இயற்கை நம்மை அனுமதிக்கவில்லை என்று குறிப்பிடுகிறார். நாம் என்ன செய்தாக வேண்டும் என்று முடிவு செய்தேயாக வேண்டும் என்ற நிலை வரும் போது, எல்லாரும் இன்பத்தை மட்டுமே விரும்பிச் செயல் படுகிறார்கள் ஆகையால் நாமும் இன்பத்தை விரும்புதல் என்ற ஒன்றைச் செய்தேயாக வேண்டும் என்ற முடிவை மேற்கொள்ள வேண்டிய இன்றியமையாமை உண்டாகிவிட்டது என்று குறிப் பிடுகிறார்.

இன்பியற் கொள்கையினரின் அளவு முறை (Hedonistic Calculus)

இன்பம், துன்பம் என்ற இரண்டும் அனுபவ நிலையில் வைத்து உணரப் பெறுவன ஆயினும் அவைகளை அளந்து கணக்கிட முடியும்என்பதை எபிகூரஸ் முன்மொழிந்தார். பெந்தம் என்பாரும் மில் என்பாரும் அத்தகைய அளவை முறைகளைச் செயற்படுத்திக் காட்டினார்கள் என்று சொல்லலாம். பெந்தம், மில் ஆகிய இருவருக்கும் அமைந்த கொள்கை வேறுபாடு இந்த அளவை முறையில் அமைந்ததுதான். பெந்தம் என்பார் இன்பத்தை அல்லது துன்பத்தை 'அளவு' (quantity) என்ற அடிப்படையில் கணக்கிட முடியும் என்று கொண்டார். ஆனால் மில் அவர்கள் 'தன்மை' (quality) என்ற அடிப்படையில் கணக்கிட முடியும் என்று அமைத்துக் காட்டினார்.

பெந்தம் என்பார் ஏழு வகை அடிப்படைகளை வைத்து கணக்கிடலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

(1) ஆழ்ந்து தாக்கும் நிலை (Intensity) : இன்பம் அல்லது துன்பம் ஒருவனுடைய அனுபவத்தின் வழியே செல்லும்போது அவனை மிகமிக ஆழமாகச் சென்று தாக்குவது உண்டு. சில இன்ப அல்லது துன்ப அனுபவங்கள் உள்ளத்தில் பதிந்துள்ளன; என்றும் நினைவை அமைக்கக்கூடியவைகளாக உள்ளன. சில அனுபவங்கள் அவ்வளவாக உள் சென்று தாக்குவனவாக அமைவதில்லை.

(2) கால அளவு (Duration): இன்ப உணர்வு அனுபவமாக நீட்டிக்கும் நேர அளவு. நீண்ட நேர அளவைக் கொள்ளும் இன்பம் விரும்புவதற்குரியது ஆகும்.

(3) உறுதி (Certainty): ஒரு செயலிலிருந்து உறுதியாக இன்பம் கிடைக்கும் என்பதாக அமையும் இன்ப உணர்வு நிலைகள்.

(4) அண்மை (Proximity): அண்மையாதல் என்ற செயலே இன்பம் மிகுதற்கு உரியதாகும். எளிமை என்ற பொருளிலும் இதனைக் கொள்ளலாம்.

(5) கலப்பற்ற தன்மை: துன்பம் கலவாத இன்பம்; இன்பம் கலவாத துன்பம் என்று விளக்குவார். இதனை வேறு வகையிலும் கொள்ளலாம். சில துன்பங்கள் நூற்றுக்கு நூறு அவ்வனுபவத்தைக் கொடுத்தேவிடும். ஆனால் வேறு சில இன்பங்கள் அல்லது துன்பங்கள் அறுபது அல்லது எழுபது விழுக்காடு அளவுக்குத்தான் அனுபவப்பட்டு நிற்கும். நூற்றுக்கு நூறு அனுபவப்படுவதுதான் கலப்பற்ற தன்மை.

(6) பல இன்பங்களைத் தோற்றுவிக்கும் தன்மை (Fecundity): ஓர் இன்ப உணர்வு அனுபவ நிலைக்கு வந்தபோது வேறு வேறு பல இன்ப உணர்வுகளைத் தோற்றுவிக்கும் தன்மை உடையதாக இருப்பது.

(7) பரப்பு (Extent): இந்த இன்பம் எவ்வளவு மக்களால் அனுபவிக்கப்பெற்றது. குறைந்த தொகை மக்களால் அனுபவிக்கப்பெற்ற இன்பம் அல்லது துன்பம் என்றும், நிறைந்த தொகை மக்களால் அனுபவிக்கப்பெறும் இன்பம் அல்லது துன்பம் என்றும் அமைவது.

பரப்பு என்று சொல்லப்பெற்ற இவ்வகைதான் பயன்முதற் கொள்கைக்கு மிகவும் துணையாக அமைந்த அளவை முறை.

பெந்தம் அவர்கள் இவ்வாறு இன்ப, துன்ப அனுபவ நிலைகளை அளந்து வரையறை செய்யலாம் என்றும் அதற்குரிய அளவை முறைகளையும் அமைத்துக் கொடுத்தபின் இன்பியற் கொள்கை பற்றிய விளக்கம் கீழ்க்கண்டவாறு அமையலாயிற்று.

மனிதன் இன்பத்தையே நாடுகிறான் என்பது அற இயல் விளக்கம் அன்று. மனிதன் இன்பம் தரும் செயல்களைச் செய்தே யாக வேண்டும். ஏனெனில், வாழ்வின் குறிக்கோள் இன்பம் பெறுதலே என்பது அற இயல் அமைப்புடன் அமைந்த விளக்கம். இவ்விரண்டு விளக்கங்களும் மாறாக, இன்பங்களுள் அழுத்தமானவைகளாக, நீண்டநேரம் தொடர்ந்து அமைவன வாக இருக்கும் இன்பத்தை அடைதலே மனித வாழ்வின் குறிக்கோள் எனக் கொண்டு, அத்தகைய இன்பத்தை அமைத்துத் தரக்கூடிய செயல்களையே மேற்கொள்ள வேண்டும். அத்தகைய செயல்களே அறச் செயல்கள் ஆகும் என்று அமைத்துக்கொள்ளும் போது இன்பியற் கொள்கைக்கு அற இயல் தகுதிவாய்ந்த ஒரு விளக்கம் தரக்கூடிய வலிமையைப் பெற்றது என்பதாகும்.

இனி, பயன்முதற் கொள்கையினர் அமைத்துத் தரும் விளக்கமாக அமைத்துக் கொள்ளும்போது, மற்றை எல்லா நிலைகளையும்விட, துன்பமே கலவாத இன்ப நிலையே உயர்ந்த வாழ்வியல் நிலை எனக் கொண்டு, அத்தகைய இன்பத்தை உண்டாக்கக்கூடிய செயல்களையே மேற்கொள்ள வேண்டும் என்பது தன்னல அற இயல் இன்பக் கொள்கையின் விளக்கமாக அமையும். பின்னர், எல்லா மனிதர்களுடைய ஏன், இன்ப துன்பங்களை அனுபவிக்கவல்ல எல்லா உயிர்களினுடைய, மிகுதியான அளவுடைய இன்பத்தை வாழ்வியல் குறிக்கோளாக அமைத்துக்கொண்டு, அவைகளை அளிக்கக்கூடிய செயல்களே 'அறச் செயல்' என்பதாக அமைத்துக்கொள்ள வேண்டும் என்பது பயன்முதற் கொள்கையினர் அமைத்துத் தரும் விளக்கம்.

பெந்தம் அவர்களின் அளவீட்டு முறையின் விளைவு

இன்ப துன்பங்களையோ அவைகளை விளைவிக்கும் செயல்களையோ மதிப்பீடு செய்யும்போது இருவகை முறைகள் அமைந்துள்ளன.

(1) ஒரு செயல் இன்பத்தையும் விளைவிக்கும், துன்பத்தையும் விளைவிக்கும். இரண்டையும் தனித்தனியே கணக்கெடுத்து, அவைகளில் இன்பம் அதிகமாக இருக்கும் நிலை ஏற்பட்டால் அத்தகைய நிலையை உண்டாக்கும் செயலையே அற இயலுக்கு

ஒத்த செயலாகக் கொள்ளவேண்டும். இன்பம் தருபவை சரியானவை; துன்பம் தருபவை தவறானவை என அமைப்பது பொதுவிளக்கம். ஆனால், ஒரு செயல் அறுபது விழுக்காடு இன்பத்தையும் நாற்பது விழுக்காடு துன்பத்தையும் அளிக்கும் என்றால் இப்போது சொன்ன அளவின்படி அற இயல் சார்ந்த செயலே எனக் கொள்ளலாம். ஆனால், இச்செயல் அறச் செயலாயின், விளைவு துன்பங்கலந்த இன்பமாகத்தான் இருக்குமேயன்றித் தூய இன்பமாக அமைய முடியாது.

(2) ஒரு செயல் அறச் செயலா என முடிவு செய்ய வேண்டுமாயின், அது துன்பத்தோடு கலவாத தனித்த இன்பத்தைத் தருவதா என்பதையே அடிப்படை விதியாக அமைத்துக் கொண்டு ஆய்வு செய்தல் வேண்டும்.

பெந்தம் அவர்கள் 'கலப்பற்ற' தன்மை என்ற ஒரு கட்டளை விதியால், இன்பம் என்பது துன்பத்தோடு கலவாத ஒன்றே. பெந்தம் அவர்கள் தன்மை, பண்பு என்ற அளவுகோலை வைத்து இன்பத்தை ஆராயவில்லை. அளவுமுறையே (quantity) அவர் மேற்கொண்டது. பெந்தம் அவர்களின் கருத்துப்படி, ஒருவன் துன்பத்தோடு இணையாத, இன்பத்தை மட்டுமே தரவல்ல செயல்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இது முதல் நிலை.

துன்பத்தோடு கலவாத இன்பத்தை மட்டுமே தரவல்ல இரண்டு செயல்களில் எது அதிக அளவு இன்பம் தருகிறதோ அதையே தேர்ந்தெடுக்கவேண்டும். இது இரண்டாம் நிலை.

மூன்றாம் நிலையில், மிகுதியான அல்லது பெரும்பாலான உயிர்களுக்கு இன்பம் விளைவிப்பதில் எது அதிகமானவர்களைச் சென்று அடையக்கூடியதோ அதனைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என அமையும்.

பயன்முதற் கொள்கையை இவ்வாறு விளக்கம் செய்த பிறகு தனிமனிதனின் தனி இன்பம் இக்கொள்கையில் எவ்வாறு அமைகிறது என்ற வினா எழும். தனிமனிதனுக்குத் தன்னை மட்டுமே சார்ந்த தனி இன்பமோ அதற்குரிய தன்னலம் சார்ந்த தனிச் செயலோ இல்லை. அதிக அளவுடையவர்களுக்கு மிக அதிகமான துன்பம் கலவாத இன்பத்தைக் கொடுக்கின்ற அச்செயலில்தான் மனிதன் பெரும்பயன் அடைகிறான். ஆகையினால் தன்னின்ப அனுபவப் பகுதியும் பிறர்நல இன்பச் செயலாலேயே நிறைவு பெற்று விடுகிறது என்பது பெந்தம் அவர்களின் கொள்கை.

தன்னலத்திலிருந்து பிறர்நலமாக மாறுதலுக்கு உதவும் வெளிப்புற ஆணைகள்

தனிமனிதன் தன்னலம் காரணமாகச் செயற்படுதல் இயற்கையே என்பதை இன்பியற் கொள்கையானது பொதுவாக ஏற்றுக்கொள்கிறது. இவ்வகையில் தன்னின்பத்தையே இயற்கைப் பேறு எனக் கொண்டு எந்த ஒரு தனிமனிதனும் செயல்படலாம். அப்படியானால் அவன் அறவியல் வழிக்குத் திரும்புவதுதான் எப்போது?

தன்னலம் பேணி, தன்னின்பத்தைத் துய்த்து வாழும் ஒருவனை இயற்கையே பிறர்நலத்துக்கு மாறச் செய்துவிடும். அதனுடன் வேறு சில வெளிப்புற ஆணைகளும் சேர்ந்து அவனைத் தன்னலத்திலிருந்து பொது நலத்துக்கு மாற்றும். பெந்தம் அவர்கள் நான்குவகையான வெளிப்புற ஆணைகளை எடுத்துக் காட்டுகிறார்.

(1) பருவுடல் சார்ந்த ஆணை அல்லது இயற்கை ஆணை: இயற்கை ஆணை அல்லது தனிமனிதனின் பருவுடல் சார்ந்த ஆணை ஒருவனைத் தன்னலத்தில் அதிகம் ஈடுபட்டுத் துய்ப்பதைத் தடை செய்து அவனைப் பொதுநலம் பேணுபவனாக மாற்றி விடும். இயற்கை விதிகள் தனிமனிதனுடைய உடலில், உடல் நலம் சார்ந்த விதிகளாக வந்து அமைகின்றன. அதிகமான நிலையில் தன்னலத்தைத் துய்க்க முற்படும்போது உடல்நல விதிகள் அவனை எல்லைக்குமேல் அனுபவிக்கவிடாது தடுக்கின்றன. அதை அவன் பொருட்படுத்தாது, தன்னலத்தை அளவுக்கு மீறித் துய்க்க முற்படும்போது, இயற்கை விதியானது அவனைத் துன்பம் என்ற பெயரால் அவன் உடம்பின்மூலம் அவனைத் தாக்குகிறது. அதற்கும்மேல் அவன் தன்னலத்தையே விழைவானாயின், அவன் உடல்நோய்க்கு இடமாகிறது. எனவே, எல்லைக்கு உட்பட்ட அளவிலேயே தன்னலம் துய்க்க வேண்டியிருத்தலின், அவன் இயல்பாகவே பிறர் நலத்தையும் விரும்பி, அதற்காகவும் பணி செய்ய முற்படுகிறான்.

(2) அரசின் ஆணை: தன்னலங் காரணமாகத் தனிமனிதன் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள முயலும்போது தேவைக்கு மேல் பொருள்களைச் சேர்த்தல் முதலாய, அரசியல் சட்டத்துக்கு மாறான செயல்களில் ஈடுபடுகிறான். அப்போது அரசியல் ஆணை அவனுக்கு ஒறுத்தல் விதிக்கிறது. அவ்வாறான துன்ப நிகழ்வுகளால் அரசியல் விதிகள் அனுமதிக்கின்ற எல்லைக் குள்ளாகவே நின்று தன்னலந் துய்க்க வேண்டியவனாகிறான்.

மேலும், தன்னலத்தைத் துறந்து பொதுமைநலம் பேணுகின்றவனைச் சமுக நலஞ் செய்தவன் என்று அரசு ஆணை அவனைப் பாராட்டி, பரிசுகள் அளித்துச் சிறப்பிக்கிறது. எனவே, தன்னலத்தை மனம் போனவாறு அனுபவிக்கவிடாமல் ஒருவகைத் தடை, அதனால் துன்பம்; பொதுநலம் பேண முற்பட்டால் அரசு தரும் பரிசு; அதனால் இன்பம். இவ்விரண்டையும் சிந்திக்கும் அவன் மெல்லத் தன்னலஞ் சார்ந்த செயல்களை ஒதுக்கிவிட்டுப் பொதுநலம் பேண முற்பட்டு விடுகிறான்.

(3) சமுக ஆணை: அரசியல் ஆணை போலவே பணியாற்றுவது சமுக ஆணை. தன்னலங் காரணமாக ஒருவன் செயல் எல்லையை மீறும்போது சமுக இயல் சார்ந்த அறிஞர்கள் அவனுக்குத் தடை விதிக்கிறார்கள்; ஒறுத்தல் விதிக்கிறார்கள். அவ்வாறே பொதுநலம் பேணிச் செயலாற்றுபவனைச் சமுகம் பலர் முன்னிலையில் பலவகைச் சிறப்புச் செய்து பாராட்டுகிறது. எனவே, சமுகம் தன்னைக் கவனிக்கிறது, சமுகம் தன்னைத் தண்டிக்கும் என்பன போன்ற எண்ணங்களால் ஒருவன் தன்னலத்திலிருந்து பொதுநலத்துக்கு இயல்பாகவே திரும்பி விடுகிறான்.

(4) சமய வழிப்பட்ட ஆணை: தன்னலம் பேணுபவனாக ஒருவன் தன்னை அமைத்துக்கொண்டு, பொதுநலம் சிந்திக்காமல் செயல்படும்போது சமயம் அவனுக்குச் சில அறிவுரைகளை அமைத்துக் கூற முற்படுகிறது. நரகம் என்பது ஒன்று உண்டு என்றும் சுவர்க்கம் அல்லது மேலுலகம் என்பது ஒன்று உண்டு என்றும் எடுத்துக்காட்டி, பொதுநலம் பேணியவன் சுவர்க்கம் சென்று அங்கே இன்பம் துய்ப்பான்; அந்த இன்பம் இவ்வுலக இன்பத்தைவிட மிகமிக உயர்ந்தது என்று கூறும்போதும், தன்னலம் காரணமாக, வந்தவனுக்கு ஒன்றும் கொடுக்காமல் தனித்து உண்ணுபவனுக்கு நரகம் வழங்கப்பெறும்; நரகத்தில் அவன் தண்டிக்கப் பெறுவான் என்று கூறும்போதும் ஒருவன் பொதுநலம் செய்பவனாகத் தன்னை மாற்றிக் கொள்ளுகிறான்.

மேலே குறிப்பிடப்பெற்ற நான்கும் அவனுக்குப் புறத்தேயிருந்து அவனைத் தன்னலத்திலிருந்து பொதுநலத்துக்கு மாற்றுகின்றன. நான்கனுள் முதலில் நின்ற இயற்கை ஆணை எனப் பெறும் உடல்நல விதிகள் ஏனையவற்றுக்கு மூலமாக அமைகின்றன. முதல் மூன்றும் இவ்வுலகத்திலேயே, இப்பிறப்பிலேயே அவனுக்குத் தண்டனையை அளித்துவிடுகின்றன. நான்காவதாக அமைந்த சமய வழிப்பட்ட ஆணை அவனுக்கு இவ்வுலகத்தில் தண்டனை அளிப்பதோடு நின்றுவிடாமல் அடுத்த உலகத்திலும்

தண்டனை தருதற்கு உரியதாக நின்று, அவனுடைய உள்ளத்தில் இயற்கையான அச்சத்தைத் தோற்றுவிப்பதகாக அமைகிறது. எனவே, மேலே குறிப்பிடப்பெற்ற நான்கும் ஒருவனைத் தன்னலத்திலிருந்து பொதுநலத்துக்கு மாறுவதற்குத் துணை புரியும் கருவிகளாக அமைகின்றன.

இன்பியற் கொள்கையானது இயற்கை விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. மனிதன் இயல்பாகவே இன்பத்தை நாடுகிறான் என்பது இயற்கை விளக்கம். இதிலிருந்து அறக் கொள்கை ஒன்று உருவாகவேண்டும் எனில் அது அறிஞர்களின் உள்ளத்தை ஈர்ப்பதில்லை. எல்லாரும் இன்பத்தை விரும்புகிறார்கள். ஆகையால் நாம் இன்பத்தை விரும்பியே ஆக வேண்டும் என்று கூறி, இதுதான் அற இயல் இன்பியற் கொள்கை என்பது பொருத்தமுடையதாகத் தெரியவில்லை. இதுதான் இன்பியற் கொள்கை சந்திக்கும் முதல் முரண்பாடு.

இரண்டாவது முரண்பாடு, மனிதன் இயற்கையாக விரும்புவது பொருளையா, பொருள் தரும் இன்பத்தையா. முதலில் பொருளை விரும்புதல் பொருளை அடைந்த பின் இன்பம் பெறுகிறோம். மனிதன் இயல்பாக விரும்புவது பொருளை. அதைக் கூறாமல் மனிதன் இயல்பாக விரும்புவது இன்பத்தை என்று கூறுவது இயற்கைக்கு முரண்.

இவ்விருவகை முரண்பாடுகளையும் பெந்தம் என்பாரின் பயன்முதற் கொள்கை நீக்கவில்லை.

இன்பத்தை அளந்து வரையறைப் படுத்த முடியும் என்பது பெந்தம் அவர்களின் கொள்கை. இன்ப அனுபவம் அகநிலை இயல்பானது. அகநிலையினும் உணர்ச்சி வயமாகத் திகழ்வது. அகத்துறையில் உணர்ச்சி வயமாக அமையும் இன்பத்தை வெளிப்புறக் கருவிகளால் அளந்துநிறுவமுடியும் என்று பெந்தம் அவர்கள் எண்ணுவது நடைமுறைச் செயலமைப்புக்கு ஒத்துவருமா என்பது ஐயப்பாடே. மேலும் இன்ப அனுபவம் அனுபவிக்கின்றவனுடைய சூழ்நிலை, மனஅமைப்பு முதலியவைகளையும் கொண்டு மாறுபடும். இவ்வகையில் இன்பம் தருவதில் முழுமையான இந்த இன்பத்தை இச்செயல் தரும் என ஒரு செயலை முன்கூட்டியே தேர்ந்தெடுத்தல் எப்படி இயலும்? கலப்பற்ற இன்பத்தைத் தந்தமையால் இதுதான் அறச் செயல் என்று ஒன்றைத் தேர்ந்தெடுத்துச் செயலாற்ற முடியாது.

தன்னல இன்பத்தைவிட, பிறருக்கு இன்பம் தருவதை வலியுறுத்தும் கொள்கையே பிறர்நலக் கொள்கை (altruism).

பிறர்நலக் கொள்கையுள்ளும் ஒரு வேறுபாடு. அதிக மக்களுக்கு இன்பம் கொடுப்பது; குறைந்த மக்களுக்கு இன்பம் கொடுப்பது. அதிக மக்களுக்கு இன்பம்தரும் செயலையே நாம் அறச் செயலாகக் கொள்ளவேண்டும் என்பது பயன்முதற் கொள்கையினரின் கருத்து. அறிவியலான அழகியலான இன்பங்கள் பல எண்ணிக்கை யுள்ளவர்களால் பங்குகொண்டு அனுபவிக்க முடியும். புலன் நுகர்ச்சியியலானவை ஒருசிலரே பங்குகொண்டு இன்பம் பெற இயலும். அதிக எண்ணிக்கையினருக்கு இன்பம் அளிக்கும் செயலையே அறச் செயலாகக் கொள்ளவேண்டும் என்பதும் தன்மையால் முடிவு செய்யப் பெற வேண்டுவனவாகும். பெந்தம் என்பார் இன்பத்தை அளவு (quantity) அடிப்படையில் முடிவு செய்ய வேண்டும் என்ற கருத்துடையர். எனவே, பெந்தம் அவர்களின் கொள்கைக்கும் கொள்கை விளக்கத்துக்கும் பொருத்தம் இல்லாமல் முரண்பாட்டினை உண்டாக்குகிறது.

வெளிப்புற ஆணைகளால் ஒருவன் தன்னலக் கொள்கையிலிருந்து பொதுநலக் கொள்கைக்கு மாறுகிறான் என்றால் அவனுடைய மாற்றம் கட்டாய உணர்ச்சியால் வந்தது. கட்டாய உணர்ச்சியும் கடப்பாட்டு உணர்ச்சியும் ஒன்றாகா.

மேலே கூறப்பெற்ற கருத்துகளின் அடிப்படையில் பெந்தம் என்பாரின் கொள்கையை அவருக்குப் பின் வந்த அற இயல் ஆய்வாளர்கள் கருதினார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

(4) (ஊ) பண்பியலான–அறிவியலான பயன்முதற் கொள்கை

அல்லது

அறிவியலான பண்புவழிப் பிறர்நல இன்பியற் கொள்கை

முன்னுரை

பயன்முதற் கொள்கை என்பது இன்பியற் கொள்கையிலிருந்து கிடைத்த ஒருவகை மறுமலர்ச்சி இயக்கக் கொள்கை. இக்கொள்கையானது சமுக நலம், மக்கள் சேவை என்பன போன்ற சமுதாய நலத் தொடர்களை இணைத்துக் கொண்டமையால் மக்களால் பெரிதும் போற்றப்பெற்றது என்று கருதினார்களே யொழிய, கொள்கைச் சிறப்பினால் இது மக்களுள்ளத்தைக் கவர இயலவில்லை என்பது பொதுக் கருத்து.

ஜே.எஸ்.மில் (J.S. Mill) அவர்கள் கூறும் கொள்கையை வரையறையுடன் தெரிந்துகொள்ளலாம்.

இன்பியற் கொள்கை விளக்கம்: J. S. மில் என்பார் பயன் முதற் கொள்கையினரே. இக்கொள்கையின் வண்ணம் 'மனிதனின் இன்பத்தைப் பெருக்குவதே அற வழியில் அமைந்த ஒரே முடிவு' என்பதை J.S. மில் உடன்படுகிறார். இக்கொள்கை இன்பியற் கொள்கையும் ஆகும். எனவே, J.S. மில் அவர்கள் இன்பியற் கொள்கை அடிப்படையில் தம் விளக்கத்தைத் தொடங்குகிறார்கள்.

பிறருக்கு இன்பத்தை விளைவிக்கும் செயல்களே சரியான செயல்கள். பிறருக்குத் துன்பத்தை விளைவிக்கும் செயல்களே தவறானவைகள். இன்பம் என்பது துன்பத் தொடர்பு இல்லாத தாகும். அவ்வாறே துன்பம் என்பதும் இன்பத் தொடர்பு இல்லாதது. மில் என்பார் Pleasure, Happiness ஆகிய இரண்டு சொற்களையும் ஒரே பொருளில்தான் எடுத்தாளுகிறார். இன்பம், துன்ப விடுதலை என்ற இரண்டுதான் வாழ்வின் முடிவுகள் என்ற வகையில் நம்மால் விரும்பத்தக்கவை.

நம்மால் விரும்பப் பெறுகிற எல்லாப் பொருள்களும்,இன்பம் அந்த எல்லாப் பொருள்களிலும் உள்ளார்ந்திருக்கிறது என்ற காரணத்தாலோ அல்லது இன்பத்தைஅடைவதற்கும் துன்பத்தை நீக்குவதற்கும் கருவிகளாக அமைகின்றன என்ற காரணத்தாலோ விரும்பப் பெறுகின்றன.

அறம், உடல்நலம், பெருமையுறுதலுக்கு உரிய அன்பு அவைகளைப் போன்றவை Happiness என்பன அடைவதற்குரிய வழிகளே. எனவே, அவைகள் தம்மளவில் உள்ளார்ந்த நன்மை உடையவைகள் அல்ல.

'ஒரு பொருளை விரும்புதல், அதை இன்பம் என அமைத்தல் என்ற இரண்டுமே, உள்ளத்தின் ஒரே கூற்றின் இரண்டு மாறுதல்கள்; ஒரு பொருளை விரும்புதற்குரியதாக எண்ணுதல், அதனை இன்ப இயல்பினதாக எண்ணுதல் ஆகிய இரண்டும் ஒன்றே. அவ்வாறின்றி இன்பம் என்ற எண்ணத்தின் தொடர்பில்லாமல் விரும்புவது என்பது பொருளுலகிலோ புலன் கடந்த பொருளுலகிலோ இயலாத ஒன்று' என்பது இன்பியற் கொள்கையின் அடிப்படைக் கருத்து. ஜே.எஸ்.மில் இதனையே கொள்கை விளக்கமாகக் கொள்கிறார்.

மேலும், அவர் பயன்முதற் கொள்கையின் கருத்தை 'பயன் முதற் கொள்கையாளரின் கொள்கை இன்பம் விரும்பத் தகுவது ஒன்றே, அந்த ஒன்றே விரும்பத் தகுவது. ஏனையவை இன்பம்

பெறுதற்குக் கருவியாக இருப்பவைகளாதலின், அவைகளும் விரும்பத்தக்கதே' என்கிறார். இக்கொள்கையை விளக்க அவர் கூறும் சான்று ஒன்று உண்டு. அது'நாம் எப்போதுமே இன்பத்தை விரும்புகிறோம். ஆகையினால் இன்பம் விரும்பத்தகுவது. ஒரு பொருள் பார்த்தலுக்கு உரியதாக இருக்கிறது. ஆகையினால் அதனைப் பார்க்கிறார்கள். ஒலி கேட்பதற்குரியதாக அமைகிறது. ஆகையினால் ஒலியை அனைவரும் கேட்கிறார்கள். அவ்வாறே இக்கொள்கைக்கும் ஒரே ஒரு சான்று, எனினும் முழுமையான சான்று. எந்த ஒன்று விரும்புவதற்கு உரிமையுடையதாக இருக்கிறதோ, அதை மக்கள் உண்மையிலேயே விரும்புகிறார்கள்.' இது அறவழியிலான இன்பியற் கொள்கைக்கும் பயன்முதற் கொள்கைக்கும் உரிய முறையில் இன்பியற் கொள்கையை விளக்கும் முறை.

இன்ப வகைகள்

ஜே. எஸ். மில் அவர்கள் இன்பங்களுள் தன்மை இயலான வேறுபாடு உண்டு என்றார் (qualitative difference of pleasures). இன்ப வகைகளைப் பற்றி இவருக்கு முன்னே எபிகூரஸ், பெந்தம் ஆகியோர் பேசினார்கள். எபிகூரஸ் உடலின்பம், மன இன்பம் என்ற இரண்டு வேறுபட்ட இன்பங்களைப் பேசினார். மன இன்பமே உயர்ந்தது என்றும் சொன்னார். ஏனெனில் அது துன்பியலான பின்விளைவுகளை உண்டாக்காது. மேலும், மன இன்பம் நீண்ட நேரம் நிலைத்திருப்பது என்றார். அவ்வாறே பெந்தம் அவர்களும் இன்ப வேறுபாடுகள், இன்பத்தில் கலப்பற்ற தன்மை வேண்டும் என்றார். ஆனால் அது துன்பம் கலவாத இன்பமேயொழிய, இன்பத்திலேயே தன்மையால் உயர்ந்த இன்பம் அன்று. ஜே. எஸ். மில் ஒருவரே முதன்முறையாக அளவு என்பதற்கு வேறாக, தன்மை வேறுபாடுகள் அளவு வேறுபாடுகளைப் போலவே இருக்கின்றன என்றார். சில வகையைச் சார்ந்த இன்பங்கள் பிறவற்றைவிட, அதிகமாக விரும்பத்தக்கதாகவும் மதிப்பீடு செய்வதற்குரியதாகவும்அமைகின்றனஎன்றார். பொருள்களை மதிப்பீடு செய்ய முற்படும்போது தன்மையைப் போலவே அளவையும் அமைத்து மதிப்பீடு செய்வது போலவே இன்பங்களையும் மதிப்பீடு செய்தல் வேண்டும். அவ்வாறன்றி இன்பத்தின் மதிப்பீட்டினை அளவு என்ற ஒன்றை மட்டுமே சார்ந்து அமைப்பது தவறானது ஆகும் என்று விளக்கினார். இத்தகைய விளக்கத்தினாலேயே இக்கொள்கை அறிவியலொடுபட்ட பயன்முதற் கொள்கை எனப் பெற்றது. மேலும், பெந்தம் என்பாரின் பயன்முதற் கொள்கைக்கு எதிரான கொள்கையாகவும் அமைந்தது.

இன்பத்தின் தன்மையை அளத்தல்

தகுதிவாய்ந்த நீதிபதிகளினுடைய தீர்ப்புரையே இன்பத்தின் தன்மை அளக்கும் அளவு கருவி.

முதலில் எல்லாராலும் அறஞ்சார்ந்தது என்றோ வேறு காரணமாக என்றோ இல்லாமல் அனைவராலும் விரும்பப்பெறும் இயற்கைத் தன்மை வாய்ந்த இரண்டு இன்பங்களை எடுத்துக் கொள்வோம். இனி இரண்டையும், நன்றாகத் தெரிந்தவர்களாய் அனுபவித்தவர்களாய், இரண்டையும் ஒற்றுமைப்படுத்தியும் வேற்றுமைப்படுத்தியும் சிந்தித்து, பின் தெளிவான ஒரு வேறு பாட்டினை அமைத்துக் காட்டக்கூடிய ஆற்றல் பொருந்திய நீதிபதியின் ஆய்வுக்கு விடுவோம். என்ன முடிவு வருமெனில் உடல்சார்ந்த இன்பத்தைவிட மனம்சார்ந்த இன்பமே சிறந்தது என்று சொல்வார்கள். இவ்வாறு தகுதி வாய்ந்த நீதிபதிகள் தகுதியான முடிவைச் சொல்லும்போது அங்கே எத்தகைய மாற்றமும் நேராது. அவர்களுக்குள் மாறுபட்ட கருத்து அமையுமனால் பெரும்பான்மை முடிவு என்ன என்பதை எடுத்துக் கொள்ளலாம்.

பெருந்தன்மை 'என்னும் உணர்ச்சி' (sense of dignity), எல்லாரிடத்திலும் இயற்கையாகவே அமைந்துள்ளது. அதுவே சிறந்த நீதிபதியாக இருந்து இத்தகைய தேர்வைச் செய்யும். இவ்வகையில் ஜே. எஸ். மில் ஓர் எடுத்துக்காட்டினை அளிக்கிறார்.

ஒரு பன்றி மனநிறைவு பெறுவதைவிட, ஒரு மனிதன் நிறைவு பெறாதது மிக நல்லது; ஒரு முட்டாள் மனநிறைவு பெறுவதைவிட, சாக்ரடீஸ் மனநிறைவு பெறாமை நல்லது முட்டாளோ பன்றியோ வேறுபாடு கொள்வார்களானால் அவரவர்கள் அவரவர்கள் கட்சியைப் பற்றித் தெரிந்து கொள்வார்களேயல்லாமல் அடுத்த கட்சியைப் பற்றி அறிய முற்பட மாட்டார்கள். ஆனால் மற்றவர்கள் (சாக்ரடீஸ் போன்றோர்) இருபக்கங்களையும் நன்கு அறிந்திருப்பார்கள் என்று விளக்கினார் J.S. மில் அவர்கள்.

அறிவியலான பயன்முதற் கொள்கையின் விளக்கம்

செயல் முறைப்பாட்டில், பயன் முதற் கொள்கையினரின் நோக்கில் சரி எது? என்ற வினாவை எழுப்பினால் அது செயற் படுத்துபவனுடைய மகிழ்வை அடிப்படையாகக் கொண்டது

அன்று. அது எல்லாரையும் சார்ந்தது. தன்னுடைய மகிழ்வு, ஏனையவர்களுடைய மகிழ்வு என்ற இரண்டற்குள், பயன்முதற் கொள்கையானது செயற்படுத்துபவனை பற்றற்ற இரக்கமுள்ள பார்வையாளனைப்போல, தவறாத நடுவு நிலைமையை மேற் கொள்ளுக என்று கேட்டுக்கொள்ளும். இயேசுநாதர், நாசரேத் என்றஇடத்தில் 'எத்தகைய பொன்மயமான நடுநிலை அறத்தைக் கடைப்பிடித்தாரோ, அத்தகைய முழு உணர்வை, பிறருக்குப் பயனாக அமைத்தல் என்ற அறக்கொள்கையிலும் கடைப்பிடிக்க' என்று கூறுகிறார். 'உன் செயலைப்போலவே பிறருக்குச் செய்; உன்னைப் போலவே உன் பக்கத்திலிருப்போரை விரும்பு'என்பதே பயன்முதற் கொள்கையின் அறஇயலான குறிக்கோளின் நிறைவை அமைக்கும் விளக்கங்களாகும்.

பிறர்நலம் (Altruism) என்பதன் விளக்கம்

ஒவ்வொரு மனிதனும் அவனவனுடைய தனி இன்பங்கள் விரும்பப் பெறுகின்றன என்பதற்கு அப்பால் பொதுநலம் விரும்பப் பெறுவது ஏன் என்றால் அதற்கு ஒரு காரணத்தைத் தவிர வேறு காரணம் கொடுத்தல் இல்லை. அக்காரணத்தை ஓர் அளவை முறையில் விளக்குகிறார்.

ஒரு மனிதனுடைய இன்பம் அவனுக்கு நன்மை. அவ்வாறே பொதுமை இன்பம் என்பது எல்லா மனிதர்களும் இணைந்த ஒரு தொகுதிக்கு நன்மை தருவது. ஒரு மனிதனின் மகிழ்வு அந்த மனிதனுக்கு நன்மை தருவதால் பொதுமகிழ்வு எனப்படுவதும் எல்லாருக்கும் நன்மை தருவதாகத்தானே அமைய வேண்டும் என்பது அவருடைய அளவையியல் கருத்து.

இரக்க உணர்வு (Sympathy)

ஒரு மனிதன் தன்னலத்திலிருந்து பொதுநலத்துக்கு மாறுகிறான் என்பதை உளவழி நிலையில் நின்று விளக்கம் கூற முற்படுகிறார் ஜே. எஸ். மில். பொதுநலம் என்பது தன்னலத்திலிருந்தே வளர்கிறது என்பது அவர் விளக்கம். இரக்கம் என்பது தன்னுடன் இருப்பவர்கள்மேல் அமைகின்ற உணர்ச்சி. இவ்வுணர்ச்சியானது தேவை என நாமே விரும்பியேற்று வளர்த்துக் கொள்ளப்பெறுவது.

முதலில் எல்லா மனிதர்களும் தன்னலஞ் சார்ந்தவர்களே. பிறகு, தன் மனத்தில் உள்ள துன்பத்தை நீக்குவதற்காகவே அவர்கள் மற்றவர்களின் துன்பங்களை நீக்கினார்கள். பிறருடைய துன்பம் நம் மனத்தில் துன்பத்தை உண்டாக்கிவிடுகிறது. நம்

முடைய மனத்திலிருந்து துன்பத்தை நீக்கவேண்டும்; என்பதற்காகவே நாம் மற்றவர்களின் துன்பத்தை நீக்குகிறோம். காலப் போக்கில் நம்முடைய இன்பம் மறந்துவிடுகிறது. பிறருடைய துன்பத்தை நீக்குவதன்மூலம் நம் உள்ளத்தில் ஒரு மகிழ்ச்சி உண்டாகிறது என நினைத்துக் கொள்கிறோம்.

ஒழுக்கத்தை வலியுறுத்தும் ஆணை (Moral Sanctions): பொது மகிழ்வுக்குத் துணை செய்யும் செயல்களையே நாம் எப்போதும் மேற்கொள்ளவேண்டும் என்ற கடமையுணர்ச்சியை வலிவு படுத்துவது வெளிப்புற நிலையிலும் அக நிலையிலும் அமைந்துள்ள ஆணைகளே.

ஜே. எஸ். மில் என்பார் இத்தகைய ஆணைகள் வெளியிலிருந்தும் வந்து நம்மைச் செயற்படுத்தும்; உள்ளிருந்தும் செயற்படுத்தும். பெந்தம் என்பார் வெளியிலிருந்து மட்டுமே ஆணைகள் நம்மைச் செயற்படுத்தும் என்று கொண்டார். இயற்கை விதி, அரசின் விதி, சமுக விதி, சமயம் சார்ந்த விதி என்ற இந்நான்கையும் புறநிலை விதிகளாகவே கொண்டார் பெந்தம் அவர்கள்.

புறநிலையில் அமைந்த நான்கினைவிட, அகநிலை ஆணை ஒன்றும் அவனைப் பண்படுத்துகிறது. அதுவே மனச்சான்று (conscience). அது இரக்கம், உடன் வாழ்வோர் பற்றிய மன உணர்ச்சி, சமுகத்தில் வாழும் மக்களின் நல உணர்ச்சி, மனித குலத்தின் இன்பத்தைப் பற்றிய உணர்ச்சி, எல்லா உயிர்களோடும் இணைந்து வாழவேண்டும் என்ற ஒற்றுமை உணர்ச்சி என்பவைகளாக அம்மனச்சான்று தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும்.

பெந்தம் என்பார் புறநிலைகளை மட்டுமே அமைத்தார். ஆனால் மில் அவர்கள் அவைகளோடு அகநிலைத் தன்மையான மனச்சான்று என்பதையும் அமைத்தார்.

இன்பியற் கொள்கையைப் பயன்முதற் கொள்கையாக மலரவைத்து, பெரும்பாலான மக்களுக்கு அதிகமான இன்பம் கொடுக்கும் செயல்களையே மேற்கொண்டு செய்வது அற இயல் எனக் கொண்டு, பயன்முதற் கொள்கையைப் பெரும்பாலானவர்கள் உணர்ச்சி வயப்பட்டு ஏற்றிப் போற்றும் நிலைக்கு உயர்த்திய பெருமை பெந்தம், மில் ஆகிய இருவருக்கும் உரியது.

பெந்தம் என்பவருடைய கொள்கையை ஆய்வு செய்தது போலவே ஜே. எஸ். மில் என்பாரின் கொள்கையும் பின் வந்த அற இயற் சான்றோர்களால் ஆய்வு செய்யப் பெற்றது.

ஜே. எஸ். மில் என்பார் Pleasure, Happiness என்ற இரண்டு சொற்களையும் வேறுபாடு இல்லாமல் எடுத்தாளுவார். Pleasure இன்பம் எனக் கொள்ளலாம். அது உயிரினுடைய உணர்ச்சிப் பகுதி என்ற ஒரே பகுதியின் நிறைவை மட்டுமே குறிக்கும். ஆனால் Happiness 'கூட்டமைவின்பம்' என்று குறிக்கலாம். உயிரின் எல்லாப் பகுதியும் இணைய நின்று துய்க்கும் இன்பமே total self happiness எனப்பெறும் கூட்டமைவின்பம். இவ்வேறு பாட்டினை அறியாமல் இரண்டையும் ஒன்றாக வழங்குவதே ஜே. எஸ். மில் என்பாரிடத்தில் அமைந்த கொள்கைக் குறைபாடு எனக் கண்டனர்.

ஜே.எஸ்.மில் என்பாருடைய பயன்முதற் கொள்கையைக் கீழ்க்காணுமாறு சுருக்கமாக அமைத்துக் கொள்ளலாம்.

(1) இன்பம் ஒன்றே நாம் விரும்ப வேண்டுவது.

(2) மற்றவர்கள் ஒரு பொருளை விரும்புகிறார்கள் என்பதால் நாமும் விரும்பக் கடமைப்பட்டிருக்கிறோம்.

(3) ஒவ்வொரு மனிதனின் இன்பம் அல்லது மகிழ்வு அந்த மனிதனுக்கு நன்மை தருகிறது. எனவே, யாவருக்கும் பொதுவான மகிழ்வு ஒவ்வொருவருக்கும் நன்மை தருகிறது.

(4) மனிதர்கள் இன்பத்தையேயன்றி வேறு பலவற்றையும் விரும்புகிறார்கள். ஆனால் அவைகளையெல்லாம் இன்பம் தருவதற்குரிய கருவிகளெனவே அமைத்துக் கொள்ள வேண்டும்.

(5) இருவகை இன்பங்களில் ஒன்றைச் சிறந்தது என்று திறமையுள்ளோர் தேர்ந்தெடுக்கும்போது, இந்த இன்பம் தேர்ந்து கொள்ளாத இன்பத்தைவிட, பண்பில் மிக உயர்ந்தது என்று கொள்ளுவதே ஏற்புடையது.

மேலே கூறப்பெற்ற அமைப்பில் ஜே. எஸ். மில் என்பாரின் கொள்கையைத் தெளிவாக அமைத்துக்கொள்ளலாம். ஆயினும், சில கருத்துகள் சிக்கலுக்கு உரியவைகளாக அமைந்துள்ளன. ஜே. எஸ். மில் என்பார் அறவியலான இன்பக் கொள்கையை விளக்க முற்படும்போது, உண்மை நிலைக்கும் உயர் குறிக்கோள் நிலைக்கும் உள்ள வேறுபாட்டை நன்கு எடுத்துக்காட்டவில்லை எனலாம். ஜே. எஸ். மில் என்பார் இவ்வகையில் அளித்த விளக்கம் அக்கொள்கையில் மேலும் பலவகைச் சிக்கல்களைத் தோற்றுவிப்பதாக அமைந்துவிடுகிறது.

'விரும்பத்தக்கது' என்ற பொருள் தரும் சொல் Desirable என்பது. விரும்பத்தக்கது என்று சொன்னால் விரும்பியாக வேண்டியது (ought to be desired) என்பதுதான் பொருள். அவ்வாறே Detestable என்பது வெறுக்க வேண்டுவது என்ற பொருளைத் தரும். வெறுக்க வேண்டுவது என்றால் சில பொருள் களை நாம் வெறுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்; எனவே, அவைகளை வெறுத்தேயாக வேண்டும் (ought) என்பதுதான் பொருள். இங்கே காட்டப்பெறும் பொருளில் மில் அவர்கள் கூறியிருந்தால் அது சரியே.

ஆனால் ஜே.எஸ். மில் அவர்கள் வேறு ஒரு விளக்கம் அமைக் கிறார்கள். அத்தகைய விளக்கம் அற இயற் கொள்கைக்குப் பொருந்தும் நிலை உடையது அன்று.

மனிதர்களின் சாதாரண நடைமுறைச் செயலை எடுத்துச் சொல்லும் முறை.

Desirable என்ற சொல்லுக்கு மக்கள் நடைமுறையில் விரும்புவது (what people actually desire) இவ்வகையில் அவர் கூறுவதைக் காணலாம்.

'மக்கள் நடைமுறையில் விரும்புவதால் அது விரும்ப வேண்டுவது';

'மக்கள் நடைமுறையில் உண்மையிலே பார்க்க முடிவதனால் அது பார்க்க வேண்டுவது';

'மக்கள் இயல்பாகவே கேட்க முடிவதனால் அது கேட்க வேண்டுவது'

என அமையும் மூன்று தொடர்களை ஜே. எஸ். மில் அமைத்துக் காட்டிய முறையில் சிந்தித்தால் முதற் பகுதியானது உண்மைச் செயல் அல்லது நடைமுறைச் செயல் என்ற பொருளில் அமைந் துள்ளது. சாதாரணமாக, உண்மையில் அல்லது இயல்பாகச் (fact) செய்யும் செயலை அடிப்படையாகக்கொண்டு குறிக் கோள் செயலாகிய அற இயற் கடமையை உய்த்துணர முடியாது. ஒரு பொருளை விரும்புவது என்பதை மக்களின் இயற்கைச் செயல் என அறிமுகப்படுத்தி, பின்னர் அப்பொருளை விரும்பியே ஆகவேண்டும் என்று அற இயல் குறிக்கோள் செயலை அதிலிருந்து உண்டாக்கிக் கொள்ள முடியாது. இவ்வாறு சாதாரண இயற்கைச் செயலிலிருந்து குறிக்கோட் செயலை அமைத்தால்

அது 'இயற்கை நிலைப் போலி' என்ற குற்றத்தின் பாற்படும். ஜே. எஸ். மில் அவர்கள் எழுதிய விளக்கம் 'இயற்கை நிலைப் போலி' என்று கருதப்பெறுகிறது.

ஜே. எஸ்.மில் என்பார் இன்பங்கள் தன்மையால்—பண்பால் (quality) வேறுபடுகின்றன என்று குறிப்பிட்டார். எடுத்துக் காட்டாக மனம், அறிவாய்வு முறை ஆகிய உயர்ந்த திறமை களால் வெளியாக்கப் பெறும் இன்பம் உடலியலான புலன்களால் வெளியாக்கப்பெறும் இன்பத்தைவிட உயர்ந்தது என்று கொண்டார். இங்கே காட்டப்பெற்ற இரண்டு இன்பங்களில் உயர்வு தாழ்வு என்பது எதனால் வரையறை செய்யப் பெறு கிறது? முதல் வகையைச் சார்ந்த இன்பம் உயர்ந்தது என்று கருதப் பெறுவது எதனால்? அறிவு என்ற பண்பு முதல் வகை இன்பத்தில் அமைந்திருப்பதால் அது உயர்ந்ததாக அமைகிறது.

இன்பியற் கொள்கையின் வண்ணம் முடிந்த நிலையாக இன்பமே விரும்பப் பெறுவது என்பதே. பண்பை அடிப்படை யாகக் கொண்டு இன்பத்தை வேறு பிரித்துக் கண்டு, உயர்ந்த இன்பத்தை விரும்ப வேண்டும் என்று வகுத்துக் கொண்டால், நாம் இன்பத்தை விரும்புவதற்குப் பதிலாக, அதில் உள்ள உயர்ந்த பண்பை விரும்புகிறோம் என்பதே கருத்தாகும்.

இன்பங்கள் பண்பினால் வேறுபடும் என்றும், அவற்றுள் உயர்ந்த பண்புடைய இன்பமே விரும்பப் பெறல்வேண்டும்என்றும் மில் அவர்கள் கூறியதை ஆராய்ந்தால் ஜே.எஸ்.மில் அவர்களின் கொள்கை இன்பியற் கொள்கை அன்று. அது அறிவால் குறிக் கோளை நாடும் அறிவியற் கொள்கையாகும் (rationalism).

ஜே.எஸ். மில் அவர்களின் பயன்முதற் கொள்கையானது இரு வகைப் போலிகளால் [அளவையியலில் (logic) வருகின்ற பிழைக்குப் போலி (fallacy) என்று பெயர்] அமைக்கப் பெற்ற ஒன்று. அவ்விரண்டு போலிகளும் முறையே இணைப்பு நிலைப் போலி (fallacy of composition) என்றும் பிரிப்பு நிலைப் போலி (fallacy of division) என்றும் பெயர் பெறும்.

ஒவ்வொரு மனிதனுடைய இன்பமும் அவனவனுக்கு நன்மை யாக அமைவது. ஆகையினால் பொது இன்பம் இணைந்திருக்கிற பல மனிதர்களுக்கும் நன்மை தருவதாக அமைவது.

பொது இன்பம் என்பது இணைந்திருக்கிற எல்லா மனிதர் களுக்கும் நன்மையாக அமைவது என்ற காரணத்தால், அது ஒவ்வொரு தனிமனிதனுக்கும் நன்மையாக அமைவது ஆகும்.

இங்கே கொடுக்கப்பெறும் இரண்டு கருத்துகளையும் கீழ் வருமாறு விளக்குகிறார்:

'அ' என்பவனுடைய இன்பம் 'அ' என்பவனுக்கு
நன்மை ஆகும்.

'ஆ' என்பவனுடைய இன்பம் 'ஆ' என்பவனுக்கு
நன்மை ஆகும்.

'இ' என்பவனுடைய இன்பம் 'இ' என்பவனுக்கு
நன்மை ஆகும்.

ஆகையினால், 'அ' என்பவனுடைய இன்பம், 'ஆ' என்பவனுடைய இன்பம்' 'இ' என்பவனுடைய இன்பம் அ, ஆ, இ என்று கூடி இருக்கிற எல்லாருக்கும் அமையும் நன்மை ஆகும். இவ்வாறு இணைப்பதை 'இணைப்பு நிலைப் போலி' என்பர். அ, ஆ, இ என்ற மூன்றும் கலந்த ஒரு மனிதன் இல்லை; அவ்வாறே மூன்றும் கலந்த பொது இன்பமும் இல்லை.

இனி, இரண்டாவது அளவையியற் போலி பொதுமை இன்பம் என்பது எல்லா மனிதர்களும் இணைந்த இணைப்புக்கு நன்மை தருவது ஆகும். ஆகையினால் அப்பொதுமை இன்பம் ஒவ்வொரு மனிதனுக்கும் நன்மை ஆகும். இவ்வாறு இன்பம் என்பது அவ்வாறு தொகுப்பிலிருந்து பிரித்துக் கொடுப்பது என்பது அற இயல் நடைமுறைக்கு ஒவ்வாதது. இது பிரிப்புநிலைப் போலி.

பயன்முதற் கொள்கையின் பணி

இன்பியற் கொள்கையை எல்லாருடைய உள்ளமும் பொதுவாக வரவேற்றாலும், அப்படித்தான் ஓர் அற இயற் கொள்கை இருக்க வேண்டும் என ஒவ்வொருவர் உள்ளமும் விரும்பினாலும் அதற்கு அற இயற் கொள்கை என்னும் தகுதி கிடைப்பது என்பது அரிதாய நிலைமையாகவே அமைந்தது.

இன்பியற் கொள்கையிலிருந்து கிளைத்த பயன்முதற் கொள்கை 'உயர்ந்த இன்பம் மிகுந்த எண்ணிக்கை மக்களுக்கே' என அமைத்த பொருளுரை முழக்கம் அனைவரையும் கவர்ந்தது. பெந்தம், ஜே.எஸ். மில் ஆகிய இருவரும் அக்காலத்தில் சட்ட இயலான ஆட்சியியலான புரட்சிகளுக்கு மதிப்பிட முடியாத அரிய சேவை செய்தார்கள் என்று போற்றப் பெறுகின்றனர். பொதுவாக அக்காலத்தில் உடலியலான தேவைகளை அடிப்படையாகக் கொண்ட சமுக முன்னேற்றத்தோடு தம் கொள்கையை

இணைத்துத் தொண்டு செய்தனர். 'உயர்ந்த இன்பம் மிகுந்த எண்ணிக்கை மக்களுக்கு' என்ற முழக்கம் ஒருவர் ஒருவர் என்ற எண்ணிக்கையை எண்ணும் மனம் உடையவர்களாக ஆக்கி ஒருவர் ஒருவருக்குச் செய்யும் சமுகத் தொண்டு என விரிந்து நின்று நற்பயன் விளைத்தது.இதன் விளைவாக,ஒருவர் ஒரு முதிய வருக்குக் கல்விப் பணிபுரிதல். each one teach one இவ்வாறு வந்த முழக்கமே. 'ஒரு குடும்பம் ஒரு மரம்' என்பதும் அது.

(4) (எ) உயிரியற் படிநிலை வளர்ச்சியியலான இன்பியற் கொள்கை

முன்னுரை

Evolution என்ற சொல்லுக்கு இணையான சொற்களாக உயிரியற் படிநிலை வளர்ச்சி, பரிணாம வளர்ச்சி, உள்ளது சிறத்தல் என்பவை வழங்கப் பெறுகின்றன. இங்கே 'உயிரியற் படிநிலை வளர்ச்சி' என்ற சொல் உபயோகிக்கப்பெறுகிறது.

உயிரியற் படிநிலை வளர்ச்சிக் கொள்கையானது பொதுவாக, இவ்வுலகத்தைக் கடவுள் ஒரு காலத்தில் உண்டாக்கினார் என்பதை ஒத்துக் கொள்ளாது. படிநிலை வளர்ச்சியியல் மூலம் சில கொள்கைகளை நாம் பெறமுடிகிறது.

(1) எந்த ஒரு பிராணியோ, தாவரமோ தமக்கு முன்னர் வாழ்ந்த பிராணி அல்லது தாவரம் என்பதிலிருந்து வளர்ச்சி அடைந்ததே.

(2) முன்பிருந்த பிராணி அல்லது தாவரம் என்பவற்றிற்கும் பின்னர் அவைகளிலிருந்து தோன்றியவைகளுக்கும் ஒருவகையில் வேறுபாடு உண்டு.

பொதுவாக உயிரியற் படிநிலை வளர்ச்சிக் கொள்கை யிலிருந்து இரண்டு முக்கியமான விதிகள் நமக்குக் கிடைக்கின்றன. அவை: (1) 'இயற்கைத் தேர்வு' (natural selection) (2) 'தகுதி உடையனவே தொடர்ந்து வாழ்வன' (survival of the fittest).

இவ்விரண்டு விதிகளையும் இணைத்துக் காணும்போது, சில இனப் பிராணிகள் சூழ்நிலைக்குத் தக்கவாறு தங்களை அமைத்துக் கொள்ளத் தற்செயலாக வாய்ப்பு இருந்தமையால், அவைகள் தொடர்ந்து வாழும் தகுதியைப் பெற்றன என ஒரு விளக்கம் அமைத்துக் கொள்ளலாம்.

'இயற்கைத் தேர்வு' என்பது தாவரங்களிலும் பிராணி களிலுங்கூட, வளர்ச்சியை வரையறுக்கும் பல போக்குகளில் ஒன்று எனக் கொள்ளலாம். இவைகள் டார்வின் கொள்கை யிலிருந்து கிடைத்த செய்திகள்.

ஹெர்பர்ட் ஸ்பென்ஸரின் அற இயற் கொள்கை (Herbert Spencer's Ethical Theory)

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் உயிரியற் படிமுறை வளர்ச்சிக் கொள்கையை அற இயலில் அமைத்து ஆராய்ந்தவர் ஸ்பென்ஸர். அறிவுவழிப் பரிணாமம் அல்லது விஞ்ஞான இயலான உயிரியல் படிநிலை வளர்ச்சி முறைக்கும், அற இயல் படிநிலை வளர்ச்சி முறைக்கும் அடிப்படையிலேயே ஒருவகை வேறுபாடு உண்டு.

உயிரியல் படிநிலை வளர்ச்சி முறையிலிருந்து அற இயற் கொள்கையை வரையறுக்கப் புகுந்தால், உயிரியற் படிநிலை வளர்ச்சி வளர்ந்துவருவதுபோலவே, அறக் கொள்கையும் தோற்றமும் வளர்ச்சியும் பெற்று வருகின்றது என்பதாகத்தான் கொள்ள வேண்டிவரும். உயிரின் தொடக்கக் காலம் முதல் சிந்திக்கவில்லையென்றாலுங்கூட, விலங்குகளின் அமைப்பிலிருந்தாவது நாம் தொடங்கிச் சிந்தித்தல் வேண்டும். மிருகங்களின் தொடக்க நிலை எப்படி இருந்தது என்பதுபற்றியும் அவைகளின் எதிர்கால அமைப்பு எவ்வாறு இருக்கும் என்பதுபற்றியும் நாம் தெளிவுற விளங்கிக்கொள்ள இயலவில்லை. நமக்கு இப்போதுள்ள நிலைமை ஒன்றுதான் தெரியும். இன்றுள்ள நிலைமையை வைத்து இரு வகைகளில் ஆய்வு செய்யலாம்.

இன்றுள்ள அறநிலை அமைப்பினை உயிரியல் படிநிலை வளர்ச்சியோடு இணைத்து, அதன்மூலம் இனி வருகின்ற காலத்தில் அறநிலை அமைப்பு எவ்வாறு இருக்கும் என்பதை அறிவதற்கு இன்றைய அறிவியல் பரிணாம வளர்ச்சி எந்த அளவுக்குத் துணை செய்யும் என்பதை ஆராயலாம். அத்தகைய ஆய்வு,குறிக்கோள் நிலையை ஒட்டிய (teleological) ஆய்வாக அமையும். ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் மிருகங்களின் நடத்தையைக் கொண்டு ஒருவகைப் படிநிலை அமைப்பை வைத்து, அற இயற் கொள்கையை ஆராயத் தொடங்குகிறார்.

இன்பியற் கொள்கை: பெந்தம், மில் ஆகியோர் இன்பியற் கொள்கைகளை அமைத்து, விளக்கமும் செய்து நிலைநாட்டியவர்கள். அவர்களுடைய கொள்கையும் இன்பியற் கொள்கை. ஸ்பென்ஸரின் கொள்கையும் இன்பியற் கொள்கையே. இரண்டும் இன்பியற் கொள்கையே ஆயினும் இரண்டற்கும் அடிப்படை வேறுபாடு உண்டு. பெந்தம், மில் போன்றவர்கள் மனிதன் இயல்பாகவே இன்பம் அனுபவிக்க விழைகிறான் என்ற அடிப்

படையில் தம்முடைய இன்பியற் கொள்கையை வகுத்தார்கள். ஆகையினால், அது அனுபவவழி இன்பியற் கொள்கை எனப் பெறும். ஸ்பென்ஸரின் கொள்கை, உயிரானது பிறந்து வளரும் படிநிலை வளர்ச்சிக் கொள்கை அடிப்படையிலான இன்பியற் கொள்கை (evolutionary hedonism).

புறநிலைத் தொடர்புகளுக்கு ஏற்ப அகநிலைத் தொடர்புகளை இடையீடின்றி அமைத்துக் கொள்ளுதல்

ஸ்பென்ஸர், நடத்தை (conduct) என்பதை வரையறை செய்ய முற்படும்போது அது முடிவுகளுக்கு ஏற்ற வகையில் தன்னுடைய தனிச் செயல்களை அமைத்துக்கொள்வது என்று கூறுகிறார். சூழ்நிலைக்குப் பொருந்திப் போவதே நடத்தை என்று கூறுகிறார். சூழ்நிலைக்கு ஏற்ப அமைவதை அறச்செயல் என்று வரையறுத்துக் கொள்ள முடியுமா என்பது அற இயலின் முக்கிய வினாவாக அமையும். சூழ்நிலையோடு பொருந்தவில்லையானால் அந்த ஒன்று அழிந்துபோகும். அவ்வாறே மனிதன் சூழ்நிலைக்குப் பொருந்தி அமைத்துக்கொள்ளவில்லையென்றால் இறந்துபோக வேண்டியதுதான் என்ற கொள்கை பரிணாம அமைப்பிலிருந்து கிடைக்கிறது. இக்கருத்து அற இயலுக்குப் பொருந்தாது என்று கொள்ள முடியாது; இது ஒருவகையில் நோக்கக் கொள்கையோடு ஒத்தது (teleology) என்று கொள்ளலாம். நாம் பலவகை முடிவு களை, விளைவுகளை,நோக்கங்களை எண்ணி, அதை முன்னிட்டுச் சூழ்நிலையோடு ஒத்துப்போகலாம். இந்நிலையில் சூழ் நிலையோடு அமைந்த செயலே நம் நோக்கங்களோடும் இணைந் துள்ளது என்றும் கொள்ளலாம். அதனாலேயே நடத்தையைப் பற்றி (conduct) வரையறை செய்யும்போது ஸ்பென்ஸர் அவர் கள் முடிவுகளுக்கு (ends) நம் செயல்களைப் பொருத்தமாக அமைப்பது (all adjustments of acts to ends) என்று கூறினார்.

நன்னடத்தை

நன்கு வளர்ச்சியுற்ற நடத்தைகள் என்பவைகளை ஸ்பென்ஸர் கீழ்க்கண்டவாறு விளக்குகின்றார்: (அ) நீண்ட வாழ்வு, (ஆ) நிறைந்த வாழ்வு (இன்பம்).

ஸ்பென்ஸரின் கருத்துப்படி இன்பமே முடிந்த நிலை. இவ் வகையில் அவர் இன்பியற் கொள்கையினரே. எனினும், இன்பம் மட்டுமே குறிக்கோள் என்று கொள்ளாமல் நீண்ட வாழ்வை அடிப்படையாகக் கொண்ட இன்பமே வாழ்வியற் குறிக்கோள் என்று கூறுகின்றார். இன்பம் என்பதற்கே படிநிலை வளர்ச்சி

முறையில் கருதும்போது வாழ்நாளை நீட்டிக்க வேண்டும்; வாழ்நாளை நீட்டிப்பதே இன்பத்தின் ஒருவகை அளவுகோலாகக் கூடக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் ஸ்பென்ஸருக்கு உண்டு என்று கொள்ளலாம்.

வாழ்வைப்பற்றி இருவகைக் கொள்கைகள் உண்டு. எல்லாம் இன்ப மயம் என்றும், வாழ்வு என்பது துன்பமே என்றும் இரு வகைக் கொள்கைகள் உண்டு. இந்திய நாட்டில் உலகாயதம் இன்பத்தையே வாழ்வு என்று கொள்ளும்போது, பௌத்தம் துன்பமே வாழ்வியல் என்று கொள்ளுகிறது.

ஜெர்மானியத் துன்பியற்கோட்பாடுடையவர்கள் வாழ்விலே துன்பத்தைவிட இன்பம் கிடைக்கிறது என்ற கொள்கையை எதிர்த்தார்கள். ஒவ்வொருவனுடைய வாழ்விலும் தனிப்பட்ட இயல்பாக விளங்குவது அவனுடைய விருப்பம் (desire). அது துன்பத்தை அடிப்படையாகக் கொண்டதே. மேலும், பெரும் பான்மையினருக்குரிய உழைப்பு என்பதை எடுத்துக்கொண்டால் அதுவும் துன்பந்தருவதே என்று குறிப்பிட்டார்கள். இத்தகைய கருத்துடைய துன்பக்கொள்கையை உருவாக்கியவர்கள் வாழும் அதே நூற்றாண்டில்தான் ஸ்பென்ஸர் அவர்கள் இன்பக் கொள்கையை வலியுறுத்தினார்கள்.

ஒவ்வொரு மனிதனும் தனக்குக் கிடைக்கும் அதிக இன்பத்தில் ஒரு சிறு பகுதியை மொத்தமாக அமையும் இன்பப் பெருக்குக்கு உதவும்போது, மக்களின் பொதுமை வாழ்வு தழைத் தோங்கும் இன்ப நிலை உண்டு என்று கொண்டார்.

ஸ்பென்ஸர் மூன்று வகையில் இன்ப வாழ்வை அமைத் திருப்பதை நாம் சிறப்பாகக் கொள்ள வேண்டும். பல்வேறு வகைப்படும் தனித்தனி இன்ப வாழ்வுகளையும், பின்னர் அவை களை இணைத்த ஒருவகைக் கலப்பு நிலையிலான இன்ப வாழ்வையும் எண்ணிய காரணத்தாலேயே இம்மூவகையாக இலக்கணம் கூறி உணர்த்தினார். இவ்வாறான பல்வகைப்பட்ட பண்பு, பொதுவாக வாழ்வில் அதிக இன்பம் தரும் அறவழிக்கு ஒத்த நன்மை ஆகியவைகளை உள்ளிட்ட ஒருவகை இன்பத்தையே ஸ்பென்ஸர் முடிந்த முடிநிலை என்றுகொண்டார். இதையே அவர் படிநிலை வளர்ச்சி முறையில் மலரும் நடத்தையால் நீண்ட வாழ்வும் நிறைந்த வாழ்வும் கிடைக்கின்றன என்று குறிப்பிட்டார்.

ஸ்பென்ஸருடைய படிநிலை வளர்ச்சிக் கொள்கையானது மூவகை நோக்கங்களைக் கொண்டது. அவை:

(1) வாழ்வு நிலையில் முன்னேற்றம்—நீடித்த வாழ்வு;

(2) வளமை அமைந்த வாழ்வு— நிறைந்த வாழ்வு;

(3) அற வழியில் சிறந்த இன்ப வாழ்வு. இவை மூன்றும் இக் காலத்தே சென்ற நூற்றாண்டினைவிட வளர்ச்சி பெற்றுள்ள தாகவே கருதவேண்டியுள்ளது என்பது ஸ்பென்ஸரின் கொள்கை.

இக்கருத்தின் அடிப்படையிலேயே அவர் 'மனத்துக்குப் பிடித்தவாறு மிகுந்த இன்ப உணர்வைத் தருவதையும் தரா திருப்பதையும் பொறுத்துத்தான் வாழ்வை நலமானது என்றோ தீமையுடையது என்றோ கொள்ள வேண்டும்' என்றார்.

ஸ்பென்ஸரின் கருத்துகளை முழுமையாகத் தெரிந்து கொள்ளுதற்கு மேலே குறிப்பிடப்பெற்ற விளக்கங்களுடன் கீழே கொடுக்கப் பெற்றவைகளையும் இணைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

(1) மனத்துக்குப் பிடித்தவாறு மிகுதியான இன்ப உணர்வை வாழ்வில் பெறமுடியும்.

(2) துன்பம், ஒறுத்தல் (தண்டனை) என்பவை காரணமாக எழும் அச்சமே அற விதிகள் செல்வாக்குப் பெறுதற்குக் காரண மாகிறது.

(3) படிநிலை வளர்ச்சி முறையில், சூழ்நிலையுடன் இணைந்த, பொதுமையான, அடிப்படை இயற்கைத் தேர்வின் மூலமாகத்தான் சமுதாயம் முழுவதையும் உள்ளிட்ட ஒருவகைப் பொதுமை அறம் அமையும்; அது இப்போதுள்ள சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு நோக்கினால், வலிமை குறைந்ததும், தொழிலாக்கம் கூடியதுமான நடத்தையை அடிப்படையாகக் கொண்டே அப் பொதுமை அறவிதி அமையும் எனத் தோன்று கிறது என்று குறிப்பிட்டுக் காட்டினார்.

(4) ஒவ்வொரு மனிதனும் தன்னியற்றி நிலையை அடிப் படையாகக் கொண்டு, தானே விரும்பி, ஓர் அறச் செயலை நாடு வதற்கு உரிய கட்டற்ற தன்மை (சுதந்தர நிலை) அவனுக்கு அமைந்துள்ளது; அதுவும் மற்றவனுடைய கட்டற்ற தன்மை யைப் பாதிக்காத நிலையில் அமைந்திருக்கிறது.

(5) அற நடத்தைகளை இருவகைகளாகப் பிரித்தார்—தொடர்புற்றது; முடிந்த நிலையினது (relative and absolute). அற நடத்தைகளின் வளர்ச்சி முதன்முதலில் அண்மை முடிவுகளால் வரையறை செய்யப் பெறுவதாக அமையும். பின்னர், அது அண்மை முடிவுகளைவிடச் சேய்மை முடிவுகளே அதனை மிகுதியும் கட்டுப்படுத்துவனவாக அமைகின்றன. மேலும், கடமையுணர்வு என்ற முறையில் அறவழிக்கு ஒத்ததாகிய நம் நடத்தையானது தொலைவில் உள்ள சேய்மையில் உள்ள முழுமையான முடிவின் காரணமாகவே அமைகிறது.

(6) படிநிலை வளர்ச்சியின் முடிநிலையில் தன்னலப் பண்பும் (egoism) பிறர்நலப் பண்பும் (altruism) என்ற இரண்டும் இணைந்து முழுமை பெற்றுவிடும். ஏனெனில், எந்த ஒன்றும் தன்னளவில் அற முரணானது. தன்னழிவுப் பாதையை உட்கொண்டது. எனவே முழுமை எனப் பெறும் குறிக்கோளியலான சமுதாயத்தில் தனிமனித இயல்பும் சமுதாய இயல்பும் ஒன்றை ஒன்று நிறைவு செய்து இணைந்து ஒருமை சார்ந்த முழுமை பெற்றுவிடும்.

இவ்வாறாக, படிநிலை வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டே, அறநிலை வளர்ச்சியையும் மனித வாழ்வின் குறிக்கோட் கொள்கையினையும் அமைத்துக் காட்டினார் ஸ்பென்ஸர்.

லெஸ்லி ஸ்டீபன் என்பாரின் சமுதாய உறுப்பிணைப்பு நியதிக் கொள்கை (Leslie Stephen's Social Organism, 1832–1904)

ஸ்பென்ஸர், ஸ்டீபன், அலெக்ஸாண்டர் என்ற மூவருமே படிநிலை வளர்ச்சிக் கொள்கையில் அற இயல் வளர்ச்சியை இணைத்து ஆய்ந்தவர்கள்தாம். ஆனால் மூவருடைய கொள்கைகளிலும் சிறு சிறு வேறுபாடுகள் உண்டு. அதனாலேயே அவர்கள் கொள்கைகள் தனித்தனியே எழுதப் பெறுகின்றன. ஸ்பென்ஸரின் கொள்கையை முன்னுள்ள தலைப்பிற் கண்ட நாம் இத்தலைப்பில் ஸ்டீபன் என்பார் கொள்கையையும் அடுத்த தலைப்பில் அலெக்ஸாண்டரின் கொள்கையையும் காணலாம்.

தனிமனிதனையும் சமுதாயத்தையும் இணைத்துக் காணும் நிலையில் ஒருவகை ஒற்றுமை இருப்பினும் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு காணப்பெறுகிறது. இதனைப் பின்னே தனிமனிதனும் சமுதாயமும் என்ற தலைப்பில் விரிவாகக் காணலாம்.

'அதிக இன்பம் அதிக மக்களுக்கு' என்ற கொள்கையினை அடிப்படையாக அமைத்து வளர்ந்ததே படிநிலை வளர்ச்சி இன்பியற் கொள்கை அவை.

தனிமனிதனையும் சமுதாயத்தையும் இணைக்கும்போது மற்றவர்கள் தனிமனிதன் என்பான் தன்னளவில் தனித்த நிலையுடையவன். அவன் ஒரு முழுமையுடைய ஒன்று (unit) முழுமையுடைய பல தனிமனிதர்களின் (units) இணைப்பே — தொகுதியே சமூகம் (aggregation of independent individuals) என்று கொண்டார்கள். ஆனால், ஸ்டீபன் என்பார் சமூகம் என்பது ஓர் உறுப்பு இணைப்பு நியதியினை அடிப்படையாகக் கொண்டது. உடம்பு என்பதுதான் சமூகம். கை என்பது உறுப்பு. ஆனால், அது ஒரு பாகம். உடம்போடிருந்தால்தான் கை வேலை செய்யும். உடம்பு என்ற முழுமையிலிருந்து நீக்கப்பெற்ற கைக்குத் தனித்த எந்த வகையான சிறப்பும் இல்லை. அவ்வாறே, சமூகத்தில் இணைந்து நிற்கும் தனிமனிதன் சமூகம் இல்லையானால் ஒரு பயனும் அற்றவன். அவன் தனித்த நிலையினன் (independent) என்பது பொருந்தாது. தன்னளவில் முடிந்த தனிநிலையினன் (individual unit) மனிதன் என்பது பொருந்தாது. சமுதாய வளர்ச்சிதான் இயற்கைப் படிநிலை வளர்ச்சி. தனிமனிதன் என்பதாக எவனோ, எந்த வளர்ச்சியோ இல்லை என்பது ஸ்டீபன் கருத்து.

பொதுவாக பெந்தம், மில், ஸ்பென்ஸர் போன்றவர்கள் சமுதாய இணைப்பினை ஒத்துக் கொள்பவர்களேயாயினும் அவர்கள் தனிமனித வளர்ச்சியின் ஒருவகை முழுமையாகவே சமுதாயத்தைக் கருதினார்கள். சமுதாய இணைப்பு இல்லையென்றாலும் தனிமனிதன் தன்னிலையில் தனித்து நிற்கும் நிலையில் சார்பற்றவன் என்று கருதினார்கள். அதனால் அவர்கள் எல்லாரும் தனிமனிதக் கொள்கையினர் (individualists) என்று கருதப் பெற்றனர். ஆனால் ஸ்டீபன், 'தனிமனிதன் என்பவன் சமூகத்தோடு இணைந்து தான் நிற்கும் சார்புற்றவனேயன்றி, சமுதாயத்தை நீங்கிய நிலையில், வெட்டப் பெற்றுக் கீழே கிடக்கும் உணர்ச்சியற்ற கை, கால் போன்றவனே தனிமனிதன்' என்று வரையறுத்துக் கூறினார்.

வளர்ச்சியடைவதும், உயர்நிலை பெறுவதும் உறுப்பு இணைப்பு அமைப்பே ஒழிய, தனி உறுப்பு மாற்றமடைவதற்குரியதேயொழிய வளர்வதற்கோ உயர்நிலை பெறுதற்கோ உரிமையுடையதன்று என்று கூறினார்.

தனித்தனி உறுப்புகளைப் பணி கொள்வதும், இன்ன இன்ன நிலையில் சூழ்நிலைக்கு ஏற்ப இவ்வாறு இணைந்து செயல்பட வேண்டும் என்பதை வரையறை செய்வதும் உறுப்பு இணைப்பு என்ற முழுமையேயொழிய, தனித்தனி உறுப்புகள் அல்ல. முழுமையானது அமைத்துக் கொடுத்த நிலையில் தனித்தனி உறுப்புகள் செயல்படுகின்றன; அவ்வளவே என்று உவமையை இணைத்துக் காட்டினார்.

முழுமையானது வலிமையும் ஆக்கமும் பெற்றிருத்தல் என்பதே சமுதாயத்தின் முடிந்த நிலை. தனிமனித இன்பம், அதிக மக்களின் அதிக இன்பம் என்பது முடிந்த கொள்கையன்று என்று கூறினார். சமுதாய வளம் (social health) என்பதே முடிந்த நிலை. சமுதாய வளம் என்பது இன்பத்துக்கு மாறுபட்டதன்று. சமுதாய வளம் என்பதனுள் இணைந்து நிற்கும் ஒரு சிறு பகுதியே இன்பம். சமுதாய வளமை, திறமை ஆகியவைகளே வாழ்வியலின் முடிந்த அறம் எனப்பெறும் குறிக்கோள் நிலைகள். சமுதாய அறம் என்பது சமுதாய உயிர்நிலை என்பதே. சமுதாய உயிர்நாடி அல்லது உயிர் நிலை என்பது தனிமனிதனிடத்தே தன் குரலை எழுப்பும்போது அது மனச்சான்று என்ற பெயரைப் பெறுகிறது. பிறர்மேற் காட்டும் பரிவு என்பதே சமுதாய உள்ளுக்கி. எனவே, தனிமனித னும் சமுதாயமும் இணைந்த இணைப்பு வெளிப்புறத் தன்மை யுடையதோ, இயந்திர அமைப்புமுறையுடையதோ அன்று; அது அகநிலைத் தன்மையுடையது; உறுப்பு இணைப்பு நியதி யுடையது.

ஸ்டீபன் என்பார் சமுதாய சமநிலைக் கொள்கையை (social equilibrium) வலியுறுத்தினார். அனைத்துறுப்புகளும் இணைந்து நிற்க, இயைந்த செயலானது ஒருவகைச் சமநிலைச் செயல் என எடுத்துக்காட்டி, அவ்வாறு அனைத்தும் இணைந்தும், இயைந் தும், சமநிலையில் நின்றும் செயற்படுவதே—திறமையாகச் செயல் படுவதே சமுதாய வளம் என்று குறிப்பிட்டார்.

இவ்வகையில் தனிமனிதனுக்குள்ள முக்கியத்துவம் ஸ்டீபன் அவர்களால் கொஞ்சமும் ஏற்றுக்கொள்ளப் பெறவில்லை. சமுதாயமே முழுமைபெற்ற, தன்னிலையுடைய தனிநிலையானது என்ற முடிவுடையவராக விளங்கினார்.

சாமுவேல் அலெக்ஸாண்டரின் அற இயலில் இயற்கைத் தேர்வுக் கொள்கை (Samuel Alexander's Theory of Natural Selection in Moral)

சாமுவேல் அலெக்ஸாண்டர் என்பார் படிநிலை வளர்ச்சிக் கொள்கையில் அற இயல் வளர்ச்சியையும் இணைத்து விளக்கிய

மூவரில் ஒருவர். இவர் ஸ்பென்ஸர் கூறிய இன்பக் கொள்கையை மறுத்து, சமுதாய வளம் அல்லது திறமையுடன் இணைந்த செயற்பாட்டுச் சமுதாயம் என்பதையே, லெஸ்லி ஸ்டீபன் என்பாரின் கொள்கையையே ஏற்றார்.

ஸ்பென்ஸர் என்பார் படிநிலை வளர்ச்சிக் கொள்கை ஒரு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை வலியுறுத்தினார். படிநிலை வளர்ச்சியில் அற இயற் கோட்பாடு இருக்கிறது என்பதை ஒத்துக்கொண்டார்களேயன்றி, படிநிலை வளர்ச்சிக்கு ஒரு நோக்கம் உண்டு என்பதை ஸ்டீபனும் அலெக்ஸாண்டரும் ஒத்துக்கொள்ளவில்லை. ஆகையால், ஸ்பென்ஸரின் கொள்கையானது நோக்கப் படிநிலை வளர்ச்சிக் கொள்கை (teleological evolutionism) எனவும், ஸ்டீபன், அலெக்ஸாண்டர் என்ற இருவரின் கொள்கையும் நோக்கமில்லாத படிநிலை வளர்ச்சிக் கொள்கை (evolution without teleology) எனவும் பெயர் பெற்றன.

உயிரியல் படிநிலை வளர்ச்சியில் காணப்பெறும் முக்கியக் கொள்கைகள் இயற்கைத் தேர்வு, தகுதியுடையனவே தொடர்ந்து வாழ்தல் என்பவைகளே.

தற்செயலாக நிகழும் மாறுபாடுகள் மனிதர்களிடத்திலும் இனங்களிடத்திலும் காணப்பெறலாம். சிலவகையான நடத்தைகளைக் கைக்கொள்வதால், மனிதர்களாயினுஞ் சரி, இனங்களாயினும் சரி நீண்ட நாள் வாழமுடிகிறது. மாறான நடத்தைகளை மேற்கொண்டவர்கள் அழிந்துபோகிறார்கள். இதைத்தான் பொதுவாக 'உயிர் வாழவேண்டி நடக்கும் போராட்டம்' (struggle for existence) என்றும், அது விலங்குகளிடம் காணப்பெறுகின்றது என்றும் கொண்டது பொதுக் கொள்கை. அதையே மனிதர்களிடத்தும் அமைத்துக் காணலாம் என்றார் அலெக்ஸாண்டர்.

அலெக்ஸாண்டர், சமுதாயச் சமநிலைக் கொள்கை அமைப்புடன் செயற்படும் அமைப்பானது தன்னளவில் நிறைவுடன் விளங்கவே வாழ்வியலின் முடிந்த நிலைக் குறிக்கோள் என்றார். வலிமையுடையது வாழும், வலிமையற்றது அழியும் என்ற படிநிலை வளர்ச்சிக் கொள்கையை அற இயலுக்கு இணைத்துக் காட்ட முற்பட்ட அலெக்ஸாண்டர், உயர் நிலைக் குறிக்கோட் கொள்கைகளைப் பலர் பலவாறு வகுக்கலாம்; சமுதாய ஒருங்

கிணைப்புச் சமநிலை அமைப்பில் நின்று செயற்படும் கொள்கையே வலிமைக் கொள்கை. ஏனைய கொள்கைகள் வலிமையற்றவை; அழிந்துபோகும் கொள்கைகள் என்றார்.

இயற்கைத் தேர்வு என்பதை அடிப்படையாகக் கொண்ட போரானது மனிதனுடைய அற ஒழுக்கம் எனப்பெறும் நடத்தைகளிலும் அமைகிறது. ஆனால், அது வலிமை அற்றவனுக்கும் வலிமை உள்ளவனுக்கும் நடைபெறும் போர் அன்று. அது மனித நடத்தைகளுக்கும் அவனுடைய உயர்நிலைக் குறிக்கோள் கொள்கைகளுக்கும் நடைபெறும் போர் ஆகும். தனி மனிதனுடைய தனித்த வாழ்வியல் முறையானது இடருறுவது அன்று. வாழ்வியல் குறிக்கோள் கொள்கைகளுள் வலிமை வாய்ந்த கொள்கையானது வலிமையற்ற குறிக்கோள் கொள்கைகளை அழித்துவிடுவதற்குரிய போர் என்று விளக்கிக் காட்டினார்.

'அறவாழ்வில் இயற்கைத் தேர்வு' என்ற ஒரு கட்டுரையை எழுதிய அலெக்ஸாண்டர், தகுதியுடையனவே தொடர்ந்து வாழும் என்ற நிலைமைக்குரிய போராட்டத்தை மக்களுக்குள் நடக்கும் போராட்டமாகக் கருதக் கூடாது என்றும், நெறி முறைகளுக்குள் நடக்கும் போராட்டமாகவே கருதவேண்டும் என்றும், அதனை இயற்கையோடு இணைந்தவை என்றும், இயற்கைக்கு மாறானவை என்றும் உலக வழக்கிற் காண்பதுபோலவே அமைத்துக்கொள்ளலாம் என்றும் சில சூழ்நிலைகளுக்குப் பலவகையான நடத்தைகள் பொருந்துவனவாக அமையலாம்; ஆயினும், ஒரு நடத்தைதான் எல்லாச் சூழ்நிலைக்கும் ஈடுகொடுத்து, என்றும் வாழும் இயல்புடையதாக அமையும்; அது இயற்கைத் தேர்வு எனக் கொள்ளுதல் வேண்டும்; சமூக வளத்தையும் முன்னேற்றத்தையும் அடிப்படையாகக் கொள்ளவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

முடிவுரை

உயிரியற் படிநிலை வளர்ச்சியியலான இன்பியற் கொள்கை (evolutionary hedonism) மூன்று பேராசிரியப் பெருமக்களால் விளக்கம் செய்யப்பெற்றது.

உயிரியற் படிநிலை வளர்ச்சியோடு அற இயற் படிநிலை வளர்ச்சியும் இணைந்தே செல்கிறது என இரண்டையும் இணைத்துக் காட்டிய பெருமை இம்மூவரையும் சாரும்.

தன்னலக் கொள்கை (egoism), பிறர்நலக் கொள்கை (altruism) என்ற இரண்டையும் இணைத்து சமுதாயத்தையும் தனிமனிதனையும் ஒரே உறுப்புநிலைக் கூட்டமைப்பு நியதியில் இணைத்து ஒருவகை முழுமையான நடத்தையையும், முழுமையான குறிக்கோள் உயர்நிலைக் கொள்கையையும் அமைத்துக் கொடுத்த சிறப்பு இம்மூவருக்கும் உண்டு.

(இனி, தற்கால உயிரியற் படிநிலை வளர்ச்சிக் கொள்கை ஒரு புதிய மாற்றம் பெற்றுள்ளது. அதனை விளக்கியவர்களில் மார்கன், பெர்க்ஸோன், பெர்டேவ் என்ற மூவரும் தலை சிறந்தவர்கள். பாட அமைப்பையும், படிப்பவர்களின் மன நிலையையும் கருதி, அவர்களின் கொள்கைகள் இங்கே எழுதப் பெறவில்லை.)

(4) (ஏ) அறிவியலான பயன்முதற் கொள்கை

முன்னுரை

பயன்முதற் கொள்கையைத் தோற்றுவித்த மாமன்னர்கள் என்று புகழப் பெறுபவர்கள் ஜெர்மி பெந்தம் என்பாரும் ஜே. எஸ். மில் என்பாரும் என்று கூறுவது பொது இயல்பு. பயன் முதற் கொள்கையினரில் மிகச் சிறந்த ஆய்வாளர்கள் என்று போற்றப் பெறுகிறவர்கள் இருவர்— ஜே. எஸ். மில் அவர்களும் ஹென்றி ஸிட்ஜ்விக் அவர்களுமே. பெந்தம் என்பவரைக் குறிப்பிடாமலேயே ஜே. எஸ். மில் அவர்களையும் ஹென்றி ஸிட்ஜ்விக் அவர்களையும் மட்டும் எடுத்துக்கொண்டு பயன்முதற் கொள்கையை விளக்க முற்படுபவர்கள் பலர். பயன் முதற் கொள்கையினரில் உண்மையிலேயே மிகச் சிறந்து விளங்கியவர் ஸிட்ஜ்விக் என்ற கருத்துடையவர்களாகப் பல அறநூலாசிரியர்கள் விளங்கியுள்ளார்கள். அவர்களுள் C.D. பிராட் என்பார் 'அறக் கொள்கைகளில் ஐந்து அமைப்புகள்' (Five types of ethical theory) என்று ஒரு நூல் எழுதியுள்ளார். அந்நூலை அடிப்படையாகக் கொண்டே இத்தலைப்பில் உள்ள செய்திகள் எழுதப் பெறுகின்றன.

ஸிட்ஜ்விக் என்பாருடைய கொள்கையானது பொதுநோக்கில் பிஷப் பட்லர் அவர்களுடைய உள்ளுணர்வுக் கொள்கையை ஒத்து விளங்குகிறது என்று கூறும் கருத்துண்டு. பிஷப் பட்லருடைய உள்ளுணர்வுக் கொள்கையோடு ஒத்த நிலையில் சிலவற்றைக் கொண்டாலும், தான் எடுத்துக் கொண்ட சிக்கலைத் தீர்க்கும்

வகையில் பட்லருடைய கருத்து ஒத்து வராது என்று விலக்கிவிட்டு வேறு ஒரு கருத்தை நாடிச் செல்லுகிறார்.

தனிமனிதனுடைய இன்பியற் கொள்கையைவிட, பயன் முதற் கொள்கையானது சற்றே பொதுமையை அடிப்படையாகக் கொண்டது எனலாம். ஆனால், ஸிட்ஜ்விக் என்பார் கொள்கையானது பயன்முதற்கொள்கையை ஓர் உலகம் தழுவிய பொதுமையுடையதாக ஆக்குகின்றது. அதனால் இது உலகியல் நோக்கிலான பயன்முதற்கொள்கை (universalistic utilitarianism) எனவும் கூறப்பெற்றது.

இன்பியற் கொள்கை

ஸிட்ஜ்விக் இன்பம் ஒன்றே வாழ்வின் உயர்நிலைக் குறிக்கோளாக அமைந்திருக்கிறது. அது வேறு ஒரு குறிக்கோளை நமக்குக் காட்டி, அக்குறிக்கோளை அடைவதற்கு ஒரு கருவியாக இன்பம் என்பது இருப்பதில்லை. ஆகையால், இன்பம் என்பது தன்னளவில் நிறைவு பெற்ற ஒருவகை முழுமையான குறிக்கோள் என்ற முடிவை அமைக்கிறார். தன்னைத் தவிர வேறு முடிவு இல்லை; தானே என்று அமைவதும், நன்மை என்பதாக அமைவதும், எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டது என நின்று விளங்குவதும் 'இன்பமே' என்று குறிப்பிட்டார். அறிவு, அழகு, அறம் ஆகியவைகள் உயர்ந்தவைகளாகக் கருதப் பெறுகின்றனவாயினும், அவைகள் கருவிகளாக நின்று இன்பத்தை அடைவதற்குத் துணை செய்கின்றன என்று குறிப்பிடுகிறார். இது பற்றிய வினாக்களை விரிவாக ஏற்றுக்கொள்ளும் ஸிட்ஜ்விக் அவர்கள், மனிதன் வாழ்வில் அடைய வேண்டுவனவாக அனைவராலும் குறிக்கப் பெறும் கொள்கைகளையெல்லாம் இணைத்து நோக்கி ஆராய்வோமானால் இறுதியில் அறிவு, கலை ஆகிய எல்லாம் இன்பத்தோடுதான் தொடர்பு கொள்ளுகின்றன என்று திட்டவட்டமாகக் கூறிவிடலாம். இவ்வகையில் ஸிட்ஜ்விக் அவர்களின் கொள்கை இன்பியற் கொள்கை என்றே முடிவு செய்யலாம்.

அறிவியற் கொள்கை

ஸிட்ஜ்விக் என்பார் இன்பம் என்பதே வாழ்வியலின் குறிக்கோள் நிலையிலான முடிவு என்பதை நாம் எப்படி ஒத்துக் கொள்வது என்ற வினாவை அமைத்தால் அவர் கூறுகின்ற விடை, நம்முடைய பொது அறிவு அப்படித்தான் சொல்கிறது என்றார்.

இந்த ஒரு தொடரிலிருந்தே அவருடைய கொள்கை என்ன என்பது நிச்சயம் பெறுவதாயிற்று.

பொது அறிவு என்பது 'Practical reason' என்று பொருள் படும். இன்பியற் கொள்கையை அறிவின் வழியில் ஏற்றுக் கொள்வது ஒருவகை; உள இயலின் வழியாக, அனுபவத்தைத் துணைக் கொண்டு ஏற்றுக்கொள்வது இன்னொரு வகை. இன்பமே வாழ்வியலின் குறிக்கோள் என ஏற்றுக்கொள்வதை அறிவியல் அறிவுறுத்த நாம் ஏற்றுக்கொள்வோமானால், நாம் அறிவுக்கு முதன்மை தருகிறோம். அறிவு அவ்வாறு கூறுவதால் இன்பத்தை ஏற்றுக்கொள்கிறோம் என்பது கருதப்பெறுகிறது. அவ்வகையில் அறிவுக்கு முதன்மையும் அதன் வழியிலான இன்பமும் எனப் பெற்று, அறிவுவழி இன்பியற் கொள்கை என்று கருதப்பெறும். இக் கொள்கையில் இயல்பாக அமையும் குறை ஒன்று உண்டு. இன்பியற் கொள்கையில் அடிப்படை முரண்பாடு (Paradox of Hedonism), இன்பத்தை உயர்ந்தது எனக் கொள்ளுவதைக் கருத்தளவில் நிறுத்தி, அறிவுக்கே முதன்மை கொடுக்கிறோம் என்பதாகும்.

ஸிட்ஜ்விக் என்பாரும் இவ்வழியினரே. ஏனெனில், அறிவு அவ்வாறு சொல்வதால் இன்பமே வாழ்வியற் குறிக்கோள் என் பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஸிட்ஜ்விக் கூறுகிறார்.

இங்கே ஸிட்ஜ்விக் கூறும் 'Practical reason'என்ற தொடருக்கு மனச்சான்று அல்லது உள்ளுணர்வு என்பதனோடு ஒத்த விளக்கங் களை அமைத்துக் காட்டி, இவர் இன்பியற் கொள்கையினர் அல்லர்; அறிவியற் கொள்கையை அடிப்படையாகக் கொண்டவரே என விளக்கினார்கள்.

மூவகை அறக் கொள்கைகள்

ஸிட்ஜ்விக் என்பார் மூன்று அறக் கொள்கைகளைக் கூறு கிறார். ஆனால், அவை மூன்றையும் அவர் நிறுவ முயலும்போது, ஒவ்வொருவரிடத்திலும் இயற்கையாக அமைந்துள்ள பொது அறிவினாலேயே அம்மூன்றையும் நிறுவுகிறார். ஸிட்ஜ்விக் என்பார் கூறும் 'Practical reason' என்பதைக் கான்ட் கருதியுள்ள செயல் முறை அறிவு என்பதாக எண்ணியும், பட்லர் என்பார் கொள்ளும் உள்ளுணர்வு என்பதாக எண்ணியும் விளக்கியுள்ளார்கள். ஆனால் ஸிட்ஜ்விக் கூறுவது உள்ளுணர்வுதான் என்றாலும், அது பொது மக்களின் மனத்தில் சாதாரணமாகக் காணப்பெறும் ஒருவகை யான உள்ளுணர்ச்சி என்பதாகத்தான் ஸிட்ஜ்விக் அமைத்துக் கொள்கிறார். இக்கொள்கையை அவர் கூறும் அறக் கொள்கை விளக்கங்களிற் காணலாம்.

(1) செயல் முன்னறிவு (Rational Prudence): ஸிட்ஜ்விக் மூன்று அறக் கொள்கைகளை எடுத்துக்காட்டி, இவைகளே

தன்னலம், பொதுநலம் ஆகியவைகளின் தன்மைகளை ஒழுங்கு படுத்தி, அவைகளை நேர்மையான வகையில் கைக்கொள்ள வேண்டிய பொதுமை அறிவை மக்களுக்கு நல்குகின்றவை என்று குறிப்பிடுகின்றார். அற இயலான மூன்று கூறுகளை எடுத்துக் காட்டினாலும் அவை முறையே மூன்று கொள்கைகளை அடிப் படையாகக் கொண்டவை என்பது அவர் கருத்து.

அற இயலான தன்னலச் சார்புக் கொள்கையானது (rational self-love) ஸிட்ஜ்விக் அவர்களால் செயல் முன்னறிவுக் (rational prudence) கொள்கையாகப் பேசப் பெறுகிறது. இதன் மூலம் தன்னலம் பற்றிய கருத்தும் ஒருவனுக்கு ஒருவகை உள்ளுணர் வினாலேயே அமைகிறது என்று குறிப்பிடுகிறார். ஒருவன் தன்னுடைய இன்பத்தைத் தான் தேடி அடையவேண்டும் என்ற எண்ணம் பொதுவாக அமைந்தாலும் அவனுடைய உள்ளுணர்வு ஒன்று அவனை நெறிப்படுத்துகிறது. அவன் தன்னுடைய இன்பத்தை விரும்பினாலும் அது அவனுடைய முழுமையை அடிப் படையாகக் கொண்டதாக அமையவேண்டும். ஏதோ ஒரு பகுதி யை மட்டும் நிறைவு செய்கின்ற தன்னலமாக அமையக்கூடாது என்பதை வலியுறுத்துகிறது. அவ்வாறே தற்போது கிடைக்கப் பெறும் இன்பத்துக்கும் இனி வருங்காலத்தில் கிடைக்கும் இன்பத்துக்கும் அமைந்த முழுமையான நிலைமைகளை ஆராய வேண்டும்.

எனவே, அறிவு வயப்பட்ட அவன் செயல் முன்னறிவு அவனுடைய தன்னலஞ்சார் இன்பத்தை இரண்டு வகைகளில் வரையறை செய்கிறது. ஒன்று, ஒருவன் தன்னுடைய ஏதேனும் ஒரு பகுதிபற்றிய இன்பத்தை விரும்பாமல் முழுமை பற்றிய இன்பத்தைத் தேடி அடைந்தேயாக வேண்டும். இரண்டு, நிகழ் காலத்தில் அமையும், ஏதோ ஒருசில நேரம் அமைவதாகிய இன்பத்தை நீக்கிவிட்டு, இன்றும் இனியும் வரக்கூடிய முழுமை இன்பத்தைத் தேடி அடைந்தேயாக வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

(2) அறிவு இயலான இரக்கவுணர்வு (Rational Benevolence) ; அறக் கொள்கைகள் மூன்றனுள் இதுவே பயன் முதற் கொள்கைக்கு உயிர்நாடியானது. மற்றவர்களுடைய நன்மை யையும் இன்பத்தையும் உன்னுடைய நலம் போலவே இன்பம் போலவே கருதி மதித்து நடக்க வேண்டும் என்பதை இவ்வுணர்வு வலியுறுத்துகிறது. அறிவு நிலையானது எந்த ஒரு தனி மனிதனையும் அவன் நலம் பற்றி மட்டுமே வாழவேண்டும் என்று வலியுறுத்தவில்லை. பிறருடைய இன்பமும் நம் இன்பம்போலவே

மதிக்கத் தகும் தன்மையுடையது என்று கூறி, அடுத்த நிலையில் தன்னுடைய இன்பத்தைவிட, மற்றவர்களின் இன்பம் பெரியது என்று குறிப்பிடுகிறார். நான் என்னுடைய நலத்தை மட்டும் கவனித்து, பிறர் நலம் கவனிக்கவில்லையானால் நான் சிறிய நன்மையை ஏற்று, மற்றவர்கள் எல்லாருடைய நன்மையையும் புறக்கணிப்பதாக அமைந்துவிடக் கூடாது. ஸிட்ஜ்விக் இக் கருத்தைக் குறிக்கும்போது மற்றவர்களுடைய இன்பம் பெரியது என்னுடைய இன்பம் சிறியது. நான் பிறருடைய பெரிய இன்பத்தை முக்கியமாகக் கருதுவேனேயொழிய என்னுடைய சிறிய இன்பத்தை முக்கியமாகக் கருதமாட்டேன் என்று கூறுவதால் மற்றவர் இன்பம் உயர்ந்தது என்ற கருத்தை அறிவானது அமைத்துத் தருகிறது என்று குறிப்பிடுகிறார்.

(3) நேர்மை: இதுதான் உள்ளுணர்வுடன் ஒத்தநிலையுடைய அறக்கொள்கை எனக் கருதுகிறார். இத்தகைய உள்ளுணர்வினால் தான் நாம் சில அறக் கொள்கைகளை அறிய முடியும் என்றும் கருதுகிறார். இத்தகைய உள்ளுணர்வுதான், எந்த ஓர் அறக் கொள்கையையும் அதனதன் நேர்மையிலிருந்து விலகாதவாறு பாதுகாப்பளிக்கிறது. பொதுவாக, தன்னலக் கொள்கையும் ஒரு கொள்கையாக அமையுமா எனின் அக்கொள்கையிலும் ஒருவகை நேர்மை உண்டு என்பதனாலேயே அக்கொள்கையும் இன்றுவரை மக்களால் போற்றப் பெறும் நிலையைப் பெற்றுள்ளது.

தன்னல இன்பியற் கொள்கையும் ஓர் உள்ளுணர்வை அடிப்படையாகக் கொண்டதுதான் என்பது அவர் கருத்து. என்னுடைய செயலால் எவ்வகையான விளைவுகள வந்தபோதிலும், நான் எனக்குத் தேவையான அளவு பெருமகிழ்ச்சியை நாடவே கடமைப் பட்டுள்ளேன் என்பதே அந்த உள்ளுணர்வு.

அவ்வாறே பயன் முதற் கொள்கையையும் ஒருவகை உள்ளுணர்வுதான் மக்கள் மனத்தில் இடம் பெற வைத்தது என்று கொள்ள வேண்டும். பயன் முதற் கொள்கைக்கு உரிய விதிகளை அக்கொள்கையை மேற்கொண்ட தத்துவ அறிஞர்கள் வேண்டுமென்றே உண்டாக்கவில்லை. நாளடைவில் பயன் முதற் கொள்கைக்கு ஆதரவாகிய உள்ளுணர்வு அவ்வப்போது சிலகருத்துகளை மக்கள் மனத்தில் பதிய வைத்துக்கொண்டே வருகிறது. மனித இனத்தின் அனுபவத்தால் தேவையான மாறுபாடுகள் அடைந்து, ஓரளவு நம் நனவுக்குத் தெரியாமலேயே அவ்வளவு இயற்கையாக, நம்மிடம் வந்து அமைந்து, பயன்முதற் கொள்கையின் நோக்கத்தை அடைய முயலுகின்றன என்று குறிப்பிடுகிறார்.

ஸிட்ஜ்விக் என்பார் எல்லாவகை அறக்கொள்கைகளிலும் ஒருவகை உலகியலான உள்ளுணர்வு அமைந்துள்ளது என்று குறிப்பிடுகின்றார். இத்தகைய உள்ளுணர்வுதான் கொள்கைகளை வகுப்பதாகவும் செயற்படுத்துவதாகவும் அமைகின்றது என்று கொள்கிறார்.

கொள்கைகள் பகுத்தறிவுடன் இணைந்த உள்ளுணர்வால் விளக்கப்பெறும்போது எத்தகைய தன்மையை அடைகின்றன என்பதையும் குறிப்பிடுகின்றார்.

தன்னலம் பேணுவதே இன்பியற் கொள்கை. ஆனால் இது பகுத்தறிவுடன் இணைந்த உள்ளுணர்வினால் விளக்கமடையும் போது 'நலன்' என்று சொல்லப் பெறுவதால் ஒரு பகுதியை மட்டும் நாடாமல் மொத்த நலனையும் முழுமையான நலனையும் நாடவேண்டும் என்றும், மற்றவர்களுடைய நலனையும் தன்னலம் போல் பேணிக் காப்பாற்ற வேண்டும் என்றும் தெரியவருகிறது.

எனவே, ஸிட்ஜ்விக் என்பார் அறக் கொள்கையைத் தனித்த பார்வையில் சிந்திக்கிறார் எனக் கொள்ளவேண்டும்.

நடைமுறை அறிவின் இருபொருள் வாதம் (Dualism of Practical Reason)

எந்த ஓர் அறக் கொள்கையிலும் அதற்கேற்ற ஒருவகை உள்ளுணர்வுதான் விதிகளை வகுத்து மக்களுள்ளத்தில் விளக்கம் பெறச் செய்திருக்கிறது என்ற கொள்கையை உடையவர் ஸிட்ஜ்விக்.

பயன்முதற் கொள்கையை நாம் ஒப்புக் கொள்ளும்போது தன்னலக் கொள்கையை நாம் முழுமையாக மறுத்துவிட்டோம் என்பதாகாது. பயன்முதற் கொள்கையில் தன்னலக் கொள்கைக்கும் அற இயல்முறையில் ஒருவகைத் தனியிடம் உண்டு என்று குறிப்பிடுகின்றார். எனவே, பயன்முதற் கொள்கையை ஒப்புக் கொள்வதென்றால்—நான் எனக்கேற்ற மிக அதிக இன்பத்தைத் தேடியேயாக வேண்டும்—என்ற கருத்துடைய தன்னலக் கொள்கையைத் தரும் தானே விளங்கும் உணர்வையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

தன்னலக் கொள்கை தவறானது, பயன்முதற் கொள்கையே உயர்ந்தது என்று மற்றவர்கள் முடிவு கொள்ளும்போது, ஸிட்ஜ்விக் அவர்கள் தன்னலக்கொள்கையின் அடிப்படையில்தான் பயன்முதற் கொள்கை அமைக்கப் பெற்றுள்ளது; ஆகையால்,

அதைப் புறக்கணிக்க இயலாது என்று கூறுகிறார். இரண்டு கொள்கைகளுக்கும் ஒத்த மதிப்பினை அளிப்பதாயின் இருவகையான சார்பற்ற தனி நெறிமுறைகளை நாம் மேற்கொள்ள வேண்டி வருகிறது.

தன்னலக் கொள்கைப்படி நாம் நம் இன்பங்களையும் பயன் முதற் கொள்கைப்படி, எல்லா நனவு நிலை பெற்ற மக்களுக்கும் ஏற்புடைய மிக அதிக மகிழ்வையும் நாடவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இவ்வாறு இரண்டையும் விடாமல் பற்ற வேண்டிய நிலையையே நடைமுறை அறிவின் இருபொருள் வாதம் என்று குறிப்பிடுகிறார் ஸிட்ஜ்விக்.

சிறந்த முறையில் அறவழியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று எண்ணும் ஒருவர் 'தம்முடைய சொந்த இன்பத்தையே முடிவான குறிக்கோளாகக் கொள்வதா? எல்லா மக்களுடைய இன்பத்தையும் முடிவான நோக்கமாகக் கொள்வதா?' என்ற வினாக்களுக்கு விடையை ஆராய்ந்து அறிய வேண்டும் என்ற கட்டாயத் தன்மை உண்டாகிறது. நடைமுறையில் தன் இன்பம், பொது இன்பம் என்பவைகளில் அவ்வளவு வேறுபாடு இல்லை என்றாலும் ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டிய நிலைமை கட்டாயமானது என்று கருதுகிறார்.

நடைமுறையில் இச்சிக்கலைத் தீர்ப்பது எவ்வாறு?

ஸிட்ஜ்விக் அவர்கள் தன்னலம், பிறர்நலம் ஆகிய இரண்டையும் பொதுமை உள்ளுணர்வு அழுத்தமான வலிமை கொடுத்திருப்பதால், இரண்டும் தத்தம் போக்கில் நீண்டு நிலைத்து நிற்கும் கொள்கைகளாகவே அமைந்துள்ளன என்றார். இச்செயல் முறைச் சிக்கலைத் தீர்க்கும் வழி உண்டா என்ற வினாவை எடுத்துக் கொண்டு, உளவியல் துணை கொண்டும், அடிப்படைத் தத்துவ இயல் கொண்டும் தீர்க்கலாம் என்றார்.

(1) உளவியற் கொள்கை: ஒருவன் இரக்க உணர்வு காரணமாகவும் தயாள குணம் காட்டுவதன் மூலமாகவும் வரும் இன்பத்தைக் கருத்திற் கொள்வோமானால், ஒருவன் மற்றவர்களின் இன்பத்தையே எண்ணிச் செயற்படும்போது அவனுக்கு அதிக அளவு இன்பம் கிடைக்கிறது என்று கொள்ளலாம். இத்தகைய அடிப்படையில், மக்களுக்குச் சேவை செய்வதையே தன் மகிழ்ச்சிக்கு ஆதாரம் அல்லது மூல காரணம் எனக் கொள்வதற்

குரிய பல நிகழ்ச்சிகளை நாம் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம், என இவ்வாறு உளவியல் வாதத்தின் மூலம் இரண்டையும் இணைக்கலாம் என்றார்.

(2) அடிப்படைத் தத்துவ இயல்: அடிப்படைத் தத்துவ இயல் கூறும் கருத்துகளின்மூலம் இறைவன் என்ற பரம்பொருள் ஒன்று உண்டு எனக் கொண்டு, பயன்முதற் கொள்கையையே சார்ந்து செயல்பட்டு விடுவோமானால், அவனே எல்லா வகை நிகழ்ச்சிகளையும் உருவாக்குபவன்; ஆகையால், அவன் மற்றவர்களின் மகிழ்ச்சியையே நாடி, அதற்குரிய செயல்களிலேயே ஈடுபட்டவன்; என்னென்ன நன்மையை அடையவேண்டுமோ, அவைகளை அவனே உண்டாக்கிக் கொடுத்துவிடுவான் என எண்ணி அமைதியுறலாம். இவ்வுலகில் இல்லையென்றாலும் மறு உலகிலானது படைத்துக் கொடுத்துவிடுவான் என்று கொள்வதன்மூலம் இச்சிக்கல் தீர வழியுண்டு என்று சொல்கிறார்.

மதிப்பீடு

மேலே கூறப்பெற்ற இருவகை விளக்கங்களாலும் சிக்கல் தீர்ந்துவிடுமா என்ற வினாவுக்கு ஸிட்ஜ்விக் அவர்களே விடை கூறுகிறார். தன்னல இன்பியற் கொள்கையிலும் பயன் முதற் கொள்கையிலும், செயல்முறையில் காணும் முரண்பட்ட கருத்துகளையும் இவை இணைத்துவிட்டன என்று கொள்ளமுடியாது. இவைகளை ஒருவகை ஊகம் என்று வேண்டுமானால் கொள்ளலாம். இவைகள் ஊகம் ஆனவைகள் ஆகையால் இவைகளை உறுதிப்படுத்த வேறு காரணங்கள் அமையவேண்டும்.

மேலே கூறப்பெற்ற உளவழிக் கோட்பாட்டையோ, அடிப்படைத் தத்துவக் கோட்பாட்டையோ ஸிட்ஜ்விக் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

பொது அறிவு தரும் புனிதநெறி

ஸிட்ஜ்விக் என்பார் நேர்மை (Justice) எனப்பெறும் அறக் கொள்கையை விளக்கும்போது பிறருடைய இன்பத்திலேயே எல்லாவற்றையும் அடக்கமுடியும் என்ற கருத்தையே உள்ளுணர்வு தருகிறது என்று கொள்கிறார். பெரிய இன்பம் என்று சொல்லும் போது, ஒருவன் தன்னுடைய முழுமை இன்பமும் அதை நோக்கும்போது சிறியதே என்று குறிப்பிட்டுவிட்டு, மிகுந்த அல்லது பெரிய இன்பத்தையே நாடவேண்டும் என்று குறிப்பிடும் போது, அது தன்னலத்தை வெறுத்ததாக அமையாது, அது தன்னலம் தழுவியதே என்றும், மற்றவர்களின் நலனைக் கருதி

ஒருவன் துன்பம் அனுபவிக்கும்போது அது ஒருவன் தன்னையே தியாகம் செய்வதாக அமைகிறது என்றும் கருதும்போது, மற்றவர்களின் இன்பம் நாடுதலையே அற முடிவாகக் கொள்ள வேண்டும் என்ற முடிவு நல்ல முடிவாகத் தோற்றம்பெறுகிறது.

இங்கே ஸிட்ஜ்விக் விளக்கும் பொது அறிவுத் தன்மையே அவர் கொள்கையில் விளங்கும் சிறப்பு.

அறநூல்களில் தன்னலம், பிறர்நலம் என்ற இரண்டனுள் எதை மேற்கொள்வது என ஆயும் ஆய்வு ஒருபுறமிருக்க, இதைப் பற்றிய பொதுமக்கள் கருத்து எவ்வாறு இருக்கிறது என்று காண வேண்டும் என நம்மைச் செயற்படுத்துகிறார்.

1. செய்பவனுக்கு மட்டுமே இன்பம் தரும் செயலை பொது மனிதன் எவனும் நல்ல செயலென்று ஏற்பதில்லை.

2. மற்றவர்களுக்கு இன்பம் தருவதுபோல் மறைமுகமாகத் தனக்கு இன்பம் தேடுவது வஞ்சகச் செயல் என்பது சாதாரண மனிதனுக்கும் தெரிகிறது.

3. மற்றவர்களின் இன்பத்தைக் குறைக்கச்செய்து, அதனால் தன் இன்பத்தை அந்த அளவுக்குப் பெருக்கிக்கொள்ள ஒருவனுக்கு உரிமை உண்டு என்பதை எந்த ஒரு பொது மனிதனும் ஏற்பதில்லை.

4. மற்றவர்களுக்குத் துன்பம் விளைவிப்பதால் நமக்கு எவ்வளவு இன்பம் வருவதாக இருந்தாலும் அதைச் செய்ய ஒரு தனிமனிதனுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பது ஒரு சாதாரண மனிதனுக்கும் தெரியும்.

5. மற்றவர்களின் இன்பத்துக்காக நாம் துன்பத்தையும் ஏற்கலாம். அது ஒருவகையில் தியாகமே.

மேலே கூறப்பெற்றவைகள் ஒவ்வொரு சாதாரண மனிதனின் உள்ளத்திலும் தாமாக விளங்கும் அறக் கொள்கைகளாக அமைந் திருப்பதை யாவரும் நன்கறிவர். சாதாரண மனிதன் உள்ளத்தில் இத்தகைய கருத்துகளை யார் சென்று பதிவு செய்திருக்க முடியும் என்றால் அங்கேதான் ஸிட்ஜ்விக் கூறுவதை நாம் சிந்திக்க வேண்டும்.

எல்லாவகையான அறச் செயல்களும் தத்தமக்கேற்ற தனித் தன்மை உடையவைகளே; அவை மனிதனின் மகிழ்வைப் பெருக்கும் வல்லமை பெற்றவைகளே. அறவிதிகள் பொதுவாகவே தன்னலமற்ற தன்மையையும் நேர்மையையும் கொண்டு விளங்கு கின்றன. சாதாரண மனிதன் மனத்தில் விளங்கும் அறநெறிகள் பொதுமை விதியோடு இயைபுபட்டு நின்ற கோட்பாடுகள்.

பொதுமை விதியை உள்ளடக்கிய ஒருவகை உணர்வு எல்லருடைய மனத்திலும் அதைப் பதியுமாறு செய்துவிடுகிறது.

மேலும் ஒரு குறிப்பு, தன்னலம் சார்ந்த, தன் மகிழ்வுக்குரிய செயலை மேற்கொண்டு செய் என்று எந்த அற நூல்களும் சொல்லவேண்டியதில்லை. ஏனெனில், அவைகளை மனிதன் தானாகவே செய்துவிடுவான். எனவே, அறநெறி என்பது ஒரு வகைத் தியாகத்தையும் நேர்மையையும் எதிர்பார்க்கிறது என்பதை உணரலாம்.

எனவே, செயல்முறைப்படும் பொது அறிவு என்பது இயற்கையின் உள்ளீடாகஅமைந்த பொதுமைஅறத்தைத்தழுவிஅதனுடன் இணைந்து செயல்படுகின்ற ஒன்று எனக் கொள்ளுதல் வேண்டும். எனவே, அத்தகைய பொதுமை அறமே, உள்ளுணர்வு என நின்று அறக் கொள்கைகளின் விதிகளை வகுத்து மக்கள் மனத்தில் காலத்தை உதவியாக நிறுத்தி அமைத்துவிடுகிறது. எனவே, பிறர்நலக் கொள்கையை வலியுறுத்தும் பொது அறிவுச் செயற்பாட்டு முறை முன்னமேயே மக்கள் உள்ளத்தில்—சாதாரண மனிதர்களின் உள்ளத்தில் பதிந்திருக்கிறது; அதைப் பதிவு செய்தது பொதுமை அறிவு எனப்பெறும் உள்ளுணர்வே.

(4) (ஐ) குறிக்கோளியலான பயன்முதற் கொள்கை

(1) ராஷ்டால் என்பாரின் கொள்கை

முன்னுரை: பயன்முதற் கொள்கை (Utilitarianism) யானது பெந்தம், மில் என்பவர்களால் துவக்கவும் விரிவுசெய்யவும் பெற்றது என்றாலும், ஸிட்ஜ்விக் என்பவரால் சிறப்புற அது கொள்கை விளக்கம் பெற்றது என்று கொள்ளலாம். பயன்முதற் கொள்கையானது இன்பியலிலிருந்து கிளைத்தெழுந்தது ஆகையால் வாழ்வியல் குறிக்கோளாக இன்பத்தைக் கொண்டது. ஆயினும் அந்த வாழ்வு அறிவினால் செம்மை செய்யப்பெற்று வருதல் வேண்டும் என்றும் கூறப்பெற்றது. அறிவு என்பதும் அறம் என்பதும் ஒன்றே என்றும், அறிவு அறக்கொள்கையாகவும் இன்பம் அதனுடன் இணைந்த நன்மையாகவும் கருதப்பெற்று, அவ்வடிப்படையிலேயே பயன்முதற் கொள்கை அமைந்தது.

ஸிட்ஜ்விக் போன்றவர்களின் கொள்கையிலிருந்து இன்பம் குறிக்கோள் அனுபவம் என்றாலும் அறம், அறிவு, அழகு போன்றவைகள் கருவிகளாகக் கருதப்பெற்றன. அறம், அறிவு, அழகு போன்றவைகளைக் கொண்டு இன்பம் பெறுகிறோம் என எடுத்துக்காட்டியது பயன்முதற் கொள்கை.

ராஷ்டால் என்பவர் குறிக்கோளை இன்னது என வரையறை செய்யும் பணியில் ஈடுபடுகிறார். இன்பம் என்பதை வாழ்வின் குறிக்கோள் என்று கொள்ளவில்லை. அறம், நன்மை என்ற இரண்டன் அடிப்படையில் தம்முடைய அறக்கொள்கையை வரையறுத்தார்.

பொதுவாக நோக்கும்போது ராஷ்டால் அவர்களின் கொள்கை இன்பியலுக்கு அப்பாற்பட்டது. மனிதனை முழுமையாகக் கொண்ட ஒருவகை முன்னேற்றமே அவர் வாழ்வியலுக்குக் குறிக்கோளாக அமைவது என்று கண்டார்.

அறமே (virtue) முழுமைப் பயனாய் நிற்பது

ஸிட்ஜ்விக் என்பார் பயன்முதற் கொள்கையை அறிவின் அடிப்படையில் அமைத்தார். அறிவு என்பது அறத்தினுடைய ஒருவகைச் செயலாற்றல். ஸிட்ஜ்விக் என்பாரைப்போலவே ராஷ்டால் அவர்களும் அறிவு என்பதன் அடிப்படையிலேயே பயன்முதற் கொள்கையை வரையறை செய்தார்.

ராஷ்டால் அற இயல் தீர்ப்புரைகளை எடுத்துக்காட்டி, அற இயல் தீர்ப்புரைகள் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டுள்ளன. மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொள்ளும் போது, மதிப்பீடு என்பது 'நன்மை' என்பதையே சார்ந்திருக்கும், உயர்ந்த நன்மை எது? என்பதே அற இயலின் ஆய்வாக இருக்க வேண்டும் என்று கொண்டார். அவ்வகையில் அறமே (virtue) மிக உயர்ந்த மதிப்பீட்டுக்குரியது என்று கொண்டார்.

நன்மை என்பதை அடிப்படையாகக் கொண்டு, அற இயல் தீர்ப்புரைகளை ஆராயும்போது நன்மை என்பது ஒருவகைப் பொதுமை தழுவியது என்று கண்டார். எனவே அறம், நன்மை ஆகிய இரண்டையும் பொதுமை நோக்கிய அளவில் அமைக்கும் போது அறிவு, அழகு, பண்பாடு, இன்பம் ஆகிய இவையெல்லாம் தனிநிலையில் ஒவ்வொருவகை இன்பத்தைப் பயனாகக் கொள்ளலாம். இவையெல்லாம் அறம் என்ற பொதுமைப் பொருளில் (universal well - being) அடங்கும் என்றார். தனிநிலைகளில் பெறும் .பயன்முடிந்த பொதுமைப்பயனுக்கு உயர்ந்த நன்மை (highest good) என்பதற்குத் துணை நிற்பன என்று கொண்டார்.

அறம் என்பது பலவகையான சிறு சிறு நன்மைப் பண்புகள் இணைந்த உயர்ந்த நன்மைப் பண்பு. அறம் என்பதே மதிப்பீட்டுப் பயன் (value). பயன் என்பது எல்லாவகையான மதிப்பீட்டுப் பயன்களைவிட உயர்ந்தது. 'That value is the greatest of all the values' என்று கொண்டார்.

நன்மை என்பது உயிர் உறுப்பமைதி (Organic Unity) இயல்பினது

அறிவும் அழகும் புலன்வழி இன்பத்துக்குரிய பொருள்களை விட உயர்ந்தவை. ஏனெனில், அவை மிருக இன்பம் எனப்பெறும் புலனுகர்ச்சியின்பத்துக்கு மேலாகிய துறைகளை அடிப்படையாக கொண்டவை. அறிவு, பண்பாடு, அழகனுபவம், அறிவியல் வழிஅமைந்த பல்வேறு செயல்கள் எல்லாமே உயர்ந்த மதிப்பீடு வாய்ந்த 'பயன்' என அமைபவை. ஏனையவைகளெல்லாம் மிருக இனத்தின் நன்மையாக அமையும்போது மனித இனத்தின் நன்மையாக அமைவது அறம் ஒன்றே. மனித இனத்தின் 'நன்மை' என்பதில் ஒரு கூறு என்பதனுடைய பயனாக இன்பம் என்பது அமைகிறது.

மனித வாழ்வின் முழுமையை அடிப்படையாகக் கொண்டது அறம். அறம் என்பது பலவேறு வாழ்வியற் கூறுகளைக் கொண்டது. ஒவ்வோர் அறக் கூறு எனப்பெறும் பகுதிக்கும் ஒவ்வொரு முடிவு எனப்பெறும் நன்மை உண்டு.

எனவே,எல்லாக் கூறுகளும் இணைந்த மனிதன் உலகநன்மைப் பொருள். அவனை Universal well - being என்பார் ராஷ்டால்; அவனுடைய முழுமையான குறிக்கோள் வாழ்வு அறம் (virtue). அறம் பலவகையான கூறுகளைக் கொண்டது. அறிவு, அழகு, பண்பாடு ஆகிய எல்லாம் அறத்தின் சிறு கூறுகள். அறம் என்பதே தன்னிகரற்ற முடிவாகிய பயன் (ultimate value). அறம் என்பதன் கூறுகளாகச் சிறு சிறு முடிவுகள் இருக்கும்.அவைகளும் பயன்களே. ஆகையால், அறம் என்பது value of values எனப்பெறும். ஒவ்வொரு சிறு முடிவுகளுக்கும் பயன் நன்மை.எல்லா முடிவுகளும் இணைந்த பயன் முழுமையான நன்மை. இவைகள் எல்லாமே உயிர் உறுப்புநியதியில் அமைந்தவை என்று அமைத்தார் ராஷ்டால் (The good is an organic unity of the various goods).

மூவகையான நன்மைக் கூறுகள்

ஸிட்ஜ்விக் என்பாரைப்போலவே நன்மையை நோக்கிய முன்னறிவு, இரக்கவுணர்வு, நேர்மை என்ற மூன்று கூறுகளை ஏற்றுக்கொண்டார் ராஷ்டால். ஸிட்ஜ்விக் அவைகளை அறிவின் கூறுகளாக நின்று இன்பத்தைப் பகிர்ந்து கொடுக்கவும் ஏற்ற பெற்றி அமைக்கவும் வல்லவை என்று குறிப்பிட்டார். ஆனால் ராஷ்டால் அவர்கள் அறத்தின் கூறுகளாக நின்று நன்மையைப் பகிர்ந்து கொடுக்கவும் ஏற்ற பெற்றி அமைக்கவும் வல்லவை என்று கொண்டார்.

தனிமையை நோக்கிய முன்மதி (Prudence) என்பது தனி மனிதனுடைய தனி நன்மையை அவனுக்கே உரியதாக அமைத்துக் கொடுக்கும் தன்மையினது. அது கால, தேச அமைப்புகளை நோக்காமல் தனிமனிதனுடைய உயர்ந்த நன்மையைக் குறிக் கோளாகக் கொண்டது.

இரக்கவுணர்வு என்பது அறத்தின் வழிநின்று நன்மையை மனித சமுகத்துக்கு வழங்குவது. அது சமுதாயத்தின் முடிந்த, உயர்ந்த நன்மையைக் குறிக்கோளாகக்கொண்டது. அது மற்றவர் களின்நன்மையைத்தனிமனிதனின் நன்மையோடுஒப்பக்காண்பது. மற்றவர்களின் நன்மையின் பெருமையை மட்டுமே உள்ளத்தில் கொண்டு தனிமனிதனின் நன்மையை இழக்கவும் கூடச் செயல் படுத்தத் துணிவது.

நேர்மை என்பது பொது நன்மையை தனிமனிதனுக்கும் சமுகத்துக்கும் பிரித்துக் கொடுப்பது. எந்த ஒரு தனிமனிதனும் நன்மையை அனுபவிப்பதில் ஒத்த உரிமையையே பெறுகிறான். அதேசமயத்தில் ஒருசிலர் உயர்ந்த பண்புகளின் கொள்கலங் களாக அமைந்திருப்பார்களேயாயின் அவர்களுக்குத் தனித்த நோக்கு உடையதாக நேர்மையின் பிரிப்பு முறை அமையும். எனவே, நேர்மை என்பது மனித எண்ணிக்கை அமைப்பில் வேறு பாடு காட்டுதல் இல்லாமல் பண்பின் அடிப்படையில் தனித் தன்மையை உளங்கொண்டு நன்மையைப் பிரித்து வழங்கும் தன்மையுடையது என்று குறிப்பிட்டார்.

நேர்மையானது இவ்வாறு நன்மையைப் பிரித்துக் கொடுப் பதில் உயர் நன்மை, இணைந்த முன்னேற்றம், நிறைவான இன்பம் ஆகியவைகளைத் தம் குறிக்கோளாகக் கொள்கிறது என்று கூறினார்.

முடிவுரை

ராஷ்டால் என்பார், அறிவும் இன்பமுமே வாழ்வியல் நெறியும் பயனும் என்று கொண்ட ஸிட்ஜ்விக் என்பாரோடு மாறுபட்டு அறமும் நன்மையும் வாழ்வியல் நெறியாகவும் பயனாகவும் அமை யும் என்று கொண்டார்.

தம்முடைய கொள்கையை இவர் உயிர் உறுப்பு இணைப்பு நியதியில் அமைத்துக் காட்டினார்.

இவருடைய கொள்கை இன்பியல் அல்லாதது (non hepo- nistic). குறிக்கோளியலான பயன்முதற் கொள்கை (ideal utili- tarianism) சிற்சில இடங்களில் அவரே மகிழ்வுக் கொள்கை

(Eudaemonism) என்று தம் கொள்கையை எடுத்துக்கூறி விளக்கியுள்ளார்.

(2) ஜி. ஈ. மூர் என்பாரின் குறிக்கோளியலான பயன்முதற் கொள்கை

முன்னுரை: ராஷ்டால் என்பாரைப் போலவே 'மூர்' என்பாரும் குறிக்கோளியலான பயன்முதற் கொள்கையைத் தம் கொள்கையாகக் கொண்டவர். சில அடிப்படைக் கருத்துகள் ஒன்றாக இருப்பினும் கொள்கைக் கூறுகளை விளக்கும் போக்கும் அமைப்பும் மாறுபடுகின்றன ஆதலின் இவருடைய கொள்கை தனியாக அமைக்கப்பெற்றது.

'நன்மை' என்பதன் விளக்கம்

'நன்மை' என்ற கருத்துக்குரியது தனித்தது (கூட்டில்லாதது) ஒன்றன் துணைக்கொண்டு கருத (அனுமானிக்க) இயலாதது; தனிச் சிறப்புடையது; இலக்கண வரையறை செய்ய இயலாதது; நேரடியாக உள்ளுணர்வினால் அறியக்கூடியது. நன்மை என்பதைத் தனித்தது (a simple) என்று சொன்னதன் கருத்தை 'மஞ்சள்' என்ற ஒன்றில் வைத்து விளங்கிக்கொள்ளுக. மஞ்சள் என்பதுபற்றி முன் பின் அறியாத ஒருவனுக்கு உன்னால் எப்படி அதனை விளக்கிக் கூற முடியாதோ, அப்படித்தான் நன்மையையும் விளக்கிக் கூறமுடியாது.

'நன்மை' என்பது தனித்தது, இலக்கண வரையறை செய்ய முடியாத ஒரு பண்பு. இது நன்மையா? என்ற வினாவைக் கேட்டால், அவனால் கேள்வியைப் புரிந்துகொள்ள இயலும். பிறகு அவன் அதுபற்றிச் சிந்திக்க முற்படுகிறான். பிறகு அவன் மனம், நன்மை எப்படி இருக்கும் என்பது முதலிய எண்ணங்களால் நன்மையிலிருந்தே பிரிந்துவிடுகிறது. எனினும், நன்மை ஒரு தனித்த சிறப்பான தன்மையுடையது என்ற விடை சொல்ல முற்படும்போது எந்த வகையில் அது தனித்தன்மையுடையது என்று சொல்ல இயலாதவனாகிறான். அவன் 'உள்ளார்ந்த பயனுடையது', 'உள்ளார்ந்த மதிப்பீடுடையது' என்றெல்லாம் நினைக்கும்போது, அவன் முன்னே ஒரு பொருள் இருக்கிறது; கட்டாயம் இருக்கவேண்டும். அந்த ஒரு பொருள் தனித்த சிறப்புடைய பொருள்தான். அப்பொருளினுடைய பண்பாகத்தான் தனித்தன்மை இருக்கிறது. ஆனால் நன்மை என்று சொல்லும்போது அது ஒரு பொருளினுடைய தனிச் சிறப்பமைந்த பண்பு அன்று. அது ஒரு தனித்த பண்பே.

நாம் ஒரு பொருளை இலக்கண வரையறை செய்ய முடியும் என்றால் அது ஒரு வகையில் ஒரு கூட்டுப்பொருளாக இருக்கு

வேண்டும். ஒரு குதிரையைப்பற்றி வரையறைபெற்ற விளக்கங்கள் சொல்லமுடியும்; ஏனெனில், குதிரையானது பலவகையான இயல்புகளைச் சொத்தாகக் கொண்டது. எனவே, அவைகளை எண்ணி, அவைகளின் மூலம் இன்னின்ன இயல்புகளை உடையது எனக் குதிரையை இணைத்துச் சொல்லிவிடலாம். ஆனால், 'நன்மை' அவ்வாறு பல இயல்புகளை இணைத்திருக்கிற ஒன்றன்று. நன்மை என்பது தனித்தது; கூட்டன்று; பாகங்களால் இணைக்கப் பெற்றது அன்று; அதனால் அது வரையறை செய்து சொல்லப் பெற இயலாதது. எனவே, 'மஞ்சள்' என்பதைப்போல, பிரித்துணரமுடியாத, வரையறை செய்ய இயலாத தனிப் பண்பு.

இயற்கைநிலைப் போலி (Naturalistic Fallacy)

நன்மை (good) என்பதை ஒருசிலர் எடுத்தாண்டு விளக்கியிருக்கிறார்கள். அவர்களெல்லாரும் இயற்கைநிலைப் போலி என்ற அளவையியற் குற்றத்தையே செய்துள்ளார்கள்.

எடுத்துக்காட்டாக இன்பியற் கொள்கையினர், இன்பத்தை நன்மை என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு வகை இன்ப அனுபவத்தை அவர்கள் நன்மை என்று கூறினார்களேயொழிய, நன்மையை அவர்கள் விளக்கம் செய்யவேயில்லை. இயற்கை நிலைப் போலி என்பது இயற்கையொடு ஒவ்வாத முறையில் ஒன்றை ஒன்றோடு இணைத்து, பின், இணைத்த அதனால் பொருளையும் வரையறை செய்வது. தவறான இணைப்பினால் தவறான பொருள்படுமாறு செய்தல். இன்பியற்கொள்கையினர், நன்மை என்பதை இன்பத்தோடு இணைத்தார்கள். இன்பத்தின் ஒருவகையான அனுபவத்தை நன்மை என்ற சொல்லால் குறித்தார்களேயொழிய 'நன்மை' என்பதற்கு அவர்கள் விளக்கம் சொல்லவில்லை. இன்பம் என்பது உயர்ந்த நன்மையையோ, தாழ்ந்த நன்மையையோ குறிக்கலாம். ஆனால் நன்மை என்ற சொல்லால் குறிக்கப்பெறுவது இன்னது என்பதை நம்மால் உணர்ந்துகொள்ள இயலவில்லை. இவ்வாறே கான்ட் முதலிய பலரும் 'நன்மை' என்பதை அமைத்துச் சொல்லுவதன் மூலம் இத்தகைய போலியைச் செய்தவர்களானார்கள்.

உறுப்பமைதி பெற்ற முழுமை

உள்ளார்ந்த நன்மைப் பொருள்கள் என்பவை ஒருவகை உறுப்பமைதி பெற்ற முழுமையை உள்ளிட்டன. அது பல பாகங்களின் இணைப்பாக விளங்கும் ஒரு சேர்க்கை அன்று. பல பாகங்களின் இணைப்பு என்பதைவிட உயர்ந்தது. உலகில் நாம் காணும் பல பாகங்களைக் கொண்ட ஒரு முழுமை உறுப்

பிணைப்புப் பகுதியை நினைவிற்கொள்ளவேண்டும். அங்கே இணைக்கப் பெற்றுள்ள பல பாகங்களும் ஒன்றோடு ஒன்று இணைந்த உறவுமுறையில் சேர்ந்து பணியாற்றுவதைக் காணலாம். அத்தகைய உறுப்பமைதி முறையிலிருந்து அனுமானித்து எடுத்துக் கொள்ளப்பெற்ற ஒன்றே நன்மைப் பொருள்களின் இணைப்பும். ஒரு படத்தில் பல பாகங்கள் நெருக்கமாக இணைந்திருப்பதைப் பார்க்கலாம். அதில் முழுமை என்பது பாகங்களின் இணைப்புத் தொகுதியைவிட உயர்ந்தது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். உறுப்பமைதி முறையில் முழுமையுடன் பாகங்கள் காரண நியதியை அடிப்படையாகக் கொண்டு இணைக்கப் பெற்றுள்ளன; பாகங்கள் முழுமையைச் சார்ந்தவைகளே.

உறுப்பமைதி முழுமை என்பதை 'மூர்' அவர்கள் மதிப்பீட்டுப் பயன் என்ற அடிப்படையில் விளக்கம் செய்கிறார். ஒரு கலைப் பொருளை முழுமையாக அமைத்து, அதனுடைய மதிப்பீட்டுப் பயனை உறுதி செய்தால், அது பாகங்களின் மதிப்பீட்டுப் பயனைவிட அதிகமானதாகவே அமைந்திருக்கும்; அழகான பொருள்களை அனுபவிக்கும்போது அவைகளை உள்ளார்ந்த நன்மையுடையவைகள் என்று சொல்கிறார்கள். அழகு என்றால் என்ன? என்றால் நன்மையைப் போலவே அறிவுக்குத் தெரியாத ஒன்றை எடுத்துகாட்டாமல் விடை சொல்ல இயலாது. ஏனெனில், உள்ளார்ந்த பயனை வரையறை செய்யக்கூடிய அகச்சார்புக் கூறு எதுவும் இல்லாமையே காரணம். உள்ளுணர்வைத் தவிர வேறு எவ்வகையான திறனும் அத்தகைய உள்ளார்ந்த நன்மை முதலியவைகளை அறிந்தறிவதற்குரிய கருவிகளாகக் கிடைக்கப் பெறவில்லை. உள்ளார்ந்த நன்மை என்பதன் கருத்தை அறிவினால் விளக்கப்படுத்துதல் என்பது இயலாது.

சரி என்ற கொள்கை

ஒரு செயல் சரியானதா தவறானதா என்பதை முடிவு செய்வது எவ்வாறு என்பது அற இயலில் ஒரு முக்கியமான செய்தி. அற இயல் ஆசிரியர்கள் இதற்கு ஒரு முடிவு சொல்லவேண்டும்.

'மூர்' அவர்களும் இக்கருத்தை விளக்குகிறார். ஒரு செயலின் சரி அல்லது தவறு என்பது அச்செயலின் வெளிப்புறப் பண்பு. அது அச்செயலைச் செய்தவனுடைய அகநிலைப் பண்புடன் முற்றிலும் வேறுபட்டது.

ஒரு செயல் இவ்வுலகில் முடிந்த அளவுக்குரிய மேல்நிலையை எல்லையாகவைத்து நன்மைப் பயன்களை உண்டாக்குமேயானால் அது சரியான செயல் என்று கருதப்பெறும் நம்முடைய கடமை என்பது இவ்வுலகில் மேல்நிலை எல்லையளவுக்கு நன்மையை

உண்டாக்குவதை அல்லது மிக உயர்ந்த முடியக்கூடிய நன்மையை அத்தகைய ஒரு சூழ்நிலையில் உண்டாக்குவதை அடிப்படையாகக் கொண்டது. 'சரி' என்பதை நிறுவுவதற்குரிய 'மூர்' அவர்களின் கொள்கை மதிப்பீட்டுப் பயனை நோக்கிய— தற்புல உண்மையை (axiological theory) அடிப்படையாகக் கொண்டதாகும். 'மூர்' அவர்களின் கருத்தின்வண்ணம் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் மிக உயர்ந்த முடியக்கூடிய நன்மையை உண்டாக்குவதை அடிப்படையாகக்கொண்டே ஒரு செயல் சரியானது என்பது முடிவு செய்யப்பெறும்.

செயலினுடைய சரியாந் தன்மையானது செய்பவனுடைய உள்நோக்கத்தையோ உள்ளுணர்ச்சியையோ சார்ந்ததன்று. ஒருவனுடைய உள்நோக்கமும் உள்ளுணர்ச்சியும் நன்மையாக அமைய, அச்செயலின் சரியான பின்விளைவுகள் தீமையானவை என முன்கூட்டியே நன்முறையில் அளந்து அறியப் பெறுமே யானால், அச்செயல் விளைவை நோக்கித் 'தவறான செயல்' என்று சொல்வதா அல்லது உள்நோக்கம் உள்ளுணர்ச்சி ஆகியவை களை அடிப்படையாக வைத்து 'நல்ல செயல்' என்று சொல்வதா என்றால் பின்விளைவை நோக்கி அச்செயல் தீமைச் செயலாகவே கருதப்பெறும்.

அடுத்து, ஒரு செயல் அதற்குரிய சட்டத்தின்வண்ணம் செய்யப்பெற்றது என்ற காரணத்தால் அச்செயல் சரியானது என்று கருதப்பெறாது. சரியான விதிகளை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பெற்ற செயல் தீமைகளை விளைவித்து விடுமானால் அச்செயல் சரியான செயல் என்று சொல்லப்பெற மாட்டாது.

'மூர்' அவர்களின் கொள்கைப்படி, சரியாந் தன்மை என்பது முடியக்கூடிய உயர் எல்லை வரையில் நன்மை தரும் பின்விளைவு களை அடிப்படையாகக்கொண்டே அமைகிறது. மூர் அவர்கள் கருத்துப்படி, பின்விளைவு என்பது விரிந்த பொருளுடையது.

மூர் என்பவர் உள்ளுணர்வுக் கொள்கையினர். ஆகையினால் அவர், ஒரு செயலின் சரியாந் தன்மையானது உள்ளுணர்வினால் நேராகவே உணரப்பெறும் என்று விளக்கினார். 'மூர்' உள்ளுணர் வின் சிறப்பினை விளக்கினாலும் அவர் குறிக்கோளியலான பயன்முதற் கொள்கையினரே; இன்பியலான பயன்முதற் கொள்கையைவிட எல்லா வகையாலும் சிறப்புற்று விளங்கிய ஒரு முழுமைக் கொள்கையை — நன்மை என்ற ஒன்றால் குறிப் பிட்டுச் சொல்லக்கூடிய, எல்லா நன்மைகளையும் இணைத்த முழுமை நன்மையைக் குறிக்கோளாகக் கொள்ளக்கூடிய, ஒரு

வகைப் பயன்முதற் கொள்கையை நிலைநாட்டியும் 'வளர்த்தும்' பணிசெய்தவர் மூர்.

முடிவுரை

ஜி. ஈ. மூர் என்பார் குறிக்கோளியலான பயன்முதற் கொள்கையை அமைத்து விளக்கம் காட்டி நிறுவினவரேயாயினும், அவர் தம்முடைய கொள்கையை இன்பியற் கொள்கையிலிருந்து தொடங்கி, அந்த அடிப்படையிலேயே தம் கொள்கையை வளர்த்து வந்தார் என்று கூற இயலாது. 'உபயோகித்தல்'என்னும் பொருளமைந்த 'utility' என்னும் சொல்லுக்குப் பிறர் காணும் விளக்கங்கள் அறநூற் கருத்துகளுக்குப் பொருந்தாதவை என்ற அமைப்பிலேயே தம் ஆய்வைத் தொடங்கி, வளர்த்து, அதன் மூலம் குறிக்கோட் கொள்கை இயலான பயன்முதற் கொள்கையை வரையறை செய்து உணர்த்தினார் எனக் கொள்ளலாம்.

5. நிறைவு என்னும் அற இயற் குறிக்கோட் கொள்கை

முன்னுரை

அற இயல் என்றால் என்ன என்ற வினாவுக்கு விடை சொல்லும் வகையில் அற இயலை அறிமுகம் செய்தபோது அற இயல் என்பது ஒருவகை உயர்நிலை விஞ்ஞானம் என்றும், உயர்நிலை விஞ்ஞானம் என்பது வாழ்வியல் குறிக்கோள் ஒன்றினை வரையறை செய்துகொண்டு, அக்குறிக்கோளின் அடிப்படையில் ஒரு மனிதனின் நடத்தையை ஒப்பிட்டுப் பார்த்து அது சரியா, தவறா என முடிவு செய்யும் ஒருவகைக் கல்வி என்றும் விளக்கம் செய்யப்பெற்றது. அவ்வகையில் அற இயல் குறிக்கோள் என்று கொள்ளப்பெற்ற எல்லாக் குறிக்கோள்களுமே தத்தம் அளவில் நிறைவு உடையவைகளே.

அற இயல் என்பதை ஒருவகையில் அறக்கோட்பாட்டுப் பயிற்சியியல் என்பதாக அமைத்துக்கொண்டால் அது, எல்லா மனிதர்களும் தத்தம் நிறைவு பெறாத வாழ்க்கையிலிருந்து நிறைவு பெற்றவாழ்க்கையை நோக்கிச் சென்றுகொண்டிருக் கிறார்கள் என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கும். எனவே, எல்லா வகையான பயிற்சி நிலைகளும் 'நிறைவு' என்ற ஒன்றைத் தான் முடிவுநிலையாகக் கொண்டிருக்கின்றன என்பது தேற்றம்.

'நிறைவு' என்பதை அற இயலில் ஒரு வாழ்வியல் குறிக்கோள் என்றும் அது 'நிறைவு' என்ற முழுமை நிலையை அடிப்படை யாகக் கொண்டது என்றும் கொள்ளுவதற்குக் காரணம், இயற்கை யியல் அறிவியலோடு இணைந்துநின்று அற இயலுக்கு அளித்த செய்தியே.

இயற்கையில் உள்ளது இறத்தல் (evolution) என்னும் படி முறை வளர்ச்சியில் இயற்கைப் பரிணாமத்தால் விளையும் நிறைவு (evolutionary perfection) ஒன்று உண்டு என்பதை உணரலாம். இயற்கைப் படிமுறை வளர்ச்சியால் அமையும் நிறைவு இரண்டு வகைப்படும் ஓர் இனம் நிறைவு அற்ற நிலையி லிருந்து மெல்ல வளர்ந்து நிறைவு நிலையை அடைதல். எடுத்துக் காட்டாக, நாய் என்ற ஓர் இனம் பரிணாம வளர்ச்சி முறையில் வளர்ந்து இறுதியாக அந்த இனம் நிறைவுபெற்ற இனமாக அமைதல் என்பது ஒருவகை. எல்லா வகையான இனங்களை யும் தொடங்கிவைத்து நிறைவு செய்துகொண்டு வருகின்ற பரிணாமம் என்ற ஒரு முறையே நிறைவு பெற்றுவிடுதல்,

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த மனிதன் பரிணாம வளர்ச்சி நிலையில் நிறைவு பெறாத மனிதன். இன்று மனிதன் பரிணாம வளர்ச்சிநிலையில் நிறைவு பெற்றவன் என்று கொள்வது ஒருவகை. புல் முதலாகத் தொடங்கி வளர்ந்துவருகிற பரிணாம வளர்ச்சி, மனிதன் என்ற நிலையை உண்டாக்கியதோடு நிறைவு பெற்றுவிடுகிறது. ஏனெனில், மனிதனுக்கு மேலாக ஒரு பொருள் இன்னும் பரிணாம வளர்ச்சியில் தோன்றவில்லை. எனவே, இயற்கைப் பரிணாம வளர்ச்சியே மனித நிலையுடன் தன் பணியை நிறைவு செய்து கொண்டுவிட்டது என்றும் கொள்ளலாம்.

மேலே குறிப்பிடப் பெற்ற இருவகை நிலைகளில் அமைந்த 'நிறைவு'களை நாம் அற இயலிலும் பார்க்க முடிகிறது. வாழ்வியற் குறிக்கோள் என அமைக்கப்பெற்ற எந்த ஒரு கொள்கையும் தன்னளவில் ஒருவகை நிறைவு உடைய கொள்கையே. எல்லாக் குறிக்கோள் கருத்துகளையும் இணைத்த ஒருவகை நிறைவுக் கொள்கையும் அற இயலில் காணப்பெறுகிறது. இரண்டாம் வகையில் அமைந்த நிறைவுக் கொள்கையே இத்தலைப்பில் இடம் பெறுகிறது.

எடுத்துக்காட்டாக, இன்பமே குறிக்கோள் என்பது தன்னளவில் ஒரு 'நிறைவு' பெற்ற கொள்கை. அதை எதிர்த்து அறிவின் நிறைவே குறிக்கோள் என்ற கொள்கையானது தோன்றி, தன்னளவில் ஒரு நிறைவுபெற்ற கொள்கையாக அமைந்தது. பின்னர் மனிதன் என்பவன் உணர்ச்சிக்கூறு அறிவுக்கூறு என்ற இருவேறு கூறுகளையுடையவன். இரண்டும் இணையும்போதுதான் நிறைவு பெற்ற மனிதன் ஆகிறான். எனவே, உணர்ச்சிக் கூற்றினை மட்டுமே நிறைவு செய்யும் இன்பியற் கொள்கையும், அறிவுக் கூற்றினை மட்டுமே நிறைவு செய்கின்ற அறிவியற் கொள்கையும் நிறைவுபெற்ற மனிதனுக்கு, உரிய நிறைவு பெற்ற கொள்கையாக அமைய முடியாது. எனவே, இன்பியற் கொள்கையும் அறிவியற் கொள்கையும் இணைந்த ஒரு கொள்கையே, நிறைவு பெற்ற மனிதனின் நிறைவுபெற்ற அற இயற் கொள்கையாக அமையும் என்ற வளர்ச்சி வரும்போது, நிறைவுக் கொள்கை என்பது இன்பமும் அறிவும் இணைந்த ஒன்றை நிறைவுக் குறிக்கோளாகக் கொள்கிறது.

இவ்வாறு இணைப்பு நிலைகளில் பல நிறைவுக் கொள்கைகள் அற இயலிற் காணப்பெறுகின்றன. இவை தவிர, அற இயற் பேராசிரியர்கள் பலர் நிறைவுக் கொள்கைகள் என்ற அமைப்பிலேயே அற இயற் கொள்கைகளை அமைத்துத் தந்துள்ளார்கள். அவைகளும் 'நிறைவு' என்னும் குறிக்கோள் கொள்கைகளே

இனி, அற இயலில் 'நிறைவு' என்னும் கொள்கையை உருவாக்கியவர்களை இரு பிரிவினர்களாகக் கொள்ளலாம். மனிதனுடைய இனப் பரிணாம வளர்ச்சி முறையை அடிப்படையாகக் கொண்டு 'நிறைவு' என்னும் அற இயற் குறிக்கோட் கொள்கைகளை வகுத்துக் கொடுத்தவர்கள் ஒருவகை— இவ்வகையில் ஹெர்பர்ட் ஸ்பென்ஸர், அலெக்ஸாண்டர், லெஸ்லி ஸ்டீபன் ஆகியோர்களைக் கொள்ளலாம். இவர்களுக்கு வேறாக, கருத்தியல் வளர்ச்சி நிலையை அடிப்படையாக வைத்து மனிதனுடைய பல்வேறு இயல்புகளையும் ஆய்ந்து, மனிதனை ஒரு நிறைவுபெற்ற முழுமை மனிதனாக அமைத்துக்கொண்டு, முழுமையான, அறவியலான 'நிறைவு'க் கொள்கைகள் பலவற்றை உருவாக்கிய கருத்தியற் கொள்கையினர் ஒருவகை—பிளேடோ அரிஸ்டாடில், ஹெகல், கிரீன், பிராட்லி முதலியவர்கள் இவ்வகையில் அமைந்தவர்கள்.

இவ்விருவகை நிறைவுக் கொள்கைகளையும் அற இயலாளர்கள் மதிப்பீடு செய்துள்ளனர். அம்மதிப்பீடு கீழ்க்காணுமாறு அமைகிறது.

(1) படிமுறை வளர்ச்சிக் கொள்கையினர் வரலாற்று முறையை அடிப்படையாகக்கொண்டு ஆய்வுசெய்கின்றனர். ஒழுக்கம் என்பது பிறப்பியல் முறையிலான உடற்கூற்றினை அடிப்படையாகக் கொண்டது என்று கருதி, வரலாற்று முறையில் காணப்பெறும் ஒழுக்க இயலை அடிப்படையாக வைத்து உயர்நிலை அற இய்ற் குறிக்கோளை வரையறை செய்கின்றனர். இத்தகைய ஆய்வுமுறை அற இயல் ஆய்வு முறைக்குப் பொருந்தாது. ஏனெனில், அற இய்ல் ஓர் உயர்நிலை விஞ்ஞானம்.

கருத்தியற் கொள்கையினர் குறிக்கோளியல் வகையிலான ஆய்வை மேற்கொள்ளுகின்றனர். வரலாற்று முறையைக் கொண்டு அற இயலின் மதிப்பீட்டினைச் செய்ய இயலாது எனக் கொண்டு, உயர்நிலை விஞ்ஞான ஆய்வுமுறைகளைக் கையாண்டு அற இயலுக்குரிய மூலக்கூறுகளை வரையறை செய்வதால், கருத்தியற் கொள்கையினர் மேற்கொள்ளும் முறையும் முடிவுகளுமே அற இயலுக்குப் பொருந்துவன.

(2) அற இயலின் முடிவுநிலைக் குறிக்கோளை வரையறை செய்வதிலும் மாறுபடுகின்றனர்.

படிமுறை வளர்ச்சிக் கொள்கையினர் இன்பம் என்பதே முடிவுநிலைக் குறிக்கோள் எனக் கொண்டார்கள். தன்னை நிலை

நிறுத்தல், தன் இனத்தை நிலைநிறுத்தல், சமுக நலம், சமுக முன்னேற்றம் ஆகியவைகளை இடைநிறுத்தி அடையத்தகும் குறிக்கோள்களாகக் கொண்டார்கள். அவர்கள் அமைத்த குறிக் கோள் பகுதியை நிறைவு செய்வது கட்டுப்படுத்தப் பெற்றது. அவர்கள் பருவுடலைப் பற்றிய இன்பம், அதனை ஒட்டிய முன்னேற்றங்களை மட்டுமே அமைத்தார்கள் ஆகையால் அவை உயிரின் தாழ்ந்த கூறு எனப்பெறும் ஒருபகுதியை மட்டுமே நிறைவு செய்வனவாக அமைந்தன. உயிரின் உயர் பகுதியாகிய அறிவியற் பகுதி அவர்கள் ஆய்வுக்கு உட்படவில்லை.

கருத்தியற் கொள்கையினர் உயிரின் தனிநிலைத் தன்மை, சமுக நிலைத் தன்மை ஆகிய இரண்டையும் இணைத்த நிலையில் உணர்ந்து தெளிந்த வகையில்,வெற்றுப் புலனுகர்ச்சி இன்பத்துக்கு அப்பாற்பட்ட மகிழ்வு (happiness) என்பதை குறிக்கோள் அனுபவமாகக் கொண்டார்கள். அவர்கள் 'பொதுமை நன்மை' என்ற ஒன்றையே உயர் குறிக்கோள் நன்மையாகக் கொண்டார் கள். அது உயிரின் எல்லாப் பகுதியையும் எல்லா மக்களையும் ஒருங்கிணைத்த நிலையில் அமையும் உயர் குறிக்கோள் நன்மை யாகும். அது தனிமை இயலும் சமுக இயலும் இணைந்த முழுமை உயிரின் முழுமை நன்மையாகும். கருத்தியற் கொள்கையினரின் முடிவு எல்லாவற்றையும் இணைத்ததும் முழுமையுடையதும் ஆகும்.

(3) படிமுறை வளர்ச்சிக் கொள்கையினர் புலனுகர்ச்சியிய லான இன்பத்தை மட்டுமே ஏற்புடைய்து என்று கொண்டார்கள். ஆனால் கருத்தியற் கொள்கையினர் உயிரின் உணர்ச்சியியற் பகுதியையும் அறிவியற் பகுதியையும் இணைத்துக் கண்டு, உணர்ச்சியியல் இன்பத்தை அறிவால் ஒழுங்குபடுத்தி உயர்நிலை அடைவிக்க வேண்டும் என்று அமைத்தனர். உயிரின் இவ்விரு பகுதிகளையும் இணைக்கவே அவர்கள் தன்னலம்,தன்னலமின்மை என்ற இரண்டையும் இணைத்த ஓர் அற இயல் படிமுறையை அமைத்துக்கொடுத்தார்கள். தன்னை முன்னேற்றுதற்குத் தன்னைத் தியாகம் செய்வதே சிறந்த இன்றியமையாத வழி முறை என வரையறுத்தார்கள். இதுவே அற இயல் ஆய்வுக்கு ஒத்த முறை.

(4) படிமுறை வளர்ச்சியியலார்,மனிதனை அவன்பிறப்பியல் அடிப்படை நிலையிலேயே கணிக்க முற்பட்டு, மனிதன் புலனுகர்ச்சியியல்பினன் என்று முடிவு செய்கிறார்கள். அவ்வடிப் படையிலேயே அவனுடைய செயல்முறை, ஆற்றலை உபயோகப் படுத்தும்முறை, ஒழுக்கம், அன்பின் ஆற்றல் ஆகிய எல்லா வற்றையும் விளக்க முற்படுகிறார்கள். அவர்கள் கருத்தின்

வண்ணம், ஒழுக்கம் என்பது தனிமனிதன் தன்னை நிறுத்திக் கொள்வதற்கும்,தன் இனத்தை நிலைநிறுத்தவும் மேற்கொள்ளப் பெறும் ஒருவகை வழி என்பதாகவே கருதுகிறார்கள். ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் தாம் கற்பனையில் அமைத்த கருத்தியல்பான குறிக்கோள், நாட்டில் அற இயலான கடமையாற்றுதல் என்பது என்றுமே அழியாமல் இருக்கக்கூடியதன்று என்ற முடிவுக்கும் வந்துவிடுகிறார்.

ஆனால், கருத்தியல் கொள்கையினர் தனிமனிதனின் குறிக்கோள் தன்மையிலான உயர்நிலை என்பது தனிமனிதன் தன்னுடைய ஆளுமையில் நிறைவான வளர்ச்சியைப் பெறுதல் என்பதாகும். எல்லா நிலையிலும் பண்பிலும் ஒழுக்க இயல்பு களிலும் வளர்ச்சிபெறுதலையே வலியுறுத்துகிறார்கள். மனிதனுக்கும் சமுகத்துக்கும் இடை அமைந்த பிரிக்க இயலாத தொடர்பை ஏற்றுக் கொண்டாலும் பிறப்பியல் சார்ந்த அமைப்பு களுக்கும் சமுக இயல் சார்ந்த அமைப்புகளுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டினையும் கருத்திற் கொண்டே தம் அறக்கொள்கையை வரையறை செய்துள்ளார்கள்.

இனி,நிறைவு என்னும் அற இயல் குறிக்கோட் கொள்கையை நிறுவிய அற இயலாசிரியர்களையும் அவர்தம் கொள்கை விளக்கங்களையும் முறையே காணலாம்.

(5) (அ) பிளேடோவின் கொள்கை (427கி.மு. to 347கி.மு.)

கிரேக்கத் தத்துவஞானியான பிளேடோ அறிவியலான அற இயற் கொள்கையையும் (rationalism) மகிழ்வுக் கொள்கையையும் (eudaemonism) விளக்கமுறுத்தியவர். மனிதனுடைய உயிரில் அறிவுப் பகுதியே உயர்ந்தபகுதி ஆகையால் உயர்ந்த வாழ்வு என்பதும் அறிவியல் வாழ்வே. அத்தகைய வாழ்வு ஒரு வகையில் பொருள்களின் அடிப்படையியலானதன்மை களில் ஆழ்ந்து காணும் அறிவியல் வாழ்வு.

எந்த ஒன்று உயர்ந்த உண்மையாகவும் நன்மையாகவும் அமைந்திருக்கிறதோ அது உயர்ந்த அழகாகவும் அமையும். மிக உயர்ந்த நன்மை என்பது அழகும் முழுமையும் அழியாததும் ஆகும். இவ்வுலகில் உள்ள அன்பு என்பதே கடவுள் அன்பாகத் தூய்மையாக்கப் பெற்று, உயர் தன்மையுடையதாக மாற்றப் பெறுகிறது. இவைகளெல்லாம் அற இயலில் பிளேடோ அறிமுகப்படுத்திய அறிவியற் கருத்துகள்.

பிளேடோவின் அற இயல் பொதுவாக மனஇயலை அடிப் படையாகக் கொண்டதாகும். உயிரில் அறிவு, ஆசை, செய

லாற்றல் என்ற மூன்று பகுதி இருக்கின்றன என்று கண்டார். அறிவு என்பதே தலைமைதாங்கி ஆட்சிசெய்யும் ஒரு கூறு. ஆசைகள் பல. அவைகள் கட்டுப்படுத்தப்பெற்று, முறையாக அமைக்கப் பெறுகின்றன. செயலாற்றும் பகுதியே அறிவு கூறியதைச் செயற்படுத்துகிறது; ஆசைகளைக் கட்டுப்படுத்து கிறது.

நன்மை வாய்ந்த வாழ்வு என்பது இசையோடு இயைந்த வாழ்வு; உயிரின் அனைத்துக் கூறுகளும் இயையுமாறு பொருந்தி ஒற்றுமைப்பட நிற்கும் வாழ்வு.

நீதி என்பது உயிரின் நலமும் நற்செயலும் இணைந்த ஒன்று. அது உயிரின் எல்லாக் கூறுகளும் முழுமையாகத் தம்முள் இணைந்து நிற்பதால் விளைவது ஆகும்.

அநீதி என்பது உயிரானது நலமில்லாதிருப்பது என்பது பொருள்; உயிரின் பலவேறு கூறுகளும் தம்முள் முரண்பட்டு ஒன்றை ஒன்று எதிர்த்தமையால் உண்டாகிய நோய்.

அறவாழ்வு என்பது உயிரின் கூறுகள் கலந்தும் இணைந்தும் அமைந்த வாழ்வு. அதில் தாழ்ந்த கூறுகள் அறிவினுக்குத் துணையாக அமையுமாறு கலந்த கலப்பினை அடிப்படையாகக் கொண்டது.

அறம் என்பது ஒருவகை நலம். அழகும் நன்மையும் உயிரின் இருவகை அமைப்புகள். இக்கருத்துகளெல்லாம் பிளேட்டோ அவர்கள் மகிழ்வுக் கொள்கைபற்றிய கருத்துகளாக வெளிப் படுத்தப் பெற்றவைகள்.

(5) (ஆ) அரிஸ்டாடில் மகிழ்வுக் கொள்கை (385 கி.மு. to 322 கி.மு.)

பிளேட்டோவின் மாணாக்கராக அமைந்த அரிஸ்டாடில் அறிவியலான, மகிழ்வியலான அற இயற் கொள்கைகளை வெளிப் படுத்தியவர். செயல் சார்ந்த வாழ்வைவிட, அறிவாராய்ச்சி யியலான வாழ்வையே அரிஸ்டாடில் பெரிதும் விரும்புகிறார். உண்மையான உயிர் என்பது அறிவியல் சார்ந்த பகுதியாகிய உயிரே. அறிவியற் சிந்தனைகளே செயலுக்குரிய மூலக்கூறுகளை வரையறை செய்கின்றன. அறிவியற் சிந்தனைகளின் செயலே அறிவியலான உயிரைச் செயற்படுத்துகிறது. அரிஸ்டாடிலின் அற இயலில் அமைத்த அறிவியற் கருத்துகளே இவைகள்.

அரிஸ்டாடிலின் கருத்தின் வண்ணம் அறம் என்பது ஒருவகை நடுவுநிலையைத் தேர்ந்து கொள்வதாக அமையும். ஆசைக்

கூறுகளை உட்கொண்டதாக அந்த அறம் அமையும் என்றாலும் அவ்வாசைக்கூறுகள் அறிவு என்ற ஓர் உயராற்றலால் அளந்து கட்டுப்படுத்தப் பெற்றவைகளாகவும் முறையான வழிகளில் இயக்கப் பெற்றவைகளாகவும் இருக்கும்.

மறம் என்பது ஆசைக்கூறுகளை நிறைவு செய்வதில் உண்டாகிய குறையே. துன்பம் என்பது உறுப்புகள் தத்தம் அளவுக்கு உரிய பணியில் அமையாமல் அதிக அளவில் பணியாற்றினாலும் குறைந்த அளவில் பணியாற்றினாலும் வருவது. எனவே உறுப்புகள் முறையான, அளவான நெறியில் நின்று பணியாற்றுமேயானால் இன்பம் அமையும்.

மகிழ்வுதான் அற இயல் வாழ்வின் முடிந்த குறிக்கோள் நிலையில் அமையும் இன்பம். மகிழ்வுக் கொள்கையை அரிஸ்டாடில் Eudaemonism' என்ற பெயரால் அமைத்துக் காட்டுகிறார். மகிழ்வுக் கொள்கையானது இருவகை அமைப்புகளை உடன் கொண்டது. அவை: (1) மனிதத் தன்மையின் நிறைவே அற இயல் வாழ்வின் குறிக்கோள் உயர்நிலை. (2) மனிதனிடத்திலுள்ள எல்லா வகையான திறமைகளையும் ஒன்றோடு ஒன்று முரண்படாமல் இசைவுபெற அமைத்துச் செயல்படுத்தும் முறையால் உண்டாகிய நிறைவு.

மகிழ்வு என்பது இன்பத்தினின்றும் வேறுபட்டது. (1) இன்பம் ஒரு தனிச்செயல் மூலமாகக் கிடைப்பது; பலவகைகளான செயல்களின் இயைபால் அல்லது இசைவால் கிடைப்பது மகிழ்வு. (2) இன்பம் மாறுபடும்; மகிழ்வு எக்காலத்தும் மாறுபாடின்றி வருவது. (3) மகிழ்வு உண்டாகும்போது அதனோடு இணைந்த எல்லாமே மகிழ்வாகத் தோன்றும். எடுத்துக்காட்டாக, மகிழ்வு அதற்குரிய செயல்களோடு நம்மை வந்தடையும்போது, மகிழ்வு வருவதற்குக் காரணமாகிய செயல்களுங்கூட மகிழ்வாகவே தோற்றுவதுண்டு. ஆனால் இன்பம் அப்படிப்பட்டதன்று.

மகிழ்வு என்பதை ஒருவனுடைய செயல்முறை வாழ்வில் இதுதான் என்பதாகக் காண இயலாது. ஓர் உயர்ந்த தத்துவ ஞானியின் வாழ்வில் - விஞ்ஞான அறிவும், புலன் கடந்த பெருளை நோக்கிய சிந்தித்துத் தெளியும் பேரறிவும் அமைந்தவர்கள் வாழ்வில்—'மகிழ்வு' என்ற ஒன்று காணப் பெறக்கூடியதாக அமையும். தேர்ந்து சிந்தித்துத் தெளியும் பேரறிவுடையவர்கள் வாழ்வில்தான் மிகவுயர்ந்த அமைப்பினையுடைய வாழ்வை நாம் காண இயலும். அந்த வாழ்வுதான் 'மகிழ்வு' என்பதற்குரிய வாழ்வாக அமையும்.

அரிஸ்டாடில் ;என்பவருடைய மகிழ்வுக் கொள்கை ஒரு வகையில் இன்பக் கொள்கைபோல இருக்கிறது என்று

கொள்ளலாம் ஆயினும் இன்பியற் கொள்கையில் உண்டாகும் சிக்கல் இக்கொள்கையில் நீக்கம் பெறுகிறது.

இன்பியற் கொள்கையில் முடிந்த குறிக்கோள் உயர் நிலையாகக் கொள்வது இன்பமாயினும், இன்பத்துக்குரிய பொருளும் இன்பத்தை ஒத்த மதிப்பினைப் பெறுகிறது. வாழ்வின் முடிந்த குறிக்கோளாகக் கொள்வது இன்பமா, இன்பத்துக்குரிய பொருளா என்ற சிக்கல் இன்பியற் கொள்கையில் உண்டு. ஆனால் மகிழ்வுக் கொள்கையில் அத்தகைய சிக்கல் இல்லை. மகிழ்வுக் கொள்கையின் வண்ணம் ஒருவன் மகிழ்வை வாழ்வின் குறிக் கோளாகக் கொள்ளாமல் தம் நிலைமைக்குரிய கடமைகளை முறையாகவும் வெற்றியாகவும் செய்துமுடித்தல் வேண்டும். அதுவே குறிக்கோளின் உயர்நிலை. அக்காரியம் அவ்வாறு நிறை வுறும்போது தானாகவே வெளிப்படுவது மகிழ்வு என்பதாக அமைத்துக் காட்டியுள்ளார்.

இனி மகிழ்வுக் கொள்கையில் அமையும் ஒரு சிறப்பினைக் காணவேண்டும்.

உள இயலின் அடிப்படையில் அற இயல் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை ஆராய்ந்தபோது, உள்ளத்தில் அமையும் எல்லாவகையான ஆசைகளையும் இணைத்து ஒற்றுமைப்படுத்தி அமைப்பதில் ஒரு பொருத்தம் அல்லது இயைபு இருப்பதைக் காணமுடிந்தது. அது எல்லாவற்றையும் இணைத்து இயைபு படுத்தி அமைவதை உளங்கொள்ளும்போது அது ஒரு 'நிறைவை' அளிக்கும் கொள்கையாக அமைந்தது. அவ்வாறே அறிவை அற இயலில் அமைத்துப் பார்க்கும்போதும் நல்ல இயற்றி நிலை என்பது முரண்பாடு இல்லாத பல இயற்றிநிலைகளின் இசைவை அடிப்படையாகக் கொண்டது என்பதையும் காணமுடிந்தது. அவ்வாறே மகிழ்வுக் கொள்கையும் நம் நிலைமைக்குரிய நற் செயல்களை முறையாகவும், எல்லாவற்றையும் இணைத்த நிலை யில் எழும் முறையான இயைபுடையதாகவும் அமைத்துச் செய்து முடித்த போது, எல்லா நல்ல செய்கைகளையும் செய்து முடித்து விட்டபின் அவைகள் இயைந்து நின்ற இயைபு காரணமாக ஒரு வகை மகிழ்ச்சியானது தானாகவே உண்டாகிறது என மகிழ்ச்சிக் கொள்கை வரையறை செய்கிறது.

எனவே, உள்ளத்தியல் அமைப்பிலும் அறிவியல் அமைப் பிலும் அமைந்துள்ள ஒருவகைப் பொதுமை இயைபு என்பதை மகிழ்வுக் கொள்கையிலும் நாம் காண முடிகிறது. ஆனால் அத்தகைய மகிழ்வை, அறவழியில் நிற்கும் ஒருவன் முன்னமேயே

கிடைக்கும் என்று எண்ணி எதிர்பார்த்திருக்க முடியாது. எல்லா நன்மைச் செயல்களும் முடிந்தபின் அவற்றுக்கிடையே அமைந்த ஒருவகை இயைபு காரணமாக அது உண்டாகிறது. அதனாலேயே 'சாகும்வரை எந்த மனிதனும் மகிழ்ச்சி பெற்றதாகக் கொள்ளாதே' என ஒரு குறிப்புரையை ஸோலான் என்பவன் கூறுவதாக அமைத்திருக்கிறார்.

மகிழ்வுக் கொள்கையானது, ஒருவனின் எல்லாத் திறமைகளையும், ஊக்கி வளர்க்கும் நற்செயல்கள் எல்லாவற்றையும் செய்யவேண்டும்; எல்லாச் செயல்களையும் முறையாக அமைத்துச் செய்ய வேண்டும்; அவைகளை இசைபட இயைபுபடுத்திச் செய்தல் வேண்டும்; அப்படிச் செய்தால் ஒருவகை மகிழ்வு வரும்; அது புலனின்பத்தைவிட வேறுபட்டது; மேலானது என்று வரையறை செய்கிறது.

(5)(இ) ஹெகல் என்பாரின் ஆன்மிகப் படிநிலை வளர்ச்சிக் கொள்கை

முன்னுரை

ஹெகல் (1770—1831) என்பவர் ஜெர்மானிய தேசத்தில் வாழ்ந்த தத்துவப் பேரறிஞர். அவர் அளவை இயலில் ஒருவகை விவாத முறையினை (dialectic method) வகுத்துக் காட்டினார். அளவையியல் முறையினை ஒட்டி முதலில் ஒரு கருத்து அமையும், அதற்கு முதற் கருத்து (thesis) என்று பெயர். அதன்பின் அந்த முதற் கருத்துக்கு மாறான ஒரு கருத்து (anti thesis) உண்டாகும். மூன்றாம் நிலையில் மேலே கூறப்பெற்ற இருவகைக் கருத்துகளின் அடிப்படையில் ஒரு தொகுப்புக் கருத்து (synthesis) உருவாகும். அடுத்த நான்காம் நிலையில் முன் அமைந்த தொகுப்புக் கருத்தே (synthesis) மீண்டும் ஒரு புதிய கருத்தாக (thesis) வெளிப்படும். இவ்வாறு, கொள்கைகளின் வளர்ச்சியை அளவையியலான படிமுறை வளர்ச்சி (பரிணாமம்) அடிப்படையில் விளக்கிக் காட்டினார். காணும் புற உலகத்தைப் படிமுறை வளர்ச்சியில் விளக்கிக் காட்டியதுபோலவே உயிர் வளர்ச்சியானது பிராணிகளின் வளர்ச்சியிலிருந்து தொடங்கி, மனிதன் வரை வந்து முடிவு பெறுகிறது என அவ்வளர்ச்சியையும் படிநிலை வளர்ச்சியில் அமைத்துக் காட்டினார்கள். அவ்வாறே ஹெகல் என்பார் தனி மனிதன் தன்னை நனவு நிலையில் வைத்து அறியத் தொடங்கியது முதல் 'முற்றும் தன்னை உணரும்' நிலைவரையில் உள்ள மாற்றங்களைப் படிநிலை வளர்ச்சித் தத்துவத்தின் அடிப்படையிலேயே விளக்கிக் காட்டினார். இவர் கொள்கை மனித அறிவை மட்டுமே மையமாகக் கொண்டது. இதற்கு அவர் அளித்த பெயர் ஆன்மிகப் பரிணாமம் (spiritual evolution).

உலக வளர்ச்சியானது படிநிலை வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது என்பது விஞ்ஞானம் அமைத்த உண்மை. அறிவற்ற, உயிரற்ற, உலகப் பொருள்களின் வளர்ச்சியைப் போலவே அறிவுள்ள உயிர்களும் வளரத் தொடங்கின. ஓர் அறிவு உயிர் முதல் தோன்றி, படிநிலை வளர்ச்சி வகையில் வளர்ந்து, ஆறு அறிவு உடைய மனிதனாக அத்தகைய படிநிலை வளர்ச்சி முறை விஞ்ஞானம் உயிர்களின் வளர்ச்சி முறைகளையும் விளக்கிக் காட்டியது. இங்கே காட்டப்பெற்ற இரண்டு எடுத்துக் காட்டுகளையே ஆன்மிகப் பரிணாமமாக அமைக்க முடியாது. ஆன்மிகப் பரிணாமம் என்பது மனிதன் தன்னைத் தானே அறிந்து கொள்ளத் தொடங்கிய நாள்முதல் அவன் தன்னையே முழுமையாக அறிந்துகொள்ளுதல் வரையில் உள்ள படிநிலை வளர்ச்சியை அமைத்துக் கூறுகிறது.

ஹெகல் என்பார் கூறும் முறையில் மனிதனுக்கு அவன் நினைவு (தன்-நினைவு) தொடங்கிய நாள் முதல் அவன் தன்னையே முற்றும் உணருகின்ற வரையிலும் இப்பரிணாமம் அமைந்து விளக்கம் சொல்லுகிறது. மனிதன் தன் நினைவுடன் வாழ்ந்துவரும்போது உண்டாகக்கூடிய அதிக அளவு அமையும் அறிவு வளர்ச்சியை:அடிப்படையாகக் கொள்வதாக அமைந்ததே இப்பரிணாமம்.

ஆன்மிகப் பரிணாமமானது மனிதனுக்கு அறியும் ஆற்றலைத் தருவதுடன், அவ்வாறு அறியும் அறிவு நிலையைப்பற்றியே ஆராய்ந்து பார்க்கவும் வழிவகைகளை அமைத்துக் காட்டுகிறது.

ஆன்மிகப் பரிணாமத்தில் குறிக்கோள் என்பது எது என ஒரு வினாவை எழுப்பினால், தனிமனிதன் தன்னுடைய நனவு நிலையை அறிந்த நாள் தொடங்கி, இன்று முழுமையாகத் தன்னைத் தானே உணரும் நிலை பெறுவதே குறிக்கோள்.

பகுத்தறிவுதான் மனிதனுக்கு உரிய முக்கியமான பண்பு என்பது அரிஸ்டாடிலின் கொள்கை. மனிதனுடைய ஆன்மிக வளர்ச்சிக்கு உதவிசெய்வது பகுத்தறிவுதான்.

இனி, மனிதனிடத்தில் ஆழ்ந்த சிந்தனை என்ற ஒருவகை அறிவியற் பகுதி உண்டு என்று கண்டார். அது அரிஸ்டாட்டில் கூறும் பகுத்தறிவையும் ஹெகல் கூறும் 'தன்-நினைவு' என்ற நிலையையும் இணைத்த ஒன்றுதான் ஆழ்ந்த சிந்தனை.

ஆழ்ந்த சிந்தனை (reflection) இல்லாதவன் நிறைவு பெற்ற மனிதனாகமாட்டான். தான் முன்னேறுவதோ, பிறர் முன்னேறப் பாடுபடுவதோ ஆழ்ந்த சிந்தனை இல்லாமல் இயலாது.

ஆழ்ந்து துணியும் சிந்தனையுடன் நிறைவுடைய மனிதனாக நின்று, தான் முன்னேறப் பாடுபடுவதோ, பிறர் முன்னேறப் பாடு படுவதோ நல்லவனுக்குரிய நற்பண்புகள் ஆகும்.

உலகம் என்பது முழுமையும் கடந்ததும் ஆகிய ஆன்மிகத்தின் படிநிலை வளர்ச்சியே; மனித வாழ்விலிருந்து உச்ச நிலை அடைந்ததே அந்த ஆன்மிகம். அத்தகைய ஆன்மிகம் எங்கே முடிவடைகிறது? மனிதன் தன்னுடைய ஆன்மிகப் பண்பினை முழுமையாக அறிந்து துய்க்கும் அந்த எல்லையில்தான் அந்த ஆன்மிகம் நிறைவுபெறுகிறது. மனித வரலாறு என்பதே தன்னுடைய அறிவை அறியத் தொடங்குவதை முதலாகக் கொண்டு அந்த அறிவை முழுமையாகவும் நிறைவாகவும் அறிந்து கொள்வதில் சென்று முடிவுபெறுகிறது.

மனிதன் தன்னுடைய அறிவே தொடங்கி, வளர்ந்து பின்னர் முடிந்து நிற்பதை அளவை இயல் விவாத முறைப்படி அமைத்துக் காட்டுகிறார் ஹெகல்.

ஆன்மிகப் படிநிலை வளர்ச்சியானது ஒரு குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டது என்பதை உணரவேண்டும். அறக் கொள்கைகளாக விளக்கம்பெற்று, வெளிநிலையில் நிற்பவை களுக்கு வெளிப்படையாகவே தன்னைப் பணிவித்துக் கொள்ளு கின்ற நன்மை என்பதாக ஆன்மிக வளர்ச்சியானது தோற்றம் பெறுகிறது. இதுவே முதற் கருத்து நிலை (thesis). பின்னர் அகநிலையில் மனச்சான்று என நின்று சில அறவிதிகளை அக நிலையில் அமைத்துக் கொடுக்க, அவைகளுக்கு அகநிலையிலேயே பணியும் நன்மை என ஆன்மிகம் இரண்டாம் படிநிலையாகிய எதிரான கருத்து வளர்ச்சியைப் பெறுகிறது. இனி மூன்றாம் நிலையில் சமுதாய அறக்கொள்கைகளாக முன்னின்ற இரண்டை யும் இணைத்து நிற்கிறது.

முதலில் புறவிதிகளுக்கு அடங்கி நடந்தான். பின்னர் மனச் சான்று நிலையில் அகத்தே அடங்கி, அகத்தே அமைந்த அறவிதி களுக்குக் கட்டுப்பட்டு நடந்தான். இவ்விருவகை அறவொழுக்க நன்மைகளின் இணைப்பே சமுதாய அறவொழுக்கமாக மலர் கிறது. புறத்தும் அகத்தும் கலந்து வாழ்ந்த அறவொழுக்கமும் அவற்றால் வரும் நன்மையும் அமைந்தால் மட்டும் போதாது. மூன்றாவதாக அவன் சமுதாய அமைப்புடன் இயைபுபடுதல்

வேண்டும். அவன் பிரபஞ்சத்தோடு தொடர்பு கொள்ளும்போது தான் பிரபஞ்சம் எங்கும் பரவி விளங்கும் மகத்தான மனம் அல்லது பெருமனத்தின் ஆற்றல் வெளிப்பட இயலும்.

மனிதனின் தன்மை எவ்வளவு அதிகமாக நிறைவு பெற முடியுமோ அவ்வளவுக்கு நிறைவு பெறுவதற்குரிய சமுதாய ஒழுக்க வாழ்வாக ஆன்மிகம் மலர்கிறது.

காண்ட் என்பார் பகுத்தறிவுசார்ந்த கூறுகளைமட்டுமே ஏற்றுக்கொண்டு, புலனுணர்ச்சியைச்சார்ந்த கூறுகளை முற்றாகப் புறக்கணித்தார். ஹெகல், இந்த இரண்டையும் முரண்பாடு இல்லாமல் இணையுமாறு செய்து, அதன்மூலம் ஒருவகை நிறைவை அமைத்தார்.

அற இயல் பொருளுரைகள் இரண்டனுக்கு விளக்கவுரை அமைப்பதன் மூலம் ஹெகல் தன்னுடைய ஆன்மிகப் படிமுறை வளர்ச்சிக் கருத்தை விளக்கியமைப்பதைக் காணலாம்.

(1) வாழ்வதற்காக இற: ஆன்மிகம் என்ற உயர்நிலை உன்னை வந்து அடையவேண்டுமானால் நீ உன்னுடைய உடம்பை மிகுதியும் கொடுமைப்படுத்தி அமைக்கவேண்டும். ஹெகல் தன்னைத் துன்புறுத்தும் துறவுக் கொள்கையை இதற்கு உரிய விளக்கமாக அமைக்கவில்லை.

உயிரானது அதனுடைய குறுகிய, தனித்தன்மையான கொள்கைகளில் செத்துப்போதல்வேண்டும். ஆனால் அது வள மான, விரிவான, ஆன்மிக உலகத்துடன் இணைந்து வாழ வேண்டும் என்பதே. தனிமனிதன் ஐம்புல இன்பத்தை வெறுத்து அழித்துக் கொள்வது அன்று. அது அறிவினால் தூயதாக்கப் பெற்று, முறையான வழியில் செலுத்தப்பெற வேண்டும். உணர்ச்சிநிலை வாழ்வாகிய தாழ்நிலை வாழ்விலிருந்து உயர் நிலை வாழ்வுக்கு அறிவு மூலமாக உயர்த்தப்பெற வேண்டும் என்பதே. 'தன்னை ஒழித்தலின் வழியாகத் தன்னை அறிந்து சிறப்புறுதல் என்னும் வழி' என்பதே இப்பொருளுரையின் விளக்கம்.

(2) ஆளுமை இயலினனாக இரு (Be a person) : மனிதன் தன் தனித்தன்மையிலிருந்து ஆளுமைத் தன்மைக்கு உயரவேண்டும். தாழ்நிலையிலுள்ள, மிருக இனப் பண்புடன் ஒத்த உணர்ச்சி நிலையை அறிவு நிலைக்கு உயர்த்துதல்—மாற்றுதல் வேண்டும். ஆளுமைத்தன்மையினனாக அமைவதே மனிதனின் முடிந்தநிலை. நாம் ஆளுமையினராக நம்மை உயர்த்திக் கொள்ளும்போது

தான், நம்மை அறியவும், நம்மை ஒத்த ஏனைய ஆளுமையினர்களை அறியவும் இயலும்.

இதுவே இரண்டாவது பொருளுரைக்கு ஹெகல் கூறும் விளக்கம்.

முடிவுரை

ஹெகல் என்னும் ஜெர்மானியத் தத்துவப் பேராசிரியர் தாம் அளவையியலில் அமைத்த ஒருவகை விவாத இயலான (dialectic) அளவை முறையை—முதற்கருத்து, எதிரான கருத்து, இணைந்த கருத்து—ஆன்மிகப் பரிணாமம் எனப்பெறும் மனித அறிவு வளர்ச்சியில் இணைத்துக் கண்டார்.

மனிதன் தன் அறிவு தொடங்கிய நிலை எனப்பெறும் 'நனவு நிலை'யில் வெளிப்புற விதிகளாக அமைந்துகிடந்த அறவிதிகளுக்குப் பணிந்து நடந்தான். பின்னர், தன் அகநிலை விதிகள் எனப்பெறும் விதிகளை மனச்சான்று என்பதன் வெளிப்பாடுகள் எனக் கருதி அவைகளை உணர்ந்து,மேற்கொண்டு நடந்து நன்மை பெற்றான். மூன்றாம் நிலையில் உலகம் எனப்பெறும் ஒன்றில் தன்னை இணைத்துக் கொள்ளுகின்றான். மனிதனாக நின்றான்; பின்னர் மனச்சான்றினனாக நின்றான்;அடுத்து ஆளுமையினனாக (person) நிற்கிறான்; இப்போது அவனிடம் வளரும் பண்பு சமுகநிலை; முன்னுள்ள இரண்டு நிலைகளையும் உள்ளடக்கிய மூன்றாம்நிலை. இங்கே அவன் அறிவின் முழுமை பெற்றான். ஆளுமையினனாக மனிதன் நின்ற நிலையே 'நிறைவு' எனப் பெறும் முழுமை நிலை.

மனிதன் தன்னுடைய 'நனவுநிலை' தொடங்கி, முழுமை நிலை எனப்பெறும் அறிவுவளர்ச்சி பெறுதலே வாழ்வியல் குறிக்கோள். அவனுடைய அறிவுவளர்ச்சிக்கு ஒத்தநிலையில் நன்மை அமைந்த வாழ்வுகளாகவே ஆன்மிகம் மலர்கிறது. முழுமையாகிய நன்மை என்பது தனிப்பயனாக நில்லாமல் வாழ்வாகவே அமைந்துவிடுகிறது என்பது ஹெகல் என்பாரின் கருத்துகளாகும்

(5)(ஈ) டி.எச். கிரீன்(1836to1882)என்பாரின் கருத்தியல்பான அற இயல் நிறைவுக் கொள்கை

முன்னுரை

ஹெகல் என்ற ஜெர்மானிய நாட்டுத் தத்துவப் பேராசிரியரின் ஆன்மிகப் படிநிலை வளர்ச்சிக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட அற இயற் கருத்துகள் கிரீன், பிராட்லி போன்றவர்களால் வளர்க்கப்பெற்றன. ஹெகல் என்பாரின் கருத்து,

கிரீன் என்பாரிடம் எவ்வாறு வளமும் வளர்ச்சியும் பெற்றிருந்தது எனக் காணலாம்.

ஆன்மிக அடிப்படையும் தன் உணர்வு நிலையும்

உலகப் படிமுறை வளர்ச்சியில் இணைந்து வளர்ந்தவைகளே அறிவுடைய பொருள்கள் எல்லாம். விலங்குகள் அறிவுடையன. மனிதன் அறிவுடையவன் ஆயினும் விலங்கிலிருந்து வேறுபடுகிறான். 'தன்னுடைய அறிவு' என்பதாகத் தனித்துப் பிரித்துப் பார்க்கவோ, சிந்திக்கவோ விலங்குகள் வரையில் உள்ள எந்த அறிவுடைப் பொருளுக்கும் இல்லை தன்னுணர்வு நிலையை அறியும் ஆற்றல் ஒருவகைப் படிநிலை வளர்ச்சியில் வளரத் தொடங்குவது மனித மனத்திலிருந்துதான். தன்னுணர்வு நிலையைத் தோற்றுவித்து வளர்ப்பதுதான் ஆன்மிக அடிப்படை (spiritual principle).

மனிதத் தன்மையின் தனிப்பட்ட உயர்பண்பு என்பது அவன் தன்னுணர்வு நிலையைத் தானே அறிவதுதான். அது ஆன்மிக அடிப்படையின் ஆற்றலால் அமைவது.

மனிதனுடைய ஏனைய திறமைகளோடு இணைந்து நிற்கும், பின்னர்த் தன்னைத் தனியே பிரித்து, மாறுபடுத்திக் காட்டுவது தன்னுணர்வு நிலை.

புலன் உணர்வும் புலன் அனுபவமும்

ஐம்புலன்களின் வழியாக உணர்வு உண்டாகிறது. அவைகளைப் புலன் உணர்வு (sensation) என்று குறிப்பிடுவர். புலனுணர்வு விலங்குகளுக்கும் மனிதனுக்கும் பொதுவானதே. புலனுணர்வானது மனிதனிடத்தில் மட்டும் புலன் அனுபவமாக மாறுபடுகிறது. தன்னுடைய அறிவு, புலன் அறிவு என்ற வேறுபாடு மனிதனிடத்தில் தோற்றம் பெறுதற்குக் காரணம் அவனிடத்தில் அமைந்த ஆன்மிக அடிப்படை.

பசி, தாகம் முதலிய புலனுணர்வுகள் தோன்றுகின்றன. பசி என்னும்போது வரும் புலனுணர்வு, உணவில் விருப்பம், தேடிப் பெறுதல் முதலியன விலஙகுகளுக்கும் மனிதர்களுக்கும் பொதுவானவையே. ஆனால் நமக்கு நன்மையைக் கொடுப்பது இது என ஒரு தன்னுணர்வு உண்டாகிறது. இது மனிதனுக்கு மட்டுமே உண்டு.

நன்மை

விலங்கு உணர்ச்சிகளால் 'தேவை' என்ற உணர்ச்சி எழும். தேவையை நிறைவு செய்பவை எல்லாமே நல்லவை. ஆனால்

மனிதன், இது என்னைத் திருப்திப்படுத்துகிறது, எனவே, 'இது எனக்கு நன்மை தருவது' என ஒன்றை அவன் முடிவு செய்கிறான். எனக்கு நன்மை' என்பது எப்படி உண்டாகிறது?

மனிதன் தன்னை முழுமையாக உணர்ந்து கொள்ளுகின்ற, மாபெரும் தன்மையுடைய மானிடப் பண்பு (personalism)என்ற ஒன்று உண்டு. மனிதனையே முழுமையாகக் கொண்ட ஒரு முழுமை அமைப்புக்கு நிறைவு தருவன எல்லாமே 'நன்மை' என்று தான் கொள்ளவேண்டும்.

மனிதனை முழுமையாகக் கொண்ட அமைப்புக்குரிய தேவை, தேவையின் நிறைவு, நன்மை என்பவைகள் ஆன்மிக அடிப்படையால் முடிவு செய்யப் பெறுகின்றன.

மனச்சான்று எனக் கொண்டு மனச்சான்று நமக்கென ஒரு கருத்துக் குரலை எழுப்ப, அது முதன்முதலில் தேவையை ஒட்டிய ஒருவகை நிறைவு என அமைந்து, பின்னர் 'நன்மை' என்பதைத் தருவதாக அமைந்தது. மனச்சான்றின் வழியே எழும் கருத்தினை உணரும் ஆற்றல் ஆன்மிக அடிப்படையால் உண்டாவதே.

இது எனக்கு நன்மை தருவது என்பதை மனச்சான்றின் குரல் மூலம் அறியும் ஆற்றலே மனிதனுடைய பேராற்றல் அதனைத் தோற்றுவிப்பது ஆன்மிகம். அதே ஆன்மிக அடிப்படை தான் உலகத்தின் அடிப்படை.

தன்னுடைய மனத்துக்கும் உலகத்துக்கும் பொதுவாக அமைந்த ஆன்மிக அடிப்படைதான் மனிதனுக்கு இத்தகைய ஆற்றலைத் தருகிறது.

தன்னை அறிந்து இயற்கைக்கு அப்பாற்பட்டு விளங்குதல்

ஆன்மிக அடிப்படையானது ஒரு தனிமனிதன் மனத்தில் நின்று தொழிற்படும்போது இரண்டு நிலைகளை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டும்.

(1) பகுத்தறிவு: தாவரங்கள், விலங்குகள் போன்றவை களுங்கூட, பகுத்தறிவினால் பயன்கொள்ளுவதைப் பார்க்கலாம். தாவரங்களும் விலங்குகளும்கூட, தங்களைத் தங்கள் சூழ்நிலை களுக்குத் தக்கவாறு மாற்றிக்கொள்ளுகின்றன. எனவே மனிதர் களிடம் மட்டுமேயன்றி தாவரம், விலங்கு ஆகியவைகளிலுங்கூட, பகுத்தறிவும் தத்தம் குறிக்கோள் நிலையை ஒட்டி மாறுபடுத்திக் கொள்ளும் அறிவும் (rational activities and gcal directed activities) அமைந்திருப்பதைப் பார்க்கலாம்.

(2) 'தன்-நனவு': தாவரங்களும் விலங்குகளும் பகுத்தறிவுடன் இணைந்த செயல்களில் ஈடுபட்டாலும், அவைகள் தங்களைப் பற்றி ஆழ்ந்து நினைக்கின்றனவா? தன் நனவு பெற்றனவா? எனில், இப்போது இல்லை. பகுத்தறிவு நிலை உயிர் உள்ளவைகளுக்கும் உயிர் இல்லாதவைகளுக்கும் பிரதிபலிப்பதைப் பார்க்கும்போது மனிதனும் விலங்குகளும், தாவரங்களும் ஒரே வகையைச் சேர்ந்தன. இந்த நிலையில் மனிதன் தன் நிலையும் இயற்கை நிலையும் ஒன்று எனவே கருதுகிறான். தன்னைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும் 'தன்-நனவு' என்ற வகையில் மனிதன் பிற விலங்கு முதலியவைகளிலிருந்து வேறுபட்டு விடுகிறான். இதனைத்தான் தன்னை அறிந்து, இயற்கைக்கு அப்பாற்பட்டு விளங்குவது என்றார் கிரீன் அவர்கள்.

இவ்வுலகத்தைப் பொதுவான அமைப்பு முறையில் விளங்கிக் கொள்வதே பகுத்தறிவினால்தான். அது அனைவருக்கும் பொது. அதுவே விஞ்ஞான அறிவு. எனக்கு இது எந்த வகையில் நன்மைதரும் என்பதைத் 'தன்-நனவு' என்பதன் மூலமாக அறிந்து கொள்வதே தத்துவ வாயிலாக நமக்குரிய வகையில் அறிந்துகொள்வது.

அற இயல் நோக்கில் பகுத்தறிவும் 'தன்-நனவு' நிலையும்

பகுத்தறிவு என்பது அறிவுடன் தொடர்புள்ள ஒரு சிந்தனை என்பதாகக் கொள்வோமானால், அது முக்கியமாக அளவை, கணிதம் ஆகியவைபற்றி அருவமுறையில் மனிதன் ஆய்ந்தறியும் செயல். அவ்வாறு பகுத்தறிவினால் ஆய்ந்து செயற்படுத்தப் பெறுபவைகளில் அறப்பண்பு வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. ஆயினும், முரண்பாடு இல்லாமல் இயங்குவது என்பது பகுத்தறிவின் முக்கியமான பண்பாடு. ஆராய்ந்து அறிவதன் மூலம் சில செயல்கள் நம்மிடம் மலரலாம்; அது பகுத்தறிவினால்.

'தன்-நனவு' என்பது பகுத்தறிவின் முக்கியப் பண்பாடாகிய முரண்பாடு இல்லை' என்பதை ஏற்கிறது. ஆனால் 'தன்-நனவு' என்பது தனக்கு நன்மை எனத் தொடங்கி, 'தன்-நனவு'ம் அற இயலும் இணைந்து வளர்கின்றன. இரண்டும் இணைந்து செல்லும்போது, வெளிப்புறநிலையில் உடலால் நிகழ்பவை சிறப்புடையன அல்ல என்று காண்கிறான். காலப்போக்கில் 'நன்மை' என்பது தனக்கும், தன் குடும்பத்தினருக்கும், தன் நாட்டினருக்கும் மட்டுமே உரியது அன்று என உணர்கிறான். நன்மை' என்பது மனித சமுதாயத்துக்கே, விலங்குகளுக்குங்கூட உரியது என நினைக்கிறான்.

'நன்மை' என்பது 'தன்-நனவு' நிலையும் அறச் செயலும் இணைய வளர்ந்தபோது விளையும் பயன். எனவே 'நன்மை' என்பதன் விளைவு விரிவாகிறது. அங்கே என் நன்மை, உங்கள் நன்மை என்ற வகைகளில் முரண்பாடு அமையாமல், ஒன்றுக் கொன்று மாறுபாடு இராமல், அனைத்து நன்மைகளும் அனைத்து நன்மைச் செயல்களும் முரண்பாடு இல்லாமல் இணைகின்றன.

'தன்-நனவு' நிலை பெருகப் பெருக நன்மையும் பெருகும். அறிவால் செயல்களைத் தேர்ந்தெடுத்து, செய்கைகளினால் விளையும் நன்மைகளை நினைத்துக் கொண்டிருக்கும் நிலை பகுத்தறிவுக்கு உண்டு. இங்கே நற்செயல்களைச் செய்வதே அமைந்து விடும். அதாவது. நன்மையே அவர்களின் இயற்கை உணர்வாக மாறிவிடுகிறது. நன்மையுடையது எது என்று ஆராயவோ, நன்மை வரும் என்று எண்ணவோ வேண்டிய அவசியம் இல்லை. 'தன்-நனவு' நிலையில் செயலாற்ற முற்படும்போது, நன்மைச் செயல்கள் மட்டுமே அவர்கள் செயல்களாக இயற்கையாக அமைந்துவிடும்,

முடிவுரை

ஹெகல் அவர்கள் கூறிய 'ஆன்மிகம்' என்ற அடிப்படைப் பண்பை பகுத்தறிவோடும், இணைத்தும்,வேறுபடுத்தியும் விளக்கி பகுத்தறிவு, ஆய்ந்து நன்மையுடைய செயல்களைத் தெரிவிக்கும். பின்னர்ச் செயலாற்றுதல் அமையும். செயலாற்றிய பிறகு நன்மை எதிர்பார்க்கப்பெறும். ஆனால் ஆன்மிக அடிப்படையிலான 'தன்-நனவு' என்பது நன்மைச் செயல்களுடனேதான் வளரும். மனிதன் நன்மைச் செயல்களை இயற்கையாகச் செய்யக்கூடிய அமைப்பைத் தருவதே, 'தன்-நனவு' எனக் கூறினார்.

(5) (உ) பிராட்லி (1846 to 1924) என்பாரின் கொள்கை

முன்னுரை

பிராட்லி என்பார் 'அற வாழ்வின் ஆராய்ச்சி'(ethical studies) என்ற ஒரு நூலை எழுதினார். நிறைவு என்றால் என்ன என்ற வினாவை எழுப்பிக் கொண்டு அதில் கற்பனையை அமைத்துக் கொள்ளாமல், தனிமனிதனின் இயலுவதற்கு ஏற்ற கொள்கையை அமைக்கவேண்டும் என்று தொடங்கி, 'நிறைவு' பற்றிய அறக் கருத்துகளை அமைத்துக் கூறுகிறார். அதனை முறையுறக் காணலாம்.

திறமைகளை வளர்த்தல்

மனிதன் பலவேறு வகையான திறமைகளைப் பெற்றிருக்கின்றான். எந்த மனிதனும் தன்னுடைய எல்லாத் திறன்களையும் நிறைவாக வளர்க்க முடியாது. அப்படி வளர்க்க முற்பட்டாலும் சமுதாயத்தைப் பொறுத்த வரையில் நன்மை பயவாது. அதே சமயத்தில், ஒரே வழியில் தனிமனிதன் தன் திறமையை வளர்ப்பானேயானால், அவன் அத்திறமை ஒன்றனாலேயே சமுதாயத்துக்கு அளவற்ற தொண்டாற்ற முடியும் என்பதும் பொருந்தாது.

ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் வாழும் சமுதாயத்தில் அவனுக்கென ஓர் இடம் உண்டு. அதன் மூலம்தான் அவன் நிறைவான மனிதத் தன்மையின் உண்மையை உணரமுடியும்.

நாம் கடைப்பிடிக்கும் அறவாழ்வில், சமுதாயம் வகுத்த குறிப்பிட்ட கடமையைச் செய்வதுதான் நல்வாழ்வைத் தரும் வழியாக அமைகிறது.

அடுத்து, இது கூடாது, அது கூடாது என்ற முறையில் அமையும் சமுதாய விதிகளின்படியும், மனச்சான்றின் வழியாக நாமாக வகுத்துக்கொள்ளும் விதிகளின்போக்கிலும் பார்த்தால் 'நல்லது' என்பது தகாத செயல்களை நீக்குவதால் மட்டுமே விளைவது என்று பொருள்படும். இதனாலும் 'நன்மை' என்பதற்கு உரியபொருள் விளங்கவில்லை.

ஒவ்வொரு தனிமனிதனும் தான் வாழும் சமுதாயத்தில் ஒரு தனிநிலையை ஏற்பவனாகிறான். ஒருவன் ஆசிரியனாகவாழலாம், விவசாயியாகவோ தொழிலாளியாகவோ அமையலாம். இத்தகைய நிலைகளுக்கு ஏற்புடைய கடமைகளைத் தவறாமற் செய்வதிலேயே அவனவனுடைய அறவாழ்வு சிறப்படைகிறது.

தம் நிலையினை இது என உணர்ந்து, அந் நிலையினுக்கு ஏற்புடைய கடமைகளைச் செய்ய முற்படும்போது, மற்றவர்களுடன் பழகவேண்டிய வாய்ப்பு உண்டு. அப்போது, அவர்களின் அறவாழ்வில் அமைந்துள்ள உயர்வையும், பெருமையையும் அறிய நேரிடலாம். ஆனால் தன்னுடைய நிலையினுக்கு ஏற்புடைய கடமைகள் மட்டுமே தம் அறவாழ்வில் எப்போதும் இடம்பெற வேண்டும்.

முழுமையாக அமைந்துள்ள மக்கட் சமுதாயம் முழுமைக்கும் நிறைவுறுகின்ற வகையில் நாம் செய்யும் சேவை மிகக் குறைவானதாக இருக்கலாம். ஆனால், நம் நிலைமைக்கேற்ற நம்

சொந்தக் கடமைகளை நிச்சயமாகச் செய்து முடிக்கிறோம் என்ற மனஅமைதி தோன்றுமல்லவா இதனுள் அமையும் இரு முக்கியப் பண்புகள்: 1. தன் கடமையைத் தானே நிறைவேற்றுவதால் தன்னை உணர்தல் (self realisation), 2. தன்னையே தியாகம் செய்தல் (self sacrifice).

முடிவுரை

தனிமனிதன் தன்னிடமுள்ள ஆற்றல்களை வளர்த்துக் கொள்ள முற்படும்போது சமுதாயத்தில் எந்த நிலையில் நாம் நின்றால், நம்மிடமுள்ள தனித் திறமைகள் விளக்கம் பெறும் என்பதை உணரவேண்டும். தனித்திறமைகளுக்கு ஏற்ற அன்றாடக் கடமையைச் செய்வதால், நம்முடன் வாழும் மக்களுக்குத் தொண்டு புரியும் முயற்சியில் நம் வாழ்நாளைச் செலவிட்டோம் என்ற மகிழ்ச்சி உண்டு. அதேசமயம் நம்முடைய ஆற்றல்கள் நன்கு வளர்ந்து நிறைவு பெறுவதற்கும் வழி உண்டு.

இவ்வகையில், வேறு வேறு நிலைகளில் அமைந்தவர்களிடையே அறவழியில் ஒரே நிலையிலான நிறைவை உண்டாக்குவதற்கு, ஒரே வகையான கொள்கையைக் கடைப்பிடிப்பது இயலாது என்று கருதுகிறார் பிராட்லி.

ஓரளவுக்கு நம்மிடம் தனிச் சிறப்பமைந்த ஒருவகைப் பண்பை —ஆளுமையை (unique personaliy) நமக்கு அளிப்பதுதான் நல்வாழ்வின் நோக்கம் என்றும் வாழ்வுக்கும் அறத்துக்கும் மூலமாக அமைந்த ஆக்கப் பண்பு இதனால் விளக்கம் அடைகிறது என்றும் தம் கருத்தின் ஆய்வுரையை அமைத்துக் கொடுத்தார் பிராட்லி.

நிறைவு என்னும் கொள்கை முழுவதற்கும் முடிவுரை

தனிமனிதனின் அறவாழ்வு அவன் மேற்கொள்ளும் அறச் செயல்களில் அமைகின்றது. அறச்செயலில் அமைந்துள்ள 'நன்மை' பற்றி இருவேறு கருத்துகள் உள்ளன.

(1) நோக்கக் கொள்கை (Teleological Theory): இக்கொள்கையானது நற்செயல் (அ) அறச்செயல் (அ) ஒழுக்கச் செயல் என்பது அது பின்னர் விளைவிக்கும் நற்பயனைப் பொறுத்தது என்று விளக்கியது.

(2) நோக்கமில்லாக் கொள்கை (Deontological Theory): இக்கொள்கையானது ஒழுக்கச் செயலின் நன்மை அல்லது பயன் அவ்வொழுக்கச் செயலிலேயே உள்ளார்ந்திருக்கிறது என்று விளக்கியது.

நிறைவுக் கொள்கையானது இவ்விரண்டையும் இணைக்கும் கொள்கை என்பதோடு அது வேறு ஒரு சிறப்பையும் தெரிவிப்பதாக அமைகிறது. நிறைவு என்பது பலவகையான திறமைகளை உள்ளிட்ட பலவகையான செயல்கள் தமக்குள் வேறுபாடில்லாமல் நிறைவுபெற இணையவேண்டும். அப்படி நிறைவுபெற இணைந்துவிடுமானால் மகிழ்வு அமையும். நோக்கக் கொள்கையைப்போல மகிழ்வு என்னும் பயன் பின்னரே வருவது எனக் கொண்டாலும், பலவேறு வகையான திறன்பற்றிய செயல்களும் தம்முள் இணைந்து வருகின்ற போக்கிலேயே நமக்கு ஓரளவு மகிழ்வின் அனுபவம் புலப்பட்டுக் கொண்டு வருகிறது என்ற அரிஸ்டாடிலின் கொள்கையிலிருந்து, மகிழ்வை நோக்கியதாக நம் செயல் அமையக்கூடாது, நிறைவு என்னும் அறத்தை நோக்கியதாகவே அமையவேண்டும் என்று கொள்வதால் இன்பியற் கொள்கையில் அமைந்த சிக்கல் தீர்க்கப் பெற்றதாக அமைகிறது. மேலும், சாதாரண இன்பத்தைவிட மகிழ்வு உயர்ந்தது, வேறுபட்டது என்பது மகிழ்வுக் கொள்கை உண்மையிலேயே நமக்கு மகிழ்வுக் கொள்கையாக அமைகிறது.

அடுத்து, ஆன்மிகப் படிநிலை வளர்ச்சி அடிப்படையிலிருந்து ஒரு முழுமையான நிறைவைப் பெற இயலும் என்பதை வலியுறுத்தும்போது, தனிமனிதன் தன் முயற்சி இன்றியே அறவழியில் செல்பவனாகிறான். ஆன்மிகப் படிநிலை வளர்ச்சி அவனை அவ்வாறு செய்துவிடுகிறது என்ற கொள்கையானது ஒருவகையில் மனிதனை ஆன்மிக ஆற்றலின் கருவியாகவே அமைத்துவிடுகிறது. ஆனால் கிரீன் என்பவர் நற்செயல்களைச் செய்து நன்மையை எதிர்பார்த்தல் என்பதைவிட, நற்செயல்களை மட்டுமே இயற்கையாகச் செய்யும் ஒரு நிலைமை மனிதனுக்கு உண்டாகிவிடுகிறது அதுவே நிறைவு எனக் கொண்டார். மனிதனிடம் அமைந்த எல்லாவகையான திறமைகளையும் செயற்படுத்தி அவைகள் எல்லாம் இணைந்த நிறைவு ஒன்றைக் காணமுடியும் என்றார் கிரீன். ஆனால், பிராட்லி அவர்கள், தனித்தன்மை என்பது தவிர்க்க முடியாதது, எனவே, எல்லாத் திறமைகளையும் செயற்படுத்த இயலாது. சமுதாயத்தில் தனக்கு என அமைந்த திறமைகளை மட்டுமே செயற்படுத்தவேண்டும்; செயற்படுத்த முடியும் என்றும் அதனால் சமுதாய நிறைவும், தனிமனித நிறைவும் ஒழுங்கு செய்யப் பெறுகின்றன என அமைத்துக் காட்டினார்.

பிறப்பியலான நிறைவுக் கொள்கையானது அற இயலுக்குப் பொருத்தம் இல்லை என்று மறுத்துரைத்தார்கள் கருத்தியல் அற இயற் கொள்கையாளர்கள். நிறைவுக் கொள்கையானது கருத்தியல்பான அறஇயற்கொள்கையாளர்களால் விளக்கப்பெற்ற முறைகள் இத்தலைப்பில் அமைத்துக் காட்டி விளக்கப்பெற்றன

(6) நிறைவினை ஆளுதல்—சான்றாண்மை என்னும் அற இயற் குறிக்கோட் கொள்கை

அல்லது

திருவள்ளுவரின் அற இயற் குறிக்கோட் கொள்கை

முன்னுரை

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் ஒரு முழுமைவாய்ந்த அற இயல் நூலாகும். திருக்குறளையே 'அறம்' என்று சொல்லி விட்ட பிறகு, திருக்குறளை உள்ளிட்ட பதினெட்டுக் கீழ்க்கணக்கு நூல்களை அறநூல்கள் என்று வரையறை செய்துவிட்ட பிறகு, இங்கே திருக்குறளை அற இயல் நூல் என்று எழுதுவதில் என்ன புதுமை இருக்கிறது. திருக்குறளை அறநூல் என்று முடிவு செய்ததுபோலவே திருக்குறளை உலகியல் ஒழுக்கம் கூறும் நூலென்றும்,மக்கள் வாழ்வியல் அடையக்கூடிய உறுதிப்பொருள் களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் விளக்கிக் கூறும் நூல் என்றும் முடிவு செய்துள்ளார்கள். முப் பாலில் நாற்பால் அமைத்தார் திருவள்ளுவர் என்று கூறி வாழ்வுக்கு வேண்டிய சிறந்த அறங்களையும், பொருளீட்டும் முறையையும், இன்பம் துய்க்கும் முறையையும் முறையே எடுத்துக்காட்டினார் என்ற விளக்கத்தையும் நாம் காண முடிகிறது. இவ்விளக்கத்தில் அறம் மூன்றனுள் ஒன்று என்ற இடத்தைத்தான் பெறுகிறது. இவ்விளக்கம் ஒருவகையில் திருக்குறளுக்கும் அறத்துக்கும் இன்றியமையாத தன்மையை வழங்கவில்லை என்ற காரணத்தால் அறத்தின் பெருமை உணர்ந்து, அறவழி வாழ்ந்து, அறத்தாற் பொருளீட்டி, அற வழியில் இன்பம் துய்த்து வாழவேண்டும் என்பதை வலியுறுத்து வதே திருக்குறள் என்று விளக்கம் செய்தார்கள். எல்லா விளக்கங் களுக்கும் மேலாக அமைந்த முற்ற, முடிந்த விளக்கமாக—வைரக் குப்பாயமாக உள்ள விளக்கம் ஒன்று உண்டு. எல்லாப் பொருள் களையும் தன்னுள் அடக்கிய முழுமைப் பொருள் நூல் என்பதே,

'எல்லாப் பொருளும் இதன்பாலுள இதன்கண்
இல்லாத எப்பொருளும் இல்லையால்'

என்பது திருவள்ளுவ மாலை.

மேலே குறிப்பிடப் பெற்றுள்ள எல்லா வகையான விளக்கங் களுக்கும் அப்பாற்பட்ட நிலையில் நின்ற விளக்கமே, திருக்குறள் ஒரு முழுமை வாய்ந்த அற இயல் நூலாகும் என்பது.

அறநூல் வேறு; அற இயல் நூல் வேறு. அறநூல் என்று குறிப்பிடும்போது மக்கள் வாழ்வுக்குத் தேவையான அறக் கருத்துகளைத் தொகுத்துக் கூறும் நூல் என்று பொருள்படும். மொழியைப் பேசுகிறவர்கள் மக்களே. ஆனால் மொழியின் பல்வேறு பகுதிகளையும் எடுத்துக்காட்டி வரையறை செய்யும் நூல் ஒன்று உண்டு. அதற்கு மொழியின் இலக்கண நூல் என்பது பெயர். அவ்வாறே, வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் மக்களே யாயினும் வாழ்வியற் பகுதிகளை எடுத்துக்காட்டி, அவைகளின் இலக்கண வரையறைகளை அமைத்துக் காட்டும் நூல் வாழ்வியல் இலக்கண நூல் ஆகும். மனிதவாழ்வு என்பதுதான் அறம். எனவே, அறத்தின் இலக்கணத்தை வரையறை செய்து உணர்த்துவதே திருக்குறள். அதனால் அது அற இயல் நூல் எனப்பெற்றது.

அற இயல் நூல் ஒருவகை விஞ்ஞான நூல். அறம் உயர்நிலை விஞ்ஞானப் பிரிவைச் சேர்ந்ததாதலின் திருக்குறளும் உயர்நிலை விஞ்ஞான வகையைச் சார்ந்த நூலாக அமைகிறது. உயர்நிலை விஞ்ஞான வகையைச் சார்ந்த நூலாயின் அது முதன்முதலில் வாழ்வியல் உயர்நிலை எனப்பெறும், அறவியல் உயர்நிலை எனப் பெறும் குறிகோட் கொள்கை இது என வரையறை செய்ய வேண்டும். பின்னர்க் குறிக்கோட் கொள்கையின் அடிப்படையில் தனிமனிதனின் தனிச்செயல்களின் நன்மை தீமைகளை ஆராய்ந்து, அவனுக்குரிய செயல்களை மேற்கொள்ளுதற்குரிய செயல்முறைத் திட்டங்களை வகுத்துக்காட்டி,அவன் உயர்நிலைக் குறிக்கோள் வாழ்வு என்னும் முடிந்த நிலையை அடையுமாறு நெறிப்படுத்த வேண்டும். [உயர்நிலை விஞ்ஞானம் என்பதன் விளக்கத்தை இந்நூலின் முதற்பகுதியில் கண்டு கொள்க.] அற இயலை ஓர் உயர்நிலை விஞ்ஞானப் பிரிவியலைச் சார்ந்தாக அமைத்து, அற இயலின் இலக்கண நூலாக அமைக்கப்பெற்ற நூல் திருக்குறள் ஒன்றே. அற இயலின் இலக்கண நூலாக உயர்நிலை விஞ்ஞான நூலாகத் திருக்குறளைத் தவிர வேறு நூல் காணப்பெறவில்லை.

சில செயல்களைச் செய்; சில செயல்களைச் செய்யாதே என்று கூறும் நூல்கள் நீதி நூல்கள் ஆகும், ஆனால் அவை அற நூல்கள் ஆகா. நீதி வேறு; அறம் வேறு. அறம் என்பதற்குத் தனித்த இருப்பு உண்டு. அதனை அறியும் அறிவு ஏனைய அறிவைப் போன்றதன்று; அற இயல் அறிவைப் பெற்று, அறத்தின் பல்வேறு வலிமைகளை அறிந்தும் செயற்படுத்தியும் வளர்ந்து, இறுதியில் அறத்தையே துய்த்து மகிழும் உயர்நிலைக் குறிக்கோள் நிலையினை இலக்கண வகையால் வரையறை செய்து அமைத்துக்காட்டும் அற இயல் நூல் திருக்குறள் ஒன்றே.

அற இயல் படிக்கும் மாணாக்கர்கள், இதுவரையில் உலகில் பல்வேறு அற இயற் குறிக்கோட் கொள்கைகள் எந்த எந்த அடிப் படையில் வகுக்கப் பெற்றுள்ளன என்பதையும் ‘ அற இயல்’ என்றால் அது எந்த எந்தச் செய்திகளை எடுத்து விளக்கும் என்பதையும் பொதுவாக அறிந்திருப்பார்கள்.

திருவள்ளுவர் உலக அற இயல் ஆய்வறிஞர்களைப்போலவே அற இயற் குறிக்கோட் கருத்தினை வகுத்துக்காட்டி, அதனை அடைவதற்குரிய செயற்பாட்டு விளக்கத்தையும் அமைத்துக் காட்டிய அற இயல் ஆய்வறிஞர் என அறியும் வகையிலும், திருக்குறள் அற இயல் என்னும் உயர்நிலை விஞ்ஞானக் கொள்கை நூலாகவும், கொள்கை விளக்க நூலாகவும், அமைந்த அற இயல் இலக்கண நூல் என அறியும் வகையிலும் இக்கட்டுரை அமைக்கப்பெறுகிறது.

இருமை வகை

உள்ளத்தியல் எனப்பெறும் விஞ்ஞான வகையைச் சிறப்பாக ஏற்றுக்கொண்டு, மக்கள் தம்மியல்பாக மேற்கொள்ளும் செயல் களெல்லாம் இயற்கையான அறச்செயல்கள் என்றே அமைத்துக் கொண்டு, அவ்வாறு இயற்கையான செயல்களால் துணியப்பெறும் முடிவு எதுவோ அதையே அற இயல் குறிக்கோட் கொள்கை என்று அமைத்தார்கள். அவ்வகையில், மக்களின் இயற்கைச் செயல் இன்பத்தை நோக்கிய செயலாதலின் இன்பமே அற இயற் குறிக்கோட் கொள்கை என்று கண்டார்கள்.

அறிவியற் கொள்கையினர், இன்பியற் கொள்கையினரின் முடிவுக்கு மாறாக, அற இயல் அறிவு சார்ந்த செயல்களை எந்த ஒருவகைத் தன்னல உணர்ச்சியுடனும் இணைக்காமல், இச்செயல் களைச் செய்தேயாக வேண்டும் என்ற நிலையில் செய்து முடித்து விட வேண்டும்; அவ்வாறு அற இயல் அறிவு சார்ந்த செயல்களைச் செய்துமுடித்தல் என்பதே அற இயற் குறிக்கோட் கொள்கை என்று கொண்டார்கள். ஆயினும், கடமையை முழுமையாகச் செய்து முடித்த நிலையில் அவர்களுக்கு ஒருவகை இன்பம் வந்தடையும் அல்லது கடவுள் அந்த இன்பத்தை இணைத்து வைப்பார் என்று கொண்டார்கள்.

உயிரியற் படிநிலை வளர்ச்சிக் கொள்கையினர் தன்னலம், பிறர்நலம் என்ற இருவகை அமைப்புகளைக் கொண்டதாகவே உயிரின் இயற்கை அமைப்பு அமைந்திருக்கிறது. இரண்டையும் இணைய வளர்க்கும் முறையே அற இயல் அறிவு சார்ந்த முறை என்றும் அவ்வாறு இரண்டையும் இணைய வளர்த்து முடித்தலே அற இயல் குறிக்கோட் கொள்கை என்றும் கண்டார்கள்.

நிறைவுக் கொள்கையினர் மனிதன் தன்னிடத்தே அமைந்த பலவகைக் கூறுகளும் இணைய வளர்ந்து நிறைவு பெறுகின்ற காலத்தே அவன் முழுமையும் மகிழ்வும் கொண்ட நிலையினை அடைகிறான். ஆகையால் 'நிறைவுறுதல்' என்பதே அற இயல் குறிக்கோட் கொள்கை என்று கண்டார்கள்.

திருவள்ளுவரின் அற இயற் கொள்கையானது மேலே கூறப் பெற்ற அனைத்துக் கொள்கைகளையும் ஒவ்வோர் அமைப்பில் ஒத்து விளங்குவது போலத் தோன்றினாலும் அவைகள் எல்லா வற்றுக்கும் அப்பாற்பட்ட ஒருவகைக் கொள்கையை அமைத்துக் காட்டுகிறார்.

திருவள்ளுவர் தனிமனிதனை மட்டுமே தன்னுடைய ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொள்ளவில்லை. உயிர்ப் படிநிலை வளர்ச்சிக் கொள்கையின் அடிப்படையில் உலகை மட்டுமே தன்னுடைய ஆய்வுப் பொருளாக அமைத்துக் கொள்ளவில்லை. திருவள்ளுவரின் அற இயல் ஆய்வானது தனிமனிதனையும் உலகை யும் இணைத்து நிறுத்தி ஆயும் ஒருவகைப் பொதுமை ஆய்வாகத் தொடங்குகிறது.

புலன் கடந்த பொருண்மைக் கொள்கையினரைப் போன்றோ, சமய வழிப்பட்டவரைப் போன்றோ, அளவையியலான அறிவியற் கொள்கையினரைப் போன்றோ, கடவுள் முதலிய சில முன்னேற்றப் பொருள்களுடன் மனிதனை இணைத்து ஆய்ந்து, அத்தகைய ஆய்வின் அடிப்படையில் அற இயற் குறிக்கோட் கொள்கையை வகுக்க முற்படவில்லை.

திருவள்ளுவரும் ஒருவகையில் நிறைவுக் கொள்கையினரே யாயினும், உலக அற இயற் கொள்கையாளர்களில் காணப்பெறும் நிறைவுக் கொள்கையினரைப்போல, தனிமனிதனிடத்தில் காணப் பெறும் சில குறையுடைய ஆற்றல்கள் அல்லது குணங்கள் நிறைவை எய்துகின்றன என்று கூறவில்லை.

உடலை வெறுத்து, உயிரை வளர்த்து, அவ்வுயிர் வேறு ஒரு பொருளுடன் இணைந்து தன்னிறைவு பெறுதல் என்பதைத் திருவள்ளுவர் கொள்கை அரண் செய்யவில்லை.

கடவுட் கொள்கை, முன்வினைக் கொள்கை ஆகியவைகளை அடிப்படையாக அமைத்துக்கொண்டு அற இயற் குறிக்கோட் கொள்கையை வகுக்க முற்படவில்லை.

செயல்பட்டுக் கொண்டிருக்கிற உலகத்தைக் காண்கிறார்; உலகத்தோடு இணைந்தே ஓட்டமும் நடையுமாக ஓடிக் கொண்டிருக்கிற உலகியற் பொருள்களைக் காண்கிறார். அவ்

வாறே உழைத்து ஓடாய் உருக்குலைந்து நிற்கும் தனிமனிதனைக் காண்கிறார். இவைகள் மூன்றையும் தனித்தும் இணைத்தும் காண்கிறார். இதே உலகில் திருவள்ளுவர் காலத்துக்கு முன் வாழ்ந்து சிறந்தவர்களைப் பார்க்கின்றார். அவர்கள் சிறப்படை வதற்குக் காரணமாக இருந்த வாழ்வியல் நுட்பங்களைக் காண் கிறார்.

ஆற்று வெள்ளம் செல்லும் போக்கிலேயே தன்னுரிமையில் லாமற் செல்லும் தெப்பக் கட்டையைப்போல ஊழ் வினையின் வழிப்படியே தன்னுரிமை இல்லாமல் செல்லுவதே உயிரின் இயல்பு ஆகையால் மாண்புகளால் நிறைந்த பெரியவர் களையோ மாண்புகளின் நிறைவு இல்லாத சிறியவர்களையோ புகழ்வதும் இகழ்தலும் செய்யமாட்டோம் என்று கூறிய புற நானூற்றுக் கணியன் பூங்குன்றனாரின் கருத்தையும் ஏற்கவில்லை. உலகம் வியக்கும் சான்றோரையும், அவர் பெருமையையும், அவர் மேற்கொண்ட வாழ்வியல் முறைகளையும், அவைகளை விளக்கிக் கூறும் நூல்களையும் மதிப்புடன் போற்றி, தம்முடைய ஆய்வுகளுக்குத் துணைபுரிவனவாக அமைத்துக் கொள்கிறார்.

உலகமாயினும் தனிமனிதனாயினும் இருவகை அடிப்படை களில் செயல் மேற்கொள்ளுவதாக எல்லாச் செய்ல்களையும் தொகுத்து அமைத்துக் கொள்ளுகின்றார். ஒன்று அறிவை நோக்கிய செயல்; மற்றொன்று பொருளை நோக்கிய செயல்.

அறிவை நோக்கிய செயல் ஒருவனைத் தெள்ளியனாக்குகிறது. பொருளை நோக்கிய செயல் ஒருவனைத் திருவாளனாக ஆக்கு கிறது.

'இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு'

என்பது குறள். அதற்கு அடுத்த நிலையிலேயே, இரு வகை களையும் வளர்க்க மேற்கொள்ளப்பெறும் செயல்களின் இயல்பு களை ஆராய்கிறார்.

அறிவை வளர்க்கும் அடிப்படையில் நல்லவை என்று கருதப் பெற்ற செயல்கள் செல்வத்தை அழித்துவிடும் செய்ல்களாக இருக்கின்றன என்று கண்டார். அவ்வாறே அறிவை அடியோடு அழிக்கும் செயல்கள் என்று கருதப்பெறுபவை செல்வத்தை வளர்ப்பதற்கு உரிய நல்ல செயல்களாக இருக்கின்றன என்று கண்டார்.

'நல்லவை எல்லாஅந் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு'

என்பது குறள்.

உலகமாயினும் தனிமனிதனாயினும் இருவகை அடிப்படைகளில் இயங்குகிறார்கள் என்று கொண்டாலும், அந்த இரண்டும் தம்முள் முற்றாக மாறுபட்டவை. பண்பாலும் செயலாலும் முற்றாக முரண்பட்டவை என்று குறிப்பிடுகின்றார். எனவே, அறிவைப் பெருக்க முற்பட்டு அதந்குரிய செயலை மேற்கொண்டால் செல்வம் அழிந்துபோகும். செல்வம் பெருகுவதற்குரிய செயலை மேற்கொண்டால் அறிவு அழிந்துவிடும்.

உலகமாயினும், தனிமனிதனாயினும் இத்தகைய இரு வேறு மாறுபட்ட இயற்கைகளாலும் செயல்களாலும் இணைக்கப் பெற்றுள்ளனர் என்று காண்கிறார்.

இவ்வுலகில், வாழ்ந்து வெற்றிபெற்றுச் சிறந்தவர் ஒருவர் உண்டு என்று சொன்னால் அவர் இந்த இரு முரண்பட்ட இயற்கைகளை இணைத்து நிறைவாக்கக்கூடிய ஒருவகை இணைப்புச் செயலை மேற்கொண்டு வாழ்ந்திருக்க வேண்டும் என்று கண்டார்.

திருவினராதல், தெள்ளியராதல் என்ற இரு மாறுபட்ட— முற்றாக முரண்பட்ட நிறைவுகளை ஒருவர் பெறமுடியாது என்று கொள்ளவில்லை. அவ்வாறு நிறைவாக்கி வாழ்ந்தவர்கள் உண்டு என்று கொண்டார். இரண்டு மாறுபட்ட நிறைவுகளையும் இணைத்து உருவாக்கும் செயல்களைக் கண்டுபிடித்து அவர்கள் மேற்கொண்டிருக்க வேண்டும் என்று முடிவு செய்தார். அவர்கள் மேற்கொண்ட செயல்களே இவ்வுலகில் நாம் 'அறம்' என்று கொள்ளத்தக்கவை என்ற கொள்கையினரானார்.

'இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு'

என்பது குறள்.

தம்முள் மாறுபட்ட இருவகை வாழ்வியல் நிறைவுகளை கடவுள் அருளாலோ ஊழ்வினை வயத்தாலோ பெற்றார்கள் என்று அமைத்துக் கொள்ளாமல்

'செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்'

என்று கூறினார். அவர்கள் மேற்கொண்டதைப் போலவே நாமும் அச்செயல்களை ஆய்ந்து தெரிந்து, செயற்படுத்த முடியும்; இருவேறுபட்ட நிலைகளில் நிறைவுபெற்று, பின்னர் இரண்டையும் இணைத்த முழுமை நிறைவைப்பெற்று வாழமுடியும் என்றும், அதுவே வாழ்வியல் உயர்நிலை என்றும் அமைத்துக் காட்டினார்.

இருவகைகளில் தனித்தனி நிறைவு பெறுதல்

அறிவியலை அடிப்படையாகக் கொண்ட நிறைநிலையை எய்துவதற்கு மூலகாரணமாக நிற்பது 'ஒலி' என்று கண்டார். இருவினராதல் என்ற நிறைநிலையை எய்துவதற்கு மூலகாரணமாக நிற்பது பொருளியல் முறை என்று கண்டார். இவ்விரண்டையும் தனித்தனியே நிறுத்தி,

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'

என்று அற இயலுக்கு மூலமாக முதற்குறளை அமைத்தார்.

இருவகைகளிலும் தனித்தனியே நிறைவுபெறுதல் உண்டு என்பதை விளக்கவே, நிறைமொழி மாந்தர் என்றும், சான்றோர் என்றும் அமைத்துக் காட்டினார்.

இருவகை நிறைவுகளையும் பெற்று, அவைகளைக் கடந்த முழுமை நிறைவு நிலையில் நின்றவர்கள் ஒழுக்கத்து நீத்தார் என்றும் சார்பு என்னும் நிறைவுபெற்று, அதனைக் கடந்து, நிறைவுகளையெல்லாம் ஆளும் நிலைமை பெற்றவர் என்ற பொருளில் சான்றாண்மையாளர் என்றும் போற்றப்பெற்றார்கள்.

இருமையின் இணைப்பு

மேலே கூறப்பெற்ற இருவேறு முரண்பட்ட இயற்கை நிலைகளின் நிறைவுகளை இணைத்து ஒருவகை முழுமை நிறைவினை வாழ்வியல் குறிக்கோள் என்று கொண்டார். அதனை அடைவதற்குரிய செயற்பாட்டு நெறியினையே 'அறம்' என்று அமைத்துக் காட்டினார்.

இருவகை நிறைவு வாழ்வை இணைத்த முழுமை நிறைவு வாழ்வை அடைவதற்குரிய செயலே 'அறம்' எனப்பெறும். அறத்தால் இருவகை நிறைவு வாழ்வை இணைத்த முழுமை நிறைவு வாழ்வை எய்துதலே அற இயல் குறிக்கோள் கொள்கையின் அமைந்த வாழ்வு. முழுமை நிறைவு வாழ்வில் பெறும் இன்பம் அறம் தந்த இன்பம்: அறத்தால் வந்த இன்பம்.

மேலே குறிப்பிடப்பெற்ற மூன்றையும் விளக்கும் வகையில் அறம், பொருள், காமம் என்ற மூன்று இயல்களை அமைத்தார். காமம் என்ற சொல் நிறைவு என்ற பொருளைத் தரும். நிறைவில் எழும் இன்பம் என்ற பொருளில் 'காமத்துப்பால்' என அமைத்தார்.

அறிவின் நிறைவில் அமைவதே ஊடல்; திரு எனப்பெறும் நிறைவில் அமைவதே துய்ப்புப்பேறு. இரண்டும் தனிநிலையில் இன்பத்துக்குரியவைகளே ஆயினும், மாறுபட்ட, முரண்பட்ட இரண்டும் தம்முள் மோதி மோதி, பின்னர் இணையும்போது முழுமை நிறைவுபெறும். எனவே, இருவகை இன்பங்களும் ஒன்றை ஒன்று நிறைவு செய்யும் முழுமை இன்பம் என மலர்கிறது என்று குறிப்பிட்டார். அதனை,

> 'ஊடுதல் காமத்திற்கு இன்பம்; அதற்கின்பம்
> கூடி முயங்கப் பெறின்'

என்றார். இரண்டும் இணைந்த முழுமை நிறைவில் நிகழும் முழுமை இன்பம் மிக உயர்ந்தது, மிக மென்மையானது என்றும் அதனை ஒருசிலரே அடையமுடியும் என்றும் குறிப்பிட்டுக் காட்டினார்.

> 'மலரினும் மெல்லிது காமம்; சிலரதன்
> செவ்வி தலைப்படு வார்'

என்பது குறள்.

இருநிலைகளை வளர்க்கும் முறை

இருவேறு மாறுபட்ட நிலைகளை உடன்கொண்டு, அவ்விரண்டையும் வளர்ப்பதுதான் வாழ்வியல் உயர்நிலை என்பதை உயிர்ப் படிநிலை வளர்ச்சிக் கொள்கையினரும் வலியுறுத்தினார்கள். தன்னலப் பகுதி, பிறர்நலப் பகுதி என்ற இரு பகுதிகளால் இணைந்ததே வாழ்வுமுறை அல்லது உயிரமைப்பு முறை எனக் கொண்டு இரண்டையும் வளர்க்கவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். தன்னலச் செயல், பொதுநலச் செயல் என்ற இருவகைச் செயல்களால் இரண்டையும் வளர்க்க வேண்டும் என்று கருதினார்கள். ஆனால் திருவள்ளுவர் கருதியது ஒரே செயல் இரண்டையும் வளர்க்கவேண்டும் என்றார். அதனையே 'அறம்' என்றார்.

இவ்விருவகை வளர்ப்புகளை உடல் வளர்த்தல், உயிர் வளர்த்தல் எனஅமைத்து விளக்குவது தமிழகச் சிந்தனை. உடலை வளர்த்தால் உயிர் போய்விடும். உயிரை வளர்க்க முற்பட்டால் உடல் அழிந்துபோகும். காலப்போக்கில், இரண்டையும் இணைய வளர்க்கும் உபாயம் ஒன்றைக் கண்டுபிடித்ததாகத் திருமூலர் கூறுகிறார்.

> 'உடம்பைக் வளர்கும் உபாயம் அறிந்தே
> உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே'

என்பது திருமந்திரம். இதனை,

'சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு'

என்ற குறள் எடுத்துவிளக்கியது. 'சிறப்புஈனும்'என்று கூறியபின், 'செல்வமும் ஈனும்' என உம்மை கொடுத்ததன் நோக்கம் சிறப்பு ஈனுவது செல்வத்தை ஈனாது என்ற கருத்தை நினைவில் கொண்டுவந்து நிறுத்தி, அறம் என்பது இரண்டையும் தரும் ஆற்றல் உள்ளது என்று சிறப்பித்து எடுத்துக்காட்டினார்.

அறத்தின் தனியியல்பு

அறம் எது என்பதை வரையறுப்பதில் பலவேறு கொள்கைகள் உள்ளன. அவைகள் முன்பே விளக்கப்பெற்றன. இரு மாறுபட்ட நிலைகளை ஏற்றுக்கொண்டு அவற்றுக்கு ஏற்ற அறம் இவ்வாறு இருக்கவேண்டும் என அமைத்துக் காட்டியவர்கள் உலகில் இருவர். ஒருவர் மேலைநாட்டுத் தத்துவக் கொள்கையினராகிய அரிஸ்டாடில், மற்றவர் இந்திய நாட்டுத் தத்துவக் கொள்கையினராகிய புத்தர். இருவரும் இருவகைக் கடந்த நிலைகள் உண்டு என்று கொண்டு, இரண்டு வேறுபட்ட கடந்த நிலைகளைச் சாராமல், இரண்டற்கும் பொதுவாகிய நடுநிலையை மேற்கொள்வதே (golden mean—middle path) அறம் என வலியுறுத்தினர். திருவள்ளுவரும் இதே கருத்தினரே. ஆனால் முன்னே குறிப்பிட்ட இருவருக்கும் திருவள்ளுவருக்கும் வேறுபாடு உண்டு.

மேலே கூறப்பெற்ற இருவரும் இரு மாறுபட்ட நிலைகளைக் குறிப்பிடும்போது அவை தவறானவைகளே என்று குறிப்பிட்டு விட்டு, இரண்டு தவறான கொள்கைகளுக்கும் இடமளிக்காத வகையில் ஒரு இடைநிலைக் கொள்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கொண்டார்கள். எடுத்துக்காட்டாக, பொருளை எல்லை கடந்து செலவழிக்கும் செயலும் தவறுடையது. அவ்வாறே பொருளையே செலவழிக்கக் கூடாது என்ற செயலும் (கருமித்தனம்) கூடாது. இருவகைக் கடந்த நிலைகளும் தவறானவைகளே. இரண்டற்கும் இடைப்பட்ட வாழ்க்கையாகிய அளவறிந்து வாழும் வாழ்க்கையையே மேற்கொள்ள வேண்டும்; அதுவே அறம் என்பது அவர்களுடைய இடைநிலைக் கொள்கையின் விளக்கம். ஆனால் திருவள்ளுவர், இருவேறு முரண்பட்ட நிலைகளில் அமைந்த பயன்களை அடைவதற்கு இருவேறு மாறுபட்ட செயல்கள் உள்ளன. இருவகைச் செயல்களையும் மேற்கொள்ளலாம். ஏனெனில், இரண்டு வகையான பயன்களும் நமக்குத் தேவையானவைகளே. இரண்டு வகையான தேவைகளை மனத்திற்கொண்டு, இரண்டு வகையான செயல்களை நாம் மேற்காள்ளலாம். ஆனால் பயன் என்ன ஆகும்? இருவகைச் செயல்

களும் ஒன்றை ஒன்று அழித்துவிடும். செயல்கள் செய்யப்பெற்றிருக்கும் பயனே கிடைக்காது. ஆகையால் இருவகைப் பயன்களையும் இணைத்துத் தரவல்ல ஒரே செயல்தான் நமக்குத் தேவை என்றார். இக்கருத்தை 'நடுவுநிலைமை' என்ற தலைப்பிற் கூறும் திருவள்ளுவர், இருவேறு வகைப்பட்ட செயல்களையும் இணைத்து மேற்கொள்ளுதற்குரிய, ஒருவகை ஒழுக்க நிலையைத் தருவதாக இருக்குமானால், அத்தகைய இணைப்பை நல்கும் செயலை தகுதிச் செயல் என்று கொள்ளலாம். தகுதிச் செயல் என்பதுதான் 'நன்று'. நன்று என்ற சொல்லுக்குச் சரி (right) என்ற பொருள் கொள்ளாமல், நல்லது (good) என்ற பொருள் கொள்ள வேண்டும்.

> 'தகுதி எனஒன்று நன்றே; பகுதியாற்.
> பாற்பட்டு ஒழுகப் பெறின்'

எனவே, திருவள்ளுவரின் நடுநிலை என்பது அறம். அது செயலால் ஒன்று; தரப்பெறும் பயனால் இரண்டு. இரு பயன் தரும் ஒரு செயல் என்பதே நடுநிலை. இதனையே 'ஒப்புரவறிதல்' என்ற தலைப்பில்

> 'ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
> செத்தாருள் வைக்கப் படும்'

என்று கூறினார்.

இயற்றிநிலை (Will)

அற இயலின் உயிர்நிலையாக விளங்குவதே இயற்றிநிலை. இயற்றிநிலை என்பது ஒருவகை அறிவாற்றல். எல்லா உறுப்புகளிலும் நிறைந்து விளங்கும் இயங்காற்றலை (energy)த் தத்தம் போக்குக்களிற் செல்லாதவாறு தடுத்து நிறுத்தி, அறச் செயலை மேற்கொள்ளல் என்ற ஒரே வழியில் செலுத்தும் ஆற்றல். எனவே, இயற்றிநிலை என்பது இயங்கு ஆற்றலை நெறிப்படுத்தும் இயக்கு ஆற்றல் எனப்பெறும்.

இத்தகைய இயற்றிநிலை (will) கட்டற்ற தன்மை (freedom) உடையதாக இருக்கவேண்டும் என்று கூறும் அற இயலாசிரியர்கள் அதனை அறிவின் வழியில் இயங்கும் என்று கொண்டார்கள்.

திருவள்ளுவர் இக்கருத்தில் முற்றாக மாறுபடுகிறார். இயங்கும் ஆற்றல் என்பதே செயற்படும் ஆற்றல். ஆனால், அதனை இயக்குவது அறிவுக்கூறாக இருக்கமுடியாது. அது தன்னியல்பிற் செயற்படும் உணர்ச்சிக்கூறாகத்தான் அமைய முடியும். அப்போதுதான் அது கட்டற்ற தன்மையில் இயங்கும் என விளக்கினார்.

இயற்றிநிலை அல்லது இயக்கு ஆற்றலாகத் திருவள்ளுவர் கொள்வது 'அன்பு'. அன்பின் வழியிலேயே அறம் செல்லும் என்றார். அன்பினால் இயக்கப்பெறுவது அறம் என்றார். அன்பு என்பது கட்டற்ற தன்மை உடையது என்பதை 'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்' என்று குறிப்பிட்டார். அதனாலேயே, அன்பை அறியவும் அதன் ஆற்றலை உள்ளவாறு விளங்கிக் கொள்ளவும் துணை செய்வதாகிய 'இல்வாழ்க்கை'யை அறநிலை வளர்ச்சியின் முதற்படியாக அமைத்தார். எனவே, இல்லறத்தை மூலமாகக் கொண்டே 'அறம்' தொடங்குகிறது என்று கண்டார்.

அன்பின் அடுத்த வளர்ச்சிநிலை அருள். இவ்விரண்டாலும் தெள்ளியராதல் நிலை நிறைவுறுகிறது. தெள்ளியராம் நிலை நிறைவுறுவதற்கு உரிய அறங்கள் இரண்டே. அவை ஈதலும்; கொல்லாமையும்.

திருவினராம் நிலை நிறைவுறுதற்கும் அன்புதான் இயற்றி நிலையாக நின்று இயங்காற்றலை நெறிப்படுத்தி வளர்க்கிறது.

திருவினராம் நிலை நிறைவுறுதற்கு அன்பு என்னும் இயற்றி நிலை ஆர்வம் என்னும் படிநிலை வளர்ச்சியை எய்துகிறது.

மூன்றாவதாக இருவேறு நிலைகளையும் நிறைவு செய்து, பின்னர் இரண்டையும் இணைத்த முழுமை நிறைவு பெறுதற்கு அன்பு என்னும் இயற்றிநிலை 'நண்பு' என்னும் படிநிலை வளர்ச்சியை எய்துகிறது.

சால்பு எனில் நிறைவு என்பது பொருள். இருவேறு வகைகளிலும் நிறைவு பெறுதற்கு அன்பிலிருந்து கிளைக்கும் நான்கு பண்புகளை மூலமாகக் கூறினார்:

> 'அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
> ஐந்துசால்பு ஊன்றிய தூண்'

என்றார். அற இயல் குறிக்கோள் உயர்நிலையாக நிறைவினை ஆளுதல் என்பதைக் கூறி, சான்றாண்மை என நிறுத்தி விளக்கினார்.

சான்றாண்மையின் பயன்

தனிமனிதன் தன்னளவில் நிறைவுபெறுதல் என்பதே திருவள்ளுவரின் அற இயற் குறிக்கோள் அமைப்பின் முற்றிய முடிவு என்று கொள்ளலாமாயினும், திருவள்ளுவர் வேறு ஒரு சிறந்த நலனை எடுத்துக் கூறி விளக்குகின்றார்.

தனிமனிதன் தான் அறவாளனாக உயர்ந்து நிறைவு பெறுதல் ஒருவகை. பிறரையும் அறவாளர்களாக ஆக்குவது இன்னொரு வகை. உலகத்தை அறவழியில் இயக்கவும், ஏனைய மனிதர்களை அறவழியில் நிலைநிறுத்தவும் சான்றாண்மையாளர்களால் இயலும் என்றார். இதற்குக் கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார் நட்பு நிலை தமிழக வரலாற்று நிலையில், நிலை பெற்றதோடன்றி, தமிழகத்தில் காணப்பெறும் உயர்ந்த அற நெறிக் கொள்கையை வெளிப்படுத்துவதாகவும் அமைந்தது:

'பண்புடையார்ப் பட்டுஉண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்'

என்பது நிறைவினை ஆளுதற் கொள்கையின் வழிநின்று உயர் நிலை பெற்ற சான்றாண்மையாளரின் இயல்பு என்று கொள்ளுதல் வேண்டும்.

உலகில் வாழும் அனைத்து உயிர்களையும் அறவழியில் ஒழுகுமாறு செய்வதும் உலகை அழியாதவாறு காப்பதும் அவர்தம் செயல்களாக அமைகின்றன.

(மேலும் இதனை விரிவாக அமைத்து எழுதலாமாயினும் பாடத்திட்ட அமைப்பினைக் கருத்திற்கொண்டு இவ்வளவில் நிறுத்தப் பெறுகிறது.)

III. அறவாழ்வு

1. அறவாழ்வுக்குரிய அடிப்படை

(1) (அ) தனிமனிதனும் சமுகமும்

சமுகம் — அறக்கோட்டம்

தனிமனிதன் ஒருவன் சமுகத்தோடு இணையாமல் ஒரு காட்டிலோ அல்லது தனித் தீவிலோ தன்னந்தனியனாய் நிற்பானாகில் அவனுடைய செயல்களை அறநூல் தம் ஆய்வுக் குரியவைகளாக எடுத்துக் கொள்வதில்லை. சமுகத்தோடு இணைந்து வாழும் மனிதனின் செயல்களே அறவியலாய்வுக் குரியவை. சமுதாயத்தோடு இணைந்து வாழும் மனிதன் தன் செயல்களை வெளிப்படுத்துவதன் மூலம் அவனுடைய அறவியற் கொள்கைகள் இன்னவை என நாம் கருத இடமேற்படுகிறது. மேலும், ஒருவனுடைய அறக்கொள்கைகள் அவன் மற்றை மனிதர்களோடு உறவு கொள்ளும்போதுதான் செயல்வடிவம் பெறவும் வளர்ச்சியெய்தவும் பெறுகின்றன. அறவியலானது பொதுவாகவே விமரிசனத்தை அல்லது மதிப்பீடு செய்தலை அடிப்படையாகக் கொண்ட ஓர் அறிவியல் முறை. எனவே, மதிப்பீடு செய்வதற்கேற்ற நிலையில் அறச்செயல்களை மனிதன் மேற்கொள்ள வேண்டியது கட்டாயமாகிறது. காட்டில் வாழும் தனிமனிதன் அறக்கொள்கைகளின் கருவூலமாக இருக்கலாம். ஆனால் செயற்பாட்டுக்குக் கொண்டு வரப் பெறாத அறக் கொள்கைகள் மலட்டுத் தன்மை வாய்ந்தவை. திருவள்ளுவரின் வாக்கில் சொல்ல வேண்டுமானால் 'இணர் ஊழ்த்தும் நாறா மலர்' போன்றது. அறவியற் கருத்துகள் புறநிலை மெய்மை சார்ந்தவை (objective), வெளிப்படையாகக் கண்டறியக்கூடியவை என விளக்கம் செய்யப்படுகின்றமைக்குக் காரணம், அவைகள் கருத்தியல் வாதமல்ல; செயல்முறைப்பயிற்சி விளக்கங்களாக அமைபவை என்பதனாலேயே. இவ்வகையில் தனிமனிதன் தன் அறக்கொள்கைகள் இன்னவை என்று முடிவு செய்யவும், செய்து சிறக்கவும் அவனுக்கு ஒரு களம் தேவை என்ற கருத்தை நாம் ஏற்றுக்கொள்வோமானால் அத்தகைய களமாக அமைவதே சமுதாயம். இன்னும் சற்று அழுத்தமாகச் சொல்ல வேண்டுமானால் சமுதாய வாழ்வுதான் அறவாழ்வு என்றுகூடக் கூறலாம். துறவிகள் போன்ற ஒருசிலர் சமுதாயத்தின் மத்தியில்

வாழ்ந்தாலும் சமுதாயக் கட்டுப்பாடுகளையும், சமுதாயத்திற்கு ஆற்றவேண்டிய கடமைகளையும் துறந்தவர்களாக வாழ்வதை நாம் காணமுடிகிறது. ஆயினும், பொதுவாகக் கையாளும் சொற்களாகிய மக்கள், தனிமனிதர்கள் என்பவைகளால் பொதுவாகச் சுட்டிக் காட்டப்பெறும் மக்களுக்கு அறக்கோட்டமாக நின்று வாழ்வை வளப்படுத்துவது சமுதாயமே.

தனிமனிதன்—சமுகம்—தனித்தன்மைகள்

தனிமனிதன், சமுதாயம் என்ற இரண்டினுடைய தனித் தன்மைகள் யாவை? இவையிரண்டும் இணைந்து நிற்பதால் அமைகின்ற சிறப்பு என்ன? என்றிவ்வாறான வினாக்களின் விடைகளைத் தெளிவாக அமைத்துக்கொள்ளவேண்டும்.

தனிமனிதனையும், சமுதாயத்தையும் ஆராய முற்படும் போது நாட்டில் பொதுவாக வழங்கும் சில அறவுரைகளை அடிப் படையாக எடுத்துக்கொண்டு ஆராயலாம்.

மனிதன் தன்னலமானவன்; தன்னல வாழ்வினும் பொது வாழ்வே சிறந்தது; சமுதாய நன்மைக்காகத் தன்னலத்தைத் தியாகம் செய்யவேண்டும் என்று இவ்வாறான அறவுரைகளைக் கொண்டு நோக்கும்போது தனிமனிதனுக்கு என்று ஒரு நன்மை இருப்பதுபோலவே சமுதாயத்துக்காகவும் ஒரு நன்மை இருக் கிறது என்றும், தனிமனிதன் சமுதாய நன்மைக்காகத் தன்னன்மையைத் தியாகம் செய்யவேண்டும் என்றும் அமைந்த கருத்துகள் நமக்குக் கிடைக்கின்றன. அவ்வாறே ஒருசிலர் சமுக, சீர்திருத்தக்காரர்கள் என்று கூறப்பெறுகிறார்கள். சமுதாயத்தைச் சீர்திருத்த அவர்கள் பாடுபட்டார்கள் எனக் கொள்வதாயின் சமுதாயம் என்று ஒன்று தனியாக அமைந் துள்ளதா? தனிமனிதர்களின் கூட்டுச் சேர்க்கை என்பதைவிட, தனியாக ஏதும் சமுதாயம் என்ற ஒன்று இருக்கிறதா? என்ற வினாக்களும் எழும். சமுதாயம் என்ற ஒன்று தனியாக இல்லை யானால், பல மனிதர்கள் சேர்ந்து வாழும்போது ஒரு மனிதன் இன்னொரு மனிதனை ஒழுங்குபடுத்துவானானால், அவ்வாறே பல மனிதர்களை ஒழுங்குபடுத்த முற்படுவானானால் அவனையே மனிதர்களைச் சீர்திருத்தியவன் என்று சொல்லலாமே! அவ்வாறில்லாமல், சமுதாய சீர்திருத்தம் என்று சொல்ல வேண்டுமா? என்ற ஐயம் எழும்.

இயற்றிநிலை—நன்மை—இரு அடிப்படைகள்

சமுதாய வாழ்வு அல்லது சமுக வாழ்வு என்று அறநூல்களில் விளக்கங்கள் காணப்பெறுகின்றன. அவைகளை இரண்டு அடிப்

படை உண்மைகளில் வைத்துச் சிந்திக்கவேண்டும். அவை நன்மை பற்றிய விளக்கம்; இயற்றிநிலைபற்றிய விளக்கம் (good and will) என்பன.

நன்மை: சமுதாய நன்மை (social good) என்ற ஒன்று உண்டு என்றும் தனிமனிதனின் நன்மையைவிட, சமுதாய நன்மையே உயர்ந்தது என்றும் கூறப்பெறும் வழக்கு உண்டு.

தனிமனிதனைச் சமுதாய நலனுக்கு ஒரு கருவியாகக் கொள்ள வேண்டும் என்பது ஒருவகை விளக்கம். அதற்கு மாறாக, சமுதாய நலன் அதிலுள்ள மனிதர்களின் நலத்தை வளர்க்கிறது என்றும் கூறப்பெறுகிறது. இவைகளை நன்றாக விளங்கிக் கொள்வதற்குக் கீழே கொடுக்கப்பெறும் எடுத்துக்காட்டைச் சிந்திக்கலாம்.

ஒரு பள்ளிக்கூடத்தையோ, கல்லூரியையோ எடுத்துக் கொள்ளலாம். இங்கே கல்லூரியானது நன்மை தருகிறது என்று சொன்னால் சேர்ந்து பயில்பவர்களுக்கு உதவியாக இருப்பது என்ற ஒன்றுதான். கல்லூரியானது தனக்கெனச் சில சட்ட திட்டங்களை அமைத்துக்கொண்டு அச்சட்டங்களின் வண்ணம் பிள்ளைகளை நடக்கவைத்து அவர்களை நன்மக்களாக ஆக்குவது என்பதுதான் கல்லூரியானது தன்னிடம் உள்ளவர்களுக்குச் செய்யும் நன்மை.

இதை இன்னொரு வகையாகவும் சிந்திக்கலாம். கல்லூரியில் பணி செய்பவர்கள், படிப்பவர்கள் ஆகியோர் உயர்ந்த ஒழுக்க முடையவர்களாகவும், பிள்ளைகள் படித்துச் சிறந்த பயன் பெறுவோர்களாகவும் அமையும்போது அவர்களின் நற்செயல்கள் காரணமாக, நிறுவனத்திற்கு - கல்லூரிக்கு நன்மை வருவதும் உண்டு. இது உறுப்பினர்களினால் கல்லூரிக்கு வரும் நன்மை. இவை தவிர, கல்லூரிக்கே உரிய உள்ளார்ந்த நிலையில் அமைந்த தனிப்பயன் ஏதும் உண்டா? என்ற வினாவை எழுப்பிச் சிந்திக்கலாம்.

உலக வழக்கில் தந்தை, மகனைப் பார்த்துக் கூறும் அறவுரை களில், 'மகனே உன் பெயரைக் கெடுத்துக் கொள்ளாதே' என்பது ஒன்று, அவ்வாறே ஒரு கல்லூரித் தலைவர் கல்லூரியின் பெயர் கெடுவதற்கு யார் காரணமாக இருந்தாலும் அவர்களைத் தண்டித்தே தீருவேன் என்று குறிப்பிடுகிறார். இவ்விரு உரைகளை யும் கவனித்தால் உறுப்பினர்களின் நன்மையைப் போலவே கல்லூரியின் நன்மை என்ற ஒன்றும் இருக்கிறது என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது. அவ்வாறே சமுதாயம் ஓர் உள்ளார்ந்த பயனைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதே என்று கொள்ள வேண்டியிருக்கிறது. எது பெரியது, எது சிறியது என்ற வினா

முக்கியமன்று; சமுதாயத்துக்கெனத் தனித்த உள்ளார்ந்த பயன் அல்லது நன்மை என்பதாக ஒன்று உண்டு என்று கொள்ள வேண்டிய நிலை உண்டாகிறது.

இயற்றி நிலை — சமுதாய இயற்றி நிலை (Social Will)

நன்மை என்ற அடிப்படையில் சமுதாய நன்மையைச் சிந்தித்ததுபோலவே, இயற்றிநிலை (will) யிலும் சமுதாய இயற்றி நிலை என ஏதும் உண்டா? என்பது இரண்டாவது ஆய்வு, பொது இயற்றிநிலை (general will) என்பதாக ஒன்று உண்டு எனக் கொள்கின்றனர். சமுதாயத்துக்கெனத் தனி நன்மை, உள்ளார்ந்த நன்மை என்று ஒன்று உண்டு என ஒத்துக்கொண்டால் அந்த நன்மையை விளைவிக்கும் உள்ளார்ந்த தனி இயற்றிநிலையும் ஒன்று உண்டு எனக் கொள்ளவேண்டுவது இன்றியமையாததே.

மேலே அமைந்தவைகள் ஆய்ந்து செய்யப்பெற்ற முடிவுகளல்ல. தனிமனிதன், சமுகம் ஆகிய இரண்டைப்பற்றியும் தனித்தனியே உலக வழக்கிற் காணப்பெறும் அறவுரைகளை எடுத்துச் சிந்திக்கும்பொழுது, தனிமனிதன் தனக்கே உரிய இயற்றிநிலை, நன்மை ஆகியவைகளைப் பெற்றிருப்பதுபோலவே சமுகத்திற்கும் அதற்கே உரிய தனிநிலை வாய்ந்த இயற்றிநிலை, நன்மை ஆகியவைகளும் உண்டு என ஒப்புக்கொள்ள வேண்டிய நிலை உண்டாகிறது.

மூவகைக் கொள்கை

இனி, இங்கே அமைக்கப்பெறும் பிரிநிலைகளை உளம் கொண்டு ஆய்ந்தால் தனிமனிதன், சமுகம் ஆகியவற்றின் இணைப்பை எளிதாக அமைத்துக் கொள்ளலாம்: (1) தன்னலக் கொள்கை (selfish or egoism), (2) பிறர்நலக் கொள்கை (altruism), (3) பொதுமைநலக் கொள்கை (universalism). மேலே குறிப்பிட்ட மூன்றையும் வேறுபடுத்திக் காணுதல் வேண்டும்.

(1) தன்னலக் கொள்கை: ஒரு மனிதன் தன்னைப்பற்றி, தன்னுடைய நன்மையைப்பற்றி எண்ணி, அத்தகைய நன்மையை அடைவதே தன்னுடைய கடமை என எண்ணிப் பாடுபடும்போது அவனைத் தன்னலக் கொள்கையினன் எனக் கூறலாம். தன்னலக் கொள்கையை egoism என்பதை விட selfish எனக் குறிக்கலாம். ஏனெனில் egoism என்பது ஒருவகையில் தான் தான் எனத் தன் முனைப்புடன் செயலாற்றும் அகந்தை பிடித்துத் திரிபவன் தன்மை என்பதாகவும் விளக்கப் பெறுகிறது. ஆனால் இங்கே குறிப்பிடும் தன்னலக் கொள்கை என்பது ஒருவகை அறவியற் கொள்கை எனக் கொள்ளவேண்டும். தன்னலக் கொள்கை என்றவுடனேயே அது மிகமிகத் தீமையுடையது என்பதாக நினைத்து ஒதுக்கிவிடக்கூடாது.

தனிமனிதனின் மனத்தியலாகும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராயும்போது தனிமனிதன் மனோதத்துவ அமைப்பில் தன்னலவாதியாகத்தான் திகழ்கிறான். இதனை 'இயற்கைக் கொள்கை' என்பர். மனிதன் தன்னியல்பில் தன்னலவாதி என்பதே. தனிமனிதன் சிற்சில சமயங்களில் பிறர் நலத்தையும் பேண முற்படுகிறானே என்றால் அதுவும் தன்னலத்தின் அடிப்படையில்தான்.

'மனிதன் மனோதத்துவ முறைப்படி தன்னலவாதி' என வரும் கருத்தை அறவியற் கருத்தாக அமைத்துக் காண முற்பட்டால் 'மனிதன் தனக்கு நன்மை தரும் செயல்களை அறிந்து கடைப்பிடிப்பதையே கடமையெனச் சொல்லவேண்டும்' என்பதாகும். இது அற இயற் கொள்கை.

தன்னலக் கொள்கை என்பது எடுத்த எடுப்பிலேயே ஒரு தவறுடைய கொள்கையைப் போலத் தோன்றும். ஏனெனில் அறத்தைப்பற்றிக் கூறும் பெரியவர்கள் யாருமே தன்னலத்தைப் பற்றிக்கூற முற்படுவதில்லை. மனித வாழ்வின் இறுதிநிலைக் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டே அறக்கொள்கைகள் வகுக்கப் பெறுகின்றன. இன்பம்பெறுதல் என்பதையோ, தன்னிறைவுபெறுதல் என்பதையோ குறிக்கோள்களாக அமைத்து, அக்குறிக்கோள்களுக்காகச் செயல்முறையை அமைத்தால், இன்பியற் கொள்கையில் தன்னுடைய இன்பத்தை முழுமையாக நீக்கிவிட்டு, பிறர் இன்பத்தையே குறிக்கோளாகக் கொண்டு எந்த ஒரு தனிமனிதனும் தன் செயற்பாட்டுத் திட்டத்தை அமைத்துக் கொள்ள இயலாது. தான் இன்பம் துய்க்க, பிறர் இன்பம் பெருக ஒருவன் பாடுபடலாம். ஆனால் மனிதன் தன்னிறைவு பெறுதல் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டால், மற்றவர்கள் தம்நிறைவு பெறுதலுக்குரிய செயல்கள் எல்லாவற்றையும் ஒரு தனிமனிதன் மேற்கொள்ள இயலாது. மற்றவர்களின் செயல்களை ஒரு வரையறைக்கு உட்பட்டுத்தான் கூட்டவும் குறைக்கவும் முடியும். எனவே, அற இயலில் ஒருவன் தனக்கு நன்மை தருவது இன்னது என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறே மற்றவர்களுக்கு நன்மையை நாடும்போது, அது தனக்கு எப்படி நன்மையாக அமையும் எனக் கண்டறியலாம். அவ்வாறே பொதுமை நன்மைக்குப் பாடுபட விழையும்போது அது தன்னன்மைக்கு எவ்வகையில் பொருந்துகிறது என்றும் அவனால் காணமுடியும்.

உளவியற் கருத்துப்படி தன்னலம் தனிமனிதனின் இயற்கை அறமாக விளங்குவது போலவே, பிறர்நலம் பேணுதலும் தனிமனிதனின்இயற்கை அறமாக விளங்குகிறது. மனிதத் தன்மையை

முழுமையாக ஆராய்ந்தால் இரக்கம், பிறர்மேல் எழும் அன்பு ஆகிய பண்புகளும் அவனிடம் இருக்கின்றன. இயற்கையாகவே ஒரு மனிதனிடம் தோன்றும் இரக்கம், அன்பு போன்ற பண்புகள் பிறர்நலம் பேணும் பண்புகள். இவ்வடிப்படையில் நோக்கினால் தனிமனிதன் இயற்கையாகவே தன்னலம் பேணியும், பிறர் நலம்காத்தும் வாழும் இயற்கையுடையவன் என்பது தெரியவரும்.

அற இயல் வல்லவர்கள் மறுக்க முடியாத உண்மை ஒன்று உண்டு. 'தனிமனிதன் தன்னளவில் முடிவானவன். அவன்தான் கருவியாக நின்று வேறு ஒன்றை முடிவிடமாகக் கொள்ள மாட்டான்' என்பதே. இவ்வடிப்படையில் தனிமனிதன் தன்னை எல்லா இயற்கைப்பண்புகளும் அமைந்த முடிவு நிலையினன் எனக் கொண்டால், தன்னலம் என்பது அம்முடிநிலையை அடைவிப்பதற் குரிய நல்ல ஊக்கியாக அமைகிறது. தன்னலம் நோக்கிய செயல் அறக் கொள்கையை உடன்கொண்ட செயலாக அமைகிறது. பிறர் நலம் பேணலும் தன்னைத்தானே முடிவு நிலையாக அமைத்துக் கொள்ளக்கூடிய நிலையில் தன்னலம் நோக்கிய செயலே எனக் கொள்ளலாம்.

பிறர்நலக் கொள்கை (Altruism): தனிமனிதன் தன்னலத்தைக் கருதாமல் பிறர் நலம் ஒன்றையே கருதிச் செயலாற்ற வேண்டும் என்பது இக்கொள்கையின் விளக்கம். பிறர் நலத்தைச் சிறிதும் எண்ணாத தன்னம் போலவே தன்னலத்தைச் சிறிதும் எண்ணாத பிறர்நலம் என்பதாக, இதை விளங்கிக் கொள்ள வேண்டும். தன்னலம், பிறர் நலம் என்ற கருத்துகளை விளக்க முற்படுகிறவர் கள் எல்லோரும் தன்னலத்துக்கும், பிறர் நலத்துக்கும் சிறிதும் இணைப்பு வரக்கூடாத வகையிலேயே இரண்டையும் தனித்தனி நிறுத்தியே விளக்குவதைக் காணலாம்.

இனி, 'தியாகம்' என்ற சொல்லால் பிறர்நலத்தை விளக்க முற்படுவர். தன்னை முழுமையாக அழித்துக்கொண்டு பிறர்நலம் பேணுவது என்பது இயற்கைப் பொருள்களுக்குத்தான் ஏற்றது. ஆனால், அது மனித இனத்துக்குப் பொருந்துவதன்று என்று கூறி ஒரு தானியமானது தன்னை அழித்துக் கொள்வதன்மூலம் பல தானிய மணிகளை வெளிக்கொண்டு வருகிறது என ஓர் எடுத்துக் காட்டையும் காட்டுவர்.

பிறர்நலக் கொள்கைக்கும், தனது நலன் கருதும் கொள்கைக்கும் இடையே இணைந்து போகவேண்டிய கூறுகள் உள்ளன என்று 'ஸ்பென்ஸர்' போன்ற விஞ்ஞானிகள் கருது கின்றனர்; தியாகம் செய்யவேண்டும் என்ற நிலைமை ஒருவன் உள்ளத்தில் உருவாகும்போது அவன் தன்னை உணர்ந்து கொள்

கின்ற அவசியம் உண்டாகிறது. எனவே, பிறர்நலம் பேண முற்படும்போது தன்னை உணர்தல் என்பதற்கு வழி பிறக்கிறது.

அறவழியில் நாம் கொள்ளவேண்டியது தன்னலம் கருதிய செயலா அல்லது பிறர்நலம் கருதிய செயலா என்ற வினா எழும்போது 'பிறர்நலம் நல்குவதே' என்பதுதான் பிறர்நலக் கொள்கை கூறும் விடை. பிறர்நலக் கொள்கையால் 'தியாகம்' போன்றவற்றின் உள்ளார்ந்த பயனை நாம் தெரிந்துகொள்கிறோம். ஆயினும், தன்னலக் கொள்கைக்கு மூலமான தனிமனிதனின் தன்னலச் செயலும் உள்ளார்ந்த பயனுடையது என்பதை மறுத்தற்கியலாது.

பொதுமைக் கொள்கை (universalism) : பொதுமைநலக் கொள்கையைப் பிரபஞ்சநலக் கொள்கை எனவும் கூறுவர். ஒவ்வொரு தனிமனிதனும் தன் சமுதாயத்தின் நலனை அடைவதையே கடமையாகக் கொள்ளல்வேண்டும் என்பர். தன்னலக் கொள்கையும் பிறர்நலக் கொள்கையும் பொதுமைநலக் கொள்கையில் அடங்கிவிடுகின்றன. பொதுமைநலக் கொள்கையானது ஏனைய இரண்டு கொள்கைகளைவிட விரிவடைவதற்கு உரிய வாய்ப்பினைக் கொண்டதாக விளங்குகிறது.

பொதுமைநலக் கொள்கையை எதிர்நின்று தாக்கும் கொள்கைகள் மூன்று.

(1) தன்னலம், பிறர்நலம் என்ற இரண்டைத் தவிர, பொதுமைநலம் என்று சுட்டப்பெறுவது எது? தன்னலமல்லாத, பிறர்நலமல்லாத பொதுமைநலமென்பது இதுதான் என்று எதையும் குறிப்பிட்டுக்காட்ட இயலவில்லை. ஆகையால், பொதுமை நலமென்பதே கற்பனை.

(2) தனிமனிதன் ஒருவன் தியாகம் செய்கிறான். தியாகம் பிறர்நலமா, பொதுநலமா எனின் பொதுமைநலம் என்று வாதிடுகிறது இக்கொள்கை. பொதுமைநலத்தை ஏன் வளர்க்க வேண்டும்? தன்னலனைக் கருதித்தான் பொதுமை நலத்தை வளர்க்க வேண்டுமென்பது விடை. தியாகம் என்பது பொதுமை நலத்தை வளர்ப்பது என்றால் அது வளர்க்கும் தனிமனித நலம் என்பது எது என அறுதியிட்டுச் சொல்ல இயலவில்லை.

(3) ஒருவன் பொதுமை நலனுக்காக உழைக்கும்போது அதிக அளவில் தன்னுடை நலனையும் அவன் பெறுவான் என்பது நம்ப முடியாததாக இருக்கிறது. ஆன்மிக நலன்களில் அது

உண்மையாக அமையலாம். ஆனால், சாதாரண வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவையெனப் பெறும் உணவு முதலியவை களைக் கருத்திற்கொண்டு பார்த்தால் பொதுமைநலன் கருதி, இப்பெருந் தியாகங்கள் புரிந்த பலர், பசியால் வாடி வருந்தி யதையும் கண்கூடாகக் கண்டிருக்கிறோம். எனவே, பொதுமை நல வளர்ச்சியை அமைத்தால் அதன்மூலம் தனிமனிதனுடைய நலன் வளர வாய்ப்பு உண்டு என்பதை அவ்வளவாக ஒத்துக் கொள்ள இயலவில்லை.

தனிமனிதனும் சமுதாயமும் என எடுத்துக்கொண்ட இத் தலைப்பில் மூன்று கொள்கைகள் உண்டு என்பதைக் கருத முடிந்தது:

இணைப்பு– கலப்பு இணைப்பு —மயங்கிய இணைப்பு

இவ்விடத்தில் நாம் குழப்பங்களுக்கு இடமில்லாத வகையில் ஓர் உண்மையைத் தக்க வரையறைகளுடன் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

'தனிமனிதனும் சமூகமும்' என்பது இங்கே அமைக்கப்பெற்ற சிறு தலைப்பு. 'சமூகம்' என்பது எந்த ஒன்றை வரையறைசெய்து கூறுகிறது என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

தனிமனிதர்கள் பத்துப் பேர் சேர்ந்து வாழ்கிறார்கள். பத்துப் பேரும் ஒருவரையொருவர் அறிந்து சேவைசெய்து வாழ் கிறார்கள். ஒருவர் தேவைக்கு மற்றவர் உதவுகிறார்: இவர்கள் பத்துப் பேரும் ஒரு சமூகத்தின் உறுப்பினர்களே. எனவே, உறுப் பினர்கள் தங்களுக்குள் தொண்டு செய்து வாழ்வது சமூக வாழ்வு என்பதாக அமைத்துக் கொள்ளலாமா?

தனிமனிதன் தான் எந்த ஒன்றுடனாவது இணைந்து நின்றால் அந்த இணைப்பானது சமுதாய இணைப்பு என்ற பெயரைத் தான் பெறும் எனக் கொள்வோமானால் இங்கே கூறப்பெற்ற பத்துப் பேரும் சமுதாய இணைப்பில் இணைந்தவர்களாகத் தானே கருதவேண்டும்!

தனிமனிதன் தன்னிலையில் தனித்து நிற்கும்போது அது தனி மனிதக் கொள்கை எனப் பெறும். தனிமனிதன் தன்னை ஒத்த பிற மனிதர்களோடு இணைந்து நிற்கும்போது அவ்விணைப்பைப் பிற மனிதர்களோடு இணைந்த இணைப்பு என்ற பொருளில் கொள்ளவேண்டுமேயன்றி, சமூக இணைப்பு

என்பதாகக் கொள்ள இயலாது. பிற மனிதர்களோடு,இணைந்து நிற்கும்போது அவன் 'கொடுத்துக் கொள்ளல்' என்ற அமைப்பில் தன்னைப்போலப் பிறரையும் மதிக்கிறான் என்பதாகக் கொள்ள லாமேயன்றி, அது ஒரு சமூக இணைப்பு என்பதன் முழுக் கருத்தையும் கொண்ட இணைப்பாக ஆகாது. ஆனால், அவ்வாறு இணைந்து பழகுவது சமூக இணைப்புக்கு ஒரு முன்னோடியாக இருப்பது எனக் கொள்ளலாமேயன்றி, சமூக இணைப்பு என்றே கொள்ள முடியாது. ஒருவன் தன்னுடன் வாழும் மற்றவனுடன் இணைந்து பழக முற்படும்போது,அவர்களுடைய இணைப்பினால் இருவருக்கும் இழப்பு ஏதுமில்லை. அவ்வாறே இணைப்பினால் தோன்றும் புதுமையும் ஏதுமில்லை. ஆனால், சமுதாயத்தின் உறுப்பினர்களாக உள்ள பலரும் சமுதாய இணைப்பு என இணையும்போது, அவர்களிடத்தில் ஒருவகை இழப்பு உண்டு. அவர்கள் சமுதாயமாக இணையும்போது அங்கே ஒருவகை ஆக்கமும் உண்டு. எனவே, சமுதாய இணைப்பு என்பது ஒரு சமுதாயத்தின் உறுப்பினர்கள் தங்கள் தங்களுக்குள் இணைவது என்பதாக ஆகாது. கீழ்வரும் எடுத்துக்காட்டினை நோக்குக.

நூறு ஒற்றை ரூபாய் நோட்டுகள் இணைந்த கத்தை ஒன்று. ஒற்றை நூறு ரூபாய் நோட்டு ஒன்று. இரண்டும் மதிப்பீட்டு வகையில் ஒரே தன்மையினவே. தனித்தனி ஒற்றை ரூபாய் நோட்டுகளாக அமைந்த நூறு நோட்டுகளின் தொகுதி ஒரு பக்கம். ஒற்றை நூறு ரூபாய் நோட்டு ஒன்று இன்னொரு பக்கம். இவ்விரண்டும் இணைப்பால் ஒன்றுதானா? மதிப்பீட்டு வகையில் ஒன்றாகலாம்; இணைப்பால் ஒன்று எனக் கூற இயலாது. ஏன்?

ஒற்றை நூறு ரூபாய் நோட்டுகள் இணைந்திருந்தாலும் அவைகளின் தனித்தன்மை அழியவில்லை. ஆனால், ஒற்றை நூறு ரூபாய் நோட்டினுள் இந்த நூறு ரூபாய் நோட்டுகளும் இணைந்துள்ளன என்றாலும், அவைகளின் தனித்தன்மை அழிந்து விட்டன.

இணைப்பால் தனித்தன்மை அழிந்தது; அழியவில்லை என்ற ஒன்றைத்தவிர, இருவகை இணைப்புகளிலும் ஆக்கம் ஏதும் அமைந்துள்ளதா? என்பதையும் சிந்திக்க வேண்டும்.

நூறு ரூபாய்களைச் சேர்த்தவன் சில்லறை நோட்டுகளைக் கொடுத்துவிட்டு ஒரு நூறு ரூபாய் நோட்டாக மாற்றி அமைத்துக் கொள்வது ஏன்? பணம் சேர்க்கும் எண்ணமுடையவன் சில்லறையாக அமைந்த நூறு நோட்டுகளைக் கொடுத்துவிட்டு, ஒரு நோட்டாக மாற்றுவதற்குக் காரணம் முழுநோட்டில் உள்ள

வலிமை, சில்லறை நோட்டுக் குவியலுக்கு இல்லை என்பதுதான். தனி ஒற்றை ரூபாய் நோட்டுகளை எடுத்துச் செலவு செய்ய முற்படுவதுபோல் ஒற்றை முழு நூறு ரூபாய் நோட்டை அவ்வளவு எளிதாக மாற்ற முடியாது. மாற்ற முடியும்போதும் அவன் உள்ளமானது கொஞ்சம் தாமதிக்கவே செய்யும்.

தனி மனிதர்கள் சமுதாயமாக இணையும்போது எந்த ஒரு நிறுவனத்தை நோக்கி இணைகிறார்களோ, அந்த ஒரு நிறுவனத்திற்குரிய ஒரு கூறு மட்டும் நிற்க, ஏனைய கூறுகளையெல்லாம் தனிமனிதர்கள் இழந்துவிடுகிறார்கள். எந்த ஓர் இணைப்புக் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு இணைகிறார்களோ, அந்த ஓர் இணைப்புக்கூறு வலிமை பெறுகிறது. அத்தகைய வலிமையானது, அந்த நிறுவனத்துக்கு ஒரு புதிய நன்மையைத் தருகிறது. அத்தகைய புதிய நன்மையே அந்த நிறுவனத்தில் இணைந்தவர்களுக்குத் திரும்பவரும்போது, அது அவர்களுக்குப் புதிய நன்மையேயொழிய, இணைந்தவர்களிடத்தில் முன்கூட்டியே இருந்த நன்மை அன்று.

எடுத்துக்காட்டு ஒன்று. கல்வி நிறுவனம் ஒரு சமுதாய நிறுவனமே. கல்விநிலையத்தில் பலரும் இணைகிறார்கள். மாணாக்கர்கள், ஆசிரியர்கள், கல்விநிலைய நிருவாகத்தினர் என்று இவ்வாறு உள்ள அனைவரும் இணைகிறார்கள். கல்வி நிலைய இணைப்பு என்பது ஒரு சமுதாய இணைப்பு.இணைபவர்கள் பணி வெவ்வேறானவை. மாணாக்கர்கள் அறிவுபெற வருகிறார்கள். ஆசிரியர் அறிவு தர வருகிறார். கல்விநிலைய நிருவாகம் அறிவைப் பெறவும், கொடுக்கவும் உள்ள சூழ்நிலைக்குத் தேவையானவைகளை அமைத்துத் தருகிறது. அனைவரும் தனித்தனியே ஊதியம் பெறுகிறார்கள். மாத ஊதியம் ஆசிரியருக்கு. தேர்வில் வெற்றி பெற்றமைக்குரிய சான்றிதழ் என்ற ஊதியம் மாணாக்கர்களுக்கு. இத்தனை ஆண்டுகள் கல்விப்பணி செய்தது என்ற பெயர் நிறுவனத்துக்கு. சமுதாய இணைப்பு என்பது இவ்வளவோடு நின்றுவிடவில்லை. இவ்வாறே பல கல்வி நிறுவனங்கள் செயல்பட்டாலும், சில கல்வி நிலையங்கள் உலகப் புகழ் பெற்றனவாய் ஒளிவிடுகின்றன. மற்றவை அவ்வாறு அமையவில்லை. புகழ் பெற்ற கல்வி நிலையங்களின் பெயர்களைச் சொல்லி, அங்கே பணி புரிந்தவன் நான் என்றும், அங்கே படித்தவன் நான் என்றும் பெருமை கொள்கின்றனர்.

இருபத்தைந்து ஆண்டுகள் அல்லது ஐம்பது ஆண்டுகள் கல்விப் பணி செய்த இரண்டு நிலையங்களை எடுத்துக் கொள்வோம். புகழ்பெற்ற நிலையம் ஒன்று; புகழ் பெறாத நிலையம் ஒன்று.

இரண்டு நிலையங்களிலும் அடிப்படையாக அமைந்த நிறை, குறை யாவை? பணியாற்றியவர்கள் ஊதியம் பெற்றனர்; படித்தவர்கள் பட்டம் பெற்றனர். ஒன்று மட்டும் புகழ் பெற்றமைக்கு அதன் அடிப்படையாக அமைந்த எந்த ஒன்று, புகழ்பெறாத அடுத்த நிலையத்தில் இல்லாமல் போயிற்று?

புகழ் பெற்ற நிறுவனத்தில் சேர்ந்தவர்கள் தத்தம் தனிநிலைகளில் பெருஞ்செல்வர்களாக, உயர் குடும்பத்தவர்களாக இவ்வாறு பற்பல பெருமைகள் உடையவர்களாக இருந்திருக்கலாம். அவர்கள் அனைவரும் கல்வி என்ற பணியில் ஈடுபட்டு இணையும் போது ஏனைய பிற நிலைகள், பெருமைகள் ஆகியவைகளை எண்ணாமல், அவற்றைப் பற்றிய எண்ணமில்லாதவர்களாய், உண்மையாகக் கூறப்புகுந்தால், அவைகளையெல்லாம் இழந்தவர்களாய் இணைந்தார்கள். இவ்வகையில் எல்லாருடைய செயலாற்றும் திறன்களும் (will) ஒருங்கிணைக்கப் பெறுகின்றன. ஒரு துறையில் பலருடன் செயலாற்றும் திறன் ஒருங்கிணையும்போது அது பொதுமைச் செயலாற்றும் திறமாக(general will) அமைந்து வலிவுபெறுகிறது. அத்தகைய இணைப்பு வலிமையானது, ஒரு புதிய பயனைக் கொடுக்கிறது. அப்பயன் கல்வித்துறையில் செயலாற்றிய, செயலாற்றும் திறனால் அமைந்த கல்விப் பயன் அன்று. அப்பயன் ஒரு வகையிற் புதுமையான பயனே. இதனைக் கீழ்க் கண்ட எடுத்துக்காட்டினால் தெளியலாம்.

வெற்றிலை, பாக்கு, சுண்ணம் ஆகிய மூன்றையும் ஒன்றன் பக்கத்தில் ஒன்றாக இணைத்து வைக்கிறோம். அம்மூன்றையும் அதனதன் உருவம் கெடுமாறு கடித்து, மென்று இணைக்கிறோம்; இரு நிலைகளிலும் இணைப்பு உண்டு. ஆனால் முன்னதில் வெளிப்படாத சிவப்பு நிறம், பின்னதில் உண்டாகிறது. அதே சமயத்தில் வெற்றிலை, பாக்கு, சுண்ணம் ஆகியவைகளில் இல்லாத சிவப்பு நிறம்—புதிய ஒன்று தோற்றம் பெறுகிறது.

மிளகாய், உப்பு, புளி என்ற மூன்றையும் தனித்தனியே இணைத்து வைக்கிறோம். இம்மூன்றையும் அரைத்தும் கரைத்தும் இணைக்கிறோம். முன்னதில் வெளிப்படாத சுவை, பின்னதில் வெளிப்படுகிறது.

மேலே காட்டப்பெற்ற எடுத்துக்காட்டுகளின் மூலம் தன்னிலையிழக்காத இணைப்பு ஒன்று; தன்னிலையிழந்த இணைப்பு ஒன்று. தன்னிலையிழக்காத இணைப்பினைக் கலப்பு இணைப்பு என்றும் தன்னிலையிழந்த இணைப்பினை மயங்கிய இணைப்பு என்றும் வேறு பிரித்தறியலாம். கலப்பு இணைப்பு என்பதும் இணைப்புதான். அதற்குச் சேர்க்கை (aggregation)

எனக் கூறலாம். [சமூதாயம் அல்லது சமூகம் என்பது தனிமனிதர்களின் கலப்பு இணைப்பு அன்று; அது ஒரு மயங்கிய இணைப்பு. பிற நிலைகளை இழந்து, அனைவரும் ஒருநிலைப்பட்டு—ஒருமை நிலைபெற்று இணைந்திருப்பதால், செயலாற்றும் திறத்தாலும் புதுமை; பயனாலும் புதுமை.

சமூக இணைப்பை வெறும் கலப்பு இணைப்பு எனக் கருதியவர்களும் உண்டு; மயங்கிய இணைப்பு எனக் கருதியவர்களும் உண்டு. கலப்பு இணைப்பு எனக் கண்டவர்கள் பொது இயற்றிநிலை என்பதையும் சமூகத்துக்கே உரிய தனி நன்மை என்பதையும் ஒப்புக் கொள்ளவில்லை. சமூக இணைப்பை 'மயங்கிய இணைப்பு' எனக் கருதியவர்கள் பொது இயற்றிநிலை உண்டு என்றும் தனிமனிதர்கள் தன்னிடமில்லாத—சமூகத்தாலன்றித் தன்னியல்பாற் பெறமுடியாத நன்மை ஒன்று சமூகத்தில் உண்டு எனவும் கொண்டார்கள்.

தனிமனிதன் சமூகமாக இணைந்த இணைப்பை எடுத்து விளக்கும் வகையில் மூவகைக் கொள்கைகள் வெளிவந்துள்ளன. அவைகளை முறையே இயந்திரம் போன்ற கூட்டமைப்புக் கொள்கை என்றும், உறுப்பிணைப்புக் கூட்டமைப்புக் கொள்கை என்றும், உயிர் உறுப்பிணைப்புக் கூட்டமைப்புக் கொள்கை என்றும் மூவகை எடுத்துக்காட்டுகளினால் அறிஞர்கள் விளக்கியுள்ளார்கள். மூன்றாவது இணைப்பை உறுப்பிணைப்புகள் யாவும் இணைந்த ஓர் இணைப்பு அல்லது உயிருறுப்பிணைப்பமைப்பு (organism of crganisms) என்று எடுத்துக் காட்டினார்கள்.

மூவகையாகப் பிரிந்து நின்ற அறிஞர் பெருமக்கள் தனிமனித—சமுதாய இணைப்பை மூன்று வகைகளில் நின்று கண்டிருக்கிறார்கள். மூவரும் எடுத்துகாட்டுகள், காரணங்கள் காட்டி நிறுவியுள்ளார்கள். மூன்றாவது கருத்தே பெரும்பான்மையானவர்களால் ஏற்கப்பெற்று வருகிறது.

பொதுவாக, சமூகம் என்பது உறுப்பமைதி போன்றது (society as an organism) என விளங்கப்பெறுகிறது. இயந்திர உறுப்பமைதியும், உடலுறுப்பு அமைதியும், உயிர் உறுப்பு அமைதியும் ஆகிய மூன்றுமே உறுப்பமைதிஇயல்பை அடிப்படையாகக் கொண்டவைகளே. இம்மூன்றன் இணைப்புகளிலும் வேறுபாடு உண்டு. இணைப்பின் நிலைமைக்குஏற்பவே பயனும் கிடைக்கும். மூன்றையும் அவ்வவற்றின் இயல்பு, சிறப்புத் தன்மை

ஆகியவைகளோடு தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டியதே படிப்பவர்களின் கடமையாக அமைகின்றது.

(1) (ஆ) சமுதாயம்– உறுப்பு இணைப்புக் கொள்கை

முன்னுரை

தனிமனிதன் தன்னைப்போன்ற பலருடன் இணைந்து நின்ற போது, பலரிணைந்த அத்தொகுதிக்குச் சமூகம் அல்லது சமுதாயம் என்ற பெயர் அமைந்தது. சமூகம் என்ற ஒன்று அமைந்துவிட்ட பிறகு தனிமனிதனுக்கும், சமூகத்துக்கும் உள்ள தொடர்பு எத்தகைய அடிப்படையைக் கொண்டது என்று விளக்கும் வகையில் மூன்று வகையான கொள்கைகள் உள்ளன. அவை முறையே: (1) இயந்திரம் போன்ற கூட்டமைப்புச் சமுதாயக் கொள்கை எனப்பெறும் தனிமைக் கொள்கை. (2) உறுப்பமைப்புக் கூட்டமைப்புக் கொள்கை எனப்பெறும் தொகுதிக் கொள்கை. (3) உயிர் உறுப்பு இணைப்புக் கொள்கை எனப்பெறும் கருத்தியைபுக் கொள்கை எனப்பெறும். அவை களின் விரிவை இங்கே காணலாம்.

(1) தனிமைக் கொள்கை—இயந்திரம் போன்ற கூட்டமைப்புச் சமுதாயக் கொள்கை

ஹாப்ஸ், லாக், ரூஸோ என்ற அறிஞர் பெருமக்கள் மூவரும் 'ஒப்பந்த அடிப்படையிலான சமுதாயக் கொள்கை' என்ற பெயரில் தனிமனிதனுக்கும் சமூகத்துக்கும் உள்ள உறவை விளக்கினார்கள்.

சார்பற்ற நிலையில் தனித்து நிற்கும் தனிமனிதர்கள் இயந்திரம்போன்ற அமைப்பில் இணைந்து நிற்பதே சமுதாயம். தனிமனிதர்கள் எனப் பெறுபவர்கள் தத்தமக்குள் சார்பற்ற நிலையில் தனித்து நிற்பவர்களே. அவர்கள் தனித்த நிலையில் சார்பற்ற வாழ்க்கை உடையவர்களே. அவர்கள் தங்களுக்குள் ஒருவகை இணைப்புறுதி செய்துகொண்டு, இணைந்து 'சமுதாயம்' என்ற ஒன்றை அமைத்தார்கள். தனிமனித வாழ்வில் சமுதாயம் என்பது எதிர்பாராவகையில் தற்செயலாக அமைந்து விட்ட ஒன்றே. தனிமனிதர்களைத் தேவையான அனைத்தையும் உள்ளடக்கிய சார்பற்ற தனிநிலைகள் என்றே சொல்லலாம். ஆகையால் அவர்களுக்கு வெளியில் இருந்து எதையும் எதிர் பார்த்து வாழவேண்டிய நிலையோ, கொண்டும், கொடுத்தும்

வாழவேண்டிய இணைப்பின் இன்றியமையாமை நிலையோ இல்லை எனினும் ஆக்கமோ,இழப்போ இல்லாத இயல்பு இணைப்பு என்ற ஒரு நன்மையை அடிப்படையாகக் கொண்டே இத்தகைய சமுதாய இணைப்பு என்ற உறுதியை ஏற்படுத்திக் கொண்டு இணைந்தார்கள்.

'ஹாப்ஸ்' என்பவரின் கருத்து

மனிதன் தன்னலத்தினனே. மற உணர்ச்சியும் பகைத்தெழும் பண்பும் கொண்டவன். அவன் முழுமையாகத் தன்னையே மிகுக்கும் பண்பினன். மனிதனின் தன்னல இயல்பே அவனை மற்றவர்களோடு எக்காலத்தும் முரணுற்று நிற்பவனாக ஆக்கியது. இதுவே போரின் இயல்புத் தன்மை. எந்த ஒரு மனிதனும் மற்றவனோடு ஓநாயைப்போல மாறுபட்டு நிற்றல் என்பதையே கடைப்பிடித்தான். இவ்வகையில் மனித வாழ்வு என்பது ஓர் ஒட்டுமொத்தமான ஏழைத் தன்மை, அருவருப்புக் கிடமான தன்மை, கொடூரத் தன்மை, குறுகிய தன்மை ஆகியவை களின் இணைப்பே. மனிதனும் மனிதனும் மாறுபட்டுப் போரிடுதல் என்ற ஒரு நிலையான தன்மையானது பொறுமை யுடன் ஏற்றுநிற்க இயலாத நிலையாயிற்று. இந்நிலையில் தன்னைத்தான் காத்துக்கொள்ள வேண்டும் என்னும் இயல்பூக்க மானது அவனை இத்தகைய சமுதாய இணைப்பில் ஈடுபடுமாறு வற்புறுத்தியது. இந்நிலையில் அரசன் உருவானான். அவனுடைய முழுமையான ஆதிக்கத் தன்மையால் மக்களுக்குள் ஒழுங்கினை அமைத்தான். இவ்வாறாக, சமுதாய அமைப்பு என்பது மனித னுடைய வசதிக்காக உண்டாக்கப் பெற்றதே.

'லாக்' என்பவரின் கருத்து

இயற்கையின் நிலைமை என்பது எக்காலத்தும் ஒருவருக் கொருவர் முரணி நின்று போரிடும் நிலையே என்று ஹாப்ஸ் கருதியது போன்றது அன்று; அது ஓர் அமைதி நிலை என்றும் நன்மையை நோக்கிய இயல்பூக்கி நிலை என்றும் கொள்ள வேண்டும். இயற்கையின் நிலைமை என்ற ஒன்றில் இயற்கை விதிகள் அல்லது கிறித்தவ விதிகள் என்பவைகளால் மனிதர்கள் காக்கப் பெறுகின்றனர். ஆனால் இயற்கையின் விதி என்ற ஒன்றை இன்னது என்று விளக்கவோ அல்லது ஒருவர்மேல் திணிக்கவோ யாரும் அங்கே இல்லை. மக்கள் தாமாகவே ஒருவகை உடன் படிக்கை வகையில் இணைந்தார்கள். சமுதாயம் என்ற ஒன்றை அமைத்தார்கள். அவ்வளவில் இயற்கை நிலைமை என்பது முடிவுற்றது. முடிவுற்ற அந்நிலையில் தற்காப்பு நிலைச் சமுதாயம் தோன்றியது. பின்னர் மக்களே வேறோர் உடன்படிக்கையை

உண்டாக்கி இணைந்தார்கள். அதுவே 'அரசு' என அமைந்தது. பொது நன்மை என்ற ஒன்றற்கான சட்டங்களை ஆக்கவும் அச் சட்டங்களை மக்கள்மேல் செயற்படுத்தவும் வல்லதாக அவ்வரசு அமைந்தது.

'ரூஸோ' என்பவரின் கருத்து

இயற்கையில் அமைந்த நிலை என்பது பழமையான எளிமையும் ஒன்றுடன் ஒன்று இயல்பாயமைந்த கொடுத்துக் கொள்ளல் முறையில் அமைந்த நன்மையும், இன்பமும் என்ற மூன்றன் இணைப்பில் விளைந்த எழில் நிலை. அத்தகைய அழகிய இயற்கை நிலையை மக்கள் தொகையின் வளர்ச்சியும் தனிச் சொத்துரிமையை வளமாக்கும் நிலையங்களும் இடையூற்றை உண்டாக்கின. பின்னர் அவர்கள் ஒரு கூட்டமைப்பைத் தங்களுக்குள் அமைத்தார்கள் அக்கூட்டமைப்பானது அதன் மக்களையும் அவர்கள் உடைமையையும் காக்கும் நிலையில் அமைந்தது. ஏதோ முன்பு ஒருமுறை அத்தகைய உடன்படிக்கை முறையிலான சமுதாய இணைப்பை அமைத்துக் கொண்டார்கள் என்பதன்று. மக்கள் ஒருவரை ஒருவர் தனித்தும் இணைத்தும் புரிந்துகொண்டமையால் உண்டான ஒன்றே அது. இணைந்த மக்களின் பொதுமை இயல்பூக்கி என்ற ஒன்றே அவ்விணைப்பை மீளமீளப் புதுப்பித்துக்கொண்டு வருகிறது. மீளப் புதுப்பிக்கும் நிலையானது மாற்றமின்றி நடைபெற்றுவருகிறது. இணைந்த மக்களின் பொதுமை இயல்பூக்கி என்பதே சமுதாய இணைப்பு என்ற ஒன்றை நிலைநிறுத்தி வருகிறது.

ஹாப்ஸ், லாக், ரூஸோ என்ற மூவராலும் மூன்று நிலைகளில் விளக்கப்பெற்ற சமுதாய உடன்படிக்கைமுறைக் கொள்கையானது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. முதலாவதாக, அது வரலாற்றுக்கு முரண்பட்டது. மனிதன் இயல்பிலேயே ஒரு சமுதாய இணைப்பு விரும்பி; சமுதாய இணைப்புக்கு மாறான நிலையில் மனிதனை நினைத்துப் பார்க்கவும் இயலாது. குடும்பம் என்பது சிற்றிணைப்பு. சிற்றிணைப்புகள் பலவாக இணைந்த பேரிணைப்பே சமுதாயம். மனிதன் முழுமையான தனிநிலையினனாக வாழ்ந்த நிலை ஒன்று உண்டு என்பதைக் கற்பனையாகக் கூட நினைக்க இயலாது. அவ்வாறு வாழ்ந்த அவன் பின்னர் உடன்படிக்கை முறையில் இணைந்து வாழும் சமுதாய அமைப்பை உண்டாக்கிக் கொண்டான் என்பதை விளக்கும் எந்த ஒரு சிறு சான்றும் இல்லை.

இரண்டாவதாக அவர்கள் முற்கோளாக அமைத்துக்கொண்ட இயற்கைநிலை என்ற ஒரு கருத்தானது களங்கமுடைய கற்பனையின்

விளைவு. ஏனெனில் மனிதனை முழுமையான தன்னலநோக்கினன் என்றோ அல்லது முழுமையான பொதுநல நோக்கினன் என்றோ கருதுதல் பொருந்துவதன்று. மனிதன் தன்னை மிகுக்கும் இயல்பூக்கி, பிறர்நலம் மிகுக்கும் இயல்பூக்கி என்ற இரண்டையும் இணையப் பெற்றவனே.

மூன்றாவதாக, இக்கொள்கை அளவையியலுக்கு முரணானது. உடன்படிக்கை அடிப்படையிலான சமுதாய இணைப்பு என்பது அரசியற் சார்பான அறிவின், மேல்மட்டத்திலிருந்து எழுவதாகும். இத்தகைய இணைப்பை அமைத்துக் கொள்வதற்கு உரிமை உண்டு என்பதை மிக வளர்ந்த சமுதாயம் அமைந்த நிலையில்தான் ஒத்துக்கொள்ள முடிந்தது. அத்தகைய நிலையிலான ஒன்றை ஆதிகால நிலையில் இருந்த மக்கள் ஏற்று அமைத்துக் கொண்டார்கள் என்பது அளவையியலுக்கு முரணானதொன்று.

(2) கூட்டமைப்புக் கொள்கை - உறுப்பமைவு நியதியிலமைந்த சமுதாயம்

பலவேறு உறுப்புகளும் ஒருங்கிணைய நின்ற உடல்போன்ற அமைப்பினைக்கொண்டு விளங்குகின்ற உறவுமுறையில் அமைந்தவைகளே தனிமனிதனும் சமுதாயமும். உறுப்புகளும், உறுப்பியும் ஒன்றோடு ஒன்று இணைந்துசெயல்படும் உறுப்பமைதி உறவை எடுத்துக்காட்டி அத்தகைய உறவும் செயற்பாடும் தனி மனிதனும் சமுதாயமும் இணைந்த கூட்டமைப்பிலும் காணப் பெறும் என விளக்கினார்கள். தனிமனிதனோ சமுதாயமோ ஒன்றையன்றி மற்றது நிலைபெறமுடியாது. ஒன்றன் தேவை மற்றொன்றிற்கு இன்றியமையாதது. தனிமனிதர்களின் அறிவு, உணர்ச்சிகள், பழக்கங்கள், கல்வி, மொழி, அறவொழுக்கம் ஆகியவைகள் சமுதாயத்தை வளர்க்கும் அடிப்படைகளாக அமைகின்றன. அவ்வாறே சமுதாய இணைப்பின் ஊட்டத்தால் தனிமனித வளர்ச்சியும் அமைகிறது. இவ்வாறு பல்வேறுவகை உறுப்புகளும், அவைகளின் இணைப்பில் நின்ற உறுப்பியும் போலவே தனிமனிதர்களும் சமுதாயமும் இணைந்து வளர்கின்றன. எனவே, இரண்டிற்கும் இடை அமைந்த உறவு ஒன்றை ஒன்று இன்றியமையா நிலையில் சார்புற்று நின்ற உறவாகும். படிமுறை வளர்ச்சி அறிவியல்வாதிகளாகிய ஸ்பென்ஸர், ஸ்டீபன், அலெக்ஸாண்டர் ஆகியோர் இக்கொள்கையை விளக்கியவர்கள் ஆவார்கள்.

ஆயினும் இவ்வுவமையை அதிகம் பொருத்திப் பார்த்தல் கூடாது. தனிமனித சமூக உறவுக்கும் உறுப்பமைவு நியதி

உறவுக்கும் அடிப்படையில் அமைந்த வேறுபாடு ஒன்று உண்டு. உறுப்பமைவு நியதி உறவில் உறுப்புகள் பிரிந்துநின்று தனித் தனியே வாழ்தல் என்பது இல்லை. ஆனால் தனிமனிதர்கள் தத்தம் தன்னிலைகளில் வெவ்வேறு வகை பெற அமைந்த அறிவியல் மைய அமைப்பு நிலையமாவார்கள். அவர்கள் தம் முடைய தனித்த வாழ்வுகளைச் சமுதாய வாழ்வுடன் முழுமை யாக இணைத்துவிடுதல் இல்லை. அறிவதும், உணர்வதும், தனி மனிதர்களைச் சார்ந்தவைகளே அன்றிச் சமுதாயத்தைச் சார்ந்தவை அல்ல. சமுதாயத்தின் உறுப்பினர்களாக அமைந்த தனிமனிதர்களைத் தவிர சமுதாயத்துக்கெனத் தனி நிலையில் விளங்கும் அறிவு மையம் ஏதுமில்லை. உறுப்பமைதி நியதிக்கு அழிவு உண்டு, ஆனால் சமுதாயத்துக்கு என்றும் அழிவில்லை.

இங்கே காட்டப்பெற்ற உவமையை ஒருபுடை ஒற்றுமை கூறும் உவமையாகக் கொள்ளவேண்டும். ஏனெனில், தனிமனிதர் களின் இயல்புகளுக்கு அப்பால் சமுதாயத்துக்கென தனியமைந்த உரிமைக்கூறு உண்டு. அதனால் அது தனித்துவாழும். மறிவிணை, ஆய்வுரை ஆகியவைகளால் சமுதாயம் தன் எதிர்கால அமைப்பினை மாற்றிக் கொள்ளவும் செய்யும்.

(3) கருத்தியைபுக் கொள்கை

தற்சுதந்திரமான தன்னுண்மை அறிவுமயமான ஆற்றல்கள் தத்தமக்குள் கூட்டுறவு நிலையில் இணைந்து வாழ்தல் என்ற கொள்கையின் அடிப்படையில் அமைத்துக் கொள்ளப்பெற்ற செயற்பாட்டு அமைப்பு நிலைக்குத்தான் சமூகம் என்று பெயர். மனிதன் என்பவன் சமூக அமைப்பியற் பொருளாவான், அவனுடைய அறிவுமயமான உயர்நிலை உயிர்ப்பு என்பதும் உண்மையான உயிர்ப்பு என்பதும் சமுதாய உயிர்ப்புதான், இத்தகைய சமுதாய உயிர்ப்பினை ஒருவன் சமூகத்தின் மூலம் தான் தன்னுண்மை நிலையில் அறிந்து அனுபவிக்க முடியும். எந்த ஒரு தனிமனிதனும் ஏதேனும் ஒரு சமுதாய அமைப்பில் இணைந்தவனே. சமூகம் என்ற ஒரு முழுமை அமைப்பின் உறுப் பினர்களே மனிதர்கள், தனிமனிதர்கள் தனிநிலையில் இருக்கும் தனித்தன்மையிழைகளே ஆயினும் அவர்கள் சமூகம் என்ற (முழுமைக்கு உறுப்பினர்களே சமூகம் என்ற) முழுமையை நீக்கிய அல்லது சமூகம் என்ற கருத்துடன் இணைக்காமல், மனிதன் என்ற கருத்தை யாவருமே சிந்திக்க இயலாது. சுருங்கக்கூறின் சமூகத்திற்கு அப்பாலான மனிதனே இல்லை.

ஒரு தனிமனிதன் தன்னுடைய தனிமை நிலையிலான ஒதுங்கிய, குறுகிய தன்மையிலான உயிர்ப்புக்குறை பொதுமை

யான சமூகயியலான உயிர்ப்பினுக்கு அடைக்கலமாக இணைந்து விடுவதனமூலம் தன்னுடைய உண்மையான, உயிர்நிலைக் குறிக் கோளான, அறிவியலான, சமுதாய இயல் உறுப்பினை அறிந்து அனுபவிக்க முடியும். அவன் அவனுடைய சமூக இயலாக, ஒழுக்க இயலான ஆன்மிகமான இயல்புகளைச் சமூகத்தாலன்றிச் சமூக இணைப்பினாலல்லாமல்அறிந்தனுபவிக்கஇயலாது. தனிமையியல் பினுக்கு முன்னமைந்த சிறப்பினையுடையது பொதுமையியல்பு.

சமூகம் என்பது ஆன்மிகப் பொருள்களின் இணைப்பு எனக் கொள்ளல் வேண்டும். ஆன்மிகப் பொருளல்லாத ஏனைய பொருள்களால் சமூகம் என்ற இணைப்பை உண்டாக்கிக்கொள்ள இயலாது. ஆன்மிகப் பொருள்களாகிய தனிமனிதர்கள் தம்மள வில் தமக்கேயுரிய அறிவுடைப் பெருமக்கள். அவர்கள் தங்களை மனிதர்கள் என அறிந்தவர்கள். இப்போது தாம் அடைய இருக்கும் பொதுமை வாய்ந்த நன்மையை உளங்கொண்ட நிலை யில் தம்மை ஆறாமையினர்கள் ('persons') என அறிந்து கொண்டார்கள். அவ்வாறே ஏனையோர்களையும் மனிதர்கள் (men) என அறிந்து அவர்களும் தம்மைப் போலவே ஆறாமை யினர்கள் ஆக ஆவதற்காகப் பொது நன்மையைப் பெற முயல்கிற வர்கள் என அறிந்தார்கள். எனவே, அவர்கள் தம்மறிவால் நன்கு அறிந்த பின்னர் அவர்கள் அறிவை உணர்ச்சி நிலையும், இயற்றிநிலையும் இயக்கிவிட இத்தகைய ஒரு பொது நன்மையை அடிப்படையாகக் கொண்டு சமூக இணைப்பை மேற்கொண்டார் கள். எனவே, அடையப் பெறவிருக்கும் நன்மையின் தன்மையை முழுமையாக அறிந்துகொண்ட பின்னரே எல்லோருக்குமாய் அந்நன்மையை சமூகம் என்ற முழுமையின் இணைப்பினால் விளையும் உயரிய நன்மையைப் பெறுவதற்கு இத்தகைய சமூக இணைப்பை மேற்கொண்டார்கள்.

சமூகம் என்பது ஒரு பெரும் இணைப்பு மட்டும் அன்று. ஒரு பொது நன்மையை நோக்கி, ஏனைய நிலைகளை இழந்துவிட்ட பல தனிமனிதர்களின் தொகுப்பின் இணைப்பே சமூகம். சமூகத் தால் விளையும் பொது நன்மை தனிமனிதர்களின் தனித்தனி நன்மைகளின் வேறானது. அவர்களின் சேர்க்கையால் விளைவதே யாயினும் - சமூகத்தின் ஒருங்கிணைந்த இணைப்பால் விளையக் கூடியதேயாயினும் சமூக நன்மை வேறானது. அதனாலேயே சமூக இணைப்பு என்பதை உறுப்பிணைப்புகள் இணைந்த உறுப் பிணைப்பு (organism of organisms) என்று கூறுதல் வேண்டும்.

பொதுவாக, சமூகத்தை உறுப்பிணைப்பு என்று கூறுவது ஒரு முழுமையான விளக்கமன்று. சமூகமென்பது ஒருவகை ஆன்மிக

முழுமை. அதனுள் அதற்குக் குறைந்த பல முழுமைகள் உள்ளன. முழுமைகளனைத்தும் தனித்தனி நிலையில் இணைப்புகளே; முழுமைகளாக இணைந்தவைகள் மீளவும் ஒரே முழுமையாக இணைகின்றன. அந்த இணைப்பே சமூக இணைப்பு.

(1) (இ) குடும்பமும் — சமூக நிறுவனங்களும்

முன்னுரை

'குடும்பமும் சமூக நிறுவனங்களும்' என்ற இத்தலைப்பில் சமூக நிறுவனங்கள் என்றால் சமூக இயல் அறங்களை நன்கு பயிற்சி செய்து மேற்கொள்வதற்குரிய இடங்கள் என்றும் தனிமனிதர் களைச் சமூகவியல் ஆறாமையாளர்களாக ஆக்கும் பணியினை மேற்கொண்டு உழைக்கும் இடங்கள் என்றும் விளக்கம் செய்து கொள்ளலாம். குடும்பம், கல்விநிலையம், தொழிற்கூடம், தூய்மை வாழ்விற்கு துணைநிற்கும் சுகாதார நிலையம், சமய நிறுவனம், நாடு என்ற ஆறும் சமூக நிறுவனங்கள் எனப்பெறும். அவைகளின் சிறப்பியல்புகளையும் செயற்பாடுகளையும் இங்கே காணலாம்.

குடும்பம்

பல குடும்பங்களின் இணைப்பே சமுதாயம் என்பது அரிஸ்டாடிலின் விளக்கம். சமுதாய அமைப்பின் மூலக்கருவாக விளங்குவதே குடும்பம். மிகப் பழைய காலம் தொடங்கி இன்று வரையில் சமுதாய முக்கியத்துவம் வாய்ந்த முதன்மைப் பயிற்சி நிலையமாக விளங்குவது குடும்பமே. குடும்பம் ஓர் அடிப்படைச் சமுதாய அமைப்பியல் நிலையமாயினும் அது பன்மைகளுக்கு நடுவே ஒருமையையும் வேறுபாடுகளுக்கு மத்தியில் இணைப்பை யும் உண்டாக்கும் உலகியற் பண்பினைக் கொண்டு விளங்கும் சமுதாய நிறுவனம். 'நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்,' 'ஓர் உலகம் ஒரு குடும்பம்' என்ற முதுமொழிகள் இவ்வுண்மையை விளக்கும்.

மனித வரலாற்றில் முதன்முதலில் தன்னியல்பில் தானாக அமைந்த முதல் சமுதாய நிறுவனம் குடும்பம். பிறப்பியல், உள்ளத்தியல் சார்ந்த பல தேவைகளைக் காரணகாரிய அடிப் படையில் விளங்கிக் கொள்ள உதவுவதும் நிறைவு செய்து கொள்ள உதவுவதும் குடும்பமே.

தாய்ப்பாலினால் அமையும் நலங்கள் எல்லாவற்றையும் வேறு எந்த ஒன்றினாலும் பெற இயலாது. அவ்வாறே குடும்பத்

தினால் பெறக்கூடிய சமூக அறப்பயிற்சியை வேறு எதனாலும் பெறமுடியாது. தலைவன், தலைவி, குழந்தை ஆகிய மூன்று உறுப்புகளைக்கொண்ட குடும்பம் சமூகநலப்பயிற்சி நிலையங்கள் எல்லாவற்றிலும் இயற்கையாக எழுந்த அமைப்பினை உடைய தாகும். அன்பின் அடிப்படையில் அமைக்கப்பெற்ற குடும்பம் குழந்தைகளினுடைய, உடலியலான, அறிவியலான, உள்ளத்திய லான, அறவியலான அறப்பயிற்சிகளைத் தந்து காக்கும் நிலைய மாகும்.

தனிமனிதன் அறப்பயிற்சியை முழுமையாக அடைதற்கு துணைநிற்கும் சமூக அறக்கோட்டங்கள் பல. அவைகள் எல்லா வற்றிலும் சிறப்புடையது குடும்பம். ஏனைய அறப்பயிற்சிச் சமூக நிறுவனங்களில் பெற்ற பயிற்சிகள் குடும்பத்தில் பயனற்றும் போய்விடும். ஆனால் குடும்பத்தில் பெற்ற பயிற்சிகள் ஏனைய அறப்பயிற்சி நிலையங்களில் வெற்றிபெற உதவும்.

நீதியைச் சட்டக்கல்வி மூலம் பெற்று நீதிமன்றங்களில் சட்ட விளக்கங்களும் செயற்பாட்டுமுறைகளும் இயைந்து நிற்க அறிதல், செய்தல் என்ற இரண்டாலும் தெளிய உணர்ந்த நீதிபதியானவன் இல்லறத்தில் நீதியைச் செயல்படுத்த இயலாது; தோற்றுப் போதல் கண்கூடு.

பொருள் நிலையில் சொத்துகளைத் தனியுரிமை, பொது வுரிமை என்ற இரண்டாலும் உண்டாகும் நன்மை தீமைகளை உணர்ந்து, பொருளியற் கல்வியில் மேதையாக நின்ற ஒருவன் சொத்துகளின் தனியுரிமை, பொதுவுரிமை ஆகிய இரண்டும் குடும்பத்தில் இயற்கையாக இணைந்து செல்வதை அனுபவத் தால் உணரமுடியும். அதேசமயம் கல்வியாற் பெற்ற அறிவு குடும்பத்தில் தோற்றுப்போவதை அறியமுடியும்.

கல்விநிலையம் போன்ற அறப்பயிற்சி நிலையங்களில் நன்னடத்தைச் சான்றிதழ் பெறும் ஒருவன் குடும்பத்தில் நன்னடத்தைச் சான்றிதழ் பெற முடியாதவனாகிறான்.

உடலின் தன்மையானது கீழ்நோக்கிப் போகவிடுவது; அறிவின் தன்மை மேல்நோக்கிப் பறப்பதே. ஆன்மிகத்தின் தன்மையானது மேலே சொன்ன இரண்டையும் ஒப்ப நிறுத்திப் பயிற்சிபெற்றுச் சிறந்து, இவ்விரண்டையும் கடந்த நிலையில் தோன்றுவது. உடல்தேவை, அறிவுத்தேவை, ஆன்மிகத்தேவை என்ற மூன்றையும் ஒருவன் குடும்பம் என்ற ஒன்றன் மூலமாகத் தான் நிறைவு செய்துகொள்ளமுடியும்.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக நடுநிற்றல் என்ற பேரறத்தின் எல்லையையும் செயற்பாட்டு முறையையும் உணர்ந்து தெளியும் ஆற்றலை அதற்கொத்த பயிற்சியை நல்கு வது குடும்பமே. 'நடுநிற்றல்' என்பது இருவேறுபட்ட அறக் கொள்கை, மறக்கொள்கைக்கு நடுவே 'இயையுங் கொள்கை இது எனக் கண்டுகொள்ளலும் செயற்படுத்தலும் ஆகிய ஆற்றலை உண்டாக்கி வளர்ப்பது குடும்பமே. பொன்மயமான நடுநிலை (golden mean) என அரிஸ்டாடிலும், நடுநிலையென அனைத் துலக அறிஞர்களாலும் பாராட்டப்பெறும் அறக் கொள்கையின் எல்லை, வடிவம், செயப்பாட்டுமுறை ஆகியவைகளை வரையறுத் துணர்த்து கொள்ளுமாறு பயிற்றுவது குடும்பமே. தன்னலம், பொதுநலம்; கட்டற்ற தன்மை, கட்டுப்பாடு; சமநோக்கு, ஏற்றத்தாழ்வு நோக்கு; இல்லறம், துறவறம்; நல்லது செய்வதும் தவறாகும் என்ற கொள்கையின் நடுநிலை, உரிமை கடமைகளின் நடுநிலை.

மேலே குறிப்பிட்ட நடுநிற்றல் கொள்கையைச் சங்க காலத் தில் கீழ்க்கண்டவாறு உணர்த்தியுள்ளார்கள்.

இரட்டை மாடுகள் பூட்டப்பெற்ற வண்டி; நிறைந்த சுமை ஏற்றப்பெற்ற வண்டி; மேடுபள்ளங்கள் நிறைந்த பாதை இந் நிலையில் வண்டியின் அச்சு முறியாதவாறும் இரண்டு மாடுகளுக் கும் சமமான சுமைத்தாக்கலை அமைத்தும் வண்டியை இழுத்துச் சென்று சேர்த்தல் அந்த வண்டிக்காரனின் கடமை. இத்தகைய இயைபுநிலைப் பயிற்சியைக் குடும்பம் ஒன்றில் தான் பெறமுடியும்.

'ஈன்றவர் வயத்தாராகி இல்லறம் புணர்க நாளும்'

என்பது சீவகசிந்தாமணித் தொடர்—இது சமூகநல அறப் பயிற்சிக்குத் திட்டம்.

ஒருவன் குடும்பத்தில் தன் தாய்தந்தையரோடும் தன் பிள்ளை களோடும் வாழ்கிறான். அவன் தன் தாய் தந்தையருக்கும், தனக்கும் உள்ள உறவு நிலையில் உரிமைகள் கடமைகள் செயற் படுத்தப்பட்டதை உணர முடிகிறது. தன்னுடைய தாய் தந்தை யர்களின் அறக்கொள்கைச் செயற்பாட்டு முறையைத் தன் அனு பவத்தால் அளந்து பார்க்கிறான். அதே சமயத்தில் தான் தந்தை யாக நின்று தன் பிள்ளைகளுக்கு ஆற்றும் உரிமைகள் கடமைகள் ஆகியவைகளை மதிப்பீடு செய்கிறான். ஒன்று தந்தை,தாயாரிட மிருந்து ஏற்றுக்கொண்ட நிலை; இன்னொன்று தன் பிள்ளை களுக்கு வழங்கும் நிலை,இரண்டன் நிறை குறைகளை அவை களால் வரும் நலன் தீங்குகளைத் தன் அனுபவம்கொண்டே உணரும் வாய்ப்பினை ஒருவனுக்கு நல்குவது குடும்பமே.

இன்று அறிஞர்களால் ஒத்துக் கொள்ளப்பெறும் தனிமனிதஅறங்கள், சமூகநல அறங்கள், அடிப்படை நல்லொழுக்க நற்பண்புகளை வளர்க்கும் மூல அறங்கள் ஆகிய அனைத்து அறங்களும் தோன்றிய இடம் குடும்பமே.

தாய், தந்தை, இறை, கொலைக்கருவி செய்பவன், போர் செய்து வெற்றிபெறல் ஆகிய ஐந்தும் குடும்பப் பணியாளர்களின் பெயர்கள். தனிமனிதனும் தன்னிடத்தில் இந்த ஐந்து செயல்களையும் செய்து வருகிறான். நாட்டிலும் இந்த ஐந்து செயல்களை ஐந்து நிறுவனங்கள் செய்கின்றன. குடும்ப அமைப்பைத்தான் தனிமனிதனும் நாடும் பின்பற்றுகின்றன. வெவ்வேறு பெயர்களால் இன்று வழங்கப்பெற்றாலும் குடும்பத்தில்அமைந்த பெயர்களே அவைகளின் தகுதிப் பெயர்கள்.

அறக்கொள்கைகளைப் போற்றி வளர்ப்பவள் தாய். நல்லறக் கொள்கைகளை நல்லொழுக்கமாக்கி நல்லொழுக்கத்தின் முதிர்வில் உண்டாம் நல்லொழுக்க நற்பண்பு என்பதாக அறக்கொள்கையை ஆக்குபவன் தந்தை. நல்லொழுக்க நற்பண்புகளுக்கு செயற்பாட்டு வடிவம் எனப்பெறும் நன்னடத்தையை அமைத்துக் கொடுப்பவன் இறை. நல்லொழுக்க நற்பண்புகளுக்கு மாறுன கொள்கைளை அழிக்கவும் நல்லொழுக்கத்தை வளர்க்கவும் ஆகிய வேல்வடித்தல் என்பதே உணவைப் பக்குவம் செய்தல் என்னும் தொழில். தீயவை நீக்கி நல்லவை ஆக்கும் தொழில் சமைத்தல், போரில் நேர் நின்று மறத்தை அழித்து அறத்தைக் காத்தல் என்னும் தொழில் காளையின் தொழில்; குடிமகன் தொழில்.

இவை ஐந்தையும் நாட்டில் அமைக்கும்போது பாராளுமன்றம் பல சட்டங்களைத் தோற்றுவிக்கும். நீதிபதிகள் சட்டங்களைத் தெய்வமாக்குவர். அரசு ஆணை அல்லது அரசு சட்டங்களின் செயற்பாட்டை அமைக்கும். உரிமைகள், கடமைகள், ஒறுத்தல்கள் என்பவைகளாகிய 'வேலை' அமைத்துக் கொடுப்பது கொல்லன் போரில் தீமையை அழித்து நன்மையைக் காப்பது எனப்பெறும் தொழில் குடிமகன்.

இவை ஐந்தையும் தனிமனிதன் தானே தாயாக, தந்தையாக, இறையாக, கொல்லனாக, காளையாக நின்று தனக்குள் இவ்வைந்தையும் செய்து அறவாளனாகிறான்.

எனவே குடும்பம் அமைத்துக்காட்டிய அமைப்பு முறையையேநாடும் தனிமனிதனும் பின்பற்றுகிறார்கள் இவ்வாறு

குடும்பத்தின் உயர்நல அமைப்புத் தன்மையைச் சங்கப் பாடல் கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

'ஈன்றுபுறந் தருதல் என்தலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சம முருக்கிக்
களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே'

என்பது புறநானூறு.

அறத்தைக் கூறவரும் திருவள்ளுவர் இல்லறத்தை முதலாகக் கொண்டு தொடங்கிக் கூற முற்பட்டமைக்கு இதுவே அடிப்படைக் காரணம் என்று கருதுதலும் பொருத்தமுடையதே.

குடும்பம் ஒன்று; கிளைகள் மூன்று

அற இயல் அடிப்படையில் குடும்பத்தைக் காணும்போது அது மூன்று கிளைகளைத் தோற்றுவித்துக்கொண்டு, மூன்று பொதுமை அறங்களை வளர்த்து மூன்றையும் இணைத்து நிறைவு செய்துவிடுவதைக் குறிக்கோளாகக் கொண்டது.

திருமணம்

திருமணத்தை சமூக நல அறப்பயிற்சி நிலையமாகக் கொள்வது அறவியல் ஆய்வாளர்கள் கண்ட முடிவு. திருமணம் என்பதை ஒருவகை உறவினுக்குச் சமூக உடன்பாடு பெறுதல் எனக் கொள்ளலாம். சமூகம் என்பதே இத்தகைய உறவை வேண்டுமென ஏற்றமையால் தோன்றிய ஒன்றுதானே. ஒரு தனிமனிதன் பிற மனிதர்களோடு இணைந்து நிற்கவேண்டும் என்பதை வலியுறுத்துவதுதானே சமூகம். ஆண், ஆணோடு இணைந்து நிற்பதற்குச் சமூக ஒப்புதல் தேவையில்லை. பெண், பெண்ணோடு இணைந்து நிற்பதற்குச் சமூக ஒப்புதல் தேவையில்லை; ஆணும் பெண்ணும் இணைந்து நிற்பதற்குச் சமூக ஒப்புதல் பெறவேண்டும் என்று அமைப்பது எவ்வாறு பொருந்தும்?

சட்டம் ஒப்புதல் தருதல், சமூகம் ஒப்புதல் தருதல் என்பதன் அடிப்படை என்ன? செயல் தவறுடையதுதான். ஆனால் தவிர்க்க முடியாததாக அச்செயல் கருதப்பெறுமானால் அதை-தவற்றுச் செயலை ஒப்புதல்பெறுதல் மூலம் அனுமதிக்கலாம் என்பதே; அவ்வாறாயின் ஆண், பெண் இணைப்புக்கு ஒப்புதல் பெற வேண்டும் என்னில் அது ஒரு தவறான செயல் என்றுதான்

பொருள்படும். அத்தகைய செயல் தவிர்க்கப்பெற முடியாத நிலையில் அனுமதிக்கப்பெற்றபோது அனுமதி வழங்கும் ஒரு நிகழ்ச்சியாகத் திருமணம் அமைகிறது.

ஆக்குவதும் அழிப்பதும் இருவேறு மாறுபட்ட செயல்கள். ஆக்குவது ஆக்குவதுடன் இணையலாம். அழிப்பது அழிப்பதுடன் இணையலாம். ஒத்தத் தன்மையுடையவர்கள் இணைவது இயற்கையானது; நேர்மையானது; தவறில்லாதது. அனுமதி வாங்கிச் செய்யப்பெற வேண்டாத ஒன்று. ஆக்குவதும் அழிப்பதும் தம்முள் மாறுபட்டன. இரண்டும் முரண். முரண்பட்ட இரண்டும் சேருவது தவறு. எனவே, சேருவது தவிர்க்க இயலாதது என்று கருதப்பெற்றால் சமூக ஒப்புதல் பெறுவது என்பது ஒருவகைப் புறநடைச் சட்டம்.

தவிர்க்க முடியாதது என்பதற்காக ஒப்புதல் பெற்றுச் செய்வது என்பது பொருந்துவதன்று. தவிர்க்க முடியாது என்பதற்காக அனுமதிபெற்று ஒருவனைக் கொலை செய்ய முடியாது.

ஓர் அடிப்படைப் பண்பின் இருவகைச் செயற்பாட்டு முறைகளே ஆக்குவதும் அழிப்பதும். இரு நிலைகளும் செயற்பாட்டு அமைப்புகளில் வேறுபட்டாலும் அடிப்படை உள்ளுக்கி ஒன்றே. காரணம் ஒன்றாக இருந்தால் அதனால் விளைவது எவ்வாறு முரண்கொண்டதாக அமையும்? கழித்தலும், கூட்டலும், வகுத்தலும், பெருக்கலும் செயல்முறைகளால் நேர்மாறானவை. ஆனால், இரண்டும் ஒன்றன் இரு செயற்பாட்டு முறைகளே. இவ் வடிப்படையில் அறச்செயல் வேறு, மறச்செயல் வேறு எனக் கருதி அற ஆய்வை மேற்கொள்வர்.

அறச்செயல் நன்மையைப் பயனாகக் கொண்டது; மறச் செயல் தீமையைப் பயனாகக் கொண்டது. பயனால் மாறுபட்ட இருவேறு செயல்களும் எவ்வாறு ஒரே அடிப்படையின்மேல் எழுந்த செயல்களாகக் கருதப்பெறும்? இவ்வினாவுக்கு விடை அளிக்கும் வகையில் திருவள்ளுவர்,

> 'அறத்திற்கே அன்புசார் பென்ப; அறியார்
> மறத்திற்கும் அஃதே துணை'

என்று இவ்விரண்டுக்கும் அடிப்படை ஒன்று எனக் கூறி, நல்வினை தவறாதலும், தீமை நன்மை பயத்தலுங்கூட உண்டு என்பதை,

'நன்றாற்றலுள்ளும் தவறு உண்டு'

என்றும்

'பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்'

என்றும் கூறியுள்ளமையை நோக்குக. உலக வழக்கில் 'அமுதமும் நஞ்சாம் அளவில் மிகில்' என்ற கூற்றையும் நோக்குக.

அறமும் மறமும் தம்முள் முறணானவை அல்ல. அவை இரண்டிற்கும் அடிப்படை ஒன்றாக அமைதலின், அடிப்படையாகிய அன்புடைமையை ஒழுங்குபடுத்திச் செயற்படுத்திப் பழகிக்கொண்டால் அன்பானது எந்த நிலையில் நிற்கும்போது அறச் செயலை ஆக்கும். அது எந்த நிலையில் நிற்கும்போது மறச் செயலை உண்டாக்கும் என்பதை அறிதற்கு இவ்விரண்டன் இணைப்பு என்ற ஒன்று தேவையானதே.

இனி ஆக்கலும் அழித்தலும் முற்றாக முரண்பட்டுத் தனித்திருக்கக்கூடிய வகையில் மாறுபட்டவைகள் அல்ல. பயிர் விளைவு என்பது ஆக்கம்; களை எடுத்தல் என்பது அழிவு. எனவே, ஒரே செயலுக்கு இவ்விரண்டும் வேண்டற்பாலனவே; திருவள்ளுவர்,

'கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்'

என்று குறிப்பிடுவதை நோக்குக.

பெண்மை ஆக்கத்தையும், ஆண்மை அழிவையும் அடிப்படையாகக் கொண்டவை. இவ்விரண்டன் இணைப்பின் மூலம் அன்பு என்ற அடிப்படை ஆற்றல் ஒழுங்குபடுத்தப் பெறுகிறது. அன்பு என்ற ஒன்று ஒழுங்குபடுத்தப்பெற்ற நெறியில் செயற்படுத்தும் போது—மனிதப் பண்பாகிய அன்பு, தெய்வப் பண்பாகிய அருளாக மாறுகிறது. இதனையே திருவள்ளுவர்,

'அருளென்னும் அன்பு ஈன்குழவி'

என்று குறிப்பிட்டு,

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்'

என்றும் விளக்கினார்.

எனவே அறச்செயல், மறச்செயல் ஆகியவைகளின் இயல்புகளை, எல்லைகளை உணர்ந்து நடுநிலை நிற்பதற்கும்; இரு செயல்

களுக்கும் அடிப்படையாகிய அன்பினை ஒழுங்குபடுத்தி, ஆக்கத்தையும் ஆக்கத்துக்குத் தேவையான அழிவையும் இணைத்துச் செயற்படுத்துதற்கும்; இவ்வாறு அன்பெனும் அடிப்படையை ஒழுங்குபடுத்திச் செயற்படுத்தும் நிலையே அருள் எனும் தெய்வப் பண்பைத் தோற்றுவித்து நிற்கிறது என்பதை உணர்வதற்கும்; வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வ மாதற்கும் உரிய உறவை அமைத்துக் கொடுப்பதே திருமணம்.

விலங்குத் தன்மையினின்றும் நீங்கி, மனிதத் தன்மையில் நிறைவு பெறுதல் மனித வாழ்க்கையின் உயர் குறிக்கோளன்று. மனிதத் தன்மையில் வேண்டாத முறைகளை அழித்து, மனிதத் தன்மையை வாழ்வாங்கு வாழும் இயல்புக்கேற்ப வாழும் ஆக்கம் பெற்று; இவ்விரண்டன் இணைப்பால் தெய்வத்தன்மை பெற்று நிறைதல் என்பதே மனித வாழ்க்கையின் உயர் குறிக்கோள். மனித வாழ்க்கையின் உயர் குறிக்கோள் 'மங்கலம்' என்ற சொல்லால் உணர்த்தப் பெறுகிறது. இதனை,

'மங்கலம் என்ப மனைமாட்சி'

என விளக்கினார் திருவள்ளுவர். எனவே, உடலியலான விலங்கியலோடு ஒத்த பாலுணர் விளைவுகளை இயற்கையோடிணைய, அவற்றின் அடிப்படையாகிய அன்பினை நெறிப்படுத்தி, அதன் மூலம் அறிவியலை நிறைவு செய்து, உள்ளத்தியலும், அறிவியலும் இணைய நிற்க, வாழ்வாங்கு வாழும் நிலை உண்டாக, இறுதியில் தெய்வத்தன்மை பெறுதல் என்பதை; மாறுபாடுகளை இணைத்து நிறுத்தி, நடுநிலை செய்து நடுநிலை நிற்றல் என்ற பொன்மயமான நடுநிலையை அமைப்பது திருமணம்.

மக்கட்பேறு

குடும்பம் எனும் சமூக அற இயற் பயிற்சி நிலையத்தின் இரண்டாவது கிளையாகத் தோன்றி வளம் பெறுவது சொத்துரிமை. சொத்துகள் தனியுரிமையாதல் வேண்டும்; பொதுவுரிமையாதல் வேண்டும் என்ற இரு கருத்துகள் வலியுறுத்தப் பெறுகின்றன.

சொத்துகளின் மேல் உரிமை பேணுதல் என்பது இயற்கை உரிமையாகக் கருதப்பெறுவது. சமூகத்தின் உறுப்பினர்கள் அனைவரும் ஒத்த உரிமையினர் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு பிரித்தால் ஒரு தனிமனிதனை ஒன்று என்ற கணக்கில்கொண்டு அத்தனை மனிதர்களுக்கும் பொதுவாக அமைந்த சொத்துகளைப் பிரித்துக் கொடுத்தல் வேண்டும்.

அப்படிப் பொதுவுரிமையில் பிரித்தால் சிறப்புத் தகுதியுடையவர்களின் தனித்தகுதி மதிக்கப்படாததாகிவிடும். தனித்தகுதியை—சிறப்புத்தகுதியை மதித்து, சிறப்புப் பங்கீடும் அளிக்க முற்படும் போதுதான் தனிமனிதனுடைய தகுதியானது சிறப்புப் பங்கீட்டு முறையால் உற்சாகப்படுத்தப்பெறும். இந்நிலையில் மீண்டும் மீண்டும் அவன் பல சிறப்புகளை வெளியிடும்போது சிறப்புப் பங்கீட்டினைப் பெறுவதால், அவனுக்கு உரிமைச் சொத்து அதிகமாகிறது. நாளடைவில் தேவைக்கும் அதிகமான சொத்து அவனிடம் அமைந்துவிடுகிறது.

சிறப்புப் பங்கீட்டு முறை இல்லையானால் தனித்தகுதியில் வெளிப்பட வாய்ப்பில்லாது போகும். சிறப்புப் பங்கீட்டு முறையால் சொத்துச் சேர்ந்து தனியுரிமைச் சொத்து, தேவைக்கும் மேல் அமைந்துவிடுகிறது. எனவே, சமூகத்தில் சொத்துகளின் மேல் தனியுரிமை, சொத்துகளின்மேல் பொதுவுரிமை என்ற இவ்விரண்டையும் எந்த அளவில் நிறுத்தி, நடுநிலை பேணுவது என்பது இங்கே எழும் சிக்கல்.

மனிதன் தன்னிடத்தில் அமைந்த பல்வகைப் பொருள்களின் உண்மைத் தன்மையை அறிந்து உணர்ந்து, மதிப்பீட்டு முறையில் அனைத்துத் தகுதிகளையும் ஆராய்ந்து, அவ்வளவில் தன்னோடு இணைந்துள்ள பொருள்களின் மதிப்பீடு, அவைகளின் இடையே விளங்கும் 'தான்' என்ற உண்மைப் பொருளின் மதிப்பீடு ஆகியவைகளை உள்ளவாறு உணர்ந்து துய்த்தலே உயர்ந்த நன்மையாக வாழ்வில் கருதப்பெறும். இத்தகைய உயர்தன்மையைப் பெறுவதற்கு, அவன் சில சாதனங்களைச் சுதந்திரமாக உபயோகிக்க வேண்டிய அவசியம் உண்டு. உணவு, உடை, உறையுள் என்பன உடலியலான, வாழ்வியலான தேவைகள். செல்வம் என்பது உடலியலான, அறிவியலான, ஒழுக்கவியலான, அழகியலான தேவைகளை நிறைவு செய்வதற்கு இன்றியமையாதது; வேண்டப்படுவது. எனவே, தன்னுண்மை நிலையை எந்த ஒரு தனிமனிதனும் உணர்ந்து அனுபவிப்பதற்கு செல்வம் முதலான சில சாதனங்களைச் சுதந்தரமாக உபயோகிக்க வேண்டியவனாகிறான். அதனால் அவன் சுதந்தரமாக உபயோகிக்கத் தனியுரிமையுடைய செல்வம் தேவை. ஆறாமை வளர்ச்சியென்பது சொத்துரிமை, செல்வம் ஆகியவைகளைச் சார்ந்துள்ளது எனக் கருதலாம்.

இதற்கு மாறாக, சொத்துகள் பொதுவுரிமை உடையனவாகவே இருத்தல் வேண்டும். சொத்து என்பது சமூகத்துக்குரியதேயன்றித் தனிமனிதனுக்குஉரியதன்று. மனிதர்கள் தத்தம்

கூட்டுறவு அடிப்படையில் இணைந்து நின்று உரிமை கொண்டாடவும் உபயோகிக்கப் பெறவுமே அமைந்தது சொத்து என்பதும் அறிஞர்கள் கொண்ட முடிவே.

ஆனால், பொது நன்மைக்குச் சொத்தின் தனியுரிமை என்பது தேவையான ஒன்றே. தனிமனிதனின் அறிவியலுக்குட்பட்ட நீதியே சொத்தின் தனியுரிமை என்பது, மனிதனின் இயற்கை உரிமைகளில் சொத்துரிமையும் ஒன்று. எனவே, சொத்துரிமை என்பது பொதுமையானதாகவே இருக்கவேண்டும், தனியுரிமை யுடையதாக இருக்கக் கூடாது என்பது அடிப்படை உரிமைகளில் ஒன்றான, சொத்துரிமைக்கு மாறான கருத்து. எனவே, அது தவறு என எதிர் வழக்காடுபவர்களும் உண்டு.

தனிமனிதக் கொள்கையானது தனிமனிதனின் சொத்துரிமையை வலியுறுத்துகிறது. அதனால் போட்டி மனப் பான்மையை எல்லையற்ற முறையில் வளர்த்து, அதனால் எல்லையற்ற முறையில் சொத்தின் தனியுரிமை அமைக்கப்பெறு கிறது. இறுதியில் சிலரே கோடி பெற்றவர்களாக அமைய, ஏனையோர் வறியராகும் நிலை உண்டாகிறது.

பலவகையான அரசியற் கொள்கைகள் சொத்தின் தனியுரிமை (அளவுக்குட்பட்ட வகையில்) அமைய வேண்டும் என்றும் மாறுபட்ட கருத்துகளை வெளியிடுகின்றன. எனினும் சொத்தின் சொந்தக்காரன் என்னும் மனஉணர்ச்சி மனித உள்ளத்தில் மிக ஆழமாகப் பதிந்திருக்கின்ற ஒன்றாகும். எவ் வாறாகவேனும் இவ்வுணர்ச்சி முழுமையாகக் களைந்தெறியப் படவேண்டும். ஊதிய நோக்கிலேயே எதையும் செய்வது என்ற உணர்ச்சியைச் சேவை நோக்கினால் மாற்றவேண்டும். இக் கொள்கையை எந்த அளவிற்கு நான் வாதிட்டாலும் ஓர் உண்மையை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

மனிதனுடைய திறமைகளில் ஒரேமாதிரியான சமநிலை காணப்பெறாதபோது பொருளை உடைமையாக்கிக் கொள்ளும் உரிமை நிலையில் சமனான நிலை இருக்கவேண்டும் என்று கேட்பது முடியாத ஒன்று. திறமைகள் வேறுபட்டால் தனித் தகுதிச் சிறப்பினால் பொருளாதாரம், சொத்துரிமை போன்றவை களில் ஏற்றத்தாழ்வுகள் தவிர்க்கப்பட இயலாதவைகளே.

இவ்வாறு சொத்துரிமையை இத்தொழில் நிறுவனங்களோடும் தனித்திறமையைச் செயற்படுத்தி உற்பத்தி நிறுவனங்களோடும் இணைந்துச் சிந்தித்த சமுதாயச் சிந்தனையாளர்கள், குடும்ப

மானது சொத்துரிமையை எந்த அடிப்படையில் கருதுகிறது? மாறுபட்ட அல்லது முரண்பட்ட இருநிலைகளில் எத்தகைய நடு நிலையைக் கடைப்பிடிப்பது என்ற ஒன்றையே கருத்திற் கொண்டு, அதை அறிந்து செயற்படுத்தும் பயிற்சியை மேற் கொள்ளும் முதல் அறப்பயிற்சி நிலையமாகிய குடும்பம் இச் சிக்கலுக்கு எத்தகைய நடுநிலையை அமைத்துக் கொடுத்திருக் கிறது என்பதையும் சிந்திக்கவேண்டும்.

மக்கட்பேற்றை இடைவைத்து, சொத்துரிமைச் சிக்கலைத் தீர்க்கிறார் திருவள்ளுவர்.

தொழிற்சாலை மூலமாயினும் சரி, நிலம் முதலிய இயற்கைப் பொருள் மூலமாயினும் சரி, உற்பத்தி செய்யப்பெற்ற பொருளுக்கு என் பொருள், உன் பொருள் என்ற உலக வழக்கு இல்லை. பொதுவுரிமை வழக்காகிய 'தம் பொருள்' என்பதே அமைகிறது. தந்தை, தாய் என்ற இருவருக்கும் உரியவனே மகன். இருவருக்கும் தனியுரிமை அன்று; பொதுவுரிமைதான். எனவே, அனைத்துச் சொத்துகளும் பொதுமைச் சொத்துகளே. அப்படியானால் 'தனிச் சொத்துரிமை' என்பதே இல்லையா? என் வினவினால், திருவள்ளுவர் தரும் விளக்கம் புதுமையானது.

ஒரு பொருளை ஒருவன் வைத்துக் கொண்டிருப்பதால் அப்பொருள் அவனுடைய உரிமைப்பொருள் என்பதாக 'உரிமை' என்ற உறவு முறைக்கு விளக்கம் காணக்கூடாது. பொருளை எவன் ஒருவன் செயற்படுத்துகிறானோ, அவனுக்குத்தான் அப் பொருள் உரிமையுடையது எனக் கருதப்பெறும். செயற்படுத்த முற்படும்போது, ஒரு தனிமனிதன் தன்னுடைய தேவையை நிறைவுசெய்யும் வகையில் செயற்படுத்த முற்பட்டால் தேவை யின் நிறைவு வரையில் செயற்படுத்தலாம். அந்த அளவு வரையில் அவனுடைய உரிமைப் பொருளே. பிறர் நலனுக்காகச் செயற்படுத்தினால், அவனுக்கு உரிமைப்பொருள் பிறர் நலனுக் காகச் செயற்படுத்தப்பட்டது என்ற விளக்கம் உண்டாகும். தன் தேவையும் நிறைவு பெற்றபின் பிறருக்காகச் செயற்படுத்தப் படாமல் வைத்திருக்கும் பொருள், எந்த ஒன்றை நோக்கியும் செயற்படுத்தப் படவில்லையாதலின் அவனுக்கு அப்பொருள் உரிமையில்லை என்பதாகவே கொள்ளவேண்டும். எனவே உரிமை செயற்பாட்டின் மூலம்தான் நிறுவவேண்டுமே அல்லாமல் உடைமை எனப் பாதுகாத்து வைத்திருக்கும் காரணத் தால் உரிமை என்ற உறவை நிலைநாட்ட முடியாது. இதனைத் திருவள்ளுவர், அவர் பொருள், தத்தம் வினையால் வரும் என்று கூறினார். இரு கருத்துகளையும் இணைத்தால்,

'தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தந்தம் வினையான் வரும்'

என்ற குறள் நம் உள்ளத்துக்கு விளக்கமடைவிக்கும். இதனை மேலும் விளக்கமாக,

'தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே'

என்ற புறப்பாடல், தேவையை நிறைவு செய்தல் என்பது மிகக் குறைந்த அளவில் அமைவதுவே. அனைவருக்கும் ஒப்ப அமைந்ததே. அதற்குமேல் வைத்துக்கொண்டு, நாளைக்குத் தேவை என்று எண்ணி உரிமை அமைத்தால், அது வைத்திருப்பவனுக்கு உரிமை உடையது அன்று. உரிமை என்பது செயற்படுத்துபவனுக்கே.

என் தேவைக்கும் மேலாக என்னிடம் இச்செல்வம் வந்து சேர்ந்ததன் நோக்கம், என் உரிமை உடையது என்பதற்காக அன்று. என் மூலமாகப் பிறருடைய நலன் கருதிப் பிறருக்கு வழங்குவதற்காகவே என்னிடம் வந்துள்ளது என்ற கருத்து உண்டாகும் வண்ணம் அண்மைக் காலத்தே 'தரும கருத்தாக் கொள்கை' என இக்கருத்து, காந்தியடிகள் மூலமாக வெளிப்படுத்தப்பெற்றது.

நட்பாம் சிறப்புநிலை வாழ்வு

குடும்பம் என்ற தலைப்பில் பெரிதும் திருமணம், சொத்துரிமை என்ற இரண்டையுமே ஆய்வது மரபு. திருமணம், சொத்துரிமை ஆகியவைகளில் நடுநிலையமைய வாழும் பயிற்சி அளிக்கப் பெற்றது.

திருமணத்தால் 'மங்கலம்' என்ற குறிக்கோள், மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வமாய் நின்ற நிலை அடையப் பெற்றது. மங்கலமே குறிக்கோள். இங்கே அன்புடைமை அருளுடைமையாக மாறியது.

சொத்துரிமையால் ஈதல் என்பதும், வினையின் மூலமே சொத்துரிமை வரையறை செய்யப்பெறும் என்பதும் கொள்கை

களாக அமைய, பிறருக்கு விழைந்து, தம்மிடம் கொடுக்கும் பொருளைச் செயற்படுத்துவதே குறிக்கோளாக அமைந்தது. இதுவே ஆர்வமுடைமை. இதனை 'அன்பீனும் ஆர்வமுடைமை' என்றார் திருவள்ளுவர்.

மூன்றாவதாக அமைவதே அகப்புற வாழ்வின் ஒற்றுமை நிலை. இங்கேதான் அனைத்துவகைப்பட்ட ஏற்றத் தாழ்வுகள் நீக்கப்பெறுகின்றன. புறம் நோக்கிய செயலில், பெண்மை தாழ்ந்து நிற்க ஆண்மை ஏற்றம் பெற்றுப் பணியாற்றுகின்றது. அகம் நோக்கிய வாழ்வில் ஆண்மையானது பெண்மைக்கு அடங்கிநின்று தோற்பதுதான் வெற்றி எனக் கருதப்பெற்றது. இதுவே சான்றாண்மை நிலையமைந்த வாழ்க்கை.

உயர்வு, தாழ்வு என்பன உண்மையில் எப்பொருளிடத்தும் இயல்பில் இல்லை. தொழில் நிலை வளம் பெருக்கவும், செயல் நிலை உரிமையைச் செலுத்தவும் இருவேறு நிலைகளில் பிரிந்து செயற்படுகின்றன. தொழில் நிலை போன்ற அடிப்படையில் பிரிந்து செயற்படுகின்றனவேயன்றி, அவைகள் தம்மியல்பில் ஏற்றத்தாழ்வு உடையன அல்ல. ஏற்றத்தாழ்வுகளோடு செயற்படும்போதும், ஒருநேரத்தில் ஏற்றம்பெற்று நின்ற ஒன்று அடுத்த நேரத்தில் தாழ்ந்து பணிந்து நிற்கிறது. எனவே, ஆண், பெண் என நின்ற திருமண நிலையிலும், கொள்வோன் கொடுப்போன் என்ற தொழின்மை நிலையாகிய சொத்துரிமை நிலையிலும் ஏற்றத்தாழ்வுபெற நின்றாலும் ஏற்றத்தாழ்வு இல்லை.

முதல்நிலையில், அன்பு அருளாக மாற்றம் பெற்றது. இரண்டாம் நிலையில், அன்பு ஆர்வமாக மாற்றம் பெற்றது. மூன்றாம் நிலையில், அன்பு—நண்பு என்னும் நாடாச்சிறப்பாக மலர்கிறது.

இந் நிலைபெற்ற குடும்பத்தில் கணவன்-மனைவியாக நின்றவர்கள்-காதலர்களாக நின்றவர்கள், அருளுடையவர்களாக நின்றவர்கள் நண்பர்களாக நிற்கிறார்கள். இதுவே சான்றாண்மைக்கு மூலமாக நின்ற அகப்பண்பு. இதுதான் உலகத்தின் எப்பகுதியிலும் வாழும் எந்த உயிரையும் தன்னுடைய உரிமையுடைய உயிராக ஆக்கும் தன்மை வாய்ந்தது. இதனையே,

'நட்பாம் கிழமை தரும்'

என்றார். இதுவே துன்பத்துக்கு துணையாக நிற்கும் நிலை. 'துன்பத்துக்கு யாரே துணையாவார்' என்று அறம் பேசிய நாட்டில், துன்பத்துக்குத் துணையாக நிற்கும் நிலையை மனித

வாழ்வில் அமைத்து குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து அடைய முடியும் என்று காட்டினார். இதற்கு எடுத்துக்காட்டாக, கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் வாழ்வு அமைந்தது தமிழகத்தில். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற வாழ்வியற் குறிக்கோள் நிறைவு பெறுதல் இத்தகைய நண்பு என்னும் நாடாச் சிறப்பால். இங்கே, எத்தகைய சிறு அளவினும் உயர்வு, தாழ்வு இல்லை.

உயர்வு, தாழ்வு இல்லாத சமுதாயத்தை அமைத்துக்காட்ட முடியுமா? என்று வினாவெழுப்பிய நிலையில் அத்தகைய சமுதாய மாகச் சிறுகுடும்பமே வாழ்ந்துகாட்ட இயலும் எனக் கொள்கை யையும், செயற்பாட்டு நிலையையும் அமைத்துக் காட்டினார் திருவள்ளுவர். சான்றாண்மையே உலக இடத்தையெல்லாம் தம் மூராக, உலகத் துயரங்களையெல்லாம் தம் கேளிராக அமைக்கும் ஏற்றத்தாழ்வற்ற சமநிலைச் சமதர்ம சமுதாயம் அமைய காரணமாக நின்ற பெருங்கிழமைப் பண்பு என்னலாம்.

கல்விநிலையங்கள்

குடும்பத்துக்கு அடுத்த நிலையில், தனிமனிதனை நல்லறப் பயிற்சியில் ஈடுபடுத்தும் சமூக அறப்பயிற்சி நிலையமாக விளங்குவது கல்விநிலையம்.

தனிமனிதன், பிறப்புரிமை என்ற அடிப்படையில் சில உரிமை களைப் பெற்றிருக்கிறான். அவனுக்குரிய உரிமையை அவன் பெற்று அவ்வுரிமைகளின் மூலம் அவன் தன்னை உயர்த்திக் கொள்ளவேண்டும். அவ்வுரிமைகளில் ஒன்று கல்வியுரிமை. தனி மனிதன் ஒருவன் கல்வி பெறுதற்கு உரிமையுடையவன் என்பதைச் சமூகம் ஒத்துக்கொள்ளும்போது, அவன் அதனைப் பெறுவதற் குரிய வாய்ப்பினை உண்டாக்கித் தருவது சமூகத்தின் கடமையா கிறது. எனவே, சமூகம் கல்விநிலையங்களை அமைத்து அவற்றின் மூலம், தனிமனிதனின் கல்வியுரிமையை நிறைவுசெய் கிறது.

மனிதனாகப் பிறந்த எந்த ஒருவனும், கல்வி பெறும் உரிமை யுடையவன். கல்வி அளிப்பதன் நோக்கம் என்ன? இதற்கு விடை யாக இரண்டு கொள்கைகள் பேசப் பெறுகின்றன. (1) மனிதன் தன் உண்மைத் தன்மையை உணர்ந்து, அதற்கு ஏற்பத் தன்னை வளர்த்துக் கொள்வதற்குக் கல்வி துணை செய்யும். (2) மனிதன் தன்னிடத்தே உள்ள தனிமையும் சிறப்பும் வாய்ந்த ஆற்றலை வெளிப்படுத்தி, அவ்வாற்றலால் அவன் மனித இனவரலாற்றில்

தன்னுடைய பெயரைப் பதிவுசெய்து வைத்தலை அவன் கல்வி யால் அடையமுடியும்.

இனி, கல்வியை அனைவரும் பெறுதற்கு உரிமையிருப்பினும் தனிமனிதனை அடிப்படையாகக் கொண்டு கல்வியின் தேவை மாறுபடும். தேவை என்பது இங்கே கொள்திறன் ஆகும். கொள்திறன் அறிந்து கொடுக்கும்போதும், தனிமனிதனின் தகுதிக்கு ஒத்த கல்வியைத்தான் கொடுக்கவேண்டும். சமுதாயத் தில் எல்லோரும் எல்லாவகையான கல்வியையும் பெறத் தகுதி யுடையவர்கள் என்பதே கல்வியுரிமையை வரையறுக்கும் குறிக்கோள்.

இக்காலத்தே தொடக்கக்கல்வி, உயர்நிலைக் கல்வி கல்லூரிக் கல்வி, பல்கலைக்கழகக்கல்வி என வரிசைப்படுத்தப் பெற்று, வளர்ச்சிப் படிமுறை நிலையில் மாணாக்கர்கள் கல்வி அறிவு பெறுகிற நிலை அமைக்கப் பெற்றுள்ளது. ஆனால், சங்க காலத்தே, இவ்வாறு வளர்ச்சிப் படிமுறைகளில்கல்விநிலையங்கள் அமைந்திருந்தன என்பதற்குச் சான்று கிடைக்கவில்லை. ஆயினும், தந்தையே தன் மகனுக்கு அடிப்படைக் கல்வியை அளிக் கவும், அவனைச் சான்றோர் அவையில் முன்நிற்கும் தகுதியாள னாக ஆக்கவும் வல்லவனாக அமைந்தான் என்பதை,

> 'சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே'

என்ற புறநானூற்றுப் பாடலாலும்,

> 'தந்தைமகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
> முந்தி யிருப்பச் செயல்'

என்ற திருக்குறளாலும் அறியலாம். ஆயினும் சிறப்புத் தகுதிகள் பெறுதற்குச் சிறப்பு ஆசிரியர்களை அணுகி, அவர் தம் இல்லத்திலே இருந்து படித்தலும் உண்டு என்பதை அறியமுடிகிறது. அகத்தி யனாரிடம் பன்னிரு மாணாக்கர்கள் பயின்றார்கள் என்பன போன்ற சான்றுகளை அமைத்துக்கொள்ளலாம்; அவ்வாறு கல்வி பயிலுங்காலையில் படிக்கும் மாணாக்கர்கள் செல்வர் களுக்கு முன்னர் நிற்கும் வறியவர்களைப்போல நின்று கற்க வேண்டும் என்பதையும் திருக்குறள் வலியுறுத்துகிறது.

> 'உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
> கடையரே கல்லா தவர்'

என்பது திருக்குறள்.

தானே கற்றலும், ஒருவர் பாடஞ்சொல்லக் கேட்டலும் ஆகிய இரண்டும் கல்வியைப் பெறும் முறைகள்.

தானே கற்கலாம், அதில் மூன்று குறைபாடுகள் வரும். அவைகளைப் பிறர்சொல்ல, கேட்டுக் கேட்டுப் பழகிய கேள்வியறிவால் போக்கிக் கொள்ளலாம் என்பது வள்ளுவர் கருத்து.

(1) கற்கும்போது ஒருவன் பிழைபட உணர்ந்து கொள்ளும் வாய்ப்பு உண்டு. கேள்வி ஞானம் இருந்தால், பிழைபாக உணர்ந்திருந்தாலும் தவறுபடச் சொல்லாத நிலையை உண்டாக்கும்.

(2) கற்றலால் ஒருவனுக்குச் செருக்கு உண்டாகலாம். பணிவான சொற்களையும் வணக்கத்தையும் கேள்வி ஞானமே உண்டாக்கும்.

(3) கற்றவன் தவறு செய்யவும் முற்படுவான். கேள்வி ஞானம்தான் அவனை ஊன்றுகோல்போல் நின்று காத்து, வழுக்கி விழாதவாறு செய்யும்.

கல்வியின் குறிக்கோள், இன்னது என வரையறை செய்யப் பெற்றுள்ளது.

(1) தனக்கு அழிவு வராமல் தன்னைக் காத்துக்கொள்ளவும், அழிக்க முற்படுபவர்களாலும் அழிக்க முடியாத அரணாகவும் அமையும் அறிவைப் பெறுதல்.

(2) மிருகங்களைப்போல ஆசையின் வழியே செல்லவிடாது தடுத்து நிறுத்தி, தீமையை நீக்கி, நன்மையைச் செயலாகச் செய்ய வைக்கும் ஆற்றலைத் தரும் செயல்முறை அறிவைப் பெறுதல்.

(3) சமூக இணைப்பையும், உலக ஒருமைப்பாட்டையும் அளிக்கும் ஆற்றல் வாய்ந்த அறிவைப் பெறுதல்.

(4) துன்பத்தில் துவளாமலும், இன்பத்தில் நெகிழாமலும் இரண்டையும் ஒப்பநோக்கும் சமநோக்கினையும், உலக நடையை அறிந்து செயற்படும் ஆற்றலும், பின்விளைவை நோக்கி முன்னதாக வழிவகைகளை அமைத்துக் கொள்ளும் காரிய காரண நுட்பமும், துணிவும் தரும் அறிவைப் பெறுதல்.

(5) மெய்யுணர்வைப் பெறுதற்குத் துணைநிற்கும் அறிவைப் பெறுதல்.

(6) மனிதனை மிருகத்திடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் அறிவைப் பெறுதல்.

மேலே கூறப்பெற்ற அடிப்படைகளை வைத்து நோக்கும் போது, மனிதன் சமூகத்தோடு இணைந்து வாழக் கற்றுக் கொள்வது கல்வியினால் அமைகிறது எனலாம். சுருங்கக் கூறில்,

உலக மக்கள் அனைவரின் உள்ளங்களிலும் நிலைத்து வாழும் பேற்றை — சமூக இணைப்புக் குறிக்கோள் நிலையை ஒருவன் அடையுமாறு செய்வது கல்வியே அல்லது கல்விநிலையே எனலாம்.

செயல்முறை அறிவியலைத் தேர்ந்துகொள்ளவும், மனிதன் தன்னை பிறனுக்கு அடிமையாக்காமல் தானே தன்னைத தலையாகச் செய்து நிறுத்திக் கொள்ளவும், மாறுபாடுகளுக்கு மத்தியில் இது என்று தேர்ந்து கொள்ளவும் ஒருவனைப் பயிற்றும் பயிற்சி நிலையமே கல்விச்சாலை.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் ஒருவனாக வைக்கப் பெறும் என்பது அறவாழ்வின் பயன். ஆனால், அவன் வானுறையும் தெய்வமாக ஆகாமல், நிலவுலகிலேயே தெய்வமாக நின்று வாழும் பேற்றினை அளிப்பது கல்வி; அதனை நல்குவது கல்விநிலையம்.

குடிமைப் பயிற்சி நிலையம்

தனிமனிதன் ஒரு சமுதாயத்தின் உறுப்பினனாக அமைய வேண்டும் என்றால் அவன் குடும்பப் பயிற்சியும், கல்விநிலையப் பயிற்சியும் பெற்றால் மட்டும் போதாது. அவன் குடிமகனாகத் தன்மை பெறுதல் வேண்டும். குடிமை என்பதை 'citizenship' என ஆங்கிலத்தில் கொள்வர். குடிமை என்பதை இக்காலத்தே நகராட்சி, மாநகராட்சி அமைப்புகளால் பேணிக் காக்கப்பெறும் நலம் எனக் கொள்வர். தூய்மை, கலப்பின்மை முதலியன பேசப் பெறும், அற இயல் விதிகளுக்கு முன்னோடியான சிறு சிறு நடத்தைகளை இதனுள் அடக்குவர். பொதுச் சொத்துகளை எவ்வாறு பயன்படுத்துவது? பொது இடங்களைத் தூய்மை யிழக்கச் செய்தல்கூடாது என்பனபோன்ற பழக்க வழக்கங்களை அமைத்துக் கொடுத்துப் பயிற்சி அளிப்பது.

பொதுவாக, குடிமைப் பயிற்சி நிலையம் திறம்படச் செயல்படாத காரணத்தினாலேயே, குடிமைப் பண்புடன் கூடிய குடிமக்கள் நாட்டில் தோன்ற இயலாமற் போய்விடுகிறது.

கிரேக்க நாட்டில், கிரேக்கர்கள் தம் குடிமைப் பண்பில் என்றும் தவறுமாறு வாழ்தலை அனுமதியர் என்று கூறப்பெறுவது வரலாற்று வழக்கு. குடிமகனாம் தன்மையைத் தற்பெருமைப் பேணுதல் எனத் தவறாக எண்ணலாகாது. தனிமனிதன் தன்னைக் குடிமகனாக நிறுத்திக் கொள்ளும்போதுதான் சமூக உறுப்பினன் என்ற நிலையை அடையமுடியும்.

பலர் நடக்கும் வழியில் சிறுநீர் கழித்தலாகாது; ஆடையின்றித் தெருவில் நடத்தலாகாது என இவ்வாறு உடல் தூய்மை, உடல்வளம் என்பவை பற்றி மட்டும் நகர சுகாதார நிலையங்கள் கவனிக்கவேண்டும்என்றும் அவ்வகையில் நகர சுகாதார நிலையங்கள் தனிமனிதனைச் சமூக உறுப்பினனாக ஆக்குதற்குரிய பயிற்சியை அளிக்கின்றனஎன்றும் விளக்கம் கூறிநிறுத்திவிடுதல் உண்டு.

உடல் தூய்மை, உள்ளத் தூய்மை, உயிர்த் தூய்மை என்ற மூன்றையும் உடன்கொண்டு, எந்தத் தூய்மையிலும் கலப்படம் நேர்ந்து விடாதவாறு பார்த்துக்கொள்ளுதல் 'குடிமை' என்பதாக அமைகிறது.

தனிமனிதர்கள் பலர் சமூகம் அமையும் ஒரு நிலையை பல சொற்கள் சேர்ந்த ஒரு வாக்கியம் அமைவதுபோல கொள்ளல் வேண்டும். வாக்கியம் ஒருமொழிச் சொற்களாலேயே அமைக்கப் பெறல் வேண்டும். தேவையற்ற பிறமொழிச் சொற்களைச் சேர்த்தலாகிய கலப்படம் நிகழ்தல் கூடாது. வரையறை பெற்ற பிறமொழிச் சொற்கள் இடம்பெறலாம். ஒவ்வொரு சொல்லும் பொருளுணர்த்த வேண்டும். இவைகளோடு, அம்மொழி இலக்கணத்துக்கு ஒப்ப அமைதல்வேண்டும். இத்தகைய அடிப்படை இலக்கண நிலைகளை நிறைவுசெய்த பிறகே, அவன் சமூகத்தோடு தொடர்புகொள்ள அனுமதிக்கப்பெறல் வேண்டும்.

குடும்பப் பயிற்சியும் கல்விப் பயிற்சியும் பெற்ற ஒருவன்,மரபு வழிப்பட்ட குடிமைப் பயிற்சியைப் பெறுதல்வேண்டும். நகர சுகாதார நிலையங்களோ, நகராட்சி மன்றங்களோ உண்மையில் குடிமைப் பயிற்சியை அளிக்கும் நிலையங்களாக இப்போது அமையவில்லை. தமிழகத்தைப் பொறுத்த வரையில் சான்றோர்களே நடமாடும் குடிமைப் பயிற்சி நிலையங்களாக அமைந்து செயற்பட்டார்கள் என்று கொள்ளமுடிகிறது.

குடிமை அறங்கள் கீழ்க்கண்டவாறு வரையறை செய்யப் பெற்றுள்ளன.

'இற்பிறப்பு' என்பது உயர் பண்பு.'இற்பிறப்பு'என்னும் உயர் பண்பே குடிமைப் பண்பு. இத்தலைமைப் பண்பினுள் நடுவு நிலைமை,நாணம், ஒழுக்கம், வாய்மை, நகை, ஈகை, இன்சொல், பிறரை இகழாமை ஆகிய எண்வகைப் பண்புகள் அடங்கும்.

பணத்துக்காக முறையற்றவை செய்தல் இல்லை; வறுமையால் வள்ளல் தன்மை சுருங்கலாம்; பண்பு மாறுபடுதல் கூடாது.

வஞ்சனையை உள்ளத்துட் கொண்டு குடிப்பெருமை அழியுமாறு நடத்தல் கூடாது; தவறு செய்வது இற்பிறப்பை ஐயத்துக்கு உள்ளாக்கும்.

இற்பிறப்பின் பெருமையே மானம். நிலையில் இழிந்து வாழ்தல் இகழ்பவர் பின்சென்று நிற்றல், பகைவரின் பின் சென்று அவர் விரும்புவன பேசி வாழ்தல், உடலை - வயிற்றை வளர்ப்பதற்காக இற்பிறப்புக்கு மாசு வரும் செயல் செய்தல் முதலியன மானம் இழந்த செயல்களாகக் கருதப்பெறும்.

பிறப்பினால் அனைவரும் ஒன்றாகலாம். இற்பிறப்பின் பெருமை ஒவ்வொருவனும் பெறும் சிறப்புரிமையாகும். அத்தகைய பெருமையை உள்ளத்துள் வளர்த்து, செயற்படுத்தும் போது அரிய காரியங்கள் பலவற்றைச் செய்யக்கூடிய ஆற்றல் பெருகும். பெரியவர்களை விரும்பிப் போற்றும் உயர்ந்த நோக்கம் அதனாலேயே உண்டாகும்.

நல்லவைகளை எல்லாம் கடமையாகக் கொள்ளல் பிறர் குற்றம் பேசாது, தாழுடையவர் எனக் கருதாது அவரிடமும் தன் தோல்வியை, தவற்றை ஒப்புதல், தீமை செய்தவர்க்கும் நன்மை செய்தல் ஆகியவற்றை மேற்கொள்ளல்.

மக்கட்பண்பினைச் செயற்படுத்தல், யாவரிடத்திலும் எளிமையோடு பழகுதல், அன்புடையவனாக இருத்தல், அதேசமயத்தில் 'நற்குடிப்பிறப்பு' என்ற பெருமைக்குக் குறை நேராதவாறு நடத்தல்; அறிவினும் உயர்ந்தது மக்கட்பண்பு; பகைமை என்றாலும் அதிலும் கடைப்பிடிக்கவேண்டிய நற்பண்புகளைக் கடைப்பிடித்தல் ஆகிய பண்புடைமை வேண்டும்.

பிறருக்கு ஈயாது, சேர்த்துவைக்கும் செல்வம் நன்றியில் செல்வம். குடிப்பிறப்பாளனுக்குரிய குடிமைப் பண்பினைக் கெடுக்கும் நன்றியில் செல்வம் கூடாது.

தகாத செயல் செய்வதற்கு வெட்கப்பட வேண்டும். பெண்கள் கொள்ளும் நாணம் வேறு: இற்பிறந்தார் கொள்ளும் நாணம் வேறு. நாணத்தைத் துறப்பதா,உயிரைத் துறப்பதா என்ற நிலை வரும்போது உயிரைத் துறந்து நாணத்தைக் காப்பதே குடிமை.

என்னுடைய குடியின் பெருமையை உயர்வடையச் செய்வதற்குரிய கடமைகளைச் செய்வதற்கு நான் எந்நாளும் சோர்வடைய மாட்டேன் என்று முயற்சியுடையவனாக இருப்பதே 'பீடு' எனப்பெறும்; முயற்சியும் அறிவும் இணைந்த நிலையில் கடமை

களை ஆற்றினால்தான் குடிப்பெருமை உயரும். அவ்வாறு கடமைகளை ஆற்றுபவனுக்குத் தெய்வமும் முன்னின்று தொழிலாற்றும். தான் பிறந்த குடியை ஆண்மைக் குடியாக ஆக்கிக்கொள்பவனே 'நல்லாண்' எனப் பெறுவான்.

குடிப்பெருமையை நாடும் ஒருவன் உணவில் தன்னிறைவு பெறவேண்டும். உணவில் தன்னிறைவு பெறாதகுடி உயர்குடிமை அமைந்த குடியாக அமைய முடியாது. உணவுத் தன்னிறைவு இல்லையானால் வறுமை வரும். பிறனுடைய வாசலில் சென்று பிச்சையெடுக்கும் நிலை உண்டாகும். பிச்சையெடுப்பதற்கு நாணுதல் வேண்டும். இனி உணவில் தன்னிறைவு பெறாதவாறு இயற்கைக் கோளாறு முதலியன நேரின், மீண்டும் வழுவாது முயற்சி செய்து, உணவுத் தன்னிறைவை எய்துதற்குரிய நிலைமையை எண்ணி, இறப்பதை மேற்கொள்ளலாமாயினும் முடிந்தவரையில் பிச்சையெடுப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

குடிமைக்குரிய வரையறைப் பண்புகளுக்குக் கட்டுப்பட்டு நில்லாது, மனம்போன போக்கில் திரிவதே கயமை. கயமை யுடைவர் தாம் கேட்ட இரகசியங்களைப் பிறருக்குச் சொல்லும் இழிசெயலுடையவராவர். ஒரு சூழ்நிலை வந்தபோது, பிறருக்குக் காட்டிக்கொடுத்து அடிமையாக்கிவிடுவர். பிறர் நல்ல உணவும் நல்ல உடையும் கொள்வதைப் பார்த்தாலே பொறாமை கொள்வர். இவர்களே கயவர்கள். கயவர்களை நீக்கினாலே இற்பிறப்பு வளரும்.

இத்தகைய பண்புகளை வளர்க்கும் நிலையமே கலப்படமற்ற உயர்குடிமை நாகரிகம் மலர்வதற்குரிய நகர சுகாதார நிலையம் ஆகும்.

தொழிற்கூடங்கள்

இயல்பான அன்புப் பிணைப்பினால் மேலே சொன்ன மூன்று நிலையங்களும் தொழிற்படுவனவாதலின் அம்மூன்றும் மூன்று தனிநிலைகளில் நின்று தனிமனிதனின் அறப்பயிற்சியைச் செப்ப னிடுவனவாயின. தொழிற்கூடங்கள் அத்தகைய இயல்பான அன்புப் பிணைப்பினால் அமைவனவல்ல. தனிமனிதர்கள் தம்முள் அமைத்துக் கொள்ளப்பெறும் ஒப்பந்த அடிப்படையில் தொழிற் கூட வாழ்வு அமைகின்றது. இங்கே வேலை தருவோர், வேலை ஏற்போர் என்ற வேறுபாடு தவிர்க்க இயலாததாகின்றது. சமூக நிலையில் அமையும் ஏற்றத்தாழ்வுகளுக்குத் தொழிற்கூட அமைப்புகள் ஒருவகையில் காரணங்களாகின்றன.

தொழிற்கூடங்களைப் பொதுவாக ஏற்றத் தாழ்வுகளை உருவாக்கிச் சமுதாயச் சிக்கல்களைத் தோற்றுவிக்கும் நிலையங்களாகத்தான் கொள்ளவேண்டும் என அறிஞர்கள் சிலர் எண்ணுகின்றனர். ஆனால் இவைகளைக் குடும்பம், கல்விநிலையங்கள் போன்ற அறப்பயிற்சி நிலையமாக எப்படிக் கொள்ள இயலும் என வினவுகின்றனர்.

குடும்பத்தில் சிறிய அளவில் மேற்கொள்ளப்பெற்ற ஒரு அறப்பயிற்சி முறை இங்கேதான் முழு அளவில் விளக்கம் பெறுகிறது. அதற்குரிய பயிற்சியும் இங்கேதான் அமைகிறது. குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களுக்குப் பங்கீட்டு முறை அமையும்போது, பொதுமை நோக்கிலேயே பங்கீட்டு முறை அமைவதில்லை. உழைக்கும் உறுப்பினனுக்கு ஒருவகைச் சிறப்பு, உறுப்புக் குறைபாடுடைய உறுப்பினன் இருப்பின் அதற்கு ஏற்ற பங்கீட்டு முறை என ஒருவகைச் சிறப்புப் பங்கீடு அமைந்தது. ஆனால், அன்புப் பிணைப்பில் குடும்பம் அமைவதால் பங்கீட்டு முறையில் குறைபாடு வெளிப்படையாகத் தோற்றம் பெறுவது இல்லை. ஆனால் தொழிற்கூடங்களில் இவ்வாறான பிரிப்பு முறைகள் விரிவாக அமையவும் ஆராயப்பெறவும் சூழ்நிலைகள் உள்ளன.

தொழிற்கூடத்தில்தான் தனிமனிதன் தன் சிறப்புத் திறமையை வெளிக்காட்ட இயலும். சிறப்புத் திறமையை ஊக்கப் படுத்தும் வகையில் சிறப்பு ஊதியங்கள் அளிக்கப்பெற வேண்டும். சிறப்பூதியம் இல்லையானால் சிறப்புத் திறமை வெளிப்படாது போய்விடும். எனவே, தனிமனிதர்கள் பலர்கூடி இணைந்து தொழிலாற்றும்போது ஏற்றுக்கொள்ளும் தொழிற்பாகுபாடுகளினால் வேறுபாடும் சிறப்புத்தகுதிகளினால் வேறுபாடும் அமையும். நாளடைவில் ஒருசிலர் அடிமைகளாதலும், ஒருசிலர் ஆள்வோர்களாதலும் தவிர்க்கமுடியாத ஏற்றத்தாழ்வுகளாம்.

தனிமனிதன் சமூகத்தில் இணைந்து நிற்கும்போது அவன் சந்திக்கும் சூழ்நிலை என்ன? அவன் பயிற்சியில் மேற்கொள்ள வேண்டிய அறங்கள் யாவை? என்ற வினாக்களுக்கு விடை கிடைக்கும் தொழில் வேறுபாட்டையும், திறமை வேறுபாட்டையும் எவ்வாறு இணைந்து அமைத்துக் கொள்ளவேண்டும் என்ற அறப்பயிற்சியை ஒருவன் தொழிற்கூடங்களில்தான் பெறமுடியும்.

அற இயல் வகுக்கும் அடிப்படைக் கொள்கை ஒன்றுதான். தனிமனிதன் தன்னளவில் எல்லாவற்றானும் தன்னில்தானே முடியும் தனித்தலைமை முடிவு நிலையினன். அவன் பிற ஒருவனின் கருவியாகப் பயன் படுத்துதற்கு உரியன் அல்லன். அவன்

வேறொரு முடிவுநிலையை நோக்கிய கருவியாக, அடிமையாக நிற்பதற்குரியன் அல்லன் என்ற கொள்கையைத் திறம்பெறச் செயலாற்றுதல் வேண்டும்.

தனிமனிதன் பிற எந்த மனிதனையும் தனக்கு ஒரு கருவியாக, அடிமையாக அமைத்துப் பயன்படுத்திக் கொள்ளுதல் கூடாது என்பதே. தனிமனிதனின் தனித் திறமைகள் வெளிப்படுவதற் குரிய வாய்ப்புகளைத் தொழிற்கூடம் அமைத்துத் தருதல் வேண்டும். எந்த ஒரு தனிமனிதனும் தன்னுடைய தனித் திறமையை வெளிப்படுத்திக்கொள்ளும் வாய்ப்பினைப்பெறுதற்கு உரிமையுடையவனாக—அவ்வுரிமைகள் வழங்கப் பெறவேண்டும் திறமைகள் வெளிப்படுவதற்குரிய வாயப்பினை அனைவருக்கும் பாகுபாடின்றி வழங்குவதற்குத் தொழிற்கூடம் ஆவன செய்ய வேண்டும். தனித் திறமையின் வெளிப்பாட்டுக்குத் தக சிறப்புப் பங்கீடு காரணமாக உயர்வு, தாழ்வு முதலிய ஏற்றவிறக்கங்கள் அமையாதவாறு, தனிச் சொத்துரிமை குவியாதவாறு, அவ்வப் போது போக்கு வீடுகள் அமைத்துக் காப்பது தொழிற்கூடங் களின் கடமை.

சிறப்புத் தகுதி, சிறப்புப் பங்கீடு, தனிச் சொத்துரிமை பொதுச் சொத்துரிமை ஆகியவைகளை நெறிப்படுத்தி அனைத்தையும் இணைத்து உடன்கொண்டு செல்லக்கூடிய அற வழியினை உண்டாக்கி அவ்வழியில் தனிமனிதர்களை இயக்கி, பயிற்சி பெறச் செய்யும் நிலையமாக விளங்குவது தொழிற்கூடம் ஒன்றே. எனவே, தொழிற்கூடம் தன் கொள்கையில் வெற்றி பெறப் பாடுபாடும்போது, அதுவும் சமூக அறப் பயிற்சி நிலைய மாகவே அமைகிறது எனக் கொள்ளலாம்.

சமய நிறுவனங்கள்

ஒரு துறை சார்ந்த அறிவியற் கல்வியைப் பெற விரும்புபவர் அத்துறை அறிவியலில் சில அடிப்படைக் கருதுகோள்களை ஏற்றுக் கொள்ள வேண்டிய இன்றியமையாமை உண்டு. இது எல்லாவகையான அறிவியற்கல்விக்கும் பொதுவான கொள்கையே. அவ்வாறே அற இயற் கல்வியும் ஒருவகை அறி வியற் கொள்கையே. அவ்வகையில் அற இயற் கல்விக்கும் சில இன்றியமையாத கருதுகோள்கள் அடிப்படைத் தேவைகளாக அமைகின்றன. அவைகளை ஏற்றுக் கொள்ளாத வகையில் அற இயற் கல்வியைப் பெறுதல் இயலாததாகும்.

அற இயற் கல்வியானது மூன்று கருதுகோள்களை, ஏற்றுக் கொள்கிறது. அவைகளை முறையே காணலாம்:

(1) உயிர் என்ற அழியாப் பொருள் ஒன்று உண்டு:பல உறுப்புகள் சேர்ந்தமைந்த ஒரு பிண்டம் அல்லது தொகுதி என்பதாக நாம் தனிமனிதனை எண்ணிவிட முடியாது. காணும் உடலுக்கு அப்பால் அதனை உள்நின்று இயக்கும் வேறுபொருள் ஒன்று அங்கே இருக்கிறது என்பதை அனைவரும் ஒப்புவர். வாழும் பொழுது அப்பொருள் அந்த உடலில் இருக்கிறது. செத்த பொழுது அப்பொருள் அவ்வுடலை விட்டு நீங்கிவிடுகிறது என்ற உண்மையையும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

உயிருக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பு காலத்தாலும் இடத்தாலும் வரையறை செய்யப் பெறுகிறது. எனவே, உயிர் உடலில் ஒரு குறிப்பிட்ட கால எல்லை வரையில்தான் தங்குகிறது. காலத்தாலும் இடத்தாலும் குறுகிய எல்லையை உடைய உயிர், காலத்தையும் இடத்தையும் கடந்த நிலையில் அமையும் அற இயல் குறிக்கோளை எவ்வாறு அடையமுடியும்? காலத்தையும் இடத்தையும் கடந்த அற இயல் குறிக்கோள் வாழ்வை ஓர் உயிரானது, பல பிறவிகள் எடுத்து, அறப்பயிற்சியை மேற்கொண்டொழுகி, மெல்ல மெல்லக் கால இட வரையறைகளை கடந்து நிற்கும் தகுதியைப் பெறுகிறது; பின்னர் கால, இடவரையறைகளைக் கடந்த அற இயற் குறிக்கோள் வாழ்வை அடைகிறது. எனவே, ஒரு தனி உயிரானது பல பிறவிகள் எடுத்து இறுதியில்தான் அற இயற் குறிக்கோள் வாழ்வைப் பெற முடிகிறது என்ற கருத்தை நாம் ஒரு கருதுகோளாக ஏற்க வேண்டியிருக்கிறது.

அழியாத தன்மையுடைய உயிர் என்ற ஒன்று உண்டு என்று ஏற்றுக் கொள்வதோடு அது அறிவுடையது, தற்சுதந்தரமாய்ச் செயலாற்றும் ஆற்றல் உடையது எனவும் ஒப்புதல் வேண்டும். அறவாழ்வு அறிவியலை அடிப்படையாகக் கொண்டது. அறிவுடையவன்தான் செயலின் நன்மை தீமையை உணர்ந்து செயலாற்ற முடியும். அறிவினால் நல்லது இதுவெனத் தெரிந்தபின் செயலாற்றும் உரிமையும் வலிமையும் இருந்தால்தான் அறவாழ்வைச் செயற்படுத்த முடியும். அறிவுக் குறைபாடு உடையவனும் தானே தேர்ந்தெடுக்கும் சுதந்தரமில்லாதவனும் செய்யும்செயல்களுக்கு அவனைப் பொறுப்பாளனாக ஆக்கமுடியாது. எனவே, அறிவுடைமை, தேர்ந்தெடுக்கும் சுதந்தரம், செயலாற்றும் வன்மை என்ற மூன்றும் உயிரின் தன்மைகளாக நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

(2) கடவுள் என்னும் கருதுகோள்: மனித வாழ்வின் நெடும் பயணம் என்பது நிறைவற்ற வாழ்விலிருந்து நிறைவு

பெற்ற வாழ்வுக்குச் செல்லுதல் என்பதே. மெல்ல முன்னேறுதல் என்பதை ஒத்துக்கொண்டால் அற இயல் வளர்ச்சிப் படிநிலைகள் அமையும்; அவைகளுக்கேற்ப மக்களும் அமைவர். நிறைவு அற்ற நிலையிலிருந்து நிறைவு உற்ற நிலை வரையில் பலவகையான படிநிலைகளைச் சார்ந்த மக்கள் இருப்பர். நிறைவுற்ற அற இயல் குறிக்கோள் வாழ்வை ஒருவன் அடைந்து நின்றபோது, நிறைவுற்ற அறவாளனாகிய அவன் பெறும் பரிசுப் பொருள் யாது? நிறைவுற்ற அறவாளனாகிய அவனுக்கு நிறைவுற்ற பேரின்பத்தை மணிமுடியாக அமைத்து வாழ்வை நிறைவுபடுத்துவதற்கு ஒரு பொருள் தேவை. அப் பொருளே பரம்பொருள், கடவுள் என வழங்கப்பெறுகிறது. அறவியற் படிமுறைகள், பிறப்பு நிலைகள், பயிற்சியும் பரிசும், ஆகிய இவைகளை முறையாக வகுத்து ஒழுங்குபெற அமைத்த ஒரு பொருள் இருக்கவேண்டும். நிறைவற்ற வாழ்வும் குறை அற்ற அறிவும் உடைய உயிர்கள் தாமே இத்தகையஅட்டவணை முறையை அமைத்துக் கொள்ள இயலாது. எனவே, பேரறிவு கொண்ட பேராற்றலுடைய பரம்பொருள் ஒன்று தேவை. அதுவே கடவுள். எனவே கடவுள் உண்டு என்று அற இயற் கல்வி ஒப்புக்கொள்கிறது.

(3) உலகம் அறிவியல் அடிப்படையில் அமைக்கப்பெற்றது: அறவியல் வாழ்வுப் பயிற்சியைத் தனிமனிதர்கள் இவ்வுலகில் மேற்கொண்டு பயில்கிறார்கள். அற இயற் பயிற்சிக்கு நிலைக் களமாக இருக்கும் இவ்வுலகம் அற இயல் குறிக்கோள் வாழ்வைத் தனிமனிதனுக்கு உணர்த்தக்கூடிய வாய்ப்புகளைப் பெற்றதாக அமைகிறது. அற இயல் குறிக்கோள் வாழ்வின் பெருமைகளை யெல்லாம் இவ்வுலகியல் வாழ்வின் மூலமாகவே ஒருவன் தெரிந்து கொள்ள வேண்டிய சூழ்நிலை அமைந்திருப்பதால் உலகம் மனிதர்களுக்கு அறிவியல் அடிப்படையில் அற இயலை விளக்கக் கூடியதாக அமைந்திருக்கிறது என்பது உண்மை. அறிவியல் அடிப்படையில் அற இயலை விளக்க வேண்டுமானால் உலகமே அறிவியலின் அடிப்படையில் அமைக்கப் பெற்றதாக இருக்க வேண்டும்.

சுருங்கக்கூறின், உலகமும் ஒரு குறிக்கோளை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்றும், அறிவியலின் முடிவுதான் அதன் குறிக்கோள் என்றும், அறிவியல் சார்ந்த முடிந்த நன்மை என்று சொல்லலாமாயினும் அது ஒரு முழுமையான, நிபந்தனை யற்ற அறத்தின் முடிநிலை என்றே கூறிவிடலாம் என்றும் நாம் கொள்ளலாம். இவ்வகையில் உலகமும் அறிவின் அடிப்படையில்

அமைக்கப்பெற்றுள்ளது என்ற கருத்தையும் நாம் கருது கோளாகக் கொள்ளவேண்டும்.

மேலே குறிக்கப்பெற்ற மூவகைக் கருதுகோள்களும் ஆராய்ந்து தெளிந்து உண்மையானவை என நம்மால் ஏற்றுக் கொள்ளப் பெற்றவைகள் அல்ல. அவைகளைப் பொய்யானவை என ஒதுக்கிவிடமுடியாது. அவைகளை ஏற்றுதான் அறப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

இங்கே கூறப்பெற்ற கருதுகோள்களை இயன்ற அளவில் தனிமனிதர்களின் உள்ளத்தில் பதியுமாறு செய்யும் பணியை மேற் கொள்பவைகளே சமய நிறுவனங்கள். அறிவாராய்ச்சியின் முடிவில் ஏற்றுக்கொள்ளும் நிலைமை இன்மையால் மேலே குறிப்பிடப் பெற்ற கருதுகோள்களைப் பற்றி அடிக்கடி ஐயம், உயிர் முதலியன உண்டா என்ற வினா எழுதல் இயல்பு. அவைகளை ஏற்க வில்லையானால் அற இயற் பயிற்சி இயலாததாகும். எனவே, மூவகையான கருதுகோள்களின் பல வகையான இயல்புகளையும் எடுத்து விளக்கி மனிதர்கள் உள்ளத்தில் அவைகளுக்கு ஒரு நிலை யான இருப்பிடத்தை உண்டாக்க வேண்டிய பணி அற இயல் வாழ்வுக்கு ஒரு இன்றியமையாத பணி. அதனைத் திறம்பெற நடத்துவதற்கெனத் தோன்றியவைகளே சமய நிறுவனங்கள்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் சமய நிறுவனம் என்பது திருக்கோயில்தான். திருக்கோயில்களை ஒட்டித் திருமடங்கள் தோன்றின. குடும்பம், கல்வி நிலையம், தொழிற்கூடம் போன்றவை சமூக இயல் அறப்பயிற்சியை மக்களுக்கு முறையாக அளிக்கச் சோர்வுற்ற காலங்களில் திருக்கோயில்களே அப் பயிற்சியை முறையாக அளித்தன என்று கூறினால் அது தவறாகாது. சமுதாய ஏற்றத் தாழ்வை நீக்குவதற்குப் பல வகையான நெறிமுறைகளை வகுத்தது திருக்கோயிலே. ஆண்டான்-அடிமை, இருப்பவன்-இல்லாதவன் என்று இவ்வாறான வேறுபாடுகள் திருக்கோயிலில் பேசப்பெறாத சூழ்நிலையைத் திருக்கோயில் தோற்றுவித்தது. திருக்கோயிலில் இருக்கும் இறைவனுக்கு அனைவரும் அடிமைகளே. இறைவனை நோக்கும் போது அவன் ஒருவனே செல்வன். ஏனைய அனைவரும் வறியவர் களே என்று இவ்வாறான சமநோக்குச் சமுதாயக் கல்வியைத் திருக்கோயில் தனிமனிதனுக்குக் கொடுத்தது. முடியாட்சியில் அமைந்த அரசனும் சாதாரணத் தனிமனிதனும் திருக்கோயிலில் சமமானவர்களே. தனிமனிதனாலோ, சமூகத்தாலோ அளிக்கப் பெற எளிமையில் இயலாத கலைகள் பலவற்றைத் திருக்கோயில்

வளர்த்தன. இவ்வகையில் திருக்கோயில் ஒரு பல்கலைக் கழகமாகவே திகழ்ந்தது என்றால் மிகையாகாது.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பின்னர் திருக்கோயில் சமுதாய வளர்ச்சிப் பணியின் மையமாகத் திகழ்ந்தது. கோயி லில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் என்ற முதுமொழி வருவதற்கு ஏற்ற வகையில் திருக்கோயில் கலைகளை வளர்க்கும் கலைக்கூடமாகவும், சாதிபேதம், உயர்வு தாழ்வு முதலியன இல்லாத சமநோக்குச் சமதர்ம சமுதாயத்தை உண்டாக்கி வளர்க்கும் சமூக அற இயற் பயிற்சிச்சாலையாகவும் திகழ்ந்தது எனக் கொள்ளலாம்.

நாடு

சமூக அற இயற் பயிற்சி நிறுவனங்கள் எல்லாவற்றையும் வரையறை பெற்ற நிலையில் செயற்படச் செய்யும் ஆற்றல் வாய்ந்த நிறுவனம் நாடு. ஏனைய நிறுவனங்களையும் அடக்கி யாளும் ஆணை வலிமை உடையது நாடு. குடும்பம் முதலாக அமைந்த எல்லா நிறுவனங்களும் சமூக அறப் பயிற்சி நிலையங் கள் என்ற பெயரிலேயே அமைந்தவை. 'நாடு' என்ற ஒன்று மட்டும் அரசியல் அமைப்புடைய நிறுவனம் என்ற பெயரைப் பெறுகிறது. தனிமனித அறக்கோட்பாடுகளும் சமூக அறக் கோட்பாடுகளும் நாட்டின் கைகளில் ஒப்படைக்கப் பெற்றவுடன் அவைகளுக்குச் சட்டங்கள் என்ற பெயர் அமைந்துவிடுகிறது சட்டங்களை வலிமையாக மக்கள்மேல் திணிக்கவும், ஏற்காவிடில் தண்டிக்கவும் ஆற்றல் பெற்ற ஒரு நிறுவனமே நாடு.

தனிமனிதர்களாலும், குடும்பம் முதலிய சிறிய அளவிலாத சமூகநல நிறுவனங்களாலும் ஏற்றுச் செய்யமுடியாத பொதுமைப் பணிகளை நாடு தானே மேற்கொள்ளுகிறது. காவல், பண்ட மாற்று அமைப்பினுக்கு உதவும் நாணய அமைப்பு முறை, பிறநாடுகளுடன் தொடர்பு கொள்ளுதல், சட்டம் ஒழுங்கு ஆகியவை பேணல் முதலியன நாட்டின் நேர்ப்பார்வையில் கவனிக்கப் பெறுகின்றன.

ஒரு நாட்டுக்கு அழிவு வருகிறது என்றால் அது, அந்த நாட்டில் வாழ்ந்த மக்கட் சமுதாயத்தின் அடிப்படையான அறக் கட்டடம் அழிகிறது என்பதுதான் பொருள்.

தனிமனிதன் தன்னுடைய பலவகை ஆறாமைக் கூறுகளை யும் உணர்ந்து கொள்ளவும், தன்னுண்மை நிலையினை அறிந்து அனுபவிக்கவும் அவனுக்கு எல்லா வகையான பாதுகாப்பையும்

தந்து அவனை வாழவைப்பது நாடு எனக் கொள்ளுதல் வேண்டும். சமூகத்தில் எல்லா மனிதர்களும் எல்லா வாய்ப்பு களையும் பெற அவர்களை உரிமையுடையவர்களாக ஆக்குவதும் உரிமை யுடையவர்களாக ஆனபிறகு உரிமைகளை அளித்து, அவர்களை வளரவும் வாழவும் அமைப்பதும் நாட்டின் அடிப் படைப் பணிகள்.

நாடு (state) என்ற வழக்கானது பொதுவாக மக்கட் சமுதாயம் வாழும் நிலைக்களமாகிய இடத்தைக் குறித்தாலும், ஆங்கில வழக்காற்றை உடன்கொள்ளும்போது ஆட்சியமைப் பினையும் உடன்கொண்டதாக அமைகிறது. முடியாட்சி நாடு குடியாட்சி நாடு என்ற வழக்காறுகள் குறிக்கும் பொருள்களை உளங்கொள்ள வேண்டும்.

திருவள்ளுவர் அரசின் அங்கங்கள் ஆறு எனக் கூறி, 'அரண் என்ற அங்கத்தினுள் 'நாடு' அமைவதாக அமைத்துக் கூறுகிறார் என்று அறிஞர்கள் கூறுவார்கள். 'நாடு' என்ற சொல்லின் மூலம் ஒருவகை வெற்று நிலப்பரப்பை மட்டும் கருதினார் திருவள்ளுவர் என்று கொள்ள இயலவில்லை. இருபுனலும், மலையும், உருபுனலும், வல்லரணும் ஆகிய உறுப்புகளைக் கொண்டதுதான் நாடு என்றாலும் அது தனக்கென உரித்தாய சில தனிமைப் பண்புகளைப் பெற்றிருக்கிறது என்று குறிப்பிடுக் கிறார்.

ஏனைய நாட்டு மக்கள் மிகுதியாக ஒரே நேரத்தில் வந்து குடியேறும்போது அச்சுமையைத் தாங்கிக்கொள்ளும் ஆற்றல் உடையது நாடு, அரசனுக்குத் தரவேண்டிய இறைப்பொருள் முழுதையும் தரவல்லது நாடு என்று சொல்லும்போது பிறநாட்டு மக்கள் குடியேறும்போது அவர்களையும் தழுவி இணைத்துக் கொள்ளும் மனநிலையையும், அதே சமயத்தில் அரசுக்கு இறைப் பொருள் செலுத்தும் கடமையுணர்வுடன் கூடிய மனநிலையையும் அங்குள்ள மக்களுக்கு அளிக்கும் தகுதியைப் பெற்றிருக்கிறது 'நாடு' என்று கொள்ளவேண்டும்.

நாடு என்றோ, காடு என்றோ, மேடு என்றோ, பள்ளம் என்றோ சொல்லப் பெறும் நிலையில் நிலம் இருந்தாலும் அது நாடாக அல்லது காடாக அமைந்திருப்பதற்கு அந்தநிலம் காரண மன்று; அங்குள்ள மக்கள்—ஆடவர் நல்லவராயின் நிலமும் நன்னிலம் எனப் பெயர்பெறும் என்று வரும் புறநானூற்றுப் பாடலின் மூலம் ஒளவையார் கூறுவது 'மக்களால் நிலம் நற்பெயர் பெறும்' என்பது. ஆனால் திருவள்ளுவர் கூறுவது நாட்டினால்

மக்கள் நலம் பெறுதல் இயலும். இணைந்து வாழும் இயல்பையும் கடமை தவறாச் செயலுறுதியையும் மக்களுக்கு அளிக்கும் ஆற்றல் நாட்டுக்கு உண்டு என்கிறார்.

நாடு என்பது நிலத்தை மட்டுமே குறித்தாலும், ஆட்சியையும் இணைத்துக் குறித்தாலும் அது பலரும் சேர்ந்து இணைந்து நிற்பதால் உருவாகும் பொதுமை நிலையம் எனக் கொள்ளல் வேண்டும். பலரும் இணைந்து நின்றாலும், அவர்கள் தனி நிலையில் தனிமைப் பண்பை இழக்காமல் இணைந்து நிற்பதால் எல்லாப் பயனையும் அந்த நாடு பெற்றுவிட முடியாது. 'நாடு' என்ற சொல்லால் கருதப்பெறும் ஒன்று, பல தனிமனிதர்கள் தத்தம் தனிமையை இழந்து கலந்து நின்றபோது உருவாவது என்று நாம் கருதுமாறு விளக்கம் அமைக்கிறார் திருவள்ளுவர்.

'எல்லா நன்மைகளும் அமைந்திருந்தாலும்
வேந்து அமைவு இல்லாத நாடு பயன் இல்லாததாகும்'

என்று குறிப்பிடுகிறார். 'வேந்து அமைவு' என்பதற்கு 'வேந்தன் அமையாத' என்று உரைகண்டார்கள். 'வேந்தனும் வேந்து கெடும்' என்ற வழக்கை நோக்கிப் பார்த்தால் எல்லாத் தனி உறுப்புகளும் இயையும்போது தத்தம் தனித் தன்மைகள் பொதுத்தன்மையில் அமைந்து போக, பொதுமையே விளங்குமாறு இயைகின்ற ஒரு வகைஉள்ளார்இணைப்பைத்தான் திருவள்ளுவர் 'வேந்துஅமைவு' என்று குறிப்பிட்டார். நிலமும், நிலத்தின் உறுப்புகளும், தனி மனிதர்களும் தத்தம் தனிநிலை கெட இணையும் ஒருவகை இணைப்பைத் திருவள்ளுவர் 'வேந்து அமைவு' என்று குறிப்பிடு கிறார். இத்தகைய இணைப்பினால்தான் 'நாடு' என்ற பெயர் உண்டாகிறது. மனிதர்களே இல்லாத நீர், நிலம், மலை முதலிய எல்லாம் நிறைந்த இடத்திற்கு 'நாடு' என்ற பெயர் இல்லை. நிலம் முதலியவை இல்லாமல் மனிதர்கள் சேர்ந்திருப்பதனா லேயே 'நாடு' என்ற பெயர் வராது. தனித்தனிப் பெயர்களால் குறிக்கப்பெறும் எல்லாம் இணைதல் வேண்டும். எல்லாருடைய தனிப் பெயர்களும் அழிய, 'நாடு' என்ற பொதுமைப் பெயர் சமூக அறப் பயிற்சி நிலையமாக உருப்பெற்று விளக்கமுறுகிறது எனக் கொள்ளவேண்டும்.

பல்பொருள்களும் மேலே குறிப்பிட்டவாறு இணையும்போது இணைந்த உறுப்புகளுக்கு எத்தகைய பயன் கிடைக்கும்? எல்லா உறுப்புகளின் நன்மையும் இணைந்த பொதுநன்மை என்று அமையும். பின்னர் அதுவே தனிமனிதர்களுக்கும் பயனாக அமையும் என்று கொள்ளலாம்.

உல்லாசப்பயணம் செய்யும் மாணாக்கர்கள் ஐம்பதுபேர் ஒரே பேருந்தின் மூலம் ஓர் இடத்தை அடைகிறார்கள். அவரவர்கள் தாம்தாம் கொண்டுவந்த சிற்றுண்டியினை ஓர் இடத்தில் மொத்தமாக இணைத்து, பின்னர் அனைவரும் பிரிவு செய்து உண்கிறார்கள், உப்புமா கொண்டுவந்தவனுக்குப் பூரியும் கிடைக்கிறது. பூரி கொண்டு வந்தவனுக்கு உப்புமாவும் கிடைக்கிறது. இங்கே ஒரு புதுப்பயன் கிடைக்கிறது என்பது உண்மை. இதுதான் இணைந்து நின்றதன் பயனா?

தனிமையில் இல்லாத ஒன்று, இணைந்து பொதுமையில் நின்றபோது தோன்றும். அதுவே இணைந்து நின்றமையால் கிடைக்கும் அரிய பயனாகும். இணைந்து நிற்றல் என்ற ஒன்றினாலன்றி, வேறு எவ்வகையாலும் தனிமனிதன் அந்த அரிய பயனைப் பெற இயலாது என்பதுதான் அதன் கருத்து. இதனைத் திருவள்ளுவர் மிக நுட்பமாக அமைத்துக் கூறுகிறார்.

'நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல
நாட வளந்தரு நாடு'

என்பது திருக்குறள்.

'நாடே வளந்தரும் நாடு; நாடு அல்ல' என்றார். தேடி முயன்றால் முயன்ற அந்நிலைக்கு ஏற்ற வளப்பத்தைத் தரும் நாடு, நாடு அன்று என்று கூறுகிறார். 'நாடா வளத்தன நாடு' என்பதற்கு முயற்சி செய்து தேடாமலே தரும் வளத்தை உடைய நாடுதான் நாடு என்பது உரை. முயற்சி செய்யாமலேயே பயன் தருவது என்பது எவ்வாறு இயலும்! மனித முயற்சியால் பெறும் பயன், முயற்சியின் பயனேயொழிய நாடு தரும் வளம் என்று கூறமுடியாது. தனிமனிதன் எவ்வளவு முயன்றாலும் அவனாற் பெறமுடியாத ஒன்றைத் தரும்போதுதான் அது நாடு தந்த வளம் என்பதாகும். எனவே, தனிமனிதர்கள் சமூகமாக, நாடாக இணைந்து நிற்கும்போது—பொதுமையில் நிற்கும்போது பொதுமையின் அழுத்தத்தால் விளையும் பொதுப் பயன் ஒன்று உண்டு. அதனைப் பொதுப் பயன் என்று சொல்வதன் காரணம் அது அனைவருடைய அனுபவத்துக்கும் உரியது. ஆனால் அது சமூகத்தினுடைய அல்லது நாட்டினுடைய தனிப்பயனே ஆகும். இப்பயனை, தனிமனிதர்கள் இணைந்து நின்றுதான் பெற முடியுமேயன்றி, அவர்கள் தனித்தனியாக எவ்வளவு முயன்றாலும் இந்தப் பொதுமைப் பயனைப் பெறமுடியாது. எனவே, சமூகம் அல்லது நாடு தன் உறுப்பினர்களுக்கு ஒருவகைத் தனிப் பயனைத் தருகிறது என்று கொள்ளுதல் வேண்டும்.

முடிவுரை

குடும்பமும் சமூக நிறுவனங்களும் என்ற இத்தலைப்பில் சமூக இயல் அறப்பயிற்சி நிலையங்கள் ஆறு உண்டு என எடுத்துரைக்கப் பெற்றது. அவை முறையே குடும்பம், கல்வி நிலையம், குடிமைப்பயிற்சி நிலையம், தொழிற்கூடம், சமய நிறுவனம், நாடு என்பனவாம், இவையனைத்தும் தனிமனிதனை சமூக இயல் அறவாளனாக ஆக்கி, அவன் காலத்தையும் இடத்தையும் கடந்த எல்லையற்ற அற இயல் வாழ்வினை அறிந்து நுகர்ந்து, தன்னை மேம்படுத்திக் கொள்ளவும், தன்னுண்மை நிலையினை அறிந்து துய்க்கவும் உரியவாறு நெறிப்படுத்தும் சமூக அற இயல் பயிற்சி நிலையங்களாம்.

(2) உரிமைகள், கடமைகள், நல்லொழுக்க நற்பண்புகள்

உரிமையின் இயல்பு

ஒரு மனிதன் தக்க விதிகளை எடுத்துக்காட்டி, இவ்விதிகளின் அடிப்படையில் யான் இவைகளைப் பெற உரிமைபுடையவன் என்று கூறும்போது, உரிமை என்றால் என்ன என்பதை நாம் புரிந்துக் கொள்ளலாம். சட்டத்தின் துணைக்கொண்டு ஒருவன் ஒன்றை அடைய முற்படுவதே உரிமை என்பதாகிறது. இங்கே சட்டம் அல்லது விதி என்று கூறப்பெற்றது அரசியல் சட்டமாக வும் அமையலாம் அல்லது அறநியதிச் சட்டமாகவும் அமைய லாம், இங்கே ஓர் உண்மையை நாம் மறந்துவிடலாகாது.

அறவழியில் முழுமையாக ஒத்துக் கொள்ளப்பெற்ற சில உரிமைகளைச் சட்டத்தின் அடிப்படையில் உரிமைகளாகப் பெறமுடியாது. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும் என்ற முறைமைப்படி கல்வியைக் கற்றுக் கொடுத்த ஆசிரியன் தன்னிடம் படித்தவர்களெல்லாம் தன்னிடம் பணிவாக இருக்க வேண்டும் என்பதை அறம் ஒத்துக் கொள்ளலாம். ஆனால், அறக் கொள்கையை எடுத்துக்காட்டி ஒருவன் அத்தகைய உரிமையைப் பெறமுடியாது. பத்து மாதம் சுமந்து பெற்ற தாய், தன்னுடைய குழந்தையிடம் எல்லா வகையான உரிமைகளையும் கொண்டாடு வதற்கு அறம் அனுமதிக்காது. ஆனால், அறம் அனுமதிக்கும் எல்லாவற்றையும் சட்டம் அனுமதிக்கலாம். தன் குழந்தையைக் கொல்லவோ, பணம் வாங்கிக்கொண்டு பிறருக்கு விற்கவோ, தகுந்த உணவு கொடுக்காமல் பட்டினி போட்டு வருத்தவோ, தாய்க்கு உரிமையில்லை. எனவே, உரிமை என்பது ஒருவன் தன்னுடைய தகுதியை அனைவராலும் ஒத்துக்கொள்ளப்பெற்ற ஒரு சட்டத்தால் நிலைநிறுத்திக் கொள்வதேயாகும்.

மனிதன் தன்னிலையில் தனித்து நிற்கும்போது அவனுக்கு எத்தகைய உரிமையும் இல்லை. மனிதன் ஒருவன் ஒரு காட்டில் தனித்துத் திரிகிறான் அல்லது ஒரு தனித் தீவில் இருக்கிறான். அவன் பெறவேண்டியதாக உள்ள உரிமை ஏதும் இல்லை. யாரிடம் சென்று கேட்டு, அவ்வுரிமையைப் பெறப்போகிறான் அதுவும் இல்லை. தனியாக இருப்பதால் அவனுக்கு எல்லா உரிமைகளும் இருக்கின்றன எனப் பொதுவாகக் கருதலாம்

தன்னைப் பெற்றவர்கள் ஏன் என்னைத் தனியாக விட்டார்கள் என்று அவன் நினைத்தால் அல்லது நான் என்னை ஒத்த இன்னொரு மனிதனை அடைந்து அவனோடு இணைய வேண்டும் என்று அவன் நினைத்தால் அந்நினைவின் அடிப்படையில் அவன் சில உரிமைகள் உண்டென எண்ணலாம். எனவே, உரிமை என்பது சமுதாயத்தை உள்ளிட்டது எனக் கொள்ளவேண்டும்.

உரிமையும் சமூகமும்

பொதுமை நலனை அடிப்படையாகக் கொண்டுதான் உரிமை வழங்கப்பெறுகிறது. உரிமை என்பது பொதுவாகஒரு தனிமனிதன் சில பொருள்களை அடையத் தகுதியுடையவனாக, ஏற்புடைய வனாகத் தன்னை நிலைநாட்டிக் கொள்வதுதான் என எண்ணுவோமானால், அவனுக்கு அத்தகுதியைச் சமுதாயம் வழங்க முன்வரும்போது, அத்தனிமனிதனுடைய நன்மையை மட்டுமே கருத்தில்கொண்டு அவ்வுரிமை வழங்கப் பெறுதல் இல்லை; அவன் சார்ந்திருக்கும் சமுதாயத்தின் உறுப்பினர்களாக விளங்கும் அனைவருக்கும் பொருந்துவதாகிய பொதுநன்மையைக் கருத்திற் கொண்டுதான் அவ்வுரிமை அவனுக்கு வழங்கப் பெறு கிறது. ஒரு பெரிய பணக்காரன் தன்னுடைய பணத்தால் பொருளை வாங்கும் உரிமையைப் பயன்படுத்தி, அவன் வாழும் ஊரில் உள்ள நிலப்பகுதி எல்லாவற்றையும் வாங்க முற்படுகிறான். பணத்தால் அவன் பெறவேண்டிய உரிமையை, அவ்வூர் மக்களின் பொதுமை நன்மையை உளங்கொண்டு பாதிக்கும்போது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் அவன் நிலம் வாங்கக்கூடாது என அவன் உரிமை மறுக்கப் பெறுகிறது.

உரிமையை வற்புறுத்திப் பெறாமை—இருவகை

உரிமை பெறுவது ஒருபுறம் இருக்க, பெற்ற உரிமையைக்கூட ஒருசிலர் பயன்படுத்தாமலிருப்பதையும் நம்மால் பார்க்க முடிகிறது. இவ்வகையில் இரண்டு பிரிவுகள் உண்டு. ஒருவன் தன்னுடைய நலனைக் கருத்திற்கொண்டே தன்னுடைய உரிமையைப் பயன்படுத்தாமலிருப்பதும் உண்டு. ஒரு சமுதாயம் தன்னுடைய உறுப்பினர்கள் நான்கு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்ற உரிமையை வழங்கியிருக்கிறது; நான்கு பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும் உரிமை இருக்கிறது என்பதற்காக அவ்வுரிமையை எல்லா வகையாலும் வலியுறுத்த விரும்பாமல், ஒரு திருமணத்துடனேயே அச்சமூகத்தில் வாழ்பவர்களும் உண்டு. அவன் நான்கு திருமணம் செய்து

கொள்வதால் பொதுநலம் கெட்டொழியப் போவது இல்லை. நான்கு திருமணத்தால் தன்னுடைய வாழ்வில் துன்பம் பெருகும் என நினைத்து அவன் ஒரு திருமணத்துடன் நின்று, ஏனைய மூன்று திருமணம் செய்துகொள்ளும் உரிமையை வற்புறுத்தாம லேயே இருக்கலாம்; இது ஒரு வகை.

இரண்டாவது வகையானது, பொதுநன்மையைக் கருத்திற் கொண்டது. ஒருவன் தன் உரிமையை வலியுறுத்தினால் அது பொதுநலனுக்குப் பொருந்தாது என நினைத்து, பொது நலனுக்குப் பொருள் தராத தனி உரிமையை ஒருவன் வற்புறுத்திப் பெறாது விட்டுவிடுதலும் உண்டு. போக்குவரவுத் துணை களாகிய வண்டி, கார் முதலியன போவதற்குரிய வழியில்லாத சிற்றூர் ஒன்றில் பொதுநலன் கருதி போக்குவரவுப் பாதை அமைக்கப் பெறுகிறது; அப்பாதையின் அமைப்புக்குத் தனி மனிதன் ஒருவன் தன்னுடைய உரிமை நிலத்தில் சிறு துண்டுநிலம் இழக்க வேண்டிவருகிறான். அந்த நிலம் அவனுக்கு உரிமை உள்ள நிலம். என் நிலத்தில் பாதை அமையக்கூடாது; என் நிலத்திற்கு அப்பால் பாதையை அமைத்துக் கொள்ளுங்கள் என்று கூறித் தன் உரிமையை நிலைநாட்ட முயலலாம். சட்டத்தின் துணைக் கொண்டு அதனை அவன் நிலைநாட்டலாம். இந்த ஒரு சிறு நிலத்துக்காக நாம் நம்முடைய உரிமையை நிலைநாட்ட முற் படுவோமானால் இவ்வூர் மக்கள் அனைவருடைய பகைமையும் நமக்கு உண்டாகும். அப்படியே நிலைநாட்டினாலும், அவ்வுரிமை மிகச் சில நாள்கள்தாம் தங்கும். பாதையை வளைத்துப் போட்டாலும்கூட, நாளடைவில் மக்களனைவரும் வளைந்துச் சுற்றிச் செல்லாமல் குறுக்கு வழியை மேற்கொள்ளும்போது வலிமையே உரிமை என்பதாக அமைந்து, உரிமை பறிக்கப்பெற்ற நிலைதான் உண்டாகும் என்றிப்படிப்பட்ட சிந்தனைகளை அமைப்பதன் மூலம் அவன் பொதுநலனுக்காகத் தன் உரிமையை நிலைநாட்டாமல் விட்டுக் கொடுத்துவிடுவதும் உண்டு.

உரிமையை வலியுறுத்த எண்ணுவது இயற்கை. ஆனால், உரிமையை வலியுறுத்தாமல் பிறருக்காக விட்டுக்கொடுக்கும் போது அது 'தியாகம்' என்ற அருங்குணமாக அமைகிறது. உரிமையை விட்டுக்கொடுக்கும்போதும் பொதுநன்மையைக் காரணமாகக் கொண்டு விட்டுக்கொடுக்கும்போது தான் அது சிறப்புப் பெறும். உணர்ச்சியின்மையாலோ, திறமையின்மை யாலோ ஒருவன் தான் பெறவேண்டிய உரிமையை வலியுறுத் தாமல் இருப்பது விட்டுக்கொடுத்ததாக ஆகாது. அது ஒருவன்

வாழ்வியற் குற்றமே. எடுத்துக்காட்டாக ஒன்றைக் காணலாம். இந்தியாவின் நிலப்பரப்பை அண்டை நாடுகள் தம்முடையதாக ஆக்கிரமிப்புச் செய்யும்போது, பொதுநன்மை, உலகப் பொது நன்மை என்று கருதி விட்டுக்கொடுப்பது கோழைத்தனமானது. இதனை,

> 'உரிமை மேல் ஆண்மை பாராட்டார் சாந்தம்
> பெருமையில் பிணத்தில் பிறந்ததோர் கீதம்'

என்று, மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம்பிள்ளை கூறுவார்.

வலியுறுத்தும் உரிமை என்ற ஒன்று இருப்பது பொதுவாக எல்லாவற்றுக்கும் நல்லதுதான். ஆனால், உரிமையை எங்கே எப்போது வலியுறுத்தவேண்டும், தவிர்க்க வேண்டும் என்று அறிவதுதான் மனிதனின் சிறந்த அறமாகும், குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியில் தங்கள் உரிமையை எப்போது வலியுறுத்தவேண்டும், எப்போது வலியுறுத்தக்கூடாது என்பதை நல்லொழுக்க முடையவர்கள் தம் உள்ளுணர்வினாவிலேயே உணர்ந்து, கொள்வர் என்பது அறிஞர் கொள்கை. ஆயினும், அவ்வப் போது வந்து பொருந்தும் சூழ்நிலையை உள்ளத்துக்கொண்டு உரிமையை வலியுறுத்துவதால் வரும் நன்மையையும், தவிர்ப்ப தால் வரும் நன்மையையும் இணைத்துப் பார்த்து, எதை மேற் கொள்வது இப்போதைக்கு ஏற்புடையது என்று நம் அறிவால் நாம் ஆய்ந்து முடிவு செய்யலாம்.

மனிதன் தன்னியல்பால் எந்த ஒன்றையும் வற்புறுத்திப் பெறுவதற்குரிய உரிமை இல்லாதவன். சமூகம் சில உரிமைகளைத் தன் உறுப்பினர்களுக்கு வழங்குகின்றது. அத்தகைய உரிமைகளை ஏற்று அனுபவிப்பதன் மூலம் மனிதன் தன்னுண்மை நிலைமை அறிந்து அனுபவித்து, தன்னாற்றலை விரிவுபடுத்தி, அதன்மூலம் பொதுநன்மையை—சமூக நன்மையை வளப்படுத்த முடியும். எனவே, தனிமனிதனுக்கு ஒருசில உரிமைகள் முக்கியத் தேவையாகின்றன. சமூகம் தனிமனிதனுக்கு உரிமைகளை வழங்குவதன்மூலம் சமூகமானது தனிமனிதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றது என்ற கருத்து உண்மை யாகிறது. உரிமையால் தன்னை வளர்த்துக்கொண்டே தனி மனிதன் சமூகத்தினுடைய நன்மை எனப்பெறும் பொது நன்மையை வளர்க்கும் செயல்களை மேற்கொண்டவனாகிறான். இவ்வகையில் தனிமனிதனும் சமூகமும் 'கொடுத்துக் கொள்ளல்' என்னும் நியதியில் இணைகின்றன. சமூகத்திலிருந்து உரிமை களைப்பெற்ற மனிதன் சமூகத்துக்குக் கடமையாற்ற வேண்டியவ

னாகிறான். இவ்வகை இணைப்பினால் உரிமைகளும் கடமைகளும் ஒன்றையொன்று இணைய நின்றவைகள் என்பதாகின்றன.

உரிமைகளும் கடமைகளும் என்று தொடங்கிப் பேச முற்பட்டால், சமூகத்தையும் தனிமனிதர்களையும் இணைந்த நிலையில்தான் அவைகளைப் பேச முடியுமே தவிர, சமூகத்தோடு இணையாத ஒரு தனிமனிதனையோ, தனிமனிதனேயில்லாத கற்பனைச் சமுதாயத்தையோ மனத்தில் வைத்துக்கொண்டு அவைகளைப் பேச இயலாது. தனிமனிதனுக்கு ஒரு சமுதாயம் வழங்க வேண்டிய அடிப்படை உரிமைகள் சிலவற்றை ஆன்றோர்கள் வகுத்துக் காட்டியுள்ளார்கள். அவைகள் கீழே கொடுக்கப்பெற்றுள்ளன. காலமாற்றத்தால் தனிமனித நிலையும் சமூக நிலையும் மாற்றம் பெறலாம். அப்போது இங்கே கூறப்பெற்ற உரிமைகளிலும் மாற்றம் பெறலாம்.

(1) வாழும் உரிமை: பிறந்தவன் இறப்பான் என்பது பொது விதி. இறத்தல் என்ற ஒன்றை அவன் அடைவதற்கு உரிமையுடையவன் என்ற காரணத்தாலேயே அந்த உரிமையை அவன் உடனடியாக அனுபவிக்குமாறு செய்துவிடலாகாது. வாழும் உரிமை என்பது அடிப்படை உரிமை. இத்தகைய சில அடிப்படை உரிமைகளை உலகநாடுகள் அனைத்தும் உணரவேண்டும். எல்லா மக்களும் உணர்ந்து, வாழும் உரிமையை யாரும், எதற்காகவும் தடை செய்யலாகாது என்பன உணரவும் உணர்த்தவும் இக்காலத்தே ஆண்டுதோறும் மனித உரிமை நாள் (Human Rights Day) கொண்டாடப்பெறுகிறது. ஒருவன் தன்னுடைய உயிரை எந்த அளவுக்கு புனிதமானது, இன்பமானது என்றும் கருதுகிறானோ அந்த அளவுக்கு அடுத்தவன் உயிரும் புனிதமானது, அது அவனுக்கு இன்பமானது என்றும் கருதி மதித்தல் வேண்டும். ஒருவன் தான் வாழவேண்டும் என விரும்புவது போலவே, பிறரும் வாழவேண்டும் என விருப்பம் கொள்ளவேண்டும். வாழும் உரிமையைப் பெற்று ஓர் உயிர் தன்னுடைய வாழ்க்கையை நடத்தும் போதுதான், தன்னையே தானுணர்தல் என்ற ஒரு சிறந்த அனுபவத்தைப் பெறமுடியும். எனவே, வாழும் உரிமை என்பது ஒருவனது அடிப்படை உரிமை.

(2) கல்விபெறும் உரிமை: வாழும் உரிமையைப் போலவே அவன் அவனுடைய ஆற்றல் இடங்கொடுக்குமளவிற்கு, கல்வியைப் பெறுவதற்கு. சமூகம் எல்லா வகையான உதவியையும் செய்து, கல்வியை அவன் பெறுவதற்குரிய வாய்ப்புகளை

உண்டாக்கிக் கொடுக்கவேண்டும். உயர்நிலைக் கல்வியை உரிமை யாற்பெறும் ஒருவனால்தான் தன்னிடத்தும் பிறரிடத்தும் வெளிப்படாமல் மறைந்துகிடந்த பேராற்றல்களை வெளிப் படுத்தமுடியும். அவ்வகையில், பண்பட்டவர்களாகச் சமூக உறுப்பினர்களை மாற்றியமைக்க முடியும்; பண்பட்ட உறுப்பினர் களால் பண்புள்ள உயர் தனித்தன்மை வாய்ந்த சமூகம் அமைய முடியும். உயர் கல்வியைப் பெற்றுச் சிறக்கும் அளவிறகுக் கல்வி யுரிமை அளிக்கப்பெறல் வேண்டும்.

(3) செயலுரிமை: தனிமனிதன் தன்னளவில் தொழிற்சாலை போன்றவன். தொழிற்சாலை இயங்கிக் கொண்டேயிருத்தல் வேண்டும். தொழிற்படும்போதுதான்—உழைக்கும்போதுதான் அவனுடைய அக ஆற்றல் அவனுள்ளே மறைந்துகிடக்கும் பேராற்றல்கள் வெளிப்படமுடியும். உழைப்பின்மூலம் உயிர் வாழ்தல் வேண்டும் என்ற நிலையில் அவன் உழைப்பதற்குரிய வாய்ப்பை அளித்தல் வேண்டும். வேலையின்மை என்பது இன்று உலகின் எல்லாப் பாகங்களிலும் வெளிப்படையாக நின்று உலுக்கி வரும் வாழ்வியற் சிக்கல். செயலுரிமை இல்லையானால் முதலில் உள்ள வாழும் உரிமையும் இல்லாமற் போய்விடும்; உழைத்துச் செயலாற்றும் உரிமையை அளிக்காமல் அவன் வாழ் வதற்காக ஏதோ ஒருவேளை உணவு கொடுத்தல் முதலிய செயல் களைச் சமூகம் மேற்கொள்ள முயற்சிக்கலாம். அம்முயற்சியால் அவனை வாழவைக்க இயலாது. தகுதிக்கொத்த வேலை இல்லா மையும், தகுதிக்குத் தாழ்ந்த வேலையைக் கொடுத்தலும் ஆகிய இருவகைச் செயல்களாலும் ஒரு மனிதன் தன்னை அழித்துக் கொள்வானேயொழிய தன்னை உணர்ந்து, தன்னாற்றலை வளமாக்கித் தன்னைத் தானாகச் செய்து கொள்ளமுடியாது. எனவே, உழைப்புரிமையும் ஓர் அடிப்படை உரிமையே.

(4) கட்டுப்பாடற்ற நிலையில் வாழும் உரிமை: மனிதன் தன் வயத்தனாக-சுதந்தரனாகச் செயற்படுதற்கு உரிய உரிமையைப் பெறவேண்டும் என்பதே. மேலே சொன்ன மூன்று உரிமை களைப்போல இதனை எளிமையாக இன்னதென்று வரையறுத்து உணர்த்திவிட முடியாது. மனிதன் என்றுமே சுதந்தரனாக வாழமுடியாது என்பது ஒரு கருத்து. இக்கருத்துக்கு நேர் முரணான கருத்து ஒன்றும் உண்டு. முழுமைச் சுதந்தரம் என்பது ஒருவகைக் காட்டுமிராண்டித்தனம். முழுமைச் சுதந்தர நிலை என்பது பூகம்பமோ எரிமலையோ போன்றது. எனவே, கட்டுப்பாடற்ற நிலையில் வாழும் உரிமை என்பது ஒருவகைக் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய கட்டுப்பாடற்ற நிலைதான்; சமூகம் என்ற ஒன்றில் பல்வகைத் தனிமனிதர்களும் இணையும் நிலை

உண்டு – சமூக அமைப்பு என்பதற்கு விதிகள், கட்டுப்பாடுகள், உரிமைகளின் எல்லைக்கோடுகள் ஆகியவை உண்டு. அப்பொது விதிகளுக்கு அடங்கிய நிலையில், ஏனைய உறுப்பினர்களின் சுதந்தர உரிமையை மீறாதவகையில் ஒருவன் தன்னுடைய சுதந்தரத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியவனாகிறான். கட்டுப்பாடுகளுக்கு இடையில் ஒருவகை கட்டற்ற நிலையில் தன்னுடைய அறிவின் துணைகொண்டு செயலாற்றலைச் செலுத்தி, தன்னுண்மை நிலையை அறிந்து, தன்னைத் தனக்கும் பிறருக்கும் பயன்படுத்திக் கொள்ளவேண்டியவனாகிறான். போக்குவரத்து நிறைந்த சாலையில் போகும் தனிமனிதன் இடப் பக்கம் போதல் என்ற விதியைக் கடைப்பிடிக்க வேண்டும். இடப் பக்கம் போதலில், காலில் செருப்பணிந்தும் போகலாம், செருப்பின்றியும் நடக்கலாம். நடந்தும் போகலாம், வாகனத்திலும் போகலாம். இப்படிப்பட்ட எத்தனையோ கட்டற்ற நிலையில் இயங்கும் உரிமை அவனுக்கு உண்டு.

(5) உடைமைகளைக் கொள்ளும் உரிமை: ஆறாமையும் உடைமையும் இணைந்தே செல்வன. பலவகை உடைமைப் பொருள்களைத் தன்னிச்சையாக உபயோகிக்கும்போதுதான் தனி மனிதனுடைய ஆறாமை மதிக்கப்பெறுகிறது. வாழும் உரிமையும் கல்வியுரிமையையும் பெற்று, உழைக்கும் உரிமையால் கட்டற்ற நிலையில் நின்று பணிபுரிந்த ஒருவன் தன்னிச்சையின் வண்ணம் பல பொருள்களையும் தன்னுடைமையாக்கிக் கொள்ள முற்படும்போது, உடைமைகளைக் கொள்ளும் உரிமையை அவனுக்குச் சமூகம் வழங்க வேண்டியதாகிறது. கல்வி நிலையாலும் செயலாற்றும் திறனாலும் ஒருவன் தன்னுண்மை நிலை உணர்ந்து, தனக்கும் சமூகத்துக்கும் நன்மை விளைவிக்கும் வகையில் தன்னைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய ஒருவன் அந்த அளவிற்குத் தேவையான பொருள்களை உடைமைகளாக ஆக்கிக் கொள்ளும் உரிமையைப் பெற வேண்டியவனாகிறான். ஆனால் சமூகத்தின் ஏனைய உறுப்பினர்களுக்குக் கிடைக்கக்கூடாத வகையில் பொருள்களைத் தன்னுடைமையாக்கிக் கொள்வதற்கும் சமூகம் அவனை அனுமதிப்பதில்லை. பொருள்களை உடைமையாக்கிக் கொள்வதன் நோக்கம் பிறருக்கு நன்மை செய்வதற்குத்தான் என்பதை உணர்ந்து அந்த அடிப்படையிலான உரிமையை அவனுக்குச் சமூகம் அளிக்க முன்வருகிறது. பொது நன்மையை உள்ளிட்ட தனிநன்மையை வளர்க்கும் வகையில் தனி மனிதனுக்குத் தேவையான பொருள்களை உடைமைகளாக ஆக்கிக்கொள்ளும் உரிமையை அவனுக்குச் சமூகம் வழங்க வேண்டும் என்பதே இவ்வுரிமையின் குறிக்கோள்.

(6) உறவுகோள் உரிமை (அ) ஒப்பந்தம் செய்துகொள்ளும் உரிமை: கல்வியறிவும் உழைப்பும் பெற்ற தனிமனிதன் பொருள்களைத் தன்னுடைமையாக்கிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடும்போது பிறமனிதனின் உதவி தேவைப்படுகிறது. ஒருவன் மற்றவனோடு தொடர்பு கொள்ளும் முறைதான் (right to contact) உறவுகோள் உரிமை அல்லது ஒப்பந்தம் செய்துகொள்ளும் உரிமை என்று சொல்லப்பெறுகிறது. ஒருவன் பொருள்களை விற்க அல்லது வாங்க முற்படும்போது அவ்விருவருக்கும் இடைநின்ற ஒப்பந்தம் என்பது வணிகநிலை ஒப்பந்தம். பொருள்களைப் பாதுகாக்க ஒரு காவலாளியை அமைக்கமுற்படும்போது அவ்விருவருக்கும் அமைந்த ஒப்பந்தம் வேலை வாங்குபவன், வேலையாள் என்ற அடிப் படையில் அமையும். இத்தகைய ஒப்பந்தம் அல்லது உறவுகோள் முறை ஏற்படுதற்குச் சமூகம் தனிமனிதனுக்கு உரிமை வழங்குதல் வேண்டும். சமூகம் வழங்கும் இந்த உரிமையானது நேரிய முறையை அடிப்படையாகக் கொண்டதாகவே அமையும். வேலை வாங்குபவனும் வேலை செய்ய வந்தவனும் சமூகத்தின் ஏற்றத் தாழ்வற்ற ஒத்த உறுப்பினர்கள். கொடுத்துக்கொள்ளல் முறையில் பணிசெய்தல், வேலையாள் பங்காக இருக்கக் கூலிகொடுத்தல் வேலைவாங்குபவனுக்கு உரிய பங்காக அமைகிறது. இருவரும் சமூகத்தின் ஒத்த உறுப்பினர்கள் என்ற அடிப்படையில்தான் இந்த ஒப்பந்தம் அமையும். வேலையாளை அடிமையாக்குவதற்கு அவனைக் கருவியாக அமைத்துப் பயன்பெறுவதற்கு இந்த ஒப்பந்தம் துணை செய்யாது. எனவே, சமூக நன்மை என்ற பொதுநன்மையை உள்ளத்திற் கொண்டு ஒருவன் மற்றவனோடு இணைந்து தொண்டாற்ற வேண்டிய நிலைமை அமையுமானால் அவ்விருவரும் இணைந்துநின்று செய்வதற்கு உரிய ஒப்பந்த உரிமையைச் சமூகம் அவ்விருவருக்கும் வழங்குகிறது.

மேலே குறிப்பிடப்பெற்ற ஆறு உரிமைகளில் வாழும் உரிமை, கல்வியுரிமை, பணிசெயல் உரிமை, தன்வயத்தனாக நின்று தொண்டாற்றும் உரிமை என்ற நான்குமே இயற்கை உரிமைகள் என்று அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பெற்றவை. ஏனைய இரண்டும் இயற்கை உரிமைகள் காரணமாகப் பின்னர்த் தோன்றியவை. காலமாற்றம் காரணமாக வேறு உரிமைகள் தோன்றலாம்; உள்ள உரிமைகள் மாற்றம் பெறலாம் ஆனால், முதலாவதாகக் குறிப்பிடப்பெற்ற நான்கு உரிமைகளிலும் மாற்றம் நிகழாது என்ற காரணத்தாலேயே அவைகள் இயற்கை உரிமைகள் என்று கூறப்பெற்றன.

உரிமையும் கடமையும்

உரிமையும் கடமையும் இணைபிரியாதவை. இந்நாளில் உரிமையும் கடமையும்பற்றிய பேச்சுகள் பலவாக எழுகின்றன. கடமையைச் செய்த பின்னரே உரிமையைப்பற்றி பேசவேண்டும் என்பது ஒரு குரல். உரிமையைக் கொடுத்தால்தானே அல்லது உரிமையைப்பெற்ற பின்னர்தானே கடமையை நிறைவேற்ற முடியும் என்பது முன்னே எழுந்த குரலுக்கு எதிர்க்குரல். உலகியலில் இன்று பேசும் உரிமைகளையும் கடமைகளையும் இத் தலைப்பில் பேசவில்லை. இன்றைய பேச்சு வழக்கில் வரும் உரிமைகளும் கடமைகளும் என்பவைகளைவிட ஒருவகையில் மாறுபட்டவைகளே இவைகள்.

ஓர் உரிமைக்கு ஒரு கடமை உண்டு என விளக்குவர். உண்மையாக நோக்கினால் ஓர் உரிமையானது இருவகைக் கடமைகளை எழுப்புகிறது என உணர்தல் வேண்டும்.

ஒருவனுக்கு அவன் ஏற்றுப் பயன்பெறக்கூடிய எல்லை வரையில் கல்வி பெறும் உரிமை அளிக்கப் பெறுகிறது என வைத்துக் கொள்வோம். அவன் அத்தகைய கல்வியைப்பெற—அல்லது அக்கல்வி உரிமையை அனுபவிக்க முற்படும்போது, அவனைப் பெற்ற தாய் தந்தையர், அவன் கல்வியுரிமையை மதித்து, அவன் கல்வி பெறுவதற்கு எல்லா வகையாலும் உழைத்து, அவன் கல்வியுரிமையை அடைதற்குப் பாடுபட வேண்டும். ஒரு குழந்தைக்குரிய கல்வி உரிமையை ஏற்றுக்கொள்வது என்றால் பெற்றோர்கள் அக்குழந்தையைப் படிக்கவைக்கப் பாடுபட வேண்டும். இவ்வாறு துணைநிற்க வேண்டியது பெற்றோர்களுக்கு மட்டும்தானே எனக் கேட்கலாம். அப்படியன்று. சமூகத்தில் அனைவரும் உறுப்பினர்கள். ஓர் உறுப்பினருக்குச் சமூகம் கல்வியுரிமை அளிக்கிறது என்றால் அவனைத்தவிர, ஏனைய எல்லா உறுப்பினர்களும் அவனுடைய கல்வியுரிமையை மதித்துப் போற்றி, அவன் அவ்வுரிமையைப் பெற்றுச் சிறக்குமாறு பாடுபட வேண்டும். இந்நிலையில் நமக்குக் கிடைக்கும் அறக் கொள்கை என்ன?

மஞ்சட்கொல்லை என்பது ஒரு சிற்றூர். அவ்வூரில் உள்ள ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்த தினகரன் கல்வியுரிமை எய்தப் பெறாதவனாய் வேற்றூருக்குச் சென்று கூலி வேலை செய்து பிழைக்கிறான். அவன் கல்வியறிவு பெறாமைக்கு அவனுடைய தாய் தந்தையர் மட்டுமே காரணம் என்று கூறமுடியாது. அப்படிச் சொல்வதுதான் உலக வழக்கு. அவன் தாய் தந்தையரோடு அவன் வசித்த தெருவில் அவன் ஊரில் உள்ள

அனைவருமே கடமை தவறியவர்கள். ஏனெனில், சமூகத்தால் ஒருவனுக்கு வழங்கிய உரிமையை அச்சமூகத்தின் ஏனைய உறுப்பினர்கள் மதித்து, அவன் தந்த உரிமையைப் பெற்றுச் சிறக்குமாறு பாடுபட வேண்டும். அவ்வாறு செய்யாமையால் தினகரன் கல்வியுரிமை பெறாமைக்கு, அவ்வூர் மக்களெல்லாருமே பொறுப்புடையவர்களாக ஆகின்றார்கள். இது ஒருவனது கடமை.

இரண்டாவது ஒரு கடமை உண்டு. சமூகத்தின் துணையால் கல்வியுரிமை பெற்றவன், தான் பெற்ற உரிமைக்காக, தன்னை இத்தகைய உரிமையை நுகருமாறு செய்த சமூகத்துக்கு—சமூக நன்மைக்கு வளமாக்கும் வகையில் தன்னுடைய கடமையை ஆற்றுதல் வேண்டும்.

எனவே, ஒருவன் ஓர் உரிமையை பெற்றால், அவன் உரிமையை அச்சமூகத்தில் உள்ள அனைவரும் மதித்து, அவன் தன் உரிமையை முற்றாக அனுபவிக்குமாறு, சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களும் உழைக்க வேண்டும். அடுத்து உரிமையைப் பெற்றவன் தான் பெற்ற உரிமைக்குரியவகையில் திருப்பியளிக்கும் தத்துவ நோக்கில், தனக்கு உரிமையைக் கொடுத்த சமூகத்தின் நன்மைக்குக் கடமையாற்ற வேண்டும். எனவே, உரிமை ஒன்றென்னின் கடமை இருவகைப்பட்டு நிற்பதை உணரவேண்டும்.

உரிமை இரண்டு வகை

உரிமைகள் சமூகத்தில் எழும் அறவுணர்வுக் கொள்கையாலும் பெறுவதுண்டு. சட்டத்தின் துணையாலும் பெறுவதுண்டு. அறவுணர்வின் அடிப்படையில் எழும் உரிமையே இங்கே பேசப் பெறும் உரிமை. இன்னோர் உரிமை சட்டத்தினால் பெறுவது. சட்டத்தினாற் பெறும் உரிமை வலிந்து திணிக்கும் வலிமையை உடையது. சட்டத்தினாற் பெறும் உரிமை முழுப் பயனையும் நல்காது. மாறாக, மக்கட் பகைமையை வளர்க்கும். அறவுணர்வின் அடிப்படையில் எழும் உரிமையானது உயிருறுப்பு நியதியடிப் படையில் கொடுத்துக் கொள்ளல் என்ற அறத்தின் மூலமாக எழுவது ஆகும். உரிமைகளும் கடமைகளும் என்ற இத்தலைப்பில் சட்டத்தினால் வலியுறுத்தப்பெறும் உரிமையைப்பற்றிய பேச்சே இல்லை எனலாம்.

கடமைகள்

உரிமையைப் போலவே கடமையையும் நாம் தெளிய உணர்தல் வேண்டும். கடமை என்ற சொல்லுக்குப் பல்வேறு பொருள்கள்

இன்றைய உலகவழக்கில் வழங்கப் பெறுகின்றன. இங்கே குறிக்கப்பெறும் கடமை என்ற சொல்லுக்கு உரிய பொருள் என்ன?

இச்செயல் நல்லது என்பது ஒரு வழக்கு. இச்செயல் நமக்குக் கடமை என்பது மற்றொரு வழக்கு. இவ்விருவகை வழக்குகளும் ஓர் உண்மையை உணர்த்துகின்றன.

ஒரு சமயத்தில், ஒருவகைச் சூழ்நிலையில் இரண்டு செயல்கள் நம் சிந்தனையில் மோதுகின்றன. ஒரு செயல் காலத்துக்கும்,சூழ் நிலைக்கும், செயற்பாட்டுக்கும் பொருந்துவதாய் இருக்கலாம். இந்த வேளையில் இந்தச் சூழ்நிலையில் பொருந்துவதாக இச் செயல் அமைகிறது என்று முடிவு செய்தால் அச்செயலை நல்ல செயல் என்று கூறுவதுண்டு. இங்கே நன்மை என்பது இந்த வேளைக்கும் சூழ்நிலைக்கும் பொருத்தமானது என்பதே. ஆனால் அத்தகைய பொருத்தங்களோடு அறவழிக் கட்டுப்பாடுகளும் அமைந்ததாக ஒரு செயல் இருக்குமேயானால் அதனை நல்ல செயல் என்பதைவிடக் 'கடமை' என்று குறிப்பிடுதல் மரபு. ஏன் என்றால் பொருத்தம் என்ற ஒன்று மட்டுமன்றி, அறவழிக் கட்டுப்பாடும் இணைந்திருப்பதால் அதனைக் 'கடமை' என்று குறிக்கிறோம்.

இனி வேறொரு வழக்கையும் காணலாம். ஓர் ஊரில் பல நற்செயல்கள் செய்யவேண்டியுள்ளன. ஆனால் நற்செயல்களை எடுத்துச் செய்துமுடிக்க வருபவர்கள் சிலநற்செயல்களை மட்டுமே எடுத்துச் செய்ய விழைகிறார்கள். சில நல்ல செயல்கள் யாராலும் பார்க்கப் பெறாமலேயே—செய்துமுடிக்கப் பெறா மலேயே ஒதுக்கப் பெற்றுவிடுகின்றன. அவைகளும் நற்செயல் களே. அவைகளையும் செய்து முடித்தால்தான் அவ்வூரின் நன்மை முழுமை பெற்றதாகும். ஏன் சில நற்செயல்கள் ஒதுக்கப் பெறு கின்றன? பொதுவாக எல்லா மக்களாலும் விரும்பியேற்றுக் கொள்ளப்பெற முடியாமல் ஒதுக்கப் பெறுதற்குரிய செயல்கள் அறக் கட்டுப்பாடுகள் நிறைந்த நற்செயல்களாகும். அறக் கட்டுப்பாடுகள் நிறைந்த, புறனடை விதிகளையே அனுமதிக்காத நற்செயல்களாக இருப்பின் பொதுவாக அவைகளைக் கண்டு அனைவரும் ஒருவகை அச்சங்கொள்வர். செயற்பாட்டு முறை யில் அத்தகைய நற்செயல்களை ஒழுங்குபெற முடிக்க இயலாத நிலை ஏற்படும். செய்து முடித்தாலும் அறவழு உண்டாகலாம். அறவழு நேருமாயின் அறத்தின் ஒறுத்தலுக்கு ஆளாக நேரும். இவைகளையெல்லாம் எண்ணி, அறக் கட்டுக்கோப்பு உடைய நற்செயல்களைப் புறக்கணிக்க முற்படுவர். அனைவராலும் புறக்

கணிக்கப் பெற்ற அவைகளைச் செய்தலே கடமை என ஒருசிலர் முன்வரும்போது, விடப்பெற்றவைகளைக் கடமைகளாக ஏற்று முடித்தல் வேண்டும் என்றும் அறக் கட்டுக்கோப்புகளை மிகுதியும் நிறைவாகப் பெற்ற செயல்களைச் செய்வதே கடமை என்றும் விளக்கம் கூறுவர். இவ்வகையால் சாதாரணமாகப் புறக்கணிக்கப் பெறுகிற, அறக் கொள்கைகளால் முழுமையான நிறைவும் கட்டுப்பாடும் பெற்ற செயல்களே கடமைச் செயல்களாகின்றன.

மேலும் ஒரு வகை; இச்செயல்களைச் செய்யும்போது, அவற்றால் விளைவுகள் பலவாக உண்டாகும். விளைவுகளில் உயர்ந்தவையும் நல்லவையும் ஆகியவைகள் செய்தவனைவிட மற்றவர்களையே சென்று சாரும்; அதனாலேயே பலரும் அவைகளை விரும்பி மேற்கொண்டு செய்வதில்லை. எனவே, செய்தவனைத்தவிர மற்றவர்களுக்கு அதிக நன்மை தருகின்ற செயல்கள் கடமைகள் என்று கருதப்பெறுகின்றன.

நல்ல செயல்களைவிட, கடமைகளில் உயர்நலப் பண்புகள் அதிகமாக இருக்கின்றன என்றும் நல்ல செயல்களைச் செய்யும்போது தோன்றாத அறவுணர்வு கடமைகளைச் செய்யும்போது செய்பவர் மனத்திலும் ஏனையோர் மனத்திலும் அதிகமாக வெளிப்பட்டுத் தோன்றுகிறது என்றும் கூறுவர். கடமையைச் செய்யும்போது அறவுணர்வில் மிக்கெழும் அனுபவத்தில் திளைக்கும் நிலை ஒவ்வொருவருக்கும் உண்டாகிறது என்பதே கடமையின் பெருமையை அனைவரும் உணர்வதற்குப் போதிய சான்றாக அமைகிறது.

உரிமை என்ற சொல்லுக்குச் சமுதாயத்தில் 'நேர்மையானது' எனப் பொருள் செய்தது போலவே 'கடமை' என்பதற்கும் கீழ்க்கண்ட வரையறையைச் செய்யலாம். சமுதாயத்தின் பொதுமை நன்மை என்ற பெயரில் சமுதாயமோ, சமுதாயத்தின் உறுப்பினர்களோ, சில உறுப்பினர்களோ பலவகையான உரிமைகளைப் பெற்று வளர்ந்த தனிமனிதனிடம் சென்று, உரிமையுடன் இன்னது செய்யவேண்டும் என்று கேட்க, அவர்கள் கேட்டதை அவன் செய்து கொடுப்பது அல்லது கடமையாகக் கொண்டு நிறைவேற்றுவது என்ற இச்செயல்களே கடமைகள் என்ற விளக்கத்தை அமைத்துக் கொள்ளலாம்.

உரிமையைப் போலவே சில கடமைகளை ஆன்றோர் அமைத்துள்ளனர். அவைகள் முறையே வாழ்வைப்பற்றிய நன்மதிப்பு, மெய்யறிவைப்பற்றிய நன்மதிப்பு, உழைப்பைப் பற்றிய நன்

மதிப்பு, கட்டற்ற நிலை எனப் பெறும் சுதந்தர நிலை பற்றிய நன் மதிப்பு, உடைமையைப் பற்றிய நன்மதிப்பு, சமுதாய உறவு ஒப்பந்த அமைப்பைப்பற்றிய நன்மதிப்பு என்ற பெயர்களை அடைகின்றன. இக்கடமைகள் எல்லாம் உரிமையின் அடிப் படையிலேயே அமைக்கப் பெறுகின்றன. உரிமையைப் பெற்றவன் உரிமையின் அடிப்படையில் சில செயல்களைத் தேர்ந்தெடுக்கும் போது அவைகளைக் 'கடமைகள்' எனவே குறிப்பிட்டுக் கூற வேண்டியதாகின்றது.

கடமைகளின் வகைகள்

(1) வாழ்வைப்பற்றிய நன்மதிப்பு: வாழ்தல் உரிமை என்பதை அடிப்படையாகக் கொண்டு எழுவதே வாழ்வைப் பற்றிய நன்மதிப்பு. வாழ்தல் உரிமை என்பதை இயற்கை உரிமை எனக் கருதி, அதைச் சமூகத்தின் மூலம் பெற விரும்பிய தனி மனிதன், தன் உயிரை வாழவைப்பதும் பிற உயிர்களைத் துன்புறுத்தாது வாழவைப்பதும் கடமை எனக் கருதுகிறான். தன்னுடைய உயிரைப் போலவே, தன்னுடைய வாழ்வைப் போலவே ஏனைய உயிர்களும் அவைகளின் வாழ்வும், நம்மால் போற்றிப் பாதுகாக்கப் பெற வேண்டியவை என உணர்ந்து ஏனைய உயிர்களையும் தம்முயிர் போல் காப்பதைக் கடமை எனக் கொள்கிறான். அஹிம்சை, பிற உயிர்களுக்கு வந்த துன்பங் களை நீக்குதல் போன்றவை இப்பகுப்பில் அடங்கும்.

(2) கட்டற்ற நிலை அல்லது சுதந்தரம் என்பதுபற்றிய நன்மதிப்பு: தனிமனிதன் ஒருவன் தற்சுதந்தரம் உடையவனாக இருக்க வேண்டும். அப்படித் தன்வயத்தனாக இருப்பதற்குரிய உரிமை அவனுக்குத் தரப்பெறல் வேண்டும் என்று கேட்டது போலவே, அவன் தான் சமூகத்திலிருந்து பெற விரும்பிய அல்லது பெற்ற தற்சுதந்தர உரிமையைப் பிறரும் பெற்றுவர வேண்டும் என்று எண்ணி, அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்போது அது சுதந்தரம்பற்றிய கடமையாகிறது. சுதந்தரம் பற்றிய நன் மதிப்பு என்பது எந்த ஒரு தனிமனிதனும் தன்னளவில் மதிக்கப் படுதற்கு உரியவனே. அவ்வகையில் அவனைத் தனக்கு ஒரு கருவி யாக, தன்னுடைய நன்மைக்கு அவனை ஓர் ஏணிப்படியாக, அடிமையாக எண்ணாமல் அவனும், அவனைப் பொறுத்தவரை யில் எல்லாவகையான சுதந்தர நிலையையும் பெற்று அவனே அவனுக்கு வழியும் முடிவுமாக இருப்பவன் என்றும் அவன் வேறொருவனுடைய முடிவுக்கு வழியாக இருப்பவன் அல்லன் என்றும் கருதவேண்டும்.

(3) கல்வியைப் பற்றிய நன்மதிப்பு; கல்வியைப் பற்றிய நன் மதிப்பு என்பது கல்வியைப் பெறுவதற்குரிய உரிமை வேண்டும் என்ற உரிமைக் கோட்பாட்டிலிருந்து எழுந்த கடமையாகும். கல்வியைப் பற்றிய நன்மதிப்பு என்பது இங்கே மெய்யறிவின் மேம் பாட்டை விளக்குவதாக அமைந்தது. உண்மை அறிவில் நன் மதிப்பு வைத்து உண்மைக்குப் புறம்பான ஒன்றைப் பேசுதல் கூடாது எனக் கொள்ள வேண்டும். உண்மையுணர்வு, மெய்யறிவு என்று பேசப் பெறுவன வெல்லாம் ஓர் அடிப்படை உண்மையி லிருந்து தோன்றுவனவேயாகும்.

மனிதன் நினைக்கிறான், பேசுகிறான், செயற்படுகிறான். நினைத்தல், பேசுதல், செய்தல் என்ற மூன்றும் இணைந்து நிற்றல் வேண்டும். மூன்றும் இணைந்து நிற்றலே உண்மை, மெய்ம்மை என்பதாம். இவைகள் பிரிந்து நிற்பதாயின் அது பொய் என்று கருதப் பெற வேண்டும். இவ்வகையில் நினைத்தது ஒன்று சொன்னது ஒன்று என்ற நிலையில் பொய்யனாகவோ, சொன்னது ஒன்று, செய்தது ஒன்று என்ற நிலையில் பொய்யனாகவோ ஆகாமல் இவைகளையெல்லாம் இணைத்து வாழ வேண்டும். மற்றவர்களையும் அவ்வாறு இணைத்து வாழப் பாடுபடுவதே கடமை.

(4) உடைமைப் பற்றிய நன்மதிப்பு: பொருள்களை உடைமை யாக்கிக் கொள்ள வேண்டும் என்ற உரிமையின் அடிப்படையில் எழும் கடமையே இது. தம்மைப் போலவே மற்றவனும் பொருள் களை உடைமையாக்கிக் கொள்வதற்கும், உடைமை பொருள் களைத் துய்ப்பதற்கும் உரிமையுடையவன் என மதித்து அவன் அவைகளை அடைய நாம் பாடுபடுதல் வேண்டும். இவ்வகையில் பிறர் பொருளைத் திருடுதல், பிறர் பொருளில் ஆசை வைத்தல், பிறர் மனைவியைவிரும்புதல் போன்றவைகள் நடைபெறாதவாறு பிறருடைய உடைமைப் பொருளை உடையவன் ஏற்கவோ துய்க்கவோ முற்படும் போது அவன் செயல்களுக்குத் தடையாக இல்லாமல் அவன் அந் நன்மைகளைப் பெறுவதற்காகச் செய்யும் தொண்டுகள் கடமையாகின்றது.

(5) செயல்முறை நன்மதிப்பு: சமூகத்தின் உறுப்பினனாக நின்ற எந்த ஒரு தனிமனிதனும் தன் உயர்வுக்கும் தன்னோ டிணைந்து சமூக உயர்வுக்கும் பொருந்துவதான முயற்சியை, செயலை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு தன்னையும் சமூகத்தையும் உயர்வடையச் செய்யும் செயல்களில் ஒருவன் ஈடுபடும்போது ஏனையவன் அவன் செயலை நன்மதிப்போடு பாராட்டி அவன் செயல் நடைபெறத் துணை புரிய வேண்டும்.

(6) ஒப்பந்த முறை நன்மதிப்பு: தனிமனிதனுடைய அனைத்து வளர்ச்சிகளையும் வளர்க்கும் பொறுப்பினை ஏற்றுப் பணி செய்கின்ற நிறுவனங்கள் பல உள்ளன. தனிமனிதனுக்கும் அந் நிறுவனங்களுக்கும் இடை அமைந்த உடன்பாட்டு முறை அல்லது ஒப்பந்த முறையானது இரண்டையும் இணைத்து வளர்க்கும் பெரும் ஆற்றலை உடையது. குடும்பம், கல்வி நிலையம், கோயில், நாடு முதலியன இவ்வகையில் அமைந்த நிறுவனங்கள் ஆகும். தனிமனிதனுக்கும் இத்தகைய நிறுவனங்களுக்கும் இடை அமைந்த உறவு ஒப்பந்தம் வலிவு பெற்று விளங்கப் பாடுபட வேண்டும். இதற்கொத்த செயல்களை மேற்கொள்வதே இவ் வகையில் கடமையாகிறது.

மேலே கூறப் பெற்றவாறு உரிமைகளும் கடமைகளும் ஒன்றோடொன்று இணைந்து, கொள்ளல் கொடுத்தல் என்ற அடிப்படை நிலையில் வேரூன்றி நிற்கின்றன எனக்கொள்ளலாம். ஆயினும் உரிமைகளின் எண்ணிக்கை, கடமைகளின் எண்ணிக்கை ஆகியவைகள் எப்போது வரையறை செய்யப் பெற்றன என்ற வினா எழும். உரிமைகளும் கடமைகளும் சமூக அமைப்பைத் தழுவியே பேசப்பெறுகின்றது. சமூக அமைப்பு என்ற ஒன்று எப்போது தொடங்கியதோ அப்போதே உரிமைகளும் கடமைகளும் தோற்றம் பெற்று விட்டன என்று கூறுவதும் பொருந்துவதன்று. ஏனெனில், உலகில் வாழும் எல்லா மக்களும் ஒரு நாள் திடீரென ஒன்றுகூடி சமூக அமைப்பு என்ற ஒன்றை இன்று முதல் அமைத்துக் கொள்வோம் என்று அமைத்து விட்டதாகச் சொல்ல முடியாது. ஆகையால் மக்கள் வாழ்க்கையில் நிலவிவரும் பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டு உரிமைகளும் கடமைகளும் இவ்வாறு அமைந்துள்ளன என்ற அளவில் அமைத்துக் கொள்ளுவதே பொருத்தம் உடையதாம்.

கடமைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுதல்

சமூக அமைப்பினை உள்ளத்திற் கொண்டே உரிமைகளும் கடமைகளும் நம்மால் உணர்ந்து கொள்ளப் பெறுகின்றன. ஆயினும் கடமைகளைத் தெளிவாக வரையறுத்துக் கூறக் கூடிய விளக்கம் நமக்குக் கிடைக்கவில்லை. உரிமைகளும் கடமைகளும் என்ற தலைப்பில் ஓர் உண்மையை நம் மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டும். சமூகத்தின் பொதுமை நன்மை, சமூகத்தில் உறுப்பினர்களாக இருக்கும் ஏனைய மனிதர்களின் நன்மை ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டுதான் ஒரு தனிமனிதன் தன்னுடைய கடமையை, உரிமையைச் செய்யவோ வலியுறுத்தவோ வேண்டும் என்பதுதான். உரிமையை வலியுறுத்துகின்ற காலத்திலும்கூடப் பிறருடைய உரிமைக்கு ஊறு

விளைக்காத வகையில் தான் தன் உரிமையை வலியுறுத்த வேண்டும்.

பழங்காலத்திலிருந்தே உலகப் பொதுமையான கடமைகளைப் பற்றி ஒரே மாதிரியான கருத்துகளையே அறவழியாளர்கள் கூறிவந்துள்ளார்கள். எனினும் கடமையைப் பற்றித் தெளிவாக ஒவ்வொருவரும் தெரிந்துக் கொள்ளக் கூடிய நிலை இல்லை. எடுத்துக்காட்டாக கடமைகளிடையே போராட்டம் அமைவதும் உண்டு. தனிமனிதனுடைய வாழ்வுரிமை, கல்வியுரிமை ஆகியவை மறுக்கப் பெறும்போது அவன் எத்தகைய கடமையை மேற்கொள்ள முடியும் அல்லது மேற்கொள்ள வேண்டும் என்பதை எப்படி முடிவுசெய்வது? அவன் தானே தன்னறிவின் துணைக் கொண்டு சூழ்நிலைகளைத் துணையாக நிறுத்தி ஆராய்ந்துதான் தன் கடமையை இன்னது என்று முடிவு செய்ய வேண்டும் என்ற நிலை உண்டாகிறது. சில வேளைகளில் இரண்டு கடமைகள் ஒன்றுக்கொன்று முரண்பாடான செயல்களைக் குறிப்பிட்டு மோதும்போது, நாம் கடைப்பிடிக்க வேண்டிய கடமை எங்கிருக்கிறது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள இயலவில்லை.

கடமைகளை வரையறை செய்ய முற்படும்போது இருவகை வினாக்கள் எழுகின்றன.

(1) எல்லா நிலையிலுள்ள எல்லா மனிதர்களும் இக்கடமையைச் செய்தே முடிக்க வேண்டிய கடமைப்பாடு உடையவர்களாக கடமையைப் பொதுமையாகக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலிருந்து எழுவதே இந்த வினா.

(2) எல்லா நிகழ்ச்சிகளுக்கும் பொருந்தும் வகையில் தெளிவான சொற்களால் கடமையை இன்னதென்று வெளிப்படுத்த முடியுமா?

மேலே கூறப் பெற்ற இரண்டு வினாக்களை மீண்டும் ஆய்ந்து விளக்கம் பெறலாம்.

கடமையைப் பொதுமையாகக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை ஆராயும்போது எல்லாக் கடமைகளையும் அவ்வாறே பொதுமையாக அமைத்து வலியுறுத்திக் கூற இயலவில்லை.

திருடுதல் என்பது ஒரு விலக்குச் செயல். திருடுதலை இவ்வாறு பொதுமைப் பண்புடையதாக அமைத்து திருடுவதை எந்தக் காலத்திலும் யாரும் செய்யக் கூடாது எனவலியுறுத்தலாம்.

அவ்வாறே கொலை, பிறர் மனைவியை விரும்புதல் போன்ற கூடா ஒழுக்கங்களையும் பொதுமைப்படுத்தி அனைவருக்கும் அனைத்து காலங்களிலும் அனைத்துச் சூழ்நிலைகளிலும் பொருந்தும் பொதுமையுடையனவாக அமைத்துக் கூறலாம். இவையெல்லாம் விலக்குதல் கடமைகள்.

ஆனால் அறம் செய்தல் என்பது ஒரு கடமை. இதனை அறக் கோட்பாட்டு வாக்கியமாக அமைத்தல் 'வறியவர்களுக்கு ஈதல் வேண்டும்' என வரும். இதனை மேலே அமைத்தவாறு பொதுவாக அமைக்க இயலாது. அதாவது, எல்லாரும் எல்லாக் காலத்திலும் வறியவர்களுக்கு ஈதல் வேண்டும் என்ற பொதுமை அறமாக அமைக்க முடியாது. ஏனெனில், வறியவர்களுக்குக் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று யாரும் வலியுறுத்த மாட்டார்கள். ஈதலை அறமாகக் கொண்டாலும்-கடமையாகக் கொண்டாலும், குறிப்பிட்ட ஒருவனுக்கு, குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில் கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என்பது கொடுப்பவனின் சூழ்நிலையையும் எதிரில் நிற்கும் வறியவனின் நிலைமையையும் பொறுத்தே அமைகிறது. 'உண்மையே பேசுக' என்ற கடமையையும் இப்படித்தான் கொள்ள வேண்டிய நிலை உண்டாகிறது. ஒரு குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில் உண்மையைப் பேச வேண்டும் என்பதே அக்கடமையின் நோக்கம்.

சுருங்கக் கூறின், எதிர்மறைத் தன்மையாய கடமைகளை— திருட்டு, கொலை, கூடாத ஒழுக்கம் போன்றவைகளை எல்லாரும் எல்லா காலத்தும்எல்லா சூழ்நிலையிலும் தவிர்க்கவேண்டும் என்று பொதுமை விதிகளாக அமைத்துக் கூறலாம். ஆனால் வறியவர்களுக்கு ஈதல் வேண்டும் என்பதுபோன்ற உடன்பாட்டு அறங்களைப் பொதுமை விதிகளாக-பொதுக் கடமைகளாக அமைத்துக் கூறமுடியாது. இதனாலேயே, இடைக்காலத்தில் கடமைகளை இரண்டாகப் பிரித்துள்ளார்கள். (1) எப்போதும் யாராலும் செய்யக்கூடிய பொதுமைக் கடமைகள் (2) முடியும் போதெல்லாம் முடியக்கூடிய வகையில் செய்யப்பெறும் கடமைகள் என இரண்டுவகை. திருடுதல் கூடாது, கொலை செய்தல் கூடாது என்பனவாகிய கடமைகள் முதல் வகையைச் சாரும். வறியவர்களுக்கு ஈதல், உண்மை பேசுதல் போன்றவை இரண்டாம் வகையைச் சாரும்.

இனி, இரண்டாவது வினாவைப் பற்றி ஆயும்போது அது வெளிப்படுத்தும் முறையைப் பற்றியது. முன் வினா செய்வதைப் பற்றியது; இவ்வினா சொல்வன பற்றியது. எல்லாராலும்

எல்லாக் காலத்திலும் செய்யமுடியுமா என்பதை ஆராய்ந்தது முதல் வினா. இரண்டாவது வினா ஒரு கடமையை எதிர்மறையாகவோ, உடன்பாடாகவோ செய்ய முற்படும்போது, அதனுள் அடங்கும் எல்லா நிகழ்ச்சிகளையும் இணைத்து, தெளிவான சொற்களின் மூலம், மங்காத பொருள் விளக்கத்துடன் வெளிப்படுத்த இயலுமா? என்பதே. எடுத்துக்காட்டாக, 'திருடாதே' என்று சொன்னால் அதற்குப் பொருள் உடைமையாளனுக்குத் தெரியாமல் அவன் உடைமைகளை எடுத்துத் தன்னுடைமையாக ஆக்கிவிடுவது என்பது விளக்கம். பிறருடைய உழைப்பைச் சுரண்டுவதும் களவுதான். பிறருடைய நூல்களில் உள்ள செய்திகளைத் தன்னுடையனவாக ஆக்கிக் கொள்வதும் களவுதான். சட்டத்தின் துணைகொண்டு வரிகொடாமல் இருப்பதும் களவுதான். 'களவு செய்யாதே' என்று பொதுவாகச் சொல்லும்போது 'களவு' என்ற சொல் இங்கே குறிப்பிடப்பெற்ற எல்லாவற்றையும் உள்ளடக்கி, இவைகளையும் இவைபோன்ற எல்லா வகைக் களவுகளையும் இணைக்கும் நிலையில் பொருளைத் தருமா என்பதுதான்இவ்வினாவின் நோக்கம். 'களவு செய்யாதே' என்றால் இங்கே குறிப்பிடப் பெற்ற இவ்வளவு காரியங்களையும் உள்ளடக்கிக் கொண்டு செயல்புரியத் தொடங்கினால் அது முடியப்பெறாத கடமையாகவே முடியும்.

விலக்குதற் பொருளில் 'கொலை செய்யாதே' என்றால் எல்லார்க்கும் எக்காலத்தும் எல்லாச் சூழ்நிலையிலும் பொருந்துகின்ற ஒன்றாகக் கொள்ளலாம் என முன்னே சிந்தித்தோம். இதுவே முதல் வினாவினால் நமக்குக் கிடைத்த விளக்கம். முதல் வினாவினால் ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருந்த கருத்து இரண்டாம் வினாவினால் எழும் ஐயத்துக்கு ஈடு கொடுக்க முடியாததாகி விடுகிறது. 'கொலை செய்யாதே' என்பது பொதுமையில் நின்று எல்லார்க்கும் இயலுவதாக அமையலாம். ஆனால், கொலை என்ற சொல்லானது எல்லா வகையான கொலைகளையும் உள்ளடக்கிய நிலையில் விளக்கமுறுத்தும் சொல்லாக அமையுமா எனில் இயலாது.

இங்கே குறிக்கப்பெற்ற கடமைகள் பொதுவாக எல்லாருக்கும் எல்லாக் காலத்துக்கும் பொருந்தும் பொதுமை நோக்குடையன என்ற வகையில் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், மனிதவாழ்வில் சிக்கலான அல்லது முரண்பாடுடைய நிகழ்ச்சிகள் அமைந்து விட்டபோது, எதை ஏற்றுக்கொள்வது? எதைத் தவிர்ப்பது? என விளக்கமில்லாமல் தவிக்கும் ஒருவனுக்கு, நிலைமையைத் தெளிவாக விளக்கி, அவனுக்கு வழிகாட்டியாக அமைவதற்கு இத்தகைய பொதுமைக் கடமைகள் ஏற்புடையவைகளாகத் தோண்டாற்றவில்லை.

இவ்வாறு கடமைகள் ஒரு தனிமனிதனுக்குத் தேவையான விளக்கங்களை யெல்லாம் தெளிவாகத் தரஇயலாத நிலையில் அவைகளை ஒரு தனிமனிதன் எவ்வாறு கடைப்பிடித்து வாழ்ந்து காட்ட இயலும் என்ற ஐயம் தோன்றுவது இயல்பே. இவ்விடத்தில் நாம் முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய செய்தி ஒன்று உண்டு.

'உரிமையும் கடமையும்' என எடுத்துக்கொண்ட இப்பகுதியில் உரிமை என்பதை சமுதாயத்தில் நேர்மையானது என விளக்கங் கூறி அமைத்ததுபோல 'கடமை' என்பதையும் ஒரு வகையில் தெளிவுபடுத்தி உணர்ந்து கொள்ளவேண்டும்.

தனிமனிதன் அவனுடைய கடமைகளை மதிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதே முக்கியக் குறிக்கோள்.செயற்பாட்டு முறையில் தனிமனிதன் அவன் வாழும் நிலையையும் கட்டுப்பாடுகள், சூழ்நிலைகள் ஆகியவற்றையும் அனுசரித்துத்தான் அக் கடமைகளைச் செயற்படுத்த வேண்டும். ஆகையால், தனி மனிதனுக்கு அவன் கடமைகளைப் பற்றித் தெளிவான வரையறைகளையோ விதிமுறைகளையோ கூற இயலவில்லை என்றாலும், அறவிதிகளாகவும் அவன் மனச்சான்றின் ஆற்றலால் உந்தப் பெற்ற கட்டளைகளாகவும் அமைத்து, உடன்பாட்டு விதிகளாகவும் எதிர்மறை விலக்கு விதிகளாகவும் தம்மைத் தோற்றுவித்துக் கொள்ளும் பொதுமை விதிகளை—கடமைகளை மதிக்க வேண்டும் என்பதே குறிக்கோள். மதிக்கத் தெரிந்தபின், அவைகளைக் கடைப்பிடிக்கும்போது, அவனுக்கு வெவ்வேறு வகையான கடமைகளையும் அறிய வாய்ப்பு அமைகிறது. செயல்முறை முயற்சியை மேற்கொள்ளும்போது, அவன் அவனுடைய நிலையுடன் ஒன்றிய, அவனுடைய் சூழ்நிலை, ஆற்றல் முதலியவைகளோடு இணைந்த ஒரு போக்கில் அக்கடமைகளை நிறைவேற்றும் திறமையை மெல்ல வளர்த்துக் கொள்கிறான். நாளடைவில் குறிப்பிட்ட எந்தச் சூழ்நிலையிலும்,மனச்சான்றின் வண்ணம் நேர்மையுடன் நடந்து கொள்ளும் செயலாற்றலையும் அறிவாற்றலையும் பெற்றுவிடுகிறான். இந்நிலையில் செயல்முறை அறிவியல் வாதியைவிட, அவனே தன் கடமையைச் சிறந்த முறையில் பெரிதும் உணர்ந்தவனாகிறான்.

இனி, கடமைகளைக் கீழ்க் கண்டவாறு இரண்டாகப் பிரித்துணரும் நிலையும் வழக்கில் காணப்பெறுகிறது. அவை: (1) தெளிவான கடப்பாட்டுக் கடமைகள் (2) தெளிவற்ற கடப்பாட்டுக் கடமைகள்,

இவ்விரண்டையும் கீழ்க்கண்டவாறு விளக்கிக் கொள்ளலாம்:

(1) தெளிவான கடப்பாட்டுக் கடமையை நாம் தெளிவான விதிகள் எனக் கொள்ளலாம். பிறன் மனைவியுடன் சேரக்கூடாது. கடன் பட்ட ஒருவன் அக்கடனைத் தீர்க்க எப்போதும் கடமைப் பட்டவன் என்பன போன்றவை தெளிவான விதிகளாக அமைந்த தெளிவான கடப்பாட்டுக் கடமைகள்.

வறியவனுக்குக் கொடு, தாராள மனமுள்ளவனாக இரு என்ற கட்டளைகள் செயல்முறைத் திட்டம் மேற்கொள்ளும்போது தெளிவாகப் பொருள்கொள்ள இயலாத நிலையில் உள்ளன. இவைகளே தெளிவற்ற கடப்பாட்டுக் கடமைகள்.

(2) தெளிவுக் கடப்பாட்டுக் கடமைகள் எத்தகைய கட்டுப் பாடும் இல்லாமல் எல்லாச் சூழ்நிலைகளுக்கும் எல்லாருக்கும் பொருந்துவனவாக அமைகின்றன. 'நேர்மையாக இரு' என்பதைப் போல்வன.

தெளிவற்ற கடப்பாட்டுக் கடமைகள் ஒருசில சூழ்நிலை களுக்கே பொருந்துவனாக அமைபவை.

(3) தெளிவான கடப்பாட்டுக் கடமைகள் எல்லாருக்கும், எக்காலத்துக்கும் எச்சூழலுக்கும் பொருந்துவன.

தெளிவற்ற கடப்பாட்டுக் கடமைகள் மேற்கொள்வோரின் சமுதாய நிலையை உடன்கொண்டு ஒருசிலருக்கே பொருந்து வனவாக அமைவன. 'தெளிவற்ற கடப்பாட்டுக் கடமை' என்பதற்கு, கடமைப்பாட்டின் பண்புகளில் ஏதோ தெளிவற்ற நிலை இருப்பதாக எண்ணுதல் கூடாது. நாம் இப்போது, இத்தகைய சூழ்நிலையில் எதைக் கடப்பாடாகக் கொள்ள வேண்டும் என்பன பற்றித் தெளிவில்லாத நிலையில் இருக் கிறோம் என்பதுதான் பொருள்.

(4) தெளிவான கடப்பாட்டுக் கடமைகள் முதல் தர மானவை போலவும் மிகவும் உயர்ந்தவை போலவும், தெளிவற்ற கட்டுப்பாட்டுக் கடமைகள் இரண்டாம் தரமானவை போலவும் முதல் தரமானவற்றை நோக்க, இவைகள் அவ்வளவு கடப் பாட்டிற்குட்பட்டவைகளல்ல என்பது போல்வும் நினைக்கத் தோன்றும். உண்மையாக நோக்கும்போது பல நிகழ்ச்சிகள் தெளிவுக் கடப்பாட்டுக் கடமைகளைச் செய்வதைவிட, தன் சமுதாய நன்மைக்கு ஒத்த தன் சூழ்நிலைக்கு ஏற்ற கடமை களை அவ்வப்போது செயல்முறை தகுதியால் உணர்ந்து செய்யும்போது, தெளிவான கடப்பாட்டுக் கடமைகளைவிட,

சமுதாய நன்மையை வளர்க்கும் அடிப்படையில், தெளிவற்ற கடப்பாட்டுக் கடமைகளே மிக்க வலிமைபடைத்தவை எனச் சொல்லலாம்.

கடமையும் செயல்முறை அறிவியலும்

கடமைகளைச் செயலாக்க முற்படும்போது ஒரே சமயத்தில் இரண்டு கடமைகள் ஒன்றுக்கொன்று முரண்படுவனவாகத் தோற்றமளிக்கும். எடுத்துக்காட்டாக, கல்வித் தகுதி பெறும் உரிமையால் உண்மையை அறியும் ஆற்றலுள்ள ஒரு மருத்துவர் தாம் பரிசோதித்த நோயாளி எலும்புருக்கி நோயால் தாக்கப் பெற்றிருக்கிறார் என்பதை அறிந்தார். உண்மை பேசுதல் கல்வித் தகுதியின் கடமை என்ற நிலையில் நோயாளியிடம் உண்மையைச் சொல்வதா? சொன்னால் நோயாளி, சீக்கிரமாகச் சாகும் நிலை உண்டாகலாம். அப்போது வாழ்தல் உரிமை என்பதன் கடப் பாடாகிய பிறருயிரை வாழவைத்தல் என்ற கடமைக்கு இடர்ப் பாடு உண்டாகிறது.

தற்கொலை செய்ய முயலும் எண்ணத்துடன் ஒருவன் இருக்கிறான். அவனுடைய பார்வையில் உள்ள கத்தியை அவனுக்குத் தெரியாமல் எடுத்து வைக்க எண்ணும் ஒருவன் கடமைகளின் மோதலில் சிக்கிக் கொள்கிறான். கத்தியை எடுத்து மறைத்தல் என்பது பொருளை உடையவன் அப் பொருளை அனுபவிக்கும் உரிமையை மறுத்தது போலாகும். இதை எண்ணி, கத்தியை அவனிடமே விட்டுவைத்தால் அவன் கத்தியால் தற்கொலை செய்து கொள்வான். அப்போது அவன் வாழ்வுரிமையைக் கெடுத்த குற்றம் வரும். இங்கே கடமை மோதல் உண்டாகிறது. இதனை,

'இருதலைக் கொள்ளி எறும்பு', 'தரும சங்கடம்', 'இரண்டு கன்றுக்கு இரங்கும் பசு' என்ற வழக்குகளால் தெரிந்து கொள்ளலாம். இத்தகைய கடமை மோதலைச் 'செயல் வழி அறம்' என்ற பிரிவில் அறிவியலார் ஆய்வு செய்வது மரபு. மேலே குறிப்பிடப்பெற்ற அற மோதல்களை ஆராய்ந்த அறிஞர்கள் சில முடிவுகளை வெளியிட்டுள்ளார்கள்.

இரண்டு கடமைகள் ஒரே சமயத்தில் வந்து தாக்கி, எதைச் செய்வது? என்ற வினாவை எழுப்பி, தனிமனிதனைத் திண்டாட விடுகிறது என்று கூறுவது உண்மையன்று, கடமைகள் பல வந்து மோதுவன போலத் தோன்றலாம். ஆனால், ஒரு சமயத்தில், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில், ஒரு கடமைதான் செய்வதற்குப் பொருத்தமுடையதாக அமையும். அதைத்தவிர ஏனையவை

அச்சமயத்தில் அச்சூழ்நிலைக்கும் பொருத்தமற்றவைகளே. எடுத்துக்காட்டாக, தற்கொலை முயற்சியை மேற்கொள்ள விருக்கும் ஒருவனிடமிருந்து கத்தியை எடுத்துவைப்பதா, வேண்டாவா எனில் கத்தியை எடுத்து மறைப்பதுதான் அந்த நேரத்தில் அத்தகைய சூழலில் செய்யவேண்டிய கடமை. ஏனெனில் உயிர்வாழ் வுரிமையானது பொருளுடைமை உரிமையை விட உயர்ந்தது. எனவே, ஒரு சமயத்தில், ஒரு சூழலில், ஒரு வனுக்கு ஒரு கடமைதான் செய்யக்கூடியதாக அமைந்திருக்கும். முரண் இருப்பதாகத் தோன்றுவதற்குக் காரணம் அவனுக்கு செயற்பாட்டு அறத்துக்குரிய அறிவுவளர்ச்சிப் பெறாமையே. தேவையற்ற கடமைகளிலிருந்து, இப்போது இச்சூழலுக்குத் தேவையான கடமை இது என்று பகுத்து எடுத்துச் செயலாற்று தற்குத் துணைபுரியும் அறிவியலறிவு முழுமையாக வளர்ச்சி பெறாமையே காரணம் என்று முடிவெடுக்கிறார்கள் அறிவியற் சான்றோர்கள்.

கடமைகளின் பிரிவுகள்

(1) நிறைவுற்ற கடமை, நிறைவற்ற கடமை என்ற ஒரு பிரிப்பு உண்டு. நிறைவுற்ற கடமைகள் தெளிவானவைகளாகவும், சுருங்கிய அளவில் திட்பமுடையனவாகவும், தனிமனிதர் களால் சிறிதளவு பிழையும் நேராதவாறு கடைப்பிடிக்கக் கூடியவைகளாவும் இருக்கும். நிறைவற்ற கடமைகளோ பெரிதும் தெளிவற்றவைகளாகவும், தனிமனிதர்களால் பிழைநேராத வகையில் கடைப்பிடிக்க முடியாதவைகளாவும் இருக்கும்.

மேலும் நிறைவுற்ற கடமைகள் பெரிதும் எதிர்மறை பொருளால் தெரிவிக்கப் பெறுபவைகளாக அமையும். ஆனால் நிறைவற்றகடமைகள் பெரிதும் உடன்பாட்டுஅமைப்பில் இருக்கும். அவைகளைத் திட்டவட்டமாகவும் முழுமையாகவும் அமைத்துக் காட்டமுடியாது. எடுத்துக்காட்டாக, கொல்லாதே, திருடாதே, பொய் சொல்லாதே போன்ற கடமைகள் நிறைவுற்ற கடமைகள். அன்பு அல்லது இரக்கம் காரணமாக அமைபவைகளாய் காலம், இடம், சிறப்புச் சூழ்நிலைகள் ஆகியவைகளோடு தொடர்புடையவைகளாய், பெரிதும் நம்முடைய முடிவையே சார்ந்தவைகளாய் அமை பவைகளே இரண்டாம் வகையைச் சார்ந்த கடமைகள்.

(2) நீதியினடிப்படையிலான கடமைகள், இரக்கவுணர்வின் அடிப்படையிலான கடமைகள் என்ற ஒரு பிரிப்பு முறையும் உண்டு. நிறைவுற்ற கடமைகள் நீதியினடிப்படையிலான

கடமைகள், இரக்கவுணர்வின் அடிப்படையிலான செயல்கள் சிலவுள. ஆனால் அவைகள் கடமைகளாகா. ஆனால் அவைகள் அரசினாலோ சமூகத்தாலோ வலியுறுத்தப்பெறும் தகுதியுடையவைகள். இவ்வேற்றுமையை வேறுவகையாகவும் நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம். நீதியியலான அல்லது சட்டவியலான கடமைகளில் அமைந்திருக்கும் தெளிவான தன்மை, திட்டவட்டமாக வடிவமைத்துக் கொடுக்க இயலும் அமைப்பு ஆகியவைகளை அறவியலான அல்லது ஒழுக்கவியலான கடமைகளில் எதிர்பார்க்க இயலாது.

(3) 'பிராட்லி' என்பாரின் 'என்னுடைய நிலையும் நிலைக்கொத்த கடமைகளும்': 'பிராட்லி' என்பாரின் கடமை பற்றிய கருத்தானது 'என்னுடைய நிலையும் நிலைக்கொத்த கடமைகளும்' என்ற தலைப்பில் பேசப்பெறும். எந்த ஒரு மனிதனும் ஒரு குறிப்பிட்ட சமுதாயச் சூழலில், ஒரு குறிப்பிட்ட நோக்கு உள்ளுக்கியுடன்தான் பிறந்துள்ளான். ஆகையால் அவனுடைய சிறப்புக்கடமைகள் அவனுடைய வாழ்வில் அமைந்து, அவனுக்கேயுரிய தன்மை நிலையினால் திட்டவட்டமாக வரையறை செய்யப் பெற்றுள்ளன. எனவே, தனிமனிதனின் தனித் தன்மை நிலையினால் வரையறை செய்யப்பெற்ற கடமைகளை உள்ளார்ந்த நம்பிக்கையுடன் அவைகளின் உள்ளார்ந்த நன்மைகளில் முழுமையாக இணைந்து செயலாற்ற வேண்டும். அத்தகைய கடமைகளைச் செயற்படுத்துவதன் மூலம்தான் அவனுடைய உயர்ந்த தனிநிலை நன்மையையும் பொது நன்மையையும் உணர்ந்து துய்த்தல் இயலும். இவ்வாறு, ஒரு தனிமனிதனுடைய கடமைகளை வரையறுத்துணர்தல் என்பது பெரிதும் அவனுடைய அகச்சாட்சியைப் பொறுத்தே அமைகிறது. ஆகையால் ஒவ்வொரு மனிதனும் அவனுடைய தனித்திறமையின் அமைப்பை அறிந்து அத்திறமைக்கு ஏற்ப வாழ்வில் ஒத்தியங்கும் தன்மையுடைய கடமைகளை வரையறை செய்து, கடைப்பிடிக்கும் நிலையை மேற்கொள்ளவேண்டும். தனிமனிதனின் சிறப்புக் கடமைகள் அவன் வாழ்வில் அவன் தகுதியால் நிற்கும் நிலையினால் அல்லது திட்டவட்டமான சமுதாய உறவுகளில் அவனுடைய இடம்எதுவோ அதனால் வரையறைசெய்யப்பெறுகின்றன. மேலும் குறிக்கோளை நோக்கிய அவனுடைய என்றும் மாறாத, ஒருபடித்தான பக்தியுணர்வுகூட, அவனுடைய அறிவியலான நிலையை அடிப்படையாகக் கொண்டுதான் ஒழுங்கு செய்யப் பெறுகிறது. இவ்வாறு ஓர் ஆசிரியர், ஓர் மாணாக்கர், ஓர் ஆட்சியாளர், ஒரு தொழிலாளி, ஒரு தந்தை, ஒரு தாய், ஒரு குழந்தை என்றிவ்வாறானவர்களும் இவர்களுக்கு எதிர்நிலை

வகுப்பினர்களாக அமைந்தவர்களும் ஆகியோர்களின் கடமைகள் அமைகின்றன.

இவ்வாறான அடிப்படையில் ஒரு மனிதனுக்கு மூவகைக் கடமைகள் அமைகின்றன:

(1) உயிர் வாழ்தல் பற்றிய நன்மதிப்பு,கட்டற்ற நிலைபற்றிய நன்மதிப்பு, உடைமைபற்றிய நன்மதிப்பு முதலியவைகளாகிய பொதுமைக் கடமைகளை ஒருவன் செய்யவேண்டும்.

(2) சமுதாயத்தில் அவனுடைய தனியுரிமையை நிலைக்குப் பொருந்துவதாய், அவனுக்கே உரிய சிறப்புச் சூழ்நிலைகளுடன் தொடர்புள்ளதாய் அமைந்த கடமை.

(3) காலத்துக்குக் காலம் மாறுபடும் தன்மையுடையதாய் அவன் சூழ்நிலையைச் சார்ந்ததாய் அமைந்த சில புதிய கடமைகள் (மக்கள் தலைவன் ஒருவன் மந்திரியாகிறான். அப்போது அவன் மக்கள் தலைவனாயிருந்தபோது அமைந்த கடமைகள் மந்திரியாக மாறியபோது மாறிவிடுகின்றன).

மிகவுயர்ந்த கடமை ஒன்று

எந்த ஒரு தனிமனிதனுக்கும் அவனுடைய மிகவுயர்ந்த கடமை ஒன்று உண்டு. அவன் அவனுடைய உண்மையான, உயர் குறிக்கோள் தன்மையோடு இணைந்துதான், அறிவடிப்படையிலான சமூக இயலாக உயிர்ப் பகுதியை அல்லது உயிரை உணர்ந்து அப்பகுதியின் உண்மைத் தன்மையோடு இணைந்து, அவ்வுண்மைத் தன்மையின் அனுபவத்தைப் பெறவேண்டும். அத்தகைய உயிரின் பகுதியின் உண்மைத் தன்மையுடன் இணைந்து அனுபவம் பெறுதலே உயிர் மதிப்பீட்டுக்குரிய செயலாகும். அத்தகைய உயர் அனுபவத்துக்குத் துணை செய்யும் கடமைகளை அவன் மேற்கொள்ள வேண்டும். அத்தகைய கடமைகளே மிக உயர்ந்தவை. மேலும், அவை மிகவும் விரிவானவை. அத்தகைய கடமைகள் நிறைவுறும் முயற்சியில் ஏனைய கடமைகள் அமைய வேண்டும். சாதாரண, ஏனைய கடமைகளுக்குள் முரண் ஏற்படும் போது, அத்தகைய உயர் கடமையின் மூலமாகத்தான் விளக்கம் பெற வேண்டியிருப்பதால் அத்தகைய உயர் கடமையை உணர்ந்து செயற்படுத்துதல் வேண்டும்.

கடமைகளின் பொதுப்பண்பு முறைகள்

கடமைகள் பொதுவாக மூன்று வகைகளாகப் பகுக்கப் பெறுகின்றன. உயிரைப் பற்றிய கடமை; ஏனையவைகளைப் பற்றிய கடமை: கடவுளைப் பற்றிய கடமை.

உயிரைப் பற்றிய கடமை

உடலியற் கடமை, பொருளியற் கடமை, அறிவியற் கடமை, அழகியற் கடமை, அறவியற் கடமை என்ற ஐந்தும் உயிரைப் பற்றிய கடமையுள் அடங்கும். தற்காத்தல், உடல்நலம் பேணல், புதிய ஊக்கக் கூறுகளை உளதாக்கிக் கொள்ளல் முதலியன உடலியற் கடமைகளாகும். தற்கொலை செய்துகொள்ள எந்த மனிதனுக்கும் உரிமை இல்லை. ஒருவனுடைய உயிர் என்பது அவனுடையது மட்டும் அன்று. அவனுக்கும் ஏனையோருக்கும் இணைந்த ஒரு பொது உடைமைப் பொருளாகவே ஒவ்வொருவனுடைய உயிரும் இருக்கிறது. ஆகையினால் ஒருவன் தன்னுடைய உயிர்வாழ்வைப் பாதுகாக்கவும் நீட்டிக்கவும் வேண்டும். அவன் அற வாழ்வின் இன்றியமையாமையை வலிமையுறுத்துவதற்காக, அவன் உடல் நலத்தைப் பேணி வாழ்தல்வேண்டும். உடலியல் சார்ந்த குறிக்கோள் வாழ்வுகளை ஒருவன் பேணிக் காத்தல் வேண்டும். ஏனெனில், அவைகளே ஏனைய குறிக்கோள் வாழ்வுகளுக்கெல்லாம் அடிப்படையானவைகள். எந்த ஒரு மனிதனும் எல்லை கடவாத, பண்பார்ந்த வாழ்க்கை வாழ்தல் வேண்டும்.

செல்வத்தைச் சேர்த்தல் வேண்டும். அதே சமயத்தில் சிக்கனமான வகையில் அதனை உபயோகிக்க வேண்டும். செல்வம் பொருளியல் வகையிலான குறிக்கோள் வாழ்வை உடையது. ஆனால் செல்வமே வாழ்வின் இறுதியான குறிக்கோள் வாழ்வை உடையது என்று கருதுதல் கூடாது. ஆனால் அதனைக் கருவியாகக் கொண்டு வேறு பல்வகையான உயர்ந்த, உள்ளார்ந்த குறிக்கோளை அடையலாம்.

அறிவின் தேவையை எண்ணி, அதை நன்கு வளரவைத்தல் வேண்டும். அறிவை நன்கு வளரவைத்துக் கொள்ளாதிருப்பதற்கு எந்த ஒருவனுக்கும் உரிமை இல்லை. ஏனெனில், அறிவின் வளர்ச்சியானது ஒருவனுடைய ஆளுமை வளர்ச்சிக்கு மிகமிகத் தேவையானது. ஆகையால் அறிவின் வளர்ச்சியை உள்ளிட்ட கடமைகள் மிகமிகத் தேவையானது.

அழகியற் சார்பான ஈடுபாட்டைக் கொள்ள வேண்டும். அழகியற் கலையை அனுபவிக்கவும் விமரிசிக்கவும் வேண்டும். எனவே, அழகியல் சார்பான கடமைகளை ஒருவன் கட்டாயம் மேற்கொள்ள வேண்டும்.

ஒழுக்கவியற் சார்பான கடமைகளையும் மேற்கொள்ள வேண்டும். ஒருவன் தன்னுடைய இயல்பூக்கங்கள், நுகர்ச்சி

வேட்கை, ஆசை, அவா ஆகியவைகளைக் கட்டுப்படுத்தவேண்டும். அறிவின் துணைகொண்டு, புலனுகர்ச்சியறிவை ஒழுங்குசெய்ய வேண்டும். ஆளுமைப் பண்பை ஒருவன் மதிக்க வேண்டும். தன்னடக்கம், தன்னம்பிக்கை என்ற இரண்டும் ஒருவனுடைய ஒழுக்கவியற் கடமைகளை வரையறை செய்யும். உண்மையும் அழகும் நன்மையின் இரு கூறுகளாகும். என்வே, நன்மை என்பது அறிவு, அழகு, அறம் என்ற மூன்றன் குறிக்கோள் உயர்வுகளும் இணைந்த நிலையில் அமைவது ஆகும். எனவே, நன்மை என்பதன் உள்ளார்ந்த உயர் குறிக்கோள்களாக இவை மூன்றும் உயிரினுடைய கடமைகளாகும். இவைகளையே தனிமனிதனின் தனிமைக் கடமைகள் எனக் கூறலாம்.

மற்றவர்களைப் பற்றிய கடமை

இது குடும்பக் கடமைகள், சமூகத்திலுள்ள ஏனைய மனிதர்களைப்பற்றிய கடமைகள், நாட்டைப் பற்றிய கடமைகள், மனிதத் தன்மையின் வளர்ச்சிப் பற்றிய கடமைகள். மிருகங்களைப் பற்றிய கடமைகள், தாவரங்களைப் பற்றிய கடமைகள் ஆகியவைகளை இணைப்பது.

(அ) குடும்பம் பற்றிய கடமை: தாய் தந்தையர்களை மதிப்பதும், அவர் நலம் பேணுதலும், வயோதிகக் காலத்தில் அவர்களைக் காத்தலும், அவ்வாறே குழந்தைகளின் மேல் அன்பு செலுத்துதல், குழந்தைகளின் உடல்நலம், கல்வி, நல்லொழுக்கம் ஆகியவைகளைப் பாதுகாத்தல், அவ்வாறே அவர்கள் தத்தமக்கேற்ற வேலைகளைத் தேர்ந்தெடுத்துப் பணியாற்றும் வகையில் உதவி செய்தல் ஆகியவைகள் குடும்பம் பற்றிய கடமைகளாகும். கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் அன்பு செய்யவும் நன்மதிப்பு அமைத்துப் பழகவும் வேண்டும். கணவன் தன் மனைவியைத் தனக்குக் கீழ்ப்பட்டவளாக நினைக்கக்கூடாது. இவைகள் குடும்பக் கடமைகளாகும்.

(ஆ) சமூகத்தில் ஏனைய மனிதர்களை நோக்கிய கடமை: வாய்மை, தன்னைப்போலப் பிறரையும் மதிக்கும் தன்மை, பிறிதின் நோய் தன்நோய்போல் காணல் ஆகிய மூன்றையும் உள்ளிட்டதாகவே இக்கடமை அமையும்.

வாய்மை என்பது உண்மையை அடிப்படையாகக் கொண்டதேயாயினும், அது ஒருவன் என்ன நினைத்தானோ அதையே சொல்ல வேண்டும்; என்ன சொன்னானோ அதையே செய்ய வேண்டும் என நினைத்தல், சொல்லுதல், செய்தல் என்ற மூன்றிற்கும் வேறுபடாமல் இயைய நிறுத்தி வாழ்தல்வேண்டும் என்பன விளக்குவதே வாய்மை.

ஒருவன் பிறருக்கு உதவிய வாக்குறுதிகளைக் காப்பாற்ற வேண்டும். உண்மையில் பற்றுறுதி உடையவனாயிருத்தலை ஒருவன் எல்லா வகையாலும் வெளிப்படுத்தக்கூடிய செயல் முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

நல்லொழுக்கத்தின் மேலாய நற்பண்பு

சொற்பொருள் விளக்கம்

நல்லொழுக்கம் என்ற சொல்லை 'வர்ச்சுயூ' (VIRTUE) என்ற சொல்லின் தமிழாக்கச் சொல்லாகக் கொள்வது மரபு. 'வர்ச்சுயூ' என்ற சொல் எத்தகைய பொருளைக் குறிக்கிறது என்பதை அதன் வழக்கு நோக்கித் தெரிந்து கொள்ளவேண்டும். This medicine has lost,its virtue என்ற சொற்றொடரின் கருத்தை நினைக்கும்போது, அது தன்னை உபயோகித்தவர்களுக்கு எத்தகைய பயனைத் தரவேண்டுமோ அப் பயனைத்தரும் ஆற்றலை இழந்துவிட்டது என்பதே அத்தொடரின் பொருளாக அமைகிறது? இங்கே 'வர்ச்சுயூ'என்பது அதன் உண்மைத் தன்மை என்ற பொருள்படும். அவ்வாறே ஒரு மனிதனை He is virtuous என்கிறோம். அதன்மூலம் அவன் செயற்பாட்டுத் தன்மையுடையவன் என்பதோடு அவன் செயற்பாட்டினில் பயன் விளைக்கும் உண்மைத் தன்மை இருக்கிறது என்பது பொருள். இனி, இவைகள் வர்ச்சுயூக்கள் என்னும் பொருளில், 'They are virtues' என்ற தொடர் வருகிறது. இங்கே 'செயற்பாடுகளில் பயன் விளைக்கும் உண்மைத் தன்மைகள்' என்பதாகப் பொருள் கொள்ளவேண்டும்.

அறிஞர்களின் விளக்கம்

'வர்ச்சுயூ' என்பதை ஒழுக்கத்தின் ஒரு பண்பு எனக் கொள்வது ஒரு விளக்கம். நல்லது ஒன்றைச் செய்ய முற்பட்ட ஒருவன் நல்லது எது? என்ற வினாவை எழுப்பி ஆராய்ந்தான். இது நல்லது, என முடிவு செய்தபின், அந்த நல்லதை எப்படி செய்வது? என்ற வினா நிகழும். நல்லதைச் செய்யும் முறை மனிதனுக்கு மனிதன் மாறுபடலாம். ஏற்றுக்கொண்ட ஒருவன் ஏற்றுக்கொண்ட ஒரு நல்லதை, குறிப்பிட்ட ஒரு வகையில் செய்யும் திறைமையை வர்ச்சுயூ எனக் கொள்ளலாம் என்பது.

பொதுமைக் கடமைகள் பல. எடுத்துக்காட்டாக, தன்னைப்போலவே மற்றவரும் வாழும் உரிமையுடையவர்கள் என நினைத்து, அவர்கள் வாழும் உரிமைக்கு ஊறு நேரா வண்ணம் கடமைகளை மேற்கொள்ளல். இவ்வாறே கல்வி, சுதந்தரநிலை போன்ற உரிமைகளின் மூலமாக எழும் கடமைகள் பல. இவ்வாறு கடமைகள் பலவாகும். கடமைகள்

பலவற்றுள்ளும் ஏதேனும் ஒரு கடமையை எடுத்துக்கொண்டு, சிறந்த வழியில் அதனைச் செய்தல். இதுவே 'வர்ச்சுயூ' என்பதன் விளக்கமாகக் கொண்டவர் பலர்.

'வர்ச்சுயூ'என்பதற்குச் செயல்களின் உள்ளோடு அமைந்து வரும் பண்பு என விளக்கம் கண்டனர்.மனிதன் தன் வாழ்நாளில் பலவகையான செயல்களைச் செய்கின்றான். செயல்கள் அவ்வப் போது நிகழ்பவை. தன்நிலையில் அமைபவை, ஆனால் அவன் பலவேறு சமயங்களில் பல்வேறு தன்மைச் செயல்களைச் செய்த போதிலும் அவனை நேர்மையானவன் என்று குறிப்பிடும்போது அவன் பல காலங்களில் பல செயல்கள் செய்திருந்தாலும் அவை எல்லாவற்றிலும் உள்ளீடாக அமைந்த 'நேர்மை' என்ற ஒன்றை 'வர்ச்சுயூ' என்பர். ஒருவன் தேர்ந்து கொள்ளும் செயல் எது என்பது பற்றிய ஆய்வு தேவையில்லை. ஆனால், செய்முறையில் அவன் 'நேர்மைக் குணத்தை வெளிப்படுத்திவிடுவான்' என்பதே.

கடமைகளை மேற்கொண்டு செய்வதை 'நன்னடத்தை' எனக் குறிப்பிடுவதுண்டு. நன்னடத்தைகளையே வழக்கமாகக் கொண்டு செய்யும்போது அவைகள் நற்பண்புள்ள நன்னடத்தை (virtues of righteous) என்று பேசப்பெறுகிறது. இங்கே நன்னடத்தை அவனுடைய வழக்கமாக (habit) அமைந்து விடுகின்றபோது வழக்கமாகிவிடும் பண்பு (habituality)'வர்ச்சுயூ' என விளக்கப் பெறுகிறது.

நற்செயல்களாயினும் சரி, தீச்செயல்களாயினும் சரி அவை களைச் செயற்படுத்துவதற்கு இவை இவை தேவை என்ற வகையில் அமையும் பண்புகளை 'வர்ச்சுயூஸ்' என விளக்கு வதையும் நாம் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக விடா முயற்சி என்பது ஒருவகைப் பண்பு. நற்செயல் ஒன்றைச் செய்வதற்கு இது தேவை. இவ்வாறே தீச் செயலுக்கும் இது தேவையே. விடாமுயற்சி என்பது ஒருவகைப் பொதுப் பண்பு அல்லது ஒருவகைச் செயற்பாட்டுமுறை. இது எதனுடன் இணைகிறதோ அது சிறப்புப்பெறும்.

'வர்ச்சுயூ' என்பது ஒரு பரந்த, விரிவாக்கமுள்ள ஒருவகை ஒழுக்கம் எனவும் விளக்குவர் சான்றோர். இவைகளெல்லாம் மன எழுச்சியை அடிப்படையாகக் கொண்டவை. இவைகள் தருகின்ற உணர்வை அல்லது மனஎழுச்சியை விளக்கிக் கூற இயலாது. ஆயினும் நல்ல செயல்கள் என வரையறுக்கப்பெற்ற வைகளைச் செயற்படுத்தும்போது, அங்கே ஓர் அழகுத் தன்மை விளங்குவதைக் காணலாம். அதனுடன் அறவழியிலான இயல்புப் பயனையும் அது கொடுக்க வல்லதாகிறது.

அறிஞர்தம் விளக்கங்களின் உட்கிடை

மேலே கூறப்பெற்ற பல வகையான விளக்கங்களிலிருந்து வர்ச்சுயூ என்பதன் விளக்கமாக எதைக் கொள்ளமுடியும்? என்பது வினா. முதலில் நற்பண்புகள் வேறு,நல்லொழுக்கம் வேறு எனக் கொள்ளவேண்டும். நல்லொழுக்கங்களை மேற்கொண்டு செயலாற்றினாலும் அவைகள் நற்பண்புகளோடு இணைந்தால் தான் பயன் தருவனவாகின்றன. நற்பண்புகள் என்று நன்மையையும் பண்புகளையும் இணைத்துக் கூறவேண்டிய தன்நுட்பத்தையும் உணர்தல் வேண்டும். விடாமுயற்சி போன்றவை நற்செயல்களையும் ஊக்குவிக்கும்,தீச்செயல்களையும் ஊக்குவிக்கும். இவ்வாறு இருவகைகளிலும் சேர்ந்து பயன் விளைவிக்கும் தன்மையின்றி, நற்செயல்களையே சார்ந்துநிற்கும் நன்மைத் தன்மை உடைய காரணத்தால் நற்பண்பு என்று கூறப்பெற்றது. ஒருவன் இத்தகைய நற்பண்பினை தன் மனச்சான்றின் வழியே செயல்களை மேற்கொண்டு செய்வதால்மட்டும் பெற்று விடமுடியாது. சாதாரணமாக, கடமையை நல்லொழுக்கம் எனலாம். நல்லொழுக்கமும் அறவாழ்வும் ஒன்றெனலாம். நல்லொழுக்கத்துக்கும் மேலான நற்பண்புள்ள நல்லொழுக்கம் என்பது ஒன்று உண்டு. நல்லொழுக்கம் எண்ணிக்கையில் பெருகலாம். ஆனால், நல்லொழுக்கத்துக்கும் மேலான நற்பண்புள்ள நல்லொழுக்கம் மிகச் சிலவாகவே இருக்கும். நற்பண்புள்ள நல்லொழுக்கத்துக்கு மனவெழுச்சியை மிகுதியாக்கும்ஆற்றல்உண்டு. அவ்வாறே, நன்மை, நேர்மை என்ற ஒன்றை அனைவர் உள்ளத்திலும் பதியவைக்கும் ஆற்றலும் உண்டு. அறத்தை மேற்கொண்டு வாழ்வோர் அனைவராலும் இத்தகைய நற்பண்புள்ள நல்லொழுக்கத்தை அடையமுடியாது. மேலே குறிப்பிடப் பெற்றவைகளைக் கீழ்க்காணுமாறு தொகுத்துக் காணலாம்:

(1) நற்கடமைகளையும் அவ்வவற்றின் நன்மைப் பயன்களைத் தரவல்ல உயிர்ப் பண்பாய் நிலவுவது.

(2) பிறவற்றோடு இணைந்து பயன் தரக் கூடியதாயினும் தீமையோடு சேராமல் நன்மையுடன் மட்டுமே சேரும்.

(3) நற்செயல்களோடு இணைந்துநின்று அவைகளின் பயனைத் தரும் ஆற்றலோடு. இணைந்துநின்று தன்னையும் புலப்படுத்தி, தன் பயனாகிய 'நேர்மையான' என்ற சிறப்புப் பயனையும் தரும்.

நல்லொழுக்கத்தின் மேலான நற்பண்பை அறியும்முறை —இச்சைச் செயலும் அனிச்சைச் செயலும்

மனிதன் அறிவுடையவன் என்று கூறுவதைவிட அறிவின் வழியில் இயங்குபவன் எனக்கூறலாம். அறிவுடைய மனிதன் விரும்பியேற்கும் செயலே இச்சைச்செயல். உணர்ச்சியை ஏற்படுத்தும் ஆசை, அதனை ஒழுங்கு செய்யும் அறிவாற்றல் ஆசையின் நிறைவைக் குறிக்கோளாகக் கொண்டு, அறிவு செலுத்தும் வழியில் செயலாற்றும் திறன் செயல் செய்யத் தொடங்குகின்றது. இங்கே உணர்ச்சி, அறிவு, செயல் ஆகிய மூன்று திறமைகளும் இணைகின்றன எனவே, இச்சைச்செயல் என்பதில் அறிவு வழிப்பட்ட செயல்திறமும், அறிவினால் ஒழுங்கு செய்யப்பெற்ற ஆசையின் நிறைவை உட்கொண்ட உணர்ச்சியும் இணைந்தே இருக்கின்றன. எனவே, இச்சைச்செயல் என்பது மனிதன் தன் அறிவினால் இது நல்லது என்றோ, இது தேவை என்றோ எண்ணி, ஆராய்ந்து தானே தேர்ந்து எடுத்துக்கொண்ட செயலே.

இச்சைச் செயலைச் செய்ய முற்படும்போது அறிவு நெறிப் படுத்தவேண்டும். செயல்திறமானது அறிவு வகுத்த பாதையில் செல்லவேண்டும். இச்சைச் செயலில் ஒரு மனிதன் ஈடுபடும்போது அவன் அறிவு, அச்செயல் செய்ய வேண்டிய பாதை. முடிவு பெறவேண்டிய முறை, பயன், பின்விளைவு ஆகிய எல்லாவற்றையும் பற்றிய முடிவுகளைக் கொண்டதாகவே இருக்கும். எனவே, மனிதன் தன் அறிவால் தேர்ந்து எடுத்துக் கொள்ளப்பெற்ற செயலே இச்சைச் செயல்.

இச்சைச் செயலைப் பலமுறையும் திருப்பித் திருப்பிச் செய்யும்போது அது அனிச்சைச் செயலாக அமைகிறது. இச்சைச் செயலை முயற்சியோடு மேற்கொள்ளவேண்டும். அறிவு துடிப்பாக இருந்து வழி வகுக்க வேண்டும். அதே செயலைப் பலமுறை செய்யும்போது மிகுந்த முயற்சியில்லாமலும் செய்யமுடியும். அவ்வாறே அறிவு அத்துணை விழிப்பாயில்லாத காலத்திலுங்கூடச் செய்யமுடியும். இதையே 'பழக்கச் செயல்' Habitual action என்று கூறலாம். பலமுறையும் முயற்சியோடு செய்ததன் பயனாக ஒருவகை அமைப்பு உண்டாகி விடுகிறது. எனவே, அனிச்சைச் செயலும் இச்சைச் செயல்தான். ஆனால் பழக்கம் அமைந்துவிட்ட காரணத்தால், தான் எடுக்கவேண்டிய மிகு முயற்சியில்லாமலேயும் செய்யும் நிலைமை உண்டாகிவிடுகிறது.

அனிச்சைச் செயல் அல்லது பழக்கச் செயல் என்பது எவ்வாறு அமைகிறது?

தாமே விரும்பி, ஆராய்ந்து முடிவுசெய்து, உழைப்பினால் வருந்திச் செய்கின்ற இச்சைச் செயலைப் பன்முறையும் திருப்பித் திருப்பிச் செய்யும்போது மனத்தில் ஒருவகை அமைப்பு உண்டாகிவிடுகிறது. அத்தகைய மன அமைப்பானது ஒருவனுக்கு அவனை முயற்சியின்றியே அச்செயலைச் செய்விக்கும் ஆற்றலை உண்டாக்கிவிடுகிறது. எடுத்துக்காட்டாக ஒரு மாணாக்கன் தேர்வுக்கு வரக்கூடிய ஓர் ஆங்கிலக் கட்டுரையை, விரும்பி, இதுவரும் என ஆராய்ந்து தெளிந்து, முயற்சியெடுத்துப் படித்து நெட்டுருச் செய்கிறான். நெட்டுருச் செய்யும்போது பல முறை முயற்சியோடு செய்து, பின்னர் அதையே திருப்பித் திருப்பிச் செய்கிறான். நெட்டுருச் செய்துவிட்டேன் என்று சொல்லும்போது அவன் மனநிலை என்ன? மனப்பதிவின் நிலை என்ன? முதல் வரியைத் தொடங்கினால் இறுதிவரை எத்தகைய முயற்சியும் இல்லாமலேயே வாய் முணுமுணுக்கிறது. தூக்கத்திலுங்கூட அவன் அதைச் சொல்ல வல்லவன் ஆகிறான். இதையே அனிச்சைச் செயல் என்று சொல்வர். அனிச்சைச் செயலைச் செய்விக்கும் மனப்பதிவைத்தான் நாம் இங்கே மேலும் சந்திக்க வேண்டும்.

நல்ல அனிச்சைச் செயலின் மனப்பதிவு

தீய நடத்தைகளையும் ஒருவன் விரும்பி ஏற்று அவைகளை இச்சைச் செயல்களாக ஆக்கி, பின்னர் அனிச்சைச் செயல்களாக அமைத்துக் கொள்ளலாம். அவன் மனத்தில் தீய அனிச்சைச் செயல்களின் மனப்பதிவு இருக்கும். அவ்வாறே நன்னடத்தையை விரும்பியேற்றுப் பழகியவனுக்கு அவன் மனத்தில் நன்னடத்தைப் பழக்கச் செயலுக்கு மூலமான 'நன்னடத்தை மனப்பதிவு' இருக்கும். அதற்குத்தான் 'நற்பண்பு' (character) என்று பெயர்.

எனவே, நல்ல இச்சை செயல்கள், நல்ல அனிச்சைச் செயல்களாக அமைய, நல்ல அனிச்சைச் செயல்களுக்கு மூலமான நல்ல மனப்பதிவுகள் 'நற்பண்புகள்' எனப்பெறும். நல்ல மனப்பதிவுகளை இயக்கக் கூடியவைகளாய், நற்பண்புகளுக்கெல்லாம் மூலமாய், சிறந்ததாய், உயர்ந்ததாய் அமைந்த நற்பண்புகளே நல்லொழுக்க நற்பண்புகள் (virtues) என வழங்கப் பெறும்.

நல்லொழுக்க நற்பண்புகளில் அடங்கியவை

நல்லொழுக்க நற்பண்புகள் என்று சொல்லும்போது அவை நல்லொழுக்கத்தைவிட மேலானது என்றும் நல்லொழுக்கத்தோடு தொடர்புடையது என்றும் கொள்ள வேண்டும்.

நல்லொழுக்கம் என்று சொல்லும்போது அது மனிதன் தானே விரும்பி, ஆய்ந்து, முயற்சிசெய்து ஏற்றுக்கொண்ட நற்செயல்

களே, பின்னர் முயற்சியின்றிச் செயற்படும் நல்லொழுக்கங் களாயின என்பதை நாம் இணைத்தல் வேண்டும். எனவே 'நல் லொழுக்க நற்பண்புகள் என்ற தொடரின் மூலம், நன்மையையும் அதைத் தேர்ந்தெடுக்கும் அறிவையும், அதற்குரிய முயற்சியை உழைத்து மேற்கொண்டதும் பின்னர் இயல்பாகப் படிக்க உபய மாய் அவை அமைந்தன என்பதும் அடங்கிய கருத்துகள். எனவே, அறிவுடன் இணைந்த பழக்கவயப்பட்ட நற்செயல்களே நல்லொழுக்க நற்பண்புகள் (virtues) ஆயின.

எனவே, நல்லொழுக்க நற்பண்புகள் எனப்பெறுபவை இயல்பிலேயே ஒருவனிடம் அமைந்த பண்புகள் அல்ல. ஒவ்வொரு வனும் விரும்பியேற்று, இச்சைச் செயல்களாக அமைத்து, பின்னர் அனிச்சைச் செயல்களாக்கி, அவ்வாறு அமைத்துக் கொண்டவைகளே. எனவே, நல்லொழுக்க நற்பண்புகள் ஒருவன் அறிந்து அமைத்துக் கொண்டவைகளே.

நல்லொழுக்க நற்பண்பு என்பது நிலையான, முயன்று சேகரித்த மனப்பதிவின் அல்லது நற்பண்பின் நிலை எனக் கொள்ள வேண்டும். அது பண்புகளுக்கும் மூலமாகிய நற்பண்பு. அது நல்லொழுக்கம் மூலமாகத்தான் வெளிப்படும். நல் லொழுக்கம் என்பது என்ன? நற்கடமைகளை விரும்பியேற்று, அவைகளை அனிச்சைச் செயல் கடமைகளாக ஆக்கிச் செயற் படுத்துவது என்பதே நல்லொழுக்கம். பழக்கமாகிவிட்ட நற் கடமைகளில்தான் 'நற்பண்பு' மூலமாக நின்று விளங்கக் காணலாம்.

சுருங்கக் கூறின் பழக்கவயப்பட்ட நற்கடமைகளுக்கு மூல மாகிய நல்லொழுக்கமானது, நாளடைவில் பழக்கவயப்பட்ட நல் லொழுக்கமாக அமையும். அத்தகைய பழக்கவயப்பட்ட நல் லொழுக்கமே 'நற்பண்பு' (virtue) எனலாம். இங்கே 'நல்லொழுக்க நற்பண்பு' என்பதன் பொருள் என்ன?

ஒரு கடமையை மேற்கொள்ளும்போது அறிவு, இச்சை, செயல் ஆகிய மூன்றும் தனித்தனி நிலையில் இசைவு பெறாமல் நின்று தத்தம் முறையீடுகளை எழுப்புகின்றன. பின்னர் அறிவின் துணைக்கொண்டு இச்சையை அடக்கி, ஒழுங்குபடுத்தி, செயல் நிலையைத் தூண்டி, நற்கடமையைச் செயலாக்க முற்படுகிறோம். இம்மூன்றையும் தனித்தனியே நிறுத்தி, செம்மையாகக் கவனித்து எச்சரிக்கையுடன் செயற்படுத்துகிறோம். இந்நிலையில் நல் லொழுக்கம் உண்டாகும். திருப்பித் திருப்பிச் செய்யும் போது இம்மூன்று உள்ளாற்றலும் தம்முடன் இணைந்து நின்று, புதிய நிலையில் தம் ஒத்துழைப்பை நல்கும். இவன் நல்லொழுக்கம்

உடையவன் என்று சொல்லும்போது, அறிவின் ஆட்சியால் இம் மூன்றும் வலிமையாக இணைத்துச் செயல் மேற்கொள்ளத் தூண்டல் பெறுகின்றன என்ற நிலையே உண்டாகின்றது. பின்னர் இம்மூன்றும் இணைந்து நிற்கும் இணைப்பு உருவாகும்போது விளையும் நல்லொழுக்கங்கள், அவைகளைச் செய்தவனை நல் லொழுக்கம் உடையவன் என்று கூறுவதற்கு மேலாக, இவன் நேர்மையுடையவன் என்பதன் பொருள் இவன் உள்ளத்தே 'அறிவு, இச்சை, செயல்' என்ற மூன்றையும் இணைத்துச் செயற் படுத்த வேண்டிய ஆள் இல்லாமலேயே, தாமே இணைந்து நேர் பெற்றுவிட்டன. அவைகள் தாமே நேர்பட இணைந்து நிற்க, விளைந்த நல்லொழுக்கச் செயல்கள் நேர்மைச் செயல்களாயின. எனவே, அவை நற்பண்பு, நல்லொழுக்கச் செயல்களாயின என்ப தாம்.

இனி, நற்பண்பு நல்லொழுக்கம் என்பதை ஒருவகை அறிவும் ஒருவகை அனிச்சைச் செயலும் இணைந்தது என்று விளக்கம் கூறுவதுண்டு. இதனால் தெளியவரும் விளக்கம் ஒன்றையும் காண வேண்டும். நல்லொழுக்கம்பற்றிய அறிவினால் மட்டுமே ஒருவன் நற்பண்பு நல்லொழுக்கமுடையவன் ஆகான். அவ்வாறே வெறும் பழக்கமும், நல்லொழுக்கப் பழக்கமும் ஒன்றாகா. நல்லொழுக்கப் பழக்கம் ஒருவன் தன்னறிவால் நன்மைக் கடமைகளை ஆய்ந்து தேர்ந்துபின்னர் முயற்சியினால்செயலாற்றிபின்னர்அவைகளைத் திருப்பித் திருப்பிச் செய்தமையால் விளைந்ததே நல்லொழுக்கம் என உணர்தல் வேண்டும். எனவே, நல்லொழுக்க நற்பண்பு என்பது கீழ்க்காணும் மூன்று பகுதிகளை ஒருங்கிணைத்த ஒன்றாகும். (1) நல்லொழுக்க நல்லறிவு, (2) நன்மையை நோக்கிய கடமை, (3) கடமையைப் பன்முறையும் செயற்படுத்தியமையால் விளைந்த பழக்கம்.

நல்லொழுச்க நற்பண்பும் இன்பமும்

நல்லொழுக்க நற்பண்பு என்பது தன்னளவில் இன்பத்தைப் பண்பாகக் கொண்டதன்று. நல்லொழுக்க நற்பண்பு எப்பொழுதும் இன்பத்தோடு இணைந்து வருவதாலே கொள்ளப் பெறுகிறது. நல்லொழுக்க நற்பண்பமைந்த வாழ்க்கையானது அதன் மலர்ச்சியாகிய இன்பமுடனேயே அனுபவிக்கப்பெறுகிறது என்று முடிவு செய்தனர் சான்றோர். ஆனால் நல்லொழுக்க நற்பண்பானது இன்பத்தைக் கொடுக்கும் என்று உறுதி கூற முடியாது. ஆனால் இன்பமானது நல்லொழுக்க நற்பண்பு இல்லையானால் இல்லை என்று உறுதியாகக் கூறலாம்.

நல்லொழுக்க நற்பண்புகளுக்கும் இன்பத்துக்கும் எவ்வகை யில் தொடர்பு அமைகிறது?

இன்பம் என்பதை ஒருவகை இணைப்பினால் எழுகின்ற மனவுணர்ச்சி எனக் கொள்ளுதல் வேண்டும். நல்லொழுக்க நற்பண்பானது உயிரினுடைய பல்வேறுவகைக் கூறுகளும் தம்முள் மாறுபாடின்றி இணைந்து செயற்படுதற்குரிய ஒருவகை உயிர்ப்பாற்றலைத் தருகிறது. அது செயல்முறை அறவியலறிவு என்னும் அறிவின் ஆற்றலைத் துணையாகக் கொண்டு இயல் பூக்கங்களையும் இயல்பூக்க உணர்ச்சிகளையும் நெறிப்படுத்தி, அவைகளை உயிரின் நன்மையை நோக்கிச் செயற்படுத்துகிறது. தம்முள் மாறுபட்டெழும் உணர்ச்சிகள், செயல்முறை ஆற்றல்கள் ஆகிய எல்லாக் கூறுகளையும் இணைத்து, ஒழுங்குபடுத்தி அவை தம்முள் உயிரொட்டமாகிய இணைப்பை உண்டாக்குகிற காரணத்தால், அத்தகைய இணைப்பு நிலையே இன்பநிலை யாகக் கொள்ளப்பெறுகிறது. இவ்வாறு, பல்வேறு சிக்கல்கள் எழாவண்ணம் உள்ளிருக்கும் அனைத்து இயக்கங்களும் ஒருவகை இணைப்புக்குள் ஒத்து இயங்குமாறு செய்வதனாலேயே நல்லொழுக்க நற்பண்பானது அதை மேற்கொள்பவர்களின் அறச் செயல் முடிந்த அவ்வளவிலேயே இன்பம் உடையவர்களாக அமைகிறார்கள்.

உயர்ந்த இன்பம் என்பது மனிதன் தன்னுடைய செயற் பாடுகளை முற்றாக முடித்த அந்நிலையிலேயே காணப்பெறு கிறது. சாதாரண இன்பம் என்பது முழுமையான செயற்பாட்டுக் குரிய பயிற்சியை மேற்கொள்ளும் அவ்வளவிலேயே கிடைக்கப் பெறுகிறது என்று கூறுகிறார் அரிஸ்டாடில். எனவே, செய் முறை அறிவின் முறையான பயிற்சியை மேற்கொள்ளும் அந்த நிலையிலேயே இன்பம் தோற்றம் பெற்றுவிடுகிறது என்பது கருத்து.

நல்லொழுக்க நற்பண்புகளினால் நிறைவுபெற்ற வாழ்வை எவன் ஒருவன் செயல்முறைப்படுத்துகிறானோ அவனே உயர் குறிக்கோளாடு இணைந்த, உயர்ந்த இன்பந்துய்க்கும் மனிதன் ஆகிறான் என்பது அறவியற் கொள்கை.

நல்லொழுக்க நற்பண்புகளும் வாழ்வியற் குறிக்கோட் பயனும்

நல்லொழுக்க நற்பண்புகளும் வாழ்வியற்குறிக்கோட் பயனும் தம்முள் உறவுள்ளவைகளேயாயினும், அத்தகைய உறவின் அடிப் படையில் இவ்விரண்டும் இவையிவை என வரையறுப்பது இல்லை. நல்லொழுக்க நற்பண்புகள் இவை எனவும், வாழ்வியற் குறிக்கோட் பயன் இவையெனவும் வரையறை செய்ய முற்படும்போது வேறு வேறு அடிப்படைகளைக் கொண்டே வரையறை செய்கிறார்கள்.

நல்லொழுக்க நற்பண்புகள் தனிமனிதனின் பண்பு நலத்தைச் சார்ந்தவை ஆதலால் அவை அகநிலைச் சார்புடையவைகளே. ஆனால் வாழ்வியற் குறிக்கோட் பயன்கள் எல்லாவகையாலும் முடிந்த நன்மையாகவும் அதே சமயத்தில் உயிரின் புறநிலையில் நின்று அடையக்கூடிய நன்மையாகவும் இருத்தலின் அவை களெல்லாம் அகநிலை, புறநிலை ஆகிய இருவகைச் சார்பு களையும் கொண்டவைகளாக அமைகின்றன.

நல்லொழுக்க நற்பண்புகள் எல்லாம் உள்ளார்ந்த நற்பயன் களைக் கொண்டவைகளே. எனினும் அவை ஒருவகையில் கருவி யாக நின்று பயன்தருபவைகளே. ஏனெனில், அவை தனிமனிதர் களின் நன்மைப் பயன்களையும் சமூகத்தின் நன்மையையும் தருவதற்குரிய கருவிகளாக அமைந்துவிடுகின்றன.

எந்த ஒரு வாழ்வியற் குறிக்கோட் பயனும் அதனோடு இணைந்த ஒரு நல்லொழுக்க நற்பண்பினைப் பெற்றிருக்கிறது என்பதைக் காணலாம். எடுத்துக்காட்டாக, பொருளியலை அடிப்படையாகக் கொண்ட நல்லொழுக்க நற்பண்பானது பொருளியல் சார்ந்த வாழ்வியற் குறிக்கோட் பயனை உடன் கொண்டு விளங்கும்.

நல்லொழுக்க நறபண்புகளுடைய இணைப்பொருமை நிலை

எல்லா வகையான நல்லொழுக்க நற்பண்புகளும் ஒரு முழுமை வாய்ந்த, உயர்ந்த நல்லொழுக்க நற்பண்பினுடைய பலவகைக் கூறுகளாகும். உயிரின் பகுதிகள் பல. பகுதிகள் பலவற்றிற்கும் பலவகையாக நிற்கும் நன்மைகள் உண்டு. பல வகை நன்மைகளுக்கும் இணையான பலவகை நல்லொழுக்க நற்பண்புகள் உண்டு. ஆனால், உயிரின் பொதுமையை முழுமையாகக் கொண்டு நோக்கினால், உயிரின் முழுமையை உளக்கொண்ட முழுமையான நன்மை ஒன்று அமையும். அதுவே உயிரின் மிக உயர்ந்த நன்மை என்று கருதப்பெறும். மிக உயர்ந்த நன்மையை அடைவிக்கும் நிலைமையில் எல்லா வகையான நல்லொழுக்க நற்பண்புகளும் இணைந்த ஒரு பொதுமையான நல்லொழுக்க நற்பண்புதான் எல்லாவற்றையும் விட மிக உயர்ந்த நல்லொழுக்க நற்பண்பாகக் கருதப்பெறும். எனவே, நல்லொழுக்க நற்பண்புகள் தனிமையுடையனவாகத் தோன்றினாலும் இவையெல்லாம் ஒரு முழுமையான நல்லொழுக்க நற்பண்பில் இணைந்தவைகளே. எல்லா நல் லொழுக்க நற்பண்புகளையும் உள்ளடக்கிய முழுமை வாய்ந்த நல்லொழுக்க நற்பண்புதான் ஒருவனுடைய உயர் குறிக்

கோளான, அறிவு நிலை சார்ந்த, முழுமையான உயிரின் முழுமையான உயர்ந்த நன்மையை அறியவும், அடையவும், அனுபவிக்கவும் துணைசெய்யவும். எல்லா வகையான நல்லொழுக்க நற்பண்புகளும் தம்முள் இணைந்து ஒரு முழுமையான ஓர் அமைப்பினை உண்டாக்கும். அத்தகைய அமைப்பின்மூலம் ஒருவன் மிகவுயர்ந்த, தனிமையானதும் சமூக இணைப்பானதும் ஆகிய நன்மையை உணர்ந்துதுய்க்க முடியும்.

நல்லொழுக்க நற்பண்புகள் சமுதாய மாற்றங்களைச் சார்ந்தவைகளே

உலகில் சமுதாய அமைப்புகள் பலவாக அமைந்துள்ளன. எந்த ஒரு சமுதாய அமைப்பும் காலந்தோறும் மாறும் தன்மையுடையது. எனவே, நல்லொழுக்க நற்பண்புகளும் சமுதாய மாற்றங்களை உடன்கொண்டு மாற்றங்கட்குரியவைகளாகவே அமையும். ஒரு சமுதாயம் நல்லவை எனப் போற்றி வளர்த்த நல்லொழுக்க நற்பண்புகள், வேறு ஒரு சமுதாயம் நல்லதெனப் போற்றி வளர்த்த நல்லொழுக்க நற்பண்புகளோடு மாறுபடும். ஒரு சமுதாயம் ஒரு காலத்தில் போற்றி வளர்த்த நல்லொழுக்க நற்பண்புகள் அதே சமுதாயத்தின் பிற்கால மாற்றத்திற்குப் பொருந்தாதவைகளாக அமையலாம்.

தற்காலத்தே நல்லொழுக்க நற்பண்புகளை வளர்க்கும் முறை எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதை நோக்குவோமானால் தற்கால சமுதாயத்தின் இயல்புகளையும் தேவைகளையும் அடிப்படையாகக் கொண்டு, அவைகளுக்கு ஒத்த நிலையில் உறவுரிமையுடைய நல்லொழுக்க நற்பண்புகளே தேவையெனக் கருதப் பெறுகிறது. எடுத்துக்காட்டாக ஒன்றை நோக்கலாம். பழங்காலக் கிரேக்க சமுதாயத்தில் துணிவு அல்லது தைரியம் என்ற நல்லொழுக்க நற்பண்பு ஒரு தேவையான நற்பண்பு எனக் கருதப்பெற்றது. ஆனால் தற்காலச் சமுதாயத்திற்கும் அந்நற்பண்பு தேவையே. ஆனால்,பழங்காலக் கிரேக்க சமுதாயம் துணிவு என்பதற்குக் கொண்ட பொருள் வேறு. தற்கால சமுதாயம் துணிவு என்பதற்குச் கொள்ளும் பொருள் வேறு. போர்க்களத்தில் காட்டும் துணிவு தான் அக்காலத்தில் பொருள்; இக்காலத்தே அறவழித் துணிவு என்று அதற்குப் பொருள் கொள்ளப் பெறுகிறது.

நல்லொழுக்க நற்பண்புகள் சமூகச் செயல்முறைகளைச் சார்ந்தவைகளே

காலம், இடம் ஆகிய மாற்றங்களினால் ஏற்படும் சமுதாய மாற்றங்களை ஒட்டி நல்லொழுக்க நற்பண்புகளும் மாறும் என முன்னர்க் கண்டோம். அவைகளேயன்றி, ஒரு சமுதாயத்தில்

பல்வேறு மக்கள் ஒரு கடமையைப் பல்வேறு வகையாகக் கொள்ளும்போது, செயல்படுத்துபவர்களின் நிலைமைகளுக் கேற்ப நல்லொழுக்க நற்பண்பும் வேறுபடும். ஓர் ஏழை மிகு கொடைக்குரிய நல்லொழுக்க நற்பண்பினை வளர்க்க இயலாது என்று சொல்வது தவறு. அவ்வாறே ஒரு செல்வன் பொறுமைக் குரிய நல்லொழுக்க நற்பண்பினை வளர்க்க இயலாது என்று சொல்வதும் தவறு.

மேலும், மக்களினுடைய நல்லொழுக்க நற்பண்புகள் சமுதாயத்தில் அவர்கள் ஏற்றுச் செய்யும் செயல் வேறுபாடு களினாலுங்கூட வேறுபட்டு அமையும் தன்மையுடையன. எடுத்துக் காட்டாக, ஆசிரியனுக்குரிய நல்லொழுக்க நற்பண்பு மாணாக்கனுடைய நல்லொழுக்க நற்பண்புடன் வேறு படுகின்றது. அவ்வாறே ஆள்வோர் ஆளப்படுவோர், பெற்றோர் பிள்ளைகள் என்போரிடத்தும் இங்கே குறிப்பிடப்பெற்ற அனைவரும் இணைந்து நின்று, பொதுவான சமுதாய நன்மையை உளங்கொண்ட பொதுவான கடமைகளுக்கேற்ற, பொதுவான நல்லொழுக்க நற்பண்பினை வளர்க்கும் பணியில் ஈடுபட்ட வர்கள் என்பது உண்மையேயாயினும் அவரவர்களின் தனிநிலைச் செயல்களை ஒட்டி, தனிநிலை நல்லொழுக்க நற்பண்பும் வேறு படவே செய்யும்.

நல்லொழுக்க நற்பண்பும் நாடும்

நாடு அல்லது அரசு என்பது அனைத்துச் சமுதாய அமைப்பு களையும், அறவழிப்படுத்தும் அனைத்து நிலையங்களையும் கட்டுப்படுத்தவும் நெறிப்படுத்தவும் ஆன ஆற்றலைக் கொண்ட ஓர் உயர்ந்த அமைப்பாகும். அதன் மூலமே ஒருவன் மிக உயர்ந்த நன்மையை அறிந்து, அடைந்து துய்க்க முடியும். அது ஒன்றுதான் தனிமனிதனின் தனியுரிமைகள் எல்லாவற்றையும் ஒருசேர்க்க காக்கும் ஆற்றல் வாய்ந்தது. அரசுரிமை பெற்ற தனிப்பெருங் குடிமகன் என்னும் உரிமையை நாம் அதன்மூலம் தான் பெற முடியும். அந்த உரிமையைப் பெறும் நாம் அதற்கு ஏற்ற கடமைகளாகிய நாட்டின் இணைப்புரிமைக் கடமை, நாட்டின் ஆட்சியின் மணிமுடியுரிமைக்கு ஏற்ற கடமை ஆகியவை செயற்படுத்த வேண்டும்.

நாட்டுப்பற்று, தேசப்பற்று, நாட்டு நன்மைக்கு இணைந்து தொண்டாற்றுதல் என்பன நாடு பற்றிய நல்லொழுக்க நற்பண்புகள்.

நல்லொழுக்க நற்பண்புகளின் வகைகள்

நல்லொழுக்க நற்பண்புகள் கீழ்க்காணும் மூன்று வகைகளாகப் பிரிக்கப் பெறுகின்றன. அவை; தன்னைப் பற்றியன பிறவற்றைப் பற்றியன; குறிக்கோளைப் பற்றியன என மூன்றாகும்.

கடமைகளை மேற்கொள்ளும் ஒருவன் தன்னுடையநன்மையை அடிப்படையாகக் கொண்டு அதற்குப் பொருந்துவதாக அமையும் நல்லொழுக்க நற்பண்புகள் முதல் வகையைச் சாரும். நடுவு நிலையுடைமை அல்லது தன்னடக்கம், செல்வ நிலையிற் சிக்கனம், அறிவியலில் துணிவு ஆகியவை தன்னைப் பற்றிய நல்லொழுக்க நற்பண்புகளாம்.

இரண்டாவதாக, ஒருவன் மற்றவனுடைய அல்லது மற்றை உயிரினுடைய நன்மைக்குப் பொருந்துவதாகிய கடமைகளை மேற்கொள்ளும்போது அவற்றிற்கேற்ப நல்லொழுக்க நற்பண்புகளை மேற்கொள்ளல் பிறரைப் பற்றியன. நீதி, இரக்கவுணர்வுடன் கூடிய அறச் செயல் நாட்டுப்பற்று முதலியன இரண்டாம் வகையைச் சார்ந்தவை.

உண்மையின்மேல் அன்பு, நன்மையின்மேல் பற்று, அழகை நன்கு மதித்தல் ஆகியவை குறிக்கோளை நோக்கிய நல்லொழுக்க நற்பண்புகள். இவை மூன்றாம் வகையைச் சார்ந்தவை.

தனிமனித வாழ்வு, சமுதாய வாழ்வு பற்றிய நல்லொழுக்க நற்பண்புகள்

மேலே குறிப்பிடப்பெற்ற பாகுபாடுகள் செம்மையுடையன வல்ல என்று அறிஞர்களால் கருதப்பெறுகின்றது. ஆயினும் தனிமனித வாழ்வை உள்ளிட்ட நல்லொழுக்க நற்பண்புகள் இவையெனவும் ஒருவாறு வரையறை செய்து அமைத்துகொள்ளலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

நடுவு நிலைமையுடைமை அல்லது தன்னடக்கம் என்பதும் பண்பாடு என்பதும் தனிமனித வாழ்வு பற்றிய நல்லொழுக்க நற்பண்புகள் எனக்குறிப்பிடுகின்றனர்.

நடுவுநிலைமை என்பது நல்லொழுக்கத்தின் மிக உயர்ந்த தன்னுண்மை நிலை எனக் கொள்ளலாம். நடுவுநிலைமை என்பது உந்து விசையாற்றலால் கிளர்ந்தெழும் திடீர்ச் செயல்களை அறிவின் துணையினால் தடுத்து நிறுத்திக் கட்டுப்

படுத்துதல். இது இயல்பாக எழும் உணர்ச்சித் தன்மையை அறிவியற் சார்ந்த உயிர்க்கூறு கொண்டு அடக்கி வெற்றி கொள்ளுதலாகும். நடுவு நிலைமை என்பது தானே தன்னைக் கட்டுக்கடக்கி நிறுத்தும் தற்காப்பு ஒழுக்கம். நடுவு நிலைமையின்மை என்பது தன்னைக் கழித்தலும் தன்னைக் கீழ்மைப்படுத்திக் கொள்ளுதலும் ஆகும். எதிர்மறை, உடன்பாடு என்ற இரு கூறுகளையும் கொண்டு விளக்குவது நடுவு நிலைமை. தான் என நிற்கும் தன்னை மறுத்தல், தன்னைத் தியாகம் செய்தல், தன்னை எல்லாவற்றாலும் கட்டுப்படுத்தல் என்பவை எதிர்மறைக் கூறுகள். அவ்வகையில் தன்னைப் பற்றிய நன்மை, சமுதாய நன்மை ஆகியவைகளுக்காக, தன் இயல்பாய் உந்தாற்றற் செயல்களை அறிவினால் அடக்கியமைத்துக் கொள்ளுதல் என்பது நடுநிலைமையின் எதிர்மறைக் கூறு. நடுவு நிலைமையின் உடன்பாட்டுக் கூறுகளில் தன்னடக்கம், குறிக்கோளை நோக்கி ஒருமுகப்பட்டு இணைதல் ஆகியவை அடங்கும். இவ்வகையில் நடுவு நிலைமை என்பது தன்னிலை ஒழுக்கம் அவ்வாறே குறிக்கோளை உள்ளிட்ட பக்தியில் ஒருமையுணர்வுடன் நிற்றலும் ஆகிய இரண்டையும் உள்ளிட்டது.

பண்பாடு என்பது மனப்பதிவுகளாகிய நல்லொழுக்கத்தினைப் பண்படுத்துவதன்மூலம் நல்லொழுக்கத்தின் அடிப்படைக் கருவூலமாக நின்ற பண்பாட்டினை—நல்லொழுக்க நற்பண்பினை வெளிக்கொணர்தல். இது அறிவியலான, உணர்ச்சியியலான, செயலியலான கூறுகள் அனைத்தும் இணைந்தெழுகின்ற ஒருவகை முன்னேற்றத்தால் அமைவது. முக்கூறுகளும் இணைந்து முக்குற்றங்கள் நீங்கிய நிலையில் அமையும் ஒருவகை முழுமையான முன்னேற்றம் ஆதலின் இதுவே உண்மைப் பண்பாட்டின் திறவுகோலாக அமைகிறது.

உடலியற் பண்பாடு மட்டுமே அனைத்தையும் இணைத்து அறவியற் பண்பாடாக அமையாது. ஆனால் அது மிகத் தேவையானது. அறவியற் பண்பாட்டை அடைவதற்கு அது தேவை. பண்பாடு என்பது ஒருவகையில் தன்னிலை வளர்ச்சி. தனி மனிதப்பண்பு ஆளுமைப் பண்பாக அமையுமாறு பெறும் வளர்ச்சியே உண்மையான தன்னிலை வளர்ச்சி. தனிமனிதனின் ஆளுமையை நோக்கிய வாழ்வுதான் உண்மையான அறநிலைப் பண்பாட்டு வாழ்வு. எனவே, தனிமனிதப் பண்பிலிருந்து ஆளுமைப் பண்பாக வளர்ச்சிபெற்று, பின்னர், தன்னையே நீக்கிய சமுதாய வாழ்வை உள்ளிட்ட சமுதாய நன்மையை நோக்கிய பண்பாக வளர்வதே பண்பாடு.

துணிவு : நடுவு நிலைமை, பண்பாடு என்ற இரண்டுடன் துணிவையும் தனிமனிதனின்நல்லொழுக்க நற்பண்பாகக்கொள்ள வேண்டும் என்பது அறிஞர்கள் கருத்து. துணிவு என்பது, துன்பம் வரும் என்று எழும் அச்சத்தை நீக்குவது. நடுவு நிலைமை எவ்வாறு அறிவோடு படாத உணர்ச்சியிற் கிளர்ந்தெழு இன்பத்தைத் தடுக்கிறதோ, அவ்வாறே துன்பம் நோக்கிய அச்சத்தைத் தடுப்பது துணிவு.

வீரம் என்பது செயற்படு துணிவு. இடுக்கண் அழியாமை (fortitude) ஒருவகை உடன்பாட்டு வகையிலான துணிவு.

தன்னை மதித்தல் : நடுவு நிலைமை, பண்பாடு, துணிவு போலவே தன்னை மதித்தலும் தனிமனித நல்லொழுக்க நற்பண் பாகும். தன்னுடைய நற்பண்புகளைத்தான் மதித்தல் வேண்டும். அதன்மூலம் ஒருவன் தன்னுடைய குறிக்கோளை ஒட்டிய அற வாழ்வை நன்றியுடன் நேசிக்கவும், அவ்வாழ்வுக்குரிய கடமை களை உள்ளன்புடன் கடைப்பிடிக்கவும் இயலும். எனவே, நடுவு நிலைமை, பண்பாடு, துணிவு, தன்னை மதித்தல் ஆகிய நான்கும் தனிமனிதனைச் சார்ந்த நல்லொழுக்க நற்பண்புகளாகும்.

சமுதாய வாழ்வு நோக்கிய நற்பண்புகள்

நீதி : சமுதாய வாழ்வை நோக்கிய நல்லொழுக்க நற் பண்புகளில் முதலாவதாக நிற்பது நீதி. இது ஒருவகை எதிர்மறை நிலையிலான நல்லொழுக்க நற்பண்பு. பிறருடைய ஆளுமைப் பண்பு வளர்ச்சியை உள்ளிட்ட முன்னேற்றத்துக்குத் தடையாக இருத்தல் கூடாது என்பதே, அடுத்தவர்களுடைய தன்னிச்சையான முன்னேற்றத்துக்கு எந்த வகையிலும் தடை யாக இருக்கக்கூடாது என்பதே, நீதியைப் பற்றிய விளக்கம். இரக்கவுணர்வுடன் கூடிய அறச் செயல் எவ்வாறு உண்மைப் பண்பாட்டுக்கு முன்னியதாக அமைகிறதோ, அவ்வாறே உண்மை யான இரக்கவுணர்வுடன்கூடிய அறச் செயலுக்கு நீதியானது முன்னியதாக அமைகிறது. இரக்கவுணர்வுடன் கூடிய அறச் செயலை ஆற்றுதற்குமுன் நாம் நீதியுடையவர்களாக அமைதல் வேண்டும்.

சாக்ரடீஸ் கருத்து — நல்லொழுக்க நற்பண்பு, அறிவே

கிரேக்க சிந்தனையாளர் வரிசையில் முதலிடம் பெறுபவர் சாக்ரடீஸ். அவர் தனியே நூல் ஏதும் எழுதவில்லை. ஆயினும், சாக்ரடீஸுக்கும் அவருடைய நண்பர்களுக்கும் இடையில் நடந்த உரையாடல்களைத் தொகுத்து, ‘குடியரசு’ என்னும் நூலால்

அமைத்துவைத்தார் சாக்ரடீஸின் மாணாக்கராகியபிளேட்டோ. அவ்வுரையாடலில் நல்லொழுக்கம் பற்றிய சில நல்ல விளக்கங்களை நாம் பெற முடிகிறது.

முக்கிய முதல் ஒழுக்கமாக நீதியை எடுத்துக்கொண்டு அதனை முதலாகக்கொண்டு எழுந்த ஏனைய ஒழுக்கங்கள் எவையெவை என ஆராய்கிறார்.

இயற்கை தந்த நியதியின்படி ஒவ்வொரு மனிதனும் தன் கடமையைச் செய்தாக வேண்டும். அப்படிச் செய்வதே நீதி. அவ்வாறே சமுதாயத்தின் ஒவ்வொரு பகுதியும் தத்தம் கடமையைச் செய்கிறது. இவ்வாறு மூலஒழுக்கமாக நீதியைக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு 'நீதி' என்ற முதலாவதாகிய மூலஒழுக்கத்தை ஒவ்வொருவரும் உணர்ந்து கடைப்பிடித்தால், ஆள்வோர்களிடம் அனுபவ அறிவு பெருகும். அனுபவ அறிவின் பயனாக ஆள்வோர்களிடம் அல்லது காப்பாளர்களிடம் துணிவு உண்டாகும். நீதியும், அறிவும், துணிவும் தோன்றியபின் அவையே எல்லோரிடத்தும் விளங்கத்தகும் தன்னடக்கத்தை உண்டாக்கும் என்று இவ்வாறு வரிசைப்படுத்தினார்.

மனித இயல்பில் மூவகைப் பகுதிகள் இருக்கின்றன என்றும், அவற்றுள் முதலில் விளங்குவது அறிவுப்பகுதி என்றும், ஏனைய இரண்டு பகுதிகளாகிய செயலாற்றும் திறமைப் பகுதியும் உணர்ச்சிகளின் விருப்பப் பகுதியும் அறிவுப்பகுதியை ஒத்து இயங்குவன என்றும் சாக்ரடீஸ் இம்முப்பகுதிகளையும் அறிமுகப் படுத்தினார்.

அறிவுப் பகுதிதான் மனிதன் இனி வருபவைகளை முன்னதாக அறிந்து கொள்ளத் தொழில்புரியும் பகுதியாகும். இதன் முக்கியப் பண்புதான் அனுபவ அறிவு. இரண்டாவது அமைவது ஆர்வப் பகுதி. இதன் முதல்வேலை அறிவுப்பகுதி கொள்ளும் முடிவுகளுக்குத் தன்னால் இயன்ற உதவியைச் செய்யும். அறிவு கொள்ளும் முடிவுகளுக்கேற்ப, மனிதனின் உணர்ச்சிகளையும் விருப்பங்களையும் கட்டுப்படுத்துவதும் இதன் தொழில். இதன் முக்கியப் பண்பு துணிவு. இனி மூன்றாவதாக அமையும் பகுதியே மனத்தின் பெரும் பகுதியாகும். இங்கேதான் மனிதர்களின் ஆசைகளும் விருப்பங்களும் இடம்பெறுகின்றன. தன்னடக்கம் என்பதே இங்குள்ள உயர்பண்பு.

அறிவுப்பகுதியே ஆளும் தகுதியுடையது எனக் காண்கிறார். ஏனைய இரண்டு பகுதிகளும் அதற்குப் பணிந்து நடக்கின்றன. ஒவ்வொரு பகுதியும் அதனதன் பணிகளைச் செய்ய வேண்டும். எனவே, ஒன்றன் தகுதி இன்னொன்றன் தகுதியை இடையூறு செய்வதை அனுமதிக்க முடியாது. அவ்வப்பகுதிகள் அவ்வப்பணியைச் செய்வதும், அனைத்துப் பகுதிகளிலும் அறிவே ஆளும் தன்மை பெற்று, ஏனையவற்றைக் கட்டிக்காக்கும் வன்மை பெற்றதாகிறது. ஏனைய இரண்டும் அறிவுக்குத் தம்மாலான நன்மையைச் செய்யவும் வேண்டும். இத்துடன் தத்தம் காரியங்களைத் தவறாது செய்யவும் வேண்டும் என அமைத்து, இவைகள் தம்முள் ஒத்து இயங்குவதும், அதே சமயத்தில் அறிவு ஆளப்பிறந்ததும், ஏனையவை ஆளப்பெற அமைந்தனவும் ஆகும் என அமைத்துக் காட்டிய நிலையை உடன் கொண்டு, நல்லொழுக்க நற்பண்பு என்பது அறிவே என்னும் கருத்தினைக் கொண்டவராக சாக்ரடீஸ் விளங்குகிறார் என்று கூறுவதுண்டு.

அடிப்படை ஒழுக்க மேம்பாடுகள் நான்கு எனக் கொண்டாலும் ஒரே ஒழுக்கமாக அறிவே அமைகிறது. அனுபவ அறிவு அல்லது ஆராய்ச்சி அறிவே ஒருவனது வாழ்வின் எல்லாப் பகுதிகளையும் கட்டுப்படுத்தும் திறன் கொண்டதாக அமைகிறது. அறிவுப் பகுதியானது மூன்றாம் பகுதியாகிய விருப்பப் பகுதியை ஆள்வதற்குத் தேவையான செயலாற்றலை, துணிவை இரண்டாம் பகுதி தந்துவிடுகிறது. அறிவுப் பகுதிக்கு விருப்பப் பகுதி அடங்கி நடப்பதற்குத் தன்னடக்கம் என்ற பண்பாகிறது. இவ்வாறாக, தனிமனித வாழ்விலும் சமுதாய வாழ்விலும் அறிவின் கட்டுப்பாடுகளையே மிகுதியும் பின்பற்ற வேண்டியிருப்பதால் 'நல்லொழுக்க நற்பண்பு, அறிவே' என்பது மூலக் கருத்தாக அமைந்துவிடுகிறது.

இரேக்கர்களின் நால்வகை அடிப்படை நல்லொழுக்க நற்பண்புகள்

அடிப்படை நல்லொழுக்கங்களைக்குறிக்கும் ஆங்கிலச் சொல் 'கார்டினல்' (cordinal) என்பது. இது 'கார்டோ' (cordo) என்ற இலத்தீன் சொல்லின் திரிபாகும். 'கார்டோ' என்ற இலத்தீன் சொல் 'சுழல்வதற்கான அச்சு' எனப் பொருள்பெறும். சக்கரமோ அதைப்போன்ற வேறு ஒன்றோ சுழல்வதற்கு ஆதாரமாக இருக்கும் அச்சுகளைப்போல வாழ்க்கையென்னும் சக்கரம் சுழல்வதற்கு அடிப்படையான அச்சு - அடிப்படையான நல்லொழுக்கங்கள் நான்கு எனக் கொண்டனர். அவை முறையே: அனுபவ அறிவு, துணிவு, தன்னடக்கம், நீதி என்ற நான்காம்.

அவற்றுடன் சமய நம்பிக்கை,: ஆர்வ நம்பிக்கை, அன்பு என்ற மூன்றையும் பிற்காலத்தே சேர்த்தார்கள்.

அனுபவ அறிவு: நம்முள் இயல்பாக அமைந்த அறிவு இயல்பறிவு. காட்சி முதலிய அளவைகளால் பெறும் அறிவு சார்பறிவு. இயல்பறிவு என்பது பலவகைப்படும் செயல்திறன் களால் அமைந்த ஒன்று எனக் கருதுவது கிரேக்க மரபு. ஆனால் சாக்ரடீஸ் எல்லா வகையான இயல்புத் திறன்களையும், எல்லா வகைச் சார்பு திறன்களையும் இணைத்து அதனை அனுபவ அறிவு எனக் கூறி அதனை நல்லொழுக்கத்தின் நற்பண்பு என்பார். ஒருவன் அறவாழ்வை அல்லது நல்வாழ்வை நடத்தவேண்டும் எனில் அவனுக்கு ஒருவகைத் திறனோடுகூடிய அறிவு தேவைப் படுகிறது. இத்தகைய அறிவையும் செயலாற்றும் திறனையும் இணைத்த ஓர் அமைப்பு மிகத் தேவையாகிறது. கிராமங்களில் காணும் சமுதாயங்களில் நல்ல அறிவும் திறனும் படைத்தவர்களே அற வழியிலும் நல்லவர்களாக இருந்தார்கள். இத்தகைய அனுபவ அறிவு பெற்றவர்கள் நாம் பல்கலைக்கழகப் பட்டம்பெற்றவர் கள் மத்தி யிலும் காண இயலாது. கொள்கைத் திறனும் செயல் முறைத் திறனும் இணைந்த அறிவே நல்லொழுக்கத்தின் நற் பண்பாக அமையும் தகுதியுடையது எனலாம். சாதாரண மனிதனின் அறவழியில் அமைந்த அனுபவ அறிவைக் கருதும் போது எது எது நல்லது என்பதைக் கண்டறியும் திறனும் மேன்மக்களோடு பழகி, அவர்கள் கூறுவதுபோல் நடந்து சிறப்புறும் தன்மையிலும் இணைந்து விளங்குகிறது என்பதை அறியலாம்.

துணிவு: நல்லொழுக்க நற்பண்புகளுள் அனுபவ அறிவுக்குப் பின் இரண்டாவதாக அனுமதிக்கப் பெறுவது துணிவு. மனிதனை அறவழியில் செலுத்தும் தனித்தகுதி அனுபவ அறிவுக்கே உண்டு. அனுபவ அறிவிலிருந்து தடுமாறும்போது துணிவு அவனை அவ் வழியில் நடக்க உதவுகிறது.

உடல் துணிவு வேறு: அறத்துணிவு ஒரு செயலைக் கடைப் பிடிக்கும்போது அதனால் விளையும் துன்பம் முழுவதையும் கருத்திற்கொண்டு துன்பத்தின் முன்னிலையில் எது நல்லது? என்பதைச் செய்வதில்தான் துணிவு என்னும் அப்பண்பு அமைகிறது.

தன்னடக்கம்: துன்பத்தைக் கண்டு அஞ்சுவதை எதிர்க்கும் துணிவுபோல இன்ப விழைவுகளினின்றும் நம்மைத் தவிர்த்துக் கொள்ளத் தன்னடக்கம் பயன்படுகிறது. தத்தம் பகுத்தறிவு

உணர்த்துவதே சரியானது எனக் கொண்டு, அதற்குப் பணியும் போதுதான் இத்தகைய தன்னடக்கம் உண்டாகிறது. தன்னுடைய ஆசைகளையும் விருப்பங்களையும் தடைசெய்வதற்காகவே இத் தகைய தன்னடக்கம் இருக்கிறது என்று கருதுதல் கூடாது. தன்னடக்கம் என்பது பரபரப்பூட்டும் இன்பத்தைத்தான் தடுக்க விழைகிறதேயொழிய, ஆசைகளையும் விருப்பங்களையும் அறிவு வழிப்படி நிறைவுசெய்து அனுபவிக்கப்பெறும் இன்பங்களை அது தடைசெய்வதில்லை. தன்னடக்கத்தில் பகுத்தறிவுக்கேற்ற ஓர் அமைதிநிலை உண்டாகிறது. பகுத்தறிவும் ஏனைய உணர்வு களும் தம்முள் ஒத்து நன்கு இணைந்து பொருந்திய நிலையை நாடுவதுதான் தன்னடக்கம். அறவாழ்வுக்கு அழகு கொடுப்பது சிறந்த ஒழுக்கமான தன்னடக்கமே.

நீதி: அனுபவ அறிவு, துணிவு, தன்னடக்கம் முதலியவை தனிமனிதனின் நல்லொழுக்க நற்பண்புகளாகும். நீதியானது சமுதாயத்தை உள்ளிட்ட நல்லொழுக்க நற்பண்பு. நாட்டில் வாழும் ஒவ்வொரு மனிதனும் அவனவனுக்கு ஏற்ற கடமை களைச் செய்யும்படி அவனைத் தூண்டும் ஆற்றலே நீதி. மற்றவர் களுக்குரியதை ஒருவன் தனக்கெனக் கொள்ளுவதும் மற்றவர் களால் ஒரு தனிமனிதன் தன் சுதந்தரத்தை இழக்காதவாறு பார்த்துக் கொள்வதுமே ஆள்வோருக்கு நீதி ஆகும்.

நீதியைப் பற்றியோ நேர்மையைப் பற்றியோ எண்ணும் போது 'அனைவரும் சமம்' என்ற நோக்கில் பொருள்கள் பகிர்ந் தளிக்கப்படவேண்டும் என்பதை நீதி எனக் கூறுபவர் உண்டு. இவ்வகையில் ஒவ்வொருவரும் ஒன்று. எண்ணிக்கையில் பொருள் கள் பகிர்ந்து வழங்கப் பெறல் வேண்டும். இவ்வாறு பிரிப்பதால் சமூகத்துக்கான சிறந்த பொதுத்தொண்டு செய்பவர்கள் மற்றவர்களைவிடக் கூடுதலாக எதையும் பெறமுடியாது போய் விடும். மேலும், மக்களின் மொத்தமாகிய பொதுமை நலனைப் பெருக்குவதற்காகப் பாடுபடும் மருத்துவர், விஞ்ஞானி போன்றவர்களுக்குச் சிறப்பாக ஏதும் வழங்க இயலாது போய்-விடும். அவர்கள் தங்கள் ஆராய்ச்சிக்குத் தேவையான உதவியைக் கூடப் பெறஇயலாது போய்விடும்.

அடுத்ததாக, தகுதியை அடிப்படையாகக் கொண்ட நீதிக் கருத்து ஒன்று உண்டு. அவனவன் திறமைக்குத் தகுதியான வகையில் நலன் அல்லது பொருளை வழங்கவேண்டும். அவன வனது திறமைக்குரிய வகையில் சிறப்புரிமைகளை வழங்கவில்லை யானால் தனித்தகுதியை வெளிப்படுத்திப் பிறர் நலத்தை வளர்க்கும் ஆர்வம் இல்லாமல் போய்விடும்.

மூன்றவதாக, இவ்வுலகின் நலனை எவ்வளவு பெருக்க வேண்டுமோ அல்வளவு பெருக்க வேண்டும் என எண்ணி, அத்தகைய பொதுநலப் பெருக்கத்துக்குப் பாடுபடும் அறவழியில் நின்றவர்களை எத்தகைய நிலையில் கருதிப் பகிர்ந்தளிப்பது என்ற வினா எழும்.

மேற்கூறியவைகளையெல்லாம் உளங்கொண்டு நீதியை நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

நாம் உரிமை எனக்கொள்ள வேண்டுவது பொது நலனின் ஒரு பகுதியை அடைவதன்று: மற்றவர்களுக்குக் கிட்டுவது நமக்கும் கிட்ட வேண்டும் என்பதையே உரிமை எனக் கொள்ள வேண்டும்.

மக்களை நடத்தும் முறையில் ஒருசிலரை மட்டுமே மக்களாகக் கருதும் நிலையைத் தவிர்க்க வேண்டும் என்பதே நேர்மை.

தகுதி என நினைக்கும்போது அது அவனது வேறு சிறப்புத் தகுதிகளை கொண்டு அமையலாம். ஆனால் எத்தகைய தகுதியும் இல்லாத ஒருவன் சமுதாயத்தில் இருக்கின்ற தகுதியைப் பெற்றிருப்பதால், அந்தத் தகுதியை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அவனுடைய நலனை உயர்த்தப் பாடுபடுதல்வேண்டும். அவனையும் இணைத்த போதுதான் அது நல்ல சமுதாயமாக அமையும்.

தனக்குத் தேவையானதை ஒருவன் பெற உரிமையாகிறதென்பதை நேர்மைக்கு இன்றியமையாத துணைப் பண்பாகக் கொள்ளலாம். பொதுவாக, மற்றவர்களின் தேவையை நிறைவு செய்வதை—தகுதியற்றவர்களின் தேவையைக்கூட நிறைவு செய்வதை நேர்மை அல்லது நீதியின் பிள்ளைகளாகக் கொள்ள வேண்டும். செல்வன் ஒருவன் வறியவனுக்குக் கொடுப்பது என்ற உயர்வு தாழ்வு மனப்பான்மை அகற்றப் பெறவேண்டும் என்பதே இத்தகைய நேர்மை இக்கால சமுதாயச் சூழலில் அமைந்து கிடக்கும் ஒன்றே. தற்கால சமுதாயச் சூழலில் ஒரே மாதிரியான வருவாயும், ஒரே மாதிரியான சமுதாய நிலைமையும் பெற்ற மக்கள் தங்கள் தங்களுக்குள் அமைந்திருக்கும் திறமைகாரணமாக ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்கின்றனர். இது நேர்மையை அடிப்படையாகக் கொண்டதே.

அரிஸ்டாடில் அமைக்கும் நல்லொழுக்க நற்பண்பு

நல்லொழுக்க நற்பண்பை அரிஸ்டாடில் 'யூடைமோனியா' என்பார். 'யூடைமோனியா' (eudaimonia) என்ற சொல்லுக்கு

மகிழ்வு எனத் தமிழிலும் 'Happiness' என்று ஆங்கிலத்திலும் மொழிபெயர்ப்பு செய்து உணரலாம். அரிஸ்டாடலின் கருத்துப் படி யூடைமோனியா என்பது ஒரு முடிவு நிலை எனக் கருதுகிறார். இதன்மூலம் ஒழுக்கத்தை பழக்கமாகத் தேர்ந்தெடுக்கும் நிலையை வலியுறுத்துவார் அரிஸ்டாடில். தேர்ந்தெடுக்கும் முறையில் ஒரு மனிதன் தன்னுடைய சூழ்நிலைகளுக்குத் தகுந்த வகையில் ஒரு நடுத்தரவழியைத் தேர்ந்து கொள்ளுதலை இது குறிக்கும். இத் தகைய நடுத்தரமான வழி அவனது பகுத்தறிவினால் தீர்மானிக்கப்படுகிறது.

ஒழுக்கம் என்பது வழக்கமாகக் கடைப்பிடிக்கும்செய்கையே. ஆனால் நல்லொழுக்கம் என்பது வெறும் பழக்கமன்று. அது மனிதனே தேர்ந்திடும் பழக்கம்.

அறிவினால் சிந்திக்கப் பெற்று நம் ஆற்றலுக்குட்பட்டு பொருள்களின்மேல் கொள்ளும் விருப்பமே நாம் தேர்வு செய்யும் முறை என்கிறார் அரிஸ்டாடில். இதில் அறிவும், ஆற்றலும், சுத்தமும் இணைந்துள்ளன என்பது அரிஸ்டாடிலின் விளக்கம். இத்தகைய உறவின் அடிப்படையில் நாம் அடுத்தடுத்துச் செய்யும் பொதுத் தேர்வே வழக்கமாக அமைந்து விடுகிறது. நாம் தேர்ந்தெடுத்தவற்றை வழக்கமாக ஆக்கிவிட்ட நிலையில் அதுவே நல்லொழுக்கம் எனப் பெறுகிறது.

நாம் தேர்ந்தெடுத்ததைத் துன்பத்தின் நடுவில் வழக்கமாகச் செய்யும்போது அதுவே நமக்குத் துணிவு என்னும் நல்லொழுக்க மாக அமைகிறது.

இனி, அரிஸ்டாடில் நல்லொழுக்கம் என்பதை நடுத்தர வழி என விளக்குகிறார்.

துணிவு என்பதை விளக்கும்போது முரட்டுத் துணிச்சலுக்கும் தோழமைத் தன்மைக்கும் இடையில் அமைவது என்பார்.

வள்ளல் தன்மை என்பது அளவுக்கு விஞ்சிக்கொடுக்கும் நிலைக்கும் கஞ்சத்தனத்திற்கும் இடைப்பட்டது என்பார்.

இவ்வாறு இரு தீமைகளின் இடையில் விளங்கும் ஒருவகை நடுவழி. அது மனிதனின் சூழ்நிலையைப் பொறுத்துதான் அமைவதாகும்.

குறிப்பிட்ட ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் நடுநிலை அல்லது இடைநிலை எங்கே, எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதை

ஆய்ந்து எடுத்து அமைத்துக் கொள்ளுவதற்கேற்ப ஒரு விதியை அமைத்ததுதான் இவ்விளக்கத்தின் உயிர் நாடி. இதனை அடைவ'தற்கு இரண்டு வழிகளைக் கூறுகிறார்.

(1) பகுத்தாராய்வதை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளலாம்.

(2) முன்னறிவு படைத்த ஒரு மனிதனின், அம்மனிதனைச் சான்றாகக் கொண்டு, சாதாரண மக்கள், தங்கள் ஒழுக்க வாழ்வில் எவ்வெவ்வகையில் தங்கள் மனப்போக்கை விட்டுப் பிடிக்கவேண்டும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். தத்துவ வழியில் அறக்கருத்துகளை அறிந்து கொள்ளும்போது எது நல்லது? என்பதைத்தான் அறிய முடியும். செயல்முறை அறத்துக்கு உரிய பொதுவிதியை அறியும் ஆற்றலும், குறிப்பாக அவ்விதியுடன் பொருந்தும் செயல்களை அறியும் திறனும், முன்னறிவு படைத்த மனிதனின் பண்பாக விளங்கும் செயல் முறை அனுபவ அறிவின்பாற்படும் என விளக்குகிறார். இதன் மூலம் தத்துவ அறிஞரின் ஆழ்ந்த சிந்தனை அறிவைத் தவிர, வேறொரு வகையான அறிவு—செயல்முறை மிகுந்த அறிவு ஒன்று இருக்கிறது என விவரித்தார்.

முடிவாகக் கூறினால் கிரேக்க அறிஞரின் கருத்தின் வண்ணம் 'நன்மை என்பது ஒருவகை நோக்கு' எனக் கொள்ளலாம்.

(3) அறவாழ்வில் எழும் நோய்களும் தீர்வுகளும் (குற்றமும் தண்டனையும்)

விதிகளுக்கு அடங்குதலும் விதிகளைக் கடத்தலும்

தனிமனிதன் தனித்து வாழ்கின்ற காலத்தில் அவனுக்கு உரிமைகள் இல்லை; உரிமைகள் இல்லாதபோது கடமைகள் இல்லை; உரிமைகளும் கடமைகளும் இல்லாதபோது நல்லொழுக்க நற்பண்புகள் என்று சொல்லக்கூடிய வாழ்வியலறங்கள் இல்லை. ஆனால், அவன் தன்னையொத்த பிற மனிதர்களோடு இணைந்து சமூக உறவு நிலையை அமைத்துக்கொண்டு வாழ முற்படும்போது வாழ்வியலறங்கள் வகுக்கப்பெறுகின்றன. பல பேர் இணைந்து வாழும்போது அனைவரையும் இணைத்துச் செயற்பட வைக்கும் அற இயல் விதிகளுக்கு அனைவரும் இணங்கி நடக்கவேண்டிய கடமை உண்டாகிறது.

தனிமனிதன் தன்னுடைய மனச்சான்றின் அடிப்படையில் ஏற்றுக்கொண்டிருக்கும் அறவியல் விதிகள், சமூக அமைப்பு உருவானபோது சமூகம் அமைத்த விதிகள், சமூகத்துக்கு மேலான அரசு விதித்த விதிகள் இப்படியாக விதிகள் பெருகும்போது, சிற்சில சமயங்களில் தனிமனிதனின் அறவாழ்வையும் பாதிக்கும் முறையில் விதிகள் அமைந்துவிடுவதுண்டு. அறவியல் விதிகளுக்கு அடங்கி நடக்கவேண்டும் என்று ஒப்பந்தம் செய்துகொண்டு புறப்பட்ட தனிமனிதனே விதிகளைக் கடக்கவேண்டும் என்று எண்ணத் தொடங்குகிறான். இதுவே, அறவாழ்வில் எழும் நோயாக அமைகிறது.

அறவாழ்வை மேற்கொள்ளும் ஒருவனை அரசியல் சட்டம் தடுத்து அவன் வாழ்வை நிலைகுலைக்கிறது. அரசினுடைய அதிகாரத்தால் சில சட்டங்களை இயற்றி, அச்சட்டங்களின் மூலம் தண்டனை அளிக்கும் உரிமையைப் பெற்று தண்டனையின் மூலம் தீயொழுக்கத்தைப் பரப்பவும் நல்லொழுக்கத்தைத் தடுக்கவும் முடியும் என்பதை அரசு நிரூபிக்கிறது. குற்றங்களுக்குச் சிற்சில சமயங்களில் தண்டனை கிடைக்கும். ஆனால் அறவழியில் நன்மையான செயல்களுக்குக்கூட அரசு தண்டனை விதிப்பதைக் காணலாம்.

தவறு இழைப்பதாக கருதப்பெறும் நாட்டுச் சட்டத்தை எதிர்க்க விரும்புகிறான் ஒருவன். வரிகொடா இயக்கத்தை ஆதரிக்கும்போது அரசு அவனைத் தண்டிக்கிறது. அவனுடைய மனச்சான்று அவன் செய்தது சரியே என்று கூறினாலும் அரசு அச்செயலைக் குற்றம் என நினைத்து தண்டனை கொடுக்கிறது.

இவ்வாறாக அரசு தண்டனை கொடுக்க முற்படும் போதெல்லாம், தண்டனைக் கொள்கையை அறநூல்கள் ஆராய்கின்றன. குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில் விதிக்கப்பெற்ற இத் தண்டனை எந்தவகையில் அறவளர்ச்சிக்கு இன்றியமையாத தாகும் என்ற ஆய்வை அவ்வப்போது அறநூல்கள் ஆய்ந்து முடிவு செய்கின்றன. அவ்வகையில் நம்மால் அறியத்தகும் குற்றங்களின் இயல்பையும் அவற்றிற்கு அறத்தோடு இணைந்த நிலையில் கொடுக்கப்பெறும் ஒறுத்தல் முறைகளையும் இத்தலைப்பில் ஆராயலாம்.

குற்றங்களின் வகைகள்

விதி என்பது ஒருவகை வரையறைச் செயல். விதியை மீறுகின்ற எச்செயலும் குற்றம் எனவும் தண்டனை பெறுதற்குரியது எனவும் கருதுவது பொது இயல்பு. குற்றங்களைக் குறிக்கும் சொற்களும் அவைகளால் உணர்த்தப்பெறும் குற்றங்களின் இயல்புகளையும் காணலாம்.

இயற்கை விளைவிக்கும் தீமை: மண், நீர், தீ, காற்று, வான் முதலியன இயற்கை.அவ்வியற்கையின் கலப்பால் அமையும் பொருள்கள் யாவும் பேராற்றல் உடையவைகள். அவைகளும் அறவிதிகளுக்கு இயைந்தே செயலாற்றுகின்றன. நிலநடுக்கம், புயல், மிகுமழை முதலிய இயற்கைத் தீமைகள் மனித வாழ்வின் அமைதியையும் இ ன் ப த் தை ய ு ம் அழித்துவிடுகின்றன. இத்தகைய கொடுமைகளை இயற்கைத் தீமைகள் (natural evils) என்பர். இவைகளை நாம் ஓரளவு குறைக்க முயலலாமேயன்றி முழுமையாகத் தடுத்து நிறுத்த இயலாது. எவ்வாறாயினும் இயற்கைத் தீமைகள் தனிமனிதனின் அறவாழ்வைக் குலைக்கவே செய்கின்றன.

பிழை : மனிதனுடைய அறிவியற்கூறு செய்த தவற்றுக்குப் பிழை என்று பெயர். ஒன்றை ஆய்ந்து தேர்ந்துகொள்ளும் நிலையில் தவறு நேர்ந்துவிடுகிறது. சில தவறான செயல்களை நற்செயல்களென தேர்ந்தெடுத்து விடுகிறது. ஒரு குறிப்பிட்ட செயலை ஆராய முற்படும்போது, மனம் எப்படியோ ஓர் ஒழுக்க விதியைத் தவறாகப் பயன்படுத்திவிடுகிறது. இத்தகைய தவறு

காரணமாக, நம்மால் செய்யப்பெறும் அறவழித் தீர்ப்புகளும் தவறுடையவைகளாகின்றன. அறவழிப் பிழை என்பது அறவழித் தீமையோ, பாவமோ அன்று. அறிவியற் பிழை வேண்டுமென்றே செய்யப்பெற்றதாயின் மன்னிக்கத் தகுந்ததன்று. அறிவியற் பிழையினால் அறவழித் தீர்ப்புகள் பிழை உடையவைகளே; வேண்டுமென்றே விரும்பி செய்யப் பெறும் நிலையில்லாமல் நடைபெற்றுவிட்ட அறிவியற் பிழைகள் அறிவியல் விதிகளின்படி மன்னிக்கத் தகுந்தவைகளே.

ஒழுக்கவியல் தீமை: ஒழுக்கவியல் விதிகளை அறிவோடும், செயல்திறனோடும் இணைந்து நின்றே மீறுதல் ஒழுக்கவியல் தீமை எனப்பெறும். இது இயற்கைத் தீமை அறிவியற் பிழை போன்றன்று இயற்கைத் தீமைகளுக்கும் அறிவியற் பிழைகளுக்கும் மனிதன் அறநியதியின் வண்ணம் பொறுப்பாளியாகான். அறவழித் தீமை என்பது ஒருவன் அறிந்தே, முயற்சியைச் செய்தே அறக் கொள்கையை மீறுகிறான் ஆகையால் அறவிதியை மீறுதல் தீமையே.

அறத்துக்கு மாறான மறம் (Vice) : ஒழுக்கவியல் தீமையை இரண்டு வழிகளில் ஆராய்வதுண்டு அது ஒருவனது மனப்பண்பமைப்பில் ஏற்படுத்திய மாற்றம் காரணமான தீமை என்றும் புறச் செயல்களில் ஏற்படுத்திய மாற்றம் காரணமான தீமை என்றும் இருவகைப்படும். நல்லொழுக்கத்தின் மேன்மை எவ்வாறு நல்லொழுக்க நற்பண்பாகக் கருதப் பெறுகிறதோ அவ்வாறே, நல்லொழுக்கத்தின் தீமையானது பழி என்றும், மறம் என்றும் கருதப்பெறும். நல்லொழுக்கத் தீமை என்பது நல்லொழுக்கத்தின் இழுக்கம் அல்லது ஒருவகைச் சறுக்கல். அது அனிச்சைச் செயலாக மாற்றப்பெற்ற நற்கடமைச் செயலின் அழிவு ஆதலின் அதுவும் அனிச்சைச் செயலாக மாற்றப் பெற்ற ஒரு தீமைச் செயலாகும். அக நிலையில் மாற்றம் நேர்ந்துவிட்டதாதலின் அம்மாற்றம் புறச் செயலையும் தாக்கும். அகநிலையில் நல்லாழுக்க நற்பண்பின் இழப்பு என்ற தீமையானது புறநிலையில் அறச்செயல்களைத் தாக்கி அவைகளை மறச்செயல்களாக மாற்றும். இவை அகத்தே நிகழ்ந்த மாற்றத்தின் வெளிப்பாடுகள். இத்தகைய புறவெளிப்பாடுகளான ஒழுக்கவியல் தீமைச் செயல்களே பாவம் என்றும் குற்றம் என்றும் சொல்லப்படும்.

பாவம் (Sin) : தீய நினைவுகள் மனத்திற் பதிந்துவிட்டால் அவை, உள்ளார்ந்த நல்லொழுக்கத்தைக் கெடுத்து, அதற்கேற்ப வெளிப்புறச் செயல்களையும் மாறுபடுத்திவிடும்.

குற்றம் : முன்பெல்லாம் கடவுளுக்கு எதிராக செய்யப்படுவன எல்லாம் பாவம் என்றும் சமூகத்துக்கு எதிராக செய்யப்படுவன எல்லாம் குற்றம் என்றும் சொல்லும் மரபு உண்டு. காலப் போக்கில் குற்றம் என்பது மிகவும் குறுகிய மனப்பான்மையுடன் கூறும் விளக்கத்தையே ஏற்பதாயிற்று. அரசினால் அங்கீகரிக்கப் பெற்ற சமூகத்துக்கு எதிராகச் செய்யும் செயல் குற்றம்; அது தண்டனைக்குரியது என்பதே. எனவே, எல்லாப் பாவங்களும் குற்றங்களாகா. தண்டனைக்குரியவைகளே குற்றங்கள். தண்டனைக்கு உரிய அல்லாதன பாவங்கள் என்ற வரையறை பிற்காலத்தது. எடுத்துக்காட்டாக, திருடுதல் குற்றம்; ஏனெனில் அது தண்டனைக்குரியது. நன்றி மறத்தல் குற்றமன்று; பாவம். ஏனெனில், அரசினால் தண்டிக்க முடியாதது. சமூகத்தால் வெறுக்கப்படுவதுதான் எனினும் அரசினால் அளிக்கப்பெறும் தண்டனை அதற்கு இல்லை.

தண்டனை: குற்றம் தண்டிக்கப் பெற்றேயாக வேண்டும். நற்காரியங்களுக்குப் பரிசு அளிக்கப் பெறுகிறது. அவ்வாறே குற்றங்களுக்குத் தண்டனை அளித்தேயாக வேண்டும். ஒரு குற்றவாளி தன்னுடைய அறிவோடும், செயலாற்றும் திறமையோடும், விருப்பத்தோடும், சமூகத்தால் அனுமதிக்கப் பெற்ற அறவிதியை மீறுகிறான். அதனை வேண்டுமென்றே தகர்த்து எறிகிறான். ஆயின் மேதகவும் ஆதிக்கத் தன்மையும் கொண்ட அறவிதியானது அவன் தண்டிக்கப் பெற்றேயாக வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. ஒரு செயலின் தவறான தன்மை குற்றவாளிக்குத் தண்டனை அளிப்பதன் மூலம் ஒழுங்கு செய்யப் பெறுகிறது. எனவே, தண்டனை என்பது அறவழியிலான நேர்மைச் செங்கோல்.

தண்டனைபற்றிய கொள்கைகள்

தண்டனை பற்றிய மூன்று கொள்கைகள் இதுவரையில் வெளிப்படுத்தப் பெற்றுள்ளன. அவை முறையே:(1) மற்றவர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டி மாதிரியாகக் கைக்கொள்ளும் தண்டனைக் கொள்கை. (2) சீர்திருத்தக் கொள்கை. (3) பழிக்குப் பழி வாங்கும் கொள்கை என்பன.

(1) மற்றவர்கள் எச்சரிக்கையாக இருப்பதற்காக மாதிரியாகக் கைக்கொள்ளும் தண்டனைக் கொள்கை: குற்றம் செய்த ஒருவனைத் தண்டிக்கும் முறையில் மற்றவர்களும் அதே குற்றம் புரியாமல் இருக்கச் செய்வதுதான் இதன் நோக்கம். ஒருவனுக்குத் தண்டனை கொடுத்து முன்மாதிரியாக ஆக்குவதன் மூலம் தனி மனிதன் ஒருவன் மற்றவர் நலனுக்காக வெறுங் கருவியாகப் பயன்

படுத்தப் பெறுகிறான் என எண்ணப்பெற்று இக் கொள்கை எதிர்ப்புக் குரியதாக ஆவதும் உண்டு. ஆனால் தூக்குத் தண்டனைத் தவிர ஏனைய தண்டனைகளைப் பெற்றவன் தானே திருந்துவதற்கு வழி உண்டாகிறது. ஆகையால் தண்டனை பெற்றவன் ஒரு கருவியாகப் பயன்படுத்தப் பெறுகிறான் என்பது பொருத்தமன்று.

மற்றவர்களுக்கு முன்மாதிரியாக ஒருவனை அமைத்துக் காட்டுவதுதான் இக்கொள்கையின் அடிப்படை என்றால் அது தவறு. தவற்றுக்குத் தண்டனை என்ற இணைப்புத்தான் அமைய வேண்டுமேயல்லாமல் மற்றவர்களுக்கு முன்மாதிரி ஆக்குவது என்றால் அது குற்றம் செய்யாதவனையுங்கூட அம் மாதிரி ஆக்கும் நிலை உண்டாகிவிடும்.

வேறொரு குறையும் உண்டு. மற்றவர்களுக்கு முன்மாதிரியாக ஆக்கி எச்சரிக்கை செய்யவேண்டும் என்று கருதும்போது அளவுக்கு அதிக தண்டனையை ஒருவனுக்கு அளிக்க முற்படும் வாய்ப்பும் உண்டு. அளவுக்கு மேலாக ஒருவனுக்குத் தண்டனை கொடுப்பது அறவிதியின்படி தவறே.

ஒரு குற்றவாளியை அவன் முதன்முறையாய் அக்குற்றம் செய்துவிட்டு வந்து நிற்கும்போது நீதிபதி இவன் மீளவும் இக்குற்றத்தை செய்யமாட்டான் என்ற நிலையில் அவனை எச்சரித்தும் அனுப்பலாம். தண்டனை கொடுக்காமலும் அனுப்பலாம்; குறைந்த தண்டனையையும் அளிக்கலாம். இத்தகைய நிலையில் சூழ்நிலைகளைக் கருத்தில்கொண்டு நீதி வழங்கும் நீதிபதியை இக்கொள்கையானது கடுமையான தண்டனை கொடுக்குமாறு பணிக்கிறது. எச்சரிக்கை செய்து அனுப்பிவிடலாம் என்று கருதும் நீதிபதியை மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக இருக்குமாறு இவனை ஆக்கவேண்டும் என்ற வகையில் கடுமையான தண்டனையைக் கொடுக்குமாறு இக் கொள்கை வலியுறுத்துகிறது.

இவ்வகையில் இக்கொள்கையானது தூக்குத் தண்டனையையும் நேர்மையுடையது என விளக்கம் செய்து காட்டுகிறது. ஏனெனில், ஒரு சிறு குற்றத்துக்குத் தூக்குத் தண்டனை என்றால் மற்றவர்கள் அச்சங்கொண்டு எச்சரிக்கையாக இருப்பர் என்பது இக்கொள்கையின் மதிப்பீடு.

(2) **சீர்திருத்தக் கொள்கை:** குற்றம் செய்தவனைச் சீர் திருத்தும் நோக்கத்தில் அத்தண்டனை அமையவேண்டும் என்பது இக்கொள்கையின் நோக்கம். மனித இனம் சார்ந்த நல்லெண்ணத்

தின் அடிப்படையில் அணுகும்போது இக்கொள்கை இக்காலத்தே மக்களால் பெருமளவில் வரவேற்கப் பெறுகின்றது. இக்கொள்கையானது குற்றம் புரிந்தவனை ஓர் எளிய உயிரற்ற பொருள்போலக் கருதவில்லை. குற்றம் செய்தவனை மனிதனாக மதித்து அவன் நன்மையை நோக்கியே அவனுக்குத் தண்டனை அளிக்கப் பெறுகிறது என்ற கருத்தை உடன்கொண்டது இக்கொள்கை. குற்றம் செய்தவனுக்கு அறிவு புகட்டி, மீளவும் அவனை மனிதனாக அமைத்து வாழ வைப்பதே அவனுக்குத் தண்டனை கொடுப்பதன் நோக்கம் எனக் குறிப்பிடுகிறது இக்கொள்கை.

குற்றவியல் ஆய்வானது ஒருவன் குற்றம் செய்வதற்குரிய காரணங்களை விவரிக்கும்போது பெரும்பாலும் உடலியல் சார்ந்த சிறு குறைகள், மனவளத்தில் ஏற்பட்ட சிறு கோளாறு என்பவைகளையே கூறுகிறது. அவ்வகையில் நோக்கினால், குற்றவாளி வேண்டுமென்றே அறிவியற் சட்டங்களை மீறினான் என்று கொள்வதற்கில்லை. சில சமயங்களில் சமூக அமைப்புமுறையான சிலரைக் குற்றவாளி ஆக்குகிறது. ஆகையினால் தண்டனை என்பது குற்றவாளிகளின் உடல் வளம், மனவளம் ஆகியவைகளை மருத்துவமனையில் இருத்திச் சீராக்குதல்என்பதுபோன்றவையாக அமையவேண்டும் என்பது இக்கொள்கையின் நோக்கு.

ஆனால் இக்கொள்கையை ஒரு பொதுக் கொள்கையாக ஆக்க முடியாது. ஏனெனில், எல்லாக் குற்றவாளிகளுமே இங்கே குறிப்பிடப்பெற்றவாறு உடலியல், மனவியல் குறைபாடுகளினால் குற்றம் செய்தவர்கள் அல்லர். ஒருசிலர் உண்மைக் குற்றவாளிகளே! அவர்களுக்கு இக்கொள்கையின் அடிப்படையில் எவ்வாறு தண்டனை வழங்க இயலும்?

இனி, குற்றவாளியானவன் தன்னை சீர்திருத்திக் கொள்ளும் வகையில் அறிவு புகட்டும் முறையில் அவன் தண்டனை அமைய வேண்டும் என்பது கொள்கையாதலின் ஒருவனுக்குக் கல்வியளித்து சீர்திருத்துவது எப்படி ஒரு தண்டனையாக அமைய முடியும்? எத்தகைய தண்டனை எத்தகைய குற்றவாளிக்குக் கல்வி புகட்டுவதாக அமையும் என எடுத்துக் கூறி இக்கொள்கை விளக்கவில்லை.

சமுதாய ஏற்றத் தாழ்வு என்பது முதலான சில காரணங்கள் மனிதனைக் குற்றவாளியாக்குகின்றன. இக்கருத்தை ஓரளவு ஏற்கலாம். ஆனால் எல்லாக் குற்றங்களுமே சமுதாய ஏற்றத் தாழ்வால் விளைவன என்பதை ஏற்க முடியாது.

தண்டனையானது குற்றவாளியை நல்லவனாக மாற்றி அமைக்குமேயானால் இக்கொள்கை நல்ல கொள்கைதான். சிற் சில சமயங்களில் தண்டனை கொடுப்பதைவிட மன்னித்து விடுவது ஒருவனை நல்லவனாக்குவதும் உண்டு. இங்கே மன்னித்து விடுவதைத் தண்டனையாகக் கருதமுடியாது.

இக்கொள்கை எவ்வகையாலும் தூக்குத் தண்டனையை அனுமதிக்கவில்லை என்பது தெளிவு.

'பிராய்டு' *(Freud)* என்ற உளநூல் விஞ்ஞானி அமுக்கப் பெற்றுக் கிடக்கிற, நினைவுறா அறிவின் பகுதியில் உள்ள சில பாலுணர்வு விருப்புகளே குற்றம் புரிவதற்குக் காரண மாகின்றன என்று விளக்குகிறார். அத்தகையவர்கள் மனநிலை மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெறலாம். ஆனால் எல்லாக் குற்றவாளிகளும் இவ்வகையை சேர்ந்தவர்களல்லர். பாலுணர்ச்சி குறிப்பினோடு கலவாத பெருங்குற்றங்களை இழைத்த குற்ற வாளிகள் உள்ளனர்.

(3) **பழிக்குப் பழிவாங்கும் தண்டனைக் கொள்கை:** இதனை துன்பத்திற்குத் துன்பம் தரும் தண்டனைக் கொள்கை எனவும் கூறலாம். ஒரு குற்றவாளி மற்றவனுக்கு என்ன துன்பத்தை இழைத்தானோ அதே துன்பத்தை அக்குற்றவாளி அனுபவிக்கு மாறு செய்தல். 'கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல்' என்பதாக இக் கொள்கையானது பேச்சுவழக்கில் இடம்பெறும் இக் கொள்கையின் உயிர்நாடியாக அமையும் கருத்து ஒன்று உண்டு. ஒழுக்க விதிகளாயினும், சட்டங்களாயினும் அவை பெருமையும் ஆதிக்கத் தன்மையும் உடையவை என நிரூபிக்கப் பெறல் வேண்டும்.அவ்வாறில்லையானால் ஒழுக்க விதிகளாயினும் சட்டங் களாயினும் மக்களால் புறக்கணிக்கப் பெறும். ஓர் ஒழுக்கவிதி பெருமையும் ஆதிக்கத் தன்மையும் உடையது என்பது எவ்வாறு நிரூபிக்கப்பெறும்? அவ்வொழுக்க விதியை ஒருவன் மீறியபோது அவனுக்குக் கொடுக்கப்பெறும் தண்டனையின் மூலம்தான் அவ் வொழுக்க விதியின் பெருமையும் ஆதிக்கத் தன்மையும் தெரிய வரும். எனவே, ஒழுக்க விதிகள், சட்டங்கள் ஆகியவற்றின் ஆதிக்கத் தன்மை முதலியவைகளை நிலைநாட்ட ஒழுக்க விதிகளுக்கும் சட்டங்களுக்கும் உயிர்ப்புத்தன்மை உண்டு என்பதை நிலைநாட்ட,அவைகளை மீறியவர்களுக்குத் தண்டனை அளித்தல் வேண்டும் என்பதே இக் கொள்கையின் உயிர்நாடி. குற்றத்துக் குரிய தண்டனையென்பது குற்றவாளியின் நன்மைக்கா அல்லது மற்றவர்களுக்கு உரிய எச்சரிக்கைக்கா என்பது பற்றிய ஆய்வுக்கு இடமில்லை. சட்டம், ஒழுக்கவிதி ஆகியவைகளில் உள்ளார்ந்து

விளங்கும் நேர்மைக்கு, நீதிக்கு நாம் அளிக்கும் மதிப்புத் தன்மையே எனக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு சட்டம், ஒழுக்கவிதி ஆகியவைகளை மதித்துப் போற்றவில்லையானால் பலவகை விதிகளை அமைத்து உருவாக்கப்பெற்ற சமுதாயமே அழிந்துவிடும்.

இக்கொள்கையானது சமுதாயத்தில் குற்றவாளிகளுக்குத் தண்டனை எவ்வாறு, எந்த அடிப்படையில் சிந்தித்துக் கொடுக்க முற்பட்டார்கள்? என்ற வகையில் ஆய்வதற்குரிய வரலாற்றுக் கண்ணாடியாக விளங்குகிறது என இதனை மதிப்பீடு செய்வதுண்டு. ஒருவகைப் பழிவாங்கும் தன்மையைக் கொண்டுதான் இத்தண்டனைக் கொள்கை உருவாகியிருக்கும் என நினைப்பதுண்டு. மேலாக தண்டனையின் துன்பத்தை எடுத்து வலியுறுத்திக் கூறுவதே இக்கொள்கையின் நோக்கம் எனவும் மதிப்பிடலாம்.

குற்றமும் தண்டனையும் பற்றிய ஒரு மதிப்பீடு

இக்காலத்திலுள்ள சமுதாய அமைப்புகளைக் கொண்டே நாம் தண்டனைக் கொள்கைகளை ஆராயவேண்டும்.

அறவழியை அடிப்படையாகக்கொண்டு வளரும் மனித சமூகம் இத்தகைய பழிவாங்கும் கொள்கை, தீமையைத் தரும் எனக் கருதுவது இயல்பு.

குற்றவாளியோ மற்றவர்களோ திருந்துவதை மனத்திற் கொண்டு தண்டனை விதிப்பது பொருத்தமா என்றால் அதுவும் ஐயமே. குற்றம் புரிந்தவனை தண்டனையால் சீர்திருத்தலாம் என்பது நம்பமுடியாத ஒரு நிலையே.

சட்டமுறையைக் குலைக்காதவாறு சட்டத்தின் கட்டுக் கோப்பை நிலைநாட்டுவதற்காகவேனும் தண்டனையைப் பயன் படுத்த நேரிடுகிறது. தவற்றுக்குப் பொருந்தும்படி தண்டனை கொடுப்பதே நீதிக்குரிய இயல்பு என்று கருதி அவ்வாறே செயற்படுவதில் தவறு ஏதும் இல்லை எனலாம்.

தண்டனை கொடுக்கும் முறையில் குற்றவாளியும் அவனால் கொடுமைப்படுத்தப் பெற்றவரும் இணைந்து பரிசீலிப்பது அறமாகாது. அது இறுதியில் பழிவாங்கும் உணர்ச்சிக்கே கொண்டு போய் நிறுத்திவிடும். பாரபட்சமற்ற நீதிபதிகளே நேர்மையாகவும் தகுதியாகவும் தண்டனை விதிக்கமுடியும் எனக் கொள்வது பொருத்தமானதே.

குற்றத்தையும் தண்டனையையும் இணைத்து நோக்கும் போது அந்தந்தக் குற்றத்துக்கு ஏற்புடைய துன்பத்தை

அவனவனுக்குக் கிடைக்கச் செய்வதென்பது பலவகை அறக் கருத்துகளில் ஒன்று எனக் கொள்ளவேண்டும்.

சில வேளைகளில் குற்றவாளிகளைத் தண்டித்தல் அவனைப் பொறுத்தும் மற்றவர்களைப் பொறுத்தும் தேவையற்றதாக இருக்கலாம். அப்போது அவனைத் தண்டித்தே தீர வேண்டும் என்று வலியுறுத்த வேண்டியதில்லை. பொதுவகையில் நோக்கும் போது, வேறு அறவழிகளினால் நன்மை ஏற்பட இடமில்லை என்ற நிலைமை தோன்றும்போது ஒரு நீதிபதி குற்றவாளிக்குரிய வரையரைக்குட்பட்ட தண்டனையை வழங்குவது நேர்மையே.

தண்டனை என்பதை மிகவும் வலிமை உடையதாக விமரிசிக்கலாகாது. அறவழியில் ஒரு செயல் தவறானது என்பதை குறிப்பிட்டுக் காட்டுவதற்காக ஏற்பட்ட ஒன்றே தண்டனை. இன்னும் தண்டனையை விரிவாக ஆராயலாம்.

சாதாரண மக்கள் தவறான செயல்களை இரு வகைகளாகப் பிரிப்பதைக் காணலாம். தவறான செய்கைகள் ஆனாலும் மன்னிக்கக்கூடியவை- இது ஒருவகை. மன்னிக்க இயலாத தவறான செயல்கள்- இது இரண்டாம் வகை. குதிரைப் பந்தயத்துக்குச் செல்வதை அறநியதிப்படி தவறு என்று கருதும் ஒருவன் பரிசுச் சீட்டு வாங்குவதை அப்படியொன்றும் மன்னிக்கக்கூடாத தவறில்லை எனக் கருதலாம். இந்நிலையில் குறிப்பிட்ட ஒரு தவற்றுக்குத் தண்டனை விதிக்கும்போது பொதுமக்கள் என்ன நினைப்பார்கள் எனின், தவறான செயலுக்குத் தண்டனை உண்டு என்பதன் மூலம் சட்டம் அல்லது நீதி உயிருடன் இருக்கிறது என்பதோடு, மன்னிக்கத்தக்கதாக கருதிவந்த குற்றங்களுங்கூடத் தவறான செயல்களே என்று நினைப்பார்கள். நாளடைவில் மன்னிக்கக்கூடிய தவறான செயல்களையும் மெல்லவே நீக்கி விடுவர். ‘இந்தத் தண்டனை நியாயமானது’ எனப் பொது மக்கள் கருதும்போது, சட்டம், சட்டத்தின் உயிர்நாடி, குற்றச் செயல், ஒரு குற்றச் செயல் சமுதாயத்தில் விளைவிக்கும் அவல நிலை ஆகியவைகளை நன்முறையில் அறியும் நிலையை அவர்கள் பெற்றுள்ளார்கள் என்பதைப் புலப்படுத்துவதாகும்.

எந்த ஒரு செயலும் அதன் பயனை நல்கவல்லது. அவ்வகையில் குற்றச் செயலுக்குரிய எதிர்மறையான பரிசுதான் தண்டனை. அறவாழ்வுக்குரிய விதியின் வண்ணம் அடங்கி நடந்த ஒருவன் அந்த அறவாழ்வு சட்டத்தின் உடன்பாட்டுநிலைப் பரிசைப் பெறுகிறான். அந்த அறவாழ்வுச் சட்டத்தை உடைத்து மீறிச்சென்று செயலாற்றியவன் அச்சட்டத்தின் எதிர்மறை நிலைப்

பரிசைப் பெறுகிறான். சமூகம் தன்னுடைய உறுப்பினர்களின் நேர்முகச் செயல், எதிர்முகச் செயல் ஆகியவைகளுக்கு முறையே நேர்முகப் பரிசையும், எதிர்முகப் பரிசான தண்டனையும் கொடுக்கத் தவறவில்லை என அரிஸ்டாடில் விளக்குகிறார்.

தண்டனை என்பது குற்றம் செய்த ஒருவனுக்கு மற்றவரால் கொடுக்கப்படுவது என்றோ, அவ்வாறு கொடுப்பது இன்ன இன்ன பயனைக் கருதியது என்றோ, மன்னிக்கவோ அன்றி அதிகம் வழங்கவோ ஒருவருக்கு உரிமை உண்டு என்றோ கருதுவது, அறக் கொள்கை ஆயும் அறிவை முழுமையாகப் பெறாமையால் வரும் தவறு ஆகும். செயலும் பயனும் சார்பின்றி இயல்பாகவே வந்தமைவன. தண்டனையைக் குற்றவாளி தானே தேர்ந்து தனக்குரிமையுடையதாக ஆக்கிக்கொண்டான்; சட்டங்களை மீறியதன்மூலம் தானே தனக்குத் தேடியமைத்துக் கொண்ட ஊதியமாகும்.

நாம் ஒருவனுக்குத் தண்டனை தருகிறோம் என்றால் நாம் அவனுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம். அதைத் தவிர வேறு எக்காரணமும் இல்லை. இவ்வாறு அறிவியலாய்வாளர்கள் விளக்கம் கூறுகின்றனர்.

துன்பத்துக்குத் துன்பம் என்னும் வகையிலமைந்த தண்டனைக் கொள்கையானது ஏனைய இரண்டு கொள்கைகளையும் தம்முள் அடக்கி நிற்பதால் அதுவே பொருத்தமான கொள்கை என அறிஞர்கள் கருதுகின்றனர். துன்பத்துக்குத் துன்பம் என்ற அடிப்படையில் தண்டனை வழங்கும்போது சட்டத்தின் பெருமையும் ஆதிக்கத் தன்மையும் காப்பாற்றப் பெறுகின்றன. தண்டனையைப் பெறுவதன் மூலம் சட்டத்தை மீறுதல் அதற்குரிய பயனைத் தந்தேவிடும் என்ற படிப்பினையைக் குற்றவாளி உணர்ந்து தன்னைத் திருத்திக்கொள்ளும் வாய்ப்பு அமைகிறது; அதே சமயத்தில் மற்றவர்கள் அத்தகைய குற்றத்தைச் செய்யாமல் எச்சரிக்கையாக இருக்கும் படிப்பினையையும் தருகிறது.

துன்பத்துக்குத் துன்பம் என்ற தண்டனைக் கொள்கை இரண்டு வடிவங்களைப் பெறுகிறது. (1)வலிய அமைப்பு,(2)இளகிக் கொடுக்கும் மென்மையியல்பு. செய்யப்பெற்ற குற்றத்தின் இயல்பு ஒன்றையே கருத்திற்கொண்டு அமைக்கப்பெறும் தண்டனையியல்பு குற்றம் கடுமையானதாயின் தண்டனையும் கடுமையாக அமையும். குற்றம் நடந்த காலத்தில் அமைந்த ஏனைய சூழ்நிலைகளைக் கருத்தில் கொள்ளாமல் குற்றத்தின் இயல்பு ஒன்றையே நோக்கி தண்டனை அளிப்பது வலிய அமைப்புப் பிரிவைச் சாரும்.

இரண்டாம் வகையாகிய இளகிக் கொடுக்கும் அமைப்பு குற்றம் நிகழ்ந்த கால இட அமைப்புச் சூழ்நிலை, குற்றம் செய்தவனின் வயது, அறிவின் முதிர்ச்சி நிலை, குற்றம் புரிய அவனைத் தூண்டிய ஏனைத் தூண்டுதல்கள் ஆகியவைகளை எல்லாம் கருத்திற் கொண்டு தண்டனையை முடிவு செய்வது.

தூக்கிடுதல் தண்டனை

கொலை செய்தவனுக்குத் தூக்குத் தண்டனை அளிக்கப் பெறுகிறது. தண்டனை கொடுப்பதன் நோக்கம் ஏனையோர் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்பதற்காகவே என்ற தண்டனைக் கொள்கை தூக்குத் தண்டனையை அனுமதிக்கிறது. கொலை செய்தவனுக்கு தூக்குத் தண்டனையை அளிப்பதன் மூலம் ஏனையோர் அக்குற்றத்தைச் செய்யாமல் எச்சரிக்கையாக இருப்பர் என்பதே.

துன்பத்துக்குத் துன்பம் என்ற அமைப்பில் எழுந்த தண்டனைக் கொள்கையும் கொலைக் குற்றம் செய்தவனுக்கு மரண தண்டனை அளித்தல் நேர்மையானதே என அனுமதித்தது. இக்கொள்கையின் இரு பிரிவுகளுள் முதற்பிரிவாகிய வலிய அமைப்புப் பகுதி எத்தகைய புறனடைகளும் விதிக்காமல் மரண தண்டனையை வலிமைப்படுத்தி வற்புறுத்தியது. ஆனால் இக்கொள்கையின் இரண்டாம் பிரிவாகிய இளகிக் கொடுக்கும் அமைப்புப் பாதை கொலை நடந்தபோது அமைந்த சூழ்நிலை, செய்தவனுடைய வயது, அறிவு முதிர்ச்சி முதலியவைகளைக் கருத்திற் கொள்ள வேண்டும் என்று பரிந்துரை செய்தது.

தற்கால சமுதாய அமைப்பில் அறிவியல் செயலறிவு பெற்றுத் திகழும் பொதுமக்கள் கருத்து,மரண தண்டனைக்கு எதிர்ப்பாகவே இருக்கிறது. மரண தண்டனை தேவையா என்ற ஆய்வு நடை பெற்று வருகிறது என்றாலும் பெரும்பாலான நாடுகள் மரண தண்டனையை இன்னும் நீக்கிவிடவில்லை.

(4) மக்களாட்சி, சமுதாயவியல் ஆட்சி அறவியற் கொள்கைகள்

முன்னுரை

தனிமனித வாழ்வு அவனுடைய தனித்த நிலையில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டிய அறக் கொள்கைகளோடு மட்டும் அமைந்து நின்றுவிடுவதன்று. பல தனிமனிதர்கள் இயைந்துநின்று வாழ முற்படும்போது, அவர்களையெல்லாம் இணைத்து, ஒழுங்குபடுத்தி வாழவைக்கும் பொது அமைப்பு ஒன்று தேவை. அப்படிப்பட்ட பொது அமைப்புகளைத்தான் 'சமூகநல வளர்ச்சி நிலையங்கள்' என்று கூறுகின்றோம். குடும்பம், கல்வி நிலையம் முதலியவை இவ்வகையைச் சார்ந்தவைகளே. அரசியலமைப்பு என்பதும் இவ்வகையினதே.

சமூகநல வளர்ச்சி அமைப்புகள் (Social Institutions) பொதுவாக மக்களை இணைத்து ஒழுங்குபடுத்தி வாழவைக்கும் ஒருவகைப் பொது அமைப்புகள் என்று கொள்வது ஒருவகை விளக்கம். இனி, சமூகநல வளர்ச்சி நிலையங்களை வேறுவகையாக விளக்குவதும் உண்டு. தனிமனிதனுடைய புற அமைப்புச் செயல்கள், அவைகளுக்கு உள்ளீடான பண்புகள் ஆகியவைகளை உருவாக்கும் அமைப்புகள் என்றும் விளக்கலாம். இவ்வகையில் 'நாடு' என்பது ஒருவகைப் பொதுநல அமைப்பு. நாடு என்பது என்ன? நில அடிப்படையில் நாடு என்பதற்கு விளக்கம் கொள்வதை அற இயலில் கொண்டுவந்து இணைக்கக்கூடாது. இங்கே நாடு என்பது ஆட்சியமைப்பைக் குறிக்கும் ஒரு சொல்; இந்தியாவிற்கு ஆட்சியமைப்பை அடிப்படையாகக் கொண்ட பெயர் மக்களாட்சி நாடு (Republic country) என்பது.

தனிமனித வாழ்வில் 'நாடு' எனப்பெறும் சமூகநல அமைப்பு நிலையம் எத்தகைய பயனைக் கொடுக்கின்றது என வினவினால் தனிமனிதனின் நடத்தையை உருவாக்குவதே நாட்டின் கடமை என்ற விடை கிடைக்கும். தனிமனிதனின் நடத்தையை உருவாக்க முற்படும்போது, நன்னடத்தைக்குத் தேவையான அறக் கொள்கைகள் சட்டம் என்ற பெயரால் அமைக்கப்பெறும். சட்டம் ஒத்துக்கொள்ளாத செயல்கள், நன்னடத்தை அல்லாதவைகள் எனக் கருதப்பெறும். சட்டத்தை மீறும் செயல்கள் தண்டனைக்குரிய செயல்களாகக் கருதப்பெறும். இவ்வாறு தனி

மனிதனின் நன்னடத்தையை உருவாக்குவது நாட்டின் கடமை அல்லது அரசின் கடமை என்று கருதப்பெறும்.

சங்க காலத்திலும் இத்தகைய கருத்து நிலவி வந்தது என்பதை,

'நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே'

என்று பொன்முடியார் பாடிய புறநானூற்றுப் பாடலின் வரி நினைவுறுத்துவதைக் காணலாம்.

இந்நிலையில் இந்திய நாட்டின் அரசியலமைப்பாகிய மக்களாட்சியமைப்பும், அதனோடு மிகவும் இணைந்துள்ள சமுதாயவியல் அரசியலமைப்பும் எத்தகைய அறக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றன என்பதை இந் நிலையில் காணலாம்.

தனிமனிதனின் நன்னடத்தையை உருவாக்குவது நாட்டின் கடமை எனக் கொண்டாலும், பொதுவாக, நாட்டின் செயல் முறை அமைப்பானது கீழ்காணும் இருவகைச் செயல்களில்தான் தன்னுடைய கடமையை நிலைநாட்ட முற்படும். (1) சட்டம், ஒழுங்கு ஆகியவைகளை நிலைநாட்டுதல், (2) இந்த உலகில் எந்த ஒரு தனிமனிதனும் நேர்மையான முறையில் அவன் உரிமையைப் பெற்றுவாழ வழிவகைகளைச் செய்வது. எந்த ஓர் அமைப்பினைக் கொண்ட ஆட்சியாக இருப்பினும் அதன் செயல் முறை இவ்வாறாகவே அமையும்.

மக்களாட்சி முறையின் அடிப்படை அறக்கோட்பாடுகள்

மக்களாட்சி என்பது ஒருவகை அரசியல் அமைப்பு. இது முடியரசு என்ற சொல்லாலும் குறிக்கப்பெறும். 'மக்களுக்காகவே மக்களால் ஆட்சி செய்யப்பெறுகிற மக்களாட்சி' என்பது மக்களாட்சியின் இலக்கணத்தை வரையறை செய்யும் ஒருதொடர். மக்களாட்சி என்பது மக்களுக்காகவே மக்களாலேயே செய்யப்படுகின்ற ஆட்சி முறையாகும் (Democracy is a government of the people, by the people, for the people). மக்களாட்சியின் செயல்பாட்டு முறை (நிருவாகம்) யானது தேர்ந்தெடுக்கப்பெற்ற மக்கட் பிரதிநிதிகளைக் கொண்டே நடத்தப் பெறுகிறது. மக்களாட்சியில் ஆணை (அதிகாரம்) என்பது பெரும்பான்மை என்ற அறத்தின் அடிப்படையில் பெரும்பான்மையான மக்களிடமே அமைகிறது. மக்களாட்சி என்பது மனிதனையும், மனித சமூகத்தையும் இணைத்துக் காப்பதற்காக வரையறை செய்யப்பெற்ற ஒரு கொள்கையன்று. அது அறக்கொள்கை

களின் அடிப்படையின் மேல் உறுதியுடன் நிலைத்து நிற்குமாறு நிறுத்தப் பெற்ற, வாழ்வியல் பாதை எனக் கொள்ளவேண்டும்.

(1) **தனிமனிதனின் தகுதியும் பெருந்தன்மையும்:** எதிர்க்கட்சி என்ற ஒன்றற்கே இடங்கொடுக்காமல் எல்லா வகையான ஆதிக்கங்களையும் ஒரே கட்சிக்குரியதாக அமைத்துக் கொள்ளும் ஆட்சி முறையானது சர்வாதிபத்திய ஆட்சி (Totalitarianism) எனப் பெயர் பெறும். இது சில முக்கியமான அறக்கொள்கை களின் கருதுகோள்களை ஏற்காமல் மறுப்பதையே அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப் பெறுவது. மனிதனுடைய மதிப்பீட்டிலான தகுதியையும் அவனுடைய நாகரிகப் பண்பியலான பெருந்தகைமையையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப் பெற்றதே மக்களாட்சி. எனவே, அறக்கொள்கைகளின் அடிப்படையில் உருவாக்கப் பெறுவதே மக்களாட்சி.

உரிமை என்பது நன்மையைச் சார்ந்தது. நன்மை என்பது பயன் மதிப்பீட்டைச் சார்ந்தது. இவ்வகையில் மனிதனைப் பற்றிய மதிப்பீட்டு நிலை என்ன?

தற்கால உலக வழக்கில் மனிதனை ஓர் 'ஆள்' என வழங்குகிறோம், 'ஆள்' என்பது இன்று ஒருவகை எளிய மரியாதைக் குரியதல்லாததான வழக்காக கொள்ளப்படுகிறது. உண்மையில் 'ஆள்' என்பது 'ஆளுமையினன்' என்பதன் சுருக்கம். மனிதன் என்பதை 'man' என்ற சொல்லால் குறிக்கும்போது 'person' என்ற சொல்லின் தமிழாக்கம் 'ஆள்' என்று அமைப்பது பொருத்தமற்றது. 'personality' என்பது 'ஆளுமைப்பண்பு'. மனிதன் பல்வேறு நற்குணங்களை இயைபுபெற ஆளும் தன்மையினன் என்பதைக் குறிக்கவே 'person' என்ற சொல் வழக்கில் எழுந்தது. உடலால் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் அவன் உயிரோடு இணைந்த சில உயர்குணங்களை ஆளும் தன்மையினன். அறிவு, புத்திக்கூர்மை, அறக் கொள்கையைப் பகுத்துணர்ந்து பார்க்கும் திறம், அழகியலை மதிப்பீடு செய்யும் முறை மற்றும் இவ்வாறான தனித்தன்மையுடைய பல்வகைப் பண்புகளின் இணைப்பாக விளங்குபவன். பல்வகை நற்பண்புகளைத் தனித்தன்மையோடு காத்து வருபவன் ஆகையால் அவனைத் தன்னளவில் தானே முடிந்த நிலையினன் (Man is end in himself) மனிதன் தன்னளவில் முடிந்த நிலையினன் என்பதன் பொருள் 'பிற ஒன்றற்கும் கருவியாக நிற்பவன் அல்லன்'. பிற எதனையும் சாராத தன்னளவில் முடியும் தனி நன்மைகள் பலவற்றைத் தன்னுள்ளேயே கொண்டவன்.

உடலியல் தன்மையான கீழ்மையினின்றும் நீங்கி எண்முக ஆன்மிகமும் இயற்கையும் கலந்து நிற்கின்றனவோ அந்நிலைமைக்கு உயர்ந்து சென்று, அங்கே இணையும் ஆன்மிகத்தோடும், இயற்கையோடும் தானும் இணைந்து வாழும் ஆற்றலைப் பெற்றவன். இத்தகைய பண்பினாலும் தகுதியினாலுமே அவனிடம் முடியாட்சி மலர்ந்தது.

(2) தனிமனிதனின் கட்டற்ற தன்மை (Human Freedom): மனிதன் நினைக்கவும், நினைக்கப்பெற்ற கருத்துகளை வெளியிடவும், நினைத்தவைகளைச் செயல்படுத்துவதற்குரிய உணர்ச்சிக் கூறுகளை வெளிப்படுத்தவும் கட்டற்ற தன்மை உடையனாதல் வேண்டும். மனிதனுடைய கட்டற்ற தன்மை அல்லது சுதந்தரம் என்பது நாட்டினாலோ ஒரு கூட்டத்தாலோ ஒருகாலத்தில் அவனுக்கு வழங்கப்பெற்று அவனால் அனுபவ உரிமை சொண்டாடப்பெற அமைந்ததே என்று கருதுதல் தவறு. மனித சுதந்தரத்திற்கு இவ்வாறு விளக்கம் கூறியது ஒரு கட்சி ஆட்சியமைப்பு (Totalitarianism). ஆனால் மனிதனின் கட்டற்ற தன்மை அல்லது சுதந்தரம் என்பது அவனுடைய இயற்கைப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டது. மேலும் அது மனிதனுடைய ஒழுக்கம், மதிநுட்பம் ஆன்மிகத் தன்மை ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத நிலையில் வேண்டப்பெறும் அடிப்படை நியதியாகும். ஆனால், மனிதனின் கட்டற்ற தன்மை அல்லது சுதந்தரம் என்பது ஏனைய இயற்கைப் பண்புகளை முன்னேற்றுவதற்குரிய ஓர் இன்றியமையாத தேவை எனக் கொள்ளவேண்டுமேயல்லாமல் அதுவே மனித வாழ்வின் அடிப்படை நியதி என்பதாக ஆகுதல் கூடாது. இங்கேதான் சுதந்தரத்தின் தேவையும் அதன் எல்லையும் உணர்த்தப் பெறுகின்றன.

தனிமனிதனின் கட்டற்ற தன்மையானது இரு கருத்துகளால் ஒழுங்குபடுத்தப் பெறுதல் வேண்டும். தன் செயலுக்கு தானே பொறுப்பாளனாம் தன்மை, தன்னடக்கம் என இரண்டாலும் தனிமனித சுதந்தரம ஒழுங்குபடுத்தப் பெறுதல் வேண்டும். இல்லையேல் தனிமனித சுதந்தரம் அவனை முரண்பாடுகளின் மத்தியில் கொண்டுபோய் நிறுத்திவிடும்.

(3) சட்டத்தின் ஆணை (Rule of law): மக்களாட்சியானது சட்டத்தின் ஆணை என்ற ஒன்றனை வெளிப்படுத்தும்போது மனிதனின் கட்டற்ற தன்மை எனப்பெறும். சுதந்தரத்தின் உயிர் நாடி, சட்டத்தின் ஆணையின்கீழ் எந்த இடத்தில் வரையறுத்து

நிறுத்தப்பெறுகிறது என்பதை தெளிவாக்குகிறது. மனித சுதந்தரத்தின் எல்லை என்ன? பிறருடைய உரிமையையும் சுதந்தரத்தையும் கெடுக்காத வகையில் ஒருவன் தன்னுடைய சுதந்தரத்தைக் கேட்டுப் பெறமுடியும் என்பதே: அரசில்லா நிலைமைக்கும் கொடுங்கோலாட்சிக்கும் இடை அமைந்த ஒரு வகை நடுவுநிலைமையிலான—அறிவியலுக்கும் பொருந்துவதான சுதந்தரத்தையே—சட்டமற்ற தன்மையையே மக்களாட்சி விரும்புகிறது. இதையே நீதி அல்லது நேர்மை எனக் குறிப்பிடலாம். நீதி என்பது ஒருவனுக்கு அவனுக்குரியதை அவனுக்குக் கொடுப்பது என்பதே. நீதியை முழுமையாக ஒருவன் அடையவோ, பிறருக்கு அடைவிக்கவோ இயலாது என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் சட்டங்கள் தெளிவாகவும் அறிவியலுக்குப் பொருந்துபவையாகவும் அமைந்து, அவற்றின் செயற்பாட்டு முறையானது நாகரிகமானதாகவும் மனிதத்தன்மையுடன் இணைந்ததுதான் எனக் கருதக்கூடியதாகவும் அமையுமேல் பெரும்பாலான மனிதர்கள் சட்டங்களுக்கு ஆதரவு தரவும் அவைகளைச் செயற்படுத்திப் பார்ப்பதில் ஆசையும் கொள்வது உண்மை.

சிறந்த நன்னடத்தை என்பதன் ஒருதன்மைத்தான விளக்கத்தையும் சார்புத் தன்மையையும் வரையறை செய்யக் கூடிய 'சூழ்நிலை' என்பதன் உண்மையான இயற்கை விளக்கத்தைச் சட்டங்களே தருகின்றன. சட்டத்தின் ஆணையானது பேராசை, வீண்பெருமை, வீண்பெருமையை அடிப்படையாகக் கொண்ட தனியுரிமை ஆகியவைகளை நீக்குவதற்குத் துணைபுரிகின்றது. ஆனால் அதே சமயத்தில் தீய பண்புகளின் விளக்கங்களை, நீதிமன்றங்களில் நீதிபதிகள் சட்டத்தின் ஆணைக்குக் கொடுக்கப்பெறும் விளக்கங்களிலிருந்து தெரிந்து கொள்ளவும், அவ்வாறே தாங்களும் சட்டத்தின் ஆணையை உபயோகிக்கவும் வல்லவர்களாகத் தனிமனிதர்களுக்கு விளங்க முடிகிறது.

(4) ஒப்புதல் பெறுதற்குரிய சட்ட வடிவமைப்பு: சட்டங்கள் மேலெழுந்தவாரியாக அமைந்துவிட்டன அல்லது கொடுங்கோல் தன்மையை உட்கொண்டவை என ஒருசில சமயங்களில் சில சட்டங்களுக்கு விளக்கம் அமையலாம். அல்லது வலிமை வாய்ந்த சிறுபான்மையினரோ, தன்னலம் வாய்ந்த சிறுபான்மையினரோ சட்டங்களின் குறைகளை எடுத்து விளக்கி, குறைகளை உடைய இவைகள் பெரும்பான்மையினரால் சட்டங்களாக்கப் பெற்றுவிட்டன என விமரிசிக்கலாம். இந்நிலைமையில் உருவாக்கப்பெறும் அடிப்படையான அறக்கோட்பாடுதான் ஒப்புதல் பெறும் உரிமை.

தனிமனிதனின் அடிப்படை உரிமைபற்றிய பெரிய சிக்கல்கள் தோன்றுமேயானால், அவைகளைப் பெரும்பான்மையானவர்களின் விருப்பம் என்ற ஒன்றன் அடிப்படையில் தீர்ப்பது என்பதுதான் மக்களாட்சி கொள்கையின் அடிப்படை.

செயற்படுத்தும் ஆற்றல், ஆதிக்கத்தன்மை ஆகியவைகளின் மேல் ஓர் அரசு தீவிரமாகக் கவனம் செலுத்துவதாக அமையலாம். செயற்படுத்தும் அதிகாரமே தீமை என்பது அன்று. அதனைத்தவறாகப் பயன்படுத்துவதே தீமை. தன்னலம் வாய்ந்த ஒரு கூட்டத்தினரால் பொறுப்பற்ற முறையில் செயற்படுத்தப் பெறும் சட்டத்தின் ஆணையே தீமையுடையது. ஆனால், ஒவ்வொரு சட்டத்தின் உண்மைப் பொருளை முழுநிறைவு பெற்ற சமுதாய மக்களால்தான் அறியவும் ஆதரவு காட்டவும் இயலும். ஆனால் நிறைவு பெற்ற சமுதாயம் இல்லாதபோது சிறுபான்மையினரின் ஒப்புதலோடு கூடிய பெரும்பான்மையினரின் முடிவு என்ற ஒன்றனால்தான் சட்டத்தினை தகுதியாக்க முடியும்.

அடிப்படை உரிமைகளின்மேல் எழுந்த பெருஞ்சிக்கல்களைச் சட்டத்தின் ஆணைமூலம் நிறைவு செய்ய முற்படும்போது ஒப்புதல் பெறுதல் என்ற இதன்மூலம் மக்களாட்சியானது, மீளவும், சிக்கல்களையும் தீர்க்கும் வகைகளையும் விரிவாக விவாதிக்க உடன்படுகிறது என்றும், பேச்சுவார்த்தைகளின் மூலமும் கலந்து செய்யும் முடிவுகளின் மூலமாகவும் இப்பெருஞ்சிக்கல்களைத் தீர்வு செய்ய உடன்படுவதாகவும் தெரிவிக்கும். இதுவே ஒப்புதல் பெறுதல் என்பதன் அடிப்படை விளக்கம்.

(5) நல்ல நிலையிலிருந்து சிறந்த நிலைக்குப் போக எண்ணும் கருத்து: மக்களாட்சி என்பது ஒரு குறிப்பிட்ட நாட்டை அடிப்படையாகக் கொண்டு அந்நாட்டு மக்களை, மக்களாட்சியால் நன்னிலைமை பெற முயற்சிப்பது போலவே, இவ்வுலகம் முழுமைக்கும்கூட இவ்வுலக மக்கள் அனைவரும் நல்ல மேல் நிலையை அடையவேண்டும் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்ட அற அடிப்படையை மேற்கொண்டு செயற்படுத்தல் வேண்டும். மக்களாட்சி என்பது, என்ன இருக்கிறது என்பதிலிருந்து என்ன இருக்க வேண்டும் என்பதை நோக்கிய முன்னேற்றப் பணி எனக் கொள்ளுதல் வேண்டும்.

(6) தன்னைப் போலப் பிறரை மதிக்கும் கருத்து: உலகில் இன்று நிகழும் பற்பல வகையான உட்பூசல்களுக்குக் காரணம் அங்கங்கே மக்கள் உள்ளத்தில் நிலவிவரும் குறுகிய மனப்

பான்மையிலான வேறுபாடுகளே. பொருளாதாரம், பாலுணர்வு நிலை, சாதி, சமயம், நிறம், மரபு ஆகியவைகளில் உயர்வு தாழ்வு அமைத்துக் கொண்டு செயல்படும் முறைகளே பலவகை முன்னேற்றங்களையும் தடுப்பன ஆகின்றன. நாட்டின் உள்ளமைப்பு முறைகளின் முன்னேற்றத்திற்கும் அரசியல் செயற்பாடுகளின் அமைப்பிற்கும் மிகத் தேவையான ஒன்று அதன் உறுப்பினர்கள் அனைவரும் ஒத்த தன்மையுடையவர் என்பதே. வேறுபாடுகள் பொய்யாகக் கற்பிக்கப் பெற்றவை என்ற கருத்தில் அவைகளை முழுமையாக நீக்குதல் வேண்டும். உடலாலும், அறிவாலும் ஏனைய பிற தனித்தன்மைகளாலும் அமைகின்ற வேறுபாடுகள் இருந்தபோதிலும், எல்லோரும் மனிதத் தன்மை என்ற ஓர் அடிப்படைப் பண்பில் ஒத்தநிலை பெற்றவர்களே. மனிதத் தன்மை என்ற அப்பொதுநிலைப் பண்பினை அடிப்படையாக வைத்து, அதனை ஒழுங்குபடுத்தி வளப்பமுறச் செய்வதே மக்களாட்சியின் பணி எனக் கருதுதல் வேண்டும். மனிதத் தன்மையுடையவர்கள் மனிதர்கள் என்ற அடிப்படை நியதியில் அனைவரும் ஒத்த நிலையுடையவர்களே. சட்டங்களும் சமூகச் சீர்திருத்த நிலையங்களும் இந்த அடிப் படையை வலியுறுத்தவும், அதை அனைவர் உள்ளத்திலும் சிறப்பாக இடம்பெறச் செய்யவும் ஆன முயற்சிகளில் விளக்கங் கள் கூறித் தொண்டு செய்யவோ தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

மனிதனுடைய வேறுபாடுகள் அவனிடம் இருக்கும் இருவேறு பண்புகளைச் சார்ந்தவைகளே. மனிதனிடம் மிருகநிலையும் உயர்ந்த தெய்வநிலையும் உண்டு. இரண்டன் இணைப்பே மனிதன். மிகத் தாழ்ந்த மிருகநிலையை மெல்ல மெல்ல அகற்றி, மிக உயர்ந்த மனிதநிலையை—தெய்வநிலையை அடைய முயற்சி செய்தல் வேண்டும்.

மிருகநிலை என்பதே மனிதனின் உள்ளே இருக்கும் தாழ்ந்த நிலை. அது அவனை அவனுடைய அக்கம்பக்கங்களிலுள்ள மனிதர்களின் உரிமைப் பொருள்களையெல்லாம் எடுத்து அனுபவிக்கவும், அவர்களைவிட அதிகமாக எடுத்துக்கொள்ளவும், எல்லா வகையான இன்பத்துய்ப்புகளுக்கெல்லாம் பிறரை நீக்கி விட்டும், தானே அனுபவிக்குமாறு ஆக்கவும் செய்கிறது. அதுவே அவனுடைய தாழ்ந்த நிலை அல்லது இழிந்த நிலை. அதே சமயத்தில் அவனுடைய உயர்ந்த நிலை என்பது மனித முன் னேற்றத்துக்குத் தேவையான உரிமைகளைப் பெறவும், மனித சமூகத்தில் இருக்கும் வலிமையில்லாதவர்—வலிமை வாய்ந்தவர் ஆகிய இருதரப்பினர்களும் தத்தம் உரிமைகளை பெறுமாறு

செய்யவும், தாம் வாழவும், தம்மைப்போலவே பிறரும் வாழவும் வேண்டிய கடமைகளைச் செய்யத் தூண்டுகிறது. இவ்வமைப்பில் மனிதன் ஒவ்வொருவனும் தன்னிடமுள்ள தாழ்ந்த நிலைப் பண்பினை நீக்கி,உயர்ந்த நிலைப் பண்பினை வளரச்செய்யவேண்டும்.

மக்களாட்சியின் வெற்றி என்பது நன்முறையில் ஆட்சி செய்பவர்களைத் தேர்ந்தெடுக்கும் அறிவாற்றல் பெறுவது என்பதன்று. அரசானது சட்டத்தின்ஆணையின் அடிப்படையில் கட்டுப்பாடுகளைக் கொண்டுவருவதற்கு வாய்ப்பே இல்லாத நிலையை உருவாக்குவதுதான். மனிதன் தன்னைத்தானே ஆட்சி செய்வதில், தன்னைக் காப்பதில் வல்லவனாதல் வேண்டும். தன்னைத்தான் காத்துக் கொள்ளுதல் என்பது, பிறருடைய உரிமையை வஞ்சித்து எடுத்துக் கொள்ளுதல், பிறரையும் மனிதர்களாக நினைத்து வாழாமை முதலியவைகளை நீக்கி, தன் உரிமையைக் கொண்டு தன்னைக் காத்துக்கொள்ளல் என்பதேயாகும். தன்னைத்தான் காத்துக்கொள்ள விரும்பாதவன் தன்னுடைய தகுதி-சுயமரியாதை, கடமையுணர்வு ஆகியவைகளையும் அவ்வாறே தன் இன்பம், தன் பண்பு ஆகியவைகளையும் இழந்தவனாக ஆகிறான். பிறரைத் தன்போல் மதிப்பு, அவரவர் உரிமையை அவரவர் பெறுவதற்குத் தான் தடையாக இல்லாமல் துணையாக இருந்து. தன்னுடைய உரிமையைக் கொண்டே தன்னைக் காத்துக்கொள்ளும் நிலையை ஒவ்வொருவனும் ஆட்சி செய்வதற்கு என ஓர் அமைப்பே தேவையில்லை என்ற நிலை உண்டாகிவிடும். சட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசுக்கு எவ்வளவுக்கெவ்வளவு எளிமை உண்டாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு மக்களாட்சி வெற்றி பெற்றிருக்கிறது என்பது பொருளாகும்.

மக்களாட்சியின் அறக் கொள்கை பற்றிய ஆய்வு

மக்களாட்சியில் பெரும்பான்மை பற்றிய முடிவே சிறந்தது என்பது அறக் கொள்கையாக அமைத்தலின் சிறுபான்மையினர் எவ்வாறு கருதப்பெறுவர் அல்லது கருதப் பெறுகின்றனர் என்பது ஒரு வினா. எல்லா மனிதர்களும் சமமாகவே கருதப் பெறுதல் வேண்டும் என்பது மக்களாட்சியின் அடிப்படைக் கொள்கையாதலின், ஒரு தனிப்பட்டவனுடைய குரல் ஆட்சிப்பீடத்தில் ஒலிக்குமா என வினா எழுப்புவர். மக்களாட்சியில் சட்டங்கள் மக்கள் நன்மைக்காகவே இயற்றப்பெறுகின்றன என்பது உண்மையானால், இன்று மக்களாட்சியில் கடைப்பிடிக்கப்பெறும் பல வகையான சட்டங்கள் கண்டனங்களுக்கு உள்ளாவதற்குக் காரணம் என்ன? சட்டங்கள் திருத்தப் பெறுகின்றன என்பது ஏன்?

மேலே கூறப் பெற்றவைகளெல்லாம், மக்களாட்சியின் அடிப் படை அறக் கொள்கைகளில் அமைந்த குறைகள் அல்ல. மக்க ளாட்சியின் அடிப்படை அறக்கொள்கைகள் இன்னும் நன்முறை யில் மக்களால் அறிந்து செயல்படுத்தப்படவில்லை என்பதே பொருள். மக்களாட்சியில் அதன் குடிமக்களாகிய மக்கள் நன் முறையில் மக்களாட்சி பற்றிய அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும். மக்களாட்சியில் செயற்படுத்தப்பெறும் சட்டங்களை அணுகும் ஒவ்வொரு மனிதனும் தன்னை ஓர் இயந்திரம் என நினைத்துக்கொண்டு அப்படியே சட்டத்துக்கு அடிமையாகும் நிலை மாறி, சட்டத்தின் அடிப்படை உணர்ச்சியை நன்கு தெரிந்து மதிக்கவும், அறிவுடைமையுடனும் ஆக்கவுணர்ச்சி யுடனும் சட்டத்தை மதித்து ஏற்கவும் ஆகிய குடிமக்கள் தகுதியை ஒவ்வொருவனும் பெற வேண்டிய நிலையில், அவனுக்கு மக்க ளாட்சிக் கல்வியை அளித்தல் வேண்டும். சட்டத்துக்கு கட்டுப் படுதல் என்ற ஒன்றை மட்டுமே சிறப்பாகக் கருதினால் மனிதன் நாளடைவில் ஓர் அடிமையாகவோ அல்லது ஒரு கருவியாகவோ தான் அமைந்துவிடும் சூழ்நிலை உருவாகிவிடும். தனிமனிதனின் நடத்தையை ஒழுங்குபடுத்தும் சட்டங்களை உருவாக்கவும், மக்களாட்சியில் தான் வகிக்கும் பொறுப்புணர்ச்சியை வெளிப் படுத்தும் பயிற்சியைப் பெறவும் வாய்ப்பளிப்பதே மக்களாட்சி. எனவே, மக்களாட்சி பற்றிய அறிவு மக்களுக்கு அமையுமே யானால் அனைத்துக் குறைகளும் நீங்கும் என்பது அறிஞர் முடிவு.

சமுதாய இயலின் அறக் கொள்கைகள்

முன்னுரை

சமுதாய இயல் என்பது ஒருவகை ஆட்சிமுறை என்று கருதுதல் கூடாது. சமுதாயத்தில் உள்ள உறுப்பினர்களாகிய தனிமனிதர்கள் அனைவரும் வேறுபாடின்றி எவ்வாறு தத்தம் உரிமையைப் பெறமுடியும் என்பதை ஆய்ந்து விளக்கும் கொள் கைகளே சமுதாய இயல் எனப்பெறும். ஒவ்வோர் ஆட்சிமுறை யிலும் சமுதாயம் பற்றிய கருத்தும், சமுதாய நலன் பேணப் பெறும் முறையும் விளக்கப்பெறும். சமுதாய இயலில் தனிமனித னுடைய உரிமையை வரையறை செய்யும் கொள்கையும், செயற் படுத்தும் நேர்மையும், அவைகளைப்பற்றிய மதிப்பீடுகளும் ஆய்வுக்குரிய பொருளாக அமையும்.

தனிமனித உரிமையைப் பகிர்ந்தளிப்பதில் சிக்கல்

எல்லா மனிதர்களும் சமமாக மதிக்கப் பெறவேண்டும் என்பது பொதுவிதி. ஒரு சமுதாயத்தின் உறுப்பினர்களின்

தொகை ஓர் ஆயிரம் என்றால் அச்சமுதாயம் அதற்குக் கிடைக்கும் எந்த ஒரு வருவாயையும் ஆயிரம் பங்காகப் பிரித்துக் கொடுத்து விடவேண்டும். இது ஒருவருக்குஒன்று என்ற நியதியிலான பிரிப்பு.

இவ்வாறு பிரிப்பதால் தனிமனிதனின் சிறப்புத் தகுதியானது நிராகரிக்கப் பெறுகிறது. எல்லா மனிதர்களுக்கும் பிறப்பு ஒரே தன்மையது. ஆனால் சிறப்பு வேறுபடும். அனைவருக்கும் பொதுமைப் பங்கு என்று சொல்லும்போது, சிறப்பியல் புடையவர்கள் தத்தம் சிறப்பியல்புகளை வெளிப்படுத்த வாய்ப்பு இல்லாது போய்விடும்.

இனி மூன்றாவதாக அமைவது ஒன்று. சமூக நன்மைக் காகவே தம்மை முழுவதுமாகத் தியாகம் செய்தவர்கள் உண்டு. அவர்களுடைய பங்கை எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்பதும் சிக்கலுக்குரியதே. இவைகளையெல்லாம் கருத்திற்கொண்டு, சமுதாய இயல் கொண்டிருக்கும் அறக் கொள்கையினைச் சிந்திக்கலாம்.

சமுதாய இயல் ஏற்கும் சில கருதுகோள்கள்

பொதுவாக முதலீட்டாட்சியில் நேர்ந்த குறைகளை நீக்கம் செய்ய வேண்டும். பொருள்களை உடைமைகளாக்கும் முறை, தன்னலச்சார்பு, போட்டி மனப்பான்மை, இலாபம் கருதிய கொள்கை ஆகியவைகளை முற்றாக நீக்க வேண்டும் என்பது சமுதாய இயலின் அடிப்படை அறக் கோட்பாடுகளாம். இவ் வகையில் சிலவற்றைக் காணலாம்.

(1) முதலீட்டுக் கொள்கையினரால் உபயோகமானவை என்று அமைக்கப் பெற்றவைகளெல்லாம் இப்போது சமுதாய, பொருளாதார தீமைகளாக நிலவுகின்றன. அவைகளையெல்லாம் நீக்குதல்.

(2) சமுதாய அமைப்பானது கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் செயலாற்றும் தன்மையுடையதாதல் வேண்டும். அவ்வாறன்றி, போட்டி மனப்பான்மையை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றலாகாது. போட்டி மனப்பான்மையால் மக்கள் தங்களுக்குள் மாறுபாடு கொண்டு மோதுகிறார்கள். அதில் ஒருவன் பெறும் நன்மை என்பது அடுத்தவனுடைய நன்மையை அழிப்பதன் மூலமாகத்தான் அமைகிறது.

(3) தொழில்களின் மூலமாகக் கிடைக்கும் இலாபம் அல்லது மிகுபொருள் பொதுவாக, மனிதர்களின் நன்மையை உயர்த்து கின்ற பணிக்காக உபயோகப்படுத்தப் பெறவேண்டும். புதிய

கண்டுபிடிப்புகளாலும், சமுதாய பொருளாதார முன்னேற்றங்களாலும் கிடைக்கும் மிகுபொருள் மக்களின் பொது நன்மைக்குச் செல்லுதல் வேண்டும். அவை ஒரு தனி நபரையோ அல்லது ஒரு சிறு வகுப்பினரையோ சென்று அடைவதாக அமைக்கக் கூடாது.

(4) சமுதாய முன்னேற்றத் திட்டங்களை வகுக்கும்போது மக்களின் வறுமை, வேலையின்மை இன்னும் இவைபோன்ற சமுதாயத் தீமைகள் நீக்கப்பெறும் வகையிலும், சமுதாயம் தன்னுடைய உறுப்பினர்களுக்கு முழுநிறைவு, மிக்க நிறைவு, தேவைக்கு மேல் நிறைவு என்ற நிலை இல்லாவிடினும், வாழ்வில் குறையில்லை என்ற எண்ணம் உண்டாக்கக்கூடிய வாழ்வியலை உறுதி செய்யக்கூடியதாகவும் வகுக்கவேண்டும்.

மேலே குறிப்பிடப் பெற்ற நான்கு அம்ச அடிப்படைக் குறிக்கோள்களைச் சமுதாய இயல் அறக் கொள்கைகளாக ஏற்கிறது.

சுருங்கக் கூறின், தற்காலத்துச் சமுதாயக் கொள்கையானது உடைமைகளை உரிமை கொள்ளும்போது தனிமனிதச் சொத்துரிமையைவிட பொதுநலச் சொத்துரிமையிலும், உற்பத்தி, பதிவு செய்தல், மாற்றுதல் ஆகியவைகளில் போட்டி மனப்பான்மை, வியாபார நோக்கு என்ற இரங்கு அடிப்படைகளையும் நீக்கிவிட்டு, மக்களாட்சி அடிப்படைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதைப் பிரிப்பு முறையிலும், குறிக்கோள்களை அடைவதற்குரிய வழிகளை மேற்கொள்ளும்போது படிப்படியானதும் அமைதியானதும் இயற்கை நிலைக்கு ஒத்ததாகவும் உள்ள வழிகளிற் பெற வேண்டும் என்பதே 'சமுதாயவியற் கொள்கைகளாம்'.

(1) மிகு பொருள்கள் அல்லது சொத்துகள் பொது உரிமையாக்கப் பெறல் வேண்டும்: (2) மக்களாட்சி முறையில் பகிர்ந்தளிப்பு முறையை மேற்கொள்ள வேண்டும். (3) குறிக்கோளை அடைவதற்குப் பயன்படுத்தும் வழிகள் படிப்படியானவைகளாக, அமைதியானவைகளாக, இயற்கையோடு இணைந்தவைகளாக அமைய வேண்டும்.

மேலே கூறப் பெற்றவைகள் மேலும் விளக்கம் பெறுகின்றன. முதலீட்டாட்சியாளர்கள் காலத்தில் மக்கள் வாங்கும் தன்மையில்லாதவர்களாக அமைந்தார்கள். மிகுந்த நிலையில் உற்பத்தி செய்யும் பொருள்களைப் பொதுமக்கள் வாங்க இயலாது—திண்டாடினார்கள். ஏன்? பொதுமக்களின் கூலி அல்லது வருவாய் அதிகரித்தால் அவர்களுக்கு வாங்கும் ஆற்றல் உண்டாகும்

கூலியை அதிகரித்தால் மூலதனம் அமைந்தவர்களுக்கு இலாபம் குறையும். கூலியைக் குறைத்தால் இலாபம் பெருகும். குறைவான வருவாயின் உற்பத்தியால் மிகுந்த பொருள் இருந்துங்கூட வாங்க முடியாத நிலைதான் மக்களிடம் நிலவியது. ஆகையால் இயற்கையானது மிகுமளவில் வழங்கும் மூலப்பொருள்கள் யாராலும் உற்பத்தி செய்யப் பெற்றவை அல்ல. அவைகளெல்லாம் பொதுமக்களின் உரிமைக்குட்பட்ட சொத்துகளாக அமையவேண்டும் என்பது சமுதாய இயற் கொள்கை. சொத்துகளுக்கு பொதுவுரிமை என்பதே நன்றாக மனத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, தெருக்கள், பள்ளிக் கூடங்கள், தண்ணீர் வசதிகள், அஞ்சல் வசதிகள் ஆகியவை பொதுவுடைமை அல்லது தனிப்பட்டவர்களின் உரிமையில்லாமல் அமைந்தவை என்றால் என்ன பொருள்? பொதுவுடைமை என்ற பெயர் அமைந்துவிட்டால், அவைகளின் சேவைகள் சமூகத்தில் உள்ள எல்லோருக்கும் கிடைக்கக்கூடியவை என்பது தான் பொருள். தெருவானது தனிச் சொத்தாயின் எல்லோரையும் நடந்து செல்ல அனுமதியார்கள். ஆனால் பொதுவாயின், அதை அல்லது அதன் நன்மையை அனைவரும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதே.

சமுதாயத்தில் இன்றுள்ள மனநிலை மாறவேண்டும்

சமுதாயத்தின் அடித்தளமான அறக்கோட்பாடானது சமுதாய நலன் நோக்கியதாக இல்லாமல் தன்னலம் நோக்கியதாக இன்று அமைந்துள்ளது.

உற்பத்தி நிலைக்குரிய ஆற்றல், உற்பத்தியின் கொள்கை ஆகியவை பொதுவாக, போட்டி மனப்பான்மையிலும் வணிக நோக்கிலுமே அமைந்துள்ளன. இவைகளால் வரும் விளைவு என்ன? பொதுமக்கள் பஞ்சத்தால் வாடுதலும், முதலீட்டாளர்கள் மிகுபொருள் சேமித்தலும் ஆகும். எனவே, அடிப்படை மனநிலையை மாற்ற வேண்டும்.

இன்றைய சமுதாயத்தின் எல்லா நிலைகளிலும் அமையும் எல்லாச் செயல்களும் சண்டையையும் மிகுபொருள் இலாபத்தையும் கொண்டே செய்யப் பெறுகின்றன. அவைகள் அமைதியையும் அதிகமாக மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்ற அடிப்படை அறங்களைக் கொண்டு செயற்பட வேண்டும்.

முடிவுரை

சமுதாய இயல் அறக்கொள்கைகளைப் பின்வருமாறு அமைத்துக் கொள்ளலாம்.

(1) பொதுமை, சமுதாயம் என்ற சொல்லைச் சேர்ப்பதன் மூலம், அச்சொல் எதனோடு சேர்க்கப் பெறுகிறதோ அதன் சேவையை அச்சமுதாய உறுப்பினர் அனைவரும் ஏற்றத்தாழ் வின்றிப், பெறுவதற்கு வாய்ப்பு உண்டு என்பதே பொருள்.

(2) இயற்கை தரும் மிகுவளங்கள் பொதுமைச் சொத்தாக அமையப் பெற வேண்டுமேயன்றி, தனிமைச் சொத்தாக அமையக்கூடாது.

(3) உற்பத்தி செய்யும் பொருள்களை நோக்கும்போது உற்பத்திக்கும் போட்டி மனப்பான்மை காரணமாக இருக்கக் கூடாது. சண்டையின் அடிப்படையில் உற்பத்தி செய்யாமல் அமைதியின் அடிப்படையில் உற்பத்தி அமையவேண்டும் அனை வருக்கும் மிகுதியாகக் கிடைக்கவேண்டும் என உற்பத்தி செய்ய வேண்டுமேயல்லாமல் வணிக நோக்கில் இலாபம் மிகுதியாக வர வேண்டும் என்ற அடிப்படையில் உற்பத்தி அமையக்கூடாது.

முதலீட்டாட்சியை எதிர்த்து வெளிவந்த கொள்கைகளில் சமூக இயல் போலவே பொதுவுடைமை (கம்யூனிஸம்) எனப் பெறும் கொள்கையும் ஒன்று. மக்களிடமிருந்து சேகரித்தல் பங்கீடு செய்தல் என்பதுபற்றி கம்யூனிஸம் 'எல்லாரிடமிருந்தும் அவரவர் திறமைக்கேற்பப் பெற்று, அவரவரின் தேவைக்கேற்பப் பங்கிட்டுக் கொடுத்தல்' என்பதைக் கொள்கையாகக் கொள் கிறது. ஆனால், சமூகவியல் 'எல்லாரிடமிருந்தும் அவரவர் திறமைக்கேற்பப் பெற்று அவரவர்களின் வேலைக்கு ஏற்பப் பிரிவு செய்து கொடுத்தல் வேண்டும்' என்பதைக் கொள்கை யாகக் கூறுகிறது.

(5) வாழ்வியல் பணிபற்றிய அறங்கள்

முன்னுரை

தனிமனிதனின் அறக் கொள்கைகள், சமூக இயல் அறக் கோட்பாடுகள் என்ற பிரிவுகளுக்கு அப்பால் வேறொரு புதிய பிரிவை உள்ளிட்ட அறங்கள் இத்தலைப்பில் கொடுக்கப் பெறுகின்றன. அவைகள் 'வாழ்வியல் பணிபற்றிய அறங்கள்' என்ற பெயரைப் பெறுகின்றன ஆயினும்,வரலாற்று வளமைகளுக்கு ஏற்ப, புதுமையாய்க் கிளைத்து, வளம்பெற நிறுத்தி விளங்குவனவாகும்.

வாழ்வியல் பணிபற்றிய அறங்கள் என்றால் என்ன?

வரலாற்றுத் தொடக்க காலத்தில் தனிமனிதர்கள் சிறிய அளவில் கூட்டமாகச் சேர்ந்து வாழத் தொடங்கியிருப்பர். அவர்களின் தேவை அன்றுள்ள நிலைமையில் மிகவும் குறைவானதே. தேவைக்குமேல் அவர்களிடம் பொருள் சேருமானால் அடுத்து வாழும் கூட்டத்தாரிடம் கொடுத்துவிட்டு, அவர்களிடம் உள்ளவற்றை வாங்கிக் கொள்ளுதல் என்ற அளவில் அனைத்துத்தேவைகளும் நிறைவு பெற்றுவிடும்.

இக்காலத்தே மனிதர்கள் உலக நாடுகளின் இணைப்பில் இணைந்து வாழ முற்பட்டுள்ளனர். இக்காலத்தே தனிமனிதத் தேவைகள் அதிகம். அவற்றிற்கேற்ப புதிய கண்டுபிடிப்புகள், புதிய துணைக்கருவிகள் பெருகியுள்ளன.

காலம் விளைவித்த மாற்றங்களினால் புதிய தேவைகள் உண்டாகும்போது, அத்தேவைகளை நிறைவு செய்யும் வகையில் ஒரு சமூகத்திலுள்ள ஒருசில தனிமனிதர்கள், அத்தேவைகளை உள்ளிட்ட துறைகளில் சென்று, முயன்று கற்றுத் தேர்ச்சி பெற முனைகிறார்கள். அவ்வாறே முயன்று தேர்ச்சியும் பெறுகிறார்கள். புதிய துறையில் சென்று பயில்தல் மிகுந்த முயற்சியை உண்டாக்கும்; தோல்வியும் நேரலாம். ஆயினும், ஒருசிலர் அப் புதிய துறைகளில் சென்று, உழைத்து, தேர்ந்த அறிவும், சிறப்புத் தகுதியும், செயல்முறைப் பயிற்சியும் பெற்று விடுகிறார்கள். புதிய துறையில் சென்று பெற்ற சிறப்புத் தகுதியினால், சமூகத்தில் மனிதர்களின் புதிய தேவைகளை உணர்ந்து, பணியாற்றி, அத் தேவைகளை நிறைவு செய்யும் பணியில் ஈடுபடுகிறார்கள். எடுத்துக்காட்டாக, மருத்துவக் கல்வியைக் கொள்ளலாம்.

நோயின் பெருக்கம், மக்களின் தேவை ஆகியவைகளைக் கருத்திற் கொண்டு, புதிய கண்டுபிடிப்புகள் அடங்கிய மருத்துவத் துறை அறிவை முயன்று பெற்று, சிறப்புத் தகுதியும் செயல்முறைப் பயிற்சியும்பெற்று வெளிவருகிறார்கள்.சிறப்புத் தகுதியைப்பெற்ற இவர்கள் சமூகத்தில் அனைத்து உறுப்பினர்களையும் 'துன் புறுத்தும் நோயினை நீக்கும் பணியில் ஈடுபட வேண்டியவர்களா கின்றார்கள்.இந்நிலையில் அத்தகைய சிறப்புத் தகுதியாளர்களின் நடத்தைகளை அற இயல் ஆராய முற்படுகிறது.

சமூகத்தின் அடிப்படைத் தேவைகளை உள்ளிட்ட புதிய துறையில் சென்று சிறப்புத் தகுதி பெற்றவர்கள் இத்தலைப்பில் வாழ்வியல் பணியைப் பேணுபவர்கள் (professionals) எனப் பெயர் பெறுகிறார்கள். அத்தகைய சிறப்புத் தகுதியாளர்களுக்குச் சில செயல்முறைச் சிக்கல்கள் தோன்றிவிடுகின்றன. அவைகளை ஆய்ந்து தெளியும் வகையில், அவர்கள் சிக்கல்களை நீக்கும் வகை யில், அவர்களுக்காகவே சில அறங்கள் பேசப் பெறுகின்றன. சிறப்புத் தகுதி பெற்றமைக்காகவோ, சில சிக்கல்கள் உருவா கின்றன என்பதற்காகவோ சில அறங்களை வகுத்துக் கூற வேண்டிய அவசியமில்லை.ஆனால் சிறப்புத் தகுதியைப் பெற்றவர் கள் சமூகத்தில் உள்ள ஏனைய தனிமனிதர்களோடு, அவர் களுடைய தேவையை நிறைவு செய்யும் வகையில், தங்களுடைய சிறப்புத் தகுதியினால் ஒருவகைப் புதிய தொடர்பினை ஏனைய மனிதர்களோடு கொள்ள முற்படுவதால் அத்தொடர்பினை அற இயல் ஆராய முற்படுகிறது. ஆய்வின் அடிப்படையில் சில அறங் களை வகுக்கிறது.

வாழ்வியல் பணி பேணுபவர்களின் சிக்கல்

வாழ்வியல் பணி பேணுபவர்களாய் சிறப்புத் தகுதி பெற்றவர்கள் சமூகத்திலிருந்து விலகி, தன்னாதிக்கமுடையவர் களாக, தனித்த நிலையில் நின்று வாழும் உரிமையுடையவர் களாக வாழ வேண்டும் என நினைக்கிறார்கள். சமூகத்திலிருந்து தம்மைத் தனியே, பிரித்துக்கொண்டு, சமூகத்தினால் மதிக்கப் பெற வேண்டிய தனித் தகுதியாளன் எனத் தன்னை நிலைநிறுத்து கிறார்கள்.

இரண்டாவதாக, அவர்கள் பிறருடைய அல்லது சமூகமோ, அரசோ அதனுடைய விமரிசனங்களை ஏற்கவோ, வெளியார் களால் அவ்வப்போது செய்யப்பெறும் விமரிசனங்களால் உண் டாகும் நடைகளையோ விரும்புவதில்லை. எடுத்துக்காட்டாக, மருத்துவர்கள்நோயாளிகளின்மனஅழுத்தங்களினால் உண்டாகும் சூழ்நிலைகளை அல்லது வினாக்களை ஏற்பதில்லை. புதிய முறை,

மருந்தின் அமைப்பு, அதுபற்றிய செயல்முறைப்பாடு அனைத்தையும் தெரிந்துகொண்டிருக்கின்ற நாம், நம் கையில்தான் சுகாதார அமைப்பே இருக்கவேண்டும் என எண்ணி, சுகாதாரம்பற்றிய எல்லா வகையான நிலைகளையும் பண்புகளையும் மதிப்பிட என் ஒருவனுக்கே தகுதி உண்டு என நினைக்கிறோம். இந்நிலையில், சமூகத்தில் அவருடைய தேவை மிகும்போது, அவர் தன்னுடைய சேவையை, பணத்தின் அடிப்படையில் செய்ய முற்படலாம். ஏழை நோயாளிகளைப் புறக்கணிக்கலாம்.

சமுதாயத்தின் இன்றுள்ள தேவையை உள்ளிட்ட நிலையில்தான் நாம்இவ்வாறு மதிக்கப் பெறுகிறோம் என்பதை அவர்கள் நினைப்பதில்லை. நாம் இச்சமூகத்தின் ஓர் உறுப்பு என்பதையும் அவர்கள் நினைவு கொள்வதில்லை. இவ்வாறு சமூகத்தின் ஓர் உறுப்பானது பொது இணைப்பிலிருந்து தன்னை வேறுபடுத்தி, எடுத்துக் கொண்டு போய், தனித்து நின்றுவிடுமானால், சமூகமும் கேடுறும்; தனி நின்ற உறுப்பும் கெட்டொழியும். இவ்வகையில் வாழ்வியல் தொழின்மைச்சிறப்புத்தகுதி பெற்றவர்கள் சமூகத்தின் பொதுமையான முழுமையான நன்மையைப் புறக்கணிக்கும்போது அவர்கள் சமூக நலங்கெடுக்கும் சதிகாரர்களாக அமைந்து விடுகிறார்கள்.

வாழ்வியல் பணிபற்றிய சிறப்புத் தகுதி பெற்றவர்கள் தம், உயர் சிறப்பாலும்,திறமையாலும்தனித்த நிலையை உண்டாக்கிக் கொண்டு பொதுமக்களுக்கு எட்டாத உயரத்தில் சென்று நின்று விடுகிறார்கள். நாளடைவில் தம் தகுதி, நடத்தை முதலியவைகளை உயர்த்திக் கொள்கிறார்கள். இந்நிலையில் அவர்கள் அவர்களோடு ஒத்த தொழின்மைச் சிறப்புத் தகுதி பெற்றவர்களிடத்திலிருந்துகூட வேறுபட்டு நிற்கிறார்கள். எவ்வாறாயினும் பொதுமக்களை நோக்கிய சேவை, சமூக முன்னேற்றம் ஆகியவைகளுக்கும் அவர்களுக்கும் உள்ள உறவு வருத்தத்தைக் கொடுப்பதாகத்தான் அமைந்துவிடுகிறது.

வாழ்வியல் பணிபற்றிய சிறப்புத் தகுதி பெற்றவர்கள் தந்நலம் சார்ந்தவர்களாக அமைந்துவிட்டால், சமூக நலம் அவர்கள் உள்ளத்திலிருந்து நீக்கப்பெற்று விடுகிறது. அவர் ஒரு மருத்துவராக இருந்தால், பணத்தின் அடிப்படையில்தான் செயல் மேற்கொள்பவராகத் தம்மை அமைத்துக் கொள்கிறார். கட்டணம் மிகமிக அதிகமாக இருப்பதால் பொதுமக்கள் அவருடைய சேவையைப் பயன்படுத்திக் கொள்ள இயலாதவர்களாக அமைகிறார்கள். சமூகத்திலுள்ள மக்களின் நோயை நீக்குவதற்குப் பதிலாக அவரே சமூகத்தின் ஒரு நோயாக மாறிவிடுகிறார்.

வணிக நோக்கு என்ற ஒன்றே அடிப்படை ஆதார விதியாக அமைந்துவிடுகிறது.

வாழ்வியல் பணிபற்றிய சிறப்புத் தகுதி பெற்றவர்கள் எப்படியிருக்க வேண்டும் என்பதை பொதுமக்கள்பேச்சுகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம். பொதுவாக, அவர்கள் சமூகத்தின் உயிர் நாடிகள் என்று கருதப்பெறுபவர்கள் என்பது தேற்றம்.

தனிமனித முன்னேற்றத்திலும் சமூக நன்மையிலும் அவர்கள் ஈடுபாடு உடையவர்களாக இருக்கவேண்டும். மக்களினத்தின் சேவைக்காகத் தாம் வாழ்வதாகத் தம் வாழ்வை அமைத்துக் கொள்ளவேண்டும். பொதுமக்களால் அழைக்கப் பெறும்போது கடமையுணர்வுடன் அதை ஏற்கவும் அற இயல் உணர்வுடன் அச் சேவையில் ஈடுபடவும் வேண்டும். ஏழை பணக்காரன் என்ற வேறு பாடோ, பகல் இரவு என்ற கால வேறுபாடோ கருதாமல் எப் பொழுதும் யாருக்கும் தம் சேவையைப் பகிர்ந்தளிக்க முன் வர வேண்டும். இவைகளெல்லாம் பொதுமக்களால் எதிர்பார்க்கப் பெறுபவை. எவ்வாறாயினும் வாழ்வியல் பணிபற்றிய சிறப்புத் தகுதி பெற்றவர்கள் கீழ்க்கண்ட தகுதியுடையவர்களாக இருத்தல் வேண்டும் என நாம் வகைப்படுத்தலாம்.

(1) சிறப்புத் தகுதி பெற்றவர்கள் நாள்தோறும் தம் துறை சார்ந்த வளர்ச்சிகள், கண்டுபிடிப்புகள், புதிய செய்முறைகள் ஆகிய வற்றைத் தெரிந்துகொள்ளும் ஆர்வமுடையவர்களாக, தெரிந்து கொண்டவர்களாக, நாளும் பயிற்சி பெறுபவர்களாக அமைய வேண்டும். ஒரு குறிப்பிட்ட ஆண்டுகள் படித்த படிப்பு, பெற்ற பயிற்சி போதுமானவைகளே என்று அமைந்துவிடாமல் நாளும் பயிலவும், பயிற்சியை மேற்கொள்ளவும் உரிய ஆர்வமும் முயற்சி யும் உடையவர்களாக இருத்தல் வேண்டும். நாள்தோறும் உள்ளக் கிளர்ச்சியுடன் செயற்படக் கூடியவர்களாக இருத்தல்வேண்டும்.

(2) வரையறை பெற்ற அறிவும் ஒருமைப்பாட்டுணர்வுடன் நிலைத்த கொள்கையும் தேவை. சிறப்புத் தகுதி பெற்றவர்கள் பயிற்சியளிக்கப் பெற்ற ராணுவம் போல எந்நேரமும் சேவையில் ஈடுபடுத்தற்குரிய தயார் நிலையில் தம்முடைய அறிவை இயங்கு மாறு வரையறைப்படுத்தி அமைத்துக் கொள்ள வேண்டும். மருத் துவர் நோயாளியை வைத்துக்கொண்டே தம்முடைய ஆய்வை நடத்தலாம் என்று எண்ணுதல் கூடாது. நோயை வரையறை யுடன் தெரிந்துகொள்ளவும் மருந்துகள் அன்றைய நிலையில் என் னென்ன வந்துள்ளன என்பதைத் தெரிந்து செயற்படவும் வல்ல ராதல் வேண்டும். மேலும், அவர் வேறு ஒரு தொழிலைத் தமக்கு

முதன்மைத் தொழிலாக வைத்துக் கொண்டு, நேரம் கிடைக்கு மேல் இச்சிறப்புத் தகுதிப் பணியினைச் செய்யலாம் என்பதாக அமைத்துக் கொள்ளாமல் வாழ்வியல் பணிபற்றிய சிறப்புத் தகுதியைப் பெற்றவர்கள் அத்துறை சார்ந்த சேவையையே முதன்மைப் பணியாக அமைத்துக் கொண்டு அதைத் தவிர வேறு பணியே தமக்கு இல்லை என்பதாகத் தம்மை முழுமையாக அதில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

(3) சேவை மனப்பான்மை மிக முக்கியமானது. வாழ்வியல் பணிபற்றிய சிறப்புத் தகுதி பெற்றவர்கள் சேவையின் அடிப்படையிலேயே செயலாற்ற முன்வருதல் வேண்டும். தன்னலக் கொள்கையோ, செல்வம் சேர்த்தல் என்ற குறிக்கோளோ அடிப்படைக் காரணமாக அமைந்துவிடுதல் கூடாது. மருத்துவராக இருப்பின் உடல் வளம் உடையதாக இச்சமூகத்தை ஆக்க வேண்டும் என்பதே குறிக்கோள் எனக் கொள்ள வேண்டும். ஆயினும், மருத்துவரும் இந்நாட்டில் உடன்பிறந்தவரே. அவருடைய வாழ்வின் நேர்மையான தேவைகள் நிறைவு செய்யப்பெற வேண்டியவைகளே. எப்பொழுதும் தயார் நிலையில் இருக்க வேண்டிய அவர், விரைந்து செயற்பட வேண்டிய அவர் வசதியோடு வாழ வேண்டும். கார் முதலிய வாகனங்கள் அவர் விரைந்து செல்லத் தேவையானவைகளே. உடை, அவருக்கு வேண்டிய விஞ்ஞானக் கருவிகள், அவ்வப்போது வெளியாகும் நூல்கள் ஆகியவை அவருக்கு மிகுமிகத் தேவையானவைகளே. அவைகளை அவர் பெறுவது நேர்மையே. அந்த வாழ்வை, வசதியை அமைத்துக் கொள்ளக்கூடிய அளவில் அவர் பொருளாதாரத்தை நாடுவதில் தவறில்லை. ஆனால், வணிக நோக்கு ஒன்றையே ஆதாரமாகக் கொண்டு, அவர் தம் தொழிலை நடத்த முன்வரல் ஆகாது.

சிறப்புத் தகுதி பெற்றவர்களின் பொதுமை அறங்களின் தன்மையும் செயற்பாடும்

வாழ்வியல் பணிபற்றிய சிறப்புத் தகுதி பெற்றவர்கள் என்ற பட்டியலில் மருத்துவர், வழக்குரைஞர், ஆசிரியர் ஆகியோர் அடங்குவர். இவர்களுக்குத் தனித்தனியான சில சிறப்பு அறக் கோட்பாடுகள் அமைக்கப் பெறும். ஆயினும், இவர்கள் அனைவர்க்கும் பொதுவாக உள்ள சில அறங்கள் எத்தகைய தன்மையுடையன? எத்தகைய செயற்பாட்டமைப்புடையன? என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

சிறப்புத் தகுதி பெற்றவர்கள் தம்மை அச்சேவையில் அமைத்துக் கொண்டிருப்பதை --பணியாற்றுவதைப் பதிவுசெய்து

கொள்ளுதல் வேண்டும். பதிவு செய்து கொள்வதால் அதே துறையில் பணி செய்பவர்களைத் தெரிந்துகொள்ளவும், துறை ஒன்றாயினும் அவரவர் மேற்கொண்டிருக்கும் சிறப்புப் பிரிவு களையும், அவ்வப் பிரிவுகளில் அவரவர் ஆற்றிய செயற்கருஞ் செயல்களையும் தெரிந்துகொள்ளும் முறையில் அப்பிரிவு அமைய வேண்டும். அப்போதுதான், குறிப்பிட்ட ஒருவனைச் சிக்கலில் பலரும் சேர்ந்து கலந்து சிந்தித்து, விரைந்து முடிவெடுத்து, தீமை களைத் தவிர்க்கும் வகையில் செயலாற்ற முடியும். துறை வல்லவர்கள் தத்தமக்குள் உயர்வு தாழ்வு, வேற்றுமைக் கருத்துகள் ஆகியவற்றை வளர்த்துக்கொள்ளுதல் ஆகாது.

சமூகத்தில் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய சிலவித அறக்கோட்பாடுகள் சிறப்புத் தகுதி பெற்றவர்கள் வகையில் பொருத்தமற்றதாக அமையலாம். அத்தகைய பொருந்தாத அறக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சமூகமோ, அரசோ அவர்களைக் கட்டாயப்படுத்தக் கூடாது. அவர்களுக்கு அவ்வறக் கோட்பாடுகளிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, பிறன் மனைவியின் கையைப் பிடித்தல் குற்றம். ஆனால் மருத்துவர் நோயை அறிதற்கு அடுத்தவன் மனைவியின் கையைப் பற்றினால் அது குற்றமாகாது. இவ்வாறு சூழ்நிலைக்கும், தொழில் முறைக்கும் இயைந்த சில விதிவிலக்குகளை அவர்களுக்கு அளித்தேயாக வேண்டும்.

சிறப்புத் தகுதி பெற்றவர்கள் தத்தம் பணியின் அமைப்புக் கேற்ப, சில பொது விதிமுறைகளை அமைத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, மருத்துவர் நோயாளியின் பெயரைப் பதிவு செய்தல், நோயின் நிலைமையை விளக்கி எழுதுதல், தேர்வு செய்த முறை, கொடுத்த மருந்துகள் போன்ற வைகளைக் குறிக்கும் குறிப்பேடு அமைத்தல், இன்னும் இது போன்ற நடைமுறை விதிகள், அமைத்துக் கொள்ளுதல், அவை களைச் செயற்படுத்துதல் தேவையானவைகளே. அத்தகைய விதிமுறைகள் பெரும்பாலும், அதே துறையில் தொழிலாற்றும் பலரும் இணைந்து ஒப்புதல் செய்யப் பெற்றவைகளாக அமைதல் வேண்டும். ஒரு மருத்துவர் மேற்கொள்ளும் எந்த ஒரு செயலுக்கும், 'இன்றைக்குப்பின் இது' என்ற செயல் முறை அமைப்பு விதி அமைக்கப் பெற்றிருத்தல் வேண்டும்; அமைக்கப் பெற்றவாறு பின் பற்றப் பெறல் வேண்டும். இவைகளால் அத்தொழில் ஒரு குறிக் கோளினை உடன்கொண்ட உயர்நிலைத் தொழிலாக விளங்கும் நிலை உண்டாகும்.

சிறப்புத் தகுதி பெற்றவர்கள் தங்களுக்குள்ளேயே உயர்வு தாழ்வு அமைத்துக் கொண்டு செயற்படுதல் குற்றமாகக் கருதப்

பெறவேண்டும். எல்லாத் துறையிலும் பழைமை, புதுமை என்ற வேறுபாடுகள் உண்டு. நான் அந்தக் காலத்து S. S. L. C என்று கூறிக் கொள்ளும் மரபு இன்னும் நம்மால் கேட்கப்படுவது. இத்தகைய வேறுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள், நீக்கப் பெற்று, பழமையும் புதுமையும் இணைந்த பொதுமை போற்றப் பெறுதல் வேண்டும்.

வாழ்வியல் பணிபற்றிய அறங்களை வரையறை செய்ய முற்படும்போது அவைகள் பொதுமையான அறக் குறிக்கோள் வாழ்வுக்கு மாறுபட்டதாக இருக்கும் என்று கருதவேண்டிய தில்லை. தொழிலின் மேன்மையை நிலைநாட்டவும், நிலை நாட்டப் பெற்ற மேன்மையை உறுதிப்படுத்தவும் வேண்டிய நியதிகளைக் கொண்டதாகத்தான் தொழின்மை அறம் அமையும்.

வாழ்வியல் பணிபற்றிய அறம் தனிமனித முன்னேற்றத் தையும் சமூக நல வாழ்வையும் குறிக்கோளாகக் கொண்டு அமைக்கப் பெறும். தன்னலத்தை அடிப்படையாகக் கொண்டதாக அமைக்கப் பெறுமேல் அது பணி பற்றிய அறம் ஆகாது.

வாழ்வியல் பணிபற்றிய துறையில் சிறப்புத் தகுதியைப் பெற்றவர்கள் தாம் சிறப்புப் பெற்ற துறையில் சமூக நலத்தை உடன்கொண்டு பணி செய்ய முற்படும்போது அதனைச் சேவை என்றோ, தொண்டு என்றோ, பணி என்றோ குறித்தல் வேண்டும். தொழில் என்ற சொல்லால் அதனைக் குறித்தல் கூடாது. தொண்டு அல்லது பணி என்பது சமூக நலத்தைக் குறிக்கோளாகக் கொண்டது. தொழில் என்பது வணிக நோக்கை, பொருளீட்டுதலை, தன்னலத்தைக் குறிக்கோளாகக் கொண்டது. எனவே, பணியினைத் தொழிலாக்குவது அறவியற் குற்றம்.

பணியின், சேவையின், இயல்பை விளக்க முற்படும் அறிஞர்கள் "ஒரு தனிமனிதனுடைய சேவையைச் சமூகத்துக்கு அளிக்குமாறும், சமூக நலத்தை மேன்மைப்படுத்துதல் என்ற ஒரே குறிக்கோளை உடைய செயல் இது என்ற பெயரை ஏற்படுத்துதல் ஒன்றையே அச்சேவையின் கைம்மாறாக ஏற்றுக் கொள்ளுமாறும் ஒரு தனிமனிதனை ஆக்குவதுதான் பணியின் குறிக்கோள்" என்று விளக்கம் கூறுகிறார்கள். எனவே, பணி வேறு தொழில் வேறு எனப் பிரித்துணர்தல் வேண்டும்.

வாழ்வியல் பணிகளாக மூன்றினை ஆன்றோர்கள் அனுமதித் துள்ளார்கள். அவைகள் முறையே மருத்துவப் பணி, சட்டப்பணி, ஆசிரியப் பணி என்பன. அவைகளுக்குரிய அற இயற் கொள்கை களை இங்கே காணலாம்.

மருத்துவப் பணிபற்றிய அறங்கள்

மருத்துவப் பணி தனக்கேயுரிய வரலாற்றுப் பெருமை யுடையது. ஆயினும் இன்றுள்ள சூழ்நிலையில் மருத்துவப் பணி தன்னுடைய அற இயற் கொள்கையை எந்த அளவுக்குச் செயற் படுத்துகிறது என்பதை அறுதியிட்டுக் கூற இயலவில்லை. பொது வாகக் கூறும்போது, சமூகத்தில் மருத்துவர்களின் மதிப்பு உயர் வாகவே அமைந்திருக்கிறது என்று உறுதியாகக் கொள்ளலாம்.

மருத்துவப் பணியானது மருத்துவருக்கும் நோயாளிக்கும் இடை அமைந்த அல்லது அமையவேண்டிய உறவு முறையை அடிப்படையாகக் கொண்டது. ஆனால், மருத்துவருக்கும் நோயாளிக்கும் இடையே அமையவேண்டிய தொடர்பு இல்லாமலேயே மருத்துவரைப்பற்றிய நன்மதிப்பு உயரும் சூழ் நிலை உண்டாகிறது. மருத்துவர் செய்யாமல், மருத்துவத் துறைப் பணிகள் பலவற்றை மருத்துவத் துறை ஆய்வுக் கழகம் செய்து வருகிறது: மருத்துவத் துறை பற்றிய பல்வேறு ஆய்வுகள், நோய்களை வெல்லும் ஆய்வு முறைகள், புதிய மருந்துகள் கண்டு பிடித்தல் போன்ற பலவகையான அடிப்படை வேலைகளை உலகெங்கிலுமுள்ள மருத்துவ ஆய்வுக் கழகங்கள் செய்து முடித்து விடுகின்றன.

அடுத்த நிலையில், மருந்துகளைத் தயாரிக்கும் நிறுவனங்கள் நோய்க்குணம், நோய்க்குரிய மருந்து, உபயோகிக்கும் முறை ஆகிய வைகளை நாள்தோறும் விளம்பரம் செய்வதை வழக்கமாகக் கொள்கின்றன. தனிமனிதன் விரும்பியோ விரும்பாமலோ அவன் காதில் இவ்விளம்பரங்கள் விழத்தான் செய்கின்றன. விளம்பரத் தின் அடிப்படையில், மருத்துவருடைய அனுமதியின்றி, மருந்தினைத் தானே வாங்கி உபயோகிக்கும் வழக்கம் வளர்ந்து வருகிறது இருபதாம் நூற்றாண்டில் ஒரு நகரத்தில் வாழும் தனி மனிதன் ஒருவன் மருத்துவர் நினைவில் வைத்துக் கொள்ளும் அளவுக்குச் சற்றுக் குறைவாகவோ அல்லது மிகுதியாகவோ மருந்தின் பெயர்களை நெட்டுருச் செய்து வைத்துக் கொள்பவ னாகிறான். மேலும், மருத்துவத் துறை சார்ந்த வினா-விடைகள் பேட்டிகள், முறையாக வெளியிடப் பெறும் மருத்துவத் துறை விளம்பரங்கள் ஆகியவை மருத்துவத் தொண்டினை ஏற்றவர் களின் துணையின்றியே நாளும் வளர்ந்துவருகின்றன.

மருத்துவரும் நோயாளியும் இணைந்து நின்றுதான் இப் பணியைச் செய்ய வேண்டும் என்ற நிலைமை மாறி வருவதால் இவ்விருவருடைய உறவைச் செம்மைப்படுத்தக்கூடிய வகையில்

அறக் கொள்கைகளை வகுப்பதும் பின்பற்றுவதும் தேவை யற்றவையாகவே ஆகிவரும் சூழ்நிலைதான் இன்று காணப்பெறும் நிலையாகும். எவ்வாறாயினும் மருத்துவப் பணி என்பது சமூகத்தில் உள்ள அனைத்து மனிதர்களுடைய நல்வாழ்வை உள்ளீடாகக் கொண்ட ஒருவகை இன்றியமையாத பணி என்பதை யாரும் மறுக்க இயலாது.

மருத்துவப் பணியினை மேற்கொண்டவர்களில் இருவகை நிலையினைரையும் நாம் காண முடிகிறது. ஏழைகளால், தனி மனிதர்களால் எட்ட முடியாத உயர்நிலையில் நிற்கும் மருத்துவர் கள் ஒருவகை. இவர்களிடம் சமூக நலம் சார்ந்த அறம் பற்றிய உணர்வைக் காண முடியாது. குறிப்பிட்ட கட்டணம், குறிப்பிட்ட நேரம் ஆகியவைகளை அமைத்துக் கொடுத்துவிட்டால், எல்லாச் செயல்களும் முறைப்படி நடைபெற்று முடிந்துவிடும். இது கம்ப்யூட்டர் முறையிலமைந்த மருத்துவப் பணி. இவருள் ஒரு சாரார் பணத்தின் மிகுதிக்கு ஏற்ப, வசதியோடு கூடிய மருத்துவ உதவி கிடைக்கும் வண்ணம் செயல்படுவர். இனி, இரண்டாம் நிலையில் உள்ள மருத்துவர்கள் பணியினைத் தொழிலாகச் செய்பவர்களாக அமைந்துள்ளனர். தனிமனிதன் செய்யும் வேலைக்குத் தனிமனிதன் அளிக்கும் ஊதியம் என்ற அறக் கோட்டில் நிற்பவர்கள் யாவரும் வந்து தம் நோய் நீக்கத்துக்குரிய உதவியைப் பெறும் வகையில் தம்மை எளியவர்களாக அமைத்துக் கொள்வது ஒன்றே இத்துறையில் நாம் செய்யும் சமூகத் தொண்டு எனக் கருதித் தம் பணியினை மேற்கொள்வார்கள். இத்தகைய பண்பாடு அறக்கொள்கைக்கு மாறானது என்று சொல்லமுடியாது. ஆனால், இந்தியா போன்ற செல்வ வளம் குறைந்த நாடு மருத்துவத் துறைப் பணியினை மேற்கொண்டவர்களிடம் இன்னும் கொஞ்சம் அதிகமாக எதிர்பார்ப்பது இயற்கையே.

மருத்துவத் துறைசார் பணியினை ஒட்டிய அறக் கொள்கை களை வகுக்கும்போது மூன்று தனிநிலைகளை இணைக்கு மாறு அறக் கொள்கைகளை வகுப்பது இயற்கை.

மருத்துவத் துறையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட மருத்து வர்களின் தனிமை நலம்; மருத்துவத் துறையில் ஈடுபட்ட பல மருத்துவர்கள் தத்தம் தனிமை நலங்களைக் கருதாமல் தாங்கள் அனைவரும் இணைவாகப் பணியாற்றும் வகையில் தங்களுக்குள் அமைந்த பொதுமை நலம்; சமூக நலம் என்ற இம்மூன்றையும் தனியாகவும், இணையாகவும் சிந்தித்து, மூன்றில் எந்த ஒன்றும் கெடாதவாறு அல்லது புறக்கணிக்கப்படாதவாறு அமைத்துக் கொள்ளப் பெற்ற அற இயற் கோட்பாடுகளையே மருத்துவப்

பணிபற்றிய அறங்களென அமைத்துக் கொள்வது ஒரு நல்ல நெறிப்பாடு என்றே கொள்ளுதல் வேண்டும். ஆனால் வளர்ந்து வரும் வரலாற்றுச் சூழ்நிலையில் நான்காவதாகிய ஒரு அமைப்பையும் இணைத்துச் சிந்தித்தே அற இயற் கோட்பாடு களை வகுக்கவேண்டிய தேவை இன்றியமையாததாகிவிட்டது.

முற்காலத்தே மருத்துவர்கள் தாமே தம்மிடம் உள்ள மருந்துகளைத் தயாரிப்பவர்களாக இருப்பார்கள். தாமே தயாரித்த மருந்துகள் ஆகையால் அவைகளின் எல்லாப் பண்பு களையும் முற்ற அறிந்தவர்களாக இருப்பர். இக்காலத்தே மருத்துவத் துறைகள் விரிவடைந்துவிட்டன. ஆயுர்வேதம், சித்தவைத்தியம், ஹோமியோபதி, அலோபதி, யுனானி போன்ற பலதுறை சார்ந்த மருத்துவர்களில் ஈடுபட்டவர்கள் மட்டுமே மருந்துகளைத் தாமே தயாரிக்க முற்படுவது உண்டு. அத்துறை களிலுங்கூட இப்போது மருந்துத் தயாரிப்பு முறை மருத்துவர் களைச் சாராமலேயே இயங்கி வருகிறது. எனவே, மருந்தின் பொதுவான அமைப்பு நிலையை மனத்தில் வைத்துக்கொண்டு மருத்துவர்கள் தம் பணியினைத் தொடரவேண்டியுள்ளது. மருந்துகள் தயாரிப்பு முறையில் சீர்கேடுகள் நுழைந்துவிட்டால், மருந்துகள் எதிர்பார்த்த நலன்களை விளைவிக்கும் ஆற்றல் அற்றவைகளாக அமைந்துவிடும். இந்நிலையில், மருந்துகளையே முழுக்க முழுக்க நம்பிய நிலையில் தம் பணியினை நடத்த வேண்டிய மருத்துவச் சேவையாளர்கள் மருந்துத் தயாரிப்பாளர் களையும் இணைத்தே, அவர்கள் நலனையும் கருத்தில் கொண்டே தம் பணியினை நடத்த வேண்டியுள்ளது. மருத்துவத் துறையில் இந்த நிலை உதயமாகிய காலந்தான் மருத்துவத் துறையானது தன்னுடைய அழிவுப்பாதையை நோக்கி அடியெடுத்து வைத்த காலம் எனக் கொள்ளவேண்டும். இந் நிலையில், மருத்துவப் பணிபற்றிய அறங்களை வகுக்கவோ, கடைப்பிடிக்கவோ உள்ள தகுதிப்பாடு மருத்துவத் துறைச் சிறப்புத் தகுதி பெற்ற மருத்துவர்களுக்கே இல்லை என்ற நிலை உருவாகிவிட்டது. எனவே, மருத்துவப் பணியில் இந்நான்கு தன்மைகளையும் இணைத்த இணைப்பையும், அத்தகைய இணைப்புக்கு உரிய, இணைந்த பொதுமை அறக் கோட்பாடு களையும் உருவாக்குவதே இயலாத நிலையாகும் என்பதே இத்துறையில் இன்றைய உண்மை நிலை என்னலாம்.

மருந்துகளைத் தயாரிக்கும் துறையில் சீர்கேடு நுழையு மானால் அது நாடுமுழுவதையும் அழிக்குந்தீமை என்பதை உளங் கொண்ட ஆயுர்வேதம், சித்த வைத்தியம் ஆகிய துறை சார்ந்த மருத்துவர்கள் வணிகத் துறையின் வரைகோட்டுக்கு அப்பாற் பட்ட கழகம் ஒன்றை நிறுவிப் பணி செய்ய முற்பட்டார்கள். இக்

கழகத்தில்,இத்துறைத் தகுதிவாய்ந்த மருத்துவர்களே உறுப்பினர்கள். மருத்துவர்களின் நேர்ப்பார்வையிலேயே மருந்துகள் தயாரிப்பது என்ற கொள்கை செயற்பாட்டு நிலம் பெற்றது. இப்பிரிவைச் சார்ந்த மருத்துவத் துறை வல்லவர்களின் நேரடிப் பார்வையிலேயே, எல்லாக் கட்டங்களிலும் பரிசீலனை செய்யப் பெற்ற நிலையில் மருந்துகள் தயாரிக்கும் பணியை இக்கழகம் ஏற்று நடத்தத் தொடங்கியது. இந்நிலையில் மருந்தின் தரம் ஐயப்பாட்டுக்கு இடமில்லாத ஒன்று என்பது நிலைநாட்டப் பட்டது. வணிகச் சார்பான எந்த ஒரு சிறு ஊடுருவலும் தவிர்க்கப் பெற்றது. தனி விளம்பரம் முதலியவைகளால் மருந்துகளின் விலை அதிகமாகாதவாறு கட்டுப்பாடு செய்யப் பெற்றது. உற்பத்திக்குரிய செலவே மருந்துகளின் விலை என்பதால் அவைகளே சரியான விலை என்ற நம்பிக்கையும் மக்கள் உள்ளத்தில் பதிய ஆரம்பித்தது. மருந்து உற்பத்தித் துறையை அறக்கோட்பாடுகளின் அமைப்புக்கு இணைத்துக்கொண்டு வந்துவிட்டதால், ஏறக்குறைய அப்பிரிவுகளைச் சார்ந்த மருத்துவப் பணி, மருத்துவப் பணிபற்றிய அறக்கோட்பாடுகளின் எல்லையிலேயே நடைபெறுகிறது என்று கூறலாம். தனி மருத்துவர்களால் ஏற்படும் சிற்சில குறைபாடுகள்; தவிர, பெருந்தீமைக்கு இத்துறை முழுமையான அடிமையாக ஆகும் நிலையானது முற்றாகத் தவிர்க்கப் பட்டுவிட்டது என்றே கூறலாம். ஆனால் மக்கள் உள்ளங்களில் வளமையான இடத்தை இத்துறைசார் மருத்துவப் பணி பற்றிக்கொள்ளாத நிலைமைதான் வருந்துவதற்குரியது.

மக்கள் உள்ளங்களில் பெரிதும் கவர்ந்து நின்று தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் அலோபதி போன்ற துறை சார்ந்த மருத்துவப் பணியினை மேற்கொண்டவர்கள், மக்கள் மத்தியில் தகுதியும் பெருமையும் அமைந்த சிறப்பு நிலையைப் பெற்றார்கள் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மையானதே. ஆயினும், மருந்து உற்பத்தியைத் தம்முள் தக்கவைத்துக் கொள்ள இயலாமற் போனதால், மருத்துவப் பணியினுக்குரிய சிறப்புத் தகுதிகளும் திறமைகளும் பெற்றவர்கள், தம்முடைய தகுதிப் பாட்டையும் பெருமையையும் மெல்ல இழந்து வருகிறார்கள் என்பதை அறிஞர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். நோயாளிகளும் மருந்துகளை உற்பத்தி செய்து, விளம்பரப்படுத்தி விற்பனை செய்யும் வணிக நோக்கு நிலைய்ங்களும் இடையில் நின்று இணைக்கும் இணைப்பாளர்களாகிய மருத்துவத் துறைத் தொண்டர்களின் சேவை இல்லாமலேயே இணைந்து வருகிறார்கள். மருந்துவத் துறைப் பயிற்சியை மேற்கொண்டு உழைத்தும், திறமையாக அவைகளை அறிந்து செயற்படுத்தியும் சிறப்புப்

பெற்ற மருத்துவத் தொண்டர்கள் மெல்ல மெல்லப் புறக்கணிக்கப் படுகிறார்கள். சிக்கல்கள் நிறைந்த சிலவகை நோய்களைத் தவிர ஏனையவை, மருத்துவத் துறைசார் மருத்துவத் தொண்டர்கள் எதிர்பாராமலேயே நீக்கப் பெற்று வருகின்றன.

மருத்துவத் துறையில் இத்தகைய சீர்கேடு உருவாகி வருவதை உணர்ந்து அரசு, தன் ஆணையின்கீழ் மருந்து உற்பத்தித் துறையைக் கண்காணிக்க முற்பட்டது. கண்காணித்தும் வருகிறது. வணிகத் துறையை அரசின் ஆணை எந்த அளவுக்குக் கட்டுப்படுத்தும் என்பதை ஏனைய துறைகளின் மூலமாக மக்கள் அனுபவத்தில் நிறுத்தி உணர்ந்து வருகிறார்கள். ஆகையால், எந்த அளவுக்கு மருந்து உற்பத்தி, விற்பனைத் துறையில் அரசு வெற்றியாகச் செயல்படும் என்பது இன்று மக்களால் தீர்மானிக்கக் கூடியதாகவே அமைந்துள்ளது.

மருந்து உற்பத்தித் துறையை நீக்கி, ஏனைய அமைப்புகளை உளங்கொண்டு, அமைந்த அறக் கோட்பாடுகள் சில இங்கே கொடுக்கப் பெற்றுள்ளன. அமெரிக்க மருத்துவக் கழகம், 1955-ல் வெளியிட்ட 'மருந்து அறக்கோட்பாடுகள்' என்ற நூலை ஒட்டிய விதிகளே இவைகள் என அமைத்துக் கொள்க.

(1) மருத்துவப் பணியில் ஈடுபட்டவர்கள் மனித சமுதாயப் பணியாக இச்சேவையை உளங்கொண்டு பணியாற்ற வேண்டும். பரிசுகள், பொருளாதார ஊதியங்கள் போன்றவற்றை இரண்டாம் நிலையினவாகக் கருத வேண்டும் (கருத்தில் கொள்ளவே கூடாது என விதிக்கவில்லை). மருத்துவத் தொண்டர்கள் தம் வாழ்வை, நோயாளிகளின் துன்பங்களுக்காகவும், அவர்கள் வாழ்நாளை நீட்டிப்பதற்காகவும் தியாகம் செய்ய வேண்டும். இவ்வடிப்படையில் அவர்கள் உலக மருத்துவத் தொண்டர்களின் சிந்தனைகளோடும் செய்பாட்டு முறைகளோடும் தம்மை இணைத்து; கருத்துப் பரிமாற்றங்கள் செய்வதும், கலந்து நின்று பயிற்சிகளைப் பெற்றும் பணியாற்ற வேண்டும்.

(2) நோயாளிகளே மருத்துவப் பணி மேற்கொள்பவர்களுக்கு நற்சான்று வழங்குதல், நோயாளிகளால் மருத்துவர்கள் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ வரவேற்கப் பெறும் நிலையை மருத்துவர்கள் விரும்பிப் பெறுதல், மருத்துவர்களின் தொண்டினோடு இணைந்த சில மருத்துவச் சிகிச்சை பற்றிய நிகழ்ச்சிகளைச் செய்தித்தாள்களில், வார மாத இதழ்களில் எழுதுதல், விமரிசனம் செய்தல் போன்றவை தவிர்க்கப் பெறுதல் வேண்டும். மருத்துவத் தொண்டர்களாலேயே எழுதப் பெறும்

மருத்துவ ஆய்வுப் பணிகள், மருத்துவத் துறை ஆய்வின் முன்னேற்றங்கள் போன்றவைகளுங்கூட, மருத்துவ ஆய்வுக் கழகத்தின் அனுமதி பெற்றே வெளிப்படுத்தப்பெறல் வேண்டும்.

(3) நோயாளிகளைப் பற்றிய விவரம், நோயின் நிலை, பரிகாரம் நடைபெற வேண்டிய முறை, மருந்துகள் ஆகிய விவரம் அடங்கிய குறிப்பினை ஓர் மருத்துவத் தொண்டர் எழுத்து முறையிலோ அல்லது பேச்சு முறையிலோ அமைத்துக் கொடுக்க, அதனை இன்னொரு மருத்துவத்தொண்டில் ஈடுபட்ட மருத்துவர் விளக்கம் கூறவோ, விமரிசனம்செய்யவோ கூடாது. இது இரண்டு மருத்துவத் தொண்டர்களுமே ஈடுபடக் கூடாத அறக்கோட்பாடு. இவையும் இவை போன்ற தூண்டுதற் செயல்களும், எவ்வகையான அடிப்படையில் செய்யப் பெற்றாலும் அவை அத்துறைப் பணியினையே அவமதிக்கும் செயல்களாகும்.

மருத்துவத் துறையில் ஆய்வு செய்து கண்ட முடிவுகள், புதிய கண்டுபிடிப்பு மருந்துகள், நோய் நிலைகளை நன்கு அறிவதற் கேற்ற புதிய கருவிகளை அமைத்துக் கொடுத்தல் ஆகியவைகளின் உரிமைகளை சமூக நலங்கருதிச் சமூகத்துக்கே தியாகம் செய்து விடல் வேண்டும்; அவைகளைப் பிறருக்கு உரிமையாக்கிக் கொடுத்து, அதற்கு ஈடாகப் பொருள் பெறுதல் அறத்துக்கு மாறானது.

(4) மருத்துவப் பணியின் மேன்மையை இழிவுபடுத்தும் எச்செயலையும் அத்தொண்டில் ஈடுபட்டவர் செய்யக்கூடாது. மருத்துவத் துறைப் பயிற்சி, மருத்துவத் துறைப் பணியில் ஈடு பட்டுழைத்தல் ஆகியவைகளை இழிவாக அல்லது முறையற்ற தாக நினைப்பவர்கள்,பேசுபவர்கள் ஆகியவர்களுடன்,மருத்துவத் துறைப் பணி மேற்கொள்வோர் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது. மருத்துவத் துறைத் தொண்டரிடம் நோயாளியானவர் பிறரிடம் வெளிப்படுத்த மாட்டார் என்ற நம்பிக்கையை உளங் கொண்டு தெரிவித்த சில அந்தரங்கச் செய்திகளை, வெளிப் படுத்துதல் கூடாது. அரசு ஆணையின் மூலம் வலியுறுத்திக் கேட்டாலன்றி பிற எத்தகைய சூழ்நிலையிலும் வெளிப் படுத்துதல் அறமன்று.

(5) நோயின் நிலைமையை மிகைப்படுத்தியோ, மிகக் குறைத்தோ வெளியிடுதல் அறமன்று. நோயாளியின் அபாயகர மான நிலைமையை உண்மைக் கணிப்பு நிலையில் வெளியிடுவது நோயாளிக்கும் அவர் குடும்பத்தாருக்கும் உரிய நன்மையைக் குறிக்கோளாகக் கொண்டு செய்த பணியாக அமையும்.

(6) நோயாளியைத் தேர்ந்து கொள்ளும் உரிமை அதாவது இந்த நோயாளிக்கு நான் என்னுடைய மருத்துவப் பணியினைச் செய்யலாமா, செய்யலாகாதா என்று தேர்ந்துக் கொள்ளும் உரிமை முழுக்கமுழுக்க மருத்துவத்துறைப் பணிமேற்கொண்டவர்களுக்கே உரியது. எந்த ஒரு நோயாளியும் மருத்துவத் தொண்டரைக் கட்டாயப்படுத்தி அந்தச் சேவையைப் பெற எண்ணுதல் கூடாது. ஆனால், அபாய நிலையில் கிடக்கும், அவசர உதவிக்குத் தகுதிவாய்ந்த எந்த நோயாளியையும் புறக்கணிக்கும் உரிமை எந்த மருத்துவத் தொண்டருக்கும் இல்லை.

(7) ஒரு நோயாளியை ஏற்றுக் கொண்ட பிறகு அவனைப் புறக்கணிக்கவோ அல்லது தன்னை அர்ப்பணிப்புப் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொள்ளுதலோ கூடாது. நோயாளிக்கோ அல்லது அவரைச் சார்ந்தவர்க்கோ முன் அறிவிப்பு செய்து, இன்னொரு மருத்துவரை அமைத்துக் கொள்ளுவதற்குரிய கால இடைவெளி, சூழ்நிலை ஆகியவைகளை அமைத்துக் கொடுத்து, பின்னரே தம் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் உரிமையை ஒரு மருத்துவத் தொண்டர் பெறமுடியும்;

(8) மருத்துவப் பணி மேற்கொண்டவர் மருத்துவக் கழகத்தில் தன்னைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். மருத்துவக் கழகத்தில் இணைந்த மருத்துவத் தொண்டர்கள் அவர்தம் குடும்பத்தார் ஆகியவர்களை மதித்து நடக்கவேண்டும். மருத்துவக் கழகத்தில் வாய்ப்பு அமையும்போது மருத்துவக் கழகத்தில் இணைந்த மருத்துவத் தொண்டர்களின் குறைகளை கழகத்துக்கு மாறான நடத்தைகளை அஞ்சாது வெளிப்படுத்துதல் வேண்டும்.

(9) மருத்துவப் பணி மேற்கொண்டவர் ஒருவர் தம் குடும்பத்தாருக்குத் தானே மருத்துவப் பணியினை மேற்கொள்ளுதல் கூடாது.

(10) மருத்துவப் பணியில் ஈடுபட்ட மருத்துவர் ஒருவரின் உறவினர் வேறு ஒரு மருத்துவத் தொண்டரிடம் நம்பிக்கையுடன் நோய் நீக்கும் முறைகளை ஏற்று நடக்கும்போது உறவினர் என்ற முறையில், உறவினருக்கு நன்மை தருமே என்ற முறையில், அவருடைய மருத்துவர் அமைத்துக் கொடுத்த முறைகள், மருந்துகள் ஆகியவை பற்றி எந்த ஒரு சிறு விமரிசனத்திலும் ஈடுபடக் கூடாது. தம் உறவினர் அவருடைய மருத்துவத் தொண்டரிடம் வைத்துள்ள நம்பிக்கையை மாசுபடுத்தும் எந்த ஒரு சிறு செயலிலும் ஒரு மருத்துவப் பணி மேற்கொண்டவர் ஈடுபடக் கூடாது.

(11) ஒரு மருத்துவப் பணி மேற்கொண்டவர் இன்னொரு மருத்துவத் தொண்டரின் அழைப்பின் பேரில் அவருடைய மருத்துவப் பணி நிலையம் செல்கிறார். அங்கே அவர் அங்குள்ள நோயாளிகளிடம் அந்த நோய் பற்றிய எந்த ஒரு பேச்சையும் பேசக்கூடாது. ஒரு நோயாளியின் நிலையைப் பல மருத்துவத் தொண்டர்களோடு இணைந்த சிந்தனை தேவை என்பதை உடன் கொண்டு, அழைக்கப் பெற்றார். அங்கே நோயாளியின் நிலை பற்றித் தம்முடைய கருத்தைத் திட்டவட்டமாக எடுத்துச் சொல்லலாம்.

(12) மருத்துவத் தொண்டருக்குரிய தொண்டினை உள்ளிட்ட கைம்மாறு வழங்குதல் என்பது மிக முக்கியமான தொன்று. மருத்துவத் துறை சார்ந்த சமூக சேவையில் எழும் பெரும்பாலான சிக்கல்கள் இந்த ஒன்றை அடிப்படையாகக் கொண்டதே. இங்கே ஒருவகைப் பொதுமை அறம் பேசப் பெறுகிறது. மருத்துவத் துறைப் பணியின் வரலாற்று மாண்புடைய பெருமைக்கு இழிவு ஏற்படும் எந்த ஓர் ஊதியத்தையும் அவன் ஏற்கலாகாது, மருத்துவத் துறைப் பெருமைக்கு மாசு ஏற்படாத எத்தகைய மாற்றிலையும் அவன் ஏற்கலாம் என்பது அறம்.

(1) மருத்துவத் துறைப்பணி சார்ந்த மருத்துவரின் சேவையை, பணியை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்ளும் ஏமாற்றுத் தன்மையையுடைய எந்த ஒரு நிறுவனத்துக்கும் அது எந்த ஒரு பெயரில் இருந்தாலும், அந்த நிறுவனத்தில் தம்மை— தன் பணியை அடிமையாக்கிக் கொள்ளும் எந்த ஒருவகை ஒப்பந்த முறைக்கும் ஒரு மருத்துவத் தொண்டர் தம் சேவையைத் தருதற்கு உடன்படலாகாது.

(14) மக்களைப் பற்றி அழிக்கும் நோய்கள் பெருவாரியாகப் பரவிவரும் காலங்களில் மருத்துவத் துறைத் தொண்டர்கள் அவைகளைத் தடுக்கும் தடுப்புப் பணிகளில் ஈடுபடவேண்டும். ஆனால், தன்னுடைய உடல் நிலையானது ஏற்றுக்கொள்ளும் அளவுக்குத்தான் அவன் ஈடுபடவேண்டும். அவனையே அழித்துக் கொள்ளும் நிலையில் அவனைத் தடுப்புப் பணியில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயம் இல்லை.

(15) சமூகத்தின் உறுப்பினர்களாகிய பொது மக்களின் நலத்தை நோக்கியதாகவே மருத்துவத் தொண்டனின் பணி அமையவேண்டும்.

மேலே கூறப் பெற்றவைகள், அனைத்து நாடுகளுக்கும் ஏற்ற பெற்றி அமையும் வகையில் ஒரு மருத்துவத் துறைத் தொண்டர் மேற்கொள்ள வேண்டிய அறக்கோட்பாடுகள்.

சமூகத்துக்கும் நோயாளிக்கும் அமைந்த நல்லறக் கோட்பாடுகள்

மருத்துவத் துறை சார்ந்த தொண்டர் தம்முடைய அறக் கோட்பாடுகளைப் பின்பற்றி நடக்க வேண்டியது கடமையே. ஆயினும், இது சமூக நலம் கருதியதாதலின் சமூகமும் நோயாளி களும் பின்பற்ற வேண்டிய அறக்கோட்பாடுகளையும் நாம் அறிய வேண்டும்.

(1) மருத்துவக் கல்வியை ஒழுங்குபடுத்துதல்: எந்த ஒரு கல்வியையும் பிறப்பின் அடிப்படையில் எந்த ஒரு தனிமனிதனும் பெற உரிமையுடையவன் என்பது பொது அறம். இவ்வகையில் மருத்துவக் கல்வியை விரும்பிய அனைவரும் பெறுவதற்குரிய வகையில் விரிவுபடுத்துதல் வேண்டும். பொருளாதார வசதி இல்லை என்ற ஒரே அடிப்படையை வைத்து, மருத்துவர் கல்விக் குரிய நெருக்கடி நிலைமையை விரிவுபடுத்திவிடலாகாது.

சமூக நன்மையை வளர்த்தல் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு, சமுதாய நலப் பணியினைச் செயற்பாட்டு முறை யாகக் கொண்டு மேற்கொள்ள வேண்டிய துறைகளாகிய மருத்துவத் துறை, சட்டத் துறை, ஆசிரியத் துறை என்ற மூன்று துறைகளுக்கும் உரிய கல்வித் துறைத் தகுதியாக, சமூக நலப் பணி மனப்பான்மையையே அடிப்படைத் தகுதியாக்க வேண்டும். தேர்வு முறைக் குறியீட்டு அடிப்படையை வைத்து மருத்துவத் துறைக் கல்வியை உரிமையாக்கினால் பணி மனப்பான்மை அங்கே மலர இடமில்லாது போய்விடும்.

மருத்துவத் துறை சார்ந்த கல்வியைப் பெறுவதற்குரிய பொருட் செலவை, செல்வக் குடும்பத்தினர்தான் ஈடுகட்ட முடிகிறது. பொருட் செலவை ஏற்று, ஒரு கல்வித் தகுதியைப் பெற்றவனாகிய மருத்துவத்துறை வல்லுநர் கல்விக்காகச் செலவு செய்த பொருளை அவ்வழியிலேயே ஈடுகட்ட நினைத்தால் செயலாற்றுதல் அறவழிப்பட்டதே. பொருளாதார அடிப்படையில் கல்வியை அளிக்கும் சமூகம், சமூகப் பணியின் அடிப்படையில் செய்யும் தியாகத்தை, அக்கல்விக்குக் கைம் மாறாகக் கேட்பது மனோதத்துவ இயல் முறைப்படி அறமற்றது.

இவ்வகையில் பொருளாதார வசதி இல்லாதவர்களுக்கும் பொருளாதார உதவியைச் சமூகம் கொடுத்து, அவர்களை அத் துறையில் தகுதி பெற வைக்க முயல்வது அறம் தழுவிய செயலாகாது. சமுதாய நலப்பணியில் ஈடுபட்டு உழைப்பதை இயல்பாக மேற்கொள்ளும் வாய்ப்பினை இளமையிலேயே மாணாக்கர்கள் பின்பற்றுவதற்குரிய நிலையில் சமைத்துக்

கொடுக்கவேண்டும். பொது நலப் பணியில் இயல்பாக ஈடுபடும் மாணாக்கரை அரசு அல்லது சமூகம் தன் பொறுப்பில் ஏற்று அவர்களுக்கு முன்னுரிமை அளித்து, மருத்துவக் கல்வி போன்ற பணி சார்ந்த துறைக் கல்வியை அளித்தல் வேண்டும்.

பொருளாதார அடிப்படையிலேயே அனைத்து மேன்மை களையும் பெற முடியும் என்ற கருத்தினை உருவாக்கி விட்ட பிறகு சமுதாயப் பணி உயர்ந்தது என்று எவ்வளவு முறை கூறினாலும் பயன் பெறாது. சமுதாயப் பணி செய்பவன் மூலமாகவே அனைத்து மேன்மைகளையும் பெற முடியும் என்ற நிலையைச் சமூகம் அல்லது அரசு அமைத்துவிடுமானால், பொருளாதார அடிப்படையானது மெல்ல மெல்லச் செல்வாக்கை இழந்துவிடும்.

அடுத்து, மருத்துவத்துறை சார்ந்த கல்வியைப் பல நிலைகளில் பிரித்தல் வேண்டும். சிற்றூர்களில் காணப் பெறும் நோய் நிலைகள், மக்களை அவை தாக்கும் நிலைபற்றிய கணக்கெடுப்புச் செய்து நோய்களைத் தரம் பிரித்து, அடிப்படை நிலை நோய்கள் பொருளாதாரச் செலவால் குறைந்த நிலை நோய்கள் ஆகியவை பற்றியும், அவைகளைத் தடுப்புநிலைச் செயல் பற்றியும் அமையும் கல்வியை அளித்து, அவ்வளவில் ஒருசில பணியாளர்கள் சிற்றூர்களில் அமைந்து பணியாற்றுதல் வேண்டும். பெரிய அறுவை நிலைப் பயிற்சிக் கல்வியும் சிக்கல்கள் நிறைந்த நோய் பற்றிய ஆய்வுப் படிப்பும் எல்லார்க்கும் எப்பொழுதும் தேவை யற்றவை. அவைகளைத் தேவைக்கேற்ப வரையறை செய்து வழங்கலாம்.

மருத்துவத் துறை சார்ந்த தேவைகளின் அடிப்படையில் நாட்டைப் பிரிவு செய்து, அப்பிரிவுகளுக்கு ஏற்றவகையில் பணி யாற்ற அங்கங்கே அப்பிரிவுகளுக்குரிய மருத்துவக் கல்வியை, பணியை உருவாக்கும் கல்வி நிலையங்களை அங்கங்கே அமைத்து, அங்கே வாழ்ந்துகொண்டு சமுதாயப் பணிபுரியும் மாணாக்கர் களுக்கு அக்கல்வியையும் பயிற்சியையும் அளித்தல் என்பது முறையாக அமைந்தால் அங்கங்கே பிறந்து வாழ்வதைப் பழக்கத் தால் அமைத்துக் கொண்டுவிட்ட மாணாக்கர்கள், பொதுப் பணியில் ஈடுபடும் மனவளம் படைத்த மாணாக்கர்கள் அங்கங்கே தங்கிப் பணியாற்றுவது இயற்கையாகவே அமையும். ஒரு பிரிவில் எதிர்பார்க்கப்பெறும் நோய் நிலைகளுக்கு மாறான நோய் ஒரு சிலரிடம் காணும்போது அவர்களை, அந்நோய்ப் பிரிவு அமைந்த இடத்துக்குப் போகச் செய்யலாம். அல்லது அத்துறைப் பயிற்சியை வேறுபிரிவில் பெற்ற தொண்டர்கள் சிலரை இப் பிரிவுக்கு அனுப்பித் தொண்டாற்றச் செய்யலாம்.

எல்லா நோய்களைப் பற்றியும் எல்லா அறுவைச் சிகிச்சைகளைப் பற்றியும் எல்லா மாணாக்கர்களும் பொருட் செலவு செய்து தெரிந்து கொள்வதே மருத்துவத் துறைப் பொதுக் கல்வி எனவும், அது நாட்டின் தலைசிறந்த நகரங்களில் தங்கியிருந்து பெறவேண்டும் எனவும் அமைந்த அமைப்பினை மாற்றுதல் தேவையான ஒன்றாகும்.

மருந்துகளை உற்பத்தி செய்து, விற்பனை செய்யும் நிறுவனம் நாட்டில் முற்றாக நீக்கப் பெறல்வேண்டும். மருத்துவப் பணியினை மேற்கொண்டு பணியாற்றும் மருத்துவத் தொண்டர்களே நோயாளிக்கு மருந்து கொடுத்தலாகிய பணியை மேற்கொள்ளவேண்டும். மருத்துவப் பிரிவின் அமைப்பில் அந்தந்த இடங்களில் அமையும் நோய்களின் தேவை, தரம், ஆகியவைக்கேற்ப, அங்கங்கே மருத்துவத் தொண்டர்களின் மேற்பார்வையில் மருந்துகள் உற்பத்தி செய்யப் பெறல்வேண்டும். தயாரிப்புக்குரிய தேவைகளை அரசு வழங்குதல் வேண்டும். பொருளாதார அடிப்படையில் மருந்துகளைக் கொடுக்கல், வாங்குதல் முறை எந்த வாழ்வியல் மட்டத்திலும் ஏற்கப்படா ஒன்றாக அமையவேண்டும்.

எனவே, மருத்துவத் துறைக் கல்வியைப் பல படிமுறைகளில் பிரித்துப் பரவலாக்குதல் வேண்டும். தொண்டு வழிப்பட்ட துறைக் கல்விக்கு அடிப்படைத் தகுதி தொண்டு வழிப்பட்ட செயல் என்று அமைக்கவேண்டும். தொண்டுவழிப்பட்ட துறை சார்ந்த அனைத்துக் கல்விகளுக்கும் பயிற்சிகளுக்கும் பொருளாதாரத் தாக்கம் இடம்பெறாவாறு தவிர்க்கப் பெறவேண்டும்.

மருத்துவம் போன்ற தொண்டு வழித் துறை சார்ந்த உயர் ஆராய்ச்சிக் கல்விக்கு மாணாக்கர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி பயிற்சிபெறச் செய்வதைவிட, வல்லுனர்களாகிய ஆசிரியர்களை இங்கே வரவழைத்து தேவையாகத் தக்க துணைக் கருவிகளுடன் வரச்செய்து, அப் பயிற்சியை, கல்வியை ஒரு மாணாக்கன் தன் சொந்த நாட்டிலேயே பெறுகின்ற வாய்ப்பை அமைத்துக் கொடுக்கவேண்டும்.

சட்டத்துறை தொண்டுசார் அறங்கள்

தனிமனிதர்களின் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்புடையது நீதித் துறை அல்லது சட்டத் துறை. அரசு ஒரு தனி மனிதனை அணுகும்போது சட்டத்தின் துணையைக் கொண்டு தான் அணுகும். சமூகத்தில் தனிமனிதர்கள் எவ்வாறு நடந்து

கொள்ளவேண்டும் என்ற வரையறையை நீதி என்ற சொல்லாலும் சட்டம் என்ற சொல்லாலும் குறிப்பிடுகின்றோம். பல தனிமனிதர்கள் இயைந்து வாழவேண்டிய சமுதாயத்தில் தனி மனிதன் இவ்வாறு நடந்து கொள்ளவேண்டும்; இவ்வாறு நடந்து கொள்ளக் கூடாது என விதிகளை அமைப்பார்கள். அத்தகைய விதிகள் பற்றிய நிறைகுறைகளை அறிஞர் பெரு மக்கள், மக்களால் தேர்ந்து எடுத்து அனுப்பப் பெற்ற பிரதி நிதிகள் விவாதம் நிகழ்த்துவார்கள். பிறகு பெரும்பான்மை யாளர்களால் ஏற்றுக்கொள்ளப் பெற்ற விதிகள் மக்களாட்சித் தலைவரால் ஏற்கப்பெற்று, கையெழுத்துச் செய்த நாளிலிருந்து அவ்விதிகள் 'சட்டம்' என்ற பெயரைப் பெறும். சட்டம் என்பது என்ன? சமூகத்தில் இணைந்து வாழவேண்டிய தனி மனிதர்கள் தாமே எப்படி எப்படி நடந்து கொள்ளவேண்டும், இப்படி இப்படி நடந்து கொள்ளக்கூடாது என்று வரையறை செய்யப் பெற்று மக்களால் ஏற்றுக்கொள்ளப் பெற்ற அறக் கோட்பாடுகளே சட்டம் என்ற பெயரைப் பெறுகிறது. பிறகு சட்டங்களின் கருத்துகளைப் பொதுமக்களுக்கு விளக்கிக் கூற வேண்டிய பணி இன்றியமையாததாகின்றது. இவ்வாறு, சட்டங் களின் செயற்பாட்டு நிலை விளக்கம் இதுதான் என்று சட்டங் களை விளக்கிக் கூறுபவர்கள் வழக்குரைஞர், வக்கீல் என்ற பெயர்களைப் பெறுகிறார்கள்.

இந்த எண்ணுள்ள சட்டத்தின் வண்ணம் இத் தனிமனிதர் செய்தது தவறு என்றும்; இல்லை, இல்லை, சட்டத்தைத் தவறாகப் புரிந்து கொண்டுவிட்டீர்கள், சட்டம் இதைத்தான் குறிக்கிறது என்று எடுத்துக்காட்டி, இத்தகைய விளக்கத்தை உள்ளீடாகக் கொண்ட இந்த சட்டத்தின் வண்ணம் இத்தனி மனிதன் செய்த செயல் தவறன்று என்றும் வாதிட்டு வழக்காடு வது வழக்குரைஞர் பணியாக அமைகிறது.

இவன் எனக்கு இன்ன செயல் செய்ததன்மூலம் கொடுமை செய்தான் என்று ஒரு குறைபாட்டினை ஒரு நீதிபதி முன்சென்று சொல்வானானால் அது நீதிபதியினால் ஆய்ந்து தீர்ப்புச் சொல்லுவதற்குரிய தகுதியுடையதாகாது. இவன் எனக்கு இன்னின்ன செயல்கள் செய்தான் என விளக்கிய பிறகு, இவன் செய்த செயல்கள் இந்த ஒரு சட்டத்தை எதிர்த்துச் செய்த செயலாகும். எனவே, இந்த எண்ணுள்ள சட்டத்தை எதிர்த்து இவன் செய்த செயல்கள் குற்றங்களாகும் என்று குறிப்பிடும் போதுதான் அது 'வழக்கு' என்ற பெயரைப் பெறுகிறது. பின்னர், நீதிபதியானவர் செயல்களின் உண்மைத் தன்மையை

ஆராய்ந்து, அச்செயல்கள் எவ்வாறு ஒரு சட்டத்தை எதிர்த்த செயல்களாக அமைகின்றன என்பன விளக்கிக் கூறியதை பிறகு இவை சட்டத்தை மீறிய செயல்களே என்ற முடிவை உட் கொண்டு தண்டனையை வழக்குகின்ற செயலை மேற்கொள் கிறார். சட்டத்தை மீறிய செயல்கள் என்று வழங்கிடும்போது. செயல்களைச் செய்தவன், தான் அத்தகைய செயல்களைச் செய்ததற்குரிய அடிப்படைச் சூழ்நிலை இது என முடித்துக் கூறி, இத்தகைய சூழ்நிலையில் யான் செய்த இச்செயல் இந்த எண்ணுள்ள சட்டத்தை மீறிய செயலாகாது, என வழக்கினை மறுத்துக் கூறி விளங்கச் சொல்ல வேண்டிய நிலை—குற்றம் செய்தவன் என்ற பழியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் நிலை செயல் செய்தவனுக்கு அமைகிறது. அவனுடைய கூற்றையும் நீதிபதி ஆராய்ந்து பார்க்கிறார்.

முதலில் நீதிபதியிடம் தன்குறையை வழக்கு உருவில் எடுத்துச் சொல்பவன் வாதி என்றும் வழக்குத் தொடுத்தவன் பிரதிவாதி என்றும் பெயர் பெறுகிறான். வாதி என்பவன் வழக்கைத் தொடுத்துவிட்ட நிலையில் அவனால் குற்றம்சாட்டப் பெற்றவன் தன் கொள்கையை எடுத்துக்கூற அழைக்கப் பெறுகிறான்; அனுமதிக்கப் பெறுகின்றான். அவன் பிரதிவாதி என்றும் வழக்கை விடுத்தவன் வாதி என்றும் பெயர் பெறுகின்றான். அவ்விரு பிரி வினரும் சொல்லும் செய்திகளில் மூன்று நுட்பங்களைக் கவனிக்க வேண்டும் என்று, தமிழகத்துச் சட்டத்துறை இலக்கணம் கூறுகிறது.அவை முறையே 'தொடை,விடை, ஊழ்' எனப்பெறும். தொடை என்பது வழக்கைத் தொடுத்தவனின் கூற்று; விடை என்பது வழக்கைத் தொடுத்தவனின் கூற்றுக்கு விடையாக அமையும் வகையில் பிரதிவாதி கூறுவது. இவ் விருவகைச் செய்தி களிலும்உயிரோட்டமாக அமைந்திருக்க வேண்டிய 'முறை' என்ற ஒன்று யாருடைய கூற்றில் அமைந்திருக்கிறது என்று நோக்குதல் வேண்டும். முறை எனப்பெறும் உயிரோட்டம் சரிவர அமையாத நிலை யாருடைய பேச்சில் காணப் பெறுகிறதோ, அவரிடம் சில எதிர் வினாக்கள் கேட்கப் பெறும். எதிர் வினாக்களை இரு பாலாரிடத்தும் அமைக்கலாம்.அவைகளை அமைப்பதன் நோக்கம் 'முறை' என்ற உயிரோட்டம் யாருடைய சொல்லில் விளக்கமாக அமைந்து சிறப்புறுகிறது என்பதைக் கண்டறிவதுதான். இந்த உயிரோட்டமே 'ஊழ்' எனப் பெறும். இதுவே நீதிபதியின் தீர்ப்புக்கும் உயிரோட்டமாக அமைவது.

தமிழக வரலாற்றில் நீதிபதிகளாக அமைபவர்கள் பஞ்சாயத்தார் அல்லது ஐம்பெருங் குழுவினர் என அழைக்க பெற்றனர். அரசனும் நீதிபதியாக அமைவான்.

தமிழக நீதிமன்ற வரலாற்றில் வழக்கை எடுத்து மொழி பவர், விடை மொழிபவர் ஒரு வகை. நீதிபதி ஒருவகை. இவ்விரு வருக்கும் நடுவே இடைநின்று விளக்கம் கூறுகிற இடைநிலைப் பணியாளர்—வழக்குரைஞர் பதவி என்ற ஒன்று இல்லை. கண்ணகி நெடுஞ்செழியன் சபையில் நின்று வழக்குரைக்க முற்பட்டபோது, அவளுக்கும் நெடுஞ்செழியனுக்கும் நடுவே வழக்குரைஞராக யாரும் இல்லை. இத்தகைய நிலை வேற்று மொழியாளர்கள் ஆட்சிபீடத்தே இருந்தபோது அவர்கள் நீதிபதிகளாக அமைந்து தீர்ப்புக் கூற வேண்டிய அவசியம் அவர்களுக்கு நேர்ந்தது. நீதிபதிக்கும் வழக்கைக் கொண்டு வந்தவர்க்கும் இடையில் நின்ற தடை, மொழித் தடைதான். வழக்கைக் கொண்டுவந்தவரின் மொழி நீதிபதிக்குப் புரியாத மொழி.எனவே, நீதிபதிக்குப் புரிந்த மொழியில் வழக்கைக் கொண்டுவந்தவருடைய கருத்தை எடுத்துக் கூற வேண்டிய நிலைமை ஓர் இன்றியமையாத தேவையாயிற்று. இருமொழியிலும் வன்மை பெற்றவர்கள் இடைநின்று இருவர் பேச்சுகளையும் விளக்கினார்கள். இடை நின்று விளக்கம் செய்தவர் தொழிலே இன்று ‘சட்டத்துறை சார்ந்த தொண்டு’ என்ற பெயரைப் பெறுகிறது.

வேற்று மொழியாளர் இந்தியாவை ஆளும்பொழுது ஆட்சியாளருக்கு உண்டாகிய மொழிச் சிக்கலை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய இத்தொழில்—சுதந்தரம் பெற்று இந்தியா தன்னுரிமை நாடாக அமைந்துவிட்ட இக்காலத்திலும் இத் தொழில் சமூகத்தில் வாழும் தனிமனிதர்களின் வாழ்வுக்கு மிக நெருங்கிய நன்மை விளைவிக்கும் தொண்டெனக் கருதப் பெற்றுப் போற்றப் பெறுகிறது.

வரலாற்றோடு இணைத்துச் சொல்லுகின்ற இவ்விளக்கம் சுவைபயப்பதாக அமையலாம். தாய்மொழிச் சிக்கலுக்கு அப்பாற்பட்ட ஓர் உண்மை இருப்பதை உணர வேண்டும்.

அறக்கொள்கைகளுக்குச் சட்ட அமைப்பினைக் கொடுக்க வேண்டும். ஓர் அறக் கொள்கையானது சட்ட அமைப்பினைப் பெறும்போது, அதற்குப் புதிய பல ஆற்றல்கள் வருகின்றன.

(1) இச்சட்டம் நேர்மையானது அனைவருக்கும் என அறிவார் அனைவரும் ஓம்பும் நிலையைப் பெறுகிறது. (2) எல்லாரையும் பணியவைக்கும் ஆற்றல் அதற்கு வந்து விடுகிறது. (3) செயலுருவம் பெற்று, செயற்படத் தொடங்கி விடுகிறது. (4) தன்னை மீறியவர்களுக்கு தண்டனையை உறுதிப்படுத்தவும், தண்டனையை அடைவிக்கவும் வல்லதா கிறது.

சட்டத்துறை சார்ந்த பணியினை மேற்கொண்டவர்கள் பொதுவாக அறங்களுக்குச் சட்ட உருவை அமைத்துக் கொடுக்க வேண்டியவர்களாகின்றார்கள். சட்டங்கள் பலவற்றைத் திருத்த வேண்டும் என்று போராடுகிறோம். சில சட்டங்களை மக்கள் அறிவுக்குப் பொருத்தமானவை என ஏற்பதில்லை. சில சட்டங்கள் செயற்பாடு உருவம் பெறாதவைகளாகவே அமைந்துவிடுகின்றன. இத்தகைய குறைபாடுகள் நேராதவாறு மனிதனை நெறிப்படுத்தவும், அவனை எல்லாவற்றாலும் உயர்நிலை எய்தச் செய்யவும், அடிப்படை உரிமைகள் முதலியவைகளுக்கு மாறுபடாமல் அனைத்தையும் தழுவியதாக இருக்கவும், செயல்படுத்தக்கூடிய எளிமையை உடையதாகவும், குற்றங்களை வரையறுக்கக்கூடிய எல்லையில் நிற்பதாகவும் அமையுமாறு அவைகளுக்கு 'முறை' என்ற உயிரோட்டத்தை அமையுமாறு செய்பவர்கள் சட்ட வல்லுநர்கள்.

கொலை செய்த ஒருவன் எல்லாவகையான சான்றுகளையும் தானே கூறி, தான் கொலை செய்தவன் என்பதை ஒத்துக்கொண்டு விடுகிறான். கொலை செய்தவன் குற்றவாளி என்பது உறுதிப்படுத்தப்பட்ட பிறகு, அந்தக் குற்றத்திற்குத் தண்டனையின் உச்சவரம்பும் குறிக்கப்பெற்றுள்ளது. எனவே, நீதிபதி விசாரணை இல்லாமலேயே குற்றவாளிக்குத் தண்டனையை வழங்கிவிடலாமே! விசாரணை எதற்கு?

மேலும், குற்றவாளியே குற்றத்தை ஒப்புக்கொண்ட பிறகு வழக்குரைஞர் ஒருவர் அவன் கட்சியை எடுத்துப் பேச வருவானேன்?

கொலை செய்தல் என்பது அச்செயலைப் பொறுத்தவரையில் 'குற்றம்' ஆகாது. 'கொலை செய்தேன்' என்று ஒருவன் ஒத்துக் கொள்வது என்பது செயலை ஒத்துக் கொண்டான் என்பதே அன்றி, 'குற்றவாளி' என்று அவன் தன்னை ஒத்துக் கொள்ளவில்லை. கொலை செய்ய வேண்டும் என்ற மனவுணர்வுடன்—குற்ற உணர்வுடன் இதனைச் செய்தால்தான் அச்செயல் குற்றச் செயலாகும். நீதிபதி, 'இவன் குற்றவாளி' என்ற தீர்ப்பை வழங்குவதற்கு முன் அவன் குற்றம் சாட்டப் பெற்றவனேயொழிய, குற்றவாளி அல்லன். தன்னைத் தாக்க வருபவனைத் தற்காப்பு உணர்வுடன் ஒருவன் கொல்லும்போது அவன் குற்றவாளி ஆகமாட்டான். ஒரு செயலை ஒருவன் செய்யும்போது என்ன மனநிலையுடன் செய்தான் என்பதை வைத்துத்தான் 'குற்றம்' என்ற கருத்து வரையறை செய்யப் பெறுகிறது. இச்செயலைச் செய்யும்போது, செய்த இவனுடைய

மனநிலை இத்தன்மையிலிருந்தது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டிய முக்கியமான பணி உண்டு. அந்நிலையைத் தெளிவு படப் பேசி விளக்குவதே வழக்குரைஞர் வேலை. அப்போதுதான் நீதிபதி, இச்செயலை இவன் செய்தபோது, இவன் மனநிலை இப்படி இருந்தது என்பதை அறுதியிட்டு அறிந்தால்தான் அவன் குற்றவாளியா இல்லையா என்பதை உறுதிப்படுத்தமுடியும்.

அதற்கு மேலும் ஒரு பணி. குற்றவாளி அல்லது குற்றவாளி அல்லன் என்ற உறுதிப்பாடு செய்துவிடுவதோடு மட்டும் நீதிபதி யின் பணி முடிந்துவிடுவதில்லை.

குற்றவாளிக்குரிய தண்டனையை வரையறை செய்ய வேண்டும். பொதுவாக ஒரு குற்றத்துக்கு உரிய தண்டனையின் உச்ச வரம்பு சட்ட அமைப்பிலேயே உறுதி செய்யப் பெற்றிருக்கும். உச்ச வரம்பு என்பது அதற்குமேல் போகக் கூடாது என்பதை வரையறை செய்யும் எல்லையே யொழிய எல்லோருக்குமே அந்த உச்ச வரம்பை அளிக்க வேண்டும் என்பது முறையன்று. குற்றம் செய்தவனுடைய மனநிலை, வயது, தகுதி, அறிவின் பக்குவம், அவனை அந்நிலைக்கு ஆளாக்கிய சூழல்கள் ஆகியவைகளை முழுமையாக அறிந்தால்தான் தண்டனையின் எல்லையை நிர்ணயிக்க முடியும். மேலும், சில வழக்குகளில் குற்றவாளி ஒரே குற்றத்தைச் செய்தவனாக இருக்கமாட்டான். எடுத்துக்காட்டாக, பல கொலைகளைச் செய்தவன், அகப் படாமலேயே இருந்து, ஒருமுறை திருட்டுக் குற்றத்துக்காகப் பிடிக்கப் பெற்றான். பல குற்றச்சாட்டுகளுக்காகத் தேடப்பட்டு வந்தவன், திருட்டுக் குற்றத்துக்காகப் பிடிபட்டபோது, வழக்கையும் தண்டனையையும் எந்த அமைப்பினைக் கொண்டு வழங்க வேண்டும் என்பதை விசாரணையின் மூலம்தான் உறுதிப் படுத்த வேண்டும். அகப்பட்டுக் கொண்டவனைத் தண்டித்து விடுவது என்பதுதான் சட்டம்; வழக்குரைஞர், நீதிபதி ஆகியவர் களின் நோக்கம் என்று கருதிவிடக்கூடாது. ஒரு நீதிபதி தான் தீர விசாரித்துத் தீர்ப்பை வழங்கும்போது, இந்த நீதிமன்றம், நீதிபதியாகிய நான், எங்களுக்குக் கிடைத்த சான்றுகள், விசாரணை, ஆய்வாளர்கள் எண்ணம் ஆகியவைகளைக் கொண்டு அமைக்கப் பெற்ற முடிவு இது இது சரியான தீர்ப்பன்று எனக் குற்றவாளி, இந் நீதிமன்றத்தின் மேல் வழக்குத் தொடர்ந்து, இதற்குமேல் உள்ள நீதிமன்றத்துக்கு முறையிடலாம். அதற்குரிய கால அவகாசம் இவ்வளவு, அதுவரையில் இவனைக் குற்றவாளி எனக் கருதித் தண்டனையை நிறைவேற்ற முற்படுதல் கூடாது என்று குற்றவாளிக்கு உரிமை வழங்குவதன் நோக்கம், மேலும்

சில உண்மைகள், குற்றவாளியின் மனநிலைகள் விளக்கம் பெறலாம் என்பதே. இங்கேதான் நாம் 'நீதி' என்பதன் பொருளை உணரமுடியும். பலரும் அறிவால் ஆராய்ந்து அறிவோடு உடன்பட்டு, இம்முடிவு நேர்மையானது என ஒப்புதல் தருமளவுக்கு அது விசாரிக்கப் பெற்றுள்ளது என்பதே.

இனி, மூன்றாவது ஒரு பணி. இது மிகமிக முக்கியமான பணி. கொலைக் குற்றம் என்பதை எடுத்துக் கொள்வோம். கொலைக் குற்றம் என்பது கொலை செய்தவன், கொலை செய்யப் பெற்றவன் என்ற இரண்டு மனிதர்களோடு முடிந்து விட்ட செயல் என நினைத்துக் கொள்ளக் கூடாது. 'இவனை எப்படியாவது தீர்த்துக்கட்ட வேண்டும்' என்ற மனநிலையைக் குற்றவாளி அமைத்துக் கொள்வதற்குரிய செயலைக் கொலை செய்யப் பெற்றவன் உண்டாக்கியிருக்க வேண்டும். அச்செயல் சட்டத்துக்கு முரணானது எனில், சட்டத்துக்குப் புறம்பாகத் தவறு செய்தவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிவிடுகிறார் கள். அவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிவிட்டதும் இக் கொலைக்கு ஒரு காரணம். எனவே, சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிவிடும் குற்றவாளிகளைப் பிடிக்கும் ஆற்றல் சட்டக் காவலர் களுக்கு இல்லாமற் போனது ஏன்? என்பது முதலாய அடிப்படை களை ஆராய்ந்து, சமூகம் அல்லது அரசு சட்ட ஒழுங்கினை இன்னின்ன வகையில் செயல்படுத்த வில்லை என்று எடுத்துக் காட்டி, ஆள்வோரின், சட்டக் காவலர்களின் மெத்தனப் போக்கை எடுத்துக் கூறி, அவர்களையும் நெறிப்படுத்த வேண்டும்.

இம்மூன்று பணிகளையும் இணைத்துத் தேர்ந்து முடிவு செய்வதற்கு சட்ட நுணுக்கம்; சட்டத்துறை ஆய்வு சான்ற சான்றோர்களின் பணி தேவைப்படுகிறது. சமூகத்தில், அரசில் மிக உயர்ந்த நிலையில் அல்லது முதற்குடிமக்களாகக் கருதப் பெறுபவர்கள் 'முறை செய்பவர்கள்' அல்லது நீதியை நிலை நாட்டுபவர்கள். தமிழகம் இவர்களைத்தான் 'இறை' என்ற சொல்லில் குறிக்கிறது.

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் பெறும்'

என்று திருக்குறள் கூறும்.

மேலும், நீதியின் இயல்பைப் படம் பிடித்துக் காட்டுபவர்கள் தராசு ஒன்றினை அமைப்பார்கள். இதனைத் திருவள்ளுவர்

'சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி'

என்று விளக்குகிறார். மேலும், தராசினைப் பிடித்துக் கொண்டிருக்கிற ஆள் கண்ணை மூடிக் கொண்டிருப்பதாக அமைத்திருப்பார்கள். அதனால், நீதிக்குக் கண் இல்லை என்று நினைக்கக்கூடாது. இதனைச் 'செங்கோன்மை' என்ற அதிகாரத்தில் எடுத்த எடுப்பிலேயே சுட்டிக்காட்ட முற்படும் திருவள்ளுவர்,

'ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை'

என்று சுட்டிக் காட்டுகிறார். குற்றம் சாட்டப் பெற்றவன் தனக்கு உறவினன். அரசுத் தலைமைச் சார்பினன் போல எண்ணம் பெறுபவனாய்; தன் இரக்கத்துக்கு உரியவனாக அமைந்து விடும் நிலைமை நீதிபதிக்கு உண்டாகக்கூடாது என்பதால்தான், குற்றவாளிக் கூண்டில் நிற்பவன் யார்? என்ற தகுதியைக் கவனிக்கக்கூடாது என்ற வகையில் 'கண்ணோடாது' என்று குறிப்பிட்டார். ஆனால் தண்டனையை வரையறை செய்யும் போது 'சாத்தனார்' திருடினார் என்பதாக ஒரு வழக்கு வந்து, அந்த இராமசாமி என்பவர் நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்றவர் என்பது விசாரணையில் தெரியவந்தால், அறிவற்றவன் திருடு வதற்கும், திருட்டுக் குற்றங்கள் பலவற்றுக்குத் தண்டனை வழங்கிய நீதிபதி திருடியதற்கும், அதற்குத் துணையாக நின்ற சமூகத்துக்கும் அவர் வழங்கும் நீதியானது அறிவால் ஆராய்பவர் கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக அமைய வேண்டும்.

சமூகத்தின் முதற் குடிமக்கள் எனவும் இறை எனவும் போற்றப் பெறும் சட்டத்துறைத் தொண்டினைச் சார்ந்து நின்றவர்கள் மேற்கொள்ளவேண்டிய அறக் கோட்பாடுகள் யாவை? என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். நீதியைச் செயற் படுத்துகிறவர்கள் பொதுவாகத் தாமும் ஆணைவண்ணம் நடந்து, பிறரையும் சட்டத்தின் ஆணையில் நிற்குமாறு தொண்டாற்றுபவர்கள். அவர்கள் தொண்டு மதிப்பிட முடியா தொண்டு.

ஆனால் நீதியை நிலைநாட்டுபவர்கள், நீதியை வழங்கும் சட்டத்தை செயலாற்றுபவர்கள் இருக்கிறார்களா? அவர்கள் பணி எவ்வாறு நடைபெறுகிறது? என்ற வினாவை எழுப்பினால்

நீதித் துறைக்குச் சென்று, அதில் பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கையை வைத்து முடிவு செய்துவிடக்கூடாது.

பிசிராந்தையார் கூறுகிறார், தன்னுடைய தலையில் நரை தோன்றாமைக்கு உரிய காரணங்களுள் ஒன்றாக, தன் ஊரில் ஆன்று, அவிந்து, அடங்கிய, கொள்கைச் சான்றோர் பலர் உள்ளார்கள் என்று. சான்றோர் இருப்பதற்கும் நரை யின்மைக்கும் என்ன தொடர்பு? சான்றோர்கள் இருப்பதால் சட்டத்தின் வழியில் அனைவரும் நடப்பதை வழக்கமாகச் செய்கின்றனர். சட்டத்தின் வழியில் நடப்பதால் கவலை இல்லை. கவலை இன்மையால் நரை இல்லை. எனவே, சான்றோர் இருக்கும் இடங்களில் குற்றம் நிகழ முடியாது. குற்றம் நிகழ்கிறது என்றால் சட்டத்தின் உயிரோட்டமாகிய ஆணை முறை செத்து விட்டது என்பது பொருள். ஆணை என்ற உயிரோட்டமில்லாச் சட்டம், அதனை ஏற்றுக் கொண்ட அரசு, அதற்கு விளக்கம் அமைக்கும் வழக்குரைஞர், நீதிபதி ஆகியோர், உயிரற்ற சில விதிகளைத் துணையாகப் பற்றிக்கொண்டு, விரிவுரை செய்து கொண்டு வாழ்கிறார்கள் என்பதே பொருளாகும்.

நீதித் துறையில் இன்று எழுந்துள்ள சிக்கல்கள்

வெளிநாடுகளிலும் நம் நாட்டிலும் நீதித் துறை சார்ந்த தொண்டர்கள் அடங்கிய கூட்டமைப்பு உருவாக்கப்பெற்றுள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் தொகை, அவர்கள் செய்யும் குற்றங்கள் தொகை, வகை சார்ந்த கணக்கெடுப்புகள், அமைக்கப் பெற்றிருக்கும் நீதிமன்றங்கள் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்ட புள்ளி விவரங்கள் சேகரிக்கப் பெறுகின்றன. அவைகளின் முடிவுப்படி, சட்டத் துறைத் தொண்டர்கள் பற்றாக் குறையாகவே இருக்கிறது என்பது தெரியவருகிறது.

கற்பனையானாலும் சரி, உண்மை என்று எண்ணினாலும் சரி, மனிதன் தன் வாழ்வில் நீதியின் நிறைவு என்பது இவ்வாறு இருக்க வேண்டும் என்ற எண்ணம் இது என்று விளக்கம் கூறினாலும் சரி, சோழ நாட்டுத் தலைநகரில் பொதுவிடத்தில் 'ஆராய்ச்சி மணி' ஒன்றை அரசன் அமைத்திருந்தான். நீதி வேண்டும் என்று விரும்பியவர்கள் அம் மணியை அடிக்கலாம் என அமைத்திருந்தான். நீண்ட நாட்களாக அம் மணி ஒலிக்கப் பெறவேயில்லை. பின்னர் ஒரு மாடு நீதி வேண்டி அடித்தது என்று அவ்வரலாறு பேசுகிறது.

இன்றைய நிலையையும் ஆராய்ச்சி மணியின் காலநிலையையும் இணைத்துப் பார்க்கலாம். வழக்குகள் மலிந்துள்ளன. நீதித்

தொண்டர்கள் பற்றாக்குறை. இன்றுள்ள இந்நிலையில் சட்டத் துறையில் சில புதிய சிக்கல்கள் தோன்றியுள்ளன. அவைகளையும் காணலாம்.

(1) குற்றங்கள் மலிந்துள்ளன. நீதித் துறை அயராது பணி புரிய வேண்டியுள்ளது. நீதித் துறைத் தொண்டர்கள் தேவை என்ற காரணத்தால் நீதித் துறை தொண்டில் ஈடுபடுத்திக் கொள்பவர்கள் தொகை அளவுக்குப் அதிகமாகப் பெருகுகிறது. இந்நிலையில் ஒவ்வொரு நாடும் தத்தம் தனிநிலைச் சுதந்தரத்தின் வண்ணம் படிப்பு பயிற்சித் தகுதி ஆகியவைகளை வரையறை செய்கின்றன. பொதுவாக, வழக்குரைஞர்கள் போன்றோர்களின் தகுதி உயர்த்தப்பட வேண்டும் என்று உலகச் சட்டத்துறை குழுவானது கூறுகிறது. உயர் பெருந்தகைமை வாய்ந்ததொண்டு என இத்துறையைக் கருதும்போது, உயர்ந்த அறிவும் பண்பும் சிறந்த அடிப்படைத் தேவைகள். இவ்விரண்டில் எந்த ஒன்றில் சிறிது குறை நேர்ந்தாலும் நீதி திசைத் திருப்பப் பெற்றுவிடும். சட்டத் துறையில் நீதிபதிகள், வழக்குரைஞர்கள் போன்றவர்கள்; தேர்ந்தெடுக்கும் நிலையில் இன்று ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அத்துறையின் உயர் குறிக்கோளை நிறைவுறச் செய்ய இயலாதவைகளாக அமைந்துள்ளன. தகுதியின்மை பெருமளவில் காணப் பெறுகிறது.

(2) குழுவின் அறிக்கையின் வண்ணம் வழக்குரைஞர்கள் பல தொழில்களிலும் ஈடுபட்டிருப்பவர்களைக் கையாட்களாக வைத்துக்கொண்டு அங்கங்கே நடைபெறும் சிறு சிறு மனமாற்றங்களையும் பெரியவைகளாக்கி, நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம் என அறிவுரை பகரச் செய்து, அவ்வாறு வழக்குத் தொடரும் எண்ணமுடைய ஆட்களைக் கொண்டு வந்து சேர்ப்பவர்களுக்குச் சிற்றூதியம் (commission) தருவது என்ற ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். இது ஒரு வகையில் குற்றங்கள் மிகைப்படுத்தவும், சிறிது மன விரிசல் ஏற்பட்டவர்கள் காலக் கணிப்பில் ஒன்றுபட்டு விடலாம் என்று நினைக்க முடியாதவாறு பிரிந்து விடுவதற்கும் காரணமாக அமைகின்றது. அறிவாலும், அனுபவத்தாலும் முதிர்ந்த வழக்குரைஞர்களுக்கும் சிறந்த நீதிபதிகளுக்கும் பெருந் தொல்லைகளை உண்டாக்கும் போக்கு என இது விளக்கப்படுகிறது.

(3) குழுவின் அறிக்கையின் வண்ணம், பொது மக்களின் உள்ளத்தில் வழக்குரைஞர் தொழில் என்பது ஒரு மதிக்கற்பாட்டிற்கும் பெருமைக்கும் உரிய தொண்டு என்று கருதப் பெறாத நிலையை அது பெற்றுள்ளது.

(4) சமூக அமைப்பின் அடிப்படைத் தத்துவம் பற்றி உண்மையறிவு வழக்குரைஞர்களிடம் குறைந்து கொண்டே வருவதால் சிக்கல்கள் பல தோன்றுகின்றன என்பது குழுவின் அறிக்கை. சிறந்த அனுபவமும் மதிநுட்பமும் வாய்ந்த வழக்குரைஞர்கள் தத்தம் அனுபவங்களையும் மதி நுட்பத்தையும் பணத்துக்கு விற்க முன் வந்து விட்டார்கள். சட்டத்தின் உயிரோட்டமான ஆற்றலையும் குறிக்கோளையும் எதிர்த்து, சட்டத்தின் வார்த்தைகளுக்குரிய பொருளை உயிரற்ற பொருளாக வலியுறுத்தி, சட்டங்களுக்கு விளக்கங் கொடுத்து, தமக்கு வேண்டிய தனிப் பேர்கள் அல்லது நிறுவனங்கள் வரிப் பொருளாகச் செலுத்திய பெருந்தொகைகளைத் திரும்பப் பெற வாதிடுகின்றனர். வெற்றியும் பெறுகின்றனர். இவர்கள் சட்டத்தின் உயிரைக் கொன்று தம்முடைய வாழ்வைப் பெருக்கிக் கொள்கின்றனர். இவ்வாறு அமைந்தது சமூக நலத்தின் அடிப் படை அறிவை அவர்கள் பெறாமையால் விளைந்தது என்று குழுவின் அறிக்கை வருந்துகிறது.

(5) வழக்குகளை விரிவாக ஆராய்வதற்கு விசாரணைக் காலம் உரிய அளவுக்கு அளிக்கப் பெறல் வேண்டும். ஆனால், உரிய அவகாசம் கொடுக்கக்கூடிய வாய்ப்புகள் நீதிமன்றங்களில் இல்லை. காரணம், தீர்வு பெறாத வழக்குகளின் தொகை பெருகிக் கொண்டேயிருக்கின்றது.

மேலும் சட்டத் துறையில் ஊழியர்களையும் வளப்படுத்திய மக்கள் உள்ளத்தில், வழக்குகள் நீதிமன்றங்களில் பெருகுமானால் அது அந்நாட்டு மக்களின் நாகரிகத்துக்குக் குறைவு என்ற கருத்து நிலவுகிறது. எனவே, வழக்குகளைப் பதிவு செய்வதற்கு முன்னமேயே, இருவரையும் அழைத்து, ஏதேனும் நடுவு நிலைமையைக் கூறி, நீதிமன்றங்களுக்குப் போகாதவாறு, வழக்குரைஞர்களே செய்துவிடுகின்றனர். இது நன்மையா, தீமையா என்பது ஆய்வுக் குரியதன்று. இது நீதிக்குப் புறம்பான செயல் என்று குழுவின் அறிக்கை கருதுகிறது.

மேலே அமைக்கப் பெற்றவற்றால் சட்டத் துறையின் மேதகைமையையும், இன்று இத்துறையில் எழுந்துள்ள சிக்கல் களையும் அறிய முடிந்தவர்களானோம். இத்தகு மேன்மை பொருந்திய துறை இத்தகைய சிக்கல்களை நீக்கி, எழுந்து உயிர்ப் பாற்றலோடு தன்னுடைய பழைய மேன்மையை அடைய எண்ணுமானால் அத்துறை கடைப்பிடிக்க வேண்டிய அறக் கோட்பாடுகள் யாவை?

(1) வழக்குரைஞர்களும் சட்டத் துறை சார்ந்த பணியினை மேற்கொண்டவர்களும் தாம் இச்சமூகத்துக்கு உரிய முக்கியக் கடமையைச் செய்பவர்கள் என்ற ஒரே எண்ணம் உள்ளத்தில் சிறந்தோங்குமாறு பணிபுரிய வேண்டும். 'இறை' என்று மக்கள் பெறும் பொருளுக்காக, 'இறை' என்று மதிக்கப் பெறும் சட்டத் துறையின் தெய்வீக ஆற்றலை இழிவுபடுத்திவிடக்கூடாது என எண்ணி நாளும் எச்சரிக்கையாகப் பணியாற்றுதல் வேண்டும்.

(2) குடியாட்சியின் முன்னேற்றமான நல்ல எதிர்காலம் என்பது நீதித் துறையின் தூய்மையிலும் நேர்மையிலுமே அடங்கியுள்ளது. ஆகையினால் நீதித் துறை சார்ந்த தொண்டர்கள் தம்முடைய நடத்தையையும் உள் நோக்கத்தையும் தகுதியுடையனவாகவும் மதிக்கத் தக்கனவாகவும், நேர்மை வாய்ந்த மனிதர்களால் பாராட்டத்தக்கனவாகவும் ஆக்கிக் கொள்ள வேண்டும். இல்லையானால் நாட்டின் உயிர்ப்பு நிலையே அழிக்கப் பெற்றுவிடும். எனவே, வழக்குரைஞர்கள் நீதிமன்றத்தின் பெருமையைக் கண்காணிக்கும் முறையில் செயல்பட வேண்டும். அவ்வாறே நீதிபதிகளைத் தோற்கச் செய்யும் முறைகளில் அரசியல் முதலிய வேறு கண்ணோட்டங்களை அடிப்படையாக்காமல் கல்வியையும் பயிற்சித் திறமையையும் அடிப்படையாகக் கொண்டே தோற்கச் செய்ய வேண்டும்.

(3) அளவுக்கு மீறிய உபசாரங்களை மக்களிடமிருந்தோ வழக்குரைஞர்களிடமிருந்தோ நீதிபதிகள் ஏற்பது அறச் செயலாகாது. அவ்வாறே வழக்குரைஞர்கள் வழக்கானது விசாரணையிலிருக்கும்போது அதுபற்றி நீதிபதியிடமோ, அல்லது நீதிபதிக்குத் துணை இருக்கும் சட்ட ஆலோசகர்களிடமோ இவ்வழக்கினைப்பற்றிப் பேசுவதோ, அவர்களைப் புகழ்ந்து போற்றிப் பாராட்டுவதோ செய்தல் சால்பும் தொண்டுபற்றிய அறத்துக்கு மாறானதாகும்.

(4) வழக்குரைஞர்கள் சான்று கூற வந்தவர்களையும் வழக்குக்குத் தொடர்பானவர்களையும் உரிய அளவு மதிப்புத்தந்து பழகவேண்டும், நீதியை வேண்டி வந்துவிட்ட காரணத்தாலேயே அவர்களை நீதியில்லாதவர்கள் என்று கருதிவிடலாகாது. ஒரு வழக்குரைஞர் தன்னுடைய கட்சிக்காரருக்கு எதிரானவரையும் மதித்து நடத்தல் வேண்டும்.

(5) தன் கட்சிக்காரருக்கு வெற்றி அமைந்த காலத்தும், எதிர்க் கட்சிக்காரருக்குத் தோல்வி அமைந்தபோதும் நீதியானது

தன் கடமையை உயரிய முறையில் செய்தது என்பதையே எண்ண வேண்டும்.

(6) தன் கட்சிக்காரருடைய நன்மையை மனத்தில் கொண்டு நீதி மன்றத்தை வன்மைக்கு இலக்காக்கக் கூடாது.

(7) நீதித்துறைத் தொண்டர்கள் தம் சேவையைப் பணத்திற்கு அடிமையாக்கக் கூடாது. இந்த ஒன்றைக் கடைப்பிடித்தாலே ஏனைய எல்லாத்துறை வகையான நீதித்துறை அறங்களும் இதனுள் அடங்கிவிடும்.

(8) தன்னையொத்த ஏனைய வழக்குரைஞர்களின் இயல்பான வாழ்க்கை நிலையைக் குறைப்படுத்தும் காரியமாகிய விளம்பரம் செய்தல், குறைந்த கட்டணத்தில் வழக்கை முடித்துத் தருதலாகிய துண்டுச்செய்தி வெளியிடல், மக்களிடம் அவர்கள் கருத்தைக் கவர்ந்தனவாய் உள்ளத்தில் நினைத்த வழக்குகளை எடுத்துச் சொல்லி அதில், திறமையாகப் பேசி வழக்கை வெற்றியாக முடித்தவன் நானே என்று ஒரு விளம்பரம் செய்தல், அல்லது வேறு ஒருவர் மூலம் இத்தகைய விளம்பரம் அமைத்தல் போன்றவை வியாபாரத் துறை விளம்பரங்கள்; நீதித் துறைக்கும் புறம்பானவை.

(9) ஒரு நிறுவனத்தில் வழக்குரைஞர் தன்னைப் பணியாளராக அமைத்துக் கொள்வதோ அல்லது முன்னமே அந் நிறுவனத்துக்காக வழக்குத் தொடர்ந்து வழக்குரைஞராக இருந்து, பின் அந்நிறுவனத்தில் பணியேற்பதோ நல்லதல்ல.

(10) ஒரு நிறுவனத்தில் சட்ட ஆலோசகராக இருக்கும் வழக்குரைஞர் அந் நிறுவனத்தின் உறுப்பினர்களுடைய தனிமைப் பொறுப்புக்கும் நிறுவனத்தின் பேரிலேயே சட்ட ஆலோசகராக அமைதல் கூடாது.

இங்கே குறிப்பிடப் பெற்றவைகள் சட்டத்துறை ஆய்வுக் குழுவினரால் பரிந்துரை செய்யப் பெற்றவைகளில் சில.

ஆசிரியத் துறை பணி பற்றிய அறங்கள்

சமூக அமைப்பாயினும் தனிமனித வாழ்வியலமைப்பிலாயினும் எங்கேனும் ஏதேனும் ஒரு சிறிது பண்பாட்டுக் குறை காணப் பெறுமேல் அது கல்வியால்தான் வந்தது எனக் கருதுவது இயற்கை என்பதைவிட உண்மை என்று கூறுதல் வேண்டும். இவ்வகையில் பெரிதும் கடமைப்பாட்டுக்கு உரியவர்களாக அமைந்தவர்கள் ஆசிரியர்களே. முன்னமேயே கல்வி நிலையங்

களின் சிறப்பு விளக்கப் பெற்றுள்ளது. எனவே, ஆசிரியர் மாணாக்கர்களை அறிவுடையவர்களாக ஆக்க வேண்டும். உடல் நற்றாச் சமுதாயத்தில் முழுமையாக அமைப்பது என்ற கொள்கை தொண்டருக்குரியது. சமூகத்தில் வாழும் தனி மனிதன் தன் நிலையிலும் சமூகமென இணைந்த நிலையிலும் நீதியைப் பெறவந்தது சட்டவியல் தொண்டரின் குறிக்கோளாக அமைகிறது. அவ்வாறே, உண்மையைப்பற்றிய அறிவையும், உண்மையைச் சார்ந்த செயற்பாட்டையும் எளிய முறையில் உணர்த்துவது என்ற ஒன்றைக் குறிக்கோளாகக் கொண்டது ஆசிரியர் தொண்டு.

ஆசிரியர் துறைத் தொண்டர்களுக்கு இன்றுள்ள சிக்கல்கள்

(1) மாணாக்கர்களுக்கு அளிக்க வேண்டிய கல்வியும் பயிற்சியும் முற்காலத்தே சிறிய அளவில் அமைந்தன. ஒரு சிற்றூர் அல்லது சிறு நகரம் என்ற அளவுக்குப் போதுமானதாக இருந்தது இன்று உலக அளவில் பெருகிவிட்டது. உலக சமுதாயத்தை நோக்கியதாக, உலக அரங்கில் கண்டுபிடிக்கப் பெறும் ஆய்வு களை, ஆய்வுகளால் எழும் விளைவுகளை உடன்கொண்டதாக இருக்கக்கூடிய கல்வியையும் பயிற்சியையும் கொடுக்கவேண்டிய கட்டாயத் தன்மை இப்போது ஆசிரியருக்கு நேர்ந்துவிட்டது. எனவே அவர்கள் நாள்தோறும் சுறுசுறுப்பாகவும், நாள்தோறும் மாறிக் கொண்டேயிருக்கும் சமூக மாற்றங்களை உடனுக்குடன் அறிந்து அதற்கேற்ற பயிற்சிகளை அளிக்கக் கூடியவர்களாகத் தம்மைத் தயாரித்துக் கொள்ளவேண்டிய இன்றியமையா நிலை இப்போது உண்டாகிவிட்டது.

(2) தனி மனிதனுடைய அற வாழ்வுக் குறிக்கோளை வலியுறுத்திச் சொல்லும் அளவிலேயே முற்காலக் கல்வி முறை அமைந்திருந்தது. இப்போது தனி மனிதனின் பல்வேறு கூறுகள் பல்வேறு துறைகளாக மலர்ந்துள்ளன. அவைகளை இணைத்து வளர்ந்து நிற்பது ஆளுமைப் பண்பு. ஆளுமைப் பண்பின் ஏற்றத் துக்குச் சமுதாயம் சமமாக அமைகிறது. கூட்டுறவு முறை, கூட்டிணைப்பு முறை ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்ட உலகச் சமூக அமைப்பியற் கல்வியை விரிவான அளவில் கொடுக்க வேண்டிய அவசியம் இப்போதுள்ள ஆசிரியர்க்கு உண்டு.

(3) ஆசிரியர்கள் அவ்வப்போது பாட திட்டத்தை மாணாக் கனின் தகுதிக்கேற்ப அமைத்து நடத்தி முடித்துவிடும் நிலை முற்காலத்திய நிலை. இப்போது பாடத் திட்டம் ஆசிரியர் களை மட்டும் கொண்டு அமைவதற்கு. பாடதிட்டங்களுக்குரிய

கொள்கைகளை வரையறுத்து, கோடிட்டுக் காட்டும் பணி ஆசிரியரல்லாதாரிடம் அமைந்துள்ளது. காட்டப்பெற்ற கோட்டினை ஆதாரமாகக் கொண்டு, அதற்கேற்ற பாடங்களை இணைத்துக் காட்டும் பணியொன்றே ஆசிரியர்களிடம் உள்ளது.

எனவே, குறிப்பிட்ட இந்த அறிவுக்குரிய பாடத்திட்டம் இது என வரையறுத்து,அதனை நடத்தித் தேர்வுஎழுதச்செய்து,குறியீடுகள் அளித்து விளக்கம் காட்டிவிட வேண்டிய வேலைமட்டுமே ஆசிரியருக்கு. ஆனால் அறிவின் சின்ன சின்ன பகுதி,சின்ன சின்ன அமைப்புடன் ஒன்ற வேண்டும் என்று எடுத்துக் கூறி, அடிப்படை அறிவு இல்லாமல் இந்த மேல்நிலை அறிவை மட்டும் உண்டாகுமாறு செய்தால் அடிப்படை இல்லாத கட்டடமாகிவிடும் என்று ஆசிரியர் சொல்லுதற்கு உரிமையில்லை. எனவே, இங்கேதான் ஆசிரியர்கள் தொழிலாளியாக்கப் பெறுகிறார்கள். சுருங்கக் கூறின், தம்மை மரப்பாவையின் இயக்கமென மாற்றிக் கொண்டார்கள்.

(4) மாணாக்கர்கள், ஆசிரியர்கள் சொன்னவைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளுதல் ஒருவகை. சொன்னவைகளை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் ஆய்ந்து தெளிந்து ஏற்றுக் கொள்ளல் ஒரு வகை. இரண்டு முறைகளும் உண்மைக் கல்விக்கு தேவையே. இரண்டும் இரண்டு நிலையில் உள்ளவர்களுக்கு. மாணாக்கர்களின் மனநிலை, வயது, கொள்ளும் முறை ஆகியவைகளைக் கருத்திற் கொள்ளாமல், எல்லா மட்டங்களிலும் ஆய்வுக் கல்வி முறையையே பின்பற்றுமாறு ஆசிரியர்கள் கட்டாயப் படுத்தப்பெறும் தன்மை உருவாகிவிட்டது.

(5) ஆசிரியர்,மாணாக்கர் என்ற இரண்டு பகுதியினர்களைத் தவிர, மூன்றாவது ஒரு பகுதியினர் கல்வித் துறையில் நுழைந்தமையால் எல்லா வகையான சிக்கல்களும் தோன்றத் தொடங்கி விட்டன.

(6) கல்வியை ஆசிரியர் கொடுக்க, மாணவர் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் சரியான சூழ்நிலை அமையவில்லை. பள்ளிக்கூடக் கட்டட அமைப்பு, நிதி நிலைமை, மாணாக்கர் ஆசிரியர் எண்ணிக்கை அமைப்பு, ஆசிரியர் பள்ளி நிருவாகம் இடையே அமைந்த உறவுமுறைச் சீர்குலைவு, கல்வித் தொண்டு என்ற பெயரில் பொருள் பறித்தல் ஆகிய சமூகச் சீர்கேடுகள் கல்வி நிலையங்களைத் தாக்கிவிட்டன. அவைகளை ஈடு கொடுத்துத் தடுத்து நிறுத்தவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆசிரியத் தொண்டில் நின்றோர் போற்ற வேண்டிய அறங்கள்

(1) ஒரு குழந்தையின் ஆளுமைப் பண்பின் வளர்ச்சி, சமூக நலத்தின் பொருட்டு சிறந்த தகுதியுடையதாகத் தன்னை ஆக்கிக் கொள்ள வேண்டிய வழி, அதற்குரிய காலம் ஆகிய இவை அனைத்தும் தேவையானஅளவில் நன்முறையில் குழந்தைகளிடம் அமைய வேண்டும் என்றால் அந்த வகையில் குழந்தைகளோடு தொடர்பு கொள்ளக்கூடியவர்கள் ஆசிரியர்களே. பாடத்திட்டம், நிலைகள், பயிற்றுவிக்கும் முறை ஆகிய எல்லாம் கல்வியின் குறிக்கோளை அடைவதற்குரிய வழிகள். எனவே, சமூக நல வாழ்வுக்குத் தேவையான தனிமனித ஆளுமை வளர்ச்சியோடு கூடிய தகுதியுடைய வழியில் பிள்ளைகள் உருவாகவில்லையானால் அந்தக் குறை ஆசிரியரைத் தவிர வேறு எவரையும் சாராது. இளமையில் சரியான பயிற்சி அமையவில்லையானால், பின்னர் அக் குழந்தைகள் மருத்துவத்தொண்டு, சட்டத் தொண்டு, ஆசிரியர் தொண்டு ஆகியவைகளில் ஈடுபடும்போது தம் கடமையில் அற வழியில் ஆற்றும் இயல்பு இல்லாதவர்களாகத்தான் அமைவார்கள். எனவே, குழந்தைகளைச் சமூக நலக் குடிமக்களாக அமைத்துக்கொடுக்கும் பணி ஆசிரியர்களைச் சார்ந்ததே. இப்பொறுப்பினை ஆசிரியர்கள் உணரவேண்டும்.

(2) பிள்ளைகளின் குறைகளை இரகசியமாக வைத்துக் கொள்ளும் முறை ஆசிரியர்களுக்கு மிகவும் தேவையானது. தன்னுடைய குறைகளைப் பிறரிடம் சொல்லாமல் மூடிவைத்து, தன்னுடைய பெருந்தகைமைப் பண்புகளால், சிறு பிள்ளைகள் பிற்காலத்தில் சிறப்பாக வாழ்வதற்குரிய பொது நலப் பணியினைச் செய்பவர்களே ஆசிரியர்கள் என்ற நம்பிக்கையைக் குழந்தைகளின் மனத்தே வளர்க்கும் முறையில் ஆசிரியர்கள் தம் செயல்களை அமைத்துக்கொண்டு உழைக்க வேண்டும். எனவே, குழந்தைகளின் குறைகளை மற்றவர் முன் பேசுதல், மாணாக்கர்கள் செய்த தவறுகள், குறைகள் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்ட வேடிக்கைப் பேச்சுகளில் ஈடுபடுதல் ஆகியவற்றைத் தவிர்க்கவேண்டும்.

(3) மாணாக்கர்கள், பெரிதும் ஆசிரியர்களைப் பார்த்தே ஒழுக்கங்களைக் கற்றுக்கொள்கிறார்கள். ஆகையால் ஆசிரியர்கள் ஒழுக்கத்தைப் போற்றி வளர்ப்பவர்களாக அமையவேண்டும்.

(4) ஆசிரியர்களின் செயற்பாடுகளை ஆராய்ந்த குழுவானது பிள்ளைகளுக்குத் தனியான நிலையில் பாடம் சொல்லிக் கொடுத்து, அதற்காக ஊதியம் பெறும் முறையைக் கண்டித்திருக்

கிறது. மிக மிகத் தேவை என்ற அடிப்படையில் இரண்டையும் ஏற்கலாம். ஆனால், தனியே வந்து படிக்கும் மாணாக்கன் தான் என்றால் ஆசிரியர் சற்றே குறைத்து மதிப்பிடும் நிலையை உருவாக்குகிறான். அவ்விடத்தில் ஆசிரியனும், தான் நிற்கும் தகுதி நிலையிலிருந்து கொஞ்சம் எளிமைப்படுத்திக் கொள் கிறான். இங்கேதான் ஆசிரிய மாணாக்க உறவு தாழ்நிலை அடையத் தொடங்குகிறது.

(5) மாணாக்கர்களைக் குடிமக்களாக ஆக்கும் கடமை ஒன்றை அடிப்படையாகக் கொண்ட சமூக இயல் நிகழ்ச்சிகளில் மட்டுமே கலந்து கொள்ள வேண்டும். அரசியல் போன்றவற்றில் கலந்து கொள்ளும்போது, இச்செயல் மாறான கருத்துகளுக்கும் பேச்சுகளுக்கும் இடமளிக்கிறது. மாணாக்கர்கள் மத்தியிலும், சமூக மக்களின் மத்தியிலும் ஆசிரியர் பெருமை குறைவதற்கு இது ஒரு காரணமாகும்.

(6) மக்களிடையில் மாறுபட்ட கருத்துகளை உருவாக்கி நிற்கும் செய்திகளை வகுப்பறையில் வைத்து விவாதம் செய்ய முற்படுதல் கூடாது. ஆனால்,ஆசிரியர்கள் உண்மை உணரவும், எடுத்துக்காட்டவும் உரிய தகுதி பெற்றவர்கள் என்பது உண்மை யானால், அவர்கள் அச்செய்திகளை ஆராய்வதில் தவறு என்ன என்ற வினா எழும்போது ஆசிரியர் அவைகளைப் பொதுமை நிலையில் வைத்து ஆராய்வதில் தவறு இல்லை.

(7) ஆசிரியர்கள் கல்வி நிலையத்தைச் சார்ந்தே பணிசெய்ய வேண்டிய நிலைமை இருக்கின்றது. ஆசிரியர்களைப் பணி கொள்ளும் கல்வி நிலைய நிருவாகமும் ஆசிரியர்களும் ஒத்துப் போக இயலாத சூழ்நிலை தோன்றிவிடுகிறது. பொதுவாக' இருதிறத்தாரும் உண்மைக் கல்வியை அளித்தல் என்ற பொது நோக்குக் குறிக்கோளை ஒட்டியே பாடுபட முயல்வது நல்லது.

(8) ஆசிரியர்கள் தம்மையொத்த ஏனை ஆசிரியர்களைக் குறை கூறிப் பேசுவதும், ஆசிரியத் தொழிலையே குறைவாக எண்ணுவதும், பேசுவதும் தவிர்க்கப் பெறல் வேண்டும்.

(9) எல்லாவற்றுக்கும் மேலாக, ஆசிரியர்கள் தம்மை நாள் தோறும் தகுதியால் உயர்த்திக் கொள்ளவேண்டும். 'ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்' என்ற அரிய முதுமொழி ஆசிரியருக்கு மிகவும் பயன் தருவதொன்றாகும். ஆசிரியர்கள் எல்லா வற்றாலும் உயர் பண்பும் நிறை கல்வியும் உடையோராக இருத்தல் வேண்டும்.

உலகக் கல்வியாளர் மாநாட்டில் அமைந்த முடிவுகள், எடுக்கப் பெற்ற நேர்முக வினா விடைகள் ஆகியவைகளை உடன்

கொண்டு மேலே கூறப்பெற்ற அறங்கள் ஆசிரியத் தொண்டு நல்லறங்களாக அமைக்கப் பெற்றன.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் தமிழகத்தில் இலக்கண நிலையில் வைத்து ஆசிரியர்தம் அறங்கள் கூறப் பெற்றுள்ளன. அவை இருபதாம் நூற்றாண்டின் சூழ்நிலைக்கு ஒவ்வாதன எனச் சிலர் கருதுகிறார்கள். ஆனால், அவைகள் இன்றும் ஏற்புடையன என்றே ஆய்வின் முடிவுகள் ஆதரிக்கின்றன. ஆதலின் அவைகளையும் சிந்தித்தல் பயனுடையது.

நல்லாசிரியரும் ஆசிரியர் அல்லாதாரும்

(1) உயர்குடிப்பிறப்பு, அனைத்துயிர்களிடத்திலும் காட்டும் அருளுடைமை, தெய்வ வழிபாட்டுச் செயல் என்ற இம் மூன்றாலும் சமூகத்தில் அனைவராலும் மதிக்கக்கூடிய பெருமையுடையனாக இருத்தல் வேண்டும்.

(2) பல கலைகளையும் பயின்று, உணர்ந்து அவைகளில் தெளிவு பெற்றவனாக இருத்தல் வேண்டும்.

(3) மாணாக்கர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் நிலையில் கட்டுக்கோப்பாக அமைத்துச் சொல்லும் நிலையுடையவனாக இருத்தல் வேண்டும். இதற்குக் 'கட்டுரை வன்மை' என்பது பெயர். சொல்வன்மை வேறு; கட்டுரை வன்மை வேறு.

(4) நிலத்தை ஒத்த பண்புடையவன். நிலம் நான்கு பண்புகளை உடையது. பெருமை, திண்மை, பொறுமை, பயன் தருதல் என்பன. பிற எவராலும் இவ்வளவுதான் என்று அளந்து பெற முடியாத கல்வியறிவை உடையவன். எனவே நிலத்தின் பெருமை போல கல்வியறிவின் பெருமை உடையவன்.

நிலத்தின் இரண்டாவது பண்பு வலிமையுடையது. தருக்க வாதம் முதலியவைகளால் பலர் ஒன்றுசேர்ந்து வாதிக்கமுற்பட்ட காலத்தும் கலங்காத நிலையில் அவர்களுக்கு விடை கூறியும் விளக்கம் கூறியும் அமையும் அறிவுத் திண்மை உடையவனாக அமைதல் வேண்டும்.

நிலத்தின் மூன்றாவது பண்பு பொறுமை. அறியாமையால் தன்னை இகழ்கிறவர்களையும் பொறுத்து அவர்களுடைய அறிவுக் குறைபாட்டிற்காக வருந்தி அவர்களையும் நல்லறிவு கொள்ளுமாறு அவர்களுக்காகவும் பாடுபடும் இயல்புடையவர்களாய் இருத்தல் வேண்டும்.

நிலத்தின் நான்காவது பண்பு பயனளித்தல். பருவகாலம் தவறாது உழவர்கள் தம் செயலைத் தொடங்கவேண்டும். அவ்வாறு பருவகாலம் வந்து தம் செயலைத் தொடங்கிய உழவர்களுடைய உழைப்பு எந்த அளவுக்கு அமைந்ததோ அந்த அளவுக்கு பயன் கொடுப்பது நிலத்தின் பண்பு. அவ்வாறே, கற்கத் தொடங்கும் காலமறிந்து மாணாக்கர் தவறாது வருதல் வேண்டும். வந்து கற்கத் தொடங்கியவர்களுக்கு அவர் தம் முயற்சியின் அளவிற்கேற்ப கல்வியை அளிக்கும் தன்மை ஆசிரியர்களுடையது.

(5) ஆசிரியன் மலையை ஒத்த பண்புடையன்: மலையானது வடிவு, பொருள், நிலை, தோற்றம், கொடை என்ற ஐந்தாலும் உயர்வுடையது. ஆசிரியனும் இங்கே சொல்லப் பெற்ற குணங்களால் மலையை ஒத்தவன்.

அளந்து இவ்வளவுடையது என்று குறிப்பிட்டுக் கூறமுடியாத வடிவத்தினை உடையது மலை. அவ்வாறே அளவிட்டுக் கூறும் வல்லமை படைத்த அறிஞர்களாலும் அளவுசெய்து கூறமுடியாத அளவுக்குக் கல்வியுடையவன்.

மலையானது எல்லையற்ற பல்வகைப் பொருள்கள் மிகுதியாக உடையது. மலையில் உள்ள பொருள்கள் அதிக வகைகளையுடையவை; வகைகளாலும் அதிக வகைப் பொருள்கள் உண்டு. ஒவ்வொரு வகையிலும் அளவுக்குட்படாத மிகுந்த பொருள்கள் உண்டு. அவ்வாறே ஆசிரியன் பல வகைகளில் அமைந்த கலைப்பொருள்கள் உடையவன். ஒவ்வொரு வகைப் பட்ட கலையிலும் பல வகையான ஆராய்ச்சி முடிவு பொருட்களை உடையவன். எனவே கல்விப் பெருமை—கலைப்பொருள் பெருக்கம் உடையவன் ஆசிரியன்.

மலையானது யாவராலும் அசைக்க முடியாததாய் நிலைத்தல் என்ற பண்புக்கு நிலைக்களமாக விளங்குவது. அவ்வாறே யாவராலும் வாதத்தாலும் பிற வினாக்களாலும் அசைக்கப் பெறமுடியாத நிலைத்த புலமையுடையவன் ஆசிரியன். காண்பாரை மலைக்க வைப்பது மலை. அவ்வாறே வாதத்தால் வெல்ல வருவாரை மலைக்க வைக்கும் புலமை மலையாய் நிற்பவன் ஆசிரியன்.

மலையினுடைய தோற்றம் போல தொலைவிலுள்ளார்க்கும் அண்மையில் உள்ளார்க்கும் பெருமிதத்தைத் தரும் தோற்றப் பொலிவு ஆசிரியனுக்கு அமைய வேண்டும். கல்வியாலும்

அறிவாலும் ஒழுக்கத்தாலும் நிறையும்போது அவன் உயர்ச்சி உடையவன் ஆகிறான். புகழால் அனைவராலும் அறியப் பெறுபவன் செயலாலும் பிறர் கீர்த்தியாலும் அண்மையில் உள்ளவராலும் அறியப்பெறுபவன்.

மதகின் அடி வற்றினாலும் மலையின் அடி வற்றாது என்பது பழமொழி. அவ்வகையில் மழை முதலியன இல்லாத காலத்திலும் மலையானது தன்னை அடைக்கலமாக அமைந்த பொருள்களை வாடவிடாது வாழச் செய்யும். அவ்வாறே, பொருள் வருவாய் மிகச் சுருங்கி வளமையில்லா வறுமை நிலை வந்து ஏந்திய காலத்திலும் தன்னை அடைந்த மாணாக்கர்களுக்குக் கல்விப் பொருளை வரையாது வழங்கும் வள்ளன்மை உடையவனாக இருப்பான் ஆசிரியன்.

(6) துலாக்கோல் அனையன்: துலாக்கோல் தன்னிடம் வைக்கப் பெற்ற பொருள்களின் எடையைத் துல்லியமாக அளந்து வெளி யிடுவது போல் தன்னிடம் வந்த எவருடைய புலமை, குணம், கல்விப் பயிற்சி முதலியவைகளை வரையறை செய்து கூறிவிடும் ஆற்றல் உள்ளவன். அவ்வாறே உலகப்பொருள் எல்லாவற்றையும் உயர்வு, தாழ்வு என்ற அடிப்படையில் வரையறுத்து உணர்த்தும் ஆற்றல் அவனுக்கு உண்டு.

அவ்வாறே 'சமம்' என்ற தன்னிலையை எல்லா அமைப்பு களிலும் பொருந்துமாறு இது என்று எடுத்துச் சொல்லும் நிலை ஆசிரியருக்கு இருக்க வேண்டும்.

(7) மலர் அனையன்: ஆசிரியன் மலரை ஒத்த மாண்பினை உடையன். மலர் ஒரு மங்கலப் பொருள். எல்லாவகையான நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளக்கூடிய தகுதிதான் இங்கே மங்கலம் என்பது. இன்ப நிகழ்ச்சிகளிலும் துன்ப நிகழ்ச்சி களிலும் பங்கு கொள்ளும் பண்பினன் ஆசிரியன். மலரில்லாத நிகழ்ச்சி இல்லாததுபோல ஆசிரியன் இல்லாத, கலந்து கொள்ளாத நிகழ்ச்சி ஒன்று சமுதாயத்தில் இருக்க முடியாது. அதுவே இன்றியமையாத தன்மை.

மலர் எல்லோராலும் மகிழ்வோடு ஏற்றுக்கொள்ளப்படுவது போல ஆசிரியனும் எல்லோராலும் மகிழ்ந்து ஏற்றுக் கொள்ளப் பெறும் பெருந்தன்மை உடையவன்.

மலரானது தன்னை ஏற்றுக் கொள்பவருக்கு சுமையாக இல்லாமல் மென்மையாக இருப்பது. ஆசிரியனும் பிறரால் ஏற்றுக் கொள்ளப்பெறும் நிலையில் மென்மைப்பண்புடையவன்

மலரானது மலராக வேண்டிய நேரத்தில் மலர்வதுபோல தேவையான நேரங்களில் – பாடம் சொல்லும் நேரங்களில் முக மலர்ச்சி உடையவன் ஆசிரியன்.

இனி, ஆசிரியனாக இருக்கத் தகுதி அற்றவன் எப்படி இருப்பான் என்ற வரையறையும் காண முடிகிறது.

(1) மொழி குணம் இல்லாமை: பாடம் சொல்லும் திறம் இல்லாதவன் ஆசிரியனாக அமைதல்கூடாது. பாடம் சொல்லுதல் வேறு. பிறர்விரும்புமாறு சொற்பொழிவு செய்தல் வேறு. சொற்பொழிவு செய்தலுக்கு உரிய ஆற்றல் சொல் வன்மை. பாடம் சொல்வதற்கு உரிய ஆற்றல் கட்டுரை வன்மை. சொல் வன்மை உடையவன் பாடம் சொல்ல முற்படக்கூடாது. கட்டுரை வன்மை உடையவன் சொற்பொழிவு செய்யலாம்.

(2) கீழ் குண இயல்பு: உடைமை – மாணாக்கனுக்குக் கற்போன் என்றும், ஆசிரியனுக்குக் கற்கப்படுவோன் என்றும் பெயர் முன் காலத்தில் உண்டு. ஆசிரியன் கற்கப்படுவோனாதல் எவ்வாறு? மாணாக்கன் ஒரு நூலைக் கையில் வைத்துக் கொண்டு பாடம் கேட்டல் உண்டு. ஆனால், அவன் ஆசிரியனையே நூலாக வைத்துக் கற்க வேண்டும். ஆசிரியனையே படிக்க வேண்டும். எனவே மாணாக்கனால் பின்பற்றி ஒழுகுவதற்குரிய ஒழுக்க நூலாக ஆசிரியன் விளங்க வேண்டும். ஆசிரியன் அல்லாதவன் இழிந்த குணங்களுக்கு இருப்பிடமாக இருப்பான்.

அழுக்காறு, அவா, வெகுளி, கேட்போர்க்கு அச்சம் உண்டாகுமாறு பேசுதல் ஆகியவைகளை உடையவனாக இருப்பான்.

கழற்சிக்காய்க் குடம் போன்றவன் ஆசிரியனல்லாதவன் : நிலம், மலை போன்றவை நல்ல ஆசிரியனுக்கு உவமைகளாக அமைந்தன போல, ஆசிரியனல்லாதவனுக்கும் அவன் பண்பை விளக்கும் உவமைகள் உண்டு.

கழற்சிக் காய் என்பது வழுவழுப்பாக இருக்கும் ஒருவகை காய் ஒரு குடத்தில் கழற்சிக் காய்களைப் போட்டு பின் அவைகளைக் கீழே சாய்த்தால் முதலில் போட்ட காய் குடத்தின் அடியிலும் அதன்பின் போட்ட காய் அதற்கு மேலும் இருக்கும் நிலையில் மாறி, வழுவழுப்புக் காரணமாக, போடப்பெற்ற முறை மாறி கீழே வந்துவிடும். அவ்வாறு ஆசிரியன் தான் மாணாக்கனாக நின்று கற்ற காலத்தில் முதலில் ஏற்றுக்கொண்ட செய்தி அதன் பின் ஏற்ற செய்தி என்ற நிலையில் அப்படியே

முறைமாறாமால் தன் மாணாக்கனுக்குக் கொடுக்காமல், பின் சொல்ல வேண்டியவைகளை முன்னும், முன் சொல்ல வேண்டியவைகளைப் பின்னும் என்று இவ்வாறு முறை மாற்றிப் பாடம் சொல்லுவான். இவ்வாறு பாடம் சொல்லு பவன் ஆசிரியனாகான்.

மடல் பெருத்த பனைமரம் ஆசிரியனல்லாதவனுக்கு உவமை: தன்னுடைய வடிவம் முழுவதையும் மறைக்கும் நிலையில் மடல்களை விரித்துக் கொண்டிருக்கும் பனைமரத்துக்கு மடற்பனை என்பது பெயர். மடற்பனையில் பழுத்த பனம்பழங்கள் இருக்கும். ஆனால் அந்த மடற்பனையை விரும்பி அப்பழங்களை மற்றவர்களுக்குக் கொடுத்தால் கொடுக்கலாமேயொழிய, வேறு யாரும் போய் பறித்து எடுக்க முற்பட்டால் அந்த விரிந்த மடல்கள் யாரையும் எடுக்க விடாதவாறு தடுத்துவிடும். அதேபோல் சில ஆசிரியர்கள் தாங்கள் முயன்று கற்ற நூற்பொருளை அவர்களே விரும்பிப் பிறருக்குப் பாடம் சொல்ல முற்பட்டால் ஏனையோர் தெரிந்துகொள்ள முடியுமேயல்லாமல், யாராவது இந் நூலைப் பாடம் சொல்லுங்கள் என்று கேட்டால் சொல்ல மாட்டார்கள். இவர்கள் ஆசிரியர்களாகார்.

ஆசிரியர் அல்லாதார் பருத்திக் குண்டிகை போன்றவர் : பஞ்சியினை அடைத்து வைக்கும் குடுக்கைக்குப் பருத்திக் குண்டிகை என்று பெயர். பஞ்சை அடைக்கும்போதும் அரிதின் முயற்சி செய்து சிறிது சிறிதாக அடைக்க அதனைஉட்கொள்ளும். உள்ளே அடைத்த பஞ்சியை வெளியே எடுக்க முற்படும்போது சிறிது சிறிதாக, கொஞ்சம் கொஞ்சமாக வலிந்து இழுத்து வெளியில் கொணடுவர வேண்டும். அதுபோலவே சில ஆசிரியர்கள் படிக்கின்ற காலத்தும் ஆசிரியர் கொஞ்சம் கொஞ்சமாக வலிந்து முயற்சி செய்து நுழைக்கவே, சிறிது சிறிதாக உள்ளத்தில் ஏற்றுக் கொண்டார்கள். பின்னர் வெளிப்படுத்தும் காலத்தும் எளிமையாகப் பிறர்க்குக் கொடுக்க மாட்டார்கள். மிகவும் முயற்சி செய்து வெளியே இழுத்தால் கொஞ்சம்தான் கிடைக்கும். கருத்துகளை விரைந்து ஏற்றுக்கொள்ளாத நிலையும் பிறருக்கும் விரைந்து கொடுக்கும் ஆற்றல் இல்லாத நிலையும் ஆசிரியர் ஆகாதவர்களின் இலக்கணம்.

ஆசிரியர் அல்லாதார் முடத்தெங்கிணை ஒப்பர் : தண்ணீர் ஊற்றிவளர்ப்பவர்களுக்கு தேங்காய் முதலியவைகளைத்தராமல் வளைந்து சென்று அடுத்த வீட்டுக்காரருக்கு கொடுப்பது முடத் தெங்கு. அதுபோல் தன்னிடமிருந்தும் தன்னை வழிபட்டும்,

தனக்கு பொருள்களைக் கொடுத்தும் தன்னை வளர்ப்பவர்களாகிய மாணாக்கர்களுக்குப் பாடம்சொல்லாமல் எந்த உதவியையும் செய்யாமல் ஏங்கோ இருப்பவர்க்கு வளைந்து சென்று பாடம் சொல்பவர். இது ஆசிரியர் அல்லாதவரின் இலக்கணம்.

நல்லாசிரியர்கள் பாடம் சொல்லும் முறை

நல்லாசிரியர் தம்முடைய மாணாக்கனுக்குக் கல்வி கற்பிக்க முற்படும்போது முதலில், கல்வியை அளிப்பதற்குரிய காலம், இடம் ஆகியவைகள் தூய்மை உடையனவாக இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும்.

தூய்மை உடைய காலத்தே தூய இடத்தில் அமர்ந்து ஆசிரியன் தன்னுடைய வழிபடு தெய்வத்தை வணங்குதல் வேண்டும்.

தான் பாடம் சொல்லக் கருதிய பொருளைத் தொகுத்துத் தன் உள்ளத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும்.

விரைவாகப் பாடம் சொல்லல் ஆகாது.

பாடம் சொல்லும்போது கோபம் கொள்ளல் ஆகாது.

விருப்பத்தோடு முகமலர்ச்சியுடன் பாடம் சொல்லவேண்டும்.

பாடம் கேட்கும் மாணாக்கன் ஏற்றுக் கொள்ளவேண்டிய தன்மை அறிந்து பாடம் சொல்லவேண்டும்.

மாணாக்கன் ஏற்றுக் கொள்ளும் வகையில் பாடம் சொல்ல வேண்டும்.

மாறுபாடு இல்லாத கோணல் இல்லாத மனத்துடன் பாடம் சொல்ல வேண்டும். இவை எல்லாம் நல்லாசிரியன் பாடம் சொல்லும் இலக்கணம்.

மாணாக்கர் கடைப்பிடிக்க வேண்டிய அறக் கொள்கைகள்

சமூக வாழ்வில் உயிர்ப்புடைய தொண்டு நெறியைப் பின்பற்றும்போது, தொண்டு நெறி அறங்கள், தொண்டு செய்பவர், தொண்டினை ஏற்பவர் என்ற இருசாராரையும் தழுவி நிற்கும். மருத்துவத் தொண்டுசார் நல்லறங்களை மேற்கொள்ளும்போது நோயாளிகளும் சில அறக்கொள்கைகளை மேற்கொள்ள வேண்டும். இங்கே சொல்லப்பெறும் அறங்கள் இம்மருத்துவத் தொண்டினை அடிப்படையாகக் கொண்டவை. தனிமனிதன் ஒருவன் மருத்துவத் தொண்டு செய்யும் மருத்துவரின் சேவையை ஏற்றுக்கொள்ளாத நிலையில் உடல்நலத்தோடு வாழ்கின்றானெனில் அவர் இத்தகைய அறங்களைப் பின்பற்றவேண்டிய

அவசியம் இல்லை. சமூகத்தின் உறுப்பினர் என்ற வகையில் அறங்கள் உண்டு.

அவ்வாறே ஆசிரியர் தம்முடைய தொண்டினை மேற்கொள்ளும்போது, அத்தொண்டினை ஏற்றுக் கொள்பவனாக இருக்கும் யாருக்கும் சில அறங்கள் பகுக்கப்பெறும். அவ்வகையில் மாணாக்கர்களுக்குரிய அறங்கள் யாவை எனக் கருதவேண்டும்.

ஆசிரியர்கள் அமைக்கும் தொண்டினை ஏற்கும் மாணாக்கர்கள் என்னென்ன அற இயற் கோட்பாடுகளைப் பின்பற்ற வேண்டும் என்பதை, அனைத்துலகக் கல்விச் சீர்திருத்தக் குழு ஆசிரியர்களுக்கு அமைத்துக் காட்டியதுபோலவே மாணாக்கர்களுக்கும் அமைத்துக் காட்டியுள்ளது. அக்குழுவின் பரிந்துரையில் உண்மை மாணாக்கர்கள் மேற்கொள்ளவேண்டிய அற இயல் குறிக்கோள்களைக் காணலாம்.

(1) கல்வியின் அடிப்படைக் குறிக்கோள் என்பது அறிவியல், ஆன்மீக இயல், சமூக இயல், பருப்பொருள் இயல் அகிய அனைத்துப் பகுதிகளும் இணைந்து தன்னிறைவு பெற்ற வளர்ச்சியை ஒரு தனிமனிதன் அடையவேண்டும் என்பதே. இவைகளில் எந்த ஒன்றை விலக்கினாலும் கல்வி முழுமையுடையதாகாது. இக்குறிக்கோள்களை ஒரு மாணாக்கன் உணர்ந்து செயல்படவில்லையானால் அவன் அவனுடைய காலத்தையும் துணையோருடைய காலத்தையும், பணத்தையும் வீணாக்குகிறான் என்பதே பொருள். எனவே கல்வியின் அடிப்படைக் குறிக்கோளை அடைய அவன் நாளும் உழைக்க வேண்டும்.

(2) கல்லூரி மாணாக்கன் எப்போதும் சுறுசுறுப்பான மனநலம் வாய்ந்தவனாக, திறந்த மனத்துடன் எந்த ஒரு செயலையும் அணுகுபவனாக,சகிப்புத் தன்மையை ஏற்கும் மனமுடையவனாக அவனுடைய படிப்பில், அல்லது வகுப்பினுள் அமையும் செயல்களில் மட்டுமன்றி, உலக அமைப்பில் விளையும் சிக்கல்களைப் பற்றிய நிலையிலும் செயல்பட வேண்டும்.

(3) கல்லூரி மாணாக்கன் எப்போதும் தன்னை மரியாதைக்குரியவனாக, பெருந்தன்மைப் பண்பாடுடையவனாக அனைவரும் மதிக்கத்தகும் நிலையில் தன்னை நல்லொழுக்கத்தில் நிலைநிறுத்திக் கொள்ளவேண்டும். படிப்பில் குறியீட்டின் அடிப்படையிலான தகுதியை எவ்வழியிலாயினும் பெறுவது என்பதை விடுத்து, நேர்மையான வழியிலேயே பெறப் பாடுபட வேண்டும். தன்னைப்பற்றிய ஒழுக்கத்திலும், தன்னுடன் படிக்கும்

மாணாக்கர்களிடத்திலும், பிறரிடத்திலும், பேராசிரியர்களிடத்தும் படிக்கும் நிலைமையிலும் பெருந்தன்மையை நிலைநாட்டிக் கொள்ளும் முறையில் படிக்க வேண்டும்.

(4) காலந்தவறாமை, சொல் தவறாமை, வகுப்பில் வருகைப் பதிவு தவறாமை, தனக்கு ஒதுக்கப்பட்ட எழுத்துப் பணிகள் போன்றவைகளைக் காலவரம்பில் செய்யும் கணிப்பை பழக்கிக் கொள்ள வேண்டும். தன்னுடைய பண்பாடு, தன்னம்பிக்கை, தன்னை மதித்தல் ஆகியவை, மாணாக்கன் என்றும் கடைப்பிடிக்க வேண்டிய பண்புகள்.

(5) கல்வியை மூலமாகக் கொண்டு பெரும் பொருளையும் காலத்தையும் செலவிட்ட நாம் சமூகப் பணியைச் செம்மையாகவும் திறமையாகவும் அமைத்தால்தான் செலவிட்ட அவைகளை ஈடுசெய்ய முடியும் எனக் கருதி உழைக்கவேண்டும். பிற்காலத்தே சமுதாய மக்கள் நம் அறிவையும் திறமையையும் சார்ந்து வாழ முற்படும் நிலையில் தயங்காது அவர்களைத் தம் அறிவாலும் திறமையாலும் வாழவைக்கும் நிலையை மேற்கொள்வதற்கு ஏற்ப இப்போதே அறிவையும் திறமையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

(6) கல்லூரி மாணாக்கன் உடல்நலத்தை நன்கு பெறுதல் வேண்டும். நல்ல தோற்றமும் எடுப்பான வாளிப்பும் உடையவனாகத் தன் உடலமைப்பை ஒழுங்குசெய்துகொள்ள வேண்டும்.

(7) கல்லூரி வாழ்க்கையில் விதிகளை மதித்து நடக்கவும் அவ்வாறு நடக்கும்போது, விதிகள் பொருந்தாதனவாக இருக்கின்றன என்பதை அனுபவத்தால் உணர்ந்தானானால் உரிய அலுவலக இயக்குநர் மூலமாக அவைகளை மாற்றியமைத்துச் செய்ய முற்படவேண்டும். கல்லூரியை விட்டு வெளியேறும் போது, அக்கல்லூரிதான் தன் இன்பவாழ்வையும் தன் மேம்பாட்டு வாழ்வையும் அமைத்துக் கொடுத்த நிலையம் என அதனை மதித்து, அத்தகைய பதிவுப்பெற்ற உள்ளமுடன் வெளியேற வேண்டும்.

(8) தன்னுடன் படிக்கும் ஏனை மாணாக்கர்களுக்கும் போதிய வழியிலான எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும். ஏனைய மாணாக்கர்கள் நல்லொழுக்கத்தில் ஈடுபடுமாறு அமைக்க வேண்டும்.

(9) சமுதாயத்தில் அமைந்த ஏற்றத்தாழ்வுகளை உள்ளங் கொள்ளாத நிலையில் உலக மாணாக்கர் அமைப்பினை உண்டாக்கும் வகையில் எல்லைக் கப்பாற்பட்ட இடத்தில்

வாழும் மாணாக்கர்களுடனும் நட்புமை கொண்டு வாழ்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

(10) பொருளாதார வசதியுடைய மாணாக்கன் பொருளாதார உதவியை அரசிடமிருந்தோ சமூகத்திடமிருந்தோ பெறுதலை விலக்குதல் வேண்டும். தன்னைவிட வறுமை நிலையில் உள்ள மாணாக்க நண்பர்கள் அவ்வுதவியைப் பெறும் வகையில் தான் வழி விடுதல் வேண்டும்.

(11) விளையாட்டில் வேண்டிய அளவுக்கு ஈடுபாடு கொள்ளுதல் வேண்டும். விளையாட்டு என்றாலுங்கூட அங்கே அமைக்கப்பெற்ற விதிகளை மதித்து நடக்க வேண்டும்.

(12) கல்லூரியில் உள்ள எந்த ஒரு மன்றத்திலாவது தன்னை இணைத்துக்கொண்டால் அதில் தன்னுடைய குறிப்பிடத்தக்க தொண்டு, கொடை என்ற மொழியில் எதையாவது அமைக்க வேண்டும் என்று பாடுபடுதல் வேண்டும். எந்த அமைப்பில் பழகும்போதும் அரசியல்பற்றி பேசவோ, கருத்துத்தெரிவிக்கவோ முற்படுதல் கூடாது.

கல்வி நிலை நிருவாகம் மேற்கொள்ள வேண்டிய அறங்கள்

(1) மாணாக்கர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நல்ல உறவு முறை அமையும் வகையில் நிருவாகம் எல்லாவகையான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

(2) நிருவாகம் ஆசிரியர்களை மரியாதையுடன் நடத்தும் போதுதான் மாணாக்கர்கள் ஆசிரியர்களையும் அவர்களை மதிக்கும் நிருவாகத்தையும் மதித்து நடப்பார்கள். நிருவாகம் மாணாக்கர்களைப் பண்படுத்தும் திறமையுடையதன்று. நிருவாகத்தைக் கருவியாகக் கொண்டு ஆசிரியர்கள், மாணாக்கர்களைப் பண்படுத்துபவர்கள் என்பதைக் கல்வித் துறையில் ஈடுபட்ட அனைவருக்கும் உணர்த்துதல் வேண்டும்.

(3) கல்வி நிலையச் சொத்துகளை வீணாக்கும் ஒருவகை இயல்புள்ளம் மாணாக்கர்களின் இளவயதில் அமைவதுண்டு. அவ்வுள்ளத்தை மெல்ல மெல்ல மாற்றி, கல்வி நிலையத்தின் சொத்துகள் தம் சொந்த நலம் பேணும் சொத்துகள் என்ற எண்ணமாக மாறி அமையுமாறு நிருவாகம் பாடுபடவேண்டும். மாணாக்கர்களிடம் எல்லைமீறி, செல்வத்தைப் பறிக்கும்போது, விதிகளுக்கு அடங்கி அவர்கள் கொடுத்துவிட்டாலும், போதிய முறைக்கு அப்பால் பணம் பிடுங்கிய நிலையில் வளர்ந்த இச் சொத்துகளை அழிக்கப் பெறவேண்டும் என்ற எண்ணம் மக்கள்

உள்ளத்தில் ஊறிவிடுவதால், வாய்ப்பு அமையும்போது கல்வி நிலையச் சொத்துகளை அழிக்கும் செயற்பாடு நடைபெற்று விடுகிறது. எனவே, இச் செயல் நீதியானது என்ற கருத்து எல்லா நிலைகளிலும் எல்லாச் செயல்களிலும் பிரதிபலிக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.

(4) பொதுவாக, ஆசிரியர், மாணாக்கர்கள், நிருவாகம் ஆகிய மூன்றும் இணைந்துநின்று காலம், பொருள், கல்லூரி உடைமை ஆகியவை எந்த ஒரு சிறுவகையிலும் வீணாக்கப் பெறலாகாது என்ற அடிப்படையில் கூட்டுறவு முறையில் செயல்படவேண்டும்.

மேலே குறிப்பிடப் பெற்றவைகள் போல வேறு சில நெறி முறை அறங்களும் சொல்லப் பெற்றுள்ளன. இனி, தமிழகம் நல்லாசிரியர்களின் அறங்களை வகுத்துக் காட்டியதுபோன்றே நன்மாணாக்கர் இயல்புகளையும் அறங்களையும் எடுத்துக் கூறி விளக்கம் செய்துள்ளது. அவைகளையும் இங்கே காணலாம்.

பாடம் கேட்பவனாக அமைபவனுக்கு உரிய தகுதி

ஒரு நல்ல ஆசிரியர் தன்னுடைய மகனையும், தன்னுடைய ஆசிரியனுடைய மகனையும், அரசனுடைய மகனையும், ஊதியமாக மிகுபொருள் கொடுப்பவனையும், வழிபாடு செய்பவனையும், சொன்ன நூற்பொருளை படித்து பற்றிக் கொள்ளுகின்ற அறிவு பெற்றவனையும் மாணாக்கராக ஏற்றுப் பாடம் சொல்லிக் கொடுக்கலாம்.

கல்வி கற்பதற்கு அல்லது மாணாக்கனாக நின்று பாடம் கேட்பதற்குத் தகுதி இல்லாதவர்கள்

கள்ளுண்டு மகிழ்பவன், சோம்பேறி, தற்பெருமை மானம் முதலியவற்றை மிகுதியாக மதிப்பவர்கள், பெண்பித்துக் கொண்டு திரிபவன், திருடும் பழக்கம் உடையவன், தீராத நோயுடையவன், வறுமையில் உழல்பவன், இயல்பான நிகழ்ச்சிக்கு— சொல்லுக்கு மாறுகிற பொருள் கொள்பவன், மிகுகோபம் உடையவன், எப்போதும் தூங்கிக்கொண்டே இருப்பவன், மந்தபுத்தி உடையவன், நிறைய நூல்களைக் கண்டு பயப்படுபவான், அஞ்சத்தக்கவைகளுக்கும் அஞ்சாதவன், அறமல்லாதவைகளைச் செய்வதில் நாட்டம் உடையவன், பொய் சொல்பவன் ஆகியோர்களுக்குப் பாடம் சொல்லுதல் ஆகாது.

பாடம் கேட்டலுக்கு உரிய முறை

குறித்த காலம் தவறாமல் செல்லுதல் முதல்விதி, ஆசிரியரை வழிபடுதலில் மனவெறுப்பு இல்லாதவன். ஆசிரியன் எவ்வெக்

குணங்களை நற்குணங்கள் என்று சொல்கிறானோ, அவைகளை யெல்லாம் மேற்கொண்டு செயற்பாட்டுக்குக் கொண்டு வருபவன். ஆசிரியன் குறிப்பிட்டுக் கூறும் குறிப்புமொழி, குறிப்பு விளக்கம், ஆகியவைகளை ஒட்டிய பழக்கம் உடையவன். உட்கார் என்று சொன்ன பிறகே உட்காரும் செயற்பாடு உடையவன். முன்பு படித்த பாடங்களைச் சொ்ல், அல்லது வினாக்களுக்கு விடை கூறு என்று சொன்னவுடன் கூறும் பழக்கம் உடையவனாக அமைபவன். எவ்வளவு நேரம் பாடம் சொன்னாலும் எவ்வளவு அதிகம் பாடம் சொன்னாலும் ஏற்று, இன்னும் கொஞ்சம் சொன்னாலும் ஏற்கும் வேட்கையுடையவனாக இருந்து, ஓவியப் பாவைபோல் அசையாது அமர்ந்திருந்து அடக்கமுடன் இருந்து, செவியே வாயாக நெஞ்சமே ஏற்ற பொருள்களைச் சேகரித்து வைக்கும் இடமாக வைத்துக் கேட்கவேண்டும். அவ்வாறு கேட்ட செய்யுள்களில் ஒரு சிறு பகுதியும் விடாமல் உள்ளத்தில் அமைத்துக் கொண்டிருந்து, பின்னர் ஆசிரியர் 'போ' என்று சொன்ன பின்னரே செல்லும் செயற்பாடு உடையவன். இவ்வாறு பாடம் கேட்கும் முறை அமைக்கப் பெற்றுள்ளது. இவ்வாறிருந்து பாடம் கேட்டல் இக்காலத்துக்கு, பலபேர் இணைந்து படிக்கக்கூடிய கல்விக்கு இசையுமா எனவும் சிந்திக்க லாம்.

உலகக் கல்வி வளர்ச்சிக் குழுவும் மேற்சொன்ன பண்புகள், தகுதிகளைத் தேவை என்றே முடிவு செய்திருக்கிறது. வேறு சில இன்றியமையாத பண்புகள், செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும், என்று வற்புறுத்துகிறது தமிழகக் கல்வி முறை.

ஆசிரியன் சொன்னதைச் சிறிதும் விடாமல் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டாலுங் கூட, ஆசிரியன் சொன்னவைகளில் காற் பங்குதான் ஒருவன் பெற்று, மனத்தில் அமைத்துக் கொள்ள முடியும். இரண்டாம் முறை அதே நூலைப் பாடம் சொல்லச் செய்து விட்டால், நூலிற் பிழை இல்லாமல் செய்திகளை அறியமுடியும். மூன்றாம் முறை பாடம் கேட்டால், தான் கேட்ட நூல் செய்திகளைப் பிறருக்குச் சொல்லும் முறை தெரிந்து சொல்லும் தகுதியைப் பெறலாம். எவ்வாறாயினும் ஆசிரியன் சொன்ன செய்திகளில் காற்பங்குதான் ஒரு மாணாக்கனால் பற்றிக் கொள்ள முடியும். ஏனைய முக்காற் பகுதியை அவனால் பெற முடியுமா? உடனிலிருந்து பாடங் கேட்டவர்களோடு கலந்துரையாடி, ஆசிரியர் சொன்ன செய்தி களை விரிவாகப் பேசி, ஆராய்ந்தால் இன்னொரு காற்பகுதியைப் பெறமுடியும். இம்முயற்சிகளையெல்லாம் செய்தாலும்ஒரு சிறந்த மாணாக்கனாயிருந்தாலுங்கூட, ஆசிரியர் சொன்னவற்றை

அரைப் பகுதியைத் தான் ஏற்றுச் சரி செய்யமுடியும். பிறகு மாணாக்கன் தான் ஆசிரியனாக நின்றுபிறருக்குப்பாடம் செவ்விய முறையில் சொல்லிக் கொடுக்கும்போதுதான் எஞ்சிய பாதிப் பகுதியையும் பெற்று நிறைவு பெறுகிறான். ஆசிரியன் சொல்ல எண்ணிச் சென்றவைகளை முழுமையாகப் பெறுவதற்கு இவ் வுழைப்பு தேவைப்படுகிறது. ஆசிரியன் உள்ளத்தில் உள்ளவை களையெல்லாம் சொல்லவில்லை. மாணாக்கன் நிலையை அறிந்து எடுத்து சொன்ன அந்த அளவைப் பெறுவதற்கே இவ்வளவு முயற்சி தேவைப்படுகிறது.

அடுத்து ஆசிரியனிடம் பழகும்போது நெருப்பின் முன் நிற்பவன் போல வேறு ஒரு நடுவுநிலைமையை அமைத்துக் கொடுத்து, அந்நிலையில் நின்று பழக வேண்டும் என வரையறை செய்கிறது.

நெருப்பின் முன் குளிர் காய்பவன், நெருப்பில் விழுந்தால் எரிந்து மாண்டு போவான். நெருப்பும் சுட்டுவிடும். எனவே நெருப்பு சுடுகின்ற எல்லை என்று உண்டாயிற்று. அந்த எல்லைக்கு அப்பால் நிற்க வேண்டும். அதிகமாக விலகினால் குளிர் வருத்தும், ஆசிரியனிடமிருந்து அதிகமாக விலகி நின்றால் அறிவுடைமையைப் பெற முடியாது. என்றும் அச்சத்தின் வழிப் பட்ட பண்புகளோடு இருத்தல் வேண்டும்.

நிழல்போல் பின்தொடரும் பண்பினை மேற்கொள்ள வேண் டும். ஆசிரியனுக்குப் பணிந்து அன்பு செலுத்துதல் என்பதாகிய ஒரு நிலை நெஞ்சு முழுவதையும் பற்றிக்கொள்ள வேண்டும். அரைகுறை மனத்துடன் வழிபாடு செய்தல் முதலியன கூடாது.

ஆசிரியன் எவை எவைகளை விரும்புகின்றானோ அல்லது என்ன செயல் ஆசிரியனுக்கு உவப்புத் தருகின்ற செயலோ, அச் செயலைச் செய்து பயன் நன்மதிப்பைப் பெறவேண்டும்.

இங்கே ஓர் எல்லை வகுக்கப் பெறுகிறது. ஆசிரியர் விரும்பும் எல்லாவற்றையும் மாணாக்கன் செய்து முடிக்க வேண்டும் என்று கொள்ளலாகாது. ஆசிரியன் விரும்புவன அற வழிக்கு ஏற்புடை யனவாக இருந்தால் மட்டுமே ஏற்றுச் செயலாற்றலாம். அறக் கொள்கைக்கு மாறானவைகளை ஆசிரியன் விரும்புகிறான் என்ப தற்காகச் செய்ய முற்படுதல் கூடாது. இங்கேயே ஆசிரியன் வழிபடுதல் என்றால் என்ன என்பதற்கும் விளக்கம் தரப் பெறுகிறது. அறத்துக்கு முரண்படாதவையாய் ஆசிரியன்விரும்பும் செயல்களைச் செய்தல் என்பதே வழிபாடு. காலையிலும் மாலை

யிலும் ஆசிரியனை அபிஷேகம் செய்து பூசை செய்தல் வழிபாடு அன்று. அறத்தோடு இணைந்தவையாய் ஆசிரியன் விரும்பும் செயல்களை முடித்தல் அற வழியில் மாறாது நடத்தல் ஆகிய, எல்லாம் ஆசிரியனுக்குச் செய்யும் வழிபாடுதான் என்று விளக்கம் கூறப் பெறுகிறது.

மாணாக்கர்களின் மூவகை நிலைகள்

(1) முதல் மாணாக்கர் —தலை மாணாக்கர்: அன்னம், பசு ஆகியவைகளைப் போன்ற பண்பினர் முதல் மாணாக்கர். பாலையும் நீரையும் வேறு பிரித்தறிந்து,நீரை ஒதுக்கிப் பாலை மட்டுமே ஏற்று உண்ணும் அன்னத்தைப்போல எந்த ஒன்றிலும் கலந்திருக்கும் குணம், குற்றம் இரண்டையும் வேறாகப் பிரித்தறிந்து, பின் குணத்தை ஏற்றுக் குற்றத்தை விடும் இயல்பினர் முதல் மாணாக்கர்.

மேலும், ஆசிரியர் பாடம் சொல்லும்போது, விரைவாக எல்லாவற்றையும் ஏற்று, பின் தனித்திருந்து, முன் கேட்டவைகளை மீண்டும் நினைவிற் கொண்டுவந்து நிறுத்தி, அவைகளை ஆராய்ந்து உள்ளத்தில் அமைத்துக் கொள்ளுதல் மாட்டின் பண்பினை ஒத்தது.இரை கிடைத்த இடத்தில் மிகுதியாக அவைகளை மேய்ந்து உள்ளே ஏற்றுக்கொண்டுவிடும். பின்னர், தனியிடத்தேயிருந்து, முன் ஏற்றவைகளை மீண்டும் வாய்க்குக் கொண்டுவந்து நன்றாக மென்று அசைபோட்டுப் பின்னர் உள்ளே செலுத்தும் பசுவின் இந்த நிலை மாணாக்கன் கல்வியைப் பெற்று அமைத்துக் கொள்ளும் தன்மைக்கு ஒத்ததாகிறது. அன்னத்தின் பண்பையும் ஆவின் பண்பையும் ஒத்த பண்புடையவர் தலைமாணாக்கன்.

(2) இடை மாணாக்கர்: மண்ணையும் கிளியையும் போன்ற பண்புடையவர்கள் இடை மாணாக்கர்.உழவன் வருந்தி உழைத்த அளவுக்கு நிலம் பயன்தருதல்போல ஆசிரியன் எந்த அளவுக்கு உழைத்துப் பாடம் சொன்னானோ அந்த அளவுக்கு ஏற்ப அறிவுடையவராக இருப்பர். ஆசிரியன் உழைத்தால்தான் மாணாக்கன் அறிவு பெறும் நிலை உண்டாகும்.

கிளியானது சொல்லிக் கொடுத்த ஒன்றைத்தான் சொல்லும். தானாக எதையும் சிந்தித்துச் சொல்வதில்லை. அவ்வாறே ஆசிரியன் சொன்னவைகளைத்தான் சொல்லவோ தெரிந்து கொள்ளவோ அவனால் முடியும். ஆசிரியன் சொன்னதற்கு மேல் தன் சிந்தனையால் சிந்தித்து எதையும் செய்யவோ, தெரிந்து கொள்ளவோ இயலாதவன் இடை நிலை மாணாக்கன்.

(3) **கடை மாணாக்கன்:** கடை மாணாக்கர்களுக்கு உவமைகள் நான்கு. அவை பொத்தற் குடம், ஆடு, எருமை, பன்னாடை என்பன.

பொத்தற் குடம்: பெயரளவில் குடம். ஊற்றப்பெற்ற தண்ணீரை எல்லாம் வேறு வழியில் விட்டுவிடும். அவ்வாறே ஆசிரியன் சொல்லிக் கொடுத்த நூற் பொருளை எல்லாம் உடனே மறந்து போகின்றவன்

ஆடு: ஓர் இடத்தில் நிறைய புல், தழை முதலியன இருந்தும், கொஞ்சம் கடித்துத் தின்றுகொண்டே இருக்கும்போது வேறு இடத்தில் உள்ள தழைகளில் ஈடுபாடு கொண்டு அங்கே சென்று, அங்கேயும் இரண்டு இலைகளைக் கடித்தபின் வேறு இடம் செல்லும். அவ்வாறே தான் பாடம் கேட்கின்ற ஆசிரியன் நிறைந்த கல்வி அறிவு உடையவனாயிருந்தும், அவனை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளாமல், வேறொரு ஆசிரியனை நாடிச் சென்று அங்கேயும் தன் புலமையை நிறைவு செய்துகொள்ளாமல் வேறு ஆசிரியனை நாடிச் செல்வான். இது ஆட்டின் நிலை.

இவ்வாறு அக்காலத்தே உயர்கல்வியைப் பெற விரும்புபவன் தான் விரும்பிய ஆசிரியரை நாடிச் சென்று அக்கல்வியைப் பெறும் முறை இருந்தது என்பதை அறியலாம்.

எருமை: தண்ணீர் குடிக்க விரும்பிய எருமை குளத்தில் இறங்கி, அதனைக் கலக்கி, இறுதியில் சேற்று நீரைத்தான் குடிக்கும். அவ்வாறே சில மாணாக்கர்கள் பாடங்கேட்கச் சென்று, ஆசிரியனைப் பலவகைகளிலும் வருத்த முற்பட்டுவிடுவர். ஆசிரியன் வருத்தத்தோடு பாடம் சொல்லும் நிலையை உண்டாக்கி, வருத்தம் கலந்து சொன்ன பாடங்களையே ஏற்பர்.

நெய்யரி: பன்னாடை என்பது தென்னை, பனை முதலிய மரங்களில் இயல்பாக அமையும் சல்லடை போன்ற அமைப்புடைய ஒருவகை நார்.

பன்னாடையில் வடிகட்ட வேண்டும் என்று தேனோ, கள்ளோ ஊற்றப் பெற்றால் தேவையான தேனை விட்டு விட்டுத் தேவையற்றப் பொருள்களைப் பற்றி வைத்துக் கொண்டிருக்கும். அதுபோல ஆசிரியன் பாடம் சொல்லக் கேட்கும் மாணாக்கன் தேவையான செய்திகளை மறந்துவிட்டு, தேவையற்ற எடுத்துக்காட்டுக் கதைகள் முதலியவைகளை மட்டுமே நினைவில் வைத்துக் கொண்டிருப்பவர்கள்.

எனவே பொந்தற் குடம், ஆடு, எருமை, பன்னாடை போன்ற இயல்புடைய மாணாக்கர்கள் கடை மாணாக்கர்கள் ஆவர்.

முதல் மாணாக்கர், இடை மாணாக்கர், கடை மாணாக்கர் என்ற பிரிப்பு முறையை எடுத்துக்காட்டியதன் நோக்கம், முதல் மாணாக்கர் இயல்புகளை மாணாக்கர்களின் அற இயல் கொள்கை களாக ஏற்றுக் கொள்ள வேண்டும். மாணாக்கர்கள் இடை மாணாக்கர், கடை மாணாக்கர் பண்புகளை நீக்கி விடுதல் வேண்டும் என்று கொண்டு மாணாக்கர்களின் அறங்களைக் கடைப்பிடித்து முதன்மை மாணாக்கர்களாகத் திகழ வேண்டும்

முடிவுரை

வாழ்வியல் தொண்டுசார் அறங்கள் (professional ethics) என்ற இத்தலைப்பில் தொண்டுக்கும் தொழிலுக்கும் உரிய வேறுபாடு உணர்த்தப் பெற்றது. மருத்துவம், நீதி, கல்வி ஆகிய மூன்று துறைகள் மட்டுமே எடுத்துக் கொள்ளப் பெற்றன. மூன்று துறைத் தொண்டுகளால் உடல்வளம், அறிவுவளம், ஆன்மீகவளம் ஆகிய மூன்று வளமைகளைச் சமூகத்துக்கு இம் மூன்று துறை தொண்டர்கள் அளிப்பார்கள். சமூகம் இம் மூன்று வளங்களையும் ஏற்று, அவைகளின் கலப்பின் புதியதொரு சமூக நலத்துறை, தன் உறுப்பினர்களுக்குக் கைமாறாக வழங்கும்.

இவ்வாறு தனிமனிதர்கள் தம் தொண்டினால் சமூகத்துக்குக் கொடுத்துச் சமூகத்தை வாழவைக்கும் முயற்சியில் ஈடுபட, சமூகமும் அவ்வாறே தன் புதிய நலத்தை மூன்று தொண்டு களாலும் பெற்ற மூன்று நலன்களின் இணைப்பினால் எழுந்த ஒரு புதுமை நலத்தைத் தன் உறுப்பினர்களுக்கு வழங்கும். இந்த நிலையைத்தான் ஒத்த வாணிப நிலை என்பர். அல்லது கொடுத்துக் கொள்ளும் உரிமை என்பர்.

தனிமனிதன் சமூகத்துக்கு உழைக்க, சமூகம் தனிமனித வளர்ச்சிக்காகச் செயல்பட, இவ்வாறு இரண்டுமே பொதுநலக் கொள்கையை வளர்க்க உதவுகின்றன. இவ்வாறு தனிமனிதன் தன் எல்லாப் பகுதிகளாலும் நிறை நிலை எய்துதல் இத்தகைய இணைப்புகளாலும் இணைப்புச் செயல்களாலும் உண்டாகும் பயனாக அமைந்துவிடுகிறது.

(6) சமூக அறவியலில் உள்ள சீர்கேடுகள்

முன்னுரை

தனிமனிதர்கள் பலர் இணைந்து வாழும் அமைப்பே சமூகம் என்று விளக்கம் செய்யப் பெற்றது. 'சமூகம்' என்ற பெயரில் பலர் இணைந்து வாழ முற்படும்போது இணைந்து வாழ்வதற் குரிய நிலையில் சில விதிகளை அமைத்துக் கொள்ள வேண்டிய நிலை உண்டாகிறது. சமூக வாழ்வுக்குத் தேவையான விதிகளை எப்படி அமைப்பது? தனிமனிதர்களே கூடி அத்தகைய விதிகளை அமைக்கலாம். ஆனாலும் அவை அனைவருக்கும் பொருந்துவன வாக அமைய வேண்டும். அனைவருக்கும் பொருந்துவனவாக அமையும் விதிகள் என்றால் அவைகளை எப்படி அமைப்பது?

தனிமனிதர்கள் இணைய முற்பட்டமைக்கு ஒரு குறிக் கோள் இருந்திருக்க வேண்டும். அக்குறிக்கோள் இன்ப வாழ்வு. இன்ப வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்டுவிட்டால் அதற் கேற்ற நிலையில் அனைவரும் பணியேற்பதற்கு உரிய வகையில் விதிகள் அமையவேண்டும். அவ்வாறு சிந்தித்தால், மனித வாழ்வுக் குரிய முக்கியமான துறைகள் மூன்று எனக் கொள்ள முடிகிறது. வாழ்வியலுக்கு அடிப்படைத் துறைகள் இரண்டுதான். ஆனால் அவ்விரண்டு துறைகளையும் நெறிப்படுத்த வருவதே மூன்றாவது துறை.

(1) சமுதாயம் (2) பொருளாதாரம் (3) அரசியல் என அம்மூன்று துறைகள் அமைகின்றன.

சமுதாய நீதி, பொருளாதார நீதி, அரசியல் நீதி என அவை களை அமைத்துள்ளார்கள். தனிமனிதர்கள் இணைந்து வாழ வேண்டுமானால் ஏற்றத்தாழ்வுகள் இருக்கக்கூடாது. தனிமனிதர் களிடத்தில் எவ்வெத் துறைகளில் ஏற்றத் தாழ்வுகள் இருக் கின்றன? ஏற்றத்தாழ்வுகள் தனிமனிதரிடம் காணப் பெறுமே யானால் ஏற்றத்தாழ்வுகளுக்கு அப்பாற்பட்ட ஒரு நிலைமையை— ஏற்றத்தாழ்வுகளை இணைத்து நிற்கும் ஒரு நிலைமையை அமைத்தால்தான் சமூக இணைப்பு வாழ்வு உண்டாகும்.

தனிமனிதர்களிடம் வேறுபாடுகள் காணப் பெறுகின்றன. வேறுபாடுகளை ஏற்றுக்கொண்டால் இணைந்து வாழமுடியாது. வேறுபாடுகள் அமைந்தாலும் மனிதன் எனக் கருதுவது சம

நோக்கே. எனவே, அனைவரும் சமூகத்தின் உறுப்பினர்கள் என்ற வகையில் சமமானவர்களே. அனைவரும் சமநிலையுடையவர்கள் என்பது சமுதாய நீதியாக அமையும்.

அனைவரும் சமம் என்ற நிலை அமைந்தால் அனைவரும் இன்ப வாழ்வு வாழ்வதற்கு உரிய துணைப்பொருள்கள் தேவை. எனவே அடுத்த சிக்கல்,பொருளாதாரச் சிக்கல். பொருளாதாரத்திலும் தனிமனிதனிடம் வேறுபாடுகள் காணப்பெறுகின்றன. முன்னுள்ள வேறுபாடுகளைப் போன்றதல்ல இவ்வேறுபாடுகள். தனிமனிதனிடம் இயல்பாயமைந்த திறமை முதலியவைகளில் அமைந்த வேறுபாடுகளை நீக்க இயலாது. எனவே, அடிப்படை நிலையிலமைந்த வேறுபாடற்ற ஒன்றைச் சமநோக்கு எனக் கருதலாம் என்பது முடிவாயிற்று. ஆனால் இங்கே வேறுபாடுகளை நீக்கலாம். எனவே, இங்கும் ஒருவகைச் சமம் அமைக்க வேண்டிய நிலை வரும்போது, உணவு, உறையுள், உடை என்ற மூன்று அடிப்படைத் தேவைகளை அனைவரும் பெறச் செய்ய வேண்டும். இதுவே பொருளாதார நீதி என அமைக்கப்பெற்றது.

மேலே குறிப்பிடப்பெற்ற சமூக நீதி, பொருளாதார நீதி என்ற இரண்டையும் செயற்படுத்துதற்குத் தேவைப்படுவது அரசியல் நீதி. இம்மூன்றும் தன்னிறைவு பெற்ற நிலையில் அமைவதே 'சமூக அறம்' என்று கருதப்பெறுகிறது. அடிப்படைகளாக அமைந்த எந்த ஒன்றில் குறை ஏற்பட்டாலும் பொதுவாக 'சமூக அறம்' சீர்கெட்டுப் போகும். சமூக அறம் சீர்கெட்டால் சமுதாயமாக இணைந்த தனிமனிதனின் குறிக்கோளை அடைய முடியாமல், சமூக இணைப்பின் அடிப்படைத் தத்துவமே பாழ்பட்டுப் போகும்.

இவ்வகையில் மூவகை நீதிகளின் இணைப்பில் மலரும் 'சமூக அறம்' குலைந்து போவதற்குரிய குறைபாடுகளாக அமைபவை யாவை? அவை எவ்வாறு தோன்றுகின்றன? அவைகளை நீக்க வேண்டியதற்குரிய வழிவகைகள் யாவை? என்ற வினாக்களை நன்முறையில் விளங்கிக் கொள்ளவும் விடைகள் காணவும் வேண்டிய நிலையில் அமைந்த தலைப்பே 'சமூக அற இயலில் தோன்றும் சீர்கேடுகள்' என்பதாம். இரத்தல், செய்து கொண்ட உடன்பாட்டை முறித்துவிடுதல், இயற்கை உறவு உடன்பாட்டுக்குப் பொருளை முக்கியமாக்குதல், சமூக ஏற்றத் தாழ்வுகள், தற்கொலை செய்து கொள்ளுதல் என்ற ஐந்தும் சமூக அற இயலில் தோன்றும் சீர்கேடுகள் என ஆன்றோர்களால் ஏற்றுக்கொள்ளப் பெற்றவைகளாகக் கருதப் பெறுவன.

(6) (அ) இரத்தல்

'இரத்தல்' என்பது பொருளாதார நீதியைக் குலைக்கும் சீர்கேடு. சமூகத்தின் உறுப்பினர்களாகிய அனைத்துத் தனி மனிதர்களும் உயிர் வாழும் உரிமை பெற்றவர்களே. உயிர் வாழ்க்கைக்கு அவசியமான அடிப்படைத் தேவைகளைச் சமூக உறுப்பினர்கள் அனைவரும் பெறுதல் வேண்டும். உண்ண உணவு, உடுக்க உடை, குடியிருக்க வீடு ஆகிய மூன்றும் அனைவருக்கும் அளிக்கப்பட வேண்டிய பொருளாதார அடிப்படைத் தேவைகள். அவைகளை எந்த ஒரு தனிமனிதனும் பெறுவதற்கு வகை செய்யும் முறையில் அரசியல் நீதி அமையப் பெறல் வேண்டும்.

கொள்கையளவில் இதனை எல்லா நாடுகளும் ஒப்புகின்றன. ஆனால் இத்தகைய அடிப்படைத் தேவைகளை எல்லா நாடுகளும் தத்தம் குடிமக்களுக்கு வழங்கி, நிறைவு செய்துவிட்டதாகக் கூற இயலவில்லை. உலக நாடுகளின் நிலை எவ்வாறாக இருப்பினும் இந்திய நாட்டினைப் பொறுத்த வரையில் 'பிச்சையெடுத்தல்' என்ற நிலை இன்னும் நாம் கண் கூடாகப் பார்க்கும் சமூக அவல நிலையாகும்.

நல்குர

'பிச்சை யெடுத்தல்' என்பது பழிப்பதற்குரிய வெறுக்கத் தக்க நிலையே. ஆனால் சமூகத்தில் அன்று முதல் இன்று வரை முற்றாக நீக்கப் பெறாமல் இருந்துதான் வருகிறது. இரத்தல் கூடாது என்ற இழிவுபடப் பேசியும், அதை நீக்கப் பரிகாரம் தேடியும் என்றிவ்வாறான வகையில் சிந்தித்தும் செயல்பட்டும் வந்த சான்றோர்களெல்லாம் 'இரத்தல்' என்ற நிலை எப்படி தோன்றியது? என்ற வினாவுக்கு விடைகாண முற்படவும் செய்துள்ளார்கள். ஆனால் இரத்தலுக்குரிய உண்மைக் காரணம் எது என இன்னும் உறுதி செய்யப் பெறவில்லை.

'இல்லாமை' என்ற ஒரு காரணம் சொல்லப்பெறுகின்றது. 'இல்லாமை' என்பதற்கு மக்கள் வாழ்வுக்குத் தேவையான பொருள் இல்லாமை என்று விளக்கம் காணப்பெறுகின்றது. பொருள் இல்லாமை என்பதை மிக நுட்பமாக அணுகுகிறார் திருவள்ளுவர்.

பொருள் இல்லாமைதான் இரத்தலுக்குக் காரணம் என்பதாகக் கூறும் உரையைத் திருவள்ளுவர் மறுக்கிறார்.

'இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்'

என்பது திருக்குறள். நிலம் இல்லை; நிலம் இருந்தால் ஏதோ பிழைத்துக் கொள்வேன் என்று யாராவது கூறினால் அதற்கு நிலவுலகமே சிரிக்கும் என்று கூறுகிறார்.

''இரந்து வாழ்தல் ஒரு தொழில்; அது இறைவன் படைப்பினுள் ஒன்று'' என்பது ஒரு கொள்கை. இவ்வாறு ஒரு காரணம் சொல்லப் பெறுவன திருவள்ளுவர் கேள்விப்படுகிறார். 'அப்படி ஒரு படைப்பு இருக்கமுடியாது' என்பதை விளக்கு முகமாகவே,

'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்'

என்று குறிப்பிடுகிறார்.

இனி, துன்பத்துக்குக் காரணமாக 'நல்குரவு' என்ற ஒன்றைக் குறிப்பிடுகின்றார். அதற்கு 'வறுமை' என்று விளக்கம் கூறுவர். ஆனால் பிச்சை யெடுத்தலுக்குக் காரணமாகிய இல்லாமை என்பதை, 'நல்குரவு' என்ற சொல்லாற் குறிக்கவில்லை. நல்குரவு என்பதைத் துன்பம் என்கிறார். அது ஒரு வகை துய்க்க இயலாத நிலைமை என்கிறார், துய்க்க இயலாத நிலைமை என்பதை 'இன்மை' என்று சொல்கிறார். துய்க்க இயலாத நிலைமைக்குப் 'பொருள் இன்மை' என்பதே காரணம் என்று சொல்லவில்லை.

'வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது'

என்ற குறளால், கோடி கோடியாகத் தொகுத்து வைத்திருந்தும் கூடத் துய்ப்புத் தன்மை இல்லாமையாக ஆதலும் உண்டு என்றார்.

அடுத்து, இல்லாமைக்குக் காரணம் இன்னது எனத் திருவள்ளுவர் வெளிப்படையாகவே கூறுகிறார். இல்லாமைக்குக் காரணம் வருந்தி உழைக்காமையே,

'இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்'

இது 'தவம்' என்ற தலைப்பில் அமைக்கப் பெற்றுள்ளது. 'தவம்' என்பதற்குத் தம் கருமம் செய்வார் என்பதே பொருள். எனவே, நல்குரவு என்னும் இல்லாமையை இரத்தலுக்குக் காரணமாக ஆக்க முடியாது.

இரத்தலின் காரணம்

'இரத்தல்' என்பது எந்த வகையாலும் இரக்கப் படுதலுக்கு உரிய செயல் அன்று. உறுப்பு இல்லாமை, வலிமை

யுடன் உழைக்க இயலாமை முதலிய காரணங்களால் வறுமையுள்ளவர்கள் நாட்டில் உண்டு. அவர்கள் பசியால் துடிப்பார்கள்.

'இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு'

என்று அவர்கள் துன்பத்தைக் கண்டு கலங்குகிறார். இவர்களிடம் பொருள் இல்லை. பசியால் துன்பப்படுகிறார்கள். உண்மை; ஆனால், இவர்களுக்கு உள்ள இல்லாமை இவர்களைப் பிச்சை எடுக்க அனுமதிப்பதில்லை. இவர்களை அறிந்து இவர்களின் இயலாமைக்கு வருந்தி, இவர்கள் பசியைப் போக்குவது சமூகத்திலுள்ள எந்த ஓர் உறுப்பினனுக்கும் உரிய கடமை.

'ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந் நெறி வாழ்க்கை'

என்பது மணிமேகலை.

வெட்கமின்மையே இரத்தலுக்குக் காரணம்

'வெட்கம் இன்மையே' பிச்சையெடுத்தலுக்குக் காரணம். 'இரவு' என்ற அதிகாரத்தின் மூலமாகத் திருவள்ளுவர் அச்செயலை அனுமதிக்கவில்லை.

உயர்ந்த குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு பிச்சை கேட்டேன் என்று விளக்கம் சொல்வார் உண்டு என்றாலும் வழி தவறுடையதாகும்போது, உயர்ந்த குறிக்கோள் அதனால் அடையப்பெற முடியாது என்று திருவள்ளுவர் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.

ஆற்றா மாக்கள் இல்லறத்தாரை அடைந்து தம் உருவத்தைக் காட்டியோ, நிலையைக் கூறியோ கேட்க வேண்டியுள்ளது. இதனை 'இரத்தல்' என்பதாகக் கொள்ளக் கூடாது. உழைத்துச் சாப்பிட இயலாத நிலை. இனி முதுமையடைந்தவர்கள், தம் முதுமைக் காலத்தில் தம்மைக் காப்பாற்ற வேண்டியவர்கள் இறந்து போய்விட்டதாலோ, இல்லாமையாலோ உழைத்துச் சாப்பிட இயலாத நிலை. இவர்களைக் காப்பாற்றும் பணியை 'அரச நீதி' அமைத்துக் கொடுக்க வேண்டும். உடல் ஊனமுற்றவர்களுக்கும் வேலை கொடுத்து அவர்தம் வாழ்வுக்கு வழி செய்யலாம். மேலே சொல்லப் பெற்ற நிலைகளில் அடங்காதவர்கள் 'பிச்சை யெடுப்பது' குற்றம்.

பிச்சையெடுப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள் சமூகத்தின் புற்று நோய் போன்றவர்கள். சமுதாயத்தில் வருந்தி

உழைத்துச் சாப்பிடுபவர்களுக்கு மேலும் துன்பத்தை அளிப்பதற் காகவே சமூகத்தில் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள்.

பிச்சையெடுப்பவர்களைச் சமூகத்தில் அனுமதிப்பது எந்த வகையாலும் அறக் கொள்கையாகாது. அவர்கள் மனித இனத் தின் மேன்மையை—அறிவுடைமையை—முயற்சியை தன்னிலை யில் தலைமையாக நின்று, பிறருக்குக் கருவியாகப் பயன்படாத மனித குலத்தின் மாண்பினை இழிவுபடுத்திக் கொண்டிருப் பவர்கள். மனிதனை மட்டுமன்று; அறத்தை—கடவுளைக் குறைபடுத்துகிறார்கள்.

பிச்சை யெடுப்பவர்களுக்கு அவ்வப்போது ஏதேனும் கொடுத்து, அவர்களை ஊக்கப்படுத்துகிறவர்கள் குற்றவாளி களே. 'செய்தக்க அல்ல செயக் கெடும்' என்ற ஆணையின் வண்ணம் சமூகக் குற்றவாளிகள்.

இனி, 'ஈகை' என்ற பகுதியில் கூறப்பெறும் அறம் இவர்களை நோக்கியதன்று — உழைத்து உணவுண்ண இயலாதவர்களை நோக்கியது. அவர்கள் கேட்பது 'இரத்தல்' ஆகாது. வேறு தக்க சொல் இன்மையால் அதனையே உபயோகப்படுத்த வேண்டிய நிலை உள்ளது.

(6) (ஆ) மணமுறிவு

ஓர் ஆணும் ஒரு பெண்ணும் சிந்தித்துச் செயலாற்றும் திறமை வந்த பிறகு, நாங்கள் இருவரும் இணைந்து வாழ உடன் படுகிறோம் என்று கூறி ஒப்பந்தம் செய்து கொண்டபின் நாங்கள் எங்கள் ஒப்பந்தத்தை விலக்கிக் கொள்ளுகிறோம் என்று கூறி அத்தகைய விலக்கினைச் சட்டத்தின் மூலம் பெறுவதே 'மண முறிவு' என்பதாம்.

இந்திய நாட்டில் மிகமிக அண்மைக் காலத்தேதான், தகுந்த காரணம் இருபக்கங்களிலும் அமைந்திருக்குமானால் மண முறிவை அனுமதிக்கலாம் என்பது ஒப்புக்கொள்ளப் பெற்றது;

இந்திய நாட்டில் திருமணமானது சிலவகைச் சடங்குகளின் மூலம் தெய்வத் தன்மையுடையதாக அமைக்கப்பெற்றது என்ற கருத்து அணு அணுவாக மக்கள் மத்தியில் நிறுவப் பெறுகிறது. ஏழேழு பிறவிகளில் தொடர்ந்து வரும் அன்பின் காரணமாகவே இத் தொடர்பு அமைந்தது என்பன அடிக்கடி சமூகத்தில் அறிஞர் களால் கூறவும் எழுதவும் செய்த தொண்டினால் 'திருமண முறிவு' என்ற ஒன்றை வேண்டும் என்று கேட்டல், அதனை வழங்கு தல் என்ற செயல்கள் வளருதற்கு வாய்ப்பு இல்லாமல் அமைந்தன;

மணமுறிவைப் பற்றிய மூன்று கருத்துகள்

(1) பழைமைக் கொள்கையுடையவர்கள் மணமுறிவு என்ற ஒன்றைச் சட்டத்தின் துணையினால் அளிப்பது என்பது பொருந்தாதது. சமய சடங்குகளால் இணைத்து வைக்கப் பெற்ற உறவைச் சட்டத்தின் துணை கொண்டு மாற்ற முடியாது. சட்டம் மணமுறிவை அனுமதித்தாலும் மணமுறிவு பெற்றவர்கள் மீண்டும் மறுமணம் செய்து கொள்ள எந்த ஒரு சட்டமும் அனுமதி வழங்குவதில்லை. எனவே சட்டம் எப்படியாவது அவர்கள் இணைந்து வாழ்வதைத்தான் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்.

உலகக் கருத்துப் பரிமாற்றத்தோடு வளர்ந்து வரும் சமுதாய அமைப்பில் கணவனின் கொடுமைகளைச் சகித்துக் கொள்ளும் எல்லை மீறிய சகிப்பையும் எல்லை மீறிய கொடுமைச் செயல்களைச் செய்யும் கணவனின் ஆதிக்கத்தால் வரும் கொடுங்கோன்மைச் செயலையும் சமூக நல வாழ்வை எண்ணும்போது நீக்கவே வேண்டும். மேலும் கணவனின் தீயொழுக்கம், வன்மைச் செயல்களின் மத்தியில் குழந்தைகள் வளர்க்கப் பெறுமானால், அவைகளும் நாளடைவில் வன்மைச் செயல்களின் பிரதிபலிப்புகளாகவே மாறிவிடுவார்கள். எனவே, சமூக நலம் கருதும்போது கொடுமை வாழ்க்கையைச் சமூகத்தில் அனுமதிப்பதைவிட, கொடுமையினை நீக்கும் மணமுறிவை அளிப்பது நேர்மையானதே என்று பழைமைக் கொள்கையுடையவர்களின் கருத்துக்கு உரிய எதிர் விளக்கம் அளிக்கப் பெறுகிறது.

(2) சமூக முன்னேற்றக் கருத்துக் கொள்கையினர் மணத்தில் உறுப்பினர்களாகிய இருவரும் விரும்பினால் மணமுறிவை வழங்கவிட வேண்டும். பால் உறவின் அடிப்படையில் எழுவதாகிய இம்மணமுறிவு இருவரின் தனிப்பட்ட வாழ்வைச் சார்ந்தது. திருமணம் இருவருடைய அடிப்படைத் தேவையை நிறைவு செய்யத் தவறிவிட்டால் அதற்கு மணமுறிவைத் தவிர வேறு வழியில்லை. நிறைவு பெறமுடியாத திருமணம் அக்குடும்பத்தில் உள்ள அனைவருடைய ஒழுக்கக் கேடுகளுக்கும் காரணமாகிறது. எனவே இருவருடைய சம்மதத்தின்பேரில் மணமுறிவு அளிப்பது நீதித்தன்மையுடையதே.

திருமணம் செய்துகொண்ட இருவரும் சம்மதித்துவிட்டால் மணமுறிவு அளிப்பது என்பது எவ்வகையாலும் நீதித்தன்மையுடையதாகாது. பால் உறவுக்கு உறுதியளிக்கும் செயலே மணம்

என்பது பொருந்துவதன்று. ஒரு குறிப்பிட்ட காலம் வரை அது அமையலாம். பின்னர் மணமுறிவு நீடிப்பதற்குக் காரணம் வேறு பலவாக அமைந்த சமூகக் கடமைகள். மணமுறிவினால் விடுதலை பெற்ற ஆண்களோ பெண்களோ நிறைவாக வாழ்கிறார்கள் என்று சொல்ல இயலவில்லை. அவர்களின் குழந்தைகள் பொருளாதார வளம் குன்றிய காரணத்தால் பல உரிமைகளை இழக்க வேண்டியவர்களாகின்றனர். எனவே மணமுறிவு என்பது நீதித்துறை சார்ந்த நீதியே என்று கொள்வது இயலாது. இருவரும் ஒப்புதல் அளித்தல் என்பது பெரும்பாலான மணமுறிவு நிகழ்வுகளில், வன்மையின்மூலம் உண்டாக்கப் பெறுகிறது. மணமுறிவை விரும்பும் ஓர் ஆண் தம் மனைவியை வன்முறைகளின் மூலம் ஒப்புதல் அளிக்கச் செய்கிறான். அவ்வாறே பெண்களும். இருவரும் விரும்பி ஒப்புதல் தருதல் என்பது எந்த ஒரு மணமுறிவு நிகழ்விலும் அமைந்ததாகக் கொள்வதற்கில்லை.

(3) தற்சுதந்தரமான வாழ்வியற் கொள்கையுடையவர்கள் தவிர்க்க முடியாத காரணங்கள் வலிமையாக நிர்ப்பந்தம் செய்தால்தான் மணமுறிவை அளிக்க வேண்டும். சிலவகையான உடற்கூற்றுக் குறைபாடுகள் சில இயல்பூக்கக் கொடுமைகள் காரணமாக மணமுறிவு என்பது தவிர்க்கமுடியாத ஒன்றாகலாம். இருவரும் மணமுறிவு வேண்டும் என்று கேட்பதைவிட, அதை விடுத்து, சூழ்நிலை சாதகமாக அமையலாம் என்பதை எண்ணிச் சில காலம் பொறுமையோடிருப்பின், சூழ்நிலை மாற நேரலாம். திருமணம் என்பது ஏதோ உடலுறவு என்ற ஒன்றை மட்டுமே கொண்டு அமைக்கப் பெற்றதன்று. அதுவும் ஒரு காரணம் ஆகலாம். திருமணத்தால் 'குடும்பம்' என்ற ஒரு சமூக அறக் கோட்டம் அமைக்கப் பெறுகிறது. சமூக அறக்கோயிலை வெற்றுப் பாலுணர்வின் அடிப்படையை வைத்துத் தகர்த்து விடுதல் அறவழிப்பட்டதாகாது.

சமூக நிலையிலான பொதுமை அறத்தின் அடிப்படையில் எழுந்த அகக்குறளின் விளைவே திருமணம். திருமணம் மூலமாக தூயமையான பிழை நீங்கி, இன்றியமையாத நிலையில் இயைந்த சாதன்மையாக வாழ்வைப் பெறுவதே குறிக்கோள். எனவே, மணமுறிவு என்பன இக்குறிக்கோளின் அடிப்படையில் சிந்தித்து முடிவுசெய்ய வேண்டுமேயன்றி பாலுணர்ச்சி என்ற ஒன்றை மட்டுமே சார்ந்து முடிவு செய்து விடுதல் பிழையாகும்.

உலக அற இயற் சிந்தனையாளர்கள் கருத்து இவ்வாறு மூவரிசையில் நின்று மணமுறிவை ஆய்வு செய்திருக்கிறது.

தமிழகத்து அற இயற் கொள்கை மணமுறிவை எவ்வாறு சிந்தித் திருக்கிறது? என்பன காணலாம்.

தமிழகம் மணமுறிவை அனுமதித்திருக்கிறது. இந்திய நாடே அண்மையில்தான் மணமுறிவை அனுமதித்திருக்கிறது என்று வரலாற்று முறையில் ஒப்பும்போது, தமிழகம் மிக முற்பட்ட காலத்திலேயே மணமுறிவை அனுமதித்தது என்பது எவ்வாறு வரலாற்று முறையிற் பொருந்துவதாகும்.

குடும்பம் என்பதை ஒருவகை அறக்கோட்டம் என்றுதான் தமிழகம் அறிமுகப்படுத்துகிறது. குடும்பம் என்ற அறக் கோட்டம் இருவர் இணைந்து நின்று ஆற்றும் தொண்டுகளால் உருவாவது. 'வாழ்க்கைத் துணை' என்பது இருவருக்கும் ஒப்ப அமையும் ஒருவகைச் சமுதாயச் சம்நீதி உரிமை முறை. ஒரு கணவன் தன் மனைவியைத் தன்னுடைய வாழ்க்கைக்குத் துணை நிற்பவள் என நினைக்கலாம். அவ்வாறே மனைவிக்குரிய வாழ்க்கைக்குத் துணைநிற்பவன் கணவன். 'துணை' என்ற சொல் உயர்வு தாழ்வை அடிப்படையாகக் கொண்டு விளக்கப் பெறும் சொல் அன்று. குடும்பத்தில் இருவரும் மற்றவர்களின் நன்மைக் காகவே உழைக்கிறார்கள். எனவே, திருமணம் என்பது பிறர் நலத்தையும், பிறர்நலத்தோடு இணைந்த பொதுநலத்தையும் வளர்க்கும் தொண்டுகளாகிய அற இயல் கோட்பாடுகளைச் செயற்படுத்த அமைத்துக்கொள்ளப் பெற்ற ஒருவகை ஒப்பற்ற முறை. குடும்பத்தில் இருவருக்கும் மூன்று செயல்கள் உண்டு.

> 'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்'

என்பது குறள். தற்காத்தல் தன் நலமானது: தற்கொண்டான் பேணுதல் பிறர்நலம். தகைசான்ற சொற்காத்தல் பொதுமை நலம்.

தன் நலம் காரணமாக இருவரும் மணமுறிவு வேண்டும் என்று கேட்கலாம். மணமுறிவு தன் நலத்தைக் காக்கும் உரிமை என்பதாகலாம். ஆனால், திருமணம் மூன்று கொள்கைகளை உடன்கொண்டு அமைக்கப்பெற்ற ஒன்று, மூன்று கடமைகளை நிறைவேற்றுவதற்கு என அமைந்த ஒப்பந்தத்தை ஒரு கடமையை மட்டும் உடன்கொண்டு அளிக்கப் பெறும் மணமுறிவு உரிமை முழுமையான அறவழிப்பட்ட உரிமை எனக் கொள்ள முடியாது.

> 'அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
> துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
> விருந்துஎதிர் கோடலும் இழந்த என்னை'

என்று கண்ணகி கூறுகிறார். கோவலன் கண்ணகியைப் பிரிந்து மாதவியிடம் சென்று வாழ்ந்தமையால், கண்ணகி தன் நலத்தில் குறைவுற்றாள் என்ற ஒன்றுதானா இழப்பு! மாதவியோடு வாழ்ந்த காலத்தே கோவலன் இழந்தது என்ன? பாலுணர்வு அடிப்படையிலான தன் நலம் நிறைவு செய்யப்பெற்றதே! எனவே கோவலன் மாதவி வாழ்வில் தன்நலம் நிறைவுற்று வாழ்ந்தாலும்

'இகழ்வார்முன் ஏறுபோற் பீடு நடை.'

என்ற வாழ்வை மாதவியின் இணைப்பால் பெற முடியவில்லை. இருவரும் ஒருவருக்கொருவர் துணையாகச் செய்யப்பெறும் பிறர் நலத் தொண்டும் மேலும் பெற முடியவில்லை. அதற்கு மேல் பொதுநலத்தொண்டும் மேலும் பெற இயலவில்லை. எனவே திருமணம் என்பது தன் நலக்கூட்டு என்றாலும் பிறர் நலத்தையும் பொதுநலத்தையும், குறிக்கோள்களாகக் கொண்டு வளர்க்கும் தன் நலம் ஆகும். கோவலன் மாதவிகூட்டு, வாழ்ந்த காலம் வரையில் உயர்ந்த வாழ்க்கை என்றாலும் தன்நலம் இருந்தது. ஆனால் அத்தன்நல நிறைவு திருமணத்தால் அமைந்த தன்நல நிறைவு போன்றதன்று. முன்னது பிறர்நலத்தை, பொது நலத்தை உண்டாக்காத வெற்றுத் தன்நல நிறைவு. பின்னது பிறர்நல, பொதுநலங்களை உண்டாக்கும் தன்நல நிறைவு. தன்நல நிறைவு என்பது ஒரு குறிப்பிட்ட காலம் வரையில்தான். பின்னர் வாழும் வாழ்க்கையெல்லாம் பிறர்நலம், பொதுநல வளமைகளுக்காகவே.

தன்நல நிறைவு முடிவுறுங்காலம் வந்தபின் மாதவியோடு இணைய முடியவில்லை. தன்நல ஆட்சிக்காலம் வரையில் பிரிந்திருந்தாலும், பிறர்நல, பொதுநல ஆட்சிக்காலம் வரும் போது இணைந்துவிடும் நிலையே உண்டாகிவிட்டது கோவலனுக்கும் கண்ணகிக்கும்.

கண்ணகி பிரிந்திருந்தாலும், பிறர் நலமாகிய கோவலன் நலம் பேணினாள். பொதுநலம் பேண முடியவில்லையே என்பது தான் அவள் குறை.

இனி, தமிழகத்தில் மணமுறிவுக் கொள்கை எவ்வாறு அமைக்கப்பெறுகிறது?

'பர்த்தாவுக்கு ஏற்ற பதிவிரதை உண்டானால்
செத்தாலுங் கூடி யிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமா றாக இருப்பாளே யாமாகில்
கூறாமற் சந்நியாசம் கொள்'

என்பது தனிப்பாட்டு. ஔவையார் பாடினார் என்பது மரபு.

மணமுறிவை ஏற்றுக்கொண்டு, கணவனுக்கு வழங்கும் உரிமையை விளக்குவதுதான் இப்பாட்டு.

ஆனால் இப்பாட்டிற் குறிக்கப் பெறும் சந்நியாசம் என்பது வீட்டைத் துறந்து காட்டுக்கோ அல்லது வெளி நாட்டுக்கோ ஓடி விடுதலன்று, இல்லத்திலேயே தங்கியிருந்து கொண்டு தன்நலத் துய்ப்பை மாற்றிக்கொண்டு, பிறர் நலத்துக்காகவும் பொது நலத்துக்காகவும் பாடுபடுதல். ஒருகுறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு இயல்பாகவே அமையும் தன்நலத் துறவை — சந்நியாசத்தைச் சற்று முன்னாகவே ஏற்றுக்கொண்டுவிடுதல் என்ற அளவுக்குத் தான் 'மணமுறிவு' உரிமை நல்குவது.

தன்நலம் என்ற ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட மணமுறிவு அறிவாராய்ச்சி முறைக்கு ஏற்ப ஏற்புடையதே. பிறர் நலம், சமூக நலமாகிய பொது நலமாகிய குடும்பத்தை அழித்து விடும். நிலையை உட்கொண்ட 'மணமுறிவை' அளிப்பது அறமாகுமா? எனவே இரண்டையும் செயற்படுத்த இயலாத நிலை உண்டாகும் போதுதான் தமிழகம் இச்சிக்கலை மிகச் சிறப்பான முறையில் தீர்த்துவைக்கிறது.

குடும்பத்தின் அடிப்படையை உறுதியாக்கும் குறிக்கோள் ஒன்றுண்டு. அக்குறிக்கோளின் அடிப்படையில் 'மணமுறிவை' ஆராய்ந்தது தமிழகம்.

எடுத்துக்காட்டாக மூன்று வெவ்வேறு காலங்களில் அமைந்த மூன்று குடும்பங்களின் வரலாறு, மணமுறிவை வலியுறுத்தும் வாழ்க்கை முறைகள் மூன்றையும் இணைத்துச் சிந்திக்கவேண்டும்.

(1) சங்க காலத்தில் வையாவி கோப்பெரும் பேகன் தன் மனைவி 'கண்ணகி'யானவளைத் துறந்து சென்று பொது மகளிர்பால் நலம் தேரயும் வாழ்க்கையை நடத்தினான். கூட்டுறவு முறிந்துவிட்டது. பேகன் மனைவி கண்ணகி மண முறிவை நாடவில்லை. சான்றோர்கள் துணையால் குறைநீக்கம் செய்து, இணைந்த வாழ்வை ஏற்படுத்த விரும்பினாள், செய லாற்றினாள்.

(2) கோவலன் கண்ணகி வாழ்க்கையில் கோவலன் பேகனைப் போலவே மாதவியைச் சார்ந்து ஒழுகினான். மணமுறிவைச் சாதக மாக்கும் வாழ்க்கைதான். தெய்வம் நோக்கி வரம் பேணி, மண முறிவு இல்லாமல் இல்லற வாழ்வைச் சரி செய்யலாம் என்ற வழிமுறை சொல்லப்பெறுகிறது. இதற்குக் கண்ணகி அளித்த விடை இதுதான். 'பெருமை அன்று' (பீடன்று) என்று சுருக்க

மாகச் சொல்லிவிட்டாள். கோவலனோடு மீண்டும் இணைந்த வாழ்வைப் பெறுதல் 'பெருமை அன்று' என்று கொள்வதா? 'பெருமை அன்று, என்பது எதனை—எக்குறிக்கோளை உடன் கொண்டது? பேகன் மனைவி கண்ணகி மேற் கொ ண் ட வழி முறை தானே. பேகன் மனைவி கண்ணகி இது அறமானது என்று எண்ணி உடன்பட்ட ஒரு வழியைக் கோவலன் மனைவி கண்ணகி 'பெருமை அன்று' என்று கூறுவதன் பொருள் என்ன?

(3) திருநீலகண்டர் குடும்பம் பக்தி வழிபட்ட குடும்பம். திருநீலகண்டர் பொதுமகளிர்பால் புறவொழுக்கம் கொண்டார். மேலே சொன்ன இரு குடும்பங்களில் அமையாத வாய்ப்பு ஒன்று திருநீலகண்டர் வாழ்க்கையில் அமைகிறது. திருநீலகண்டர் பொதுமகள்பால் இன்பந்துய்த்தபின் இல்லத்துக்கு வருகிறார். திருநீலகண்டரின் மனைவியார், கணவனைத் திருத்தும் முயற்சியில் 'எம்மைத் தீண்டற்க' என்று கூறி விடுகிறார். சுருங்கக் கூறின் இருவரும் மனம் ஒப்பி மண முறிவைப் பெற்றுவிட்ட நிலையே திருநீலகண்டர் குடும்ப நிலை என்று கூறலாம்.

முன்னைய இருவரும் 'மணமுறிவை' விரும்பவில்லை. இணைந்து வாழ முயற்சி செய்தாள் ஒருத்தி. அத்தகைய முயற்சியையும் 'பெருமை அன்று' என்றாள் இன்னொருத்தி. ஒரே சிக்கலை அடிப்படையாகக் கொண்ட மூன்று குடும்பங்கள். இம்மூன்றன் அடிப்படையில் சமூக நலம் பேணும் அடிப்படை உண்மை ஒன்று புதைந்து கிடக்கின்றது. அதனைக் கண்ணகியின் வாக்குத்தான் வெளிப்படுத்தி நிறுத்துகிறது.

குடும்பம் அறக்கோட்டமாக அமையவேண்டுமானால் அதற்குரிய அடிப்படை அறம், ஒரே நல்லறம் 'மறை பிறரறியாமை'.

குடும்பத்தின் இரண்டு உறுப்புகள் பிளவுபட்டு விட்டன. பிளவு நேர்ந்தது உண்மை. குடும்பத்தின் பிளவு என்பது குடும்பக் குறை. அது பிறருக்குத் தெரிய வருமேல், அது குடும்பமாகிய அறக்கோட்டத்தை அழிக்கும் என்பது மட்டுமன்று, சமூகக் கட்டுக்கோப்பையே அழித்துவிடும். சமூகவிரோத ஆற்றல்கள் குடும்பக் குறையை அடிப்படையாக நிறுத்தியே செயல்படத் தொடங்கிவிடுகின்றன.

பேகனுக்கும் கண்ணகிக்கும் உறவில் பிளவு என்பது அனைவர்க்கும் தெரிந்துவிட்டது. கோவலனுக்கும் கண்ணகிக்கும் உள்ள உறவில் பிளவு தோழிக்குத் தெரிந்துவிட்டது. ஆனால்,

கோயிலில் சென்று இறைவன் முன்னிலையில் அல்லது காமன் முன்னிலையில் அல்லது பொதுவிடத்தில் கணவனுக்கும் தனக்கும் உள்ள உறவின் முறிவை வெளிப்படுத்துதல் குடும்பமாகிய அறக்கோட்டத்தை அழித்துவிடும். அத்தகைய பெருமை அழிக்கும் செயலை யான் செய்யேன் என்று கூறுகிறாள்.

திருநீலகண்ட நாயனார் வாழ்வில் திருநீலகண்டரோ அவர் மனைவியோ தங்களுள் தோன்றிய பிளவைத் தங்கள் தெய்வத் திடம்கூட வெளிப்படுத்தவில்லை. என்றாலும், மனமுறிவைப் பெற்று வாழும் குடும்பம் இது என்பதைச் சமூகம் அல்லது அண்டை வீடு அறியாமலேயே நடைமுறைப்படுத்தி வாழும் குடும்பம் திருநீலகண்டர் குடும்பம்.

குடும்பத்தில் பிளவு, மனக்குறை போன்றவைகள் பிறரறி யாத வகையில் உள்ளமைத்துக் கொண்டு வாழ வேண்டும் என்பதே குடும்ப அறக்கோட்டத்தின் ஆணிவேர். மணமுறிவாற் பெறும் உரிமை என்ன? ஒருவர் ஒருவரைத் தீண்டாமை. தன் நலம் என்ற உடலுறவு இல்லாமை. ஆனால் அந்த ஒன்றை நீக்கிய வேறு பல பேறுகளை நாம் உண்டாக்கிக் கொள்ள வேண்டுமே. இதுவே திருநீலகண்டர் மேற்கொண்ட குடும்பநிலை. குடும்பத்தில் பிளவு என்பது கணவன் அல்லது மனைவி ஆகி யோரின் உள்ளத்தில் விளங்கும் இறைவனுக்குங்கூட வெளிப்படுத் தாமல் மறைத்துவைத்து ஒழுக வேண்டிய ஒன்று என்பதை இருவரும் உணர வேண்டும்.

உடலுறவு போன்ற சிறுசிறு தன்னலத் துறப்பே சந்நியாசம் என்று சொல்லப்பெறுவது. அதனை மேற்கொண்டு குடும்பத்தில் தங்கி, பிறர்நலத்துக்கும் பொதுநலத்துக்கும் பாடுபடவேண்டும். சந்நியாசம் கொண்டு கணவன் காட்டுக்குப் போய்விட்டால் மனைவி தனித்திருக்கிறாள். மணமுறிவு நேர்ந்த, மனம் உடைய வள் என்ற குறையை ஆதரவாகக் கொண்டு சமூக நல எதிர்ப்புச் சக்திகள் தம் பணியைத் தொடங்கிவிடும். எனவே, மனத்தில் துற வொழுக்கத்தை அமைத்துக் கொண்டு இல்லம் சார்ந்து பணி யாற்ற வேண்டும். தமக்குள் அமைந்த பிளவு ஒருசிறிதும் வெளிப் படாதவாறு இணைந்து ஒழுகும் முறையை அமைத்துக்கொள்ள வேண்டும்.

பிளவை வெளிக்காட்டாமல், மனம் ஒத்த இணைப்பை விளக்கிக் கொண்டு, ஆனால் பிறருக்குச் சிறிதும் வெளிப்படாத வகையில் மனப்பிளவை மறைத்து, பிறர் நலத்துக்கும் சமூக நலத்துக்கும் வளம் உண்டாக்கும் வகையில் வாழ வேண்டும்.

இதுவே தமிழகம் தேர்ந்த உண்மையான 'மணமுறிவு' என்பதாகும்.

'மணமுறிவு' என்ற ஒன்றை அடிப்படையாக வைத்துப் பல வகையான கடமைகளிலிருந்து சாமர்த்தியமாகத் தம்மை விலக்கிக்கொண்டு விடுதல் என்பதற்கு இடம் கொடாமல், சமூக நலம் அழிக்கும் சமூகநல விரோத சக்திகள் குடும்பத்தின் அடிப்படை உறவில் உள்ள பிளவை அடிப்படையாகக் கொண்டே செயல்படத் தொடங்குகின்றன. ஆதலின், அத்தகைய சமூக நல அழிவுக்கு இடம் கொடாமல் பிளவினால் நேர்ந்த இடை வெளியை, சட்டத்தின் பிடியில் உண்மை இடை வெளியாகவே அமைத்துக் கொண்டு, அதே குடும்பத்தில் வாழ்ந்து பிறர் நன்மையையும் பொது நன்மையையும் இணைத்துக் காத்துத் தொண்டாற்றும் வகையில் 'மணமுறிவை' ஒருவகையில் நியதி யுடன் கூடிய மணமுறிவாக அமைத்து இச்சிக்கலைத் தீர்த்திருக் கிறது தமிழகம் எனக் கொள்ளுதல் வேண்டும்.

(6) (இ) மணமகனுக்குக் காணிக்கை — வரதட்சணை

திருமகளே திருமணத்துக்கு உரியவள்

'குடும்பம்' என்ற முதன்மை அறக்கோட்டத்தை அமைக்க முற்படும்போது அதற்கு இருவர் இணைந்து செயலாற்ற வேண்டிய இன்றியமையாமை உண்டாகிறது. ஆணும் பெண்ணும் இணைய வேண்டும்; இணைந்து தொண்டாற்ற வேண்டும் என்ற நிலை தோன்றும்போது ஓர் ஆண் பெண்ணின் தேவையை உடையவனாகிறான். ஒரு பெண் ஆணின் தேவையை உடையவ ளாகிறாள். இவ்விருவரது தேவைகள் நிறைவு செய்யப்பெறும் வகையில் பெண்ணானவள் ஓர் ஆணைத் தேவையாகக் கொள்வதற்காக, அந்த ஆண் விலைப்பொருள் கேட்கிறான். எனவே, ஆணுக்குப் பணம் கொடுத்து, அவனை முதன்முதல் உரிமையாகப் பெற்று, அவனைத் துணையாகப் பெற்று வாழ்வது. எனவே ஒரு பெண் ஓர் ஆணைப் பொருள் கொடுத்து அவனைத் தனக்கு உரிமையாக ஆக்கிக் கொண்டு, பின்னர் அவனைத் திரு மணம் செய்து கொண்டு, சமூக உறவை அமைத்துக் கொள்வது. இது திருமணத்தில் பெண் வீட்டார் மணமகனுக்குப் பொருள் அளிக்கும் சமூக வழக்கத்துக்கு அளிக்கப் பெறும் ஒருவகை விளக்கம். சுருங்கக் கூறின் பெண் ஆணை விலைக்கு வாங்கும் முறை.

வேறு ஒருவகை விளக்கம் உண்டு. பெண்ணானவள் தன்னியல்பால் பொருளாதார உரிமையைப் பெறாதவள்.

திருமணத்தில் ஆணும் பெண்ணும் சமநிலை பெறவேண்டும் என்றால் பெண் பொருளாதார வளம் பெறவேண்டும். அவள் திருமணம் என்ற சமூக சமத்துவ உரிமையைப் பெற வேண்டுமானால் வெறும் மகளாக இல்லாமல் திருமணத்துக்காகத் தன்னைத் திருமகளாக அமைத்துக்கொள்ள வேண்டும். இதனை 'ஸ்ரீ தனம்' என்பர். ஸ்ரீ—பெண், தனம்—செல்வம். தமிழில் திருவும் மகளும் இணைந்த திருமகள் ஆகவேண்டும். எனவே, பெற்றோர்கள் பெண்ணோடு பொருளையும் இணைத்து உரிமையாக்கி விடவேண்டும் என்பது பொருளாதார சமத்துவ நிலையை உடன்கொண்டு விளக்க முற்படும் கருத்து. இவ் வகையில் ஒரு பெண் சமூக சம அந்தஸ்தைப் பெற வேண்டுமானால் பொருளாதார சமத்துவத்தைப் பெறவேண்டும். எனவே, திருமகளே திருமணத்துக்கு உரியவள் என்பது முறை.

இந்திய நாட்டில் பெண் வீட்டாரிடமிருந்து மணமகன் வீட்டார் பெருந்தொகையான பொருளை வரதட்சணையாக எதிர்பார்க்கிறார்கள். வரதட்சணை வாங்குவது என்ற கொடுமை வெகுவேகமாகப் பரவிவருகின்ற சமூகக் கொடுமையாக இன்று எல்லோராலும் கண்டிக்கப் பெறுகிறது. வரதட்சணை வாங்கலாகாது என்ற கருத்தைச் சட்டமாக ஆக்கி சட்டத்தின் வழியில் இக்கொடுமையை நீக்கலாம் என முயற்சி அமைக்கப்பெறுகிறது. பல பெண்கள் திருமணம் ஆகாமல் இருப்பதற்கு வரதட்சணைக் கொடுமையே காரணம். ஒத்துக் கொண்ட அளவுக்கு வரதட்சணை கொடுக்க இயலாத காரணத்தால் திருமணம் ஆன பிறகுங்கூட, பெண்கள் கொடுமைப் படுத்தப்படுகிறார்கள். கொடுமை தாங்காத பெண்கள் தற் கொலை செய்து கொள்கிறார்கள்.

வரதட்சணை அமைமபைப் பற்றிய விளக்கம்

மாப்பிள்ளையைச் சார்ந்தவர்கள் மணப்பெண் வீட்டாரிட மிருந்து பெரும் பொருளை வரதட்சணையாகக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்கிறார்கள். இதுவே வரதட்சணை முறை என்று விளக்கப் பெறுகிறது. வரதட்சணையின் அமைப்பு முறையை நோக்குதல் வேண்டும்.

மணமகனுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு பொருள் கொடுத்து அவனைப் பெண்ணுக்கு உரிமையுடையவனாக ஆக்குவது என்ற முறை மெல்ல வளர்ந்து இந்த அளவில் மிகப் பயங்கரமான கொடுமையாக நின்றிருக்கிறது. வரதட்சணை அமைந்த முறையை அவ்வாறே இன்று செயற்படுத்த முற்பட்டால் வரதட்சணைக் கொடுமை மிக விரைவில் மறைந்துவிடும்.

வரதட்சணைக் கொடுமை பற்றி, மகளிர் ஆண்டு கொண்டாடப் பெற்ற காலத்தே உலக அரங்கில் மகளிர் பிரதிநிதிகள் பலவாறான கோணங்களில் ஆராய்ந்து, சமூக உறுப்பினர்களாகிய அனைத்துத் தனிமனிதர்களும் முயன்று இக் கொடுமையை அகற்றப் பாடுபடவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மணமாகாத ஆண்களெல்லாம் வரதட்சணை வாங்காமல் திருமணம் செய்து கொள்வோம் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் பெற்றிருக்கின்றார்கள்.

முதலில், வரதட்சணை அமைப்பானது.தோன்றி வளர்ந்த முறையைத் தெரிந்து கொள்வதற்குச் சில மரபு வழிக் கொள்கைகளை நாம் கவனித்தல் வேண்டும்; தமிழகத்தில் அமைந்துள்ள சில பழைமையான இலக்கியச் சான்றுகளைக் கொண்டு இதனை ஆராயலாம்.

தமிழகத்தில் பொருளாதார சமநிலை சமுதாய நீதி ஏற்றுக் கொள்ளப்பட்டும் செயல் முறைப்படுத்தப்பட்டும் அமைந்திருந்ததனாற்போலும், தலைவனும் தலைவியும் ஒத்த நிலையில் அமைந்துள்ளமை பேசப்பெறுகின்றது. ஒப்பினது வகைகளுள் திரு (செல்வம்) வினால் ஒத்து இருத்தலும் ஒன்று. ஆயினும் வரைவு இடை வைத்துப் பொருள் 'பயிற்—பிரிதல்' என்ற மரபு பேசப்பெறுகிறது. தலைவன் இயல்பாகவே பெருஞ்செல்வனாக இருப்பவனேயாயினும், திருமணங் காரணமாக இரண்டு திங்கள் வெளியூர் சென்று முயன்று பொருள் சேகரித்து வருதல் வேண்டும் என்று ஒரு மரபை அமைத்ததன் நோக்கம் மரபு வழிப்பட்ட பெருஞ்செல்வம் இருப்பினும் திருமண நிகழ்ச்சிக்கு அதனைப் பயன்படுத்தலாகாது என்ற கொள்கை நடைமுறைப்படுத்தப் பெற்று வந்துள்ளது. மேலும், திருமண நிகழ்ச்சியில் தலைவன் தன் முயற்சியில் தானே பொருள் சேகரித்துக் கொண்டு வந்து தான் இந்நிகழ்ச்சியை நடத்துதல் வேணடும் என்ற செயல் முறையும் இருந்தது என்பன ஆராயும்போது மரபு வழிச் செல்வனாயினும், தன்னேரில்லாத் தலைவனாக இருப்பினும், தன் முயற்சியில் தானே செல்வத்தைத் தேடிச் சேர்க்கும் ஆற்றல் உடையவன் என்பதை உறுதிப்படுத்தும் வகையில், தலைவன் இரண்டு திங்கள் கால அளவுக்குத் திருமணத்துக்கு வேண்டிய பொருளைச் சேகரித்து வரவேண்டும் என வகுத்தார்கள் எனக் கொள்ளலாம். தலைவனைப் போலவே தலைவியும் நேரொத்தவளாதலின் திருமணத்துக்காகச் சென்று பொருளீட்டி வரவேண்டிய அமைப்பைச் சான்றோர்கள் உண்டாக்கவில்லை. பொருளாதார

சமநிலைச் சமுதாயம் அமைந்திருந்த காலத்தும், பொருளைத் தேடி உழைப்பதும், தேடிய பொருளால் சில சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்துவதும் ஆடவர் பகுதிச் செயலாகவே அமைந்திருந்தது எனக் கொள்ளவேண்டும்.

தமிழகத்துச் சிந்தனையில் பெண் வீட்டாரிடமிருந்து பெறும் பொருளாக எதையும் திருமண நிகழ்ச்சியில் காண இயலவில்லை. இனி, இந்தியா முழுவதிலும் பரவிய திருமண முறைகளாகிய எட்டனுள் சில மணமுறைகள் தரப்பெறுகின்றன.

பிரமம் : ஒத்த கோத்திரத்தானாய் நாற்பத்தெட்டு ஆண்டு பிரமசரியம் காத்தவனுக்குப் பன்னீராட்டைப் பருவத்தவளாய்ப் பூப்பு எய்தியவளை பெயர்த்து இரண்டாம் பூப்பு எய்தாமை அணிகலன் அணிந்து தானமாகக் கொடுப்பது. இம்மணத்தில் கன்னியைத் தானமாகக் கொடுக்கும் நிலை அனுமதிக்கப் பெறுகிறது. கன்னியைக் கொடுக்கும்போது அணிகலன் அணிந்து கொடுக்கிறார்கள். கன்னியைத் தானமாகக் கொடுக்கும்போது அப்பெண் ஒரு பொருளெனக் கருதப்பெறும் நிலை உண்டாகிறது.

பிரசாபத்தியம் : மகள் கொள்ளுதற்குரிய கோத்திரத்தார் 'மகளை வேண்டிய வழி,இருமுது குரவரும் இயைந்துகொடுப்பது' இவ்வாறு விளக்கம் எழுதினார் தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணர். ஆனால் நச்சினார்க்கினியர் இதே திருமணத்தை 'மகள் கொள்ளுதற்கு உரிய கோத்திரத்தார் கொடுத்த பரிசத்து இரட்டி தம்மகட்கு ஈந்து கொடுப்பது' என்று விளக்குகிறார்.

இம்மணத்திற்குக் 'கோத்திரம்' அடிப்படை என்பதை இருவரும் ஒப்புகின்றனர். ஆயினும், மணமகன் வீட்டார்தான் பெண் வீட்டிற்குப் பெண் வேண்டும் என்று வந்து கேட்க வேண்டும். எனவே, மணமகன் நிலையைவிட, மணமகள் நிலை சற்று உயர்வுடையதாக அமைக்கப் பெறுகிறது. எனவே, பெண்வீட்டார் மணமகனைத் தேடி அலையும் நிலை இல்லை. மணமகன் வீட்டார்தான் மணமகளைத் தேடிச்சென்று பெறவேண்டும் எனத் தெரிகிறது. இதனை இரண்டு உரையாசிரியர்களும் ஒப்புகின்றனர். ஆனால், இளம்பூரணர் சொன்னதற்குமேல் ஒரு செய்தியை நச்சினார்க்கினியர் சேர்த்துச் சொல்கிறார்.

கோத்திர அடிப்படையில் மகளைத் தேடி வருகின்ற மகன் வீட்டார், மகளுக்காக-பெண்ணுக்காகப் பரிசம் (விலைபொருள்)

கொடுப்பர். பெண்ணுக்காக எவ்வளவு தொகை கொடுக்கப் பெற்றதோ அத்தொகையைப் போல் இரண்டு பங்குக் கொடுப் பான் பெண்ணின் தந்தை. ஆனால், இரண்டு பங்குத் தொகையை மணமகனுக்குக் கொடுக்கமாட்டான். இரண்டு பங்குத் தொகை யைத் தன் பெண்ணிடம் தந்து அனுப்பிவிடுவான். எனவே, இம் மணத்தில் மணமகன், மணமகளுக்காகப் பரிசம் எனப் பொருள் கொடுப்பான். ஆனால், அதைப்போல் இரண்டு பங்கு தந்து பெண்ணை அனுப்புவதன் குறிக்கோள் 'பெண் உயர்ந்தவள்' என்பதை நிலைநாட்டவே. இம்மணத்தில் தானம் செய்து பெண்ணைக் கொடுத்தல் பேசப்பெறவில்லை.

ஆரிடம்: 'ஒன்றோ இரண்டோ பசுவும் காளையும் வாங்கிக் கொண்டு தக்கான் ஒருவனுக்குப் பெண்ணைக் கொடுப்பது' இவ்வாறு இளம்பூரணர் விளக்குகிறார். பசுவையும் காளையை யும் வாங்கிக்கொண்டு கொடுப்பது எனக் கூறினாரேயன்றி, தான மாகக் கொடுப்பது எனக் குறிப்பிடவில்லை. இளம்பூரணர் கருத்தின்படி இம்மணத்திலும் மணமகன் வீட்டார் பசுவையோ காளையையோ கொடுத்துவிட்டுத்தான் மணப்பெண்ணை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இளம்பூரணர் கருத்துப்படி ஆரிட மணம் மணப்பெண் பெருமையையே வலியுறுத்துவதாகிறது.

ஆனால் நச்சினார்க்கினியர் ஆரிடமணத்தைவிளக்கும்போது மணமகன் வீட்டாரை உயர்வுபடுத்துவதாக அமைகிறது. அவர் கருத்துப்படி ஆரிட மணம், பெண்ணைத் தானமாகக் கொடுக்கும் மணமே. அத்துடன் பெண்ணின் தந்தை பசுவையும் காளையை யும் நிறுத்தி, அவற்றின் கொம்புகளையும் குளம்புகளையும் பொன் கொம்புகள், பொன் குளம்புகள் உடையவைகளாக அமைத்து அவைகளின் உடம்பிலும் பொன்னை அணியச்செய்து, இவைகளைப்போல் நீங்களும் பொன் மயமாக விளங்குங்கள் என வாழ்த்திக் கொடுப்பதாக அமைகிறது. ஆசி கூறி அனுப்பி வைக்கும்போக்கில் விளக்கிக்கூறியிருந்தாலும் நச்சினார்க்கினியர் கருத்துப்படி ஆரிடம், பெண்மையைவிட ஆண்மையை உயர்வு படுத்தி அமைக்கும் திருமண முறை என்பதாகவே அமைகிறது. எனவே பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம் என்ற மூவகை மண முறைகளாலும் பெண்ணை ஒரு பொருளாக எண்ணித் தானம் செய்துகொடுத்தாலும், அன்பளிப்பு என்று கருதும்படியாகவோ ஆசி கூறுவது என்று கருதும்படியாகவோ அமைத்துக் காட்டி னாலும் பெண்ணைச் சார்ந்தவர்கள் மணமகனுக்குப் பொருள் கொடுக்கும் வழக்கத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதை அறியலாம்.

பெண்ணுக்குப் பொருளாதார சமநிலைச் சமூக நீதி அளிக்கப் பெறாமையால் சமூகத்தில் அத்தகையதகுதியைஅளித்த பிறகே திருமணம் செய்ய வேண்டிய நிலை உண்டாகிறது. எனவே, மணப்பெண் வீட்டார் பொருள் கொடுப்பதன் நோக்கம் ஆண்மகனுக்குரிய பொருளாதார சமநிலை சமூகத் தகுதியைப் பெண்ணுக்கும் அளித்தால்தான் ஒத்த நிலையிலான வாழ்வு அமையும் என்று விளக்கம் கூறுவது பொருந்துவதாக இல்லை. ஏனெனில், எங்கெங்கே பெண்ணின் தந்தை பொன்னையும் பொருளையும் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தப் பெறுகின்றதோ, அங்கெல்லாம், பெண்ணை ஒரு பொருளாக எண்ணித் தான் நீர் வார்த்துக் கொடுக்கும் முறை அமைந்துள்ளது. எனவே, பெண்ணுக்குப் பொருளாதார சமநிலை சமூக நீதியை ஒட்டிய தகுதியை உண்டாக்கவே, பொன்னும் பொருளும் கொடுக்க வேண்டும் என்பது வற்புறுத்தப் பெறுகிறது என்பது இவ்வகையில் எழும் ஆய்வுரை.

வரதட்சணை அமைப்பில் இணைத்து வைக்கப்பெற்ற கொள்கைகள்

வரதட்சணையைச் சமூக, பொருளாதார அமைப்பில் நின்று சிந்திக்கும் அறிஞர்கள், சமூகநலத் தொண்டர்கள் வரதட்சணை அமைப்பானது கொடுங்கோன்மைத் தன்மை வாய்ந்தது என விளக்குகிறார்கள். சமூக பொருளாதாரக் கொள்கைகளால் வரதட்சணை உருவாக்கப் பெறவில்லை. வரதட்சணையை உருவாக்கும் வேறுபல கொள்கைகளை இணைத்து ஆராய்ந்தால் தான் வரதட்சணையின் உண்மைப் போக்கை ஆராய்ந்தவர்களாவோம். வரதட்சணை முறையை உருவாக்கும் கொள்கைகளை ஆராய்ந்து, அக்கொள்கைகளை ஏற்பதா, இழப்பதா என்று ஆய்ந்து செயற்படுத்த முற்பட்டால் வரதட்சணையை அசைத்துப் பார்க்கும் ஆற்றல் அறிஞர்களுக்கு உண்டாகும்.

குடியானவர் ஒருவர் கோழி வளர்க்கிறார். கிராமத்தில் கோழிகளைக் கூண்டோடு அழிக்கும் கொள்ளைநோய் ஒன்று பரவுகிறது. கடவுள் பத்தியுடைய குடியானவர் முருகனுக்கு நேர்ந்து கொள்கிறார். இரண்டு கோழிகளை முருகா உன் சந்நிதியில் சேர்த்து விடுகிறேன்; கோழிக்கு நோய் தாக்காதிருக்க வேண்டும் என்பது அவருடைய நேர்த்தி. நோய் தாக்கவில்லை. குடியானவர் இரண்டு கோழிகளை நேர்த்திக் கடன் நிறைவேற்றும் மூலமாக முருகன் கோயிலுக்குக் கொண்டுபோய் விடுகிறார். அங்கே ஒரு சிக்கல் உண்டாகிறது. கோயில் நிருவாக அதிகாரி கேட்கிறார் 'கோழிகளை நீங்கள் கொண்டுவந்து விட்டு விட்டால் நாங்கள் அவைகளை என்ன செய்வது? வளர்ப்பதா? யாருக்காவது விற்றுவிடுவதா? பலரும் இவ்வாறே வேண்டிக்

கொண்டு சுமார் நூறு கோழிகள் வந்துவிட்டன. இவைகளை என்ன செய்வது?' இது நிருவாக அதிகாரிக்கு எழும் சிக்கல், குடியானவர் கூறுகிறார் யான் நேர்ந்து கொண்டது இரண்டு கோழி கொடுப்பது என்பதுதான். அதை நான் நிறைவேற்றி விட்டேன் என்று சொல்வதோடு தன் கடமையை முடித்துக் கொண்டு விடுகிறார்.

இவ்வாறே, ஒரு செயலைச் சமூகத்தில் ஒருவர் செய்ய முற்படும்போது, அச்செயல் சமூக அமைப்பில் யார் யாருக்கு என்னென்ன பின் விளைவுகளை உண்டாக்குகின்றன என்பவை களையும் சிந்தித்தல் வேண்டும்.

இயற்கையின் அமைந்த பால் உறவுப் படிமுறை வளர்ச்சியில் ஆணும் பெண்ணும் இணைந்து நின்று உறவு கொள்ளல் இயற்கையானது. தனிமனிதர்கள் பலர் இணைந்து வாழ வேண்டிய அமைப்பை உடன்கொண்ட சமூகப் பொதுமை நிலையில் அதன் உறுப்பினர்கள் பலரும் இணைந்து வாழ்வதற்கு சில பொது விதிகளை அமைத்துக் கொள்கிறார்கள். ஓர் உறுப்பினர் இன்னோர் உறுப்பினரோடு இணைந்து நின்று ஓர் உறவை ஏற்படுத்திக் கொள்வது என்ற உறவுமுறைக் கொள்கை சார்ந்த விதிகளில் ஓர் ஆணும் பெண்ணும் இத்தகைய மண உறவு முறையை மேற்கொள்ளும்போது இருவருக்கும் சில ஒப்புமைத் தகுதிகள் இருக்க வேண்டும் என்பது இத்தகைய உறவு அழிந்து விடக்கூடாதே என்று கருதி, அவ்வுறவின் நன்மைக்காக அமைக்கப் பெறுகின்றன. சமூகத்தில் மண உறவு முறையை மேற்கொள்பவர்கள் பொருளாதார சமநிலைத் தகுதியில் ஒத்தவர்களாக அமைய வேண்டும் என்பது ஓர் அடிப்படை விதியாக அமைகிறது. ஒரு சமூகம் பெண்ணுக்கு வேறு, ஆணுக்கு வேறு என்ற நீதிகளை வகுத்துக்கொண்டு வாழும் சமூகமாக இருந்து அங்கே பெண்ணுக்குப் பொருளாதார சமநிலைத் தகுதி அமைத்துக் கொடுக்கவில்லையானால், பொருளாதார சமநிலைத் தகுதியைப் பெறாத பெண்ணை, அத்தகுதிப் பெற்ற ஆணுடன் இணைத்த உறவை அமைக்க முற்படும்போது பொருளாதாரத்தில் ஒத்த நிலை இருக்க வேண்டும் என்ற விதி குறுக்கிடுகிறது. பொருளாதார வேறுபாடுகளை உடன்கொண்ட இருவர் மண உறவு கொள்வதைச் சமூக விதி ஒத்துக் கொள்ளாத போது, பெண்ணைச் சார்ந்தவர் பெண்ணுக்குப் பொருளை வழங்கி ஆணோடு ஒத்த நிலையை உருவாக்கி, பின்னரே மண உறவை அமைக்க வேண்டியதாகிறது. இதுவும் வரதட்சணைக்கு வழிவகுப்பதே. ஆனால், சமூகமானது பெண்ணுக்குப் பொருளாதார சமநிலை விதியைச் சட்டத்தின் மூலம் செயல்

படுத்தி விடுமானால் ஆணுக்குள்ள பொருளாதார சமநிலைச சமூக நீதி பெண்ணுக்கும் உண்டு என்பதாகிறது. அந்த நிலை உருவாகிவிட்ட பிறகு பெண்ணுக்கு நீதியை வழங்கி மண உறவை உண்டாக்கி வைக்க வேண்டிய அவசியம் இல்லை. பெண்ணுக்குப் பொருளாதார சமநிலைத் தகுதி இருப்பதனால் வரதட்சணைக் கொடுத்துத் திருமண உறவை உண்டாக்க வேண்டிய தேவையில்லை. எனவே, வரதட்சணை வாங்குவது சமூக வாழ்வை அழிக்கும் குற்றம். எனவே, சமூகக் குற்றவாளிகள் தண்டனை பெறுவதற்குரியவர்கள். இதுவே இன்று வரதட்சணையைக் கொடுமை என்று பேசுகிறவர்கள் எடுத்து வழங்கும் நீதி.

வரதட்சணை இங்கே கூறப்பெற்ற சமூக நீதி அடிப்படையில் மட்டும் உருவாகியிருக்குமானால் மேலே காட்டப்பெற்ற ஒரு நீதியைச் செயல்படுத்த முற்பட்டாலே வரதட்சணையானது சமூகத்தில் அற்றுப்போகும் நிலை உண்டாகிவிடும். ஆனால், வேறு ஒரு கொள்கையின் மூலம் திருமண உறவில் வரதட்சணை வந்து இடம் பெற்று விடுகிறது. வரதட்சணைக்குச் சமூக நீதி போல வேறு சில கொள்கைகளும் ஆதரவு தருகின்றன. அவை களையும் மாற்றினால்தான் வரதட்சணைக் கொள்கை அழியுமே யல்லாமல், சமூக இயல் சட்டத்தாலேயே வரதட்சணையை அழிப்பது இயலாததாகும்.

தானக் கொள்கை

மண உறவுக்கு முன்னதாகத் தானக் கொள்கை இடம் பெறுகிறது. பெண்ணின் தந்தை தன் பெண்ணை ஓர் ஆணுக்குத் தானமாகக் கொடுக்கிறான். இதனாலேயே திருமணம் 'கன்னிகாதானம்' என்ற சொல்லால் சொல்லப் பெறுகிறது. தானக் கொள்கையும் முன் சொன்ன சமூகக் கொள்கையும் வேறு வேறானவை.

அறவழியில் ஈட்டிய பொருளைத் தக்கார்க்கு உவகையுடன் அளிப்பதே தானம். இங்கே அறக்கொள்கையின் அடிப்படையில் சிந்திக்க வேண்டும். இக்கொள்கையில் கொடுப்பவன், ஏற்பவன், கொடுக்கப்பெறும் பொருள் என்ற மூன்றையும் இணைத்துச் சிந்திக்க வேண்டும்.

அறத்தை ஏற்பவன் தகுதியால் பல படிநிலைகளில் உயர்ந்து நிற்கும்போது, கொடுப்பவன் ஏற்பவனின் தகுதிக்கேற்ப அறப் பயன்களைப் பெறுகிறான். அறப்பயனை எதிர்பார்த்துச் செய்தானா இல்லையா என்பதன்று. தகுதியுடையவனைத் தேர்ந்தெடுத்து, ஒரு பொருளைக் கொடுத்தால், ஏற்பவன்

தகுதி நோக்கிக் கொடுத்தவனுக்கு அறப்பயன் மிகுகிறது என்பதாம். இவ்வகையில், பெண்ணைத் தானம் கொடுக்கும்போது பெண்ணின் தந்தை அத்தானத்தில் பயனைப் பெறக்கூடிய பேறு பெறுகிறான் என்பதே அடிப்படைக் கருத்து

இனி, ஏற்பவனின். நிலை தானத்தை ஏற்பவன் தனக்கு வேறு சில சிக்கல்கள் இத்தானத்தை ஏற்பதால் தோன்றும் என்பதை நினைப்பானானால் அச்சிக்கல்களைத் தீர்க்கக்கூடிய வழிவகைகளை ஆராய்ந்து அவைகளை முன்கூட்டியே நிறைவு செய்து கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகிறான். தகுதியுடையவனை அறிந்து தன் பெண்ணைக் கொடுப்பது என்பதாக அமையாமல் 'தானமாகக் கொடுப்பது' என்ற நிலையை அமைப்பதால் தகுதியுடையவனாய்த் தானத்தை ஏற்க வருபவன், தகுதிகள் பின்னர் எழும் சிக்கல்கள் ஆகியவைகளை எடுத்துக் காட்டி அவைகளின் தேவையை நிறைவு செய்ய வேண்டும் என்று கேட்பது அறமுறைக்கு ஒப்புமையுடையதே. இனி, தானமாகக் கொடுக்கப்பெறும் பொருள்பற்றிய சிந்தனை, சமூக நிலையில் கொள்ள வேண்டிய இயற்கையான மண உறவுக்கு, சமூக இயல் தகுதிகளை வைத்தே சிந்திக்க வேண்டும். ஓர் ஆண் எப்படி ஒரு சமூகத்தில் தனியுரிமை பெற்ற சமுதாய உறுப்பு என விளங்குகின்றானோ, அந்நிலையில் கொடுத்தல் வாங்குதல் என்ற கொள்கை அமையாது. அவ்வாறு அமைத்தால் அங்கே சமூகச் சமநிலை நீதி இல்லை என்பதாகும். ஆணுடன் ஒத்த நிலையுடைய பெண்ணை மண உறவுக்கு இரு பெருங் குரவரும் இசைவளிப்பது என்பதே திருமணத்தின் விளக்கம். 'இசைவளிப்பது' என்ற கொள்கையை மாற்றி, 'கொடுப்பக் கொள்வது' என விளக்கமளித்தால் பெண் சமூக சமநிலைத் தகுதியையே இழந்த நிலையில் ஒரு கைப்பொருள் என்ற தகுதியையே பெறுபவளாகிறாள். எனவே, தானக் கொள்கை, கொடுப்பக் கொள்ளும் கொள்கையாக மண உறவைக் கொண்டால் அது பெண்மைக்குச் சமூக வழிப்பட்ட தகுதியை அழித்து, பெண்ணுக்கு இழிவு செய்யும் முறையுடைய கொள்கையாகவே அமையும்.

எனவே, 'கன்னிகாதானம்' என்ற அமைப்பில் சமூகத்தில் மண உறவு அமையுமானால் அது பெண்ணுக்குச் சமூகம் வழங்கிய அடிப்படைத் தகுதியை ஒரு பெண்ணின் தந்தை மீறுகிற சமூக விரோதச் செயல் எனக்கருதி, அவரைத் தண்டனைக்கு உள்ளாக்க வேண்டும். 'கன்னிகாதானம்' என்ற அமைப்பில் ஓர் ஆண் ஒரு பெண்ணைப் பலர் முன்னிலையில் தானமாகப் பெறுவதற்கு வெட்கப்படவேண்டும். பிறரிடம் கைநீட்டிப் பிச்சை வாங்கும் நிலைக்கு நாம் சமூகத்தில் தாழ்த்தப் பெறுகிறோமே என நினைக்க வேண்டும்; வெட்கப்பட வேண்டும். தன் மகனைப்

பிச்சையேற்று வாழ அனுமதித்தோமே என்ற வகையிலும், ஓர் ஆணைத் தனித் தலைமையுடையவனாகச் சமூகத் தகுதியுடைய ஆணை இழிவுபடுத்திய செயலுக்காக ஆணின் தந்தையும் சமூக விரோதக் குற்றம் இழைத்தவராகவே கருதப் பெறல் வேண்டும். எனவே, 'கன்னிகாதானம்' 'கொடுப்பக் கொள்வது' என்ற அடிப் படை நியதியில் மண உறவு அமைப்பது சமூக விரோதச் செயல்-சமூகக் குற்றம் என்று கருதும் சட்டம் அமைக்கப் பெறல் வேண்டும்.

'கன்னிகாதானம்' என்ற கொள்கையைச் சரி என்று ஒப்புக் கொண்டால், அதுவே சமூக நீதி என்று நிலைநாட்டினால் வரதட்சணை கேட்கவேண்டிய உரிமையையும் அதனைக் கொடுக்க வேண்டிய கடமையையும் ஆகும். அநீதிச் செயல்கள் என்றுகுறை கூறமுடியாது. கன்னிகாதானக்கொள்கையை ஏற்றுக் கொண்டு வரதட்சணையைக் குற்றம் சார்ந்த செயல் எனக் கூறுவது முன்பின் முரண். 'கன்னிகாதானத்தை' சட்டத்தால் நீதி என்று நிலைநாட்டிவிட்டு எந்தச் சமூகமும் வரதட்சணையைக் கொடுமை என்று சொல்லி நீக்க முடியாது. கன்னிகாதானத்தைச் சட்டமாக அமைக்கும்போது அங்கே இருக்கும் உயிர்ப்பாற்றல் எந்த வகையிலும் வரதட்சணையைச் சமூகத்தில் வாழவைத்தே தீரும்.

இனி, வரதட்சணையை ஒழிக்க வேண்டுமானால் சமூக நல வாழ்வுக் கொள்கைகளுள் ஒன்றான உடைமைக் கொள்கையால் அழிக்க முடியும்.

'உடைமைக் கொள்கை' என்பது பொருள் உடையவன் தனக்கு வேண்டிய பொருளை, பொருள் கொடுத்து உடைமை யாக்கிக் கொள்கிறான். புலவன் ஒருவனுக்குத் தொல்காப்பியம் தேவை. தொல்காப்பியத்தின் விலை பத்து ரூபாய். புலவன் தன்னிடமுள்ள பத்து ரூபாயைக் கொடுத்துவிட்டு, தொல் காப்பியத்தைப் பெற்றுத் தன்னுடைய உடைமையாக ஆக்கிக் கொள்கிறான். தொல்காப்பியத்தைப் பத்து ரூபாய் கொடுத்து வாங்கிய புலவன் அதைப் புத்தகக் கடையிலேயே வைத்துவிட்டு வந்துவிட மாட்டான். தன் உடைமையைத் தன் இடத்துக்குக் கொண்டுவந்து விடுவான். தேவையில்லை என்ற கருத்து அப் புலவனுக்குத் தோன்றுமேயானால், அத் தொல்காப்பியத்தைப் பழைய புத்தகக் கடைக்காரனிடம் விற்றுவிடலாம். இது உடைமைக் கொள்கை.

பெண்ணின் தந்தை தன் மகளுக்கு தகுதி வாய்ந்த ஓர் ஆண் தேவை எனத் தேடுகிறான். தேர்ந்தெடுக்கிறான்; ஆணின் தந்தை

வரதட்சணை கேட்கிறான். அப்பணத்தைக் கொடுத்து விட்டு, மணமகன் என்ற பொருளைத் தன் உடைமையாக ஆக்கிக்கொள் கிறான். பின்னர் ஆடவன் வீட்டில் பெண்ணின் தந்தை தன் பெண்ணைக் கொண்டு போய் விட்டுவிடுதல் என்பது இல்லை. அது பொருளுடைமைக் கொள்கையைத் தெரிந்து போற்றாத கொள்கை. பொருளுக்குரிய விலையைக் கொடுத்து விட்டு, அப் பொருளை உடைமையாக ஆக்கிக் கொண்டு, தன் இல்லத்துக்கு கொண்டு வந்து விடுவது. சட்டத்தின் அடிப்படையில் — உடைமைக் கொள்கையின்கீழ் இத்தகைய திருமணங்களைக் கொண்டு வந்தால் வரதட்சணை ஒழியும்.

அச்சக் கொள்கை

வரதட்சணையை வளர்ப்பது பெண்ணைப் பெற்றவர் களிடத்திலும் பெண்ணிடத்திலும் அமைந்து கிடக்கும் அச்சக் கொள்கையே காரணம். மகளுக்குத் திருமணம் செய்து வைக்க வில்லையானால் சமூகம் பழிக்குமே என்ற அச்சம்; திருமணம் ஆக வில்லையே என்று பெண்கள் கொள்ளும் அச்சம்.

அச்சங் கொள்வதில் எத்தகைய அச்சம் நீதிக்கு உடன் பட்டது; எத்தகைய அச்சம் நீதிக்கு முரண்பட்டது என்று அறிவால் தெளிய வேண்டும். நீதிக்கு உடன்பட்ட அச்சத்தை ஏற்று அஞ்சுவது அறிவுடைமை. நீதிக்கு முரண்பட்ட அச்சத்தை மேற்கொள்வது கீழ்மக்கள் செயல். நீதியொடுபடாத அச்சத்துக்கு உரிய பரிகாரக் கொள்கை இதுவரையில் உலகில் எந்த ஒரு சிந்தனையாளராலும் உண்டாக்கப் பெறவில்லை.

வரதட்சணை ஒழிய வழிவகைகள்

(1) 'கன்னிகாதானக்' கொள்கை என்று திருமணத்துக்கு விளக்கம் அமைப்பது - செயல்படுத்துவது சமூகவிரோதச் செயல் என்று கருதப் பெறுதலும் தண்டனை விதிக்கப் பெறுதலும் வேண்டும். கன்னிகையைத் தானமாக ஏற்பதை ஆண் தனக்கு ஓர் அவமானமாகக் கருத வேண்டும். பெண்ணும் தன்னை ஒரு பொருளாக இழிவுபடுத்துவதைத் தனக்கு அவமானம் எனக் கருத வேண்டும்.

'கன்னிகாதானம்' என்ற செய்யத்தகாத ஒன்றைச் செய்வ தால் சமூக நலம் கெட்டு, வரதட்சணையாகிய நோய் உயரு கிறது.

(2) ஆணுக்கு வரதட்சணை அமைத்தாலும் சில சமூகப் பழக்கம் போல, பெண்ணுக்கு வரதட்சணை அமைத்தாலும்

வரதட்சணைக் கொள்கை என்பது உடைமைக் கொள்கையே பொருளை பொருளாய் உடைமையாக்கிக் கொள்ளும் முறை. கேட்ட விலையைக் கொடுத்து உடைமையாக்கிக் கொள்ள வேண்டும். உடைமையை உடைமைப்பொருளாகவே மதித்துச் செயற்படுத்த வேண்டும். செய்ய வேண்டிய இந்த முறையைச் செய்யாத காரணத்தால் சமூக நலம் கெட்டுப் போகிறது. வரதட்சணை பெருகுகிறது.

'செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்'

என்ற திருக்குறளின் வண்ணம் கன்னிகாதான முறையைச் செயற் படுத்தாமலும், உடைமைக் கொள்கையைச் செயற்படுத்தலும் மேற்கொண்டால் வரதட்சணை முற்றாக ஒழிந்துவிடும்.

(6) (ஈ) சமூக ஏற்றத் தாழ்வுகள்

தனிமனிதர்கள் பலர் இணைந்து வாழ்வதற்காக அமைத்துக் கொண்ட அறக் கோட்டமே சமூகம். சமூக உறுப்பினர்களுக்குள் எந்த ஒரு வகையிலும் எந்த ஒரு வேற்றுமையும் இல்லை. சமூகம் வேறுபாடுகளை ஏற்கும். ஆனால் வேறுபாடுகளுக்கு உயர்வு தாழ்வு எண்ணங்களைப் பொருத்திச் செயற்படுத்தக் கூடாது.

மனிதர்கள் செய்யும் செயல்களை நற்செயல், தீச்செயல் எனப் பிரிப்பர். நற்செயல் இன்பத்தை விளைவிக்கும். தீச்செயல் துன்பத்தை விளைவிக்கும். இவ்விளக்கங்கள் ஒன்றை ஒன்றி லிருந்து வேறுபட நிறுத்திக்காணும் முறை. வேறுபாடுகளை ஏற்றுக்கொண்டு அவைகளின் உண்மை நிலையை அறிந்து கொள்வது தவறன்று. இங்கே நல்வினை உயர்ந்தது; தீவினை தாழ்ந்தது என்று எண்ணுகின்ற எண்ணம் ஏற்றத்தாழ்வு எண்ணம். இது கூடாத ஒன்று.

தீவினை இரும்பு விலங்கு என்றால், நல்வினை பொன் விலங்கு. இரண்டும் விலங்குதானே; திருவள்ளுவரும் 'இருஞ்சேர் இருவினை' என்று கூறினார்.

நல்வினை, தீவினை என்ற இருவினைகளையும் ஒப்பமதிக்கும் தன்மையே 'இருவினையொப்பு' என்பது. இருவினை ஒப்பு என்பது ஒருவகை மனநிலை. இம்மனநிலையில் என்ன நிகழும்?

'ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்குவர்'

என்ற விளக்கம் தரப் பெறுகிறது. ஓட்டை, ஓடு என்றும்

பொன்னைப், பொன் என்றும் பார்ப்பது உண்மைக் காட்சி. ஓட்டையும் பொன்னையும் ஓடு என்றே பார்த்தாலும் பொன்னையும் ஓட்டையும் பொன் என்றே பார்த்தாலும் இவ்விரண்டு வகைப் பார்வையும் தவறானவைகளே. ஓடும் பொன்னும் அவைகளைப் பயன்படுத்துகின்ற பயனை—தேவையை நோக்கி மதிப்பிடப் பெறலாம். ஞானி ஒருவனுக்கு இரண்டும் தேவையற்றவை என்ற வகையில் ஒன்றே. தனக்குத் தேவையில்லாதவை என்ற நிலையில் பொன்னும் ஓடும் ஒன்றே என்பதால் பொன்னானது தன்னுடைய பொருளாதார மதிப்பை இழந்து ஓட்டின் நிலைக்கு வந்து விட்டது என்றோ, ஓடு தன்னுடைய பொருளாதார நிலையில் உயர்ந்து விட்டது என்றோ கருதுதல் கூடாது. ஒக்கப் பார்க்கும் நிலையில் அதன தன் தகுதிகள் மறுக்கப் பெற்றன என்பது பொருளன்று; அவ்வாறே சமூகத்தில் உள்ள தனி மனிதர்களிடத்தே அமைந்துள்ள தகுதிகள், சிறப்பியல்புகள் புறக்கணிக்கப் பெறுகின்றன என்பது பொருளன்று. சமுதாய முன்னேற்றத்திற்கு அத்தகைய வேறுபாடுகள் தேவையுங்கூட. அத்தகைய வேறுபாடுகளில் இது உயர்ந்தது இது தாழ்ந்தது என்று கருதுவது கூடாது; அதே சமயத்தில் அவர்களின் தனித் திறமைகள் கவனிக்கப் பெறாமல் புறக்கணிக்கப் பெற்றன என்று கருதுவது கூடாது.

பல்வகையான மனிதர்களின் வெவ்வேறு வகையான தகுதிகளில் திறமைகளில் அமைந்துள்ள வேறுபாடுகள் தேவையானவைகளே; ஏற்றுக் கொள்ளப் பெற்றவைகளே. ஆனால் அவைகளில் ஏதேனும் ஒன்றை உயர்த்தியும், பிறிதொன்றைத் தாழ்த்தியும் கருதும் கருத்துகளே ஏற்றத் தாழ்வுகள் என்று கூறப்பெறும். சமுதாயத்தில் வேறுபாடுகள் அமையலாம்; ஏற்றத்தாழ்வுகள் நீக்கப் பெற வேண்டும்; எடுத்துக்காட்டாக ஒரு நிறுவனத்தில் பல்வேறு படிநிலைகளில் வேலைகள் அமையும் தன்மையாலும் செயல்முறை அமைப்பாலும் வேறுபட்ட வேலைகள் அமையலாம். ஆனால் அந்த நிறுவனத்தில் இந்த வேலை தாழ்ந்த வேலை, அந்த வேலை உயர்ந்த வேலை என்ற கருத்து உண்டாவது தவறு. அதற்குமேல் இந்த வேலையில் இருப்பவர் உயர்ந்தவர் அந்த வேலையில் இருப்பவர் தாழ்ந்தவர் என்ற நிலை தோன்றி விடுகின்றது. அதுவும் தேவையற்றது. அதற்கு மேலாக, ஒரே நிறுவனத்தில் ஒரு வேலையைச் செய்யும் ஒருவர் இன்னொரு வேலையைச் செய்பவரைத் தாழ்ந்தவர் என்றும் அவர் தனக்கு முன்வந்து கைகட்டி நிற்க வேண்டும் என்றும் நினைப்பது பெருந் தவறாக அமைந்துவிடுகிறது.

எனவே, சமுதாயத்தில் நிலவும் தனிமனித வேறுபாடுகள் வேறு; வேறுபாடுகளை ஏற்கும் சமூகம் ஏற்றத்தாழ்வுகளை

அனுமதித்தல் கூடாது. இவ்வாறு தனித்திறமை முதலிய வேறுபாடுகள் என்பதன் கருத்தையும், உயர்ந்தது தாழ்ந்தது, ஏற்றத் தாழ்வுகள் என்பவற்றின் கருத்துகளையும் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

இனி, உயர்வு தாழ்வு என்ற கருத்தும் சமூகத்தில் முழுமையாக நீக்கப் பெற வேண்டும் என்று சொல்ல முடியாது. தேக்கு மரத்தால் செய்த நாற்காலி, பூவரசு மரத்தால் செய்த நாற்காலியைவிட உயர்ந்தது என்று கூறினால் இவ்வாறு உயர்வு த்தாழ்வு நிலையில் கருதுவது சமூகத் துரோகச் செயல் என்று கூறுவது அறிவுடைமையாகாது.

தீண்டாமை

சமூக ஏற்றத்தாழ்வுகள் பொதுவாகவே பிறப்பு நிலையை அடிப்படையாகக் கொண்டே பேசப் பெறுகின்றன—ஒருவர் மேல் நிலையில் பிறந்தவர் என்றும், மற்றையவர் கீழ்நிலையில் பிறந்தவர் என்றும் வேறுபாட்டினை அமைத்துக் காணும் நிலை.

தீண்டத்தகாதது என்ற பொருளில் 'தீட்டு' என்ற சொல் பயின்று வருவதைப் பார்க்கலாம். சமயத்துறையிலும் தீட்டு உண்டு. கண்டு முட்டு என்பது கண்டதனால் உண்டாகும் தீட்டு. கேட்டு முட்டு என்பது கேட்டதனால் உண்டாகும் தீட்டு.

பொருளாதாரத் துறையில் அமையும் ஒருவகைத் தீட்டு உண்டு. பொருளாதார மதிப்பு இழந்தவையெல்லாம் தீட்டு என்பது உலகியல் வழக்கு. அரிசிக்குத் தீட்டு இல்லை. வடித்த சோறு தீட்டு. புதுத் துணிக்குத் தீட்டு இல்லை. பழைய துணிக்குத் தீட்டு உண்டு. பொற்குடத்துக்குத் தீட்டு இல்லை. மட்குடத்துக்குத் தீட்டு உண்டு.

சமூகத் தீட்டு இவைகளுக்கெல்லாம் வேறுபட்டது. சில சாதியாளர்களைத் தொடக்கூடாது என்ற கொள்கை இந்து சமுதாயத்தில் இருக்கிறது. பிறப்பினாலேயே இவர்கள் தீண்டத்தகாதவர்கள் ஆகிறார்கள். தூய்மை இல்லாதவர்கள், ஒழுக்க நெறியில் நடவாதவர்கள் என்ற காரணத்தால் தீண்டத் தகாதவர்கள் என மதிக்கப் பெறவில்லை. பரம்பரை பரம்பரையாகவே அவர்கள் பிறந்த பிறப்பால் தீண்டத்தகாதவர்கள் என்ற கொள்கை நிலவி வருகிறது. 'அரிசனங்கள்' என்ற பெயரால் இவர்கள் அழைக்கப் பெற்றாலும் பறையன், சாம்பான் போன்ற சாதிகள் இதனுள் அடங்கும். திருவள்ளுவர், ஔவையார் போன்ற சான்றோர்கள் இச்சாதியிற் பிறந்தவர்களே என்ற வரலாற்றை உண்டாக்கியும்கூட அவரையும் சாதி இழிவு

தோன்றவே அழைத்தமை, அவரைத் தீண்டத்தகாதவரென மதித்தமை உண்டு என்பதை வரலாற்றாலும் இலக்கியத்தாலும் உணர முடிகின்றது.

'அறம்பொருள் இன்பம் வீடென்று நான்கின்
திறம்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவன் என்பானோர் பேதை அவன்வாய்ச்சொல்
கொள்ளார் அறிவுடை யார்'

என்ற திருவள்ளுவமாலைச் செய்யுள் இவ்வுண்மையை விளக்கும்.

சாதி இந்துக்கள் என்பவர் அரிசனங்கள் அல்லாதவர். அரிசனங்கள் என்பவர்களே தீண்டத்தகாதவர்கள். தீண்டத்தகாதவர்கள் சாதி இந்துக்களுக்குப் பொதுவாக இருக்கும் ஊர்க்குளம், ஊர்க்கிணறு ஆகியவைகளில் தண்ணீர் எடுக்கலாகாது. இது முதலாக, இவ்வாறு பலவகைக் கொடுமைகள் அவர்களுக்கு இழைக்கப் பெறுகின்றன. சாதி இந்துக்களின் பிள்ளைகள் படிக்கும் பள்ளியில் அரிசனக் குழந்தைகள் படிக்கக் கூடாது.

இந்திய நாட்டில்தான் இத்தகைய இழிநிலை என்பதன்று, மேலைநாட்டிலும் வெள்ளையர் கறுப்பர் வேறுபாடு இத்தகைய கொடுமைகளுக்கு உடந்தையாகிறது. திருவள்ளுவர் காலத்திலேயே இத்தகைய வேறுபாடும் கொடுமைகளும் நிகழ்ந்துள்ளன எனக் கொள்ளலாம். திருவள்ளுவர் கூறும் சமூக நீதி என்பது,

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்'.

பிறப்பினால் எல்லா மக்களும் சமமானவர்களே, செய்கின்ற தொழிலால் வரும் சிறப்புகள் ஒவ்வாதிருக்கலாம். ஆயினும், பிறப்பினால் எல்லோரும் சமமே என்பது திருக்குறட் கருத்து.

திறமையில், உழைப்பில், உழைப்பால் விளையும் சிறப்பில் வேறுபாடு இருப்பதால் பிறப்பிலும் வேறுபாடு—ஏற்றத் தாழ்வுகள் உண்டு என்று கொள்ளலாகாது. இதுவே சமூக சமநிலை நீதி எனப்பெறும்.

பொருளியல் ஏற்றத் தாழ்வுகள்

சமூகத்தில் இன்று வாழும் தனிமனிதர்களில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் காணப்பெறுகின்றன, கார்ல் மார்க்ஸ் என்பார் உலகில் இருவகைச் சாதி உண்டு என்றார். உழைக்கும் சாதி, உறிஞ்சும் சாதி என்பனவே அவை என்றார்.

சங்க காலத்துப் புறநானூற்றுப் பாட்டு ஒன்று கூறுகிறது. அரசன் முதல் வேட்டையாடிப் பிழைக்கும் தறுகணன் வரையில் உள்ள பல்வேறு வகைப்பட்ட சாதியினருக்கும் உண்பன ஒரு நாழி அரிசி; உடுப்பன இரண்டே; பிற அனுபவப் பொருள்களும் ஒரே தன்மையானவை. சாதி வேறுபாடுகள், தொழில் வேறு பாடுகள் இருப்பினும் பிறப்பு, உண்ணும் அளவு, உடுக்கும் உடை, வேறு வகையான துய்ப்புக்குரிய பொருள்களிலும் வேறு பாடு இல்லை; எல்லாம் ஒக்கும். இத்தகைய ஒப்புமைகளைப் பேசிய புறநானூறு, செல்வத்தை வைத்துக்கொண்டு, பொருளா தார வேறுபாட்டினால் ஏற்றத் தாழ்வினைப் பேசுவது குற்றம். பயன்படாத செல்வத்தை பிறருக்குக் கொடுத்துவிடவேண்டும். பிறப்பு முதல் எல்லாவகைகளாலும் மக்கள் ஒத்தவர்களாக இருப்பதால் பொருளாதாரம் ஒன்றை வைத்திருந்தால்தான் ஒருவன் தன்னை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்ட முடியும் என்பதற்காகவே செல்வத்தை வைத்துக் கொண்டிருக் கிறார்கள். செல்வத்தை வைத்திருப்பது பிறருக்கு வேண்டும் போது கொடுப்பதற்காகவேயொழிய, வேறுபாட்டை — ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்குவதற்கன்று என்று புறநானூறு கூறு கிறது. மனிதர்கள் தொழிலால், பிற திறமைகளால் வேறுபாடு கொண்டவர்களாக விளங்கினாலும் மற்றை எல்லா வகைகளிலும் ஏற்றத் தாழ்வின்றியே அமைந்துள்ளார்கள் என்பதாம்.

மக்களிடத்தில் நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்கவே, பொருளாதார சமநிலைச் சமுதாய நீதியைச் சமூகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

பொருளாதார நீதி என்றால் மக்கள் எல்லாரையும் ஒரே நிலைக்கு உயர்த்தப்படுவதோ அல்லது தாழ்த்தப்படுவதோ அன்று. மனிதன் உலகில் பிறப்பது வாழ்வதற்காகத்தான். பிறந்தவர்கள் வாழ வேண்டும். உயிர் வாழும் உரிமை மனிதனின் ஒப்பற்ற உரிமையாகும். எனவே வாழ்வின் அடிப்படைத் தேவை கள் எல்லாருக்கும் கிடைக்கவேண்டும். உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு இவை மக்களின் வாழ்விற்கு அடிப்படைத் தேவைகள். இவ்வாறு, வாழ்க்கைக்கு அவசியமான அடிப்படைத் தேவைகளை ஒவ்வொருவருக்கும் கிடைக்குமாறு செய்வதே 'பொருளாதார நீதி.' குடிமக்களாகிய ஆண், பெண் அனைவரும் தங்கள் வாழ்க்கைக்குப் போதுமான வசதிகளைப் பெறுமாறு அமைத்துக் கொடுப்பதே 'பொருளாதார சமநிலைச் சமுதாய நீதி' என்பதாகும்.

வறுமை, உறுப்புக் குறைவால் வேலை செய்ய இயலாமை, முதுமை முதலிய காரணங்களால் பொருளாதார ஏற்றத் தாழ்வு அமைகிறது. சில சமயங்களில் பொருளை முதலீடு செய்து, தொழிற்சாலைகளை அமைத்து, தொழிலாளிகளை வேலைக்கு அமர்த்தி, பொருள் உற்பத்தி செய்து,விற்பனை செய்யும் தொழிற் கூட அமைப்புகளில் தொழிலாளி என்ற இனமே பொருளாதார அடிப்படையில்தான் உண்டாக்கப் பெற்ற; ஏற்றமே காணா, தாழ்ந்த பரம்பரை.

இங்கே குறிக்கப் பெற்ற பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் நீக்கப் பெற வேண்டும். இக் காலத்தே பொருளாதார அடிப் படையில் மக்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளார்கள். தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், முன்னேற்ற வகுப் பினர் என்பன. குடியாட்சி நாட்டில் தாழ்த்தப்பட்டோர்களுக் கும், பிற்படுத்தப்பட்டோர்களுக்கும் சில பொருளாதாரச் சலுகைகளை அரசாங்கம் அளித்து வருகிறது. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்பட வேண்டும் என்பதே குறிக்கோள்.

சமூக இயற் சமநிலை

தன்னுடைய நாட்டின் அரசாட்சியில் பங்கெடுத்துக் கொள்ளும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. குடிமக்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பெறும் நோக்கமே அவர்கள் அரசியலில் ஈடு படுவதற்கு உரிமை பெறுகிறார்கள். முடியரசு அல்லது ஏனை ஆட்சி முறைகளில், சொத்துடையவர், வரிசெலுத்துவோர், சில உயர் சாதியினர் என்ற இவர்கள் மட்டுமே அரசியலில் பங்கு பெற முடியும் என்ற நிலை உண்டு. ஆனால் குடியாட்சியில் இத்தகைய வேறுபாடுகளைக் கருத்தில் கொள்ளாமல், வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை உண்டு என்பதன் நோக்கம், அரசியல் உணர்வு அனைவருக்கும் உண்டு என்பதை உணர்த்தவே. அரசியல் சமநிலைச் சமுதாய நீதி என்பது வெற்று அரசியல் அதிகாரம் பெறுவதில் சமத்துவம் பேணப் பெறவேண்டும் என்பதன்று. அரசியல் அதிகாரம் பெறுவது என்பது மக்களின் நலன்கள் பாதுகாக்கப் பெற வேண்டும், குடிமக்களின் பொதுமை நன்மைப் பேணப் பெற வேண்டும் என்ற அமைப்பினை உடன்கொண்டே, தேர்தல் நிலை, அரசியல் அமைப்பு முறை முதலியன அமைக்கப் பெறுகின்றன. மக்களாய் பிறந்தார் அனைவரும் அரசியல் அதிகாரம் பெற உரிமையுடையவர். அரசியல் அதிகாரம் பெற்று, மக்களின் நலம் காத்தற்கு உரிமையுடையவர் என்பதே 'அரசியற் சமநிலை நீதி' என்பதாம்.

எனவே,மக்கள் வாழ்வில் மிக்க தொடர்புடைய மூன்று துறை களிலும் ஏற்றத்தாழ்வுகளுக்கு இடம் கொடுக்காமல் சமநிலை நீதி போற்றப் பெற வேண்டும்.

(6) (உ) தற்கொலை

மக்களாய்ப் பிறந்தார் அனைவரும் வாழ்தற்குரிமையுடைய வர்களே. வாழ்தல் இயலாத காலங்களில் சிலர் தற்கொலை செய்து கொள்கின்றனர். எந்த ஒரு மனிதனுக்கும் அவனுடைய உடலும் உயிரும் அவனுக்குச் சொந்தமானவைகளேயாயினும் அவைகளை வளர்க்கப் பாடுபடவேண்டுமேயல்லாது அழிக்கப் பாடுபடுதல் கூடாது. தன்னுடைய உயிரை ஒருவன் அழிக்க முற்பட்டால் அது சட்டத்தின் மூலம் குற்றமாகக் கருதப்பெற்று, அதற்குரிய தண்டனை வழங்கப்பெறும். வாழ்வதற்கு இயலாத நிலையில் ஒருவன் நாள்தோறும் துன்புறுவதைவிட, தன்னுயிரை மாய்த்துக்கொள்வது இயற்கைதானே! அது எப்படிக் குற்ற மாகும்?

ஒருவனின் தன்னுண்மை நிலையை அறிந்து உணர்ந்து உயர் அனுபவம் பெறுதல் என்ற குறிக்கோளை அடைவதற்காக உயிருடம்பு இணைப்பு உண்டானது. அக்குறிக்கோளை அடையும் வரையில் உயிர் உடம்போடு பொருந்தி நிற்றல் வேண்டும். அத்தகைய குறிக்கோளை அடைய முடியாதவாறு உயிரை உடம்பிலிருந்து நீக்குதல் சட்டப்படி ஒரு குற்றம் ஆகும். உயிர் இருப்பின், உலகில் அடையக்கூடாத ஒன்று இல்லை என்பது ஆன்றோர் கருத்து. 'இல்லை உயிருடையார் எய்தாவினை' என்பது பழமொழி.

ஒரு மனிதன் தன்னுடைய உயிரைத் தன்னுடைய் சொத்து என்று கருதுதல் கூடாது. மனிதனுடைய உயிரில் புலன் சார்ந்த பகுதி, அறிவு சார்ந்த பகுதி, பொதுமை சார்ந்த பகுதி என மூன்றுண்டு. புலன் சார்ந்த பகுதியால் இன்பம் என்ற நன்மை யைப் பெறுகிறான். இங்கே ஏற்படும் வாழ்வியற் சிக்கலினால் தான் தற்கொலை செய்துகொள்கிறான். இதற்குமேல் அறிவியல் பகுதி, சமூக இயல் பகுதி என்ற இரண்டு பகுதிகள் உள்ளன. அவைகளுக்கு ஏற்பவே அறிவியல் நன்மை, சமூக இயல் நன்மை என்ற இரு நன்மைகள் உள்ளன. இவ்விரு நன்மைகளையும் பெற்று, முழுமையான வாழ்வை வாழ்ந்து சிறப்படையாமல் தற்கொலை செய்துகொள்வது சட்டப்படி குற்றமாகும்.

சமூக மேம்பாட்டினைக் குறிக்கோளாகக் கொண்டு உயிரைத் தியாகம் செய்வது என்ற பெயரில் தன்னுயிர் தானே பிரியுமாறு சூழ்நிலையை அமைத்துக் கொள்வது ஒருவகையில் தற்கொலை யேயாயினும், பொதுக் கொள்கையைக் குறிக்கோளாகக் கொண்ட காரணத்தால் அத்தியாகத்தை உயிர்க்கொலைக் குற்றமாகச் சமுதாயம் கருதுவதில்லை,

உலகில் மக்களாகப் பிறந்தால் அனைவரும் தம் பிறப்பினை அடிப்படையாகக் கொண்டு, இயற்கையாகப் பெறும் முதல் உரிமை வாழும் உரிமையே. வாழும் உரிமையைப் பெற்ற ஒருவன் அதற்குரிய கடமையைச் சமூகத்துக்குச் செய்யவேண்டும். வாழும் உரிமையை அழித்தல் என்பதுதான் தற்கொலை. உரிமையைப் பெற்றவன் உயிர்வாழ்தல் என்ற அடிப்படை உரிமையை அழித்துக் கொண்டால் ஏனைய உரிமைகளால் அவனுக்கு எப் பயனும் இல்லை. சமூகமும் ஒருவன் உயிர் வாழ்வதைத் துணை செய்து காப்பாற்றவேண்டும். ஒருவன் தற்கொலை செய்து கொண்டால், அவன் உரிமையை அவன் அனுபவிப் பதற்குத் துணை செய்யவில்லை என்ற குற்றம் சமூகத்தைச் சார்ந்தது.

கண்ணகியின் வழக்குரையைக் கேட்டபின் பாண்டியன் நெடுஞ்செழியன்,

> 'யானோ அரசன்? யானே கள்வன்;
> கெடுக என்ஆயுள்'

என்று சொன்னதும் உயிர் போய்விட்டது. பின்னரே கீழே விழுகின்றான். கடமையில் தவறினோம் என்ற உணர்வே அவன் உயிரை உடலிலிருந்து நீக்கிவிட்டது. பாண்டியனுடைய உடலிலிருந்து பிரிந்த உயிர், தற்கொலையினால் ஒருவனுடைய உடலிலிருந்து பிரிந்த உயிர் போன்றதன்று. ஏனெனில், பாண்டிய னுடைய உடலோடு இணைந்திருந்தபோது அவன் செங்கோல் வளைவதற்குக் காரணமாக இருந்த உயிர், உடலைப் பிரிந்த வுடனேயே வளைந்தகோலைச் செங்கோலாக நிமிர்த்தியது. பாண்டியன் உயிரோடு வாழ்ந்து, பன்னாட்கள் வாழ்ந்து செய்ய வேண்டிய கடமையை, மிக விரைவிலேயே அவ்வுயிர் செய்து முடித்தது.

தற்கொலையில் பிரியும் உயிர் உடம்பை விட்டுப் போக மறுக்கிறது; துடிக்கிறது. போன பிறகும் அவன் குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் பழியை உண்டாக்கிக் கொண்டேயிருக்கிறது.

தற்கொலைக்குக் காரணமும் சமூகம் செய்யவேண்டிய கடமையும்

தற்கொலைக்குக் காரணம் அறிவில்லாமை. அறிவில்லாமை யால் கோழைத்தனம் உண்டாகிறது. மனிதனின் கோழைத் தனமும் அவனை — அவனுயிரை வலிமையற்றதாக ஆக்கி விடுகிறது. அறிவுடைமையால், தூய்மை செய்யப்பெறாத அறியாமையால் முழுமையாக மறைக்கப்பெற்ற உயிரே தற் கொலையின் மூலம் பிரிக்கப் பெறும் உயிராக அமையும் தன்மை யுடையது.

ஒரு சமூகம், தற்கொலை போன்ற குற்றங்களின் எண்ணிக்கையை வைத்தே மதிப்பீடு செய்யப் பெறுகிறது. ஆகையினால், தற்கொலைக் குற்றம் நிகழாதவாறு, மக்களுக்கு வாழ்வியற் பாதுகாப்பு அளிக்கவேண்டும்.

ஒரு சோழ மன்னன் ஆட்சியில் இயமன் வந்து உயிர்களைக் கொண்டு போகவில்லை. இயமன் அச்சோழ நாட்டில் புக இயலவில்லை என்று கூறப்பெறும் சோழ மன்னன் ஆட்சிச் சிறப்பினை இலக்கிய வாயிலாக அறிகிறோம். நம்ப முடியுமா என்று ஆய்வது வேறு. ஓர் இலக்கியம் அச்செய்தியைச் சொல்லும் நோக்கம் என்ன? செங்கோலாட்சியிற் குற்றம் இல்லை. இயமன் உயிரைக் கவர்ந்து செல்வான் ஆயினும் ஏதேனும் ஒரு குற்றத்தை வைத்துத்தான் கவர்ந்து செல்லுவான் என்பது அவன் இயல்பு. உயிரைக் கொண்டுபோகவந்த இயமன் ஒரு குற்றம் இருந்தால் தானே அதை அடிப்படையாகக் கொண்டு உயிரைக் கவர்ந்து போக முடியும். குற்றம் இல்லை; இயமனால் உயிரைக் கவர்ந்து செல்ல இயலவில்லை என்பது விளக்கம்.

தற்கொலையைத் தடுக்கும்சட்டம் உயிர்ப்புத் தன்மை பெற வேண்டும். செங்கோலாட்சிதான் அச்சட்டத்துக்கு ஆணையாக நின்று நடாத்தும் உயிர்ப்பையும் ஆற்றலையும் தர இயலும். செங்கோன்மை ஆட்சியால் தற்கொலையை முழுமையாக நீக்க முடியும். கல்வியறிவு பெருகுவதற்குச் சமூகம் பாடுபட வேண்டும்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

கற்க கசடற